

செ. லவ்ரோவ்
க. ஸ்தஸியூக்

பிராந்திய வளர்ச்சியைப் பற்றிய கருத்தமைப்புகள்

விசேஷ தமிழ் பதிப்பு

செ. லவ்ரோவ்
க. ஸ்தஸியூக்

பிராந்திய வளர்ச்சியைப் பற்றிய கருத்தமைப்புகள்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: டாக்டர் இரா. பாஸ்கரன்

С. Б. Лавров, Г. В. Сдасюк

КОНЦЕПЦИИ РЕГИОНАЛЬНОГО РАЗВИТИЯ

на тамильском языке

S. B. Lavrov, G. V. Sdasyuk

CONCEPTS OF REGIONAL DEVELOPMENT

in Tamil

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1989

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Л $\frac{0604000000\text{-}171}{014(01)\text{-}89}$ 356-88

ISBN 5-01-000874-2

பொருளடக்கம்

முன்னுரை 6

அத்தியாயம் ஒன்று. **உலகளாவிய பிராந்திய பிரச்சினைகள். பிரதேசப் பொருளாதார அமைப்பு: புதிய சூழ்நிலையும் மாறிவரும் கருத்தமைப்புகளும்** 18

1. *உலகளாவிய மாடெல்களை பிராந்தியமயப்படுத்துவதும் சமுதாய வளர்ச்சி பற்றிய கருத்தமைப்புகளும்* 18
2. *உற்பத்தியின் திரட்சியும் பல்தேசிய இணையங்களும்* 33
3. *இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய ஆண்டுகள்: பழைய கருத்தமைப்புகளின் நடைமுறை சோதிப்பு, புதிய தத்துவங்களின் தோற்றம்* 38

அத்தியாயம் இரண்டு. **பிராந்திய பொருளாதார வளர்ச்சியைப் பற்றிய கருத்தமைப்புகள்** 52

1. *சோவியத் யூனியனில் பிரதேசமயப்படுத்தலின் வரலாறு* 52
2. *''வளர்ச்சியின் துருவங்கள்'' என்ற கருத்தமைப்பு: பாராட்டிற்குப் பதில் வீழ்ச்சி* 73
3. *சமமற்ற வளர்ச்சியும் புதிய அம்சங்கள் பரவுவது பற்றிய கருத்தமைப்பும்* 80
4. *காலனியாதிக்கப் பொருளாதாரத்தின் பிரதேசக் கட்டமைவும் இதை ஆராய்ந்து மாற்றியமைக்கும் கடமைகளும்* . . 90

அத்தியாயம் மூன்று. **இயற்கையைப் பயன்படுத்தல்: இயற்கை வள மற்றும் புறச்சூழல் ரீதியான பிரதேசமயப்படுத்தல்** 108

1. *வளர்முக நாடுகளின் ஒரு சில இயற்கை வள பிராந்திய மற்றும் புறச்சூழல் பிரச்சினைகள்* 109
2. *இயற்கை வள மற்றும் புறச்சூழல் பிரதேசமயப்படுத்தல்* . 117

அத்தியாயம் நான்கு. **பிராந்திய ஆராய்ச்சிகளுக்கு சமூகவியல் வண்ணம் தருதல்** 132

1. *சமூகப் பிரச்சினைகளும் சமூக புவியியலும்* 132
2. *''கீழிருந்தான'' வளர்ச்சியும் வாழ்க்கைத் தரத்தின் புவியியலும்* . 137

3. ஐக்கிய நாடுகள் சபையும் பன்முக பிராந்திய ஆராய்ச்சிகளும் . . 144
4. பிரதேசமயப்படுத்தல்: வரையறுப்புகளின் தெளிவின்மையும் கருத்துகளின் பரிணாம வளர்ச்சியும் 150

அத்தியாயம் ஐந்து. **பிராந்தியத் திட்டங்கள்: மாயைகளும் யதார்த்தமும்** . . 161
1. ''சாத்தியம் என்ற கலை'' அல்லது திட்டமற்ற பொருளாதாரத்தைத் திட்டமிடல் 161
2. ஏகபோகங்களும் பிராந்திய வளர்ச்சியும் 165
3. சமுதாயத்தின் பிரதேச ஒழுங்கமைப்பு: சோவியத் அனுபவம் . 174

அத்தியாயம் ஆறு. **இந்தியாவில் பிரதேசமயப்படுத்தலும் பிராந்தியத் திட்டமிடலும்: கோட்பாடுகள், உருமாதிரிகள், கருத்தமைப்புகளின் பரிணாம வளர்ச்சி** 184
1. இயற்கை பொருளாதார மற்றும் இயற்கை வள எரிசக்தித் துறை பிரதேசமயப்படுத்தல் 188
2. தொழில்மயமாக்கலின் பிராந்திய அம்சங்களும் துறை ரீதியான பிரதேசமயப்படுத்தலின் பிரச்சினைகளும் 192
3. மாநிலங்கள் — முக்கியத் திட்ட பிரதேசங்கள் 198
4. நகர, பிராந்தியத் திட்டமிடலின் அடிப்படை 201
5. கீழ்மட்ட பிரதேசமயப்படுத்தல் பிரச்சினைகளும் விசேஷ பிரதேசங்களின் வளர்ச்சித் திட்டங்களும் 203
6. ஐக்கிய சமூக பொருளாதார பிரதேசமயப்படுத்தலும் பிரதேச பொருளாதார ஒருங்கிணைப்பும் 205

முடிவுரை . 211

புத்தகப் பட்டியல் . . 214

இந்தியாவின் மிகத் தொன்மையான மொழிகளில் ஒன்றாகிய தமிழ் மொழியின் வாசகர்களுக்கு இம்முன்னுரையை எழுதுவது குறித்து நூலாசிரியர்கள் பெருமகிழ்ச்சி அடைகின்றனர்.

தமிழ்நாடு, இந்தியாவின் மிக வளர்ச்சியடைந்த மாநிலங்களில் ஒன்று. இது மக்கள்தொகை மிகுந்த ஒரு பிரதேசம், இங்கு இயற்கை பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது. உலகிலேயே மிகவும் பழைய, அதே சமயம் சிறப்பான நீர்ப்பாசன அமைப்புகள் இம்மாநிலத்தில் உள்ளன. இது நவீன தொழிற்துறை, நீர்ப்பாசன, எரிசக்தித் துறை கட்டுமானங்களுடன் இணைந்து காணப்படுகிறது. ஸ்தல மட்டத்தில் இயற்கை வளங்களைச் செயல்வன்மையோடு பயன்படுத்துவதில் பல நூற்றாண்டுகளாக இங்கு நல்லனுபவம் கிட்டியுள்ளது. எதிர்கால வளர்ச்சி, அண்டை மாநிலங்களுடனும் நாட்டின் மற்ற பிரதேசங்களுடனும் உள்ள பிராந்திய ஒத்துழைப்பின் வளர்ச்சி பற்றிய சிக்கலான கடமைகள் இம்மாநிலத்தின் முன் நிற்கின்றன.

பிராந்திய வளர்ச்சி கருத்தமைப்புகளைப் பற்றிய இந்த விமர்சன ரீதியான பகுப்பாய்வும் (இதில் பல்வேறு வகையான நாடுகள் ஆராயப்படுகின்றன) ஒரு சில ஆக்க பூர்வமான முன்மொழிவுகளும் தமிழ் வாசகர்களுக்குப் பயன்படும் என்று நூலாசிரியர்கள் நம்புகின்றனர்.

ஆசிரியர்கள்

முன்னுரை

1982இல் **பிராந்திய வளர்ச்சியைப் பற்றிய கலந்துரையாடல்** என்ற ஐ. நா. இதழுக்கு நாங்கள் ஒரு கட்டுரையை எழுதினோம். வளர்ச்சி யின் துருவங்கள் என்னும் கருத்தமைப்பு மற்றும் வளர்முக நாடுகளில் பிராந்தியத் திட்டமிடலின் அனுபவம் பற்றி அக்கட்டுரையில் குறிப்பிடப் பட்டிருந்தது. இக்கட்டுரைக்கான அணிந்துரையை எழுதிய பிரபல இந்திய புவியியல் நிபுணர் முனிஸ் ரஸா பின்வருமாறு குறிப்பிட்டார்: ''வளர்ச்சி துருவங்கள் பற்றிய செயல்திட்டம் உச்சக்கட்டத்தை யடைந்து பல ஆண்டுகள் உருண்டோடி விட்டன. எனவே 1980க்களின் துவக்கத்தில் இதை விமரிசிப்பது என்பது இறந்து போன குதிரையைத் தட்டியெழுப்ப முயற்சிப்பது எப்படி வீணானதோ அதே போல் வீணானது.''

இந்த மேற்கோள் நம்மை சிந்திக்கத் தூண்டுகிறது. பிராந்திய வளர்ச்சி பற்றிய கருத்தமைப்புகள் எவ்வளவு விரைவாக மாறுகின்றன என்பதைப் பற்றிய சிந்தனைதான் இந்நூலை எழுதும்படி நூலாசிரியர் களைத் தூண்டியது. வளர்ச்சி துருவங்கள் என்னும் கருத்தமைப்பு 1960ஆம் ஆண்டுகளிலும் 1970ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்திலும் மேற் கிலும் பல வளர்முக நாடுகளிலும் முழுக்க முழுக்க ஆதிக்கம் செலுத் தியது. அப்போது இதை பிராந்திய வளர்ச்சியின் எல்லா நோய்களுக்கும் ஏதோ ஒரு சிரஞ்சீவி மருந்தாக கருதினார்கள். ஆனால் 1970ஆம் ஆண்டு களின் நடுப்பகுதிகளிலிருந்தே இதை மேன்மேலும் கடுமையான — சில நேரங்களில் பயங்கரமான — விமரிசனங்களுக்கு உட்படுத்தலாயினர். இவ்வாறாக ஒரு கருத்தமைப்பின் விஞ்ஞான மதிப்பு விரைவாகவும், பல நேரங்களில் முழுக்க முழுக்கவும் மறுமதிப்பீடு செய்யப்படும் பொழுது நெல்லிலிருந்து உமியைப் பிரிப்பது போல் விஷயத்தின் சாரத் தை மற்றவற்றிலிருந்து பிரிக்க முற்படுவது அனேகமாக விவேகமான தாய் இருக்கும்.

அதுவும் பல்வேறு சமூக அமைப்புகளையுடைய நாடுகளுக்கு, ஏன் உலகம் முழுவதற்குமே பிராந்திய பிரச்சினைகளின் முக்கியத்துவம்

குறையாதது மட்டுமின்றி மேன்மேலும் அதிகரித்து வரும் பொழுது இத்தகைய முயற்சி அவசியமானது. அதிகாரப் பூர்வமான திட்டங்கள், செயல்திட்டங்கள், ஐ. நா. சபையின் பிரகடனங்கள், ''வளர்ச்சியின் பத்தாண்டுகளைப்'' பற்றிய லட்சியங்கள் ஆகியவை இருந்த போதிலும் பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது முந்தைய காலனி மற்றும் சார்பு நாடுகளின் சமூக பொருளா தார வளர்ச்சி மட்டங்களில் உள்ள பிளவுகள் குறையாமல், வலுப்பட்டு வருகின்றன. பிராந்திய வளர்ச்சி பற்றிய அதிகாரப் பூர்வமான திட்டங் கள் பிராந்தியங்களுக்கு இடையிலான பிளவைக் குறைக்கப் போவதாய் அறிவித்தாலும் இப்பிளவு குறையாமல் கூடி வருவதற்கான உண்மைக் காரணங்களை மிகவும் கவனமாகக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. இதற்கான ''குற்றம்'' யாரைச் சாரும்? பிராந்திய வளர்ச்சி பற்றிய கருத்தமைப்பு பலவீனமாக உள்ளது இதற்குக் காரணமா? அல்லது இதை நிறைவேற்ற வேண்டிய (ஆனால் நிறைவேற்றாத) அமைப்பு முறை இதற்குக் காரணமா? அல்லது இன்னமும் ஆழமான வேறு துறை களில் இதற்கான காரணங்கள் மறைந்துள்ளனவா?

மிகவும் ''நல்ல நிலையிலுள்ள'' முதலாளித்துவ நாடுகளில் கூட பிராந்திய பிரச்சினைகள் கூர்மையடைந்து நெருக்கடி நிலவரம் தோன்றுகிறது; இத்தகைய பிரச்சினைகளுக்குரிய பிராந்தியங்களின் எண்ணிக்கையும் வகைகளும் இடையறாமல் அதிகரித்து வருகின்றன, இப்பிரச்சினைகள் பிராந்தியங்களுக்கு இடையில், பிரதேசத்தில், உள்ளூரில், நகரத்தின் உள்ளே தோன்றுகின்றன. முன்னர் பெரும்பாலும் ''தொழிற்துறை வளர்ச்சியின்மை'', ''மையம்—எல்லைப் புறம்''ஆகிய பிரச்சினைகளைப் பற்றி பேசப்பட்டது என்றால் இப் போது மேற்கத்திய நாடுகளின் ஒரு சில பழைய தொழிற்துறை மையங் கள் கூட (உதாரணமாக மேற்கு ஐரோப்பாவில் ரூர், லோரைன், அமெரிக்காவில் அப்பலாச் பிரதேசம்) இன்று பிரச்சினைக்கு ஆளாகி வருகின்றன. கிராமப் பகுதிகளில் மக்கள் எண்ணிக்கை குறைப்பும் சமூக மற்றும் மக்கள்தொகை வீழ்ச்சியும் காணப்படும் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய பகுதிகளில் மட்டுமின்றி கழிவுப் புகை மூட்டத் தால் சூழப்பட்டு போக்குவரத்து நெரிசல்களால் மூச்சடைத்துப் போகும் பெரும் நகரங்களிலும் வாழ்க்கைச் சூழல், ''வாழ்க்கைத் தரம்'' மோசமடைந்து வருகின்றன. நெருக்கடிப் பிரதேசங்கள் பரவி, வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் பரப்பை மேன்மேலும் ஆட்கொண்டு வருகின்றன; ஆனால் அதிகாரப் பூர்வமான விவரங் களோ பல நேரங்களில் இதைக் குறைத்துக் கூறுகின்றன. முதலாளித் துவ நாடுகளில் லட்சோபலட்சம் மக்கள் வேலையில்லாத் திண்டாட்டத் தால் பாதிக்கப்பட்டு ''தேவையற்றவர்களாகின்றனர்'', ஏராள மானோர் வேலை தேடி இடம் பெயருவது அதிகரிக்கிறது, பலர் மேலைய நகரங்களின் சேரிகளில் குடியேறுகின்றனர். ஜெர்மன் சமஷ்டிக் குடி

யரசில் பிராந்திய பிரச்சினைகள் பற்றிய ஒரு கட்டுரைக்கு **வேலையில்லாத் திண்டாட்டம் — பிராந்தியக் கொள்கையின் அளவுகோல்** என்ற தலைப்புத் தரப்பட்டது அடையாளச் சிறப்புள்ளதாகும். வேலையில்லாத் திண்டாட்டம் இக்கொள்கையின் அளவுகோலாக மட்டுமின்றி இக்கொள்கையின் இயக்குச் சக்தியாகவும் ஆகியுள்ளது.

''மூன்றாவது உலகின்'' பின்தங்கிய நிலை என்பது காலனியாதிக்க சகாப்தம் விட்டுச் சென்ற சொத்தாகும். ஆனால் ''மூன்றாவது உலகம்'' என்ற வழக்கமான கருத்து கூட இதன் உள்ளே சமூக பொருளாதார வளர்ச்சி மட்டங்களில் நிலவும் பெரும் மாறுபாடுகளை சுட்டிக் காட்டவில்லை. முன்னாள் காலனி மற்றும் சார்பு நாடுகளின் பாகுபாடு மிகவும் தீவிரமாக நடப்பதால், சமீப ஆண்டுகளாக ''நான்காவது'', ''ஐந்தாவது'' உலகங்கள் தோன்றியுள்ளதைப் பற்றி பேசப் படுகிறது. இந்நாடுகளில் வெவ்வேறு வளர்ச்சி மட்டங்களையுடைய பிரதேசங்கள் மட்டுமின்றி வெவ்வேறு சகாப்தங்களைச் சேர்ந்த பிரதேசங்கள் நிலவுகின்றன... பிரதேச பொருளாதார ஒருங்கிணைப்பை வலுப்படுத்தல், பின்தங்கிய பிரதேசங்களை வளர்த்தல், ''சீரிசைவான பிராந்திய'' வளர்ச்சி — இவையெல்லாம் சுயமான தேசிய வளர்ச்சியின் நலன் கருதி, காலனி வகை சேர்ந்த பொருளாதாரத்தின் பிரதேச கட்டமைவை மாற்றும் பாதையில் மையக் கடமைகளாகும்.

சோவியத் யூனியனில் புதிய பிராந்திய வளர்ச்சித் திட்டங்கள் (கருமண் அல்லா பிரதேசம், மேற்கு சைபீரியா போன்ற பகுதிகள்) பரவலான பகுதிகளை ஆட்கொள்கின்றன, இவற்றின் பரப்பு பல அரசுகளின் மொத்தப் பரப்பையே விஞ்சக் கூடியது. கடினமான தட்ப வெப்ப, இயற்கைச் சூழலை உடைய பிரதேசங்கள் பெருமளவில் மீட்கப்படுகின்றன, பல புதிய பிரதேச உற்பத்தி இணையங்களைத் தோற்றுவிக்கத் திட்டமிடப்படுகிறது. சோவியத் நாட்டின் பல்வேறு பிரதேசங்களின் சமூக வளர்ச்சி மட்டங்களைச் சமப்படுத்தும் கடமை சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27ஆவது காங்கிரசில் கோடிட்டுக் காட்டப்பட்டது.

இவ்வாறாக எல்லா நாடுகளிலும் பிராந்திய வேறுபாடுகள் நிலவுகின்றன, பிராந்திய பிரச்சினைகளின் முக்கியத்துவம் அதிகரித்து வருகிறது.

ஏற்கெனவே பல் அம்ச பிராந்திய பிரச்சினையை விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சி விரிவுபடுத்தி, சிக்கலாக்கி மாற்றியமைக்கிறது. வளர்ச்சியின் பொதுச் சூழல் மீது புதிய காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன, பிராந்திய வளர்ச்சியின் முரண்பாட்டுத் தன்மையை வலுப்படுத்துகின்றன, புதிய தீர்வுகளைத் தேடும்படியும் புதிய விஞ்ஞான வரையளவுகளைத் தோற்றுவிக்கும்படியும் நிர்ப்பந்திக்கின்றன. இன்று பிரச்சினைகள் பொருளாதார அம்சங்களுடன் நின்று விடுவதில்லை. வளர்ச்சியின் சமூக மற்றும் புறச்சூழல் அம்சங்கள் மேன்மேலும் தெளி

வாயும் அடிக்கடியும் முன்னணிக்கு வருகின்றன, மேன்மேலும் அதிகமான துறைகளை ஆட்கொள்கின்றன. இவை ஒவ்வொரு சமூக பொருளாதார முறைக்கும், எந்த ஒரு நாட்டிற்கும் (அதன் விசேஷ பிராந்திய மற்றும் பொது வளர்ச்சி பிரச்சினைகளுடன் சேர்த்து) உரித்தான கடினமான பிரச்சினைகளாகும். ஆனால் லட்சியங்கள், வாய்ப்புகள், இப்பிரச்சினைகளைத் தீர்க்கும் முறைகள் மற்றும் முக்கிய பிரச்சினை — யாருடைய நலன்களில் இவை தீர்க்கப்படுகின்றன — ஆகியவை முற்றிலும் வேறுபட்டவையாக இருக்கலாம்.

பிராந்திய வளர்ச்சி பற்றிய கருத்தமைப்புகள் நீண்ட கால வளர்ச்சி திட்டத்தின் பொதுக் கோட்பாடுகள், சமூக பொருளாதார அமைப்பின் வாய்ப்புகள், நாட்டங்களை அடிப்படையாகக் கொண்டவை, அதாவது இவை குறிப்பிட்ட சித்தாந்த, அரசியல் நிலைகளைப் பிரதிபலிக்கின்றன.

பிராந்திய வளர்ச்சிப் பிரச்சினைகள் பல்வேறு துறைகளின் ஆராய்ச் சிக்கு உட்படுபவையாகும். ஒவ்வொரு பிரதேசத்திலும் பொருளாதார, சமூக, இயற்கை மற்றும் புறச்சூழல் பிரச்சினைகள் ஒன்றாகச் சேர்ந்து, தனியான, விசேஷமான இணைப்புகளை உருவாக்குகின்றன. பிராந்திய பிரச்சினைகளை ஆராய, அதுவும் பிராந்தியங்களில் உலகப் பிரச்சினை களை ஆராய பன்முக அணுகுமுறை வேண்டும். ஆராய்ச்சிப் பொருளின் கூட்டு ஒற்றுமையே இதற்குக் கட்டளையிடுகிறது. எனவே 1920ஆம் ஆண்டு களில் உலகப் பிரச்சினைகளின் தோற்றத்தைப்பற்றி முன்னறிவித்த சோவியத் விஞ்ஞானி வி. ஐ. வெர்னாத்ஸ்கி (மிகப் பல்வேறான துறை களில் இவருடைய ஆராய்ச்சிகள் பிரபலமானவை) அறிவு வளர்ச்சியின் தனித்துறைப்பாடு தனித்தனி விஞ்ஞானங்களுக்கேற்றபடி நடக்காது, தனித்தனி பிரச்சினைகளுக்கேற்றபடிதான் நடக்க வேண்டும் என்று கோடிட்டுக் காட்டியது தற்செயல் அல்ல.

இன்று கூட்டு ஆராய்ச்சிகள் மிகவும் அவசியமாகியுள்ளன. ஆனால் பல நூற்றாண்டுகளாக விஞ்ஞானத்தைத் தனித்தனி பகுதிகளாகப் பிரித்து விட்டு, இப்போது ஒன்று சேர்ப்பதென்பது சிக்கலான, முரண் பாடான, கடினமான நிகழ்ச்சிப் போக்காகும். பன்முக அணுகுமுறை யைப் பின்பற்றும் அதே நேரத்தில் ஆழமான தனித்துறைப்பாட்டை யும் தொடர வேண்டும், ஆராய்ச்சிப் பொருளைப் பற்றிய பரிபூரண ஞானமும் அவசியமாகும்.

புவியியல் நிபுணர்கள், பொருளாதார வல்லுனர்கள், மக்கள்தொகை நிபுணர்கள், சமூகவியலர்கள், புறச்சூழல் நிபுணர்கள், நாடுகள், பிர தேசங்களுக்கான செயல்திட்டங்களைத் தீட்டுவதில் பங்கேற்கும் இதர நிபுணர்கள் ஆகியோர் ஏதாவது ஒரு விதத்தில் பிராந்திய பிரச்சினை களின் தீர்வில் ஈடுபட்டுள்ளனர். ஆண்டாண்டு காலமாகத் தனக்குள்ள பிராந்திய திசையமைவாலும், தனக்குள்ள பெரும் இணைப்பு உள்ளாற் றலாலும், சமூக விஞ்ஞானங்களுக்கும் இயற்கை விஞ்ஞானங்களுக்கும் இடைப்பட்ட நிலையை வகிப்பதாலும் இவ்வரிசையில் புவியியல் முக்கிய

விஞ்ஞானங்களில் ஒன்றாகத் திகழுகிறது. ஆனால் புவியியல், மற்ற கலப்பு விஞ்ஞானங்களுடன் சேர்ந்துதான் பிராந்திய மற்றும் உலக வளர்ச்சிப் பிரச்சினைகளுக்கான தீர்வை ஆக்க பூர்வமான வழியில் தேடும். இந்நூல், பிராந்திய வளர்ச்சி என்ற முக்கியமான, சீரிசை வாக வளர்ந்து வரும் துறையில் புவியியலின் இடத்தை, பங்கை, இதன் ஆராய்ச்சி உள்ளாற்றலை "சுயமாக அறியும்" ஒரு முயற்சி யாகும்.

மிகத் தொன்மையான விஞ்ஞானங்களில் ஒன்றாகிய புவியியல் எப்போதுமே சமுதாயத்தின் உடனடித் தேவைகளுக்குச் சுறுசுறுப் பாக சேவை செய்து வந்துள்ளது. "எல்லையற்று" பரந்திருந்த பூமிப் பரப்பைக் கண்டுபிடிப்பதுதான் பல நூற்றாண்டுகளாக இதன் முக்கியப் பணியாக இருந்தது. இன்று உலகம் நம் கண் முன்னே "சுருங்கி" வரும் பொழுது, இயற்கை வளங்கள் தீரக் கூடியவை என்பது மேன் மேலும் உணரப்படும் பொழுது, "சுருங்கி வரும்" இடத்தை சாலச் சிறந்த வகையில் பயன்படுத்தும் வழிகளைக் கண்டுபிடித்து சுட்டிக் காட்டுவது புவியியலின் கடமையாகிறது. இப்புதிய கடமை, இதன் நிறைவேற்றத்திற்கான புதிய அணுகுமுறைகளுக்குக் கட்டளையிடுகிறது; உலகப் பிரச்சினைகள் மற்றும் சமுதாயப் பரிணாம வளர்ச்சியின் பொதுப் போக்குகள் ஆகியவற்றின் பின்னணியில் பிராந்திய வளர்ச்சி பற்றிய கருத்தமைப்புகளை மறு பரிசீலனை செய்வதும் இவற்றிலடங்கும்.

20ஆம் நூற்றாண்டின் முதல் பாதியில் புவியியலின் வளர்ச்சியைப் பகுப்பாய்வு செய்யும் மேலைய விஞ்ஞானிகள் இதன் முன்னேற்ற வேகம் குறைந்துள்ளதையும், இது நடைமுறையின் தேவைகளிலிருந்து பின்தங்கியிருப்பதையும், "இந்தத் தேவைகள் மாறுகின்றன" என்பதை புவியியல் நிபுணர்களால் கவனிக்க முடியாமலிருப்பதையும் சுட்டிக் காட்டுகின்றனர். (Chisholm, 1975, p. 181.)

இரண்டு உலக யுத்தங்களுக்கு இடைப்பட்ட காலத்தில், பழையதாகிப் போன புறச்சூழல் நியதிவாதமானது (environmental determinism) புவியியல் ஆராயும் பிரதேசங்கள், புலப்பாடுகளின் ஈடு இணையற்ற தன்மை பற்றிய கருத்தமைப்பால் மாற்றப்பட்டது என்றும், இது புவியியல் விஞ்ஞானத்தின் நடைமுறை முக்கியத்துவம் அதிகரிக்கவோ, இதன் தத்துவார்த்த வளர்ச்சிக்கோ உதவுவதில்லை என்றும் நியா யமாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

ஆனால் புவியியல் வளர்ச்சியின் கட்டங்களை இப்படி மதிப்பிடும் மேற்கத்திய புவியியல் நிபுணர்கள் ருஷ்யாவிலும் சோவியத் யூனியனிலும் புவியியல் விஞ்ஞானத்தின் வளர்ச்சியைக் கவனத்தில் கொள்வதில்லை. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், குறிப்பாக 1920ஆம் ஆண்டுகளில் முறையியல் கோட்பாடுகளை அடியோடு மாற்றிய இது விளக்க விஞ் ஞானத்திலிருந்து ஆக்க பூர்வமான விஞ்ஞானமாகியது.

1920ஆம் ஆண்டுகளிலிருந்து சோவியத் யூனியனில் புவியியல் வளர்ச்சி,

சோஷலிச கட்டுமானம், முன்னாள் பின்தங்கிய தேசிய இன வட்டங்களின் வளர்ச்சி, நாட்டின் ஒருங்கிணைப்பு, பெரும் பொருளாதார வட்டங்களின் தனித்துறைப்பாட்டின் அடிப்படையில் நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தல் ஆகியவற்றுடன் அங்கக ரீதியாக தொடர்புடையது. கிட்டத்தட்ட 70 ஆண்டுகளாக சோவியத் யூனியனில் புவியியல் விஞ்ஞான ரீதியான பிராந்திய திட்டமிடலின் முக்கிய அடிப்படைகளில் ஒன்றாகத் திகழுகிறது; இத்திட்டமிடல் அரசு மட்டத்திலிருந்து பிராந்திய மட்டம், ஸ்தல மட்டம், நகர மட்டம் வரை எல்லா மட்டங்களிலும் பின்பற்றப்படுகிறது.

இதனால் சோவியத் யூனியனில் புவியியலின் வளர்ச்சி தடங்கலின்றி முன்னோக்கிய திசையில் நடைபெற்றது என்று பொருளாகாது. உலகெங்கும் நடைபெற்றதைப் போன்றே சோவியத் யூனியனிலும் இது கடுமையான கருத்து மோதல்களின் பின்னணியில் நடந்தது.

1920 — 1930ஆம் ஆண்டுகளில் ''இடதுசாரிகள்'' என்றழைக்கப்பட்ட தீவிரவாத விஞ்ஞானிகளின் குழுவிற்கும் என். என். பரான்ஸ்கியின் புவியியல் போக்கிற்கும் இடையில் கடும் போராட்டம் நடந்தது. முதலில் குறிப்பிட்ட ''இடதுசாரிகள்'' புவியியலை மிகவும் பொருளாதார மயப்படுத்தி, அரசியல் மயப்படுத்துவதாகக் கூறி அதன் சாரத்தையே திரித்துரைத்தனர். சோவியத் பொருளாதார புவியியலின் ஆசானாகிய என். என். பரான்ஸ்கி தனது ஏராளமான சீடர்கள், மாணவர்களுடன் சேர்ந்து புவியியல் விஞ்ஞானத்தின் பிராந்திய சாரத்தை வலியுறுத்தினார், நாட்டியலை வளர்க்கவும் புவியியலுக்கும் திட்டமிடலுக்கும் விஞ்ஞான பிரசாரத்திற்கும் இடையிலுள்ள தொடர்புகளை வலுப்படுத்தவும், புவியியல் ஞானம் சாதாரண மக்களிடையே பரவவும் நிறைய பாடுபட்டார். அதே நேரத்தில், சோவியத் நாட்டில் புவியியலை உலக விஞ்ஞானத்திலிருந்து ''பிரித்து தனிமைப்படுத்துவதைப்'' பற்றிய பேச்சே எழவில்லை. முக்கிய ஐரோப்பிய மொழிகளை அறிந்திருந்த என். என். பரான்ஸ்கி, மேலைய புவியியலைக் கவனமாகப் படித்தார், முக்கிய அயல் நாட்டு புவியியல் படைப்புகளை முறைப்படி ருஷ்ய மொழியில் மொழிபெயர்க்க பெரிதும் உதவினார். 1930ஆம் ஆண்டுகளில் சோவியத் யூனியனில் புவியியல் ஆராய்ச்சிகள் அளவிற்கதிகமாக ஸ்தலமயமாக்கப்பட்டன. முந்தைய காலகட்டத்தின் பல சாதனைகளும், விஞ்ஞானத்தின் உள்ளாற்றலும் போதிய அளவு பயன்படுத்தப்படவில்லை, புவியியல் விஞ்ஞானம் பிராந்தியத் திட்டமிடலுக்குப் புதிதாக எதையாவது கண்டுபிடிப்பதை விடுத்து விமரிசனங்களை வழங்குவதுடன் நின்றது. துரதிர்ஷ்டவசமாக இந்நிலவரம் சில அம்சங்களில் 50ஆம் ஆண்டுகள் வரை நிலவியது.

புவியியல் முறையியல் மற்றும் முறைகளின் பரிணாம வளர்ச்சிக் கட்டங்கள், பிராந்திய ஆராய்ச்சிகளின் பாலான உறவுகள் மாறி வருவதில் அதிக அளவில் வெளிப்படுகின்றன என்பது குறிப்பிடத்

தக்கது என்று எங்களுக்குப் படுகிறது. இது உதாரணமாக மேலைய புவியியலில் ''அளவு நிலை புரட்சியின்'' பொழுது வெளிப்பட்டது; அப்போது பிராந்திய பிரச்சினைகளும் அம்சங்களும் பின்னுக்குத் தள்ளப்பட்டன.

''அளவு நிலை புரட்சி'' என்றழைக்கப்படுவதற்குப் பாரபட்சமற்ற மதிப்பைத் தர முயல வேண்டும் என்று எங்களுக்குப் படுகிறது. புவியியல் நிபுணர்கள் நவீன கணிதத்தை நன்கு கிரகித்து அதை தமது ஆராய்ச்சி களில் பயன்படுத்துவது என்பது சந்தேகத்திற்கிடமின்றி முற்போக்கான விஷயமாகும். இளம் பிரிட்டிஷ் புவியியல் நிபுணர்கள் (இவர்கள்தான் கணிதத்தை அமெரிக்காவிற்கும் கானடாவிற்கும் பரப்பினர்) கணிதத் தைக் கற்பதில் காட்டிய அக்கறை புரியக் கூடியதே: இது ''பிரதேசங் களின் ஈடு இணையற்ற தன்மை'' பற்றி மேற்கே நீண்ட காலமாக ஆதிக்கம் செலுத்திய கருத்தமைப்பு புவியியலை இட்டுச் சென்ற முட்டுக் கட்டையிலிருந்து வெளிவரும் வழியாயிருந்தது.

ஆனால் புவியியல் விஞ்ஞானத்தில் விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியைப் புகுத்தும் முற்போக்கான நிகழ்ச்சிப் போக்கு குறிப்பிட்ட தீய விளைவுகளுக்கு இட்டுச் சென்றது: ''...அளவிடுதலின் ஒப்பீட்டள விலான சிக்கலும் சூக்கும உறவுகளை சித்தரிப்பதும் விஞ்ஞான மதிப்பின் முக்கிய அளவுகோலாயின... ஆராய்ச்சி முறையியல் திரிக்கப்பட்டது.'' (Slater, 1977, p. 42.)

மேற்கே புவியியல் வளர்ச்சியில் 1970ஆம் ஆண்டுகள் திருப்புமுனை ஆண்டுகளாயின. ''அளவுநிலை புரட்சியின்'' கட்டத்தில் கணித முறை களின் உதவியால் எவ்வித முக்கிய பிரச்சினையையும் தீர்க்க முடிய வில்லை என்பது உணரப்பட்டது. வாழ்க்கையின் யதார்த்த சூழ்நிலைகள் சிக்கலான பொழுது ''கணித'' புவியியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வாய்ப்புகளை ஆராயாதது மட்டுமல்ல, பல நேரங்களில் தேவையற்ற விளக்கங்களில் இறங்கவும் செய்தது. பல சமயங்களில் சிக்கலான தொழில்நுட்பமும் கணக்கீட்டு முறைகளும் நிலையற்ற சமூக புலப்பாடுகளை (உதாரணமாக வாடிக்கையாளர்கள் நடந்து கொள்ளும் விதம், சேவை மையங்கள் எப்படி அமைந்துள்ளன) பகுப்பாய்வு செய்ய பயன்படுத்தப்பட்டன என்பதை 1970ஆம் ஆண்டுகளில் பல மேலைய விஞ்ஞானிகள் ஒப்புக் கொண்டனர்.

வளர்முக நாடுகளில் புவியியல் சம்பந்தமான சில ஆராய்ச்சிகள் பெரிதும் செலவழித்து நடத்தப்பட்டதானது நடைமுறையில் எவ்விதப் பயனையும் தரவில்லை என்பது வருத்தத்தோடு ஒப்புக் கொள்ளப் பட்டது. முறையியல் ரீதியான புதிய அம்சங்கள் பல நேரங்களில் கருத்தமைப்பு சிந்தனையை முந்திக் கொண்டு சென்றன, ''அப் போது தொழில்நுட்பம், ஏதோ பயன்படுத்த வேண்டுமே என்பதற் காகப் பயன்படுத்தப்பட்டது, இது மிகக் குறைவான பயனையே தந்தது'' என்று பரிட்டிஷ் புவியியல் நிபுணர் இ. ஜான்ஸ் (1978)

கூறுகிறார். இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளின் பயன்கள் எப்படி அற்பமான வை என்பதை இந்தியாவின் உதாரணத்தில் இவர் காட்டினார். கணிப் பொறியின் உதவியால் கல்கத்தா வாசிகளின் சமூக வாழ்க்கையைப் பற்றி நடத்தப்படும் பரவலான ஆராய்ச்சி, நகரமயமாக்கலைப் பற்றி ஆராய்பவர்களுக்குக் குறைவான விவரங்களையே அளிக்கும், கல்கத்தா நகரின் வீதிகளில் உறங்கும் 6 லட்சம் வீடற்றவர்களுக்கோ இன்னமும் குறைவான பலன்தான் கிட்டும் என்றார் இவர்.

உண்மையிலேயே முக்கியமான வாழ்க்கை பிரச்சினைகளைப் பயின்று முக்கிய பிரச்சினைகளின் புவியியலை ("relevant geography") வளர்க்கக் கோரும் அறைகூவல் 1970—1980ஆம் ஆண்டுகளில் காலத் தின் கோஷமாகத் திகழ்ந்தது. "முக்கிய பிரச்சினைகளின்" புவியிய லுக்கு மாறும் அவசியம் பற்றிய உணர்வு உரிய நேரத்தில் வந்ததோடு கூட, உலகந் தழுவிய அளவில் பிராந்திய வளர்ச்சி பிரச்சினைகள் கூர் மையடைந்தது இதற்குப் பெருமளவில் வழிகோலியதும் நியதியானது.

இந்தப் புறவய ரீதியான நிகழ்ச்சிப் போக்கும், விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி சகாப்தத்தின், முதலாளித்துவ பொது நெருக்கடியின் சிக்கலான வளர்ச்சி பிரச்சினைகளுக்கு பூர்ஷ்வா விஞ்ஞானத்தால் தீர்வு காண இயலாமையும் மேலைய புவியியல் "தீவிரமயப்படுத்தப் பட" வழிகோலின; கிட்டத்தட்ட 1970ஆம் ஆண்டுகளிலிருந்து இது அரசியல் பொருளாதாரம், தத்துவஞானம், மேலைய விஞ்ஞானங்கள் அனைத்தும் தீவிரமயப்படுத்தப்படுவதுடன் சேர்ந்து நடைபெறுகிறது.

உண்மையிலேயே முக்கியமான வளர்ச்சி பிரச்சினைகளை ஆராய நேர்மையாக முயற்சி செய்யும் விஞ்ஞானிகள் மார்க்சிய விஞ்ஞானத் தை, வரலாற்று மற்றும் இயக்கவியல் பொருள்முதல்வாதத்தை அடிப் படையாகக் கொண்டு இயங்க வேண்டிய அவசியத்திற்கு உட்படுவது குறிப்பிடத்தக்க அம்சமென நூலாசிரியர்கள் கருதுகின்றனர். இதற்கான நிரூபணத்தை, தம்மை "தீவிரவாதிகள்" என்று அழைத்துக் கொள்ளும் புவியியல் நிபுணர்களின் வெளியீடுகளில் மட்டுமின்றி 1970—1980ஆம் ஆண்டுகளின் பல முற்போக்கு மேலை விஞ்ஞானிகளின் படைப்புகளிலும் காணலாம். *Progress in Human Geography* என்ற தலைப்பில் வெளிவரும் தொகுப்பு நூல்களே இதற்கு சான்று. கிட்டத்தட்ட இவை ஒவ்வொன்றிலும் மார்க்சிய-லெனினிய அறிதல் தத்துவம் மேற் கோள் காட்டப்பட்ட கட்டுரைகள் இருக்கும்.

மேலைய தீவிரவாத புவியியலின் பிரதிநிதிகளுக்கு சோவியத் யூனி யனிலும் மற்ற சோஷலிச நாடுகளிலும் நடைபெற்ற சோஷலிசக் கட்டுமான அனுபவம், பிரதேசத் திட்டமிடல், பிரதேசமயப்படுத்தல் தத்துவம், நடைமுறை ஆகியவற்றைப் பற்றி துரதிர்ஷ்டவசமாக அனேக மாக ஒன்றும் தெரியாது, அவர்கள் சோவியத் புவியியல் நூல்கள், கட்டுரைகளைக் கிட்டத்தட்ட பயன்படுத்துவதேயில்லை. எனவேதான் கவனக் குறைவான மதிப்பீடுகளும் தவறான மதிப்பீடுகளும் அடிக்கடி

வருகின்றன, இவை வழக்கமான பூர்ஷ்வா பிரசாரத்திலிருந்து எடுக்கப் பட்டவையாக இருக்கும்; சில நேரங்களில் சோவியத் புவியியல் மாணவர்களின் பாடத் திட்டங்களில் எப்போதோ சேர்க்கப்பட்ட உண்மைகளின் ''மறு கண்டுபிடிப்பு'' இருக்கும்.

ஆனால் மொத்தத்தில் பார்த்தால், முக்கிய வளர்ச்சி பிரச்சினை களின் ஆராய்ச்சியில் இறங்கிய மேலைய புவியியலில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்கள், வரலாற்று மற்றும் இயக்கவியல் பொருள்முதல்வாதத் தைப் பரவலாக நாடியதுடன் தொடர்புடையவை என்பதில் சந்தேக மில்லை.

இன்று மேலைய புவியியல் நூல்களில் பழமையான மற்றும் பிற்போக் கான கருத்துகளும் பிரபல ஆசிரியர் எம். சிஸ்ஹோல்ம் செய்வதைப் போன்ற மார்க்சியத்தைப் பற்றிய எளிய ''மறுப்பும்'' முன்னை விட குறைவாகவே காணப்படுகின்றன. மார்க்சிய இயக்கவியல் முறை ''கருத்துகளை விட்டு விலகிச் செல்கிறது, இதன் ஆதரவாளர்கள் கூறும்படி இது விவேக சிந்தனையின் மாதிரியாக இல்லாமல் இயக்கமறுப் பியல் நம்பிக்கை முறையாகத் திகழுகிறது என்பதுதான் இதன் மதிப் பாகும்'' என்று சிஸ்ஹோல்ம் கருதுகிறார். (Chisholm, 1975, p. 175.)

மொத்தத்தில், மேலைய புவியியல் நிபுணர்களின் நிலைகள் எவ்வளவு மாறுபட்டவையாக இருந்தாலும் ''புதிய'' புவியியல் பிராந்திய மட்டத் தில் வளர்ச்சிப் பிரச்சினைகளைப் பற்றிய ஆராய்ச்சியுடன் தொடர் புடையது என்பது சந்தேகத்திற்கிடமின்றி தெளிவாகிறது.

''நகர, பிரதேச அல்லது சர்வதேசிய இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை கள் என்பவை முதலாளித்துவ முரண்பாடுகளின் விசும்பு ரீதியான வெளிப்பாடாகும்'' என்பது (Massey, 1978, p. 190) மேன்மேலும் அதிகமான மேலைய விஞ்ஞானிகளுக்குப் புரிந்து வருகிறது.

பிராந்திய பகுப்பாய்வைப் பற்றிய பொது அணுகுமுறைகளை உருவாக்குவதும், பொதுக் கருத்தினங்களைப் பற்றி முடிவு செய்வதும் ஏராளமான அனுபவ ரீதியான விஷயங்களைப் பகுப்பாய்வு செய்து தத்துவ அடிப்படைகளைத் தீட்ட அவசியமானவையாகும். சித்தாந்த முரண்பாடுகள் எதுவும் உற்பத்திச் சக்திகளின் இட ஒதுக்கீடு பற்றிய ஒரு சில பொது விதிகளின் (இவற்றின் பல வகைகளின்) கண்டுபிடிப் பிற்கும், பொருளாதார பிரதேசமயப்படுத்தும் தத்துவத்தை உருவாக் கவும், பிரதேச வளர்ச்சி பற்றிய மிகப் பொதுவான விதிகளின் கண்டு பிடிப்பிற்கும் இடையூறாக இருக்கக் கூடாது. இத்தகைய விதிகள் நிலவுவது தெட்டந்தெளிவு, ஏனெனில் பிரதேச உழைப்புப் பிரிவினை என்பது புறவய ரீதியான, பொது நிகழ்ச்சிப் போக்காகும்; குறிப்பிட்ட ஒரு சமூக பொருளாதார அமைப்பில் மட்டுமே வெளிப்படும் விசேஷ விதிகள் நிலவுவதும் தெட்டத்தெளிவாகும்.

பிராந்திய ஆராய்ச்சி மற்றும் பிராந்தியத் திட்டமிடல் பற்றிய

சோவியத் தத்துவத்தையும் நடைமுறையையும் இந்நூலில் விவரமாக விளக்க முடியாது. இது ஒரு தனி பணியாகும்; இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்படும் சோவியத் படைப்புகளிலும் இந்திய விஞ்ஞானி களின் படைப்புகளிலும் இது முறைப்படி விளக்கப்படுமென்று நூலாசிரி யர்கள் நம்புகின்றனர். விஞ்ஞான தொடர்புகளும் உலக புவியியல் சங்கமும் இதை சாத்தியமாக்கும். பல்வேறு நாடுகளில் இட ரீதியான வளர்ச்சி பற்றிய ஒரு சில பொது நியதிகளைத் தேடும் போக்கில் தகவல் கள், கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதும் அவசியமாகும்.

மிகப் பொதுவான, ஆரம்பக் கருத்துகளிலிருந்து துவங்கி பொது கருத்தினங்களை உருவாக்கும் அவசியம் இப்பாதையில் முக்கியக் கடமையாகும். உதாரணமாக ''பொருளாதார புவியியல்'', ''சமூக புவியி யல்'', ''மனித புவியியல்'' ஆகியவற்றிற்கு இரு பொருளற்ற வரையறுப் பைத் தருவது கடினம். மொழிபெயர்ப்பில் உள்ள குறைகளால் மட்டும் உண்மையான வார்த்தைக் குழப்பம் நிலவவில்லை; பல நேரங்களில் ஒரே மொழியில், ஒரே நாட்டின் உள்ளே பல்வேறு போக்குகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஒரே சொல்லை வெவ்வேறு விதமாகப் புரிந்து கொள்கின்றனர்.

ஆங்கில மொழி பேசப்படும் நாடுகளில் Human Geography எனப் படும் கருத்து மிகப் பரவலானது, பொதுவானது, ஆனால் அதே சமயம் போதுமான அளவிற்குத் தெளிவற்றது. ருஷ்ய மொழியில் ''சமூக மற்றும் பொருளாதார புவியியல்'' என்ற கருத்து இதற்கு முற்றிலும் சரிசமமானது அல்ல என்றாலும் மிக நெருக்கமானதாகும்; பிரெஞ்சு இலக்கியத்தில் Geographie humane என்ற கருத்து இதற்குக் கிட்டத்தட்ட பொறுத்தமானது. அதே நேரத்தில் சோவியத் யூனியனில் மிகவும் பரவலான (1970ஆம் ஆண்டுகள் வரை) ''பொருளாதார புவியியல்'' (Economic Geography) என்ற கருத்து ஆங்கில, பிரெஞ்சு நூல்கள், கட்டுரைகளில் ருஷ்ய மொழியில் உள்ளதை விட பன்மடங்கு குறுகலாக, கிட்டத்தட்ட ''உற்பத்தி புவியியல்'' (Industrial Geography) என்பதற்கு ஒப்பானதாக புரிந்து கொள்ளப்படுகிறது.

இந்த விஷயத்தில் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசிலும் நிலவரம் சிக்கலானது. இங்கு சில ஆசிரியர்கள் Wirtschaftsgeographie என்ற வழக்கமான சொல்லைப் பின்பற்றுகின்றனர்; இதில் சமூக புவியியலும் அடங்கும். ஆனால் சமீப காலமாக ''பொருளாதார, சமூக புவியியல்'' என்ற வேறு சொல்லும் பயன்படுத்தப்படுகிறது. ''சமுதாய புவியியல்'' என்ற மிகப் பரவலான சொல்லிற்கு மாறுவது பற்றிய முன்மொழிவு கள் 1980ஆம் ஆண்டுகளில் தோன்றுகின்றன; ஆனால் இது இன்னமும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படாததால் நாம் ஏற்றுக் கொண்டுள்ள ''பொருளாதார மற்றும் சமூக புவியியல்'' என்ற சொல்லை அல்லது சுருக்கமாக ''பொருளாதார புவியியல்'' என்ற சொல்லை (இதில் சமூக புவியியலும் அடங்கும்) பயன்படுத்துவோம்.

பிராந்திய விஞ்ஞானம், பிராந்தியத் திட்டமிடல், பிராந்திய ஆராய்ச்சிகள் ஆகியவற்றிலும் வார்த்தைகள் விஷயத்தில் ஆரம்பம் முதலே குழப்பம் நிலவி வருகிறது.

''பிராந்திய வளர்ச்சி'' என்ற கருத்து பல்பொருள் கருத்து, பல நேரங்களில் இது பலவாறாக விளக்கப்படுகிறது. அனேகமாக பின் வரும் துறைகளை நாம் தனித்தனியே பிரித்துப் பார்க்க வேண்டும்: அ) புறவய நிகழ்ச்சிப் போக்கு என்ற வகையில் பிராந்திய வளர்ச்சி; ஆ) விஞ்ஞானத்தில் இந்நிகழ்ச்சிப் போக்கின் பிரதிபலிப்பு; இ) ஒழுங்கு படுத்தும் அரசாங்க நடவடிக்கைகளின் அமைப்பு. கடைசியாக சொல்லப்பட்டதில் பிராந்திய வளர்ச்சியானது பிராந்தியத் திட்டமிடலைக் குறிப்பதாகிறது.

இக்கருத்துகளின் பரஸ்பரத் தொடர்பு தெட்டத்தெளிவு. பிராந்திய வளர்ச்சிப் பற்றிய கருத்தமைப்பானது புறவய நிகழ்ச்சிப் போக்கின் அகவய பிரதிபலிப்பாகும். பிராந்திய வளர்ச்சி எவ்வளவுக்கெவ்வளவு விஞ்ஞான அடிப்படையிலானதோ, அதாவது பிராந்திய வளர்ச்சியின் புறவயப் போக்கை எவ்வளவுக்கெவ்வளவு முழுமையாகக் கணக்கில் கொள்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அது திட்டமிட்ட நிகழ்ச்சிப் போக்கு என்ற வகையில் வெற்றிகரமானதாகத் திகழுகிறது (இங்கே நாம் திட்டங்களின் நிறைவேற்றத்தில் தீர்மானகரமான பங்காற்றும் நிறுவன அமைப்பின் செயற்பாட்டிலிருந்து நம் கவனத்தைத் திசை திரும்புகின்றோம்). இதில் அரசே பிரதேசங்களை உருவாக்கும் காரணியாக விளங்குகிறது; இதன் செயற்பாட்டின் பலம், இது எவ்வளவு தீவிரமாயும் தொடர்ச்சியாயும் பிராந்தியத் திட்டமிடல் பணியை நிறைவேற்றுகிறது என்பதால் நிர்ணயிக்கப்படுகிறது.

நூலாசிரியர்களின் முக்கியக் கடமை பிராந்திய வளர்ச்சி பற்றிய கருத்தமைப்புகளைப் பகுப்பாய்வு செய்வதாகும். ஆனால் இப்பணியில் நூலாசிரியர்களால் பல்வேறு நாடுகளில் பிராந்திய வளர்ச்சியின் புறவயப் போக்குகளைப் பற்றிய ஒரு சில விஷயங்களிலிருந்தும், பிராந்தியத் திட்டமிடல் பற்றிய ஒரு சில விஷயங்களின் சித்தரிப்பிலிருந்தும் விலகி நிற்க முடியவில்லை என்பது இயற்கையே. இவையெல்லாம் நூலை எழுதுவதையும் (எனவே படிப்பதையும்) சிக்கலாக்கின. பிராந்திய வளர்ச்சியைப் பற்றிய கருத்தமைப்புகளின் பரிணாம வளர்ச்சியில் முக்கியப் போக்குகளை — இவற்றின் மாற்றங்கள் கடந்த 20 — 30 ஆண்டுகளில் மிகவும் தெளிவானவை — புரிந்து கொள்ள வேண்டும் என்ற நாட்டம்தான் நூலாசிரியர்களுக்கு இச்சிக்கலான பணியில் வழிகாட்டியாக விளங்கியது.

ஆக்க பூர்வமான ஆலோசனைகளை வழங்கியும் கிண்டல் செய்தும், ''வலப்புறமிருந்தும்'' ''இடப்புறமிருந்தும்'' விமர்சித்தும் இந்நூலை எழுத உதவிய சோவியத் மற்றும் அயல் நாட்டு நண்பர்களுக்கும் சகாக்களுக்கும் நூலாசிரியர்கள் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்

கொள்கின்றனர். புவியியல் துறையில் சர்வதேச விஞ்ஞான ஒத்துழைப்பு எவ்வளவு நல்லது, எவ்வளவு ஊக்கமளிக்கிறது என்பதை நாங்கள் சொந்த அனுபவத்தில் உணர்ந்தோம். இந்நூலின் ஒரு சில அடிப்படை கருத்து நிலைகள் சோவியத்-இந்திய புவியியல் கருத்தரங்கங்கள் (1978இல் சோவியத் யூனியனில், 1980இல் இந்தியாவில், 1985இல் சோவியத் யூனியனில்), சோவியத்-போலந்து புவியியல் கருத்தரங்கங்கள் (1973, 1977, 1979), சோவியத்-பிரிட்டிஷ் புவியியல் கருத்தரங்கங்கள் (1978இல் பிரிட்டனில், 1982இல் சோவியத் யூனியனில்) ஆகியவற்றில் விவாதிக்கப்பட்டன (இவற்றில் எப்போதுமே கருத்தொற்றுமை நில வியது என்று கூற முடியாது).

அத்தியாயம் ஒன்று

பிரதேசப் பொருளாதார அமைப்பு: புதிய சூழ்நிலையும் மாறிவரும் கருத்தமைப்புகளும் உலகளாவிய பிராந்திய பிரச்சினைகள்.

1. உலகளாவிய மாடெல்களை பிராந்தியமயப்படுத்துவதும் சமுதாய வளர்ச்சி பற்றிய கருத்தமைப்புகளும்

உலகளாவிய ஆராய்ச்சிகள் சாதாரணமாக 1972இலிருந்து ஆரம்பமாயின என்பர். அந்த ஆண்டில்தான் டி. மெடோசும், அமெரிக்காவில் உள்ள மாஸச்சுஸெட்ஸ் தொழில்நுட்பக் கல்லூரியில் பணியாற்றும் சிலரும் சேர்ந்து, ரோம் சங்கத்தின் கட்டளைக்கேற்ப **வளர்ச்சியின் வரம்புகள்** *என்ற நூலை எழுதினர். இந்நூல் பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. இந்நூல் சமூகப் பிரச்சினைகளின் ஆராய்ச்சியில் அமெரிக்க விஞ்ஞானி ஜே. ஃபாரெஸ்டரின் முறை இயக்கப் போக்கை பயன்படுத்துவதில் ஒரு விலைமதிப்பற்ற பங்காற்றியது; இதன் பலவீனம் — இதை எதிர்கால அரசியல் தீர்வுகளுக்கான அடிப்படையாகப் பயன்படுத்த முடியாது. 1970இல் ரோம் சங்கத்தினால் அழைக்கப்பட்ட ஜே. ஃபாரெஸ்டர் தனது முறையை ''உலகம் 1'', ''உலகம் 2'' என்ற மாடெல்களை உருவாக்கப் பயன்படுத்தினார்; இவை மக்கள்தொகை, மூலதனம், இயற்கை வளங்கள், புறச்சூழல் அசுத்தமடைதல், உணவுப் பொருட்கள் என்ற ஐந்து முக்கிய மாறு காரணிகளின் பரஸ்பரத் தொடர்புடைய வளர்ச்சிப் போக்குகளைப் பிரதிபலித்தன. அதே நேரத்தில் இவர் டி. மெடோஸ் தலைமையில் ஒரு விஞ்ஞானப் பணியாளர்களின் குழுவை உருவாக்கினார்; இக்குழு ஓராண்டுக் காலத்தில் ''உலகம் 3'' என்ற மாடெலை அல்லது* **வளர்ச்சியின் வரம்புகளை** *உருவாக்கியது.*

இம்மாடெல் மக்கள்தொகை, இயற்கை வளம், புறச்சூழல் ஆகியவற்றின் பரஸ்பரச் செயலாக்கம் பற்றிய நீண்ட கால கணிப்பைத் தந்தது. இன்றைய சமுதாய வளர்ச்சிப் போக்குகள் நிறுத்தப்படாவிட்டால் அல்லது மாற்றப்படாவிட்டால் அடுத்த நூற்றாண்டின் இறுதிவாக்கில் ''உலகம் அழியும்'' என்று அது எச்சரிக்கிறது. பல குறைகள் இருந்த போதிலும், அபாய அறிவிப்பாக ஒலித்த இந்நூல் குறுகிய காலகட்டத்திலேயே உலகப் பிரச்சினைகளின் பால் சர்வபொது கவனத்தை ஈர்த்தது, உலகந் தழுவிய அளவில் விவாதங்களை எழுப்பியது.

இந்த மாடெல்களின் ஆசிரியர்கள் முன்வைத்த கருத்தமைப்புகள் ஏன் ஏற்புடையவையல்ல, எப்படிக் கற்பனையானவை என்று சோவியத் யூனியனிலும் உலகிலும் விரிவாக எழுதப்பட்டுள்ளது; அந்த ஆசிரியர்கள் பொருளாதார வளர்ச்சியை நிறுத்தி வைப்பதுதான் உலகைக் காப்பாற்றுவதற்கான முக்கிய வழி என்கின்றனர். இந்த

''பிராந்தியத்திற்கு அப்பாற்பட்ட'' முதல் மாடெல்கள் உலகளாவிய தன்மையைப் பெற்றிருந்தன, பல்வேறு பொருளாதார வளர்ச்சி மட்டங்களில் உள்ள நாடுகளின் சமூக பொருளாதார வளர்ச்சியிலும், இயற்கை வளங்கள் மற்றும் உள்ளாற்றலிலும் உள்ள பெரும் மாறுபாடுகளைக் கணக்கில் கொள்ளவில்லை, குறிப்பாக சோஷலிச மற்றும் முதலாளித்துவ அரசுகளின் வளர்ச்சிப் பாதைகள், லட்சியங்களில் உள்ள அடிப்படை வேறுபாடுகளை இவை கவனத்தில் கொள்ளவில்லை. பொதுவான கருத்தின் படி ''மொத்தமாக உலகத்தை'' ஒரு மாடெலுக்குள் அடக்கியதுதான் முதல் உலக மாடெல்களின் குறைக்கான முக்கியக் காரணமாகும்; இது இவற்றை நிறைவேற்ற இயலாததாக்குகிறது.

ஆனால் கிட்டத்தட்ட இதற்குப் பிந்தைய எல்லா மாடெல்களும் பிராந்திய அடிப்படையில் அமைக்கப்பட்டன (பார்க்க அட்டவணை 1).

அட்டவணை 1

உலக வளர்ச்சி பற்றிய முக்கியத்
திட்ட நகல்களும் மாடெல்களும்

திட்ட நகலின் (மாடெலின்) பெயர், முக்கிய வெளியீடு	வழிகாட்டி அல்லது முக்கிய ஆசிரியர், ஸ்தாபனம்
முடிவு பெற்ற திட்ட நகல்கள்	
1. ''உலகம் 2'' — **உலக இயக்கப் போக்கு,** 1971	ஜே. ஃபாரெஸ்டர் (அமெரிக்கா), ரோம் சங்கம்
2. ''உலகம் 3'' — **வளர்ச்சியின் வரம்புகள்,** 1972	டி. மெடோஸ், இதரர் (அமெரிக்கா), ரோம் சங்கம்
3. ''உலக ஒருங்கிணைப்பு மாடெல்'' — **திருப்பு முனையில் மனிதகுலம்,** 1974	எம். மெஸரோவிச் (அமெரிக்கா), இ. பெஸ்டெல் (ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு), ரோம் சங்கம்
4. ''லத்தீன் அமெரிக்க உலக மாடெல்'' — **பேரழிவா புதிய சமுதாயமா?,** 1976	ஏ. எர்ரேரா, எச். ஸ்கோல்னிக், இதரர் (அர்ஜென்டைனா), பரேலுச்சே நிதி
5. **அடுத்த 200 ஆண்டுகள்,** 1976	எச். கான் (அமெரிக்கா), இதரர்
6. RIO திட்ட நகல் — **சர்வதேச முறையைப் பற்றிய மறுபரிசீலனை,** 1976	யான் தின்பெர்கென் (நெதர்லாந்து), ரோம் சங்கம்
7. ''ஐ. நா. சபையின் உலக மாடெல்'' — **உலகப் பொருளாதாரத்தின் எதிர்காலம்,** 1977	டபிள்யூ. லியோன்தியெவ் (அமெரிக்கா), ஐ. நா.
8. உலக வளர்ச்சியின் புதிய வாய்ப்புகள் பற்றி ரோம் சங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை — **மனிதகுலத்தின் லட்சியங்கள்,** 1977	இ. லாஸ்லோ (அமெரிக்கா), ரோம் சங்கம்
9. ரோம் சங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை — **விரயமாக்கும் நூற்றாண்டிற்குப் பின்,** 1978	டி. காபொர் (இத்தாலி), ரோம் சங்கம்
10. ''இன்டர்ஃபியூச்சர்ஸ்'' திட்ட நகல் — **எதிர்காலத்துடனான சந்திப்பு: சாத்திய**	பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சி ஸ்தாபனம்

திட்ட நகலின் (மாடெலின்) பெயர், முக்கிய வெளியீடு	வழிகாட்டி அல்லது முக்கிய ஆசிரியர், ஸ்தாபனம்
மானதை அடக்கியாள்வதும், முன்னறி விக்க முடியாததை நிர்வகிப்பதும், *1979*	
11. அமெரிக்க ஜனாதிபதிக்கு சமர்ப்பிக் கப்பட்ட அறிக்கை — **2000ஆம் ஆண் டில் உலகம்,** *1980*	ஜி. பார்னெய் (அமெரிக்கா), புறச்சூழலின் தரம் பற்றிய கவுன்சில், அமெரிக்கா
12. சர்வதேச வளர்ச்சி பிரச்சினைகள் பற்றிய சுதந்திர கமிஷனின் அறிக்கை — **வடக்கு — தெற்கு: உயிர்வாழும் செயல் திட்டம்,** *1980*	வில்லி பிராண்ட் (ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு)
13. **இயற்கை வளம் நிறைந்த பூமி.** ''2000ஆம் ஆண்டில் உலகம்'' என்ற அறிக்கைக் கான பதில், *1984*	ஒய். சிமோனஸ், எச். கான் (அமெரிக்கா)
பணி தொடரும் திட்ட நகல்கள்	
14. ''லிங்க்'' திட்ட நகல்	எல். கிளேய்ன், பி. ஹிக்மான் (அமெரிக்கா), அமெரிக்கப் பல்கலைக் கழகங்கள், ஐ. நா. சபையின் விசேஷ நிறுவனங்கள்
15. ''எதிர்கால உலக பரஸ்பரத் தொடர்பு'' மாடெல்	ஒய். காய்யா, ஜப்பானியப் பல்கலைக் கழகங்கள்
16. ''புறச்சூழல் பாதுகாப்பு அமைச்சக ஆராய்ச்சிப் பிரிவின் முறைப் பகுப்பாய்வு'' மாடெல்	பி. ராபர்ட்ஸ் (கிரேட் பிரிட்டன்)
17. ''விவசாயத்தில் சர்வதேச உறவுகளின் மாடெல்''	எச். லீன்னெமான் (நெதர்லாந்து)
18. GLOBUS திட்ட நகல்	எஸ். பிரேமெர் (ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு)
19. SIMPEST திட்ட நகல்	ஜெனீவா பல்கலைக் கழகம்
20. Dynamico திட்ட நகல்	ஐ. நா. சபையின் காரியாலயத்தில் உள்ள சர்வதேசப் பொருளாதார, சமூகப் பிரச்சினைகள் பற்றிய பிரிவு

ரோம் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க எம். மெஸரோவிச்சும் (அமெரிக்கா), இ. பெஸ்டெலும் (ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு) உருவாக்கிய அடுத்த உலக மாடெலே (**திருப்பு முனையில் மனிதகுலம்**) பல்வேறு பொருளாதாரத் துறைகளையும் பொருளாதார வளர்ச்சி மட்டங்களுக்கேற்ப 10 பிரதேசங்களையும் உள்ளடக்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த 10 பிரதேசங்களாவன: வட அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, ஜப்பான், ஆஸ்திரேலியாவும் தென் ஆப்பிரிக்காவும், சோவியத் யூனியனும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும், லத்தீன் அமெரிக்கா, மத்திய கிழக்கும் வட ஆப்பிரிக்காவும், வெப்ப மண்டல ஆப்பிரிக்கா, தென் கிழக்கு ஆசியா, சீனா. இந்த மாடெல் பல்மட்ட படிநிலை முறை தத்

துவத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. இந்த ஆசிரியர்களின் கருத்தின்படி உலகம், பரஸ்பரச் செயலாக்கம் புரியும் ஐந்து மட்டங்களால் ஆனது: புறச்சூழல் (இயற்கை அடிப்படை) — தொழில்நுட்பம் — மக்கள்தொகையும் பொருளாதாரமும் — குழு (சமூக) மட்டம் — தனிநபர் மட்டம். சமுதாயத்தின் வளர்ச்சி உள்ளேயே ஒழுங்குபடுத்தப்படுகிறது, பரஸ்பரத் தொடர்புடையது, இதைக் கண்காணிக்கலாம் என்று இவர்கள் கருதுகின்றனர். இது ஒரு பழைய நேர்க்காட்சிவாத கருத்தமைப்பாகும்; இது சமுதாயம், நாடுகள், பிரதேசங்களின் வளர்ச்சியை உயிரினத்துடன் ஒப்பிடுகிறது. ''உயிர்வாழும்'' செயல்தந்திரத்தை எம். மெஸரோவிச்சும் இ. பெஸ்டெலும் பிரதேசங்களின் பொருளாதார வளர்ச்சியை சீரிசைவாக்குவதிலும், இவற்றின் அங்கக ரீதியான இணைப்பிலும் காண்கின்றனர். இந்த விஞ்ஞானிகளின் கணிப்பு கட்டுப்படுத்த வல்ல சைபர்னெடிக்ஸ் உலக மாடெலின் அடிப்படையிலானது; முடிவெடுத்தல் உட்பட ஏராளமான மாறு காரணிகள் இம்மாடெலில் சேர்க்கப்படுகின்றன. இந்த மாடெல், மெடோசும் அவரது சகாக்களும் சொல்வது போல் உலகப் பேரழிவை முன்னறிவிக்கவில்லை, மாறாக பல பிராந்திய நெருக்கடிகள் (உணவுப் பொருள், புறச்சூழல், இன்ன பிற நெருக்கடிகள்) தோன்றுமென எச்சரிக்கிறது. பிராந்தியங்களின் வெவ்வேறான, ஆனால் சீரிசைவான வளர்ச்சிதான் இப்படிப்பட்ட நிலையிலிருந்து மீளுவதற்கான வழியென்று இவர்கள் கருதுகின்றனர். இன்றுள்ள சமமற்ற சர்வதேச உழைப்புப் பிரிவினையையும் பல்வேறு பிராந்தியங்களின் சமூக பொருளாதார நிலையையும் அடியோடு மாற்றுவது இக்கருத்தமைப்பின் நோக்கமல்ல. இவர்களின் மிதவாதப் போக்குகள், தனிப்பட்ட பிரதேசங்களின் சமூக பொருளாதார பின்தங்கிய நிலையை அகற்ற இவர்கள் அளிக்கும் சிபாரிசுகளில் வெளிப்படுகின்றன. பின்தங்கிய பிரதேசங்களின் நலன்களைப் பாதுகாக்க இவர்கள் முன்வைக்கும் வாதங்களில் ஒன்று, இவற்றை அளவிற்கதிகமாகச் சுரண்டினால் அது அவற்றிடமிருந்து அதிகபட்ச ஆதாயத்தைப் பெறுவதைக் கடினமாக்கும் என்பதாகும்.

ஒரு சில தேசிய விஞ்ஞான மையங்கள் தீட்டிய உலக மாடெல்களில் அந்தந்த நாடுகளின் நலன்கள் பிரதிபலிக்கின்றன, இவற்றைப் பயன்படுத்தும் முயற்சிகளும் பிராந்தியத் தன்மையை உடையவை. உதாரணமாக, இது ''லத்தீன் அமெரிக்க உலக மாடெலில்'' (அர்ஜென்டைனா) நன்கு வெளிப்படுகிறது; ஏ. எர்ரேரா, எச். ஸ்கோல்னிக் தலைமையில் லத்தீன் அமெரிக்க நிபுணர்களின் குழு இதை உருவாக்கியது. முந்தைய மாடெல்களுக்கு மாறாக, லத்தீன் அமெரிக்க நிபுணர்களின் நிலைகளில் வளர்முக நாடுகளின் நலன்கள் பிரதிபலிக்கின்றன. இயற்கை வளங்கள், மற்ற வளங்கள் மட்டானவையாக உள்ளதால் தோன்றும் ''வளர்ச்சி வரம்புகளில்'' முக்கிய உலகப் பிரச்சினை அடங்கியிருக்கவில்லை, மாறாக இந்த வளங்களைச் செயல்வன்மையோடு பயன்படுத்து

வதுதான் முக்கியப் பிரச்சினை என்று இவர்கள் கருதுகின்றனர். இவ்வாறு பயன்படுத்தினால் அது வளர்முக நாடுகளில் பெரும்பான்மை யினராக உள்ள ஏழை மக்களின் முக்கிய (குறைந்தபட்ச) தேவை களைப் பூர்த்தி செய்ய உதவும். கணித திட்டமிடலைப் பயன்படுத்தி இந்த ஆசிரியர்கள், வளர்முக நாடுகளில் உள்ள மக்களின் முக்கியத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் இரண்டு சாத்தியமான வழிகளை முன்வைக்கின்றனர். முதலாவது வழியின்படி லத்தீன் அமெரிக்க நாடு களால் மட்டுமே வெளி உதவியின்றி ஒரு சுமாரான வாழ்க்கைத் தரத்தை அடைய முடியும், அதுவும் கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்குப் பின் னரே இது சாத்தியம். இரண்டாவது வழியின்படி வளர்முக நாடுகளுக் கான உதவி 10 மடங்கு உயர்த்தப்பட்டால் (பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த நாடுகளின் மொத்த தேசிய உற்பத்திப் பொருளில் 0.2% இலிருந்து 2% வரை) ஆசிய நாடுகள் அரை நூற்றாண்டுகளுக்குப் பின்னும் ஆப்பிரிக்க நாடுகள் சுமாராக 70 ஆண்டுகளுக்குப் பின்னும் இத்தகைய நிலையை அடையும். இந்த உலக மாடலை பிரேசிலின் திட்டவட்டமான சூழ்நிலைகளுக்குப் பயன்படுத்த முயற்சி மேற்கொள் ளப்பட்டது; உலக பிராந்திய பிரச்சினைகளின் பரஸ்பரத் தொடர்பு நோக்கிலிருந்து பார்த்தால் இது அடையாளச் சிறப்புடையது. துரதிர்ஷ்ட வசமாக, ''லத்தீன் அமெரிக்க உலக மாடலில்'' சமுதாயத்திற்கு இயற்கை வளங்களை அளிப்பது சம்பந்தமான தீவிரப் பிரச்சினைகளும் புறச்சூழலின் நிலையும் அனேகமாக கவனத்தில் கொள்ளப்படவில்லை; இது இம்மாடலின் முக்கியத்துவத்தைக் குறைக்கிறது.

''எதிர்கால உலக பரஸ்பரத் தொடர்பு'' மாடல் டோக்கியோ, சோகி, ஒசகா பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த ஜப்பானிய நிபுணர் களால் ஒய். காய்யா தலைமையில் தீட்டப்படுகிறது; இதில் பொரு ளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த மற்றும் வளர்முக நாடுகளின் தொழிற்துறை மயப்படுத்தல் போக்குகளைப் பற்றிய பகுப்பாய்வின் அடிப்படையில் நபர் ஒருவருக்கான வருமான மட்டத்தில் இரண்டிற்கும் இடையிலான பிளவுகளைக் குறைக்கும் வாய்ப்புகள் ஆராயப்படுகின்றன. இந்த மாடலின்படி உலகம் 9 பிராந்தியங்களாகப் பிரிக்கப்படுகிறது. ஆசியா மற்றும் பசிபிக் பெருங்கடலுக்கான ஐ. நா. பொருளாதார, சமூக கமிஷனின் நடவடிக்கை பிராந்தியமாகிய தென் கிழக்கு ஆசியா, பசிபிக் பெருங்கடல் தீவுகளின் பிரச்சினைகள் தனியாக ஆராயப்படு கின்றன. இந்தோனேசியாவின் திட்டவட்டமான சூழ்நிலைகளுக்கு (இதன் பொருளாதார நிலை, வளர்ச்சிப் போக்குகள்) ஏற்பவும் மாடல் பயன்படுத்தப்படுகிறது.

உலகளாவிய பிராந்திய மாடலின் மேற்கு ஐரோப்பிய வகையும் உருவாக்கப்படுகிறது. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கட்டளைக்கிணங்க புறச்சூழல் பாதுகாப்பு அமைச்சகத்தின் ஒரு பிரிவில் — இதற்கு பீட்டர் ராபர்ட்ஸ் தலைமை தாங்கினார் — ஒரு மாடல் உருவாக்கப்பட்டது.

இது பொருளாதார ஒத்துழைப்பு, வளர்ச்சி ஸ்தாபனத்தின் திட்ட நகலிலும் (''இன்டர்ஃபியூச்செர்ஸ்'') ஆஸ்திரேலிய நிபுணர்களாலும் பயன்படுத்தப்பட்டது.

விவசாயத் துறையில் சர்வதேச உறவுகளின் மாடெல் அதிகபட்சம் நுட்பமான பிராந்திய அடிப்படையை உடையது. சுதந்திரப் பல்கலைக் கழகம் (ஆம்ஸ்டர்டாம்), உயர் விவசாயப் பள்ளி (வகெனீன்கென்) ஆகியவற்றைச் சேர்ந்த நெதர்லாந்து நிபுணர்கள் எச். லீன்னெமான் தலைமையில் இதைத் தீட்டி வருகின்றனர். இம்மாடெல் லக்செனபர்கில் (ஆஸ்திரியா) இயங்கி வரும் International Institute of System Analysis கேந்திரத்தின் உணவுப் பொருள் மற்றும் விவசாயத் திட்ட நகலின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும். இந்த மாடெலின் முக்கியத் துவம் உலகந் தழுவிய அளவில் உணவுப் பொருள் உற்பத்திக்கான வாய்ப்பு களைப் பரிபூரணமாக கணிப்பதில் அடங்கியுள்ளது. 106 பிரதேசங் களின் — தனிப்பட்ட அரசுகள் மற்றும் ஒரு சில அரசுகள் சேர்ந்து — விவசாய ஆராய்ச்சிகள் இக்கணிப்பின் அடிப்படையாகும். இதில் உயிரியல் பொருண்மையின் உற்பத்திக்கான விவசாய-பொருளாதார வாய்ப்புகளும் சாகுபடிக்கேற்ற நிலங்களை மீட்பதற்கான முதலீடுகளும் விரிவாகப் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. ஆனால் மண் அரிப்பு, பாலைநிலமாகும் போக்கு, நிலங்களின் உப்புத் தன்மை கூடுதல், மண் அசுத்தமடைதல் போன்ற உலகளாவிய இயற்கை, மானுட நிகழ்ச்சிப் போக்குகள் துரதிர்ஷ்டவசமாக இம்மாடெலில் கவனத்தில் கொள்ளப் படவில்லை. என்றாலும், பரந்த தகவல்களின் அடிப்படையில், விவசாய, பொருளாதாரக் குறியீடுகளையும் சமூக குழுக்களைப் பற்றிய விவரங் களையும் நுகர்விற்கும் வருமானத்திற்கும் இடையிலான தொடர்பு பற்றிய விவரங்களையும் உள்ளடக்கிய நெதர்லாந்து விஞ்ஞானிகளின் மாடெல், பட்டினிக்கு எதிரான நீண்ட கால போராட்டத் திட்டத்தைத் தீட்டவும் உணவுப் பொருள் பிரச்சினையை உலகந் தழுவிய அளவிலும் பிராந்திய அளவிலும் தீர்க்கவும் பயன்படத் தக்கது.

நன்கு தீட்டப்பட்ட உலக மாடெல்களில் ஒன்றாகிய **உலகப் பொரு ளாதாரத்தின் எதிர்காலம்** என்ற ஐ. நா. மாடெல் உலகந் தழுவிய வகையில் உருவாக்கப்பட்டது. இது நோபல் பரிசைப் பெற்ற டபிள்யூ. லியோன்தியெவ் தலைமையிலான நிபுணர் குழுவால் தயாரிக்கப்பட்டது. இதில் உலகின் 15 பிராந்தியங்களைப் பற்றிய கணக்கீடுகளின் அடிப்படை யில் 1980, 1990, 2000ஆம் ஆண்டுகளுக்கான மக்கள்தொகை, பொரு ளாதார, புறச்சூழல் நிலை பற்றிய 8 வெவ்வேறு திட்டங்கள் உள்ளன. இந்த பிராந்திய வகைப்பாடு சாதாரணமாக ஐ. நா. வெளியீடுகளில் பயன்படுத்தப்படும் வகைப்பாட்டிற்கு நெருக்கமானது, இது புவியியல் வகைப்பாடு என்றழைக்கப்படுகிறது. 171 அரசுகளை உள்ளடக்கிய 15 பிராந்தியங்கள் இவற்றின் புவியியல் நிலை, பொருளாதார வளர்ச்சி மட்டம், பொருளாதார நிர்வாக கோட்பாடுகள் ஆகியவற்றிற்கேற்ப

வகைப்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்ட நகல் சோஷலிச மற்றும் முதலாளித்துவ அரசுகளின் சமூக அரசியல் அமைப்பில் உள்ள கோட்பாட்டு வழிப்பட்ட வேறுபாடுகளைக் கணக்கில் கொள்கிறது.

பொருளாதார வளர்ச்சியின் மீதான இயற்கைக் காரணிகளின் தாக்கம் எவ்வளவு பெரியது, 1970இல் ஐ. நா. வின் பொதுச் சபை முன்வைத்த கடமைகளின் நிறைவேற்றத்திற்கு இக்காரணிகள் பெரும் தடையாக உள்ளனவா என்ற முக்கியக் கேள்விக்குப் பதிலளிக்க இந்த பிராந்திய அடிப்படையில் முயற்சி செய்யப்படுகிறது. மேற்கூறிய கடமைகள், நீண்ட கால வளர்ச்சித் திட்டம் ஆமோதிக்கப்படும் பொழுது தீட்டப்பட்டன; பல்வேறு வகையான நாடுகளின் சமூக பொருளாதார மட்டங்களுக்கு இடையிலுள்ள பிளவுகளைக் குறைக்கும் கடமையும் இவற்றில் அடங்கும்.

''ஐ. நா. சபையின் உலக மாடெலில்'' மாறி வரும் ஐந்து தீர்மானகரமான காரணிகளின்படி வளர்ச்சி சூழ்நிலைகள் ஆராயப்படுகின்றன. அக்காரணிகளாவன: 1) உணவுப் பொருளும் விவசாயத் துறையும்; 2) இயற்கை வளங்கள்; 3) புறச்சூழல் அசுத்தமடைவதற்கு எதிரான போராட்டத்திற்காகும் பொருளாதாரச் செலவுகள்; 4) முதலீடுகளும் தொழிற்துறை மயப்படுத்தலும்; 5) புதிய உலகப் பொருளாதார முறை. ஐ. நா. கணிப்புகளுக்கேற்ப மக்கள்தொகை வளர்ச்சி பற்றிய முன்மொழிவுகளின் அடிப்படையில் இந்த ஆராய்ச்சி அமைந்துள்ளது.

''ஆரம்பத்தில் இம்மாடெல், புறச்சூழல் பிரச்சினைகளின் தொடர்பாக வளர்ச்சியின் தன்மையை ஆராய்வதற்காக உருவாக்கப்பட்டது. புறச்சூழல் அசுத்தமடைவது, கனி வள எடுப்பை மட்டுப்படுத்துவது, உணவுப் பொருள் உற்பத்தி போன்ற முக்கிய அம்சங்கள் ஆராயப்பட்டன. ஆனால்... இம்மாடெல் தன் சாராம்சத்தில் பொதுவான பொருளாதார மாடெலாகும், எனவே வேறு நோக்கு நிலைகளிலிருந்து உலகப் பொருளாதாரத்தின் பரிணாம வளர்ச்சியைப் பகுப்பாய்வு செய்யவும் இது பயன்படத் தக்கது'' (**உலகப் பொருளாதாரத்தின் எதிர்காலம்**, 1979, பக்கங்கள் 26—27.) இம்மாடெல் நீண்ட காலம் நிலைத்திருக்கக் கூடியது. புதிய விவரங்கள் வர வர இது பல்வேறு வளர்ச்சிப் பிரச்சினைகளின் தீர்விற்குப் பயன்படுத்தப்படலாம். இது திட்டவட்டமான பிரதேசங்களில் தனிப்பட்ட துறைகள் சம்பந்தமான விவரங்களைப் பயன்படுத்த உதவுகிறது, அதாவது உலகந் தழுவிய அளவிலும் பிராந்திய அளவிலும் முடிவுகளுக்கு வர இது ஏற்றது, எனவே இதற்குத் திட்டவட்டமான பொருளாதார, அரசியல் முக்கியத்துவம் உண்டு.

ஆனால் இதன் ஆசிரியர்களே கூறும்படி இது முழுமையடையாதது. இதில் ஒரு சில பொருளாதார ரீதியான துல்லியமின்மை உள்ளது, இயற்கை வரலாற்று சூழ்நிலைகள் மற்றும் இயற்கை நிகழ்ச்சிப் போக்குகள் இதில் போதுமான அளவு கவனத்தில் கொள்ளப்படவில்லை.

உதாரணமாக, சோவியத் யூனியனின் மத்திய புள்ளி விவர ஸ்தாபனத்தின் விவரங்களுடன் ஒப்பிடும் பொழுது உலகப் பொருளாதாரத்தில் சோஷலிச நாடுகளின் பங்கு குறைக்கப்பட்டுள்ளது. ஆப்பிரிக்காவின் வறண்ட பிரதேசங்களுக்கான பொருளாதாரக் கணிப்புகள் கூட, பேரழிவை ஏற்படுத்தும் வறட்சியின் விளைவுகளையும், பாலை நிலமாகி வரும் நிலப்பரப்பு அதிகரிப்பதன் விளைவுகளையும் கணக்கில் கொள்ளாமல் உருவாக்கப்படுகின்றன. அசுத்தப்படுத்தலுக்கு எதிரான போராட்டத்தின் தொழில்நுட்பம் உடனுக்குடன் மேம்படுவது முழுமையாக கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. பல்வேறு இயற்கை மண்டலங்களில் இயற்கைச் சூழலின் மீது ஒரே விதமான தொழில்நுட்பத்தின் (விவசாய உற்பத்தியைச் சேர்த்து) தாக்கத்தில் உள்ள வேறுபாடுகள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை, இத்தியாதி.

ஆனால் மொத்தத்தில் லியோன்தியெவின் மாடெல், ஐ. நா. பொதுச் சபையின் தீர்மானங்களுக்கேற்ப உலகப் பொருளாதாரத்தின் வளர்ச்சித் துறையில் அளவுநிலைப் பகுப்பாய்வை மேற்கொண்டு மேம்படுத்துவதற்கான அடிப்படையை ஏற்படுத்துகிறது. மக்கள்தொகை, இயற்கை வளங்கள், புறச்சூழல், வளர்ச்சி ஆகியவற்றிற்கு இடையிலான பரஸ்பரத் தொடர்பை ஆராயும் அவசியத்தைக் கோடிட்டுக் காட்டும் இத்தீர்மானங்கள், முதலில் பிராந்திய அளவிலும் பின் உலகந் தழுவிய அளவிலும் பொருளாதார வளர்ச்சி பற்றிய நீண்ட காலக் கணிப்புகளை உருவாக்குமாறு அறைகூவியழைக்கின்றன.

சர்வதேச முறையைப் பற்றிய மறுபரிசீலனை என்ற திட்ட நகல் ரோம் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க பிரபல நெதர்லாந்து பொருளாதார நிபுணரும் நோபல் பரிசு பெற்றவருமான யான் தின் பெர்கென் தலைமையிலான சர்வதேச நிபுணர் குழுவால் தயாரிக்கப்பட்டது. இதில் புவியியல் விஞ்ஞானி இக்னாசி சாஹ்சால் எழுதப்பட்ட **இடத்தைப் பயன்படுத்தும் மாடெல்கள்** என்ற முக்கியப் பிரிவு அடங்கியுள்ளது. சமூக பொருளாதார மற்றும் புறச்சூழல் வளர்ச்சியின் சீரிசைவான இணைப்பை அடைவதில் விவேகமான இட அமைப்புக் கொள்கை முக்கியப் பங்காற்றக் கூடும் என்று அதில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

ஆனால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில், மேலைய உலக மாடெல்களை பிராந்தியமயப்படுத்துவதானது உலகை ''வடக்கு'' என்றும் ''தெற்கு'' என்றும் இரண்டாகப் பிரிக்கும் ''இரட்டைக்'' கோட்பாட்டின் அடிப்படையிலானது. வடக்குப் பிரிவில் முதலாளித்துவ மற்றும் சோஷலிச அரசுகள் உள்ளிட்ட ''பணக்கார'' நாடுகளைச் சேர்க்கின்றனர்; தெற்குப் பிரிவில் எல்லா வளர்முக நாடுகளையும் சீனாவையும் இன்னும் சில சோஷலிச நாடுகளையும் சேர்க்கின்றனர். வில்லி பிராண்டின் தலைமையில் தயாரிக்கப்பட்ட உலகளாவிய திட்ட நகலுக்கு **வடக்கு — தெற்கு: உயிர்வாழும் செயல்திட்டம்** என்றே பெயரிடப்

பட்டுள்ளது. இந்த முக்கிய பூர்ஷ்வாக் கருத்தமைப்பின் சித்தாந்த, அரசியல் திசையமைவு தெட்டத் தெளிவு; முன்னாள் காலனி நாடுகள், சார்பு நாடுகளின் சமூக பொருளாதார வளர்ச்சி மட்டத்திற்கும் ஏகாதிபத்திய நாடுகளின் வளர்ச்சி மட்டத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் தோன்றி வலுப்பட முக்கியக் காரணம் காலனியாதிக்க மற்றும் நவீன காலனியாதிக்கச் சுரண்டலே என்ற அம்சத்தை இக்கருத்தமைப்பு மூடிமறைக்கப் பார்க்கிறது.

இந்த இரட்டைப் போக்குடைய உலக மாடெல்கள்தான் நவீன மால்தூசியவாதக் கருத்துகளின் அடிப்படையாக உள்ளன; இவை நவீனமயப்படுத்தப்பட்ட வடிவில் மனிதகுலம் முழுவதையும் ''காப்பாற்றும்'' வழியாக முன்வைக்கப்படுகின்றன. பிரபல புவியியல் விஞ்ஞானி டி. ஹார்வே நவீன மால்தூசியவாதத்தின் தர்க்கத்தை, சுரண்டப்படுபவர்களின் பாலான சுரண்டுபவர்களின் தர்க்கத்தை, முன்னாள் காலனி மற்றும் சார்பு நாடுகளின் பாலான ''மேற்கை மிகைப்படுத்துபவர்களின்'' தர்க்கத்தைப் பின்வருமாறு விளக்குகிறார்: ''யாரோ எங்கோ தேவையற்றவராய் இருக்கிறார்... நான் தேவையற்றவனா? நிச்சயமாக இல்லை. நீங்கள் தேவையற்றவரோ? கிடையவே கிடையாது. அப்படியெனில் யார்தான் தேவையற்றவர்? நிச்சயமாக அவர்கள்தான் தேவையற்றவர்கள். சுற்றிலும் குறைகள் உள்ளன என்றால், சமுதாயத்திற்குக் குறைவான பயன்களைக் கொண்டு வரும் அவர்கள்தான் பெரும்பான்மைச் சுமையை சுமக்க வேண்டும் என்பதுதான் நியாயமானது.'' (Harvey, 1978, p. 237.)

பல்வேறு உலக மாடெல்கள் பெரும்பாலும் சமுதாய வளர்ச்சி பற்றிய மூன்று வகையான கருத்தமைப்புகளைப் பிரதிபலிக்கின்றன; இவை பிராந்திய வளர்ச்சி பற்றிய கருத்தமைப்புகளுடன் நெருக்கமாகத் தொடர்புடையவை. முதல் வகையான கருத்தமைப்புகள் ''பீதியாளர்களின்'' (டி. மெடோஸ், இதரரின் மாடெல், ஏ. எர்லிஹ் மற்றும் எல். எர்லிஹ், ஜி. ஓதூம் மற்றும் இ. ஓதூம் ஆகியோரின் நூல்கள், இன்ன பிற) ஏராளமான படைப்புகளில் பிரதிபலிக்கின்றன. இவர்கள் ''பூஜ்ஜிய வளர்ச்சி'' அல்லது ''ஸ்திர நிலை'' என்ற கருத்துகளை முன்வைக்கின்றனர். அதாவது, தீர்ந்து வரும் இயற்கை வளங்களைப் பேணிக் காக்கவும், புறச்சூழல் நிரந்தரமாக அசுத்தமடைவதைத் தடுக்கவும் உற்பத்தி வளர்ச்சியையும் மக்கள்தொகை அதிகரிப்பையும் தடுத்து நிறுத்த வேண்டும் என்கின்றனர் இவர்கள். ஆனால் புறச்சூழல் பிரச்சினைகள் சம்பந்தமான ஸ்டாக்ஹோம் மகாநாட்டிலேயே (1972) — இங்கு மெடோசும் இன்னும் சிலரும் சேர்ந்து எழுதிய **வளர்ச்சியின் வரம்புகள்** என்ற நூல் சுற்றுக்கு விடப்பட்டது — இக்கருத்தமைப்பு முதலில் வளர்முக நாடுகளின் பிரதிநிதிகளால் நிராகரிக்கப்பட்டது. இந்நாடுகளில் ஏராளமான மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழுகின்றனர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இயற்கை வளங்களைப் பாது

காக்க வேண்டும் என்பதற்காக, இயற்கைச் சூழலைப் பேண வேண்டும் என்பதற்காக பொருளாதார ரீதியாக வளர்ச்சி குறைந்த நாடுகளால் வளர்ச்சியையும் மாற்றத்தையும் கைவிட முடியாதென்று மகாநாட்டின் இறுதி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டது. வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், உணவுப் பற்றாக்குறை, பட்டினி, தூய குடி நீரின்மை, வாழ்வதற்கேற்ற வீடின்மை, இயற்கைச் சீற்றங்கள் போன்றவை இந் நாடுகளின் முன் நிற்கும் முக்கியப் பிரச்சினைகளாகும்.

இரண்டாவது வகையான கருத்தமைப்புகள் முதல் வகைக்கு நேரெதிராக ''அதிகபட்ச'' கருத்தமைப்புகள் என்று நிபந்தனையோடு அழைக்கப்படுகின்றன. இவற்றின் ஆதரவாளர்கள் பல நேரங்களில் வளர்முக நாடுகளின் சார்பாகப் பேசுகின்றனர்; இந்நாடுகள் முதலில் அமெரிக்கா, பிரிட்டனைப் போல பணக்கார நாடுகளாகட்டும், பின் புறச்சூழல் பாதுகாப்பு பிரச்சினைகளைப் பார்க்கலாம் என்கின்றனர் இவர்கள். இக்கருத்தமைப்புகள் பொருளாதார வளர்ச்சி பற்றிய நவீன சாஸ்திரியவாதத் தத்துவங்களின் அடிப்படையிலானவை. இவை இட்டு நிரப்பப்படாத இயற்கை வளங்கள் விரயமாவதையும், இயற்கை அமைப்புகள் பாழ்படுவதையும், புறச்சூழல் அசுத்தமாவதையும் அலட்சியப்படுத்துகின்றன, அதாவது இன்றைய சமுதாய வளர்ச்சியின் சில கடும் பிரச்சினைகளை ஒதுக்கித் தள்ளுகின்றன. பொருளாதார வளர்ச்சி வேகங்களை அதிகபட்சம் துரிதப்படுத்த வேண்டும் என்ற வளர்முக நாடுகளின் நாட்டத்தை முழுமையாகப் புரிந்து கொள்ளும் அதே சமயம் இவை வளர்ச்சியின் புறச்சூழல் பிரச்சினைகளை, பல நேரங்களில் சமூக அம்சங்களைப் புறக்கணிப்பதை ஒப்புக் கொள்ள முடியாது.

மூன்றாவது வகையான கருத்தமைப்புகள் பொருளாதார வளர்ச்சிக்கும் புறச்சூழல் பிரச்சினைகளுக்கும் இடையிலுள்ள பரஸ்பரச் சார்பு நிலையையும், பொருளாதார முன்னேற்றக் கடமைகளையும் புறச்சூழல் பாதுகாப்புக் கடமைகளையும் இணைக்க வேண்டியதன் அவசியத்தையும் கோடிட்டுக் காட்டுகின்றன. ''அழிவற்ற வளர்ச்சி'' என்ற கோஷத்தில் இது நன்கு வெளிப்படுகிறது.

மற்றவற்றோடு ஒப்பிடுகையில் புறச்சூழல் சார்ந்த வளர்ச்சி பற்றிய கருத்தமைப்பு இன்றைய உலகப் பிரச்சினைகளை அதிக முழுமையாகப் பிரதிபலிக்கிறது. இதன் முக்கியக் குறை, பொருளாதார வளர்ச்சி மற்றும் இயற்கையைப் பயன்படுத்தலின் சமூக பொருளாதார அம்சங்களைப் போதுமான அளவில் கணக்கில் கொள்ளாதது ஆகும். சில நேரங்களில் பிரகடனப்படுத்தப்படும் ''சமூக சமநிலை'' அல்லது ''வர்க்க சமரசம்'' பற்றிய கோட்பாடு உண்மையில், புறச்சூழல் பாதுகாப்பிற்கு ஆகும் செலவுகளை உழைப்பாளிகள் மீதும் வளர்முக நாடுகள் மீதும் திணிக்கும் நாட்டத்தைக் குறிக்கிறது.

பொதுவில், வளர்ச்சி பற்றிய கருத்தமைப்புகள் மேன்மேலும் விமர்சன ரீதியான மறுபரிசீலனைக்கு உட்படுகின்றன. இம்மறுபரிசீலனை

ஒரு புறம், புறச்சூழல் பிரச்சினைகள் கூர்மையடைந்து வரும் பின்னணியிலும், மறு புறம் வளர்முக நாடுகளின் சமூக பொருளாதார முன்னேற்றத்தைத் துரிதப்படுத்த வேண்டியதன் தொடர்பாயும் (இதைத்தான் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் நலன்களைப் பிரதிபலிக்கும் உலக மாடெல்களின் ஆசிரியர்கள் பல நேரங்களில் கவனத்தில் கொள்வதில்லை) நடைபெறுகிறது.

1980ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் உலக மாடெல் ஆராய்ச்சிகளில் நிலவிய பல்வேறு போக்குகளைச் சுட்டிக் காட்ட வேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக, ஒரு சில சமீபத்திய மாடெல்களில் பின்வரும் போக்கு காணப்படுகிறது. கணிப்பிடப்படும் காலகட்டத்தைக் குறைக்கவும், சர்வாம்ச தன்மையைக் குறைக்கவும், தொழில்நுட்ப அம்சத்தை மேலும் சிக்கலாக்கவும், மனிதகுலத்தின் முன் நிற்கும் உண்மையிலேயே முக்கியமான பிரச்சினைகளின் மீது போதுமான கவனம் செலுத்தாமலிருக்கவும் முயற்சிக்கப்படுகிறது. இதற்கொரு உதாரணம்... சுயமான விஞ்ஞான நடவடிக்கை என்ற முறையில் சர்வதேசப் பொருளாதாரத்தின் உலக மாடெல்களை உருவாக்குவதன் ஆரம்பமாகும். உண்மையிலோ உலகந் தழுவிய அளவில் பிராந்திய நிலவரத்தைப் பற்றிய ஆழமான ஆராய்ச்சியும், சமூக, அரசியல், பொருளாதார மற்றும் புறச்சூழல் காரணிகளின் பிரிக்க இயலா இணைப்பைப் பற்றிய கணிப்பும் தேவைப்படுகின்றன. உலகப் பிரச்சினைகளின் மையம் மேன்மேலும் வளர்முக நாடுகளுக்குச் செல்கிறது. அதிகாரப் பூர்வமான பிரகடனங்கள் ஒரு புறமிருக்க, பொருளாதார ரீதியாக நன்கு வளர்ச்சியடைந்த சில முதலாளித்துவ அரசுகளுக்கும், பெரும்பாலான மக்கள் வாழும் முன்னாள் காலனி மற்றும் சார்பு நாடுகளுக்கும் இடையில் வருமான மட்டத்திலும் வாழ்க்கைத் தரத்திலும் உள்ள பிளவு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 1950க்கும் 1970க்கும் இடைப்பட்ட காலத்தில் உலகந் தழுவிய அளவில் இதுவரையில்லா பொருளாதார வளர்ச்சி காணப்பட்டது, உலக உற்பத்தியின் அளவு மும்மடங்கு அதிகரித்தது, பெருமளவில் உற்பத்தி ஆற்றல்கள் தோற்றுவிக்கப்பட்டன. ஆனால் சோஷலிசம் நிலவாத உலகப் பகுதியில் இரண்டுமே பெரும்பாலும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளால் அபகரிக்கப்பட்டன. உலகந் தழுவிய அளவில் சமூக பொருளாதார வளர்ச்சி மட்டங்களில் உள்ள மிகப்பெரும் பிளவு (இது அதிகரித்து வருகிறது), நிலவரத்தைச் சீர்ப்படுத்தும் ஊக்குவிப்பை விட ஊக்கம் குறைக்கும் பொருளாதாரக் காரணியாகும் என்கிறார் ஐ. நா. சபையின் பொதுச் செயலர். வளர்முக நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்திப் பொருள் (நபர் ஒருவருக்கான கணக்கில் இது இந்நாடுகளில் மிகக் குறைவானதாகும்) சிறிது அதிகரித்த போதிலும் இந்த அம்சம் அப்படியே உள்ளது.

ஏ. ஜி. ஃபிராங்க் ''வளர்ச்சியின்மையின் வளர்ச்சி'' என்ற புதிய

கருத்தை அறிமுகப்படுத்துகிறார்; இதில் முதலாளித்துவ உலகின் வளர்ச்சிக்கும், வளர்முக நாடுகளைக் கொண்டு ஏகாதிபத்திய அரசுகள் தொடர்ந்து செல்வம் சேர்ப்பதற்கும் இடையிலான பரஸ்பரத் தொடர்பு கோடிட்டுக் காட்டப்படுகிறது. இவர் பின்வருமாறு எழுதுகிறார்: ''பொருளாதார வளர்ச்சியும் பின்தங்கிய நிலையும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள். இவையிரண்டுமே உலக முதலாளித்துவ அமைப்பின் உள் முரண்பாடுகளின் தவிர்க்க இயலா விளைவு, நவீன வெளிப்பாடு.... உலகில் முதலாளித்துவ விரிவுபடுத்தல் என்ற ஒரே வரலாற்று நிகழ்ச்சிப் போக்கு பொருளாதார வளர்ச்சியையும் கட்டமைப்பு ரீதியான பின்தங்கிய நிலையையும் ஒரே நேரத்தில் ஊக்குவித்தது, தொடர்ந்து ஊக்குவிக்கிறது.'' (Frank, 1967.)

ஏகாதிபத்திய அரசுகளிடமிருந்து வளர்முக நாடுகள் பெறும் ''உதவியின்'' முக்கியத்துவமும் வளர்ச்சி பற்றிய மேலைய கருத்தமைப்புகளும் மறு மதிப்பீடு செய்யப்படுகின்றன. பிரபல முற்போக்கு விஞ்ஞானி கேய்ட் பச்சனன் எழுதுகிறார்: ''இருபதாண்டுகளுக்கு, ஏன் பத்தாண்டுகளுக்கு முன் 'வளர்ச்சி' என்ற சொல் அனைவரையும் கவர்ந்தது... ஆனால் சுமாராகப் பத்தாண்டுகளுக்கு முன் 'பின்தங்கியவர்கள்' 'வளர்ச்சி' என்ற மாயையான சாதனத்தை மேன்மேலும் அதிகமாகப் பெறப் பெற, எப்போதுமே இந்த மருந்து 'தருபவர்களை' பணக்காரர்களாக்கி, இவ்வுதவியைப் பெறுபவர்களை ஏழைகளாக்கிய விந்தையை உணரத் துவங்கினர். 'மூன்றாம் உலகின்' மக்கள் பொறுமையிழந்து 'யாருக்கான வளர்ச்சி' என்ற விமர்சனக் கேள்வியை முன்வைக்கலாயினர். தன்னலமற்ற உதவி என்ற போர்வையின் பின் பழைய சுரண்டல் முறைகளும் இயற்கை வளங்களைப் பிழிந்தெடுப்பதும் (இத்துடன் வேலை வாய்ப்பின் உள்ளாற்றலையும் சேர்த்து) பயங்கர வேகத்தில் தொடருவதை இவர்கள் புரிந்து கொள்ளலாயினர்... 'யாரை வளர்த்தார்களோ' அவர்களுக்கு 'வளர்ச்சி' என்பது ஒரு தீய சொல்லாகியது.'' (Buchanan, 1977, p. 363.)

பூர்ஷ்வா ''நுகர்வுச் சமுதாயத்தின்'' மட்டத்தை — கால் நூற்றாண்டிற்கு முன் இருந்த மட்டத்தைக் கூட — கூடிய விரைவில் வளர்முக நாடுகளால் அடைய முடியாது என்பது மேன்மேலும் தெளிவாகி வருகிறது. விடுதலையடைந்த நாடுகளைப் பொறுத்த மட்டில் வளர்ச்சி கருத்தமைப்புகள், மக்களின் குறைந்தபட்ச, முக்கிய, அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் கடமைகளுடன் மேன்மேலும் நெருக்கமாக இணைக்கப்படுகின்றன. வேலை வாய்ப்பளிப்பது, உணவுப் பொருட்களை வழங்குவது, ஆரம்பக் கல்வி, மருத்துவ உதவி, வீடுகள், மற்ற அடிப்படை சமூக பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்வது போன்றவை இக்கடமைகளில் அடங்கும்.

''மிக அதிக வளர்ச்சியடைந்த தொழில்நுட்ப சகாப்தத்தில்'' அடியெடுத்து வைத்துள்ளதாகத் தோன்றும் வளர்ச்சியடைந்த முதலாளித்

துவ நாடுகளின் மக்களுக்குக் கூட பூர்ஷ்வா நுகர்வுச் சமுதாயத்தின் லட்சியங்கள் மகிழ்ச்சியை அளிக்கவில்லை. முன்பின் கண்டறியா அள விற்குப் பெரிய நெருக்கடிகள் முதலாளித்துவ உலகை ஆட்டிப் படைக் கின்றன: வேலையில்லாத் திண்டாட்டம் மிகவும் பெருகியுள்ளது. வளர்ச்சிக்கான மாற்று வழிகள் தேடப்படுகின்றன. **வளர்ச்சியைப் பற்றிய வழக்கமான மேலைய கண்ணோட்டத்திற்கு ஒரு சவால்** *என்ற கட்டுரையில் கானடா விஞ்ஞானிகள் டி. சான்ட்டும் எச். ரேஜியெரும் எழுதுகின்றனர்: ''நாம் வளர்ச்சியை ஒரு கூட்டு நிகழ்ச்சிப் போக்காகப் பார்க்கின்றோம், இதில் சமூக மற்றும் புறச்சூழல் அம்சங்கள் சகலவித பொருளாதார லட்சியங்களுக்கும் மேலாக வைக்கப்படுகின்றன. நிதியுதவி யும் மற்ற வளங்களும் பரிபூரணமாக ஆலோசித்து முடிவு செய்யப்பட்ட சமூக, புறச்சூழல் லட்சியங்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். மொத்த உள்நாட்டு உற்பத்திப் பொருள், ஏதாவதொரு எளிமை யான பொருளாதாரக் குறியீட்டில் வெளிப்படுத்தப்படும் விரைவான வளர்ச்சி போன்றவை இனி செல்லுபடியாகா.''* (Chant, Regier, 1972.)

1960ஆம் ஆண்டுகளில் முதலாளித்துவ வளர்ச்சி ''கோலோச்சிய'' தருணத்தில், பொருளாதார வளர்ச்சி வேகங்கள் அதிகபட்சமானவை யாக இருந்த பொழுது பல பூர்ஷ்வா விஞ்ஞானிகள் எதிர்காலத்தை நெருக்கடியற்றதாகப் பார்த்தனர்; அப்போது ''வாழ்க்கைத் தரம்'' என்றொரு கருத்தமைப்பு தோன்றியதானது தற்செயலன்று. இதில் கொள்ளை லாபம், ஆதாயம், மட்டற்ற பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றிற்கு எதிராக சமுதாய வளர்ச்சியின் தரக் குறியீடுகள் முக் கியமானவையாக முன்வைக்கப்பட்டன. ''மனிதனை உருவாக்கும் உலகைப் படைப்பதற்குப் பதில் நாம் பொருட்களுக்கு அடிமையான மனிதனை படைக்கின்றோம்'' என்று ஸ்வீடன் நாட்டு புவியியல் விஞ் ஞானி ஜி. ஓல்சன் கருதுகிறார். (Olsson, 1977, p. 360.) *ஸ்வீடன் நாடு உலகிலேயே மிக உயர்ந்த வாழ்க்கைத் தரத்தையுடைய நாடுகளில் ஒன்று என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.*

வளர்ச்சித் தத்துவம் மற்றும் நடைமுறை முழுவதையுமே மறுபரி சீலனை செய்ய வேண்டும் என்ற நம்பிக்கை பரவியுள்ளது. புதிய கருத்த மைப்புகளில் வளர்ச்சியின் மானுட மதிப்புகளின் முக்கியத்துவம் மீது அழுத்தம் தரப்படுகிறது, ''யாருக்கான வளர்ச்சி?'' ''எதற்கான வளர்ச்சி?'' என்ற கேள்விகள் முன்வைக்கப்படுகின்றன. விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியின் உச்சக்கட்டத்தில், ''மானுட பிரச்சினை களுக்கு தொழில்நுட்ப பதில்கள் கிடையாது'' என்பதை நினைத்துப் பார்க்கின்றனர். உலக வளர்ச்சிப் பிரச்சினை கூர்மையடைந்துள்ளதா னது வளர்ச்சி பற்றிய கருத்தமைப்பையே மறுபரிசீலனை செய்யக் கோரு கிறது. இங்கும் பூர்ஷ்வா சமுதாய வளர்ச்சியின் லட்சியங்கள், நோக் கங்கள், முறைகள் தோல்வியைத் தழுவுகின்றன. இவை நவீன நாகரி

கத்திற்கு ஏற்புடையவை அல்ல, இவை பூமியில் நாகரிகம் நிலவுவதற்கே முரண்பாடானவை.

உலக மாடெல்கள் — புறவயத் தேவைகள் இவற்றிற்குக் கட்டளையிட்டன — அவற்றில் எவ்வளவுதான் குறைகள் இருந்தாலும், 1960ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடும் பொழுது சிக்கலடைந்து வரும் உலக நிலவரத்தைப் பற்றிய நம் கருத்தை எளிமையாக்க உதவின. உலகம் அழிவது தவிர்க்க இயலாதது என்ற கடைக்கோடி கணிப்புகளுக்குப் பதில் நிதானமான மதிப்பீடுகள் (உலக நிலவரத்தைப் பற்றிய அச்சுறுத்தும் கணிப்புகளை இவை தந்த போதிலும்) வந்தன. முறைப் பகுப்பாய்வு மற்றும் மாடெல்களை உருவாக்கும் துறையில் பிரபல நிபுணராகிய ஜே. எம். ரிச்சர்ட்சன், உலக மாடெல்களைப் பற்றிய கருத்துநிலைகளின் அடிப்படையில், 1980ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் இருந்த நிலவரத்தைப் பற்றி பின்வரும் முக்கிய முடிவுகளுக்கு வருகிறார்:

''கூடிய விரைவில், பூமியில் உள்ள மக்களின் முக்கியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இடையூறாக உள்ள ஒரு பௌதீக அல்லது தொழில் நுட்பக் காரணி கூட கிடையாது. சமூக அரசியல் கட்டமைப்புகள், மதிப்புகள், வரையளவுகள், உலகக் கண்ணோட்டங்கள் ஆகியவற்றுடன் தொடர்புடைய பிரச்சினைகளின் காரணமாகத்தான் இத் தேவைகள் இன்று பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றனவே தவிர ஏதோ இயற்கை வளங்களின் முழுப் பற்றாக்குறையினால் அல்ல.

''...அடுத்த பத்தாண்டுகளில் இதே கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றினால் அது நாம் விரும்பும் சமுதாயத்தையும் ஏற்படுத்தாது, முக்கிய மானுடத் தேவைகளையும் பூர்த்தி செய்யாது. இது பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையிலான பிளவை அதிகப்படுத்தும், இயற்கைச் செல்வங்களை வற்றச் செய்யும், பொருளாதாரச் சூழலை மோசமாக்கும்.

''இந்த இடர்ப்பாடுகளின் காரணமாய் எதிர்காலத்தில் இன்றைய போக்குகளைத் தொடர்வது அனேகமாக சாத்தியமில்லை. அடுத்த முப்பது ஆண்டுகளில் உலகின் சமூக பொருளாதார அமைப்புகள் வேறொரு நிலைக்கு மாறும் கட்டத்தில் இருக்கும், அந்நிலை இப்போதுள்ள நிலையிலிருந்து அளவு ரீதியில் மட்டுமின்றி பண்பு ரீதியிலும் மாறுபடும்.'' பின் ஆசிரியர் தரும் முக்கிய முடிவு குறிப்பிடத் தக்கது: ''மார்க்ஸ், லெனினின் லட்சியங்களின் தாக்கத்தால் உலகில் முக்கிய மாற்றங்கள் நடைபெற்று வருகின்றன. எதிர்காலத் தன்மையைப் பற்றிய — இந்த எதிர்காலம் அதிக மானுடத் தன்மையை உடையதாக, ஜீவனுள்ளதாக, நீதியானதாக இருக்கும் — திட்டவட்டமான, ஆணித்தரமான புதிய கருத்துகளை உருவாக்கும் அவசியம் இப்போது தோன்றுகிறது.''

சோஷலிச நாகரிகம் என்றழைக்கப்படுவதானது உண்மையிலேயே உலகளாவிய முக்கியத்துவத்தைப் பெறுகிறது. இது ஒரு சிக்கலான, பன்முகப் போக்கு. இதைப் பற்றி சோவியத் யூனியனில் நடைபெறும்

விவாதங்களில், ''வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்'' என்ற கருத்தை எளிமையாக்கக் கூடாது, மக்களின் வருமானத்தையும் நுகர்வுப் பொருட்களின் உற்பத்தியையும் பெருக்குவது என்று மட்டும் இதற்குப் பொருளாகாது என்பது கோடிட்டுக் காட்டப்படுகிறது. பூர்ஷ்வா பத்திரிகைகள் சோஷலிச லட்சியங்களை இப்படித்தான் திரித்துரைக்கின்றன. உண்மையில் ''வாழ்க்கைத் தரம்'' என்ற கருத்து பன்மடங்கு பரவலானது, செழுமையானது. அன்றாட வாழ்க்கை, பழகு முறை, விவேகமான நுகர்வு உட்பட மக்களின் கலாசாரம், சுய உணர்வின் இடையறா வளர்ச்சி; சமூக ஒழுங்கு முறை, விவேகமான உணவு முறை, நல்ல தரமான சேவை வசதிகள்; தார்மீக, அழகியல் நோக்கில் ஓய்வு நேரத்தை நன்கு முழுமையாகப் பயன்படுத்துதல் ஆகியவை அனைத்தும் இதில் அடங்கும்.

சோஷலிச நாடுகளில் மக்களின் பொருளாயத வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொழுது சர்வாம்ச சமூக வசதிகளுக்குப் பெரும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த ஒரு சில முதலாளித்துவ நாடுகளில் (பல நூற்றாண்டுகளாக இவற்றின் புரப்பில் யுத்தங்களே நடந்ததில்லை) உள்ள நபர் ஒருவருக்கான உள்நாட்டு உற்பத்திப் பொருள் மட்டம் சோஷலிச நாடுகளில் உள்ளதை விட அதிகமானது. ஆனால் அந்த முதலாளித்துவ நாடுகளில் ஒன்றில் கூட முழுமையான, சர்வபொது சமூக வசதி — பிறப்பு முதல் இறப்பு வரையில் அரசின் கவனம், இலவச கல்வி, மருத்துவ உதவி, உழைப்பு, ஓய்வு, வீட்டிற்கான அரசியல் சட்ட உத்தரவாதம் — கிடையாது. விவேகமான பொருளாயத தேவையுணர்வை வளர்ப்பதும் ஆன்மீக வாழ்வின் செல்வங்களை விரிவுபடுத்துவதும் நவீன சோஷலிச சமுதாயத்தின் முக்கியக் கடமைகளாகும்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27ஆவது காங்கிரசில் பின்வருமாறு கோடிட்டுக் காட்டப்பட்டது: ''இன்னுமொரு வகையான முரண்பாடுகளின் பகுப்பாய்வு, அதாவது நாகரிகம் நிலைத்து நிற்பதன் அடிப்படைகளைப் பற்றிய உலகந் தழுவிய முரண்பாடுகளின் பகுப்பாய்வு நம்மை முக்கிய முடிவுகளுக்கு இட்டுச் செல்கிறது. புறச் சூழல், காற்று மண்டலம், பெருங்கடல்கள் அசுத்தமடைவதைப் பற்றி, இயற்கை வளங்கள் விரயமாவதைப் பற்றி இங்கே பேசப்படுகிறது. விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியின் விளைவாக இயற்கை அமைப்புகள் மீது அளவிற்கதிகமான சுமை விழுவதாலும், மானுட நடவடிக்கைகள் அதிகரித்து வருவதாலும் மட்டும் பிரச்சினைகள் கூர்மையடையவில்லை. இயற்கையைப் பயன்படுத்துவதானது கண்மூடித்தனமான சந்தைச் சக்திகளின் ஆட்டத்திற்கு உட்பட்டால் அதனால் எவ்வளவு தீய விளைவுகள் ஏற்படுமென்று எங்கெல்ஸே தொலைநோக்குப் பார்வையோடு கண்டறிந்து கூறினார். பூமியிலுள்ள இயற்கை வளங்களை மனிதகுலம் முழுவதற்கும் சொந்தமானதாகக் கருதி விவேகமாகப்

பயன்படுத்த உதவும் செயல்வன்மை மிக்க சர்வதேச முறைகளும் அமைப்புகளும் எவ்வளவு அவசியமென்பது மேன்மேலும் தெளிவாகி வருகிறது.

ஒரு அரசாலோ, ஒரு சில அரசுகளாலோ பொது மானுட, உலகப் பிரச்சினைகளைத் தனியே தீர்க்க முடியாது. இதற்கு உலகந் தழுவிய அளவிலான ஒத்துழைப்பும் பெரும்பாலான நாடுகளின் நெருக்கமான, ஆக்க பூர்வமான ஒத்துழைப்பும் அவசியம். இந்த ஒத்துழைப்பானது முழு சமத்துவம், ஒவ்வொருவரின் அரசுரிமையை மதித்தல் ஆகியவற்றின் அடிப்படையில், ஏற்ற உறுதிமொழிகளையும் சர்வதேச உரிமையின் வரையளவுகளையும் நேர்மையாக மதித்து நடப்பதன் அடிப்படையில் அமைய வேண்டும். இதுதான் நாம் வாழும் காலத்தின் திட்டவட்டமான கோரிக்கையாகும்.''

2. உற்பத்தியின் திரட்சியும் பல்தேசிய இணையங்களும்

உற்பத்தியின் திரட்சியும், பெருவீத உற்பத்தி சிறுவீத உற்பத்தியை விஞ்சி நிற்பதும் சமுதாய வளர்ச்சியின் விதியாகும். பொருளாதார ரீதியாகப் பெரும் பயனைத் தரவல்ல பிரதேசத் திரட்சி இவ்விதியின் விளைபயனாகும்.

ஆனால் ''பெருவீத உற்பத்தி விஞ்சி நிற்பதைப் பற்றிய விதி அவ்வளவு முழு முதலானதோ, எளிமையானதோ அல்ல'' என்றார் வி. இ. லெனின். பிரதேச உற்பத்தித் திரட்சிக்கும் இது பொருந்தி வருமென்று நூலாசிரியர்கள் கருதுகின்றனர், ஏனெனில் குறிப்பிட்ட எல்லைகள் கடக்கப்பட்டால் அது பொருளாதார, சமூக, புறச்சூழல் நன்மை, தீமைகளை மாற்றியமைத்து ''மிதமிஞ்சியதாகும்''. * .

சர்வபொது விதிகளும் இவற்றின் விளைவுகளும் வெவ்வேறு சமூக பொருளாதார முறைகளில் வெவ்வேறாக மாற்றமடைகின்றன. முதலாளித்துவ உலகில் உற்பத்தி மற்றும் மக்கள்தொகையின் பிரதேசத் திரட்சியானது விசேஷ விதிகளின் தாக்கத்தால் மிகவும் வலுப்படுகிறது; உற்பத்தித் திரட்சி மற்றும் மூலதனம் மையப்படுத்தப்படும் விதி, முதலாளித்துவத்தின் கீழான சமமற்ற பொருளாதார வளர்ச்சி விதி ஆகியவை இத்தகைய விதிகளாகும். மார்க்சிய விஞ்ஞானம் ஏகபோகங்களின் இரட்டைத் தன்மையை — பெரிதும் திரட்சியடைந்த உற்பத்தியில் வரக் கூடிய நன்மைகள், அதன் மீதான தனியுடைமை கண்காணிப்பின் அபாயம் ஆகியவற்றின் இணைப்பைக் — கோடிட்டுக் காட்டுகிறது. ஏகபோகங்களின் நடவடிக்கையின் பிரதேச அம்சங்களைப் பகுப்பாய்வு செய்யும் பொழுதும் இது மிகவும் முக்கியமானது. முதலாளித்துவத்தில் பெருவீத உற்பத்தி மற்றும் பிரதேசத் திரட்சியின் புறவய

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 4, Moscow, Progress Publishers, 1977, p. 119.

ரீதியான ஆதாயங்கள் உலகந் தழுவிய பல்தேசிய மற்றும் அரசு அளவில் எல்லா மட்டங்களிலும் பயன்படுத்தப்படுகின்றன; ஆனால் இத்திரட்சி (பிரதேசத் திரட்சி உட்பட) அதிகபட்சமாக்கப்படுகிறது, அளவுநிலை தரமாகிறது, பல நேரங்களில் அனுகூலங்கள் இழப்புகளாகின்றன...

பன்னாட்டு ஏகபோகங்கள் ஆதிக்கம் செலுத்தும் காலகட்டத்தில் இவைதான் முதலாளித்துவ உலகின், சோஷலிசம் நிலவாத உலகின் பெரும் பகுதியின் முரண்பாடான பிரதேச ஒழுங்கமைப்பை நிர்ணயிக்கின்றன. ''பன்னாட்டு ஏகபோகங்கள் பொருளாதார ரீதியாக அதிகபட்சம் வளர்ச்சியடைந்த ஒரு சில முதலாளித்துவ நாடுகளை ஆதாரமாகக் கொண்டு இயங்குகின்றன, இவை ஏகாதிபத்தியத்தின் முக்கியக் குணாம்சங்களைப் பிரதிபலித்து அதன் பொருளாதார, அரசியல் உட்கருவிலும், விடுதலையடைந்த நாடுகளில் நவீன காலனியாதிக்கத்தின் பொருளாதார அடிப்படையை ஏற்படுத்தி இதன் பொருளாதார, அரசியல் உட்கருவிலும் அடங்கியுள்ளன. உதாரணமாக, பன்னாட்டு ஏகபோகங்களில் 4/5 பங்கின் தலைமையகங்கள் அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, பிரான்ஸ், ஸ்விட்சர்லாந்தில் உள்ளன; 20க்கும் மேற்பட்ட அயல்நாட்டுக் கிளைகளையுடைய பன்னாட்டு ஏகபோகங்களில் 42% பங்கின் தலைமையகங்கள் அமெரிக்காவில் உள்ளன.'' (இவனோவ், 1980, பக்கம் 29.) எல்லா மட்டங்களிலும் — உலக முதலாளித்துவத்திலிருந்து எல்லையோர நாடுகள் வரை, உள் காலனி, சேரிகள் மிகுந்த நகரங்கள் வரை — உற்பத்தி மற்றும் மூலதனத்தின் திரட்சி வெளிப்படுகிறது.

1970ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் ஐரோப்பியப் பொதுச் சந்தை நாடுகளில் (பழைய வரம்புகளில்) இது பின்வருமாறு காட்சியளித்தது:

அட்டவணை 2

1972இல் ஐரோப்பியப் பொதுச் சந்தை நாடுகளில்
மக்கள்தொகை மற்றும் பொருளாதாரத்தின் திரட்சி

	ஒரு ச.கி.மீ.இல் 500 அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகையை உடைய பிரதேசங்களின் பங்கு (%)		
	பரப்பளவு	மக்கள்தொகை	மொத்த உள்நாட்டு உற்பத்திப் பொருள்
பெல்ஜியம்	52.8	76.6	79.3
ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு	24.5	50.1	50.4
பிரான்ஸ்	4.5	26.2	36.7
இத்தாலி	14.2	26.5	32.1
நெதர்லாந்து	36.3	67.7	69.3
கிரேட் பிரிட்டன்	25.8	60.2	58.2
டென்மார்க், லுக்சம்பர்க் இல்லாமல் ஐரோப்பியப் பொதுச் சந்தை நாடுகள்	15.8	44.6	50.0

பெரும் நகரங்கள் மற்றும் இவற்றை ஒட்டியுள்ள பிரதேசங்களின் (எங்கும் இவை கிட்டத்தட்ட 1/4 பரப்பை ஆட்கொண்டுள்ளன) பிரதேச விஸ்தரிப்பு மட்டுமின்றி, மக்கள்தொகையின் திரட்சியும், குறிப்பாக மொத்த உள்நாட்டு உற்பத்திப் பொருளின் திரட்சியும் (இது மக்களின் திரட்சியையும் விஞ்சக் கூடியது) இங்கே சுட்டிக் காட்டத் தக்கதாகும். மக்கள்தொகை மற்றும் உற்பத்தியின் பிரதேசத் திரட்சி அமெரிக்காவில் உயர்வானதாயிருந்தாலும் ஜப்பானில்தான் (பசிபிக் பெருங்கடல் தொழிற்துறை மண்டலம்) இது அதிகபட்சத்தை எட்டுகிறது.

இன்று எரிபொருள்-எரிசக்தித் துறை, அணுத் துறை, இராணுவ தொழிற்துறை, விமான - விண்வெளித் துறை, விஞ்ஞான உற்பத்தித் துறை, விவசாயத் தொழிற்துறை போன்றவற்றில் அரசு ஏகபோக இணையங்கள் வளர்ச்சியடைந்துள்ளன. இவற்றின் வளர்ச்சியில் உள்ள பிரதேச அம்சங்கள் இன்னமும் ஆராயப்படா விட்டாலும் இந்த நிகழ்ச்சிப் போக்கு மேற்கொண்டு பிரதேசத் திரட்சிக்கு இட்டுச் செல்வது தெளிவு. இத்தகைய திரட்சியின் மறு புறத்தில் பின்வரும் போக்குகள் காணப்படுகின்றன: எல்லையோர மற்றும் கிராமப்புற பிரதேசங்களின் நெருக்கடிகள் அதிகரிக்கின்றன, இங்கிருந்து மக்கள் (குறிப்பாக வேலை செய்யும் வயது வரம்புகளில் உள்ளவர்கள்) வெளியேறுகின்றனர், இப்பிரதேசங்களின் ''வேலைத் தகுதி மாறுகிறது'' (ஹாலந்து புவியியல் நிபுணர்களின் கருத்துப்படி), புறச்சூழல் ஓரளவு சுத்தமாயுள்ள பகுதிகளுக்கு ஓய்வு பெற்றவர்களும் ஓய்வெடுப்பவர்களும் வருகின்றனர் (பிரிட்டிஷ் ஆசிரியர்கள் தம் நாட்டின் கரையோரப் பகுதிகளை ''வயது முதிர்ந்தோர் மண்டலங்கள்'' என்றழைக்கின்றனர்).

வளர்முக நாடுகளில்தான் வாழ்க்கை மட்டத்தில் அதிகபட்ச பிளவுகள் காணப்படுகின்றன. ''பெரிதும் துருவமயப்படுத்தப்பட்ட'' விவசாயப் பொருளாதாரத்தில் தொழிற்துறைமயப்படுத்தலானது சலுகையுள்ள பிரதேசங்களில் மட்டுமே அதிகமாக நடைபெறுகிறது. முதலீடுகளில் பெரும் பகுதி காலனியாதிக்க சகாப்தத்திலிருந்து தொடரும் பழைய மையங்களுக்குச் செல்கிறது; இதனால் நாட்டின் பிரதேச ''அமைப்பு'' நிரந்தரமாகிறது. நபர் ஒருவருக்கான வருமான குறியீட்டில் பொருளாதார ரீதியாக அதிகபட்சம் வளர்ச்சியடைந்த பகுதிகளுக்கும் ஏழைப் பகுதிகளுக்கும் இடையிலான பிளவு பிரிட்டனில் 1.2, அமெரிக்காவில் 2.1 என்றால், மெக்சிக்கோவில் இது 6.3, ஆப்பிரிக்க நாடுகளில் 10, அதற்கு மேலாக உள்ளது.

திரட்சியானது பொருளாதாரக் கட்டமைப்பைப் பெரிதுபடுத்துவதில் வெளிப்படுகிறது, அதே நேரத்தில் இதனால் ஊக்குவிக்கப்படுகிறது. உதாரணமாக ஜப்பானின் கிழக்குப் பகுதியில் உள்ள ''ஷின்கான்சென்'' (புதிய இருப்புப் பாதையை) குறிப்பிடலாம்; ஜப்பானின் கிழக்குப் பகுதியில் உள்ள தீவுகள் நீரடி சுரங்க வழிகளால் இணைக்கப்பட்டுள்ளன; அதே போல் அமெரிக்காவின் வட கிழக்கில் உள்ள சாலைகள்,

மின்சாரமயப்படுத்தப்பட்ட இருப்புப் பாதைகளையும், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் உள்ள ''இன்டெர்சிட்டி''யையும் குறிப்பிடலாம். தீர்மானம் எடுக்கும் முக்கிய மையங்களுடன் அதிகபட்சம் உடனடித் தொடர்பை ஏற்படுத்துவதும், ஏகபோகங்களுக்கு விரைவாகவும் மலிவாகவும் சேவை செய்வதும் தான் இந்தப் போக்குவரத்து அமைப்புகளின் நோக்கமாகும். (நாட்டின் உள்பகுதிகளில் உள்ள மக்களுக்கான போக்குவரத்து வசதிகள் மோசமடைந்ததும், பிரிட்டன், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, இன்னும் சில நாடுகளில் பல ஸ்தல மார்க்கங்கள் ரத்து செய்யப்பட்டதும் இதன் பின் விளைவாகும்.) மூலப்பொருட்கள் மற்றும் தயாரான பொருட்களை எடுத்துச் செல்லும் சர்வதேச போக்குவரத்தில் ஏற்பட்ட அடிப்படை மாற்றங்களும் இதே லட்சியங்களை நோக்கமாகக் கொண்டவை. போக்குவரத்து சாதனங்களின் அளவுகள் பெரிதாக்கப்பட்டன (சூப்பர் எண்ணெய் கப்பல்கள், உலோகத் தாதுக்களை எடுத்துச் செல்லும் பிரம்மாண்டமான கப்பல்கள்), சரக்குகளை ஏற்றியிறக்கும் இடங்கள் விரிவுபடுத்தப்பட்டன (பெரிய துறைமுகங்கள், கண்டெய்னர் வசதிகள்), சரக்குகளை விரைவாக எடுத்துச் செல்ல வசதிகள் செய்யப்பட்டன (கண்டெய்னர்கள், நீரடி குழாய் போக்குவரத்து), பெரிய துறைமுகங்களுக்கும் உள்நாட்டுப் பகுதிகளுக்கும் இடையிலான தொடர்புகள் மேம்படுத்தப்பட்டன (மேற்கு ஐரோப்பாவில் கால்வாய்கள் ஏற்படுத்தப்பட்டன, ஆற்று முகப்புகள் ஆழப்படுத்தப்பட்டன, கப்பல்கள் உள்நாட்டின் ஆழத்திற்குள் செல்லும் ஏற்பாடுகள், துறைமுகங்களிலிருந்து உள்நாட்டுப் பகுதிகளுக்கான விரைவு வழிகள்). போக்குவரத்துத் துறையிலான இந்த விஞ்ஞான தொழில் நுட்ப சாதனைகள் எல்லாம் உற்பத்தித் திரட்சிக்கு வழிகோலுகின்றன; பெரிய துறைமுக தொழிற்துறை இணையங்கள் தோன்றுகின்றன, இவை ''கடல் — தரைப்பகுதி'' என்ற தொடர்பு மண்டலங்களில் உற்பத்தியின் பிரதேச ஒழுங்கமைப்பின் முக்கிய மாதிரியாகின்றன, முன்பின் கண்டறியா அளவிற்கு அதிகமான சரக்குகளைத் தம்பால் ஈர்க்கின்றன.

முதலாளித்துவ உலகின் எரிபொருள்-எரிசக்தி இணையங்களின் — இவை தொழிற்துறையின் முக்கிய ஏகபோக மையங்களுக்கு சேவை வசதியளிக்கின்றன — இன்றைய வளர்ச்சியிலும் திரட்சிப் போக்கு வெளிப்படுகிறது. பெரும் அனல் மின் நிலையங்கள், அணு மின் நிலையங்கள், பெரும் மின்சார எரிசக்தி மையங்களின் கட்டுமானம் குறிப்பிடத் தக்கதாகும்; பெரும் நகரங்களின் எரிசக்தி, வெப்ப சக்தி சப்ளை இவற்றிடம் தான் குவிந்துள்ளது. இது முதலாளித்துவப் பொருளாதாரத்தில் ஒப்பீட்டளவில் புதிய அம்சமாகும். நிலக்கரியைத் திரவ எரிபொருளாக மாற்றும் பிரம்மாண்டமான தொழில் நிறுவனங்களின் தோற்றமும் புதிய அம்சமாகும்; தென்னாப்பிரிக்காவில் உள்ள மிகப் பெரிய தொழில் நிறுவனம் ஒன்று ஆண்டிற்கு 30 மில்லியன் டன் நிலக்

கரியைத் திரவ எரிபொருளாக மாற்றும் திறனை அடைந்துள்ளது (1983).

விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியின் சகாப்தத்தில், விஞ்ஞானத்தை அதிகம் பயன்படுத்தும் தொழிற் துறைகளில் விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் கல்வி ஸ்தாபனங்களின் திரட்சி பெரும் பங்காற்றுகிறது. சோவியத் விஞ்ஞானிகளின் விவரங்களின் படி அமெரிக்காவில் உள்ள ஐந்து முக்கிய விஞ்ஞான உற்பத்தி இணையங்கள் நாட்டில் நடைபெறும் விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கான அரசு ஆர்டர்களில் 50% வரையும் பெற்றுள்ளன. இதே போன்ற நிலை ஜெர்மன் சமஷ்டிக் குடியரசிலும் காணப்படுகிறது; இங்கு 8 முக்கிய மையங்களில் 90% வரையிலான விஞ்ஞான ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. இறுதியாக, பிரான்சில் நிலவரம் இன்னமும் முரண்பாடானதாக உள்ளது; இங்கு விஞ்ஞான ஆராய்ச்சி துறையில் 75% வரையிலான இடங்கள் பாரிஸ் வட்டத்தில் மட்டும் உள்ளன; இங்கு 50% க்கும் மேலான பிரெஞ்சு பொறியியலர்கள் பணி புரிகின்றனர், கார், விமான, விண்வெளி மற்றும் மின்னணு தொழில்நுட்பத் துறையில் 60% வரை இப்பகுதியில்தான் உள்ளன. (Geographische Rundschau, 1980, N10, S. 454.)

பன்னாட்டு ஏகபோகங்களின் நடவடிக்கையில் இன்னுமொரு அம்சத்தையும் குறிப்பிடலாம். முடிவெடுக்கும் மையங்களுக்கும் தொழிற்துறை நடவடிக்கை மையங்களுக்கும் இடையில் பிரதேச ரீதியான பிளவு மேன்மேலும் அதிகரிப்பதை இத்தாலிய ஆசிரியர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். பிற நாடுகளின் பொருளாதாரத்தில் முதலீடு செய்யும் பொழுது தான் இப்பிளவு அதிகபட்சமாகிறது என்பது தெளிவாகப் புரிந்த போதிலும், ஒரே நாட்டின் வரம்புகளுக்குள்ளும் இப்பிளவு பெரியது என்பதைக் குறிப்பிட வேண்டும். உதாரணமாக, இத்தாலியில் 128 பெரிய கம்பெனிகளின் நடவடிக்கையைப் பகுப்பாய்வு செய்த பொழுது, 89.3% சந்தர்ப்பங்களில் முடிவெடுக்கும் மையங்கள் வேறு நகரத்தில் இருந்தன, 60% சந்தர்ப்பங்களிலோ இவை வேறு பிரதேசத்தில் இருந்தன என்பது தெரிய வந்தது. அதே சமயம், இத்தாலிய தொழிற்துறையில் முடிவெடுக்கும் மையங்கள் குவிந்திருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது: 37.5% தலைமையகங்கள் மிலானில் உள்ளன. இங்கு நிர்வாகத் திரட்சி ஆதிக்கம் செலுத்துகிறது.

பன்னாட்டு ஏகபோகங்களின் சர்வ வல்லமை ஓரளவு பிரதேச மையக் கலைப்பிற்கு, உற்பத்திச் சக்திகள் ''பிரிந்து செல்வதற்கு'' இட்டுச் செல்கிறது அல்லது இட்டுச் செல்லக் கூடும் என்று தோன்றலாம்; ஏனெனில் இவை கிட்டத்தட்ட சோஷலிச நாடுகள் தவிர மற்றெல்லா நாடுகளிலும் பரவியுள்ளன, இவற்றில் ஒவ்வொன்றும் டஜன் கணக்கான நாடுகளில் உள்ளது. இது ஒரு பெரும் செல்வாக்கு மண்டலமாகும். நவீன கணிப்பொறி அமைப்புகள், தகவல் தொடர்பு மையங்கள், எல்லா தொழிற்சாலைகள், பரிசோதனைக் கூடங்கள்,

விற்பனை மையங்களுடனான தொடர்பின் உதவியால் தலைமை அலுவலகங்களிலிருந்து இப்பன்னாட்டு ஏகபோகங்கள் இடையறாமல் வளர்ந்து வரும் தம் பேரரசுகளை நிர்வாகிக்கின்றன. உதாரணமாக, IBM என்ற பிரம்மாண்டமான இணையத்திற்கு இரண்டே இரண்டு மையங்கள் மட்டுமே உள்ளன: அமெரிக்காவிலும் கானடாவிலும் உள்ள தொழிற்சாலைகளை நிர்வகிப்பதற்கான ஒரு மையம் அமெரிக்காவிலும், ''எஞ்சிய உலகுடனான'' தொடர்புகளுக்காக ஹவான்டில் (பிரிட்டன்) இன்னொரு மையமும் உள்ளன. இது IBM பேரரசின் திட்டவட்டமான, செயல்வன்மை மிக்க செயல்பாட்டிற்கு உதவினாலும் ''அடிப்படை'' பிரதேசங்கள், நாடுகளின் நலன்கள் இங்கு அலட்சியப்படுத்தப் படுகின்றன.

பல நேரங்களில் இந்த நிர்வாகத் திரட்சிக்கு உற்பத்தியின் பெரும் ''சிதறும் போக்கு'' எதிராக உள்ளது; ஏனெனில் விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் சகாப்தத்தில் பெரிய உற்பத்தி மையங்களின் எண்ணிக்கை கூட அதிகரித்துள்ளது: அலாஸ்கா முதல் ஆஸ்திரேலியா வரை புதிய இடங்களில் கனிவளங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன, புதிய இடங்கள் மீட்கப்படுகின்றன, பன்னாட்டு ஏகபோகங்களின் உள்ளே ஒரே உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கு புவியியல் ரீதியாக ''பிளவுண்டது'': மூலப்பொருள் ஓரிடத்தில் எடுக்கப்படுகிறது, பூர்வாங்க சுத்திகரிப்பு வேறு சில நாடுகளில் நடக்கிறது, இறுதி சுத்திகரிப்பு தலைநாடுகளில் நடக்கிறது; சில நேரங்களில் (உதாரணமாக மின்னணு துறையில்) எளிய ஆனால் நிறைய உழைப்பு தேவைப்படும் நடவடிக்கைகள் வளர்முக நாடுகளிலும் இறுதி வேலைகள் விற்பனைப் பிரதேசங்களிலும் நடக்கின்றன. ஆனால் உலகந் தழுவிய அளவில் நடக்கும் இந்தத் தனிப்பட்ட மையக் கலைப்பிற்கு எதிராக, ஒன்றுதிரளுவதை நோக்கிய பெரும் நாட்டமும் காணப்படுகிறது: பழைய இடங்களில் புதிய உற்பத்திகள் சேருவதும் அல்லது புதிதாகத் தோன்றுவதும் மக்கள் தொகையின் திரட்சியாலும் பல்கலைக் கழக மையங்களின் வளர்ச்சியாலும் முன்நிர்ணயிக்கப்பட்டன, இவையோ பெரிய தொழிற்துறை மையங்களில் தோன்றின. பெரிய தொழில் நிறுவனங்கள் இல்லாமல் நிர்வாக மையங்களை மட்டும் தோற்றுவிப்பதன் மூலம் முழு பிரதேசங்களின் வளர்ச்சிக்காக ஏற்கப்பட்ட நிர்வாக நடவடிக்கைகள் எதிர் பார்த்த பயனைத் தரவில்லை. இதற்குத் தக்க உதாரணம் பிரேசில் நாட்டிற்காக புதிய தலைநகரம் ஏற்படுத்தப்பட்டதாகும்.

3. இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய ஆண்டுகள்: பழைய கருத்தமைப்புகளின் நடைமுறை சோதிப்பு, புதிய தத்துவங்களின் தோற்றம்

விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியானது தொழிற்துறை இட அமைப்பின் பழைய அடிப்படைகளைத் தீவிரமாக மாற்ற வழிகோலு

கிறது; இட அமைப்புப் பிரச்சினைகள் ''இட அமைப்பு — பிராந்திய வளர்ச்சி — இட ஒழுங்கமைப்பு'' என்ற அதிகப் பரவலான பிரச்சினை களின் இணைப்பில் கரைகின்றன. உலகம் மாறி விட்டது, விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியானது மூலப்பொருள், எரிபொருள், எரிசக்தி ஆகியவற்றைப் பெறும் தொழில்நுட்ப வாய்ப்புகளை விரிவுபடுத்தி யுள்ளது, இவற்றை உலகின் எந்த ஒரு பகுதிக்கும் விரைவாக எடுத்துச் செல்லும் சாதனங்களைத் தோற்றுவித்துள்ளது, புதிய துறைகளை முன்னணிக்கு கொண்டு வந்துள்ளது. நவீன உள்கட்டமைப்பு, விஞ் ஞானம், விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தின் முக்கியத் துறை கள் ஆகிய புதிய காரணிகளின் பங்கு அதிகரிக்கிறது. தொழிற்துறை மயப்படுத்தலின் அளவுகளும் இட வரம்புகளும் அசாதாரணமாக விரிவடைந்துள்ளன, இவை கிட்டத்தட்ட உலகம் முழுவதையும் ஆட் கொண்டுள்ளன; சர்வதேச ஏகபோகங்கள் விரிவடைந்து வரும் சூழ் நிலையில் தொழிற்துறை இட அமைப்பின் பிராந்திய அல்லது தேசிய வரைபடங்களைப் பற்றியல்ல, மாறாக அவற்றின் ஒன்றிணைப்பு அல்லது ஏன் உலக வரைபடங்களைப் பற்றி பேசப்படுகிறது.

வளர்முக நாடுகளில் தொழிற்துறை வளர்ச்சிக் கருத்தமைப்புகள் மீண்டும் புதிதாக தோற்றுவிக்கப்படுகின்றன அல்லது ''முதலாளித்துவ பிரதேசங்களின்'' சடத்துவத்தை அகற்றி உருவாக்கப்படுகின்றன; பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த நாடுகளிலோ சமமற்ற வளர்ச்சியானது ஏழ்மைப் பிரதேசங்களின் பிரச்சினையையும், இவற் றைத் தொழிற்துறை ரீதியாக சீரமைக்கும் பிரச்சினையையும், இவற் றை வளர்க்கும் வழிகளைத் தேடும் பிரச்சினையையும் முன்வைக்கிறது. ஸ்தல இட ஒதுக்கீட்டுப் பிரச்சினைகள் சிக்கலாகின்றன — சுதந்திரமான நிலம் மேன்மேலும் குறைகிறது, புறச்சூழல் ரீதியான ''மட்டுப்படுத்தும் காரணிகள்'' மேன்மேலும் நன்கு தெரிகின்றன: நீர்வளம் மட்டுப்படுத் தப்படுகிறது, புறச்சூழலைப் பாதுகாக்கும் அவசியம் தோன்றுகிறது, தொழிற்துறையானது பெரும் நகரங்களிலிருந்து அண்டையிலுள்ள பிரதேசங்களுக்குத் திட்டமிடப்படாத வகையில் மாறுகிறது.

இச்சூழ்நிலையில் பொருளாதார இட அமைப்பு பற்றிய தனிமைப் படுத்தப்பட்ட பிரச்சினை இருக்க முடியாது. இது பிராந்திய வளர்ச்சி பற்றிய பல பிரச்சினைகளுடன் மேன்மேலும் நெருக்கமாக இணைந் துள்ளது, அவற்றிற்கு உட்படுகிறது.

தொழிற்துறையிலும் போக்குவரத்துத் துறையிலும் நடந்த விஞ் ஞான தொழில்நுட்பப் புரட்சி, போக்குவரத்துச் செலவுகள், தூரம் பற்றிய கருத்துகளையே கணிசமாக மாற்றியுள்ளது. புதிய தொழிற்சாலைக்கான இடத்தைத் தேர்ந்தெடுப்பதில் முதலாளி (குறிப் பாக பெரும் ஏகபோக முதலாளி) மேன்மேலும் சுதந்திரமானவனா கிறான். ஒரு ஸ்விட்சர்லாந்து கம்பெனியின் புள்ளி விவரங்களின்படி ''போக்குவரத்தால் அதிகம் பாதிக்கப்படாத'' தொழிற்துறைகளில்

வேலை செய்தவர்களின் எண்ணிக்கை (இங்கே போக்குவரத்துச் செலவுகள் மொத்த செலவில் 5% க்கும் குறைவு) 1980ஆம் ஆண்டுகளின் துவக்கத்திலேயே மொத்தமாக வேலை செய்தவர்களின் எண்ணிக்கையில் 75% ஆக இருந்தது. விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியானது ஒரு அலகு பொருளுக்கு ஆகும் மூலப்பொருள் மற்றும் எரிசக்தியின் செலவைக் குறைப்பதற்கு இட்டுச் செல்கிறது என்பது தெரிந்ததே.

அமெரிக்காவில் நடத்தப்பட்ட ஒரு ஆராய்ச்சி இதை ஊர்ஜிதப் படுத்துகிறது: 1,180 அமெரிக்க தொழில் நிறுவனங்களைக் கேட்டதிலிருந்து, தொழிற்சாலைக்கான இடத்தைத் தேடும் பொழுது வேலையாட்கள் கிடைக்கும் அம்சம்தான் முக்கியக் காரணியாக உள்ளது, போக்குவரத்துச் செலவுகள் பத்தாவது இடத்தில்தான் உள்ளன என்பது தெரிய வந்தது. 193 பிரிட்டிஷ் கம்பெனிகளை ஆராய்ந்த பிரிட்டிஷ் பொருளாதார வல்லுனர் டபிள்யூ. லட்ரெல்லும் இதே முடிவுகளுக்கு வந்தார். (Lutrell, 1962.)

ஆனால் இங்கு ஒரு பெரும் முரண்பாடு எதிர்ப்படுகிறது. இடத்தைத் தேர்ந்தெடுப்பதில் முதலாளி மேன்மேலும் சுதந்திரமானவன் என்றால் தொழிற்துறையின் இட அமைப்பில் மையக் கலைப்பை நோக்கிய திசையில் ஏன் பொதுவான பெரும் மாற்றங்கள் நடைபெறவில்லை? நடைமுறையில் குறைவான போக்குவரத்துச் செலவுகள் பிரதேசக் குவிப்பிற்கான காரணமாக இல்லாமலிருக்கலாம், மாறாக இதற்கான வாய்ப்பை மட்டுமே ஏற்படுத்துகின்றன, பெரும் இணைப்புகள் ஏற்கெனவே நிலவினால் இச்செலவுகள் அந்த இணைப்புகளைக் குறைந்த அளவு மட்டுமே பாதிக்கும். பிரச்சினையின் சாரம் வெறும் இட ரீதியான இணைப்பிலோ இதன் சடத்துவத்திலோ மட்டும் அடங்கியிருக்கவில்லை; முதலாளித்துவ உற்பத்தி முறையில், உற்பத்தி மற்றும் மூலதனத் திரட்சியின் விதிகளிலும் இட அமைப்பில் "பொருளாயதத் தன்மையற்ற" காரணிகளின் பங்கு வலுப்படுவதிலும் இது அடங்கியுள்ளது.

தொழிற்துறையின் இட அமைப்பு பற்றிய முந்தைய எல்லா திட்டநகல்களிலும் இதன் பல்வேறு துறைகளுக்கான மூலப்பொருள் திசையமைவை முக்கியமானதாக கருதினர். மூலப்பொருளின், குறிப்பாக எரிபொருள், எரிசக்தியை எடுத்துச் செல்லும் தன்மை, போக்குவரத்துத் துறையின் முன்னேற்றத்தால் பெரிதும் கூடியது (எரிவாயு, எண்ணெய்க் குழாய்கள், நீண்ட தூர மின் கம்பிகள்). சரக்குகளை எடுத்துச் செல்ல சாதாரண வண்டிகளைப் பயன்படுத்தியதிலிருந்து லாரிகளைப் பயன்படுத்துவதற்கு மாறியதால் அமெரிக்காவில் சர்க்கரைத் தொழிற்சாலைகளின் சப்ளை வட்டம் 5 மைலிலிருந்து 30 மைலாகக் கூடியது என்றால் இன்று இந்த அதிகரிப்பு நகைப்பிற்கிடமாயுள்ளது; இன்று பல தொழிற்சாலைகளின் சப்ளை வட்டம் ஆயிரக்கணக்கான கி. மீ. வரை உயர்ந்துள்ளது....

பெரிய எண்ணெய் கப்பல்கள், உலோகத் தாதுக்களை எடுத்துச்

செல்லும் பிரம்மாண்டமான கப்பல்கள் ஆகியவற்றின் கட்டுமானம், முதலாளித்துவ நாடுகளில் எண்ணெய் சுத்திகரிப்பாலைகள், உலோகத் தொழிற்சாலைகளின் இட அமைப்பு முழுவதையும், மூலப்பொருளுடன் இவற்றிற்கு உள்ள தொடர்புகளையும் அடியோடு மாற்றியது. எண்ணெய் குழாய்களை அமைத்ததானது எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்துறையை துறைமுகங்களிலிருந்து மேற்கு ஐரோப்பாவின் உள் பிரதேசங்களுக்கு மாற்றியது; ஆனால் இந்த எண்ணெய் குழாய்கள் சர்வதேச எண்ணெய் பேரரசுகளின் ''உள் போக்குவரத்தாயின'', பெரும் எண்ணெய் கப்பல்கள் இவற்றின் ஏகபோகங்களாயின. உதாரணமாக, மத்திய கிழக்கிலிருந்து எண்ணெயை இறக்குமதி செய்வது, இதை மேற்கு ஐரோப்பாவின் உள் பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்வது, சுத்திகரித்து இதை விற்பது—இவை ''எக்ஸன்'' அல்லது ''பிரிட்டிஷ் பெட்ரோலியம்'' கம்பெனியின் நோக்கிலிருந்து பார்த்தால் உள் கம்பெனி நடவடிக்கைகளாகும். அட்லாண்டிக், இந்தியப் பெருங்கடலின் வழியே வரும் இரும்புத் தாது, உள்நாட்டுத் தொடர்புகளை சர்வதேசத் தொடர்புகளாக மாற்றியது, இரும்பு உலோகத் தொழிற்துறையின் புதிய இட அமைப்பையும் கடலோர தொழிற்சாலைகள் மிகுந்திருப்பதையும் (ஜப்பானிய மாடெல்) நிர்ணயிக்கிறது. ஏனெனில் லைபீரியாவிலிருந்தும் கானடாவிலிருந்தும் கடல் வழியே இரும்புத் தாதுவை எடுத்துச் செல்ல ஆகும் செலவை விட, லோரைனிலிருந்து ரூர் வரை இரும்புத் தாதுவை இருப்புப் பாதை வழியே எடுத்துச் செல்ல அதிகம் செலவாகும் பொழுது வேறு எப்படி இருக்க முடியும்?

போக்குவரத்துத் துறையில் விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சி ''பிரிந்து செல்லும்'' போக்கிற்கு உதவுவதோடு கூட குவிவுப் போக்கிற்கும் உதவுகிறது. உதாரணமாக மேற்கு ஐரோப்பாவிலும் ஜப்பானிலும் உள்ள ஒரு சில நவீன பெரும் துறைமுகங்களில் எண்ணெய் சுத்திகரிப்பு மற்றும் உலோகத் தொழிற்சாலைகள் மேன்மேலும் குவிக்கப்படுவதைக் குறிப்பிடலாம்; இப்பெரும் துறைமுகங்களுக்குப் பெரும் எண்ணெய் கப்பல்களும் உலோகத் தாதுக்களை எடுத்துச் செல்லும் பிரம்மாண்டமான கப்பல்களும் வருகின்றன. முன்னர் ரூரில் இரும்பு உலோகத் துறையின் குவிப்பு உண்மையிலேயே மூலப்பொருட்களைப் பொறுத்து அமைந்தது என்றால் இன்று ரூரின் மேற்குப் பகுதியில் (டூயிஸ்பர்க்) ரைன் ''சூப்பர் பாதையில்'' இத்துறை பெருமளவில் குவிக்கப்படுகிறது; இங்கு பெரும் கப்பல்கள் வந்து செல்லலாம், அயல் நாட்டு இரும்புத் தாதுவைப் பெறும் அனுகூலமும் இங்குண்டு.

உற்பத்திச் செலவுகளில் போக்குவரத்திற்காகும் செலவுகள் குறைவதானது பிராந்திய வளர்ச்சியில் போக்குவரத்தின் பங்கு குறைவதைக் குறிக்கவில்லை. மாறாக, மொத்தத்தில் உள்கட்டமைப்பைப் பார்க்கும் பொழுது, புதிய பிரதேசங்களை மீட்பதிலும் பழையவற்றை வளர்ப்பதிலும் இது தொடர்ந்து முக்கியக் காரணியாக விளங்குகிறது.

உற்பத்தி இட அமைப்பு பற்றிய எல்லா வழக்கமான, போதுமான அளவு சூக்குமமான தத்துவங்களும் போக்குவரத்து அம்சத்தின் பன் முகத் தன்மையையும் முரண்பாட்டையும் வெளிப்படுத்தவில்லை. இவை போக்குவரத்தின், இட அமைப்பின் சுதந்திரமான புறவய நிபந்தனை என்று கருதினார்களே தவிர இது முதலாளித்துவப் பொருளாதாரத்தின் (இதன் அராஜக, போட்டி விதிகள், சமமற்ற வளர்ச்சி விதிகளோடு சேர்த்து) ஒரு அங்கம் என்று கருதவில்லை.

அரசு ஏகபோக பொருளாதாரத்தில் போக்குவரத்தைப் பற்றிய பகுப்பாய்வு இன்னமும் சிக்கலானதாகிறது, ஏனெனில் ஏகபோக பொருளாதாரம் தங்கு தடையின்றியும் சிக்கனமாயும் செயல்படுவதற் காக அரசு நிதியுதவியைப் பெறும் துறையாக போக்குவரத்துத் துறை விசேஷப் பணியாற்றுகிறது. இது அரசு ஏகபோகக் கொள்கையைப் பரிபூரணமாகப் பகுப்பாய்வு செய்யக் கோருகிறது, எல்லா சூழ்நிலை களுக்கும் ஏற்ற ஏதோ ஒரு சர்வாம்ச ''போக்குவரத்து திசையமைவை'' தோற்றுவிப்பதைக் கடினமாக்குகிறது.

உற்பத்திச் செலவுகளைப் பற்றிய பகுப்பாய்வு. முன்னர் பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள் உற்பத்திச் செலவுகளை வெளித் தாக்கமாக மட்டுமே வியாக்கியானப்படுத்தினர்; 30ஆம் ஆண்டுகளில் இவற்றை போக்குவரத்துச் செலவுகளுக்கு சரிசமமாக வைத்து ஆராயத் தொடங் கினர். மூலதனத்தின் மீதான வட்டி விகிதம், மூலதனம் முதலாளிக்கு எப்படி எட்டுகிறது என்னும் அம்சம், ஊதியத்தின் இட வேறுபாடுகள் (இவை மேலைய பொருளாதார நிபுணர்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தன) ஆகியவைதான் மேற்கூறிய உற்பத்திச் செலவுகளில் அடங் கும்.

தொழிற்துறையின் இட அமைப்பு பற்றிய பல நவீன திட்டங்கள் ''தொழிலாளர் அம்சத்தை'' அடிப்படையாகக் கொண்டு தீட்டப்பட் டவை. இங்கு போக்குவரத்துச் செலவுகளும் உழைப்புச் சக்திக்கான செலவுகளும் ஒப்பிடப்படுகின்றன. இத்திட்டங்களில் சில குறைகள் உள்ளன. முதலாவதாக, தொழிலாளர் அம்சமானது நடைமுறையில் ஊதிய மட்டங்களில் உள்ள வேறுபாடுகளுடன் மட்டுமின்றி, உழைப்பின் உற்பத்தித் திறனில் உள்ள இட ரீதியான வேறுபாடுகளுடனும் தொடர்பு படுத்தப்படுகிறது, ஏனெனில் லாபம் பெறுவதுதான் உந்து சக்தியாக உள்ளதே தவிர செலவுகள் அல்ல. இல்லாவிடில் வாழ்க்கைச் செலவு களும் ஊதியமும் அதிகமாக உள்ள பெரும் நகரங்களில் முக்கியத் தொழிற்துறைப் பிரிவுகள் குவிவதை முற்றிலுமாக விளக்கவே முடியாது.

இரண்டாவதாக, நவீன தொழிற்துறைகள் பல (குறிப்பாக விஞ்ஞானத் துடன் அதிக தொடர்புள்ள துறைகள்) உயர் தேர்ச்சியுள்ள உழைப்புச் சக்தியைக் கோருகின்றன. ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் முந்தைய வளர்ச்சி, இது எவ்வளவு தூரம் நகரமயமாக்கப்பட்டுள்ளது என்ற விஷயம், அந்தந்த பிரதேசத்தின் ''முதிர்ச்சி'' ஆகியவையே தேர்ச்சி

மிகு உழைப்புச் சக்தியின் இடப் பங்கீட்டை நிர்ணயிக்கின்றன.

உழைப்புச் சக்தியின் ''இடம் பெயராமை'' பற்றிய பல இட அமைப்பு தத்துவங்களின் முன் அனுமானங்கள் முற்றிலும் தவறானவையாக இருந்தன. இன்று இதன் இடம் பெயரும் தன்மை பெரிதும் அதிகரித்துள்ளது, இது மிகப் பல்வேறான மட்டங்களில் வெளிப்படுகிறது. எந்த ஒரு பெரிய தொழிற்துறை மையத்திற்கும் பெருமளவில் ஆட்கள் வந்து போகின்றனர். உதாரணமாக, 1970ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்திலேயே ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் வேலை செய்த ஆண்களில் நான்கில் ஒரு பங்கினர் வீட்டிலிருந்து வேலை செய்யும் இடத்திற்குப் புகை வண்டிகளில் வந்து சென்றனர், இன்று இவர்களின் எண்ணிக்கை இன்னமும் கூடியுள்ளது. இது தவிர மேற்கு ஐரோப்பாவின் முக்கிய முதலாளித்துவ நாடுகள் (ஸ்விட்சர்லாந்தில் வேலை செய்பவர்களில் 1/3 பங்கினரும், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் 1/10 பங்கினரும் அயல் நாட்டவர்), அமெரிக்காவின் தெற்கு பிரதேசங்கள் (இங்கே மெக்சிக்கர்கள், புயெர்ட்டோரிக்கர்கள் வசிக்கிறார்கள்) போன்றவை பெரும் சர்வதேச இடப்பெயர்ச்சி மையங்களாகியுள்ளன. எனவே உழைப்புச் சக்திக்காகும் செலவுகளைப் பற்றிய பகுப்பாய்வில் பிராந்திய மாடெலோ, நாட்டு மாடெலோ பொருந்தி வரா.

என்றாலும் பிராந்திய வளர்ச்சியில் ''உழைப்பு'' என்னும் காரணி மேன்மேலும் முக்கியமானதாகி வருகிறது. உலகந் தழுவிய அளவில் ஊதியங்களில் உள்ள வேறுபாடுகள் சோஷலிசம் அல்லாத உலகின் முழுத் தொழிற்துறைகளின் வளர்ச்சியிலும் இட அமைப்பிலும் முக்கியப் பங்காற்றுகின்றன. 1950-60ஆம் ஆண்டுகளில் ஜப்பானிய ''பொருளாதார அதிசயம்'' இதனுடன் தொடர்புடையதாயிருந்தது — கப்பல் கட்டுமானம், இரும்பு உலோகத் துறை, அன்றாட வாழ்க்கையில் பயன்படும் வானொலி, மின்சார சாதனங்கள் போன்றவற்றில் ஜப்பான் முன்னணிக்கு வந்தது. அன்று ஜப்பானில் ஊதிய அளவு அமெரிக்கா அல்லது மேற்கு ஐரோப்பாவில் இருந்ததை விட பல மடங்கு குறைவாயிருந்தது. இன்று பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்கும் ஊதிய அளவில் உள்ள பிளவு இதே பங்கையாற்றுகிறது; இப்பிளவுதான் முதலீடுகளின் பெருக்கையும் ஒரு சில தொழிற்துறைகளின் இட அமைப்பையும் ஊக்குவிக்கிறது.

ஊதிய மட்டங்களில் உள்ள பிராந்திய வேறுபாடுகளும் முக்கியப் பங்காற்றுகின்றன. பரப்பில் பெரிய நாடுகளில், குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாட்டில் இவை நன்கு தெரிகின்றன. ''தேர்ச்சியில்லா'' துறைகள் அமெரிக்காவின் தென் பகுதிக்கு — இங்கும் ஊதிய மட்டங்கள் ஓரளவு சமப்படுத்தப்படுகின்றன என்றாலும் — மாற்றப்படக் காரணம் இதுதான். இத்தகைய ''வெடிப்புகள்'' பொருளாதார சுழற்சியின் கீழ் புள்ளிகளில், பொருளாதார நெருக்கடி கூர்மையடையும் பொழுது வலுப்படுகின்றன. சோவியத் பொருளாதார புவியியல் விஞ்ஞானி

ஏ. கோர்கின் (1978) இதை நிரூபித்துள்ளார். "Volkswagen", "BASF" ஆகிய கம்பெனிகளின் கிளைகள் அமெரிக்காவின் தெற்கில் அமைக்கப்பட்டது தற்செயல் அல்ல, ஏனெனில் ஊதிய மட்டம் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் உள்ளதை விட இங்கு குறைவு.

பரப்பளவில் சிறிதான நாடுகளில் கூட மேற்கூறிய வேறுபாடுகள் பங்காற்றுவதாக சமீபத்திய மேலைய ஆராய்ச்சிகள் கூறுகின்றன. பல தொழில் நிறுவனங்கள் நாட்டுப்புறங்களுக்கு (ஆனால் இவை பெரும் நகரங்களுக்கு அருகிலிருக்கும்) இடம் மாறும் நிகழ்ச்சிப் போக்கை ஆராய்ந்த பிரிட்டிஷ் விஞ்ஞானிகள், இந்த "நாட்டுப்புற கம்பெனி களின்" (இப்பெயர் முற்றிலும் நிபந்தனைக்குட்பட்டது, ஏனெனில் சாதாரணமாக இவை "நகர கம்பெனிகளின்" கிளைகளாகும்) வரு மானம் "நகர கம்பெனிகளின்" வருமானத்தை விட 30% அதிகம் என்று கண்டுபிடித்தனர். பிராந்திய வளர்ச்சிக்கு இத்தகைய "மையக் கலைப்பின்" முக்கியத்துவம் இது வரை அதிகமில்லை; 1950ஆம் ஆண்டு களில் "கிரியூன்டிக்" கம்பெனி தன் கிளைகளை பவேரியாவின் பின் தங்கிய பிரதேசங்களுக்கு மாற்றிய பின்னும் (மிக மலிவான, குறிப்பாக பெண்களின் உழைப்பை நோக்கமாகக் கொண்டு) அங்கு நிலைமை அதிகம் மாறவில்லை.

பொருளாதார பிரதேசங்களுக்கு இடையில் வருமானங்கள் சமப் படுத்தப்பட்டதால் தொழிற்துறையின் "உழைப்புச் சக்தி திசையமை வின்" பங்கு குறைந்துள்ளது என்று பல மேலைய ஆசிரியர்கள் குறிப்பிடு கின்றனர். இப்போக்கு உண்மையிலேயே இருந்த போதிலும் இவ்வாறு கூறுவதானது சர்ச்சைக்குரியது. உலகந் தழுவிய அளவில் இத்தகைய கணிசமான ஊதிய அதிகரிப்பு ஒருசில "சலுகையுள்ள" வளர்முக நாடு களில் (அதுவும் குறிப்பாக எண்ணெய் நாடுகளில்) மட்டுமே கிட்டி யுள்ளது.

பெரும் நகரங்களின் கணக்கெடுப்பு. ஏற்கெனவே மேலே குறிப் பிட்டபடி, எல்லா சமூக பொருளாதார அமைப்பிலும் செயல்படக் கூடிய சர்வபொது உருட்சி விதி அனேகமாக இருக்க வேண்டும். முத லாளித்துவ முறையில் இவ்விதி எப்படி செயல்படுகிறது என்று ஏ. வெபர் குறிப்பிட்டார், நவீன பிராந்திய இயல் நிபுணர்கள் இதைச் செழுமைப் படுத்தியுள்ளனர். தொழில் நிறுவனங்கள் ஒன்றிற்கொன்று அருகில் இருக்கும் பொழுது இதுவே மற்ற தொழில் நிறுவனங்களை ஈர்க் கிறது, பல்வேறு அனுகூலங்கள் கிட்டுகின்றன. உதாரணமாக, கூட்டுற விற்கான வாய்ப்பு ஏற்படும், உள் கட்டமைப்பைக் கூட்டாகப் பயன்படுத் தலாம், உழைப்பு வளங்களை முழுமையாகப் பயன்படுத்தலாம், நுகர் வாளர்களுடன் நெருங்கிய தொடர்புகள் நிலவும், பெரும் நடவடிக்கை களைச் சிக்கனமாக செய்யலாம், இறுதியாக பெரும் கூட்டுகள் வளரும் பொழுது, இதர உற்பத்தியில்லா நடவடிக்கைகள் பெருகும் பொழுது மூலதனம் கிட்டும் பெரும் வாய்ப்பு ஏற்படும், வங்கிகள், வர்த்தக மற்றும்

விளம்பர ஸ்தாபனங்கள் அருகிலிருக்கும், பல்கலைக் கழக ஊழியர்களை ஈர்க்கும் வாய்ப்பிருக்கும், இன்ன பிற. ''வெளி சிக்கனம்'' என்ற வார்த்தையும் இக்கருத்தைக் குறிக்கும், ''உற்பத்தி இட அமைவுக் காரணி என்ற வகையில் இது பல்கூட்டுச் சிக்கனத்துடன் நெருக்கமாகத் தொடர்புடையது''. ஒரு சில மேலைய விஞ்ஞானிகள் (இ. ஹூவெர், எஃப். லேர்கின், யூ. அலோன்த்சோ) இன்று இதைத் தொழிற்துறை இட அமைப்பின் முக்கியக் காரணியாகக் கருதுகின்றனர்.

பல்கூட்டு அனுகூலங்களில் நவீன மேலைய பொருளாதார நிபுணர்கள் பின்வருபவற்றைக் குறிப்பிடுகின்றனர். பெரும் அளவு சிக்கனம் (தொழில் நிறுவனங்களை விரிவுபடுத்துவதால் கிட்டும் பயன்), ஸ்தல சிக்கனம் (கூட்டுறவு, இணைப்பு வாய்ப்புகளால் கிட்டும் ஆதாயங்கள்), நகரமயப்படுத்தப்பட்ட சிக்கனம் (டபிள்யூ. இசார்டின் கருத்துப்படி இது இரண்டையும் இணைக்கிறது); இவற்றைத் தவிர வேறு விளக்கங்களும் உள்ளன.

பெரும் அளவு சிக்கனம் என்பது உற்பத்தியின் அளவுடன் தொடர்புடைய லாப வன்மையின் அதிகரிப்பாகும்; திரட்சியின் இட வெளிப்பாடாகும். பெரிய தொழில் நிறுவனங்கள் மிகுந்திருந்தால் பல்திரட்டு இருக்கும், சிறிய தொழில் நிறுவனங்கள் மிகுந்திருந்தால் கலைவை எதிர்பார்க்கலாம்; பொதுவில் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை கூடும் பொழுது, கலைப்பு பரப்பீட்டின் வாய்ப்பு அதிகரிக்கிறது என்கிறார் மேற்கு ஜெர்மனி விஞ்ஞானி போரியெஸ். திரட்சிப் போக்கு, அதன் இட ரீதியான வெளியீட்டைப் பற்றி இங்கு குறிப்பிடப்படுகிறது, இப்போக்கை முதலாளித்துவத்தில் கட்டுப்படுத்த முடியாது; இதன் அளவுகள் ''பொருளாதார இடத்தின்'' தன்மைகளினால் அல்ல, மாறாக முதலாளித்துவத்தின் பொருளாதார விதிகளால் நிர்ணயிக்கப்படுகின்றன.

ஸ்தல சிக்கனம் என்றால், ஒரே துறையின் தொழில் நிறுவனங்களை ஓரிடத்தில் குவிப்பதால் கிட்டும் பயன்களாகும். பல்வேறு துறைகள், வகைகளைச் சேர்ந்த தொழில் நிறுவனங்களை ஓரிடத்தில் குவிப்பதால் நகரமயப்படுத்தப்பட்ட சிக்கனம் தோன்றுகிறது. யதார்த்தத்தில் இவ்வடிவங்கள் சாதாரணமாக கூட்டாக இயங்கி இரட்டை விளைவை (குறிப்பிட்ட எல்லைகள் வரை பயன்களை) தரும். லவுஷ்மானின் கருத்துப்படி ஸ்தல சிக்கனம், பிராந்திய அளவில் வலுவாக செயல்படுகிறது (அனேகமாக, துறை பிரதேசங்களும், ஒரே துறையின் மையங்கள் குவிவதும் இங்கு குறிப்பிடப்படலாம்); நகரமயப்படுத்தப்பட்ட சிக்கனம் ஸ்தல அளவில் குறிப்பிட்ட மையத்தை வலுப்படுத்தி இயங்குகிறது. (Lauschmann, 1976, SS. 44–45.)

இப்படிப்பட்ட பிரிவினை செயற்கையானதாகப்படுகிறது என்றால் ஒரு விஷயம் சந்தேகத்திற்கிடமற்றது: ஸ்தல சிக்கனமும் நகரமயப்படுத்தப்பட்ட சிக்கனமும் உற்பத்தியின் பிரதேச குவிப்பை வலுப்படுத்து

கின்றன, சுற்றியுள்ள பிரதேசத்தின் மீது எப்போதும் தாக்கம் செலுத்து கின்றன. ஆனால் இத்தாக்கம் ஊக்கமளிக்கும் தாக்கமாக மட்டுமே இருக்கும் என்று கூற முடியாது. குறிப்பிட்ட எல்லையைத் தாண்டியதும் குவிப்பின் அளவுகள் இழப்பை—''எதிர்மறை பல்கூட்டு சிக்கனத்தை''—ஏற்படுத்துகின்றன; போக்குவரத்து செலவுகள், நில மதிப்பு, நிலவாடகையின் அதிகரிப்பு, போக்குவரத்து நெருக்கடி, புறச்சூழலின் மீதான அளவிற்கதிகமான சுமை ஆகியவை இவற்றிலடங்கும்.

நவீன பூர்ஷ்வா பிராந்திய இயல் நிபுணர்கள் (உதாரணமாக அமெரிக்க விஞ்ஞானி இ. ஹூவெர்) மாவட்டம் அல்லது மையத்தின் ''செல்வாக்கு'' போன்ற புதிய காரணிகளைக் குறிப்பிடுகின்றனர்.

சுருங்கக் கூறின், ஒரு பிரதேசம் முழுவதன் பொருளாதாரத்தை ஏகபோகமயப்படுத்துவதைப் பற்றி இங்கே குறிப்பிடப்படுகிறது, அதுவும் ஒருமைக் கட்டமைப்பானது இப்படிப்பட்ட ஏகபோகமயப்படுத்தலின் விளைவாகத் தோன்றுகிறது. இதற்கான உதாரணங்கள் இன்று மேலைய நாடுகளில் ஏராளமாக உள்ளன, இதன் சமூக பொருளாதாரப் பின்விளைவுகள் மிக மோசமானவையாக இருப்பதுண்டு.

தொழிற்துறை ஒருமைக் கட்டமைப்பு பிரதேசங்களின் பிரச்சினை இன்றுள்ள மிகக் கடினமான பிராந்தியப் பிரச்சினைகளில் ஒன்றாகும்: அமெரிக்காவில் அப்பலாச் பிரதேசம், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் ரூரும் சாரும், ஸ்விட்சர்லாந்தின் ஒரு சில பிரதேசங்களில் ஒரே கடிகார தொழிற்துறை மட்டும் இருப்பது, வளர்முக நாடுகளில் உள்ள முதலாளித்துவ ''பிரதேசங்கள்'' ஆகியவை இதற்கு உதாரணமாகும்.

இ. ஹூவெர் (இன்னும் பல மேலைய பிராந்திய இயல் நிபுணர்களும்) தம் கருத்தமைப்பை முன்வைக்கும் பொழுது பிராந்திய வளர்ச்சியை முதலாளியின், ஏகபோகத்தின் நோக்கு நிலையிலிருந்துதான் பார்க்கின்றாரே தவிர தேசியப் பொருளாதாரம், சமூக வளர்ச்சியின் நோக்கு நிலையிலிருந்து பார்க்கவில்லை. இவர் தரும் உதாரணத்தில் ஸ்தல ஆதாயங்கள் ஏகபோகத்தை அடைகின்றன, ஒருதலைப்பட்ச பொருளாதாரக் கட்டமைவின் சுமைகள் (நெருக்கடியான ஸ்திரமின்மை, பொருளாதார வீழ்ச்சி ஆண்டுகளில் வேலையில்லாத் திண்டாட்டம், இடப்பெயர்ச்சி, ''சமூக அரிப்பு'', இன்ன பிற) பொதுமக்களின் தோள்களில் விழுகின்றன; இது பிராந்தியக் கொள்கையின் சிக்கலான பிரச்சினைகளில் ஒன்றாகும்.

நகரமயப்படுத்தப்பட்ட சிக்கனமானது குறிப்பிட்ட எல்லைகளைத் தாண்டும் பொழுது சிக்கனமின்மைக்கு இட்டுச் செல்லக் கூடும் என்கிறார் இ. பேவென்தெர். இதுவரை துல்லியமான, சாலச் சிறந்த பல்திரட்டை (தொழில் நிறுவனங்களின் சாலச் சிறந்த அளவை) நிர்ணயிக்க யாராலும் இயலவில்லையென அவர் ஒப்புக்கொள்கிறார், எனவே இதற்குப் பதில்... நடைமுறை ஆராய்ச்சிகளைக் கொண்டு வர வேண்டும். இப்படிப்பட்ட சிக்கனமின்மையின் உதாரணங்களைப் பின்னால்

பார்ப்போம்; தொழிற்துறையில் சாலச் சிறந்த தன்மையைப் பற்றித் தான் இங்கு குறிப்பிடப்படுகிறது என்பதைக் கூற வேண்டும்.

சுருங்கக் கூறின் பல்திரட்டைப் பற்றிய பூர்ஷ்வா தத்துவங்கள் ஒரு சில தெட்டத்தெளிவான காரணிகளைச் சுட்டிக் காட்டினாலும், இந் நிகழ்ச்சிப் போக்கை நிர்வகிக்க கூடிய எந்த ஒரு ஆக்க பூர்வமான அணுகுமுறையையும் – இது இதன் ஆதாயங்களைப் பயன்படுத்த உதவ வேண்டுமே தவிர, ''சிக்கனமின்மையின் எல்லைகளைத்'' தாண்டக் கூடாது – இவற்றினால் தர முடியவில்லை.

தொழிற்துறையின் இட அமைப்பு பற்றிய தத்துவத்தின் பழைய பாரம்பரிய அடிப்படைகளை நவீனமயப்படுத்தும் முயற்சிகளின் விஷயத்தில் இதே மாதிரிதான் உள்ளது. புதிய கருத்தமைப்புகளில் பல சிறிதே மாற்றப்பட்ட பழைய கருத்தமைப்புகளின் கலவையாகும். பிரெஞ்சு ஆசிரியர் ஏ. ஷெர்லிக், **எங்கே தொழிற்சாலையைக் கட்டுவது?** என்ற தன் நூலில் முன்வைத்த கருத்தமைப்பை பழைய தத்துவங்களின் கலவை என்று கூறுவது குறிப்பிடத் தக்கது. (Schärlig, 1973.)

இட அமைப்பு பற்றி நாம் பார்த்த கருத்தமைப்புகள் ஒவ்வொன்றிற்கும் அந்தந்த காலகட்டத்தின் அரசியல் பொருளாதாரத்தில் குறிப்பிட்ட தத்துவார்த்த அடிப்படை உண்டு. இக்கருத்தமைப்புகள் அந்தந்த தத்துவங்களிலிருந்து நேரடியாக வந்தவை என்று கூறுவது கொச்சைப்படுத்துவதாகும், ஆனால் உணரப்பட்ட அல்லது காலத்தால் கட்டளையிடப்பட்ட தொடர்பு எப்போதும் இருந்தது. இட அமைப்பு பற்றிய நவீன மேலைய தத்துவங்களை பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் அதிநவீனப் போக்குகளின் வெறும் ''விளைபொருள்'' என்று மட்டும் பார்க்கக் கூடாது. கடந்த காலத்தின் அடிச்சுவடுகள் இவற்றில் காணப்படுகின்றன, பிற தத்துவார்த்த கருத்தமைப்புகளின் – ''தொழிற்துறை சமுதாயத்திற்குப் பிந்தைய சமுதாயத்தின்'' தத்துவங்கள், ''வாழ்க்கைத் தரத்'' தத்துவங்கள் – தாக்கத்தை இவை உணருகின்றன; இது தவிர, பல்வேறு போக்குகளின் பாரம்பரியங்கள் வலிமையாக உள்ள தனிப்பட்ட நாடுகளில் இவை வெவ்வேறானவை.

1970-80ஆம் ஆண்டுகளில் இட அமைப்புத் தத்துவங்களுக்குப் பொதுவானவற்றைத் தொகுத்துப் பார்த்தால், முதலில் மைக்ரோ பகுப்பாய்விலிருந்து விலகி, மேக்ரோ பகுப்பாய்வை நோக்கி மாறுவது தெரிய வரும்.

1976இல் சர்வதேச புவியியல் காங்கிரசில் (மாஸ்கோ) தொழிற்துறை அமைப்புகள் பற்றிய உலக புவியியல் சங்கத்தின் கமிஷன் ஏற்படுத்தப்பட்டது. பிரபல பிரிட்டிஷ் புவியியல் விஞ்ஞானியும் இதன் சுறுசுறுப்பான பணிக்குப் பெரும் பங்காற்றியவருமான ஹேமில்டன் இதற்குத் தலைவராய் இருந்தார். சமீப பத்தாண்டுகளில் ஏற்பட்டுள்ள முக்கிய மாற்றங்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது இவர், தனியார் மற்றும் அரசுத் துறைகளைச் சேர்ந்த பெரும் ஸ்தாபனங்கள் தோன்றி, தேசிய,

சர்வதேசிய தொழிற்துறை அமைப்புகளில் பெரும் பங்காற்றுவதைச் சுட்டிக் காட்டினார். உண்மையில் நிலவரம் இப்படித்தான் உள்ளது; பன்னாட்டு ஏகபோகங்கள் ஆதிக்கம் செலுத்தும் சகாப்தத்தில் வேறு அணுகுமுறை பொருளற்றது—"ஒரு கம்பெனி அல்லது ஒரு துறை பொது அமைப்பில் அல்லது நிலவரத்தில் ஒரு அங்கமாக மட்டுமே பார்க்கப்படுகிறது". (Karasko, 1973, p. 30.)

தொழிற்துறை அமைப்பு என்பது பல்வேறு துறைகளுக்கு இடையிலான அமைப்பாகும் அல்லது ஒரு துறையின் பகுதியாகும்; அதே நேரத்தில் இது குறிப்பிட்ட பிரதேசத்தில் உள்ள நிலவரம், இதன் பிரச்சினைகள், பொருளாதார நெருக்கடிச் சூழ்நிலையில் இதன் வாய்ப்புகள் ஆகியவற்றுடன் நெருக்கமாகத் தொடர்புடைய பிரதேச அமைப்பாகும். இட அமைப்பு பிரச்சினைகளின் பாலான முறைப் பகுப்பாய்வின் குறிப்பிடத்தக்க அம்சம், பிரதேச அமைப்புகளின் பின்னணியில் இவற்றைப் பகுப்பாய்வு செய்வதாகும். இது சம்பந்தமான சமீபத்திய நூல்களில் (Hamilton F. E., Linge G. Y., 1979; Rees J., Hewings G., Stafford H., 1981) இந்த அணுகுமுறை திட்டவட்டமாக தென்படுகிறது.

புதிய நூல்களின் இன்னொரு சிறப்பு அம்சம், பகுப்பாய்வின் பால் மட்டுமின்றி நடைமுறை சிபாரிசுகளின் பாலும் உள்ள நாட்டமாகும். 1950ஆம் ஆண்டுகளில் டபிள்யூ. இசார்டு தலைமையில் அமெரிக்காவில் தோன்றிய "பிராந்தியவியல் விஞ்ஞானம்" நடைமுறைக்கு அதிகப் பயன்களைத் தரவில்லை; மேலைய ஆசிரியர்களுக்கும் இது தெரியும். டி. ஸ்மித் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "அவர் (டபிள்யூ. இசார்டு—**ஆசிரியர்**) முன்வைத்த பொது தத்துவத்தால் விசேஷ யதார்த்த பிரச்சினைகளைத் தீர்ப்பதில் குறைந்த அளவுதான் நேரடிப் பயன் கிட்டும்; யதார்த்த உலகில் பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகளின் செயற்பாட்டைப் புரிந்து கொள்வதற்கான தத்துவங்களை முன்வைத்து, இதற்கான பகுப்பாய்வுச் சாதனங்களைச் சேர்க்கும் பாதையில் இது ஒரு முதலடி என்று மட்டுமே அவர் கருதுகிறார்... நடைமுறையிலோ இந்த வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை." (J. Rees et al., 1981, p.p. 101, 107.)

இந்நூலில் டி. ஸ்மித் நல்ல ஒரு தத்துவமானது உள்ளதை விளக்குகிறது, என்ன இருக்க வேண்டும் என்பதை ஆதாரப்படுத்துகிறது என்று கருதுகிறார், பகுப்பாய்வையும் ஆக்க பூர்வமான முன்மொழிவுகளையும் எதிரெதிராக வைக்கிறார். ஆனால் நம் காலத்தில் இத்தகைய ஒரு தத்துவத்தை உருவாக்க, முன்பு தேவைப்பட்டதை விடப் பன்மடங்கு அதிகமான காரணிகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும். டி. ஸ்மித் பரவலான காரணிகளைப் பயன்படுத்துவது கவனிக்கத் தக்கது. இக்காரணிகளாவன: நிலமும் இதனுடன் தொடர்புடைய அம்சங்களும், நிதியும் உபகரணங்களும், பொருட்களும் மின்சக்தியும், உழைப்பும் நிர்வாகமும்,

சந்தையும் விலையும், போக்குவரத்தும் கட்டண விகிதங்களும், பெரும் பல்திரட்டு, தகவல் தொடர்பும் வெளி சிக்கனமும், அரசுக் கொள்கையும் திட்டமிடலும், நடத்தை மற்றும் தற்செயல்.

தொழிற்துறையின் இட அமைப்பு பிராந்திய வளர்ச்சி மீது செலுத்தும் தாக்கத்தையும் பரவலாக கவனத்தில் கொள்ள வேண்டி வருகிறது. சமூகப் பின்விளைவுகள் (பெரும் வேலையில்லாத் திண்டாட்டம் இப்பிரச்சினையை மிகவும் கடுமையானதாக்குகிறது), புறச்சூழலின் மீதான தாக்கம், புறச்சூழல் எந்த அளவிற்கு அசுத்தமாக்கப்பட்டுள்ளது என்ற அம்சம், புதிய கட்டுமானம் பற்றிய கறாரான சட்டங்கள், இன்னும் பல விஷயங்கள் இங்கே குறிப்பிடப்படுகின்றன. இது தவிர இன்னும் அதிகப் பரவலான பிரச்சினைகளும் (நாட்டில் பிரதேசம் வகிக்கும் இடம், தொழிற்துறை வளர்ச்சியின் நீண்ட கால திட்டத்தில் இதற்குள்ள பங்கு) கவனிக்கப்படுகின்றன.

பிரச்சினை மேன்மேலும் சிக்கலடைந்துள்ளதாலும், பரஸ்பரத் தொடர்புடைய போக்குகள் அதிகரித்துள்ளதாலும் முறைப் பகுப்பாய்வு மற்றும் ஆக்க பூர்வமான பகுப்பாய்விற்குக் கூட்டு பல்துறை அணுகுமுறை தேவைப்படுகிறது.

ஜே. ரீஸ், இன்னும் சிலர் முடிவுகளை எடுப்பதில் நடத்தை ரீதியான அணுகுமுறையின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகின்றனர் (J. Rees et al., 1981). இவர்கள் ''உழைப்புக்'' காரணியின் புதிய அம்சங்களை, அதாவது இதில் பங்கேற்கும் அளவு, உழைப்புச் சக்தியின் பிடிப்பு, உழைப்புச் சந்தையின் கூறுபாடு, ஒரு குறிப்பிட்ட தொழில் நிறுவனத்தின் இட அமைப்பால் ஏற்படும் சமூகப் பின்விளைவுகள் போன்றவற்றை விளக்குகின்றனர்.

மனிதக் காரணி முக்கியமானதாகி வருகிறது, மேலும் இதை அலட்சியப்படுத்தக் கூடாது. சமூகவியலும் உளவியலும் தத்துவார்த்த அடிப்படையின் அங்கங்களாகி வருகின்றன, புறச்சூழல் அணுகுமுறையும் மேன்மேலும் பரவி வருகிறது.

இவ்வாறாக, 1970-80ஆம் ஆண்டுகளில் மேலைய பொருளாதார புவியியலின் தத்துவார்த்த அடிப்படை விரிவடைந்து மேன்மேலும் பல அம்சங்களைக் கொண்டதாகியது. சமுதாயத்தின் பிரதேச ஒழுங்கமைப்பு என்ற ஒரு சிக்கலான, கூட்டு புலப்பாட்டைப் பகுப்பாய்வு செய்ய கூட்டு அணுகுமுறை தேவை என்பது புரிந்ததே; ஆனால் ஒரு ஐக்கிய தத்துவஞான அடிப்படை இல்லாததால் இந்த அணுகுமுறை கூட்டு அணுகுமுறையாக இருப்பதை விட பல்திரட்டு அணுகுமுறையாக உள்ளது.

இதனால் தனிப்பட்ட புதிய விஷயங்களைத் தர முடியும், தரவும் செய்கிறது, அவ்வப்போது இதிலிருந்து சுவாரசியமான கருத்துகள் பளிச்சிடுகின்றன, ஆனால் ஒரு ஐக்கிய வரைபடத்தை, முழுமையான தத்துவத்தை இதனால் தர முடியாது. பல்திரட்டு அம்சத்திற்கு இன்

4–1339

னொரு புறவய ரீதியான நியாயப்படுத்தலும் உண்டு: முதலாளித்துவ உலகின் பல்வேறு நாடுகளிலும் பிரதேசங்களிலும் பிரச்சினையே மிகப் பல்வேறானதாய் உள்ளது. அரசு ஏகபோக முதலாளித்துவ சகாப்தத்தில் உற்பத்தி மற்றும் சமுதாயத்தின் பிரதேச ஒழுங்கமைப்பு முறையையும் இதன் உட்காரணங்களையும் புரிந்து கொள்ளாததுதான் இந்த பல்திரட்டு அம்சத்தின் அடிப்படையாகத் திகழுகிறது.

''பிராந்திய விஞ்ஞானத்தின்'' தோற்றம் மேற்கூறிய பல்திரட்டு அம்சத்தின் விளைவாகும். ஒரு விஞ்ஞானத்தின் குறுகிய வரம்புகளுக்குள் கூட்டு பிரச்சினைகளை ஆராய முடியாது. இதற்கு, இப்பிரச்சினைகளை ஆராயும் பல விஞ்ஞானங்கள் அமைப்பு ரீதியில் ஒன்றிணைய வேண்டும். இந்த மாதிரியான ''எல்லை'' விஞ்ஞானம்தான் ''பிராந்திய விஞ்ஞானம்'' என்ற பெயரைப் பெற்றது.

அமெரிக்காவில் பிறந்த ''பிராந்திய விஞ்ஞானம்'' பொதுவாக மேற்கில் தோன்றிய எல்லாவற்றையுமே சேர்த்துக் கொண்டது. பிரபல பிரெஞ்சு பொருளாதார நிபுணர் எஃப். பெர்ரூவின் பெயருடன் தொடர்புடைய ''வளர்ச்சியின் துருவங்கள்'' பற்றிய தத்துவம், ஸ்வீடிஷ் புவியியல் விஞ்ஞானி தி. ஹேகெர்ஸ்த்ரான்ட், அவருடைய புதிய அம்சங்கள் பரவுவதைப் பற்றிய தத்துவம், புதிய முறைகள், உதாரணமாக கணித முறைகள் (1950ஆம் ஆண்டுகளின் ''அளவுநிலை புரட்சி'') ஆகியவை இவற்றிலடங்கும்.

விஞ்ஞானத்தின் வளர்ச்சியில் ஏற்பட்ட இந்த மாற்றங்களின் மீது புறவய நிலவரமும் சமூகக் கட்டளையும் மட்டுமின்றி விஞ்ஞானத்தின் சுய வளர்ச்சியும் (முறைப் பகுப்பாய்வின் தோற்றம், மாடெலிங் முறையின் வளர்ச்சி, நிர்வாகத் தத்துவத்தின் வளர்ச்சி, கணித முறைகளைப் பரவலாகப் பயன்படுத்தல், பல்துறை அணுகுமுறைகளின் வளர்ச்சி) தாக்கம் செலுத்துகிறது. ஆனால் இன்று ''பிராந்திய விஞ்ஞானம்'' ஒரு திரட்டு என்பதை விட கலவை என்பது பொருந்தும், இது முறைகளின் தொகுப்பே தவிர முறையியல் அல்ல.

ஆரம்ப தத்துவார்த்த அடித்தளம் இல்லாததால் மேலைய ஆசிரியர்களின் தலைசிறந்த புதிய படைப்புகள் கூட ஓரளவு கதம்பமாகத் திகழுகின்றன. உதாரணமாக டி. ஸ்மித்தின் முக்கியப் படைப்பில் கூட (D. Smith, 1981), பன்னாட்டு ஏகபோகங்கள் முதலாளித்துவ உலகின் உற்பத்தி இட அமைப்பில் முக்கியச் சக்தியாகியுள்ளன என்பது திட்டவட்டமாகக் குறிப்பிடப்படவில்லை; சோஷலிச நாடுகள் மற்றும் முதலாளித்துவ நாடுகளின் பிரதேச உற்பத்தி இணையங்கள் ஒன்றாக ஆராயப்படுகின்றன. இதில் ''ஸ்தாபன அமைப்பு'' என்ற சொல் முதலாளித்துவ உலகில் உள்ள பல்வேறு பொருளாதார, சமூகப் புலப்பாடுகளின் வர்க்க சாரத்தையும் காரணங்களையும் மூடி மறைக்கப் பயன்படுத்தப்படுகின்றது. இட அமைப்பு சம்பந்தமான காரணிகள் பெரும் அளவில் இருப்பதும், இவற்றில் சில சுவாரசியமான பரிபூரண பகுப்பாய்விற்கு

உட்படுத்தப்படுவதும் எவை தீர்மானகரமான காரணிகள் என்ற பிரச்சினையை மூடி மறைக்கின்றன.

இந்த ஆராய்ச்சிகளில் ''தீவிரவாதிகளால்'' மட்டுமின்றி, உண்மையான பூர்ஷ்வா விஞ்ஞானிகளாலும் மார்க்சியத் தத்துவத்தை ஒதுக்கித் தள்ள முடியாது என்ற அம்சம் அடையாளச் சிறப்புடையதென்று நூலாசிரியர்கள் கருதுகின்றனர்.

இப்பகுதியின் இறுதியில் ஒரு பொதுமைப்படுத்தும் மேற்கோளைச் சுட்டிக் காட்ட நூலாசிரியர்கள் விரும்புகின்றனர்: ''தொழில்நுட்ப மாற்றம், தொழிற்துறை வளர்ச்சி, பிராந்திய வளர்ச்சி ஆகியவற்றின் பரஸ்பரத் தொடர்பானது 1980ஆம் ஆண்டுகளில் தொழிற்துறையில் புவியியல் நிபுணர்களின் பயன்மிகு ஆராய்ச்சிகளில் ஒன்றாகத் திகழுகிறது.'' (J. Rees, et al., 1981, p. 14.)

அத்தியாயம் இரண்டு

பிராந்திய பொருளாதார வளர்ச்சியைப் பற்றிய கருத்தமைப்புகள்

1. சோவியத் யூனியனில் பிரதேசமயப்படுத்தலின் வரலாறு

சோவியத் ருஷ்யாவில் பிரதேசமயப்படுத்தலின் முக்கியக் கோட்பாடுகளும் முறைகளும் — இவைதான் திட்டமிடலின் அடிப்படையாகத் திகழ்ந்தன — 1920ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில், **கோயெல்ரோ** *என்ற நாட்டை மின்சாரமயப்படுத்தும் நீண்ட கால மேக்ரோ பிராந்திய வளர்ச்சித் திட்டம் உலகிலேயே முதன்முதலாக தீட்டப்பட்டு நிறைவேற்றப்பட்ட பொழுது உருவாக்கப்பட்டன. பிரபல சோவியத் விஞ்ஞானியும் புரட்சியாளரும், தேசியப் பொருளாதாரத்தின் ஸ்தாபன அமைப்பாளரும்,* **கோயெல்ரோ** *திட்டத்தைத் தீட்டுவதில் தீவிரப் பங்கேற்றவருமான ஜி. எம். கிரிஜானோவ்ஸ்கி பின்வருமாறு எழுதினார்: "நாட்டின் பொருளாதாரம் பெரிதும் அழிவிற்கு உள்ளாகியிருந்த சூழ்நிலையில், பெருவீத இயந்திர தொழிற்துறை மற்றும் மின்சாரமயப்படுத்தலின் அடிப்படையில் 10 — 15 ஆண்டுகளில் சோவியத் குடியரசின் தேசியப் பொருளாதாரத்தை சோஷலிச ரீதியில் மாற்றியமைக்கும் மாபெரும் அரசுத் திட்டம் 1920இல் வி. இ. லெனினின் நேரடித் தலைமையின் கீழ் தீட்டப்பட்டது.*

"ருஷ்யாவை மின்சாரமயப்படுத்தும் இத்திட்டம் நாட்டின் எதிர்கால பொருளாதாரத் திட்டத்தைத் தீட்டும் முயற்சியாக இருந்தது, எரிபொருள் துறையில் பிரதேசமயப்படுத்தலுக்கான முக்கிய முன்தேவைகள் இவற்றில் அடங்கியிருந்தன, இவைதான் பிரதேசமயப்படுத்தல் சம்பந்தமான பிந்தைய நடவடிக்கைகளுக்கு அடிப்படையாகத் திகழ்ந்தன." (கிரிஜானோவ்ஸ்கி, 1957, பக்கம் 4.)

70 ஆண்டு கால திட்டமிட்ட சோஷலிச வளர்ச்சியில் சோவியத் யூனியனில் திட்டமிடும் முறை பெரிதும் சிக்கலாகியுள்ளது; இன்று இதில் சமூக பொருளாதார வாழ்க்கையின் பிராந்திய அடிப்படை உட்பட இதன் மாறி வரும் அளவுநிலை மற்றும் பண்புநிலை அளவுகோல்கள் அடங்கியுள்ளன. இன்று திட்டமிடும் முறைகள் பெரிதும் மாறியுள்ளன, மேம்பட்டுள்ளன, கணிப்பொறிகளும் நவீன மாடெலிங் முறைகளும் இன்னும் பல நவீன அம்சங்களும் பயன்படுத்தப்படுகின்றன, திட்டமிடு

தலின் விஞ்ஞான அம்சங்களை ஆராயும் கேந்திரங்கள் விரிவடைந்துள்ளன; இந்தச் சூழ்நிலையிலும் 1920க்களில் உருவாக்கப்பட்ட பிராந்தியத் திட்டமிடலின் அடிப்படைக் கோட்பாடுகளும் திட்டமிடலுக்கான பிரதேசமயப்படுத்தும் கருத்தமைப்பும் இதன் முறையியல் அடிப்படைகளும் இன்றும் பிராந்தியத் திட்டமிடலில் பயன்படுத்தப்படுகின்றன.

காலம் மற்றும் நடைமுறையின் கடும் சோதனைகளை வென்று வருவதென்பது ஒரு தத்துவத்தின் மதிப்பிற்கான புறவய அளவுகோலாகும்.

திட்டமிடலுக்கான பிரதேசமயப்படுத்தல் பற்றிய சோவியத் தத்துவத்தின் அடிப்படை கருத்துநிலைகளை விளக்கும் முன் ருஷ்யாவில் புரட்சிக்கு முன்னர் இத்துறையில் அடையப்பட்ட சாதனைகளைப் பற்றி சுருக்கமாகப் பார்ப்போம். சோவியத் விஞ்ஞானிகள் இச் சாதனைகளைக் கவனத்தோடு அணுகுகின்றனர், எதிர்கால விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கான அடிப்படை இந்த அனுபவத்தின் தலைசிறந்த பாரம்பரியங்களில் அடங்கியுள்ளது என்பது சோவியத் விஞ்ஞானிகளுக்குப் புரிகிறது. இவற்றைப் பற்றி என். என். பரான்ஸ்கி, என். என். கலஸோவ்ஸ்கி, ஓய். ஜி. சாவுஷ்கின், ஐ. ஐ. பெலவூஸவ், தி. எம். கலாஷ்னிக்கவா போன்ற சோவியத் விஞ்ஞானிகள் தம் படைப்புகளில் குறிப்பிடுகின்றனர்; இவர்கள் பிரதேசமயப்படுத்தல் சம்பந்தமான துறையில் ஆராய்ச்சி செய்தவர்கள் அல்லது இன்று ஆராய்ச்சி செய்து வருபவர்கள்.

உலகிலேயே முதன்முதலாக ருஷ்யாவில் 18ஆம் நூற்றாண்டிலேயே முதல் பொருளாதார பிரதேசமயப்படுத்தல் நடைபெற்றது என்று வரலாறு கூறுகிறது; தத்தீஷெவ், கிரீலவ், லமனோசவ் ஆகியோரின் படைப்புகள் இதற்கு அர்ப்பணிக்கப்பட்டிருந்தன. 1917ஆம் ஆண்டு மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி நடைபெறும் முன் ருஷ்யாவில் கிட்டத்தட்ட 50 பெரிய விஞ்ஞானப் படைப்புகள் இது சம்பந்தமாக வெளிவந்தன. ருஷ்ய மற்றும் சோவியத் புவியியல் வரலாற்றில் பிரதேசமயப்படுத்தல் பாரம்பரியமாக மைய இடத்தை வகித்தது. இது தற்செயல் அல்ல. ருஷ்யா பரப்பளவில் மிகப் பெரிய நாடு, இதில் சகலவிதமான பிரதேச வேறுபாடுகளையும் சர்வ சாதாரணமாகப் பார்க்கலாம். ஆனால் வி. வி. பக்ஷிஷேவ்ஸ்கி பின்வருமாறு கூறியது சரியானது: ''ருஷ்யா அளவில் பெரிய நாடு என்பதால் மட்டும் பிரதேசமயப்படுத்தலானது ருஷ்யாவின் முக்கிய புவியியல் அம்சமாகியுள்ளது என்ற கருத்து மிகவும் இயந்திரகதியானது. ருஷ்யாவின் பொருளாதாரம் பல் அமைப்பைக் கொண்டது என்பதையும், ருஷ்ய அரசின் பரப்பு உருவாகியது ஒரு நீண்ட நிகழ்ச்சிப் போக்காக இருந்தது என்பதையும், நம் நாட்டின் பல்தேசிய உள்ளடக்கத்தையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும். ருஷ்ய மக்களும் ருஷ்ய அறிவுத் துறையினரின் தலைசிறந்த பிரதிநிதிகளும் எப்போதுமே ருஷ்யாவை பல பெரும் பிரிவுகளால் — இவை ஒவ்வொன்றிற்கும் அதனதன் ஈடு இணை

யற்ற தன்மை உண்டு — ஆனது என்றுதான் கருதினர்.'' (பக்ஷிஷேவ்ஸ்கி, 1965, பக்கங்கள் 7 — 8.)

நாம் ஏற்கெனவே கூறியபடி, ருஷ்யாவில் பிரதேசமயப்படுத்தல் 18ஆம் நூற்றாண்டுடன், அதாவது பீட்டர் சகாப்தத்துடன் தொடர்புடையது; ஆனால் இது முதலாம் பீட்டரின் மரணத்திற்குப் பின்தான் (1725) தோன்றியது. இக்காலகட்டத்தில் நாட்டின் பரப்பு ஸ்திரமடைந்து கொண்டிருந்தது, முழு முடியரசு உருவாகிக் கொண்டிருந்தது, பொருளாதார வளர்ச்சி பெரிதும் துரிதப்படுத்தப்பட்டிருந்தது; இதற்கெல்லாம் நாட்டின் எல்லா வளங்களையும் அணி திரட்டி, இவற்றை ஆராய்ந்து, கிடைத்த விவரங்களை வகைப்படுத்துவது அவசியமாயிருந்தது.

ஐ. கே. கிரீலவ் (1689 — 1737) ருஷ்யாவின் தேசப்படத்தை உருவாக்கி (1734) நாட்டைப் பற்றிய பிரதேச ரீதியான புவியியல் வரையறுப்பைத் தந்தார். இவர் தந்த பிரதேச ரீதியான பிரிவு நிர்வாகப் பிரிவின் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருந்தது. பிரபல விஞ்ஞானியும் சுறுசுறுப்பான அரசுத் தலைவரும், யுராலில் சுரங்கத் தொழிற்துறையை ஏற்படுத்தியவருமான வி. என். தத்தீஷெவ் நிர்வாகப் பிரிவை மாற்றும் நகலை முன்மொழிந்தார்; இந்நிர்வாகப் பிரிவில் 2 கட்டங்கள் (16 மாவட்டங்கள், இவற்றில் 14 ஐரோப்பியப் பகுதியில் இருந்தன, 62 பிராந்தியங்கள்) அடங்கியிருந்தன. புதிய முன்மொழிவானது பிரதேசத்தின் இயற்கை மற்றும் பொருளாதாரச் சிறப்பியல்புகள், குடியேற்ற அமைப்பு, மக்கள்தொகையின் தேசிய இன உள்ளடக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருந்தது.

நாடு விரிந்து பரந்தது, வளர்ச்சியடைந்தது, இதற்கேற்றபடி பிரதேசமயப்படுத்தும் அணுகுமுறைகள் மாற்றமடைந்தன, பிரதேசமயப்படுத்தலானது புதுப் புது பகுதிகளுக்குப் பரவியது. உதாரணமாக, மாஸ்கோ பல்கலைக் கழக துணை வேந்தராயிருந்த எச். ஏ. சிபொதரியோவ் **ருஷ்யப் பேரரசைப் பற்றிய புவியியல் முறையியல் விளக்கம்** *(1776) என்ற தன் பாடநூலில் மாவட்டங்கள் வட்ட ரீதியில் மாஸ்கோவிலிருந்து எவ்வளவு தள்ளியுள்ளன என்பதன் அடிப்படையில் இவற்றை பல பிரிவுகளாகப் பிரித்திருந்தார்; இதன் மூலம் அதன் ஐரோப்பியமைய நிலை கோடிட்டுக் காட்டப்பட்டதைப் போலிருந்தது. 1785இலேயே எம். டி. சுல்கோவ் சைபீரியாவை பிரதேசமயப்படுத்தி, ஒவ்வொரு பிரதேசத்தையும் பற்றிய விளக்கத்தைத் தந்தார்.*

ருஷ்யாவை பிரதேசமயப்படுத்திய பரிசோதனைகளின் கூறிப்பிடத்தக்கதொரு அம்சம் இது புவியியலர்களின் ஏகபோகமாக மட்டும் இருக்கவில்லை என்பதாகும். இப்பிரச்சினை பல முற்போக்கு சிந்தனையாளர்கள், விஞ்ஞானிகள், சமூக மற்றும் அரசுப் பிரமுகர்கள் ஆகியோரின் கவனத்தைக் கவர்ந்தது; இப்பிரச்சினையின் முக்கியத்துவம் நன்கு உணரப்பட்டிருந்ததற்கு இது சான்றாகும்.

ருஷ்யாவை பிரதேசமயப்படுத்துவது சம்பந்தமாக புரட்சிக்கு முன் நடத்தப்பட்ட பல பரிசோதனைகளில் இரண்டு முக்கியப் போக்குகள் தென்பட்டன. "ஒரு போக்கைக் குறிப்பிட்ட பொருளில் 'தணிக்கைக்கு உட்பட்டது' எனலாம், புரட்சிக்கு முந்தைய பெரும்பான்மையான பரிசோதனைகள் இதைத்தான் சாரும்; இது அறிதல் திசையமைவாகும். முதல் ருஷ்யப் புரட்சியாளராகிய ஏ. ஐ. ராடிஷ்சேவ் இன்னொரு போக்காகிய மாற்றியமைக்கும் போக்கைத் துவக்கி வைத்தார். 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புரட்சிகர ஜனநாயகவாதிகளின் 'ரகசிய' திட்ட நகல்கள், டிசம்பரிஸ்டுகளின்* பரிசோதனைகள், என். பி. ஒகரியோவ், என். ஜி. செர்னிஷேவ்ஸ்கி, இன்னும் சிலரின் பரிசோதனைகள் ஆகியவை இப்போக்கில் அடங்கும்." (ஹேறாரெவ், 1981, பக்கம் 102.)

பண்ணையடிமை உரிமை மற்றும் ஏதேச்சாதிகாரத்திற்கு எதிராகப் போராடிய ஏ. ஐ. ராடிஷ்சேவ் (1749 — 1802), ருஷ்யா மாவட்டங்களாக பிரிக்கப்பட்டிருக்கும் முறை அலுவலக சடங்கு மனப்பாங்கின் அடிப்படையிலானது என்பதைச் சுட்டிக் காட்டி, விஞ்ஞான அடிப்படையில், தேசிய வளர்ச்சியின் நலன்களுக்காக இதை மாற்றியமைப்பது அவசியம் என்றார்.

பிரதேசமயப்படுத்தலின் மாற்றியமைக்கும் போக்குதான் 1815 — 1825இல் டிசம்பரிஸ்டுகளின் படைப்புகளுக்கு (பி. ஐ. பேஸ்டெல், என். எம். முரவியோவ் ஆகியோரின் திட்ட நகல்கள்) அடிப்படையாகத் திகழ்ந்தது, ஏனெனில் இவர்கள் ருஷ்யாவிற்கான ஒரு அரசியல் அமைப்பு சட்டத்தின் மீது நம்பிக்கை வைத்தனர், இப்படைப்புகள் சமூக அரசியல் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளின் தீர்விற்கு உதவ வேண்டியதாயிருந்தது. பேஸ்டெல் மத்தியத்துவக் கோட்பாட்டைப் பின்பற்றினார் என்றால், முரவியோவ் நாட்டின் சமஷ்டி அமைப்புக் கருத்தை முன்வைத்தார். என். பி. ஒகரியோவ் (1847) முன்வைத்த திட்டமும் நாட்டின் சமஷ்டி அமைப்புடன் தொடர்புடையதாயிருந்தது; இவர் ஜாரிச ருஷ்யாவின் மாவட்டங்களை "நிர்வாகக் கொள்ளையடிப்பு" மையங்கள் என்றார்.

19ஆம் நூற்றாண்டின் முதல் பாதியில் ருஷ்யாவை பிரதேசமயப்படுத்துவது சம்பந்தமான படைப்புகளில் டிசம்பரிஸ்டுகளின் முற்போக்கான மாற்றக் கருத்துகள் அடங்கியிருந்தன; இவை பண்ணையடிமை பொருளாதார முறையின் நெருக்கடியையும் முதலாளித்துவ பட்டறை முறையின் தோற்றத்தையும் — பிரதேச உழைப்புப் பிரிவினை ஆழமடைந்து, பிரதேசங்களின் பொருளாதாரத் தனித்துறைப்பாடு வலுவடைந்த சூழ்நிலையில் இது நடந்தது — பிரதிபலித்தன.

---

* **டிசம்பரிஸ்டுகள்** — பிரபுக்குலத்தைச் சேர்ந்த ருஷ்யப் புரட்சியாளர்கள், 1825இல் இவர்கள் எதேச்சாதிகாரம், பண்ணையடிமை முறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தனர். — ப-ர்.

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், நாட்டை பொருளாதார ரீதியாக பிரதேசமயப்படுத்தும் கருத்து பீட்டர்ஸ்பர்க் பல்கலைக் கழகத்தின் முன்னணி புவியியல் ஆசிரியர் கே. ஐ. அர்ஸேனியெவின் (1789 — 1865) படைப்புகளில் முழுமையாக வெளிப்பட்டது. **ருஷ்யாவின் புள்ளிவிவர சுருக்கம்** *(1848) என்ற தன் நூலில் இவர் இயற்கை மற்றும் பொருளாதாரக் குறியீடுகளின் மொத்தத்திற்கேற்ப 10 பிரதேசங் களைச் சுட்டிக் காட்டினார். ''தட்ப வெப்பநிலை, மண்ணின் தரம், இயற்கையின் படைப்புகள், மக்கள் ஈடுபட்டிருந்த தொழிற்துறை ஆகியவற்றில் ஒரு சில மாவட்டங்களுக்கு இடையிலான ஒற்றுமையைத் தான்'' பிரதேசமயப்படுத்தலுக்கான அடிப்படையாக இவர் பயன் படுத்தினார். அர்ஸேனியெவின் பிரதேசமயப்படுத்தும் திட்டம் ஆழ்ந்த விஞ்ஞான அடிப்படையைக் கொண்டிருந்ததால் இது கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்குத் தன் முக்கியத்துவத்தை இழக்காமலிருந்தது.*

19ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் ருஷ்யாவில் தொழிற் துறை முதலாளித்துவம் வளர்ச்சியடைந்து, பொது தேசிய மற்றும் பிராந்திய சந்தைகள் உருவான பொழுது பொருளாதார பிரதேசங் களின் பொருளாதாரத் தனித்துறைப்பாடும் பரஸ்பரத் தொடர்பும் மேன்மேலும் தெளிவாகத் தெரியலாயின. இக்காலகட்டத்தில் பிர தேசமயப்படுத்தும் முயற்சிகளில் சித்தரிப்பு அம்சங்கள் அளவுநிலை அம்சங்களுடனும் பொருளாதார நடவடிக்கைகளைப் பற்றிய பிராந் திய மதிப்புகளுடனும் மேன்மேலும் இணைந்து நின்றன. இக்கால கட்டத்தின் மிகப் பெரும் படைப்புகள் பிரபல ருஷ்ய விஞ்ஞானியும் சமூக நலப் பிரமுகரும், ருஷ்ய புவியியல் சங்க உதவித் தலைவருமான பி. பி. ஸெமியோனவ் தியான்ஷான்ஸ்கிக்கு (1827 — 1914) உரியவை. **பேரரசின் மக்கள்தொகை பங்கீட்டை நிர்ணயிக்கும் காரணங்களைப் பொறுத்து ஐரோப்பிய ருஷ்யாவின் மக்கள்தொகை** *(1871),* **ஐரோப்பிய ருஷ்யாவின் நிலவுடைமை மற்றும் மக்கள் வாழுமிடங்களின் புள்ளிவிவரங்கள்** *(1880) என்னும் இரண்டு முக்கிய நூல்களில் பிரதேசமயப்படுத்தலின் அடிப் படையாக இவர் எடுத்துக் கொண்டுள்ள குறியீடுகளைத் தொகுத்துப் பார்த்தால் பின்வரும் குறியீடுகளின் தொகுப்புகள் தெரிய வரும், இவை பல்தரப்பு அணுகுமுறையைப் பிரதிபலிக்கின்றன: இயற்கை அறிகுறிகள் (மண், மண்ணியல்), பொருளாதார அறிகுறிகள் (பண்ணை யமைப்பு, நிலப் பகிர்வு, முக்கியத் தானிய வகைகளின் மிதமிஞ்சிய நிலையும் பற்றாக்குறையும், தொழிற்துறை வளர்ச்சி மட்டம் இத்தி யாதி), மக்கள்தொகை இயல் அறிகுறிகள் (மக்கள்தொகையின் அடர்த்தி, தொழில் ரீதியில் மக்கள் நிலை), தேசிய இன அறிகுறிகள் இன்னபிற. இவ்வாறாக பி. பி. ஸெமியோனவ் தியான்ஷான்ஸ்கி ஆழ்ந்த விஞ்ஞான அடிப்படையுடன் 19 மாவட்டங்கள் அடங்கிய வரைபடத்தை முன்வைத்தார்; இத்துறையில் பின்னால் வெளிவந்த படைப்புகள் இந்த மாவட்டங்கள் புறவய ரீதியாக நிலவுவதை ஊர்*

ஜிதப்படுத்தின. உதாரணமாக, இவர் கருமண் அல்லாத மாஸ்கோ தொழிற்துறை பிரதேசம், மத்திய பயிர்சாகுபடி பிரதேசம், யுராலை ஒட்டிய பிரதேசம், வோல்கா ஆற்றோரமாக கீழ் வோல்கா பிரதேசம், குறிப்பிட்ட தேசிய இன சிறப்பியல்புகளைக் கவனத்தில் கொண்டு லித்துவேனிய மற்றும் பால்டிக் கடலோர பிரதேசங்கள் ஆகியவற்றைச் சுட்டிக் காட்டினார்.

பி. பி. ஸெமியோனவ் தியான்ஷான்ஸ்கி மேக்ரோ மட்டத்தில் பிரதேசமயத்தலோடு சேர்த்து, சிறுசிறு பொருளாதார பிரதேசமயப் படுத்தும் முறையை முன்வைத்தார், ''முக்கிய'' பிரதேசங்களைப் பற்றிய கள ஆராய்ச்சிகளைப் பயன்படுத்தினார். ஒய். ஜி. சாவுஷ்கின் குறிப்பிட்டபடி இது புதிய புவியியல் ஆராய்ச்சி முறையின் பிறப்பைக் குறித்தது.

மாபெரும் ருஷ்ய வேதியல் விஞ்ஞானியாகிய டி. ஐ. மென்டெலே யெவும் ருஷ்யாவை பிரதேசங்களாகப் பிரிப்பது சம்பந்தமாக சுவா ரசியமான கருத்துகளை விட்டுச் சென்றார். **ருஷ்யாவின் ஆலைத் தொழிற்துறையும் வர்த்தகமும்** *(1893)*, **ருஷ்யாவை அறிதல்** *(1906)*, **விவசாயத் தொழிற்துறை வளர்ச்சி பற்றிய சிந்தனைகள்** *(1899)* போன்ற நூல்களில் இவை அடங்கியுள்ளன. ருஷ்யாவின் பொருளாதாரத்தில் தொழிற்துறையின் பங்கு அதிகரித்துள்ளதைப் பிரதிபலிக்கும் முகமாக மென்டெலேயெவ், பெரும்பாலும் தொழிற்துறை, வர்த்தக, போக்கு வரத்து அறிகுறிகளுக்கேற்ப பிரதேசங்களைப் பிரித்தார் இவர் பிரதேசங்களின் இயற்கை வளங்கள், உழைப்புச் சக்தி, போக்குவரத்து தொடர்பு வசதிகள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவமளித்து ''பல்வேறு பொருளாதார அம்சங்களடங்கிய'' பிரதேசங்களைத் தனியாகப் பிரித்து முன்வைத்தார். சைபீரியாவின் பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினை கள் மீது மென்டெலேயெவ் பெரும் கவனம் செலுத்தினார். இவர் முன்வைத்த 19 பிரதேசங்களின் வரைபடம், பி. பி. ஸெமியோனவ் தியான்ஷான்ஸ்கியின் பிரதேசமயப்படுத்தும் முறையுடன் முக்கிய அம் சங்களில் ஒத்துப் போகிறது.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் புரட்சிக்கு முந்தைய காலகட் டத்தில் ருஷ்யாவில் பிரதேசமயப்படுத்தல் சம்பந்தமான பல படைப்பு கள் தொடர்ந்து வெளிவந்தன; இவை பெரும்பாலும் புவியியலர்கள், பொருளாதார நிபுணர்களால் எழுதப்பட்டவை. இவற்றில் முறையியல் அடிப்படையின் மீது பெரும் கவனம் செலுத்தப்பட்டது; கருத்தமைப்பு அம்சம் சற்றே பின்னுக்குத் தள்ளப்பட்டது.

இக்காலகட்டத்தில் ருஷ்யாவில் பிரதேசமயப்படுத்துவது பற்றிய படைப்புகள் முறையியல் ரீதியாக பிரெஞ்சு, ஜெர்மன், மற்ற மேற்கு ஐரோப்பிய விஞ்ஞானிகளின் படைப்புகளுக்கு நெருக்கமானவை. இவை பின்வருமாறு மூன்று பெரும் வகைகளாகப் பிரிக்கப்பட்டன: முதலாவ தாக, முற்றிலும் புள்ளிவிவர ரீதியாக, ஒரினத் தன்மையின்படி

பிரதேசமயப்படுத்தல்; இரண்டாவதாக, மையங்களுக்கேற்ப, பொருளாதார ரீதியான ஈர்ப்பிற்கேற்ப பிரதேசமயப்படுத்தல், இறுதியில், பொருளாதாரத் தொடர்புகள், போக்குவரத்து வசதிக்கேற்ற பிரதேசமயப்படுத்தல். உதாரணமாக, ஏ. எஃப். ஃபோர்துனாத்தவ் விவசாயப் பிரதேசங்களின் ஓரினத் தன்மைக் கோட்பாட்டைப் பின்பற்றினார். ஏ. ஐ. ஸ்குவர்த்ஸோவ் இயற்கை வரலாற்று சூழ்நிலைகளைப் பொருளாதார பிரதேசமயப்படுத்தலின் அடிப்படையாகக் கருதினார். ஏ. என். சேலின்த்ஸெவோ, பொருளாதார ரீதியான பிரதேசமயப்படுத்தல் அநேகமாக முழுக்க முழுக்க பொருளாதாரக் காரணிகளால் நிர்ணயிக்கப்படுகிறது என்றார். இவ்விஞ்ஞானிகள் ஒவ்வொரு குறிப்பிட்ட காரணியும் எவ்வளவு பரவியுள்ளது, வளர்ச்சியடைந்துள்ளது என்பதை அளவு ரீதியில் நிலைநாட்டும் குறியீடுகளை நன்கு ஆராய்ந்து உருவாக்கினர்; இன்றும் இது குறிப்பிட்ட முறையியல் முக்கியத்துவமுடையது.

புரட்சிக்கு முந்தைய சகாப்தத்தில் பிரதேசமயப்படுத்தும் துறையில் ருஷ்ய விஞ்ஞானம் பொதுவில் பெரும் சாதனைகளை அடைந்த போதிலும் குறைகளும் தவறுகளும் இருக்கத்தான் செய்தன. உதாரணமாக, புவியியல் இரண்டு கிளைகளாக — இவை மேன்மேலும் தனித்தனி கிளைகளாயின — பிரிந்ததையும், பொருளாதார புவியியலில் துறை ரீதியான புள்ளிவிவரப் போக்கு பெரிதும் வலுத்ததையும் குறிப்பிடலாம்; இது பிரதேசமயப்படுத்தும் பரிசோதனைகளில் நன்கு வெளிப்பட்டது. இன்னொரு கடைக்கோடிப் போக்கு புவியியல் நியதிவாதத்துடன் இணைந்தது, இதில் இயற்கை சூழ்நிலைகளுக்கு முக்கியப் பங்கு அளிக்கப்பட்டது.

வி. இ. லெனின் எழுதிய **ருஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி** *(1899)*, **பயிர்த் தொழிலில் முதலாளித்துவ வளர்ச்சி விதிகளைப் பற்றிய புதிய விவரங்கள்** *(1916)*, **விஞ்ஞான, தொழில்நுட்ப பணிகளின் திட்ட சுருக்கம்** *(1918)* போன்ற நூல்களும் கட்டுரைகளும் சோவியத் பொருளாதார புவியியல், குறிப்பாக பிரதேசமயப்படுத்தலின் தத்துவமும் நடைமுறையும் உருவாக பெரும் ஊக்கத்தை அளித்தன; மேற்கூறிய படைப்புகள் புவியியலும் பிரதேசமயப்படுத்தலின் முறையியலும் வளருவதற்குப் பெரிதும் முக்கியமானவை. பி. ஜேம்ஸ் இக்கட்டத்தை ''சோவியத் புவியியலின் லெனினிய கட்டம்'' என்றார்; இது மிகச் சரியாக கூறப்பட்டதாகும்.

ருஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி என்ற லெனினின் நூல் பொருளாதார பிரதேசமயப்படுத்தல் தத்துவத்திற்குப் பெரிதும் முக்கியமானது. இந்நூலில் லெனின் ஏராளமான திட்டவட்டமான விவரங்களின் அடிப்படையில் பண்டப் பொருளாதாரம் வலுவடைந்தது, முதலாளித்துவத்தின் வளர்ச்சி, பிரதேச ரீதியான உழைப்புப் பிரிவினை விரிவடைந்து ஆழமடைந்தது ஆகிய நிகழ்ச்சிப் போக்குகளின் ஒற்றுமையைச் சுட்டிக் காட்டினார், இது பொருளாதார பிரதேசங்களின்

தனித்துறைப்பாட்டுடன் தொடர்புடையது. ருஷ்யாவைப் பொருளாதார ரீதியாக பிரதேசமயப்படுத்துவது வி. இ. லெனினின் நோக்கங்களில் ஒன்றாயிருந்தது. இவர் முதலாளித்துவத்தின் வளர்ச்சியையும், உள்நாட்டு சந்தை உருவாவதையும் ஆராய்ந்த பொழுது பிரதேசப் பகுப்பாய்வு முறையைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்தினார்; உள்நாட்டு சந்தை உருவாகும் நிகழ்ச்சிப் போக்கில் பரிவர்த்தனைக்குள் வரும் பண்டங்கள் (அன்றாட வாழ்க்கைச் சாதனங்களிலிருந்து உற்பத்திச் சாதனங்கள், உழைப்புச் சக்தி வரை) அதிகரிக்கின்றன, இதில் பங்கேற்கும் நிலப்பரப்பு விரிந்து பரவுகிறது. இந்நிகழ்ச்சிப் போக்குகளின் பரஸ்பரத் தொடர்பையும், பிரதேச உழைப்புப் பிரிவினைப் போக்கில் பிரதேசங்களின் பரஸ்பரச் சார்புநிலை வலுப்படுவதையும் கோடிட்டுக் காட்டிய லெனின் பின்வருமாறு குறிப்பிட்டார்: ''ருஷ்யாவின் மத்தியப் பகுதியில் தொழிற்துறையின் வளர்ச்சியும் எல்லைப் புறங்களில் வர்த்தகப் பயிர்த் தொழிலின் வளர்ச்சியும் நெருங்கியத் தொடர்புடையவை, இவை பரஸ்பரம் தமக்கு சந்தைகளைத் தோற்றுவித்துக் கொள்கின்றன.''* லெனின் யூரால் மற்றும் நாட்டின் தெற்கு ஐரோப்பியப் பகுதியில் சுரங்கப் பிரதேசங்களின் பல்வேறு வளர்ச்சிப் பாதைகளைச் சுட்டிக் காட்டினார், வர்த்தகப் பயிர்த் தொழில் பிரதேசங்கள், தொழில்துறை சார்ந்த தனிப்பட்ட பயிர்கள் முக்கியமாகப் பரவியுள்ள பிரதேசங்கள், கறவை மாடுகள் பரவியுள்ள பிரதேசங்கள், விவசாயத் துறையின் புறநகர் தனித்துறைப்பாட்டு பிரதேசங்கள் போன்றவற்றைப் பிரித்துக் காட்டினார்.

1861இல் பண்ணையடிமை உரிமை ரத்து செய்யப்பட்ட பின் ருஷ்யாவில் முதலாளித்துவ வளர்ச்சியின் பிரதேச சாராம்சத்தை ஆராய லெனின் முதன்முதலாக மார்க்சியப் பகுப்பாய்வு முறையைப் பயன்படுத்தினார். பிரதேசங்களின் வளர்ச்சியில் சமூக பொருளாதாரக் கட்டமைவும் உற்பத்தி உறவுகளின் தன்மையும் எவ்வளவு முக்கியமானவை என்று இவர் காட்டினார். உதாரணமாக, ஒப்பீட்டளவில் குறைவான முதலீடுகளுக்கு நல்ல விளைச்சலைத் தர வல்ல வளம் மிகு மண்ணையுடைய கருமண் மண்டலத்தில் மிகவும் பின்தங்கிய பொருளாதார முறை பரவியிருந்தது என்பதை லெனின் குறிப்பிட்டார்; இம்முறையில் கைவேலை பரவலாகப் பயன்படுத்தப்பட்டது, ஊதியங்கள் குறைவானவையாக இருந்தன, தொழில்நுட்பம் எளிமையானதாயிருந்தது.

19ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்த ருஷ்யாவையும், 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்த அமெரிக்காவையும் உதாரணம் காட்டிய லெனின், சமூக பொருளாதார பிரதேசமயப்படுத்தல் என்பது ஒரு மிகச் சிக்கலான நிகழ்ச்சிப் போக்கு, இதில் சமுதாய நிகழ்ச்சிப் போக்கு

* V. I. Lenin, *Collected Works*, vol. 3, p. 257.

கள் அனைத்தும் இட ரீதியில் வெளிப்படுகின்றன என்பதை குறிப்பிட்டார். இவர் துறை ரீதியான மற்றும் பிரதேச ரீதியான உழைப்புப் பிரிவினைகளின் பிரிக்க இயலா ஒற்றுமையைச் சுட்டிக் காட்டினார், நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியின் பொது நிகழ்ச்சிப் போக்குகளை ஆராய்வதில் பிரதேச முறையைப் பயன்படுத்துவதன் அவசியத்தைக் குறிப்பிட்டார். சமூக பொருளாதார பிரதேசமயப்படுத்தலில் இக்கருத்துநிலைகளுக்குப் பெரும் முறையியல் முக்கியத்துவம் உண்டு.

1917இல் மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி வெற்றி பெற்ற பின் பிரதேசமயப்படுத்தல் சம்பந்தமான பணிகள் முற்றிலும் புதியதொரு கட்டத்தில் நுழைந்தன. வெறும் அறிதல் துறையிலிருந்து இவை திட்டமிட்டப் பொருளாதார வளர்ச்சியின், பின்தங்கிய விவசாய நாட்டை வல்லமை மிக்க தொழிற்துறை வல்லரசாக மாற்றும் சிக்கலான நிகழ்ச்சிப் போக்கின் விஞ்ஞான அடிப்படைகளில் ஒன்றாயின. புரட்சி நடைபெற்ற ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே —1918 ஏப்ரலில் — வி. இ. லெனின் **விஞ்ஞான தொழில்நுட்ப பணிகளின் திட்டக் குறிப்பு** என்ற பிரபல கட்டளையை அகில ருஷ்ய விஞ்ஞானப் பேரவைக்கு அனுப்பினார். இக்கட்டளையின் முக்கியக் கருத்துகளில் ஒன்று மிகக் குறைந்த செலவில் உயர்ந்தபட்ச உழைப்பின் உற்பத்தித் திறனை அடைவதாகும். முற்போக்கான தொழில்நுட்பம், தொழிற்துறை, போக்குவரத்து, பயிர்த்தொழிலை மின்சாரமயப்படுத்தல், இயற்கை வளங்களை அதிகபட்ச செயல்வன்மையோடு பயன்படுத்தும் நோக்கத்துடன் உற்பத்தியின் விவேகமான இட அமைப்பு ஆகியவை மேற்கூறிய லட்சியத்தை அடைவதற்கான முக்கிய வழிகளாகும் என்று அவர் கூறினார்.

பொருளாதாரத்தை மாற்றியமைக்கும் திட்டத்தைத் தீட்டுவதன் அவசியம் பற்றிக் குறிப்பிடும் பொழுது வி. இ. லெனின் பின்வருமாறு கோடிட்டுக் காட்டினார்: "இத்திட்டத்தில் பின்வரும் அம்சம் இடம் பெற வேண்டும் — மூலப்பொருள் அருகிலிருக்குமாறும், மூலப்பொருளைப் பதப்படுத்துவதிலிருந்து தயாரான பொருளைப் பெறும் வரை அரை தயாரான பொருட்களைப் பதப்படுத்தும் எல்லா கட்டங்களிலும் குறைந்தபட்ச உழைப்பு இழப்பு ஏற்படுமாறும் ருஷ்யாவில் தொழிற்துறை விவேகமாக இடம் பெற வேண்டும்."* எல்லா அடிப்படை தொழிற்துறை உற்பத்தியையும் வளர்த்து, பகைவர்களால் சூழப்பட்ட உலகின் முதல் சோஷலிச அரசிற்கு சகலவித மூலப்பொருட்களும் எரிபொருள், எரிசக்தி வளமும் சுயமாகக் கிட்டுமாறு செய்ய வேண்டியதன் அவசியத்தைப் பற்றி லெனின் குறிப்பிட்டார். இதில் எரிபொருளை எடுத்து இடம் மாற்ற மிகக் குறைந்த செலவுகளைச் செய்து மின்சக்தியைப் பெற "தரக் குறைவான" எரிபொருட்களை

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 27, p. 320.

(பீட் கரி, மற்ற தரக் குறைவான நிலக்கரி வகைகள்) பயன்படுத்துவது எவ்வளவு விவேகமானதாய் இருக்கும் என்று இவர் கோடிட்டுக் காட்டினார்.

சோவியத் ஆட்சியின் முதலாண்டுகள் மிகக் கடினமானவையாக இருந்தன; அப்பொழுது உள்நாட்டு யுத்தம் நடந்து கொண்டிருந்தது, பொருளாதாரம் சீர்குலைந்திருந்தது, மக்களோ பட்டினியால் வாடித் தவித்தனர். இச்சூழ்நிலையில், பிராந்திய அடிப்படையில் நாட்டின் துரிதமான சமூக பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டமிட தீவிர விஞ்ஞான நடவடிக்கைகள் ஆரம்பமாயின. கோயெல்ரோ கமிஷன் (1920), விஞ்ஞானப் பேரவையின் கீழிருந்த உற்பத்திச் சக்திகளின் ஆராய்ச்சி கவுன்சில் (1920), அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் மேற்பார்வை கமிஷன் (1920), அகில ருஷ்ய தேசியப் பொருளாதார கவுன்சிலின் பிரதேசமயப்படுத்தும் கமிஷன் (1921), சோவியத் திட்டக் கமிஷனின் பிரதேசமயப்படுத்தும் துணைக் கமிஷன் (1921), எம். ஐ. கலீனினின் தலைமையிலிருந்த அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் பிரதேசமயப்படுத்தும் கமிஷன் (1921 —1922) ஆகியவை இந்நடவடிக்கைகளில் பங்கேற்றன. நெருக்கமான பரஸ்பரத் தொடர்புகளைக் கொண்டிருந்த இக்கமிஷன்களுக்கு அதே நேரத்தில் விசேஷ கடமைகளும் அளிக்கப்பட்டிருந்தன; இதனால் பிராந்திய அடிப்படையில் நாட்டின் எதிர்கால வளர்ச்சித் திட்டத்தைத் தீட்டுதல் என்ற சிக்கலான, இது வரை முன்னர் தீர்க்கப்படாத பிரச்சினையைத் தீர்ப்பதில் பல்தரப்பு அணுகுமுறைக்கு வகை செய்ய முடிந்தது. அரசுப் பிரமுகர்கள், பொறியியலர்கள், பொருளாதார நிபுணர்கள், புவியியல் வல்லுனர்கள் போன்ற அறிவுத் துறையினரின் தலைசிறந்த பிரதிநிதிகள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்களிடம் துணிவான சிந்தனையும், பரந்த அரசு அணுகுமுறையும், கறாரான விஞ்ஞான அடிப்படையும் இருந்தன என்பது மேற்கூறிய கமிஷன்களின் பணிகளை ஆராயும் பொழுது தெரிகிறது.

1920ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்திலிருந்து குறுகிய காலகட்டத்தில் பொருளாதார பிரதேசமயப்படுத்தல் சம்பந்தமான புதிய கருத்தமைப்பு உருவாக்கப்பட்டது. இது ருஷ்யாவை மின்சாரமயப்படுத்துவது சம்பந்தமான உலகின் முதல் நீண்டகால பிராந்திய திட்டம், தேசிய பொருளாதார வளர்ச்சிக்கான முதல் ஐந்தாண்டு திட்டம், நாட்டின் நிர்வாகப் பிரதேச அமைப்பை மாற்றியமைத்தல் ஆகியவற்றின் விஞ்ஞான அடிப்படையாகியது. ருஷ்யாவை பிரதேசமயப்படுத்தல் சம்பந்தமாக புரட்சிக்கு முன் நடத்தப்பட்ட பரிசோதனைகள், பரவலாகச் சேகரிக்கப்பட்டு வகைப்படுத்தப்பட்ட விவரங்கள் (பிரதேசமயப்படுத்தல் சம்பந்தமாக மேற்கே உருவாக்கப்பட்ட கருத்தமைப்புகளின் பகுப்பாய்வும் இவற்றில் அடங்கும்) ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கூறியவை அமைந்தன.

கோயெல்ரோ திட்டத்தின் சாரம் இதுதான்: ருஷ்யாவை மின்சார மயப்படுத்த வேண்டும், இதன் அடிப்படையில் பல்வேறு பிரதேசங்களின், நாடு முழுவதன் பொருளாதார, சமூக வளர்ச்சியை உயர்த்த வேண்டும். கோயெல்ரோ திட்டத்திற்கு அதி முக்கியத்துவம் வழங்கி வி. இ. லெனின் இதைப் பற்றி ஜி. எம். கிரிஜானோவ்ஸ்கிக்கு பின்வருமாறு எழுதினார்: ''அதை இப்போதே, கண்களில் படும்படி, புரியும்படி, மக்கள் திரளினருக்குத் தெளிவானதாய், அவர்களைக் கவரக் கூடிய வகையில் (முற்றிலும் விஞ்ஞான அடிப்படையில்) தர வேண்டும்: வேலையில் இறங்குங்கள், 10–20 ஆண்டுகளில் ருஷ்யா முழுவதையும், இதன் தொழிற்துறையையும் பயிர்த்தொழிலையும் மின் மயப்படுத்துவோம் என்று கூற வேண்டும்.'' *

பொருளாதார வளர்ச்சியின் எரிசக்திக் கோட்பாடு இதன் பிராந்திய அடிப்படையை முன்னனுமானிக்கிறது என்பது ஆரம்பம் முதலே தெளிவாகியது; திட்டமிடப்பட்ட மின்நிலையங்கள் பொருளாதார பிரதேசங்களின் எரிசக்தி உட்கருக்களாக, இவற்றின் பொருளாதாரத்தைத் தொழில்நுட்ப ரீதியாக மாற்றியமைப்பதன் அடிப்படையாகக் கருதப்பட்டன. ஆதார மின்நிலையங்கள் பற்றிய விஞ்ஞான பூர்வமான வரைபடத்தைத் தான் எதிர்பார்ப்பதாயும், இதில் மைய மின்சார நிலையங்கள் எந்த பிரதேசங்களுக்கு மின்சாரத்தை வழங்குகின்றன என்பதும், இங்கே என்ன மாதிரியான தொழிற்துறை இருக்கும் என்பதும், இந்தப் பிரதேச மின்நிலையங்களுடன் வேறென்ன இணைக்கப்பட்டுள்ளன என்பதும் தெட்டத்தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டுமென்றும் கிரிஜானோவ்ஸ்கியுடன் நடத்திய உரையாடலில் வி. இ. லெனின் குறிப்பிட்டார்.

ருஷ்யாவை மின்சாரமயப்படுத்துவது பற்றி 8ஆவது அகில ருஷ்ய சோவியத்துகளின் காங்கிரசிற்கு அளிக்கப்பட்ட அதிகாரப் பூர்வமான அறிக்கையில் (1920) இதன் நீண்ட காலத் தன்மையும், பிராந்திய எரிசக்தி வளர்ச்சிக் கோட்பாடும், பரவலான கூட்டு அணுகுமுறையும் கோடிட்டுக் காட்டப்பட்டிருந்தன. பிரதேச மின்நிலையங்கள் புதிய தொழிற்துறை, கலாசார மையங்களாக வளர வேண்டும், இவைதான் முற்றிலும் புதிய தொழிற்துறை, புவியியல் வரைபடத்தை உருவாக்க வேண்டும்.

பிரதேசமயப்படுத்தல் தொடர்பான ஒரு சில முக்கியக் கோட்பாடுகள் கோயெல்ரோ திட்டத்தில் இடம் பெற்றுள்ளன; இவை 70 ஆண்டுகளுக்குப் பின் இன்றும் தம் அடிப்படை முக்கியத்துவத்தை இழக்கவில்லை. பெரும் பொருளாதார பிரதேசங்களின் ஒப்பீட்டளவிலான பொருளாதார சுதந்திரம், பிரதேச உழைப்புப் பிரிவினை ஆழமடைவதன் பின்னணியில், பிரதேசங்களின் பரஸ்பர சார்பு நிலையும் இவற்றின் ஒத்துழைப்பும் வலுப்படுவதன் பின்னணியில் ஸ்தல வளங்களையும்

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 35, pp. 435, 436.

வாய்ப்புகளையும் அதிகபட்சம் பயன்படுத்தல் ஆகியவை மேற்கூறிய கோட்பாடுகளில் அடங்கும்.

கோயெல்ரோ திட்டம், பிராந்தியத் திட்டமிடலின் முக்கியக் கடமையை (குறைந்தபட்ச உற்பத்தி செலவில், அதிகபட்ச பயனோடு பிரதேச வளங்களை விவேகமாகப் பயன்படுத்துவதை) பிரதிபலித்தது. இதில் தூரத்தைப் பொருளாதார ரீதியாகக் குறைப்பதற்கு, இதற்காகும் செலவைக் குறைப்பதற்குப் பெரும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இவ்வாறாக, உற்பத்தியை மின்சாரமயப்படுத்தல், போக்குவரத்தை விரிவுபடுத்தி பெரிதாக்குதல், பொருளாதார ரீதியான பிரதேசமயப் படுத்தல் ஆகிய மூன்று முக்கியக் கருத்துகள் கோயெல்ரோ திட்டத்தில் அங்கக ரீதியில் பரஸ்பரம் தொடர்பு கொண்டுள்ளன.

கோயெல்ரோ திட்டம்தான் பிராந்தியப் பொருளாதார வளர்ச்சியைப் பற்றிய உலகின் முதல் நீண்ட காலத் திட்டமாகும்; இதற்கு மறுக்க இயலா வரலாற்று முக்கியத்துவம் உண்டு. அதே நேரத்தில் இதுதான் தீட்டப்பட்ட காலத்தின் விசேஷத் தன்மையையும் நாட்டின் முன் வைக்கப்பட்ட கடமைகளின் சிறப்பியல்பையும் பிரதிபலிப்பது இயற்கையே. உதாரணமாக இதில், எவ்வளவு பிரதான எரிசக்தி மையங்களைத் தோற்றுவிக்க திட்டமிடப்பட்டிருந்ததோ அவற்றிற் கேற்ப எட்டு பெரும் பிரதேசங்கள் மட்டுமே அடங்கியிருந்தன. கிழக்கு சைபீரியா மற்றும் தொலை கிழக்கின் பரவலான பிரதேசங்களும் ''ஐரோப்பிய ருஷ்யா மற்றும் கிரீமியா தீபகற்பத்தின் மேற்கு எல்லையோர மண்டலமும்'' கவனத்தில் கொள்ளப்படவில்லை. உள்நாட்டு யுத்தமும் அழிவும் பொருளாதார வளர்ச்சித் திட்டத்தைத் தீட்டுவதன் மீது தம் தாக்கத்தைச் செலுத்தின.

*1921 — 1923*இல் அரசுத் திட்டக் கமிஷனின் பணி கோயெல்ரோ திட்டக் கருத்துகளின் நேரடித் தொடர்ச்சியாக விளங்கியது. அரசுத் திட்டக் கமிஷன் மிகக் குறுகிய காலகட்டத்தில் ஏராளமான நடைமுறை விவரங்களையும் பிரதேசமயப்படுத்துவது தொடர்பான கருத்தமைப்புகளையும் ஆராய்ந்தது.

ஒரு பிரதேசத்தின் வளர்ச்சியில் அதன் பொதுவான வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிப்பதா அல்லது குறிப்பிட்ட ஏதாவதொரு தனித் துறைக்கு முன்னுரிமை அளிப்பதா என்ற பிரச்சினை சிக்கலானதாயிருந்தது. இந்த இரண்டையும் இயந்திரகதியாக ஒன்றிற்கு எதிராக மற்றதை வைப்பது கூடாது என்று முடிவு செய்யப்பட்டது. இயற்கை பொருளாதார வளங்களைப் பயன்படுத்தி உழைப்பின் அதிகபட்ச உற்பத்தித் திறனை அடைவதுதான் முக்கியக் கடமையாகும். ஒரு புறம், எந்தத் துறைகளின் வளர்ச்சிக்கு ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் ஈடு இணையற்ற, நல்ல வாய்ப்புகள் உள்ளனவோ அந்தத் துறைகளில் அரசு தழுவிய அளவில் தனித்துறைப்பாடு இதிலடங்கும். மறு புறம், பிரதேசத்தின் அதிகபட்சம் விவேகமான பொருளாதார ரீதியான

''இறுதி வடிவமும்'' தேவை; அதாவது எந்தப் பண்டங்களின் உற்பத்தி அங்கே பொருளாதார ரீதியில் ஆதாயமானதோ அந்தப் பண்டங்களில் அதிகபட்ச சுயபூர்த்தி தேவை.

ஆக, அரசுத் திட்டக் கமிஷனின் வேலைப் போக்கில் பொருளாதார ரீதியான பிரதேசமயப்படுத்தலின் இரண்டு முக்கியக் கோட்பாடுகள் — தனித்துறைப்பாடு, சுயபூர்த்தி — உருவாக்கப்பட்டன. இரண்டையும் நிர்ணயிக்க, பிரதேச வளங்களைப் பரிபூரணமாக ஆராய்ந்து மதிப்பிட வேண்டும், கணக்கெடுக்க வேண்டும்.

இயற்கை வளங்களை ஆராய்வதன் மீது முக்கியக் கவனம் செலுத்தப் பட்டது. ஏராளமான இலாக்கா ஆராய்ச்சிகள், தனிப்பட்ட நபர்களின் படைப்புகள், விஞ்ஞானப் பேரவையில் இருந்த விவரங்கள் ஆகியவற்றை அரசுத் திட்டக் கமிஷன் சேகரித்தது. ஸ்தல விவரங்கள், குறிப்பாக பொருளாதார ரீதியாக வளர்ச்சி குன்றிய பகுதிகளை (அன்று கஸாக்ஸ்தான், மத்திய ஆசியா, சைபீரியா ஆகியவை இவ்வாறு பின்தங்கி யிருந்தன) பற்றிய விவரங்கள் பெரிதும் மதிப்புள்ளவையாக விளங் கின. இயற்கை வளங்கள், நவீன தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார விவரங்களின் நோக்கு நிலையிலிருந்து ஆராயப்பட்டன; இது சில சமயங் களில் அந்தந்த துறைகளின் வளர்ச்சியில் புதிய வடிவங்களை உருவாக்க உதவியது. பிரதேச ரீதியில் இயற்கை வளங்கள் எப்படியுள்ளன என்ற தகவல்களின் அடிப்படையில் அரசுத் திட்டக் கமிஷன் ஒவ்வொரு பிரதேசத்தின் உற்பத்தி வளர்ச்சி திட்டத்தையும் ஒரு முழு கூட்டுப் பொருளாதாரமாகத் தீட்டியது.

அதே நேரத்தில் பிரதேச வளர்ச்சியின் வரலாற்றுப் போக்கு, பிரதேசங்களின் நிகழ்கால, எதிர்கால வளர்ச்சிப் போக்குகளின் மீது கடந்த காலத்தின் தாக்கம், பிரதேசங்களுக்கு இடையிலான தொடர்பு களின் மீது கடந்த காலத்தின் தாக்கம் ஆகியவற்றை ஆராயவும் பெரும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அரசுத் திட்டக் கமிஷனின் சாஸ்திரியப் படைப்பில் (1921) திட்டமிடலுக்கான பொருளாதார பிரதேசமயப்படுத்தலின் முக்கிய முறையியல் கருத்துநிலைகள் முதன் முதலாக முன்வைக்கப்பட்டன.

நாட்டின் முக்கிய பிரதேசங்களைத் தனியாகப் பிரித்து சுட்டிக் காட்டும் கடமை அரசுத் திட்டக் கமிஷனின் முன் நின்றது. தேசியப் பொருளாதாரத்தில் ஒரு குறிப்பிட்ட துறையின் வளர்ச்சி திட்டம் தீட்டப்பட்ட பொழுது பிரதான உட்பிரிவுகள் சம்பந்தமான திட்டங் கள் தீட்டப்பட்டதைப் போன்றே, நாட்டின் பரப்பும் முதலில் பெரிய, பிரதான பிரதேசங்களாயும் இவற்றின் பொருளாதார மையங்களாயும் பிரிக்கப்பட்டது. பிரதேசங்களின் எல்லைகள் வரைபடங்களில் நிர் ணயிக்கப்பட்டன. இவற்றைத் துல்லியமாக்குவதும் இவற்றைத் துணைப் பிரதேசங்களாகப் பிரிப்பதும் அடுத்த கட்டத்திற்கு ஒதுக்கப்பட்டன.

''உட்கருக்களை'', அருகில் உள்ள பிரதேசங்களின் ஈர்ப்பு மையங்

களை ஏற்படுத்துவதிலிருந்து பிரதேசமயப்படுத்தல் ஆரம்பமானது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பெரிய நகரங்கள் — முக்கியத் தொழிற்துறை மையங்கள் — இப்படிப்பட்ட உட்கருக்களாகத் திகழ்ந் தது இயற்கையே. மாஸ்கோவின் தலைமையிலான மத்தியத் தொழிற் துறைப் பிரதேசம் மற்றும் இதன் வளர்ச்சி வாய்ப்புகள் பற்றிய அறிக்கை திட்டவட்டமான பிரதேசங்களைப் பற்றிய அறிக்கைகளில் முதலா வதாக இருந்தது தற்செயல் அல்ல. நாட்டின் ஐரோப்பியப் பகுதியில் இப்பிரதேசம் பிரிக்கப்பட்டது முக்கியமானதென்றும் இதன் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட பின் ''மற்ற பிரதேசங்கள் பிரிக்கப்படும்'' என்பதும் நியாயமானதாகக் கருதப்பட்டது. ஒவ்வொரு பெரிய பொருளாதார பிரதேசமும் பல்வேறு அம்சங்களின் ஒற்றுமையாகத் திகழ வேண்டும், அதாவது இவற்றின் அடிப்படையில் கூட்டான, பரஸ்பரத் தொடர் புடைய ஐக்கிய பொருளாதாரத்தைத் தோற்றுவிக்க வல்ல பல்வேறு வளங்களைப் பெற்றிருக்க வேண்டும் என்பது கோடிட்டுக் காட்டப் பட்டது.

இந்த முதல் பொருளாதார பிரதேசத்தைப் பற்றிய அரசுத் திட்டக் கமிஷனின் அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: ''ஒரு ஐக்கிய பொருளாதார திட்டத்தைத் தீட்டுவதுதான் நமது கடமையாகும். இதற்குப் பொருளாதாரத்தில் தனிப்பட்ட துறைகளைப் பகுப்பாய்வு செய்ய வேண்டும்; அதே பொழுது இவை ஏதோ மாற்றமற்ற நிரந்தரத் துறைகள் அல்ல, இவற்றின் உண்மையான முக்கியத்துவம் இவற்றின் இணைப்பில்தான் வெளிப்படும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். பொருளாதாரத்தை மொத்தமாக எடுத்துக் கொண்டு, நாட்டை பொருளாதார ரீதியில் தனித்தனி பிரதேசங்களாகப் பிரிக்க வேண்டும், இவை ஒவ்வொன்றிற்கும் விசேஷமான பொருளாதாரத் திட்டத்தைத் தனித்தனியே தீட்ட வேண்டும்.... நமது பிரதான பிரதேசத்திற்கு மத்திய தொழிற்துறைப் பிரதேசம் என்ற பெயரைத் தராமல் வெறு மனே மத்திய பிரதேசம் என்ற பெயரைத் தருகின்றோம்; இதன் மூலம், பிரதேசம் கூட்டான ஒன்று என்ற அம்சம் முன்வைக்கப்படுகிறது.... வெவ்வேறான பிரதேசங்களை ஒரு பொருளாதார முழுமையாக இணைப்பதுதான் நமது கடமையாகும்.''

அரசுத் திட்டக் கமிஷன் பிரித்தமைத்த இன்னொரு பிரதேசம் தெற்கு சுரங்கத் தொழில் பிரதேசமாகும்; நாட்டின் பிரதான நிலக் கரி, உலோகத் துறை தளமாகிய தன்பாஸ் இதிலடங்கும். பிரதேச மயப்படுத்தல் கமிஷனின் தலைவராகிய ஐ.ஜி.அலெக்சாந்திரவ் தானே இந்தப் பிரதேசத்தை விசேஷமாக ஆராய்ந்தார்; இந்தக் குறிப்பிட்ட ஆராய்ச்சியின் பொழுதுதான் இவர் பல முக்கிய தத்துவார்த்த முடிவு களுக்கு வந்தார். தேசியப் பொருளாதாரத்தின் தனிப்பட்ட துறை களை சரிவர இணைத்து, ஸ்தல நலன்களை வெளிப்படுத்துவதற்காக தேசியப் பொருளாதாரம் முழுவதன் நோக்கு நிலையிலிருந்து பார்க்குந்

5–1339

காலை பிரதேசமயப்படுத்தல் அவசியம் என்று தெற்கு சுரங்கத் தொழிற்துறை பிரதேசத்தைப் பற்றிய அறிக்கையில் மீண்டும் கோடிட்டுக் காட்டப்பட்டிருந்தது. பிரதேசமானது ஒரே முழுமையான உற்பத்தி இணையமாகத் திகழ வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. இதன் எல்லைகளை வரையறுக்கும் பொழுது போக்குவரத்து தொடர்புகள் முக்கியக் குறியீடுகளில் ஒன்றாகும் என்பது நிலைநாட்டப்பட்டது. உதாரணமாக, தெற்கு சுரங்கத் தொழிற்துறை பிரதேசத்திற்கும் அருகேயுள்ள தென் கிழக்கு பிரதேசங்களுக்கும் இடையிலான எல்லை ''போக்குவரத்து சந்திப்பின்'' வழியே இடப்பட்டது.

அன்று மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்த நாட்டின் ஆசியப் பகுதியை பிரதேசமயப்படுத்திய பொழுது இயற்கை சூழ்நிலைகளுக்கும் சிறப்பியல்புகளுக்கும் பெரும் முக்கியத்துவம் வழங்கப்பட்டது. என்றாலும் நாடு பூராவும் பிரதேசங்களைப் பிரிக்க உற்பத்தித் தன்மைதான் — நாடு தழுவிய அளவில் தனித்துறைப்பாடும், பல்வேறான துறைகளின் அதிகபட்ச உள் இணைப்பும், பொருளாதார ரீதியாக விவேகமான சுய பூர்த்தியும் — முக்கிய அளவுகோலாக விளங்கியது.

1921ஆம் ஆண்டு மே முதல் செப்டெம்பர் வரை அரசுத் திட்டக் கமிஷனின் விசேஷ கமிட்டி தீவிரமாகச் செயல்பட்டதன் பயனாய் நாட்டின் பொருளாதார பிரதேசங்களைப் பற்றிய புதிய வரைபடம் தயாரானது. நாட்டை 21 பெரிய பொருளாதார பிரதேசங்களாகப் பிரிக்குமாறு அரசுத் திட்டக் கமிஷன் முன்மொழிந்தது; இவற்றில் 8 பிரதேசங்கள் பொருளாதார ரீதியில் பின்தங்கிய பரந்த ஆசியப் பகுதியிலும், 13 பிரதேசங்கள் ஒப்பீட்டளவில் பொருளாதார வளர்ச்சியடைந்த ஐரோப்பியப் பகுதியிலும் இருந்தன. இப்பிரதேசங்கள் நாட்டின் ஒரே தேசியப் பொருளாதார உறுப்பின் உட்பிரிவுகளாகக் கருதப்பட்டன. அரசுத் திட்டக் கமிஷனின் அறிக்கையில் முதன்முதலாக முழுமையான, முறைப்படுத்தப்பட்ட வடிவத்தில் பிரதேசமயப்படுத்தலின் விஞ்ஞான அடிப்படைகள் இடம் பெற்றிருந்தன, இந்நிகழ்ச்சிப் போக்கின் முக்கிய கட்டங்கள் சுட்டிக் காட்டப்பட்டிருந்தன. இக்கட்டங்களுக்கு தத்துவார்த்த முக்கியத்துவம் மட்டுமின்றி நடைமுறை முக்கியத்துவமும் உள்ளதால் இங்கு மேற்கோள் காட்டுவது உகந்ததாயிருக்கும். அரசுத் திட்டக் கமிஷனின் அறிக்கையில் பிரதேசமயப்படுத்தலின் பின்வரும் கட்டங்கள் சுட்டிக் காட்டப்படுகின்றன: ''பொருளாதார பிரதேசத்தைப் பிரிப்பதில் முதல் கட்டம் பிரதேசத்தின் முக்கியத் தனித்துறைப்பாட்டை நிர்ணயிப்பதாகும், இதன் அடிப்படையில் பிரதேசத்தின் தோராயமான எல்லைக்கோடுகள் நிலைநாட்டப்படுகின்றன; இப்பிரதேசத்தினுள் இது தேர்ந்தெடுத்த முக்கியத் துறைக்கு அவசியமான வளங்கள் அதிகபட்ச எண்ணிக்கையில் இருக்க வேண்டும். இத்தோடு இணையாக பிரதேசத்தில் உள்ள மக்கள், அவர்களின் தேர்ச்சி, புவியியல் மற்றும் இயற்கை சூழ்நிலைகள், உற்பத்திச்

சாதனங்கள் ஆகியவை ஆராயப்படுகின்றன; இவற்றின் அடிப்படையில், தேர்ந்தெடுக்கப்பட்ட விசேஷ துறை சரியானதா என்று சோதிக்கப்படுகிறது, மற்ற துறைகளும் பொதுவான கூட்டுத் தொடர்பும் ஏற்படுத்தப் படுகின்றன.

"இரண்டாவது கட்டத்தில் பிரதேசத்தின் எரிசக்தித் துறையுடன் உள்ள போக்குவரத்துத் தொடர்பு சூழ்நிலைகளைப் பற்றிய ஆராய்ச்சி, மின்நிலைய கட்டுமானத் திட்டங்கள், புதிய பாதைகளைத் திட்டமிடுவது ஆகியவை அடங்கும்.

"இந்தப் புதிய முன்மொழிவுகள் நீர் சக்தியைப் பயன்படுத்துவது, நீர்ப்பாசனம் போன்றவற்றுடன் இணைக்கப்படுகின்றன. இதனுடன் இணையாக பிரதேசத்தின் கடந்த கால சரக்குப் புழக்கமும் எதிர் காலத் திட்ட சரக்குப் புழக்கமும் ஆராயப்படுகின்றன; இதன் அடிப்படையில் இதற்கும் மற்ற பிரதேசங்களுக்கும் உள்ள பரஸ்பரத் தொடர்புகள் நிலைநாட்டப்படுகின்றன.

"உள் பிரதேசமயப்படுத்தலின் விசேஷ முக்கியத்துவம் வாய்ந்த உற்பத்தி மையங்களைப் பற்றிய ஆராய்ச்சி மூன்றாவது கட்டமாகும்; இதுவும் பொருளாதாரக் கோட்பாடுகளின் அடிப்படையில் நிறைவேற்றப்பட வேண்டும்.

"இறுதியில், பிரதேசங்களின் உற்பத்தி நடவடிக்கைத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன, இவை பொது அரசுத் திட்டத்துடன் இணைக்கப்படுகின்றன. பல்வேறு பிரதேசங்களுக்கும் நாடு முழுவதற்கும் தேவையான பொருளாயத, மதிப்பு சமன்பாடுகளை எந்த வரிசை கிரமத்தில் உருவாக்குவது என்பது நிலைநாட்டப்பட்டுள்ளது."

பிரதேசமயப்படுத்தல் சம்பந்தமாக அரசுத் திட்டக் கமிஷனின் துணைக் கமிட்டி முன்வைத்த ஆலோசனைகளில் பெரும் பகுதி 1921 இலையுதிர்க் காலத்தில் சோவியத் அரசாங்கத்தால் ஆமோதிக்கப்பட்டது. என்றாலும் பொருளாதார பிரதேசங்கள் பற்றிய புதிய வரைபடம் உடனடியாக ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை. பொருளாதார ரீதியான பிரதேசமயப்படுத்தலின் பொழுது பல்வேறு தேசிய இன (மொழிவாரி) குடியரசுகள், பிராந்தியங்களின் எல்லைகள் முழுமையாக கணக்கில் கொள்ளப்படாததுதான் இதற்கான முக்கியக் காரணமாகும்.

சோவியத் ஆட்சியின் முதல் நாட்களிலிருந்தே தேசிய இன (மொழி) பிரச்சினை மிக முக்கிய சமூக பொருளாதார, அரசியல் காரணிகளில் ஒன்றாகக் கருதப்பட்டது. திட்டமிடலுக்காக முன்மொழியப்பட்ட பிரதேசமயப்படுத்தல் வரைபடம் தேசிய இன நலன்களைப் பாதித்ததால், இது பற்றிய இறுதி நகலை உருவாக்கும் பணி பிரபல சோவியத் தலைவர்களில் ஒருவராகிய எம். ஐ. கலீனின் தலைமையிலான விசேஷ அரசாங்க கமிஷனுக்கு அளிக்கப்பட்டது. இக்கமிஷனில் ஐ. ஜி. அலெக்சாந்திரவும், பிரதேசமயப்படுத்தல் தொடர்பான முந்தைய பணிகளில் ஈடுபட்டிருந்தவர்களும் இடம் பெற்றிருந்தனர், இதனால் இவ்வளவு

பொறுப்பான பிரச்சினையின் ஆராய்ச்சியில் தொடர்ச்சி இருந்தது.

மீண்டும் ஏற்படுத்தப்பட்ட அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி கமிஷனின் பணி (1921 நவம்பர் — 1922 பிப்ரவரி) அரசுத் திட்டக் கமிஷன் பணிகளின் நேரடித் தொடர்ச்சியாய் இருந்தது. பொருளாதார ரீதியான பிரதேசமயப்படுத்தலுக்கும் தேசிய இன எல்லைகளுக்கும் இடையிலுள்ள தொடர்பைப் பற்றிய பிரச்சினை இக்கட்டத்தில் மையப் பிரச்சினையாகியது. பொருளாதார ரீதியான பிரதேசமயப் படுத்தல் மற்றும் நிர்வாகப் பிரிவின் தொடர்பிற்கும் பின்தங்கிய பகுதிகளை உயர்த்துவதில் தொழிற்துறை மையங்கள்; பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த பிரதேசங்களுக்கு உள்ள தீர்மானகரமான பங்கிற்கும் விசேஷ கவனம் செலுத்தப்பட்டது.

திட்டமிடுவதற்காக ஏற்கெனவே உருவாக்கப்பட்ட பொருளாதார பிரதேசமயப்படுத்தலின் முக்கியக் கோட்பாடுகளை அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் கமிஷன் முற்றிலுமாக ஊர்ஜிதப்படுத்தியது. பொருளாதார பிரதேசமயப்படுத்தல் பற்றிய இதன் ஆய்வுரைகளில் மூலச் சிறப்புள்ள வரையறுப்பு தரப்பட்டது: ''பொருளாதாரக் கோட்பாடுதான் பிரதேசமயப்படுத்தலின் அடிப்படையாக இருக்க வேண்டும். இயன்ற அளவிற்குப் பொருளாதார ரீதியாக முடிவு பெற்ற, தனியான பரப்புதான் பிரதேசமாக விளங்க வேண்டும்; இது தன் இயற்கைச் சிறப்பியல்புகள்; கடந்த காலத்தின் கலாசார செல்வம், உற்பத்தி நடவடிக்கைக்கான மக்களின் தயார்நிலை ஆகியவற்றின் இணைப்பால் தேசியப் பொருளாதாரம் என்ற பொதுச் சங்கிலித் தொடரில் ஒரு அங்கமாக விளங்க வேண்டும்... இவ்வாறாக பிரதேசமயப்படுத்தலானது, இயற்கை வளங்கள், மக்களின் தொழிற் பாரம்பரியங்கள், முந்தைய கலாசார மதிப்புகள், புதிய தொழில்நுட்பம் ஆகியவற்றிற்கு இடையே நெருக்கமான தொடர்பை ஏற்படுத்தி, மிகச் சிறந்த உற்பத்தி இணைப்பை அடைய உதவுகிறது; இதில் ஒரு புறம், தனிப்பட்ட பிரதேசங்களின் இடையே விவேகமான உழைப்புப் பிரிவினை நடைபெறுகிறது, மறு புறம் பிரதேசமானது பெரும் கூட்டுப் பொருளாதார அமைப்பாக அமைக்கப்படுகிறது, இதனால் நல்ல பயன் கிட்டுவது தெளிவு.'' (**பொருளாதார பிரதேசமயப்படுத்தலின் பிரச்சினைகள்**, பக்கங்கள் 102 —103.)

திட்டமிடுதலுக்கான பிரதேசமயப்படுத்தலின் பொழுது பல்வேறு பகுதிகளின் தேசிய இன சிறப்பியல்புகளை அதிகபட்சம் முழுமையாக கணக்கில் கொள்ளும் வாய்ப்பை வரையறுத்தது அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி கமிஷனின் முற்றிலும் புதிய, முக்கியமான பிற்சேர்க்கையாக விளங்கியது. கமிஷனின் ஆய்வுரைகளில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: ''நமது அரசியல் சாசனம், தேசிய இனக் கொள்கையின் பொது நோக்கம் ஆகியவற்றிற்கேற்ப, ருஷ்ய சமஷ்டிக் குடியரசில் உள்ள எல்லா தேசிய இனங்கள், பழங் குடியினர் ஆகியோரின் அன்றாட

வாழ்க்கை, கலாசாரம், பொருளாதார நிலையில் பொருளாயத, ஆன்மீக வளர்ச்சிக்கு உதவும் வடிவத்தில் பிரதேசமயப்படுத்தலின் பொருளாதாரக் கோட்பாடு வெளிப்படுத்தப்பட வேண்டும்.'' (அதே நூல், பக்கம் 103.)

ஏராளமான விவரங்களின் ஆராய்ச்சி, ஸ்தல பிரதிநிதிகளுடன் நடத்தப்பட்ட ஆலோசனைகள், பல்வேறு விவாதங்கள் ஆகியவற்றின் பயனாய் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் பிரதேசமயப் படுத்தல் கமிஷன் கோட்பாட்டு ரீதியாக முக்கியமான புதிய கருத்து நிலைகளை முன்வைத்தது. ''அரசுப் பிரிவு பொருளாதார ஆதாயம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்துள்ளது'' என்பதை ஊர்ஜிதப்படுத்திய கமிஷன் அதே நேரத்தில் பின்வரும் மிக முக்கிய கருத்துநிலையை—இது சோவியத் யூனியனைப் பொறுத்த மட்டில் மாற்றப்படத்தகாதது ஆகும்—தெளிவுபடுத்தியது. அதாவது, ''பொரு ளாதார பிரதேசங்கள் உருவாக்கப்படும் பொழுது தேசிய இனக் குடி யரசுகள், பிராந்தியங்களின் எல்லைகள் குலைக்கப்படா; சிறியவை துணைப் பிரதேசங்களாகும், பெரியவை சுயமான பிரதேசங்களாகத் திகழும், மிகப் பெரியவை ஒரு சில பிரதேசங்களைத் தம்முள் அடக்கி யிருக்கும்''. உதாரணமாக, ருஷ்ய சமஷ்டிக் குடியரசு, உக்ரேய்ன், கஸாக்ஸ்தான் ஆகியவை சில பொருளாதார பிரதேசங்களாகப் பிரிக் கப்பட்டுள்ளன. நடுத்தர அளவையுடைய குடியரசு—பைலோருஷ்யா—சுயமான பிரதேசமாக கருதப்படுகிறது. சிறிய தேசிய இனக் குடியரசு களும் சுயாட்சிக் குடியரசுகளும், மற்ற தேசிய இன அமைப்புகளும் ஒரு பொருளாதார பிரதேசமாக இணைக்கப்படுகின்றன. உதாரணமாக, அஸெர்பைஜான், ஜார்ஜியா, ஆர்மீனியா ஆகியவை காக்கஸஸ் பிரதேச மாயும், உஸ்பெக்கிஸ்தான், கிர்கீசியா, துருக்மேனியா ஆகியவை மத்திய ஆசிய பிரதேசமாயும் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றில் எல்லாம் மாற்றமில்லாத அம்சம் என்னவெனில், தேசிய இன எல்லை கள் குலைக்கப்படுவதில்லை, தேசிய இன நிர்வாக அலகுகள் முழுமை யாக உள்ளன என்பதாகும். 1920க்கள் முதல் சோவியத் யூனிய னில் பொருளாதார பிரதேசமயப்படுத்தல், எல்லா மக்களினங்கள் மற்றும் தேசிய சிறுபான்மையினரின் அதிகபட்ச பொருளாதார, கலாசார, சமூக மறுமலர்ச்சிக்கான அடிப்படையாகக் கருதப்படு கிறது.

நிர்வாக மற்றும் பொருளாதாரத் திட்ட அமைப்புகளை ஒரே உறுப் பில் இணைக்க வேண்டியதன் கோட்பாட்டு ரீதியான அவசியம் பற்றி மேற்கூறிய கமிஷன் ஒரு முக்கிய சிபாரிசை முன்வைத்தது. ''ஒவ்வொரு பிரதேசத்தையும் ஒரு புறம் அரசின் ஒரு பகுதியாகவும், மறு புறம் சுயமாக வாழ்ந்து எதிர்காலத்தில் சுயமாக வளரும் வாய்ப்பைப் பெற்ற சுயமான பகுதியாகவும்'' அணுக வேண்டியதன் அவசியம் கோடிட்டுக் காட்டப்பட்டது. ஒவ்வொரு பிரதேசத்திலும் (அது பெரும்பாலும்

விவசாயப் பிரதேசமாக இருந்தாலும் கூட) ஏற்கெனவே உள்ள ஏதாவது ஒரு பெரிய நகரம் அல்லது வளர்ந்து வரும் தொழிற்துறை நகரை பிரதான பொருளாதார, ஸ்தாபன அமைப்பு மற்றும் முக்கிய மையமாக வைத்திருப்பதன் அவசியம் கோடிட்டுக் காட்டப்பட்டது.

இக்கமிஷன் மேற்கொண்ட நடவடிக்கைகளையடுத்து அரசுத் திட்டக் கமிஷனின் பொருளாதார பிரதேசங்கள் பற்றிய வரைபடம் பெரும் பாலும் அப்படியே வைக்கப்பட்டது, ஒரு சில எல்லைகளில் மட்டுமே மாற்றங்கள் செய்யப்பட்டன. இதில் எல்லா சிறிய மற்றும் பெரிய தேசிய இன (மொழிவாரி) குழுக்களின் நலன்கள் கறாராகப் பேணிக் காக்கப்பட்டன. பிரதேசங்களின் எல்லைகள் (சாராம்சத்தில் இவை சமூக பொருளாதார பிரதேசங்களாக இருந்தன) நேர்க்கோடுகளாகத் தீட்டப்பட்டன, இது இவற்றின் வரைபடத் தன்மையை, நிபந்தனைக் குட்பட்ட தன்மையை வலியுறுத்தியது. பிரதேசமயப்படுத்தலின் முக்கியக் கோட்பாடுகளை உருவாக்குவதன் மீதும், பிரதேசங்களை உருவாக்கும் பிரதான உட்கருக்களையும் பிரதேசங்களின் பொதுவான வரைபடத் தையும் தனியே பிரித்துக் காட்டுவதன் மீதும் முக்கிய கவனம் செலுத் தப்பட வேண்டும் என்று கமிஷன் கருதியது. பிரதேசங்களின் அளவு களையும் எல்லைகளையும் முடிவு செய்யும் பணி பிந்தைய கட்டத்திற் குத் தள்ளிப் போடப்பட்டது; அப்போதுதான் இந்தத் திட்டவட்ட மான பணியில் ஸ்தல அதிகாரிகளும் பல்வேறு மக்கள் பிரிவினரின் பிரதிநிதிகளும் தீவிரப் பங்கேற்க முடியும். 1922 பிப்ரவரியில் கமிஷனின் பணி முடிவடைந்ததும் இது உருவாக்கிய திட்ட நகல் விவாதத்திற்காக ஸ்தலங்களுக்கு அனுப்பப்பட்டது. பிரதேசமயப்படுத்தல் சம்பந்தமாக லெனினுடன் தான் பன்முறை நடத்திய கலந்துரையாடல்களை கிரிஜானோவ்ஸ்கி நினைவு கூர்கிறார்: ''பொருளாதார ரீதியான பிரதேசமயப்படுத்தலில் இறங்கும் பொழுது அது கண்டிப்பாக இக்கருத்தைப் பற்றிய பூர்வாங்க பிரசாரத்துடன் இணைந்திருக்க வேண்டும், ஆங்காங்கே உள்ள இடங்களிலிருந்தே இதற்கான ஆர்வம் பெருமளவில் வருமாறு இது அமைய வேண்டும் என்று அவர் கருதினார்.'' (அதே நூல், பக்கம் 7.)

பிரதேசமயப்படுத்தல் சம்பந்தமான பணிகள் கட்சியின் 11ஆவது காங்கிரசில் (1922) உயர்வாக மதிப்பிடப்பட்டன. 1923ஆம் ஆண்டு கட்சியின் 12ஆவது காங்கிரசில் பிரதேசமயப்படுத்தல் சம்பந்தமான விசேஷ தீர்மானம் ஏற்கப்பட்டது. புரட்சிக்கு முன்னிருந்து இன்று நமக்கு கிட்டியுள்ள நாட்டின் நிர்வாகப் பிரிவு முறை பிராந்தியத் திட்டமிடலுக்கும், நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கும் ஏற்றதாயில்லை என்று அத்தீர்மானத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டிருந்தது. 1920ஆம் ஆண்டுகளின் இறுதியில் நாடு பூராவும், மேக்ரோ மட்டத்தில் புதிய நிர்வாகப் பிரிவு முடிவடைந்தது; இது அரசுத் திட்டக் கமிஷனும் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் கமிஷனும்

தீட்டிய பெரும் பொருளாதார பிரதேசங்கள் பற்றிய வரைபடத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது.

சோவியத் திட்டமிடலில் பிரதேசமயப்படுத்தல் தத்துவம் மற்றும் நடைமுறையின் வளர்ச்சி தங்கு தடையற்ற நேரடியான நிகழ்ச்சிப் போக்காக இருக்கவில்லை. உலகில் முதன்முதலாக சோஷலிசத்தைக் கட்டும் பாதையில் இறங்கிய நாட்டின் வரலாறு சிக்கலானதாக, கடின மானதாக இருந்தது. இது பொருளாதாரக் கட்டுமானத்தின் — பிரதேச மயப்படுத்தலும் பிராந்தியத் திட்டமிடலும் இதன் உட்பிரிவுகளாக இருந்தன — நடைமுறையிலும் பிரதிபலித்தது. உதாரணமாக, 1930ஆம் ஆண்டுகளில், அதுவும் குறிப்பாக இரண்டாவது உலக யுத்தத்திற்கு முந்தைய காலகட்டத்தில் நிர்வாகத்தை மையப்படுத்தும் போக்குகளும் திட்டமிடலின் பாலான துறை ரீதியான அணுகுமுறையும் பெரிதும் வலுப்பட்டன. ஆனால் அந்த ஆண்டுகளில்தான் யுரால்-குஸ்னேத்ஸ்க் இணையம் என்ற ஒரு அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. விஞ்ஞான ரீதியில் திட்டமிடப்பட்டு நடைமுறையில் நிறைவேற்றப்பட்ட முதல் பிரம்மாண்டமான பிரதேச உற்பத்திக் கூட்டிணைப்பாக இது விளங் கியது. 1930ஆம் ஆண்டுகளில் வோல்கா ஆற்றோடு சம்பந்தப்பட்ட கூட்டுப் பிரதேச திட்டங்களும் அன்காரா நீர்மின்நிலைய இணையத்தின் கட்டுமானத் திட்ட நகல்களும் (கிழக்கு சைபீரியாவின் பொருளாதார வளர்ச்சி, இயற்கை வள மீட்பிற்கான எரிசக்தி அடிப்படையாக இவை கருதப்பட்டன) இன்ன பிறவும் தீட்டப்பட்டன. மாபெரும் தேசபக்த யுத்தம் (1941 — 1945), இதற்குப் பின் ஏற்பட்ட மிகப் பெரும் இன் னல்கள், பொருளாதார ரீதியாக நன்கு வளர்ச்சியடைந்த ஐரோப்பிய பகுதிகளில் ஏற்பட்ட அழிவு ஆகியவை, 1930ஆம் ஆண்டுகளிலேயே தீட்டப்பட்ட பல பிராந்திய திட்ட நகல்களின் நிறைவேற்றத்தைத் தாமதப்படுத்தின. 1940ஆம் ஆண்டுகளின் இறுதி — 1950ஆம் ஆண்டு களின் துவக்கத்திலிருந்துதான் நாட்டின் பொது மற்றும் பிராந்திய வளர்ச்சியில் புதிய கட்டம் துவங்கியது.

சோவியத் அரசின் வரலாறு பூராவும் திட்டமிடல் என்பது (இதன் பிராந்திய அம்சத்தையும் சேர்த்து) நாட்டின் பொது வளர்ச்சியில் ஒரு முக்கிய அங்கமாக விளங்கி வருகிறது, எப்போதும் இது விஞ்ஞான ரீதியான நிகழ்ச்சிப் போக்காக இருந்தது, இருந்து வருகிறது. ஏற் கெனவே மேலே குறிப்பிட்டபடி, உயர் அரசு மட்டத்தில் முதல் பிர தேசமயப்படுத்தும் திட்ட நகல்களை உருவாக்குவதில் தலைசிறந்த விஞ்ஞானிகள் முக்கியப் பங்கேற்றனர். இவற்றில் விஞ்ஞானப் பேரவை தீவிரப் பங்கேற்றது. கோட்பாட்டு ரீதியிலும் முறையியல் ரீதியிலும் முற்றிலும் புதியவையாக இருந்த பிரதேசமயப்படுத்தல் திட்ட நகல் கள் பரவலான நடைமுறை விவரங்களின் அடிப்படையில், கடந்த காலத்தின் விஞ்ஞானிகள் ருஷ்யாவின் பிராந்திய சிறப்பியல்பை பற்றி ஆராய்ந்து அறிந்த ஆழ்ந்த ஞானத்தின் அடிப்படையில் தீட்டப்பட்டன.

சோவியத் சமூக பொருளாதார புவியியல் உருவாவது 1920ஆம் ஆண்டுகளின் பிரதேசமயப்படுத்தலின் முதல் அனுபவங்களுடனான அங்ககத் தொடர்பில் நடைபெற்றது.

மாபெரும் விஞ்ஞானியும் அரசுப் பிரமுகருமான என். என். பரான்ஸ்கி (1881 – 1963) சோவியத் பொருளாதார புவியியலின் ஸ்தாபகராக கருதப்படுகிறார். இவரைப் பற்றி பி. ஜேம்ஸ் மிகச் சரியாகக் குறிப்பிட்டார்: ''சோவியத் யூனியனில் புவியியலின் வளர்ச்சிக்கு இவர்தான் மிகவும் உரிய தருணத்தில், மிகவும் உரிய இடத்தில் இருந்த மிகவும் உரிய நபராவார்.'' (P. James, 1975, p. 293.) *பரான்ஸ்கி எழுதிய* **சோவியத் யூனியனின் பொருளாதார புவியியல். அரசுத் திட்டக் கமிஷனின் பிராந்தியங்கள் பற்றிய குறிப்பு** *என்ற பாடநூலின் முதல் பதிப்பு 1926இல் வெளிவந்தது. இதற்குப் பின் 16 பதிப்புகளில் வெளி வந்த இதற்கு சோவியத் அரசுப் பரிசு வழங்கப்பட்டது, பல தலைமுறைகளைச் சேர்ந்த சோவியத் மக்களின் பொருளாதார புவியியல் ஞானத்திற்கு இது அஸ்திவாரமிட்டது. தத்துவத்திற்கும் நடைமுறைக்கும் இடையிலான பிரிக்க இயலா தொடர்பிற்கும் பரஸ்பர பயனிற்கும் இது தக்கதொரு உதாரணமாகத் திகழ்ந்தது.*

1920ஆம் ஆண்டுகளில் பிரதேசமயப்படுத்தலின் முதல் திட்ட நகல்களைத் தீட்டுவதிலும், பின்னர் யுரால்-குஸ்னேத்ஸ்க் இணையத் திட்டம், அன்காரா நீர்மின்நிலைய இணையத் திட்டம், மற்ற பிராந்தியத் திட்டங்களைத் தீட்டுவதிலும் என். என். கலஸோவ்ஸ்கி (1891 – 1954) பங்கேற்றார். பிரபல சோவியத் பொறியியல் நிபுணரும் விஞ்ஞானியுமான இவர் 1931இல் என். என். பரான்ஸ்கியால் மாஸ்கோ பல்கலைக் கழகத்தின் புவியியல் பிரிவிற்கு அழைத்து வரப்பட்டார். எரிசக்தி உற்பத்தி சுழற்சிகள் மற்றும் பிரதேச உற்பத்தி இணையங்கள் பற்றிய பயன்மிகு தத்துவங்களை கலஸோவ்ஸ்கி தீட்டினார்; இவைதான் பிராந்திய வளர்ச்சியில் பிரதேசமயப்படுத்தல் பற்றிய சோவியத் தத்துவம் மற்றும் நடைமுறையின் முக்கிய அங்கங்களாயின.

இன்று விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியின் சகாப்தத்தில் உற்பத்தியின் அளவுகோல்களும் கட்டமைப்புகளும் அடியோடு மாறி வருகின்றன, சமூக, புறச்சூழல், பொருளாதார வளர்ச்சிக் காரணிகளின் பரஸ்பரச் செயலாக்கம் வலுப்பட்டு வருகிறது, கணக்கீட்டு முறைகள் அடியோடு மாறி வருகின்றன, தகவல்களின் புதிய மூல ஊற்றுகளும் புதிய தகவல் முறைகளும் தோன்றுகின்றன, விண்வெளி விஞ்ஞானம் மேன்மேலும் இவற்றில் பங்காற்றுகிறது. என்றாலும் 1920க்களின் தொடக்கத்தில் சோவியத் யூனியனில் தீட்டப்பட்ட பிரதேசமயப்படுத்தலின் அடிப்படை முறையியல் கோட்பாடுகள் இன்றும் தம் தத்துவார்த்த, நடைமுறை முக்கியத்துவத்தை இழக்கவில்லை.

2. ''வளர்ச்சியின் துருவங்கள்'' என்ற கருத்தமைப்பு: பாராட்டிற்குப் பதில் வீழ்ச்சி

பிரதேசமயப்படுத்தல் தத்துவமும் இது சம்பந்தமான முக்கிய முறையியல் கோட்பாடுகளும் சோவியத் யூனியனில் எப்படி உருவாயின என்று சுருக்கமாகப் பார்த்தோம். இத்தத்துவம், இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் பரவிய பிராந்திய திட்டமிடலி லிருந்து பெரிதும் மாறுபட்டது; இப்பிராந்தியத் திட்டமிடல் பெரும்பா லும் வளர்ச்சியின் துருவங்கள் என்ற கருத்தமைப்பின் அடிப்படையிலா னது. வளர்ச்சியின் துருவங்கள் மற்றும் துருவமயப்படுத்தப்பட்ட வளர்ச்சி பற்றிய கருத்தமைப்பு 1950ஆம் ஆண்டுகளில் தோன்றி, மேலைய விஞ்ஞான வட்டங்களில் விரைவாகப் பரவியது, ஓரளவு நீண்ட காலத் திற்கு மேற்கிலும் பல வளர்முக நாடுகளிலும் பிராந்திய திட்டமிட லுக்கு அடிப்படையாக விளங்கியது. ஆனால் 1970ஆம் ஆண்டுகளின் இறுதியிலேயே இக்கருத்தமைப்பு தன் புகழை இழந்தது; இதன் மோகம் மறைந்து இது ஏராளமான விமர்சனங்களுக்கு ஆளானது. இந்த வீழ்ச் சிக்கான முக்கியக் காரணம் பிராந்திய பிரச்சினைகளின் ''தீர்வின்மை யில்'', பல சந்தர்ப்பங்களில் நெருக்கடிகளின் பொழுது இப்பிரச்சினை கள் ஆழமடைவதில் அடங்கியுள்ளது. அப்படியெனில் விஞ்ஞான கருத்த மைப்பு இதில் எந்த அளவிற்குக் குற்றவாளி என்ற கேள்வியெழுகிறது.

இக்கேள்விக்குப் பதிலளிக்க வளர்ச்சியின் துருவங்கள் என்ற கருத்த மைப்பின் — இது 1950 — 1960ஆம் ஆண்டுகளில் உலகெங்கும் பரவியது — முக்கிய அம்சங்களைப் பார்ப்போம். இதன் மூலகர்த்தாவாகிய பிரபல பிரெஞ்சு பொருளாதார நிபுணர் எஃப். பெர்ரூ இதைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: ''வளர்ச்சி எல்லா இடங்களிலும் ஒரே நேரத்தில் தோன்றுவதில்லை; இது குறிப்பிட்ட இடங்களில் அல்லது வளர்ச்சியின் துருவங்களில் வெவ்வேறான வேகத்தில் தோன்றுகிறது, இது வெவ் வேறு வழிகளில் பரவி, பொருளாதாரம் முழுவதும் வெவ்வேறான இறுதி விளைவுகளை ஏற்படுத்துகிறது.'' எஃப். பெர்ரூ, அவரே பன் முறை கோடிட்டுக் காட்டியபடி, ''பொருளாதார இடப் பரப்பை'', அதாவது தனிப்பட்ட நிறுவனங்களின் பரஸ்பரத் தொடர்புக் களத்தை ஆராய்ந்தார். பெர்ரூவின் கருத்தமைப்பானது முதலாளித்துவ பொரு ளாதாரத்தின் சமமற்ற வளர்ச்சி பற்றிய பொருளாதார ஆராய்ச்சி களின் தொடர்ச்சியாகும். இதன் முக்கிய அம்சங்களாவன:

— பொருளாதார வளர்ச்சியானது ''பொருளாதார இடப் பரப்பில்'', அதாவது தனிப்பட்ட தொழில் நிறுவனங்களின் பரஸ்பரத் தொடர்புக் களத்தில் நடைபெறுகிறது;

— புதிய அம்சங்களை ஏற்று தொடர வல்ல பெரும் தொழில் நிறு வனங்களில் ''வளர்ச்சி'' குவிக்கப்படுகிறது; இத்தகைய தொழில் நிறு வனங்கள்தான் ''வளர்ச்சியின் துருவங்களை'' உருவாக்குகின்றன;

—''வளர்ச்சியின் துருவங்கள்'' பொருளாதார இடப் பரப்பில் மேலோங்கி நிற்கின்றன, தம்முடன் தொடர்புடைய மற்றும் தமக்கு கீழ்பட்ட தொழில் நிறுவனங்களின் மீது தாக்கம் செலுத்துகின்றன, பல்வேறு வழிகளில் புதிய அம்சங்களைப் பரப்புகின்றன.

இவ்வாறாக, பெர்ரூவின் கருத்துப்படி, பொருளாதார இடப் பரப்பில் மேலோங்கி நிற்கக் கூடிய, வளர்ச்சியின் துருவங்களை (மையங் களை) உருவாக்கக் கூடிய ''ஆதிக்கம் செலுத்தும் பொருளாதார அலகு கள்தான்'' வளர்ச்சியின் முக்கிய உந்து சக்தியாகும்.

மொத்தமாக நாட்டின் பொருளாதாரத்தில், இதன் பொருளா தார இடப் பரப்பில் முக்கிய தொழில் நிறுவனத்தால் (துறையால்) ஊக்குவிக்கப்படும் வளர்ச்சியின் மீதுதான் பொருளாதார நிபுணர் என்ற வகையில் பெர்ரூ அக்கறை செலுத்தினாரே தவிர குறிப்பிட்ட நிலப் பரப்பில் — பிரதேசத்தில் — அல்லது பொதுவில் திட்டவட்டமான புவி யியல் பரப்பில் நடைபெறும் வளர்ச்சியின் மீது இவர் கவனம் செலுத்த வில்லை.

ஆரம்பத்தில் பெர்ரூ முன்வைத்த வளர்ச்சியின் துருவங்கள் என்ற கருத்தமைப்பு தெட்டத்தெளிவான உற்பத்தி-பொருளாதார தன்மை யை வெளிப்படுத்தியது; ஆனால் காலப் போக்கில் இது சிக்கலான கட்டமைப்புடன் சமப்படுத்தப்படலாயிற்று, இதில் உற்பத்தி-பொருளா தார அம்சங்களைத் தவிர சமூக, ஸ்தாபன அமைப்பு, அரசியல், மற்ற அம்சங்களும் அடங்கியிருந்தன.

ஜே. பேலின்க் என்ற விஞ்ஞானி துருவங்களைப் பற்றிய சிக்கலான, கட்டமைப்பு-செயல்முறை கருத்தை விசேஷமாகக் கோடிட்டுக் காட் டினார். வளர்ச்சியின் துருவங்கள் பற்றிய கருத்தமைப்பு பல நேரங் களில் தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது என்று இவர் எழுதினார். இது முக்கிய, அடிப்படைத் தொழிற்துறை பற்றிய கருத்துடன், தொழிற் துறை இணையங்களைப் பற்றிய கருத்துடன் கலக்கப்படுகிறது; எனவே இதிலிருந்து, வளர்ச்சியின் துருவங்கள் என்பது எதிர்கால பிராந்திய தொழிற்துறைமயப்படுத்தலை சிறப்பிப்பதற்காக எழுப்பப்பட்ட தொழிற்துறை நினைவுச் சின்னம், குறிப்பிட்ட பொருளாதார வளர்ச் சிக்கான உத்தரவாதம் என்ற தவறான கருத்து நிலவுகிறது.

உந்துவிசை தொழில் நிறுவனம் தோன்றும் பொழுது பின்வரும் நான்கு முக்கிய கட்டங்கள், துருவமயப்படுதலின் வடிவங்கள் நடை பெறுகின்றன என்று ஜே. பேலின்க் குறிப்பிட்டார்:

1) தொழில்நுட்ப வடிவம் — அந்தந்த சப்ளை அமைப்புகள் மற்றும் நுகர்வாளர்களின் வளர்ச்சியை ஊக்குவித்தல்;

2) பண வடிவம் — மக்களின் பணம் செலுத்தும் திறன் அதிகரித் தல், உந்துவிசை தொழில் நிறுவனங்களுடன் தொடர்பற்ற உற்பத்தி களின் ஊக்குவிப்பு, உற்பத்தியைப் பன்முக ரீதியானதாக மாற்று தல்;

3) மனநிலை வடிவம் — ''வெற்றிச் சூழல்'' இடம் பெயர்ந்து வருபவர்களையும் புதிய முதலீடுகளையும் கவருகிறது;

4) புவியியல் வடிவம் — மேற்கூறிய வடிவங்களின் வளர்ச்சி ஒரே சங்கிலித் தொடர் போல் நடைபெறும் பொழுது அது வளர்ச்சியின் துருவங்களின் தாக்கம் பிரதேச ரீதியாக விரிவுபடுவதில் வெளிப்படுகிறது.

ஜே. புட்வில் — இன்னொரு பிரபல பிரெஞ்சு பொருளாதார நிபுணர். இவர் துருவமயப்படுத்தப்பட்ட வளர்ச்சி பற்றிய கருத்துகளை வளர்க்க நிறைய செய்தார்; குறிப்பாக இடப் பரப்பின் சூக்குமமான பொருளாதார கட்டமைப்புகளையும் பெர்ரூவின் துருவங்களையும் திட்டவட்டமான புவியியல் இடப் பரப்புடன் ''இணைக்க'' பெரிதும் பாடுபட்டார். இது மேற்கே பிராந்தியத் திட்டமிடலில் இத்தகைய கருத்துகள் பெரிதும் பரவ உதவியது. விரைவில் பிராந்தியத் திட்டமிடலின் நடைமுறையில் வளர்ச்சியின் துருவங்களும் மையங்களும் பல்வேறு அளவுகளினால் ஆன நகரங்களின் படிவரிசையுடன் ஒப்பிடப்படலாயின.

வளர்ச்சியின் துருவங்கள் பற்றிய கருத்தும் உலகந் தழுவிய அளவில் பரவிய பிராந்தியத் திட்டமிடலின் நடைமுறையும் பிராந்திய வளர்ச்சியின் பல்வேறு அம்சங்களைப் பிரதிபலிக்கும் பல கருத்தமைப்புகள் தோன்ற வழிகோலின. இக்கருத்தமைப்புகள் பல நேரங்களில் ஒரே நேரத்திலும், ஒன்றுடன் ஒன்று தொடர்பற்று தனித்தனியாயும் உருவாக்கப்பட்டன, சில சமயங்களில் இவை ஒன்றுடன் ஒன்று குறைவான தொடர்பையும் கொண்டிருந்தன. வளர்ச்சியின் துருவங்கள் பற்றிய கருத்து பல்வேறு கருத்துகள், கருத்தமைப்புகளின் திரட்டை மூடி மறைக்கும் குடையாகியது. ஒரு சில சந்தர்ப்பங்களில், ''வளர்ச்சியின் துருவங்கள்'' என்ற கருத்தில் பொதிந்திருந்த உட்பொருள் அடியோடு மாறியது. ''துருவங்கள்'' என்ற கருத்து சூக்குமமான பொருளாதாரக் கருத்தாக, பொருளாதார வளர்ச்சியை விளக்கும் வகையில் தோன்றியது. பின்னர், முதலீடுகளைக் குவிக்கும் மையங்களைத் தேர்ந்தெடுத்தல், மற்ற ஸ்தாபன நடவடிக்கைகள் போன்ற திட்டவட்டமான கடமைகளின் நிறைவேற்றம் இதன் பொருளாகியது. முதலில் தொழில் நிறுவனங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது; பின்னர் இதற்குப் பதில் பரவலான பொருளாதார, சமூக, கலாசார, நடத்தைக் காரணிகள் வந்தன, இதன் விளைவாக கருத்தமைப்புகள் தமக்கே உரித்தான சாரத்தைக் கணிசமான அளவு இழந்தன, இவற்றின் திட்டவட்டமான தன்மை மறைந்தது, அனுபவ அடிப்படையிலான ஆராய்ச்சிகளுக்கும் விஞ்ஞான அடிப்படையிலான நடைமுறை பயன்படுத்தலுக்கும் இவை அதிகம் ஏற்றவையாக இல்லை.

*பிரபல அமெரிக்க பொருளாதார நிபுணரும் பிராந்திய இயல் விஞ்ஞானியுமாகிய ஜே. ஃபிரிட்மான் **1960**ஆம் ஆண்டுகளில் துருவமயப்படுத்தப்பட்ட வளர்ச்சி பற்றிய கருத்தமைப்பை உருவாக்குவதில் தீவிரப்*

பங்கேற்றார், பிராந்தியத் திட்டமிடலை ஆதாரப்படுத்தும் பொழுது இதைப் பயன்படுத்தினார். இவர் பிராந்தியத் திட்டமிடலின் ''சித்தாந்தம்'' என்ற வகையில் இக்கருத்தமைப்பின் சாரத்தைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டார்: ''நகரங்களை அடிப்படையாகக் கொண்ட சமமற்ற வளர்ச்சியின் (இதன் விசேஷ வடிவமாகிய தொழிற்துறை வளர்ச்சியின்) தர்க்கம், பிராந்திய திட்டமிடலைப் பொறுத்தமட்டில் குறிப்பிட்ட சில முடிவுகளுக்கு இட்டுச் சென்றது: பெரிய நகரங்களின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்தல், சமமற்ற வளர்ச்சிக் கொள்கை, பதப்படுத்தும் தொழிற்துறையின் இட ஒதுக்கீடு மீது தாக்கம் செலுத்தும் முறையாக பிராந்தியத் திட்டமிடலை மதிப்பிடுதல், 'வளர்ச்சியின் உந்துவிசைகள்' புதிய அம்சங்கள் புகுத்தப்பட்ட முக்கிய மையங்களிலிருந்து பொருளாதாரம் முழுவதும் பரவும் என்ற நம்பிக்கை. பெரிய நகரங்களின் பொருளாதாரத் தாக்கத்திற்கு உட்படுவதால்தான் கிராமப் பகுதிகள் வளர்ச்சி பரவும் பொது நிகழ்ச்சிப் போக்கில் பங்கேற்கின்றன. விரைவாக வளரும் பெரிய நகரங்களுக்கு அருகில் இருப்பதானது கிராம வளர்ச்சியின் முக்கியக் காரணியாகக் கருதப்படுகிறது.''

துருவமயப்படுத்தப்பட்ட வளர்ச்சி பற்றிய கருத்தமைப்பின் இந்த அம்சங்கள் கிட்டத்தட்ட 1970ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதி வரையில் மேற்கே மேலோங்கி நின்றன; வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் மட்டுமின்றி, வளர்முக நாடுகளிலும் பிராந்திய வளர்ச்சிக்கான முக்கிய முறையியல் வழிகாட்டியாக இவை மேலைய நிபுணர்களால் பயன்படுத்தப்பட்டன. ஆனால் அதே பொழுது இவை இக்கருத்தமைப்பின் பலவீனத்திற்கும் மூல ஊற்றாக அமைந்தன.

வளர்முக நாடுகளில் பிராந்தியத் திட்டமிடலை ஆதாரப்படுத்துவதற்காக வளர்ச்சியின் துருவங்கள் பற்றிய கருத்தமைப்பைப் பயன்படுத்த முயற்சித்த போது இதன் குறைகள் முதலில் வெளிப்படலாயின. பிராந்தியத் திட்டமிடல் மற்றும் தேசிய வளர்ச்சி பற்றிய முதல் ஆசிய கருத்தரங்கில் (இந்தியா, மைசூர், 1974) கோபன்ஹேகன் வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவன இயக்குனர் பி. கோங்ஸ்டாட் உரையாற்றினார். இந்த உரை, வளர்ச்சியின் துருவங்கள் பற்றிய கருத்தை முதன்முதலாக முன்வைத்த எஃப்.பெர்ரூ, இக்கருத்தமைப்பை வெனிசூலாவிலும் மற்ற லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் மிகத் தொடர்ச்சியாகப் பயன்படுத்திய ஜே. ஃபிரிட்மான் ஆகியோரின் கருத்துகளை விமரிசிப்பதாக அமைந்தது. வளர்ச்சி என்பது உலக முதலாளித்துவ முறையுடனான இணைப்பு என்று பொதுவில் கூறி ஃபிரிட்மான் எல்லையோர முதலாளித்துவத்தின் நவீன வளர்ச்சியை ஒரு நியதியாக்குகிறார் என்று பி. கோங்ஸ்டாட் குறிப்பிடுகிறார். கோங்ஸ்டாடின் கருத்துப்படி ஃபிரிட்மானை ''இரட்டைவாதிகளில்'' ஒருவராகக் கருதலாம்; இவர்கள் வளர்முக நாடுகளின் உற்பத்தி, பிரதேச இரட்டை தன்மையை (காலனியாயிருந்த காலத்திலிருந்து இது வந்தது) ஒப்புக் கொள்ளும் அதே சமயம், இதை

அகற்றும் எந்த ஒரு வழியையும் முன்மொழியவில்லை. ஃபிரிட்மானின் நூல்கள் சம்பந்தமாக கோங்ஸ்டாட் கூறும் இன்னொரு விமரிசனக் கருத்தும் குறிப்பிடத் தக்கது; உண்மையில் இது பிராந்தியத் திட்டமிடலில் ஈடுபட்டுள்ள பல மேலைய நிபுணர்களின் படைப்புகளுக்கும் உரித்தானது. வளர்ச்சியின் நவீன கட்டத்தை ஃபிரிட்மான் விளக்கியது சரியல்ல, ஏனெனில் அவர் எல்லா சமூக மற்றும் பொருளாதார சச்சரவுகளையும் பிராந்திய சச்சரவுகளாக்க முயலுகிறார்.

ஒரு நாட்டின் குறிப்பிட்ட பிரதேசங்களின் பரிணாம வளர்ச்சியின் முக்கியத் திசையமைவை நிர்ணயிக்கும் சமூக பொருளாதார வளர்ச்சியின் பொதுக் காரணிகளின் முக்கியப் பங்கை மேலைய நிபுணர்களும் மேன்மேலும் அதிகமாக உணர்ந்து வருகின்றனர் என்பதை மேற்கூறிய அம்சங்கள் காட்டுகின்றன. வளர்முக நாடுகள் அனைத்திலும் தேசிய வளர்ச்சியின் நலன் கருதி பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளும் பிரதேசக் கட்டமைப்பும் மாறி வருகின்றன; இது ஒரு சிக்கலான கட்டமாகும். இந்நாடுகளில் நாடு தழுவிய அளவில் பொருளாதார இணைப்புப் பிரச்சினைகள் கடுமையான பிரச்சினைகளாக முன் நிற்கின்றன; பின்தங்கிய பிரதேசங்களை, குறிப்பாக பெரும்பான்மையான மக்கள் வாழும் பின்தங்கிய கிராமப் பகுதிகளை உயர்த்த வேண்டியுள்ளது.

23ஆவது சர்வதேச புவியியல் காங்கிரசின் (சோவியத் யூனியன், 1976) ஒரு பிரிவில் பிராந்திய வளர்ச்சி அம்சங்கள் பற்றிய ஒரு கருத்தரங்கு துஷான்பேயில் நடந்தது. கானடா நாட்டு புவியியல் நிபுணர் டி. ஆர். எஃப். டெய்லர் இதில் **ஆப்பிரிக்காவில் இடப் பரப்பை மாற்றியமைப்பது** என்ற தலைப்பில் உரையாற்றினார். இவர் இதில் துருவமயப்படுத்தப்பட்ட வளர்ச்சி தத்துவம் ஏற்புடையது அல்ல என்றார். இத்தத்துவம் பெரிய நகரங்களை வளர்ச்சியின் துருவங்களாகப் பார்க்கிறது, இவைதான் நவீனமயப்படுத்தலைப் பரப்புகின்றன, வளர்முக நாடுகளின் கிராமப் பகுதிகளின் வளர்ச்சிக்கு உதவுகின்றன. ''பெரிய நகரங்கள் இக்கிராமப் பகுதிகளின் வளர்ச்சிக்கு உதவுகின்றனவா அல்லது இவற்றைப் பாழ்படுத்துகின்றனவா என்பது இன்னமும் தெளிவாகவில்லை...'' ''வளர்ச்சியைக் காலனியாதிக்க மேலைய மாதிரியுடன் ஒப்பிட்டால் உண்மையில் ஃபிரிட்மான், மற்றவர்களின் மாடெல்களைத் தயாராகப் பயன்படுத்தி இந்த வளர்ச்சியை மையத்திலிருந்து எல்லைப் பகுதிகளை நோக்கி அளக்கலாம், நவீனமயப்படுத்தலாம்'' என்கிறார் டெய்லர்.

பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளைப் பற்றிய ஆராய்ச்சிகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பிரதேசமயப்படுத்தலின் முறையியலும் முறைகளும் வளர்முக நாடுகளின் விசேஷ சூழ்நிலைகளுக்கு அதிகம் ஏற்றவையாக இல்லை. அளவுநிலை அம்சங்களை (உதாரணமாக, சரக்குப் போக்குவரத்து வடிவில் பிரதேசங்களுக்கு இடையிலான தொடர்புகளை) ஆராய முக்கியத்துவம்

அளிக்கப்பட்டாலும் இந்த அணுகுமுறைகள் முறையியல் ரீதியாகப் பலவீனமானவையாக உள்ளன. சாதாரணமாக, தேசிய வளர்ச்சியின் நலன்களுக்காக காலனியாதிக்கப் பொருளாதாரத்தின் பிரதேசக் கட்டமைவை மாற்றியமைக்கும் முக்கிய நிகழ்ச்சிப் போக்குகள் கவனிக்காமல் விடப்படுகின்றன, பெரும்பாலான வளர்முக நாடுகளின் பல் கட்டமைப்பு (இதற்கு நல்ல பிரதேச வெளிப்பாடு உண்டு) கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை, பெரும் நகரங்களின் வளர்ச்சிக்கு அளவிற்கதிகமான முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது, இத்தியாதி.

அதே நேரத்தில் வளர்முக நாடுகளில் பிராந்திய வளர்ச்சிப் பிரச்சினைகள் சிக்கலானவை, முக்கியமானவை, கிட்டத்தட்ட உலகம் முழுவதும் பரவியுள்ளவை. எனவே 1960ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியிலிருந்து இவை விசேஷ ஆராய்ச்சிக்கு உரித்தானவை என்று ஐ. நா. சபையால் அதிகாரப் பூர்வமாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன.

1960க்களிலும் 1970ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்திலும் வளர்ச்சியின் துருவங்கள் பற்றிய கருத்தமைப்பை ஒரு புதிய வளர்ச்சி தத்துவமாக, சகலவித குறைகளுக்குமான சஞ்சீவி மருந்தாக பிரசாரம் செய்யும் நூல்கள் ஏராளமாக வந்தன; 1970ஆம் ஆண்டுகளின் இறுதியில் இக்கருத்தமைப்பை விமரிசனம் செய்யும் நூல்கள் பெருகலாயின. இக்கருத்தமைப்பின் ஒரு சில தீவிர ஆதரவாளர்கள், இதன் நடைமுறை பயன்களில் அதிருப்தியடைந்து இதற்கு எதிர்ப்பைத் தெரிவிக்கலாயினர். பிரபல அமெரிக்க நிபுணர் ஜே. ஃபிரிட்மானும் இவர்களில் ஒருவராவார். கிளைட் வீவெர் என்னும் சக ஆசிரியருடன் சேர்ந்து இவர் **பிரதேசமும் பணியும். பிராந்தியத் திட்டமிடலின் பரிணாம வளர்ச்சி** என்ற சுவாரசியமான நூலில் 1970ஆம் ஆண்டுகளின் இறுதியில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: ''வளர்ச்சி மையங்கள் நல்ல புழக்கத்திலிருந்த நாணயங்களாக இருந்த நிலை மாறி விட்டது.'' இக்கருத்தமைப்பின் வீழ்ச்சிக்கு மேலைய நிபுணர்கள் என்ன காரணம் கூறுகின்றனர்?

''இது நடைமுறையில் சரிபார்ப்பதற்கு இருந்த நேரத்தை விட பன்மடங்கு விரைவாகப் பரவியது'', இதுதான் இதன் பலவீனமான அம்சங்களில் ஒன்றாகும் என்று இவர்கள் கருதுவது ஒரு வேளை நியாயமாக இருக்கலாம். இதனால் ''வளர்ச்சியின் மையங்கள் பற்றிய சித்தாந்தம் எப்போதுமே ஒரு குழப்பமாக விளங்கியது''. இதன் முறையியல் கோட்பாடுகளில் பெரும்பாலானவை தெளிவற்று இருந்ததால், இவை சோதனைகளில் தேறவில்லை: உதாரணமாக, எத்தகைய அளவுமானிகளால், எப்படி ''வளர்ச்சியை'' அளவிடுவது என்பதும் முதலீடுகளைப் பரப்ப ''வளர்ச்சி மையங்களை'' எப்படிப் பயன்படுத்துவது என்பதும் இவற்றை எப்படி முடுக்கி விடுவது என்பதும் புரியவில்லை. புதிய அம்சங்கள் பரவும் முறை பற்றிய கோட்பாடுகளும் மேன்மேலும் அதிகமாக சந்தேகத்திற்கு உட்படுத்தப்படுகின்றன. ''...பிராந்தியத் திட்டமிடல் (மேற்கே — **ஆசிரியர்**) பிராந்தியக் கொள்கை

யின் மற்ற அம்சங்களை அலட்சியப்படுத்தியதால் வளர்ச்சி மையங் களை வழிபாட்டுச் சின்னங்களாக்குவதில் கிட்டத்தட்ட வெற்றியடைந் தது. பிரதேசம் அல்லது விசேஷ பிரதேசப் பிரச்சினைகள் ஏட்டு விவாதங்களின் பின் இரண்டாம் பட்சமாக்கப்பட்டன. இதனால் இயற்கை வளங்கள், அரசியல் நிறைவேற்றம், நிர்வாக அமைப்பு, எல்லாவற்றிற்கும் மேலாக விவசாய வளர்ச்சி ஆகியவற்றின் மீது போதுமான கவனம் செலுத்தப்படவில்லை. வளர்ச்சி மையங்கள் எல்லா பிராந்தியப் பிரச்சினைகளுக்கும் சர்வாம்ச தீர்வுகளாயின. ஆனால் இதன் பின்னால் உண்மையில் என்ன உள்ளது என்று ஒருவருக்கும் தெரியவில்லை.'' (Friedmann, Weaver, 1979, p. 129.)

சித்தாந்த நிலைகளிலிருந்தும் துருவமயப்படுத்தப்பட்ட வளர்ச்சி பற்றிய கருத்தமைப்பின் விமரிசனம் வலுப்படுகிறது—மையத்திற்கும் ஓரங்களுக்கும் இடையிலான உறவுகள் சர்வ வல்லமை படைத்த ஏகபோ கங்களுக்கும் பன்னாட்டு இணையங்களுக்கும் தம் வளத்தாலும் உழைப் பாலும் இவற்றின் வல்லமைக்கு உதவும் ஒடுக்கப்படும், சுரண்டப்படும் பிரதேசங்களுக்கும் இடையிலான உறவுகளுடன் ஒப்பிடப்படுகின்றன. உதாரணமாக, லத்தீன் அமெரிக்க விஞ்ஞானிகளின் விமரிசன ரீதியான பகுப்பாய்வு பின்வரும் முடிவிற்கு இட்டுச் செல்கிறது: ''சமத்துவ கருவியாக இருப்பதிலிருந்து தொலைவில் உள்ள வளர்ச்சி மையங்கள் பற்றிய சித்தாந்தம் மூலதனத் திரட்சியில் சமமின்மையின் தத்துவத்தை யும் நடைமுறையையும் பிரதிபலிக்கிறது, இடப் பரப்பு என்பது மேலாண் மையின் கருவியாக விளங்குகிறது.'' (Ibid., p. 178.)

வளர்ச்சியின் துருவங்கள் பற்றிய கருத்தமைப்பை விமரிசிப்பதில் சோவியத் விஞ்ஞானிகள் அவ்வளவு கடுமையாக இல்லை என்பதை சில மேலைய ஆசிரியர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்; இதற்கு ஆதாரம் உள்ளது. ஆனால் இக்கருத்தமைப்பு மோகம் மிகுந்திருந்த பொழுதும் சோவியத் விஞ்ஞானிகள் இதை அளவிற்கதிகமாகப் புகழவில்லை, இதை ஏதோ பிராந்திய வளர்ச்சியின் எல்லா குறைகளுக்குமான சிரஞ் சீவி மருந்தாக கருதவில்லை என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். சோவியத் விஞ்ஞானிகள் இக்கருத்தமைப்பை சமுதாய நடவடிக்கையின் இட ரீதியான குவிப்பின் பொது நியதியின் ஒரு தனிப்பட்ட அம்சமாக மட்டுமே பார்க்கின்றனர். சமுதாய நடவடிக்கையின் குவிப்பு ஒரு நியதியான நிகழ்ச்சிப் போக்காகும். ஆனால் இது நிறைவேற்றும் பணி களின் உட்சாரம், திட்டவட்டமான நாட்டின் பொது சமூக பொருளா தாரச் சூழ்நிலைகளையும், உருவாகியுள்ள இயற்கை மற்றும் வரலாற்று நிலவரத்தையும், பொது மற்றும் பிராந்தியக் கொள்கை எந்த வர்க்க நலன்களின் நோக்கத்தில் நிறைவேற்றப்படுகிறது என்பதையும், குறிப் பிட்ட நாட்டின் அரசாங்கம் எந்த வர்க்க நலன்களை வெளிப்படுத்து கிறது என்பதையும் பெரிதும் பொறுத்துள்ளது.

3. சமமற்ற வளர்ச்சியும் புதிய அம்சங்கள் பரவுவது பற்றிய கருத்தமைப்பும்

உலகந் தழுவிய அளவிலும் தனிப்பட்ட நாடுகளிலும் நிலவும் சமமற்ற வளர்ச்சி பற்றிய பிரச்சினை நீண்ட காலமாகவே விஞ்ஞானி களின் கவனத்தைக் கவர்ந்து வருகிறது. 19ஆம் நூற்றாண்டிலேயே தியூனென் இந்நிகழ்ச்சிப் போக்கின் இடப் பரப்பு நியதிகளைத் தத்து வார்த்த ரீதியாகப் பொதுமைப்படுத்த முயன்றார். மேற்கு ஐரோப் பாவின் பழைய நகரங்களும் அமெரிக்காவின் கிழக்கு மண்டலத்தில் உள்ள விரைவாக வளர்ந்து வரும் நகரங்களும் சேர்ந்து ஒரு ஐக்கிய வட அட்லாண்டிக் "உலக நகரத்தை" உருவாக்க வல்லவை என்றும் பொது உலக விவசாய மண்டலங்களும் மற்ற வகையான நிலங்களும் இதனுடன் சேரும் என்றும் இவர் கருதினார்.

உண்மையில் சமமற்ற வளர்ச்சி பற்றிய பிரச்சினை எல்லா பிரதேச மட்டங்களிலும் நிலவுகிறது, இது இயல்பாகவே பிராந்திய வளர்ச்சி தத்துவத்தில் பிரதிபலிக்கப்பட வேண்டும். ஆனால் இதில் இடப் பரப்பு நியதிகளை மட்டும் பார்ப்பது என்பது விளைவையே காரண மாகக் கொள்வதற்கு ஒப்பானதாகும்.

முதலாளித்துவத்தின் கீழ் பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சி யின் சமமின்மை பற்றிய விதியை வி. இ. லெனின் கண்டுபிடித்துக் கூறினார். முதலாளித்துவ வளர்ச்சியின் எல்லா கட்டங்களுக்கும் உரித்தான, உலக முதலாளித்துவ பொருளாதாரத்தின் "எல்லை யோரம்" உட்பட இதன் எல்லா பகுதிகளையும் ஆட்கொள்ளக் கூடிய சர்வாம்ச விதியாகும் இது. லெனின் பின்வருமாறு எழுதினார்: "...செல்வாக்கு மண்டலங்கள், நலன்கள், காலனிகள் முதலானவற்றின் பங்கீட்டுக்கு முதலாளித்துவத்தில் சாத்தியமான ஒரேயொரு அடிப்படை பங்கு கொள்வோரின் வலிமை பற்றிய, அவர்களது பொதுவான பொரு ளாதார, நிதித் துறை, இராணுவ வலிமை முதலானவை பற்றிய கணக் கீடுதான். இந்தப் பங்கீட்டில் பங்குகொள்வோரின் பலம் சமமான அளவில் மாறுவதில்லை; ஏனெனில் வெவ்வேறு நிறுவனங்கள், டிரஸ்டு கள், தொழிற் கிளைகள் அல்லது நாடுகளின் ஏற்றத்தாழ்வற்ற வளர்ச்சி முதலாளித்துவத்தில் சாத்தியமன்று." * இச்சமமின்மை (சீரிசைவின்மை) அதிகபட்ச லாப வேட்டையால், போட்டியால் உண்டாகிறது — இது முதலாளித்துவத்தில் உள்ள உற்பத்தி உறவுகளின் தன்மையால், உற் பத்திச் சாதனங்களின் மீதான தனியுடைமையால் முன்நிர்ணயிக்கப்படு கிறது.

சமமற்ற வளர்ச்சி விதியின் செயற்பாடு ஏகாதிபத்திய வளர்ச்சிக்

---

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்,** பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 4, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1980, பக்கம் 221.

கட்டத்தில் அதிகரிக்கிறது. 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்த நிலவரத்தைப் பகுப்பாய்வு செய்த வி. இ. லெனின் பின்வருமாறு எழுதினார்: "நிதி மூலதனமும் டிரஸ்டுகளும் உலகப் பொருளாதாரத்தின் பல்வேறு பகுதிகளின் வளர்ச்சி வேகங்களுக்கு இடையிலான வேறுபாடுகளைக் குறைப்பதில்லை, மாறாக வலுப்படுத்துகின்றன.... காலனிகளிலும் அமெரிக்க கண்டத்திலுள்ள நாடுகளிலும்தான் முதலாளித்துவம் மிக விரைவாக வளருகிறது." *

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய கட்டத்தில், குறிப்பாக 1970ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா (குறிப்பாக "பொதுச் சந்தை" நாடுகள்) மற்றும் ஜப்பான் என்ற மூன்று முக்கிய ஏகாதிபத்திய மையங்கள் உருவாயின; இவை பல விஷயங்களில் உலகில் ஒன்றிற்கொன்று எதிராய் நின்றன. நேரடியான அரசாங்க கண்காணிப்பிற்கு உட்படாத சர்வதேச ஏகபோகங்களின் வலிமை பெரிதும் அதிகரித்தது; இதனால் பன்னாட்டு ஏகபோகங்களின் பொருளாதார விஸ்தரிப்பிற்கும் நாடுகள், பிரதேசங்களின் பொருளாதார வளர்ச்சி மீதான அரசு ஏகபோக கண்காணிப்பிற்கும் இடையில் புதிய ஏகபோக முரண்பாடுகள் தோன்றின. ஆனால் இச்சக்திகள் அனைத்தும் முன்னாள் காலனி மற்றும் சார்பு நாடுகளின் இயற்கை வளங்களைத் தொடர்ந்து சுரண்டி அவற்றின் துரிதமான சமூக பொருளாதார வளர்ச்சியின் நலன்களுக்கு எதிராக நிற்கின்றன.

உலகந் தழுவிய அளவில் சமமற்ற வளர்ச்சி அதிகரித்து வருவதால் எப்படிப்பட்ட சிக்கலான பொருளாதார மற்றும் அரசியல் பின்விளைவுகள் ஏற்படுகின்றன என்பதன் மீது முதன்முதலாக கவனம் செலுத்திய மேலைய விஞ்ஞானிகளில் ஒருவர் பிரபல ஸ்வீடன் நாட்டு பொருளாதார நிபுணர் ஜி. மியூர்டல் ஆவார். 1957இல் இவர் **பொருளாதாரத் தத்துவமும் வளர்ச்சி குன்றிய பிரதேசங்களும்** என்ற தன் நூலில் ஒரு கருத்தமைப்பை முன்வைத்தார். இதன்படி ஏதாவது ஒரு அனுகூலமான இடத்தில் ஆரம்பமாகும் பொருளாதார வளர்ச்சி தன் அளவைக் கூட்டி அங்கேயே தொடருகிறது. இதில் திரட்சியைத் துரிதப்படுத்தும் காரணிகளின் தாக்கம் அதிகரிக்கும்.

ஏதாவதொரு மையத்தின் (உட்கருவின்) துரிதமான வளர்ச்சி மற்ற பிரதேசங்களின் மீது இரட்டை தாக்கத்தைச் செலுத்துகிறது என்று மியூர்டல் கருதுகிறார். ஒரு புறம் பயன்மிகு "பரவும் விளைவு" (spread effect) உள்ளது; அதாவது மூலப்பொருளை அனுப்புதல், புதிய தொழில்நுட்பத்தைப் பரப்புதல் போன்ற வழிகளில் வளர்ச்சியானது ஊக்குவிக்கப்படுகிறது. மறு புறம் அதே நேரத்தில் "பின் விளைவு" (backward effect) காணப்படுகிறது; அதாவது நன்கு பயிற்சி பெற்ற ஊழியர்களும் மூலதனமும் பண்டங்களும் வளர்ச்சி

* V. I. Lenin, *Collected Works*, vol. 22, pp. 274—275.

6–1339

குன்றிய பிரதேசங்களிலிருந்து சீரிசைவான வளர்ச்சி மையங்களுக்கு வருகின்றன. திரட்சியின் ஆதாயங்கள் சேருவதால், வளர்ச்சி குன்றிய பிரதேசங்களின் ஒப்பீட்டளவு பின்தங்கிய நிலையை வலுப்படுத்தும் ''பின்விளைவு'' மேலோங்கி நிற்கிறது.

சந்தை முறையின் கட்டுப்பாடற்ற தாக்கம் சமூக பொருளாதார வளர்ச்சியின் மட்டங்களில் உள்ள வேறுபாடுகளை அதிகப்படுத்துகிறது என்று மியூர்டல் ஆணித்தரமாக மெய்ப்பித்தார். முதலாளித்துவ முறையின் இந்தத் தன்னிச்சையான நிகழ்ச்சிப் போக்குகளின் தீய விளைவுகளை அகற்றும் உணர்வு பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிடில், உரிய அரசுக் கொள்கையைக் கடைபிடிக்காமல் இருந்தால் இத்தகைய போக்குகள் ஒரு வெடிப்பிற்கு இட்டுச் செல்லக் கூடும்.

மியூர்டலின் நூல் வெளி வந்து ஓராண்டிற்குப் பின் 1958இல் அமெரிக்கப் பேராசிரியர் ஏ. ஓ. ஹிர்ஷ்மான் எழுதிய **பொருளாதார வளர்ச்சியின் செயல்திட்டம்** என்ற நூல் வெளி வந்தது. இதில் **பொருளாதார வளர்ச்சியின் பிராந்திய மற்றும் சர்வதேச விஸ்தரிப்பு** என்ற அத்தியாயம் அடங்கியிருந்தது. ஒரு விஷயத்தில் பார்த்தால் இது மேலைய சிந்தனையின் ''முன்னேற்றம்'' எப்படி வளைந்து வளைந்து செல்கிறது என்பதற்கான ஒரு அபூர்வ உதாரணமாகும். ஹிர்ஷ்மானின் சமமற்ற வளர்ச்சி பற்றிய அடிப்படைக் கருத்துகள் கிட்டத்தட்ட மியூர்டலின் கருத்துகளுடன் ஒத்துப் போகின்றன. கருத்துகள் காற்றில் தொங்கிக் கொண்டிருக்கின்றன, பல நேரங்களில் இவை கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் வெவ்வேறு விஞ்ஞானிகளிடம் உதிக்கின்றன என்று கூறுவார்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இது, ஒரே நிகழ்ச்சிப் போக்கு எப்படி வெவ்வேறு விதமாக அழைக்கப்படுகிறது, எப்படி வார்த்தை குழப்பம் ஏற்படுகிறது, விஞ்ஞான அகராதியில் இடம்பெற்ற ஒரு சொல் எப்படி வேறொரு பொருளில் பயன்படுத்தப்படுகிறது என்பதற்கான உதாரணமும் ஆகும். இறுதியாக, சாராம்சத்தில் பார்த்தால் ஹிர்ஷ்மானின் நூல் நவீன பூர்ஷ்வா விஞ்ஞானிக்குக் கூட மூடி மறைக்கப் படாத நவீன காலனியாதிக்க நாட்டங்களுக்கான ஒரு அபூர்வ மாதிரியாகும்; இது விஞ்ஞான சொற்றொடர்களால் சிறிதே அழகுபடுத்தப்பட்டுள்ளது, அவ்வளவுதான்.

எஃப். பெர்ரூவை கிட்டத்தட்ட வார்த்தைக்கு வார்த்தைத் திரும்பக் கூறும் ஹிர்ஷ்மான், ஆரம்ப குவிப்பின் தவிர்க்க இயலாமை பற்றிய ஆய்வுரையை அடிப்படை கருத்துநிலையாகக் கொள்கிறார். இவர் ''வளர்ச்சியடைந்த பிரதேசங்களைக்'' குறிப்பிட்ட மக்கள் பிரிவினருடன் தொடர்புபடுத்துகிறார் (இவர்களின் வர்க்க நிலை மீது இவர் கவனமே செலுத்தவில்லை!). ''இம்மக்கள் பிரிவினரின் ஆரம்ப வெற்றி வெறும் தற்செயலானதாக இருக்கலாம் அல்லது புறச்சூழலால், உதாரணமாக இயற்கை வளங்களால் கிட்டியிருக்கலாம்'' என்கிறார் ஹிர்ஷ்மான். (Hirschmann, 1969, p. 625.) பின் இவர் பொருளாதார

வெற்றி மற்ற பிரதேசங்களுக்கும் அரசுகளுக்கும் எப்படிச் செல்கிறது என்பதை ஆராய்கிறார். இங்கும் இவர் மியூர்டலைப் போன்றே இரண்டு எதிரெதிரான போக்குகளைச் சுட்டிக் காட்டுகிறார்: ''முன்னேற்றப்'' பிரதேசத்துடன் தொடர்புடைய நிலப்பரப்பின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவக் கூடிய பயன்மிகு போக்கு இவற்றில் முதலாவதாகும் (இதை இவர் ''கீழ்வடியும் போக்கு'' என்கிறார்). இரண்டாவது தீய போக்கை இவர் ''துருவமயப்படும் போக்கு'' என்கிறார்.

''முன்னேற்ற'' மற்றும் ''பின்தங்கிய'' பிரதேசங்களை ஆராயும் பொழுது ''வடக்கு — தெற்கு'' என்ற வார்த்தையை முதன்முதலாகப் பயன்படுத்திய மேலைய விஞ்ஞானிகளில் ஏ. ஹிர்ஷ்மானும் ஒருவர் என்று தோன்றுகிறது. இன்று இவ்வார்த்தை மேலைய நூல்கள், கட்டுரைகளில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. இதற்கு ஹிர்ஷ்மான் கொடுத்த வாதம் புவியியல் நோக்கிலும் சமூக அரசியல் நோக்கிலும் வியப்பையளிக்கிறது. இவர் பின்வருமாறு எழுதுகிறார்: ''...வளர்ச்சியடையும் பிரதேசத்தை 'வடக்கு' என்றும் பின்தங்கிய பிரதேசத்தை 'தெற்கு' என்றும் நாம் அழைப்போம். ஏனெனில் பின்தங்கிய பிரதேசங்களில் பெரும் பகுதி, குறைந்தபட்சம் வட கோளார்த்தத்தில், அந்தந்த நாடுகளின் தென் பகுதிகளில் உள்ளது.'' (Ibid., p. 627.) இது பல கேள்விகளை எழுப்பக் கூடும். இவர் எந்த நாடுகளைக் குறிப்பிடுகிறார்?

''வளர்ச்சி மண்டலம்'' தெற்கு எல்லையோரமாக பரவியுள்ள கானடா நாட்டையா? மிகவும் பின்தங்கிய பிரதேசங்கள் வடக்கே உள்ள கிரேட் பிரிட்டனையா? ஸ்காண்டிநேவிய நாடுகளையா? அமெரிக்காவின் முன்னாள் அடிமையுடைமை தெற்கையும், குறிப்பாக ''புதிய தெற்கையும்'' (இது சமூக ரீதியாக எவ்வளவுதான் பழமையானதாயிருந்தாலும்) பொருளாதார ரீதியாகப் பின்தங்கியது என்று கூற முடியாது. ஜெர்மன் சமஷ்டிக் குடியரசின் உதாரணத்திலும் இது சரிப்பட்டுவராது — ஏனெனில் இங்கே கிழக்குப் பிரதேசங்கள்தான் மிகவும் பின்தங்கியவையாகும். இது பிரான்சின் விஷயத்திலும் ஓரளவிற்குத்தான் பயன்படுத்தப்படலாம். இத்தாலியின் பின்தங்கிய தென் பகுதி மட்டுமே மூலச் சிறப்புள்ள'', விவாதத்திற்கு அப்பாற்பட்ட உதாரணமாக எஞ்சுகிறது. சரி, இது எதைக் காட்டுகிறது?

இவ்வாறாக, யதார்த்தம் ஹிர்ஷ்மானின் வரையறுப்புகளுக்கு முரண்பாடானதாக உள்ளது. ஆனால் இவருடைய சொந்த நூலிலும் சரி, இன்று மேற்கே பரவலாகப் பயன்படுத்தப்படும் விதத்திலும் சரி, இரண்டு சந்தர்ப்பங்களிலும் ''வடக்கு — தெற்கு'' என்ற சொல் சாதாரணமாக, தொழிற்துறை ரீதியில் வளர்ச்சியடைந்த நாடுகளும் வளர்முக நாடுகளும் பரஸ்பரம் எதிர் எதிராக நிற்பதைக் குறிக்கிறது. இங்கே இந்த புவியியல் அம்சம் பிரச்சினையின் மையத்தை மாற்றுகிறது. இப்பிரச்சினை வளர்முக நாடுகளின் கடந்த காலனியாதிக்க காலகட்டத்தில் அடங்கியுள்ளது, இதுதான் இன்று இவற்றின் பொருளாதாரப்

பின்தங்கிய நிலைக்கான முக்கியக் காரணமாகும். இதில் காலனி நாடுகளைக் கொள்ளையடித்து வாழும் ஏகாதிபத்திய அரசுகளும், முற்றிலும் வேறுபட்ட சமூக அரசியல் அமைப்பையுடைய சோவியத் யூனியனும் மற்ற சோஷலிச நாடுகளும் ''வடக்கு'' நாடுகள் என்ற பிரிவில் சேர்க்கப்படுகின்றன.

சுயமான அரசின் முழுமையை அப்படியே தக்க வைப்பது அல்லது பின்தங்கிய ஒரு பிரதேசத்தைச் சுயமான அரசாக்குவது, இரண்டில் எது ஆதாயமானது என்ற பிரச்சினை மீதும் ஏ. ஹிர்ஷ்மான் கவனம் செலுத்துகிறார். துருவமயப்படுத்துவதன் விளைவுகள் ஒரு பிரதேசத்தை விட ஒரு நாட்டிற்குக் குறைவான தீமையைத்தான் ஏற்படுத்தும் என்று கூறி இவர் ''பிரிவினையின் ஆதாயங்களைப்'' பின்வருமாறு ஆதாரப்படுத்துகிறார்:

— மூலதனத்தின் இயக்கமும் ஆட்களின் இடமாற்றமும் பண்டங்களின் பரிவர்த்தனையும் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய பிரதேசத்தை அலைக்கழிக்கும். சுயமான அரசுகள் நிலவும் பொழுது இது கடினமான தாகும்;

— முழு ஆதாயங்களின் அடிப்படையில்தான் பிரதேசங்கள் போட்டியிடும் (ஹிர்ஷ்மானின் கருத்துப்படி பிரதேசங்களுக்கு இடையில் இப்படிப்பட்ட பரஸ்பரத் தொடர்புகள் மட்டுமே சாத்தியம்). உதாரணமாக சர்க்கரை உற்பத்தியில் (பின்தங்கிய பிரதேசத்தில் இதற்கான சூழ்நிலை சற்றே மோசமானது) இப்படிப்பட்ட போட்டி இருக்கும். தனிப்பட்ட அரசுகள் என்ற முறையிலோ இவை ஒப்பீட்டளவு ஆதாயங்களின் அடிப்படையில்தான் போட்டியிடும். அப்போது ''தெற்கே'' ஒப்பீட்டளவில் குறைந்த லாபம் தரக் கூடிய இதே சர்க்கரைத் தொழிற்துறை ஒரே நாட்டின் வரம்பிற்குள், ''ஏற்றுமதிக்கான ஆதரவும், இதை விரிவுபடுத்துவதும் தெற்கே வளர்ச்சி துருவத்திற்கான மதிப்பு மிக்க அடிப்படையாக ஆகும்'' என்றாலும், வடக்கின் போட்டியால் ஒடுக்கப்படும்;

— இதே போல் மற்ற தொழிற் பிரிவுகள் வளர்ச்சியடையும் பொழுதும் பின்தங்கிய பிரதேசம், வளர்ச்சியடைந்த பிரதேசத்தின் போட்டியை சமாளிக்க முடியாமல் மேன்மேலும் பின்தங்கியதாகிறது, பிரிப்பதன் மூலம் இதைத் தவிர்க்கலாம்...

பிரிவினைக்கு ஆதரவாக வேறு வாதங்களையும் ஏ. ஹிர்ஷ்மான் முன்வைக்கிறார்! இவர் ''சீரிசைவற்ற வளர்ச்சியின்'' பெரும் ஆதரவாளராக விளங்கி, வளர்ச்சியடைந்த பிரதேசங்களில் அரசு முதலீடுகள் உட்பட எல்லா முதலீடுகளும் குவிக்கப்பட வேண்டும் என்கிறார். காலனியாதிக்கத்திலிருந்து விடுதலையடைந்த நாடுகளில் பின்தங்கிய பிரதேசங்களின் பிரச்சினையின் சாரத்தை இவர் பகுப்பாய்வு செய்யவில்லை. காலனியாதிக்க காலகட்டத்திலிருந்து இப்படிப்பட்ட பின்தங்கிய நிலையைப் பெற்ற இந்நாடுகள், பெரும் பிராந்திய பொருத்த

மின்மைகளை அகற்றுவதைத்தான் பிராந்தியத் திட்டமிடலின் முக்கியக் கடமைகளில் ஒன்றாகக் கருதுகின்றன; உள் அரசு இணைப்பை வலுப்படுத்துவதுதான் இதற்கான ஊக்குவிப்புகளில் ஒன்றாகும். ஹிர்ஷ்மான் ஒரு புறம், மூலதனங்களைச் சிதறடிப்பதற்காக வளர்முக நாடுகளின் அரசாங்கங்களை விமரிசித்து, திரட்சியின் ஆதாயங்களை ''நிரூபிக்கிறார்''; மறு புறமோ, துருவமயப்படுத்தல் பின்தங்கிய பிரதேசத்திற்கு அழிவுகரமானது, பிரிந்து போய் சுயமான அரசாக மாறுவதுதான் இதற்கு ஆதாயமானது என்ற ''தர்க்க ரீதியான'' முடிவிற்கு வருகிறார்.

முன்னேற்றமானது தொழிற்துறை ரீதியாக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலிருந்து ''மதிப்பு மிக்க இயற்கை வளங்களை உடைய'' வளர்முக நாடுகளுக்கு பின்னர் பரவும் என்று இவர் அப்பட்டமான நவீன காலனியாதிக்க மனப்பாங்கில் விளக்குகிறார். ''வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் பின்தங்கிய நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் பின்தங்கிய நாடுகளின் வளர்ச்சிக்கு உதவும் முக்கியக் காரணிகளில் ஒன்று பின்தங்கிய நாடுகளிலிருந்து வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு சில வகையான (சாதாரணமாகப் பூர்வாங்க) பொருட்கள் தேவைப்படுவதாகும். இந்த அன்னிய சப்ளை நாடுகளால் ஏதாவது காரணத்தால், தொழிற்துறை மையங்களின் விரைவாக வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் போனால், வளர்ச்சியடைந்த தொழிற்துறை நாடுகளிடமிருந்து **அனுதாபத்தை** (அழுத்தம் ஆசிரியருடையது) எதிர்பார்க்க முடியாது....'' (Ibid., p. 637.)

பின்தங்கிய நாடுகள், பிரதேசங்களின் வளர்ச்சிக்கு ''உதவுவதில்'' உள்ள சொந்த நேரடி அக்கறையைப் பற்றி அமெரிக்காவில் வெளிப்படையாகக் கூறுகின்றார்களே என்று ஹிர்ஷ்மான் புலம்புகிறார். ஏனெனில் இவர் முன்வைக்கும் ஒரு கருத்தமைப்பு, நவீன காலனியாதிக்கம் என்பது ஏதோ ஒரு நன்மை என்றும், அதிலும் யார் மீண்டும் காலனியாட்சிக்கு உட்படுத்தப்படுகின்றார்களோ அவர்களுக்கு நன்மை பயக்கத் தக்கது என்றும் நிரூபிக்கிறது.

ஆக, ''மையம் — எல்லையோரம்'' என்ற கருத்தமைப்பின் வகைகளில் ஒன்றைச் சுருக்கமாகப் பார்த்தால், ஹிர்ஷ்மானின் கருத்துப்படி பின்வருவது சாலச் சிறந்ததாய் இருக்கும்: ''ஒரு சில சந்தர்ப்பங்களில் ஒரு பிரதேசத்தை அரசைப் போலவும், வேறு சில சந்தர்ப்பங்களில் ஒரு அரசை பிரதேசத்தைப் போலவும் பாவித்து நடந்தால் இரண்டு இடங்களிலிருந்தும் மிகச் சிறந்ததைப் பெற்று, வளர்ச்சிக்கு மிக அனுகூலமான நிலவரத்தை நம்மால் தோற்றுவிக்க முடியும்.'' (Hirschman, 1969, p. 639.)

இந்த வாதத்தின் தர்க்கத்தைப் பகுப்பாய்வு செய்தால் அரசு—பிரதேசம் என்ற கலப்பு உறவின் சித்தரிப்பு எவ்வளவு கற்பனாவாத பிற்போக்குத் தன்மையை உடையது என்பது விளங்கும். அரசுகளுக்கு இடையிலான உறவைப் பார்க்கும் பொழுது ''மையம் — எல்லையோரம்''

என்ற கருத்தமைப்பு ''எல்லையோரத்தின்'', ''தெற்கின்'' பின்தங்கிய நிலையை நியாயப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது, பொருளாதார உறவுகளில் நவீன காலனியாதிக்க முறையைத் தக்க வைப்பதே இதன் லட்சியமாகும். அரசின் உள்ளே (முதலாளித்துவ, வளர்முக நாடுகள் இரண்டிலும்) இது மிகவும் கடுமையானதொரு பிரச்சினையாகும்; உண்மையிலேயே மையத்திற்கும் எல்லையோரத்திற்கும் இடையில் பெரும் சீரிசைவின்மைகள் நிலவுகின்றன, ஆனால் மேலே தரப்பட்ட சிபாரிசுகள் உண்மையான சர்வாம்ச வழிகாட்டியாக இருக்க முடியாது.

மொத்தத்தில் பொருளாதார வளர்ச்சியின் சமமின்மை பற்றிய பிரச்சினை சிக்கலானது, பன்முகத் தன்மையை உடையது. இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் உலக காலனியாதிக்க முறை தகர்ந்து வீழ்ந்து, மிகவும் பின்தங்கிய நிலையாலும் வறுமையாலும் வாடிய விடுதலையடைந்த நாடுகள் சமூக பொருளாதார வளர்ச்சிக்குப் பாடுபட, காலனியாதிக்கப் பொருளாதாரத்தின் துறை ரீதியான மற்றும் பிரதேச ரீதியான கட்டமைப்பும் நவீன காலனியாதிக்க ஒடுக்குமுறையும் சுரண்டலும் இதற்கு எதிராக நின்ற பொழுது இப்பிரச்சினை மிகவும் கடுமையானதாகியது. இது சமூக பொருளாதார வளர்ச்சி மட்டங்களில் உள்ள பிளவுகளைக் குறைக்கும் ஒரு உலகப் பிரச்சினையாகும்.

அதே நேரத்தில் ஆங்காங்கே உள்ள புறவய ரீதியான வரலாற்று மற்றும் புவியியல் வேறுபாடுகள் வளர்ச்சி சூழ்நிலைகளிலும் இதன் இடப் பரப்பு சமமின்மையிலும் உள்ள வேறுபாடுகளை நிர்ணயிக்கின்றன. கோட்பாட்டு ரீதியான வேறுபாடு என்னவென்றால், முதல் சந்தர்ப்பத்தில் பகையியல் வர்க்க முரண்பாடுகள் செயல்படுகின்றன, இவை ஒரு பிரதேசத்தை (நாட்டை) பயன்படுத்தி இன்னொரு பிரதேசத்தின் வளர்ச்சியின் சமமின்மையை நிர்ணயிக்கின்றன; இரண்டாவது சந்தர்ப்பத்தில் இடப் பரப்பு வேறுபாடுகள் பகை முரண்பாட்டுத் தன்மையைக் கொண்டிருக்க வேண்டும் (இவை முதலில் கூறப்பட்டவையுடன் இணைந்து செயல்படாவிடில்) என்ற அவசியமில்லை.

புதிய அம்சங்கள் பரவுவதைப் பற்றிய கருத்துகள் சமமற்ற வளர்ச்சி மற்றும் பொருளாதார மேம்பாடு பற்றிய கருத்துகளுக்கு (இவை வெவ்வேறு நேரங்களில் வெவ்வேறு விஞ்ஞானத் துறைகளில் முன்வைக்கப்பட்டன என்றாலும்) நெருக்கமானவை. கிட்டத்தட்ட நூறாண்டுகளுக்கு முன் மானுடவியல் மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சி இயலின் போக்குகளில் ஒன்று பரவுதல்வாதம் என்றழைக்கப்பட்டது: இதன் ஆதரவாளர்கள், கலாசார வளர்ச்சியில் பல்வேறு மக்களினங்களின் கலாசாரச் சாதனைகளை எடுத்துக் கொள்வதற்குப் பெரும் முக்கியத்துவம் அளித்தனர். பொருளாதாரத் துறையில் புதிய அம்சங்களைப் புகுத்தி பரப்பும் கருத்து 1912இலேயே ஷூம்பெதரால் முன்வைக்கப்பட்டது. ''புதிய அம்சம் என்பது தொழில் நடவடிக்கையின் ஒரு கருத்தினம்'' என்று இவர் கருதினார்; இது உற்பத்திச் சக்திகளை

யும் அனுபவத்தையும் புதிய கடமைகளின் நிறைவேற்றத்திற்காகப் பயன்படுத்துவதில் அடங்கியுள்ளது. இது தொழில்நுட்ப அல்லது பொருளாதார அல்லது சமூக புலப்பாடாக இருக்கலாம். புதிய அம்சங்கள் பரவுவது என்றால் ''தொழில்நுட்ப நிகழ்ச்சிப் போக்குகள், பொருட்கள், ஞானம், உற்பத்தி ஒழுங்கமைப்பின் வடிவங்கள் ஆகியவை இவை தோன்றிய இடத்திலிருந்து இவற்றைப் பயன்படுத்தவல்ல இடங்களுக்குப் பரவுவதாகும்.''

சமூக பொருளாதார புவியியல் துறையில் புதிய அம்சங்கள் பரவுதல் பற்றிய கருத்தமைப்பு 1950க்களின் தொடக்கத்திலிருந்து தீவிரமாகப் பரவத் தொடங்கியது. தி. ஹேகெர்ஸ்த்ரான்ட், இவருடைய தலைமையின் கீழிருந்த பிரபல லூண்டு (ஸ்வீடன்) புவியியல் போக்கினர் இதில் முக்கியப் பங்காற்றினர். ஹேகெர்ஸ்த்ரான்ட், இவருடைய சீடர்களின் பணி, ஸ்வீடன் புவியியலர்கள் மற்றும் பொருளாதார நிபுணர்களுக்கே உரித்தான அடிப்படை ஆராய்ச்சியைத் தொடருகிறது. இத்துறையில் பலான்டெர், கார்ல்சன், வுலியம்-ஓல்சன், டேகேர் போன்றோர் தம் ஆராய்ச்சிகளை நடத்தினர். ஹேகெர்ஸ்த்ரான்டின் ஆராய்ச்சிகள் ஆரம்பத்தில் ''மைக்ரோ சமூகவியல்'' ஆராய்ச்சிகளாக இருந்தன. இவர் விவசாயத் துறையில் புதிய அம்சங்கள் பரவும் வேகங்கள், முறைகள், வழிகளை ஆராய்ந்தார். விவசாயிகளின் கடன்கள், கால்நடைகளுக்குத் தடுப்பு ஊசிகள் போட்டு தொற்றுநோய்களை ஒழித்துக் கட்டுதல், விவசாயிகளுக்குத் தேவையான மண்ணியல் வரைபடங்களை வழங்குவது போன்றவற்றை இவர் ஆராய்ந்தார். 20ஆம் நூற்றாண்டின் முதல் பாதியிலிருந்த பதிவுகளின் அடிப்படையில் தெற்கு ஸ்வீடனில் தபால் காசோலைகள், வாகனங்கள், தொலைப்பேசிகள் ஆகியவை எப்படிப் பரவியுள்ளன என்று பகுப்பாய்வு செய்யப்பட்டது. ஹேகெர்ஸ்த்ரான்ட் புதிய அம்சத்தின் ஒரேயொரு ஆரம்ப ஊற்றிலிருந்து துவங்கி (மக்கள் சமமாகப் பரவியிருக்கையில்) இந்நிகழ்ச்சிப் போக்கின் பல்வேறு கட்டங்களைத் தர்க்க ரீதியாக ஆராய்கிறார்; விவரங்களைப் படிப்படியாக சிக்கலாக்கிய இவர் யதார்த்தத்தை நெருங்கி, புதிய அம்சங்கள் பரவ உதவக் கூடிய அல்லது இடையூறாக விளங்கக் கூடிய காரணிகளை மேன்மேலும் கவனத்தில் எடுத்துக் கொள்கிறார்.

அனுபவ விவரங்களைத் தொகுத்து பகுப்பாய்வு செய்த ஹேகெர்ஸ்த்ரான்ட் எல்லா வகையான (தொழில்நுட்ப, பொருளாதார, சமூக, கலாசார) புதினங்களும் பரவுவதைப் பற்றிய புவியியல் கருத்தமைப்பை உருவாக்கினார். இதன் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

—பரவுதலில் இரண்டு பக்கங்கள் உள்ளன: ஒன்று தகவலைப் பரவச் செய்தல், மற்றொன்று புதினத்தை ஏற்றுக் கொள்ளும் திறமை;

—தகவல் பல்வேறு வழிகளில் பரவுகிறது, இவற்றை இரண்டு முக்கிய வகைகளாகப் பிரிக்கலாம்: வெகுஜன தகவல் தொடர்பு சாதனங்கள், தனிப்பட்ட தொடர்புகள்;

—தனிப்பட்ட தொடர்புகள் முக்கியப் பங்காற்றுகின்றன; இவை ஒருவித விசேஷ கிளையமைப்புகளைத் தோற்றுவிக்கின்றன, இவற்றில் தகவல்களின் மூல ஊற்று மையங்களும் தகவல்களைப் பெறுமிடங்களும், இணைப்பு வழிகளும் அடங்கியுள்ளன;

—இந்தத் தகவல் மையங்கள் படி அமைப்பு முறைகளை ஏற்படுத்து கின்றன; இவை பல்வேறு பிராந்திய மட்டங்களில் செயல்பட்டு அந்தந்த செல்வாக்கு மண்டலங்களை உருவாக்குகின்றன. (Hägerstrand, 1967.)

ஹேகெர்ஸ்த்ரான்டாலும் இவருடைய சீடர்களாலும் முன்வைக்கப் பட்ட புதிய அம்சங்கள் பரவுவதைப் பற்றிய கருத்தமைப்பு பெரிதும் தர்க்க அடிப்படையிலானது. ஆக்க பூர்வமான ஒரு தத்துவமாக விளங் கும் இது வளர்ச்சியை முன்னறிவிக்கவும் பிராந்தியத் திட்டமிடலுக் கான விஞ்ஞான அடிப்படையைத் தரவும் வாய்ப்புகளைப் பெற்றுள்ளது.

ஏராளமான நூல்கள், கட்டுரைகளில்—பேடெர்சன் (1970), டோர்ன் குவிஸ்ட் (1970), பெர்ரி (1972), பிரேட் (1973) இதரர்—இட ரீதியான பரவுதலின் பல்வேறு அம்சங்கள் விளக்கப்பட்டுள்ளன. புதிய அம்சங்கள் பரவுவதால் கிட்டும் ஆதாயங்களைப் பற்றிய மதிப்பீடு, இதற்கான சாலச் சிறந்த காலகட்டங்களைப் பற்றிய மதிப்பீடு போன்றவை இவற்றில் அடங்கும். விஞ்ஞான தொழில்நுட்ப சகாப்தத்தில், சமூக பொருளாதார முன்னேற்றத்தில் தகவல் தொடர்பு முறை வலுப்படுகிறது, தகவல்களின் பெருக்கு பெரிதும் அதிகரிக்கிறது, இவற்றைப் பற்றிய கருத்துகள் வளர்ந்து செழுமையடைந்து வருகின்றன. புதிய அம்சங்களுக்குப் பழக்கப்படுவது, தொழில் நிறுவனங்களின் இட அமைப்பு போன்றவை சம்பந்தமான முடிவுகளை எடுப்பதன் மீது தாக்கம் செலுத்தும் பல் வேறு காரணிகளைப் பற்றிய ஞானம் விரிவடைந்து வருகிறது. இப் படிப்பட்ட ஆராய்ச்சிகள் புவியியலில் ‘‘நடத்தை’’ என்ற ஒரு புது கிளைதோன்ற வழியமைத்தன.

புதிய அம்சங்கள் பரவுவதைப் பற்றிய யாந்திரிகவாத கருத்தமைப்பிற் குத் தெட்டத்தெளிவான பலவீனங்கள் உண்டு. இது முழுக்க முழுக்க தனியார் முதலாளித்துவப் பொருளாதாரத்தைப் பற்றிய ஆராய்ச்சி களின் அடிப்படையிலானது, அந்தந்த பரவும் முறையையும் புதிய அம்சங் கள் பழக்கப்படுவதையும் மட்டுமே கவனத்தில் கொள்கிறது. ஆனால் முதலாளித்துவ நாடுகளிலும் புதிய அம்சங்கள் பரவும் சூழ்நிலைகள் சாதாரணமாக வரைபட வடிவில் திட்டமிடப்படுகின்றன, யதார்த்தத் திலிருந்து பெரிதும் தள்ளியிருக்கின்றன. முதலாளித்துவத்தில் ஒடுக்கப் பட்ட மக்கள் பிரிவினர் மற்றும் பின்தங்கிய பிரதேசங்களின் முன்னேற் றத்தை மட்டுப்படுத்தும் முக்கிய சமூக பொருளாதாரக் காரணிகள் இக்கருத்தமைப்பில் இடம் பெறவில்லை.

சமூக வளர்ச்சியின் மீது சமூக பொருளாதார மற்றும் அரசியல் கட்டமைப்புகளின் தீர்மானகரமான தாக்கத்திற்கான நல்ல உதாரணங்

களில் ஒன்று பெரும்பாலான வளர்முக நாடுகளில் ''பசுமைப் புரட்சி'' மட்டான அளவில் பரவியிருப்பதாகும். 1960க்களில் புதிய, உயர் விளைச் சலைத் தரக் கூடிய கலப்பு விதைகளும், மூலதனம் அதிகம் தேவைப்படும் நவீன சாகுபடி முறைகளும் புகுத்தப்பட்டதையடுத்து விளைச்சல் பெரிதும் அதிகரித்தது; குறிப்பாக குட்டையான கலப்பு கோதுமை மற்றும் மக்காச்சோளம், நெல், இதர பயிர்களின் விளைச்சல் கூடியது. இதனால் வளர்முக நாடுகளின் உணவுப் பொருள் பிரச்சினை விரை வில் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. ஆனால் ''பசுமைப் புரட்சியின்'' புதிய அம்சங்கள் பரவுவதானது சாதாரணமாக பரப்பு ரீதியில் பெரிதும் மட்டானது என்பது ஒரு சில ஆண்டுகளிலேயே தெளி வாயிற்று. உதாரணமாக, இந்தியாவில் ''இப்பசுமைப் புரட்சி'' பெரும் பாலும் வட மேற்கில், பஞ்சாப்-ஹரியானா பிரதேசத்திலும் அரு கிலுள்ள உத்தர பிரதேசத்தின் சில பகுதிகளிலும் மட்டுமே பரவியது. அருகேயிருந்த கிராமப் பகுதிகளின் வறுமையும் சமூக, விவசாயக் கட் டமைப்பின் பின்தங்கிய நிலையும் இது மேற்கொண்டு பரவ தடையாக நின்றன. சமூக பொருளாதார சூழலின் பன்முகத் தன்மை, பின்தங்கிய பிரதேசங்களில் கீழ் நிலை அமைப்புகள் மிகுந்திருப்பது — இவை பெரும் பாலான வளர்முக நாடுகளுக்கு உரித்தானவை. இது புதிய அம்சங்கள் பரவுவதைக் கடினமானதாக்குகிறது, சமமற்றதாக்குகிறது.

தொழில்நுட்ப, பொருளாதார, ஸ்தாபன அமைப்பு புதினங்களுக்குப் பழக்கப்படுவதுடன் நவீனமயப்படுத்தும் போக்கு நின்று விடவில்லை. இது பெருமளவிற்கு ஒரு சமூக, அரசியல் நிகழ்ச்சிப் போக்காகும். வளர் முக நாடுகளில் இயங்கும் பன்னாட்டு ஏகபோகங்களை ஆராயும் பொழுது, இவற்றிலிருந்து புதிய அம்சங்கள் பரவுவதானது சாதாரண மாக நவீனமயப்படுத்தப்பட்ட சுரண்டல் வடிவங்கள் பரவுவதைக் காட்டுகிறது என்பது தெளிவாகிறது.

நவீன முதலாளித்துவ நிர்வாக அமைப்பு, சக்தி மிக்க உற்பத்தி, தொழில்நுட்ப உள்ளாற்றல் ஆகியவற்றைக் கொண்டுள்ள இந்தக் கார்ப்பரேஷன்கள் விஞ்ஞான, தொழில்நுட்பப் புரட்சியின் ஆதாயங் களையும் சாதனைகளையும் பயன்படுத்துகின்றன, அதே நேரத்தில் இவை விடுதலையடைந்த நாடுகளில் தம் நடவடிக்கையை ''நவீனமயப் படுத்தலின் மாதிரியாக'' விளம்பரப்படுத்த பெரும் முயற்சிகளை மேற் கொள்கின்றன. இந்தப் பன்னாட்டு ஏகபோகங்கள் ஏதோ வளர்முக நாடுகளின் வளர்ச்சியிலும் இங்கு புதிய அம்சங்களைப் பரப்புவதிலும் ஒரு முக்கியப் பங்காற்றுவதாக இவற்றின் ஆதரவாளர்கள் கூறு கின்றனர்.

ஆனால் இப்படிப்பட்ட வளர்ச்சியின் பயன்கள் முன்னாள் காலனி மற்றும் சார்பு நாடுகளை இன்று வரை பாதித்து வருகின்றன. இம் மாதிரியான ''முன்னேற்றம்'' உண்மையில் காலனியாதிக்கச் சுரண்டலைத் தான் குறித்தது. உற்பத்தி-பிரதேச இரட்டைப் போக்கு, அதாவது

காலனியாதிக்கப் பொருளாதாரத்தின் பிரதேசக் கட்டமைவின் பிளவு (இது விடுதலையடைந்த நாடுகளின் சுயமான வளர்ச்சி நலன்களுக்கு முரண்பாடானதாக உள்ளது) இதன் வெளிப்பாடுகளில் ஒன்றாகியது.

4. காலனியாதிக்கப் பொருளாதாரத்தின் பிரதேசக் கட்டமைவும் இதை ஆராய்ந்து மாற்றியமைக்கும் கடமைகளும்

பெரும்பாலான வளர்முக நாடுகளில் கிட்டத்தட்ட கால் நூற்றாண்டிற்கும் மேலாக, துருவங்கள் பற்றிய கருத்தமைப்பின் அடிப்படையில் பிராந்தியத் திட்டங்களைத் தீட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் தொடர்பில் இடப் பரப்பு வளர்ச்சியின் பயன்களைப் பற்றிய வளர்முக நாட்டு விஞ்ஞானிகளின் சுய மதிப்பீடுகளும் *Regional Policies in Nigeria, India & Brazil*, 1978 என்ற ஐ.நா.வின் பிராந்திய தொடர்வரிசை தொகுப்பு நூலும் (இதில் மூன்று கண்டங்களைச் சேர்ந்த மூன்று பெரும் நாடுகளின் பிராந்திய வளர்ச்சியின் பின் விளைவுகள் ஒப்பிடப்படுகின்றன) பெரிதும் சுவாரசியமானவை. உலக புவியியல் சங்கத்தின் முன்னாள் தலைவரும் நைஜீரியாவின் புவியியல் நிபுணருமாகிய அக்கீன் மபோகூன்ஜே **நைஜீரியாவின் பிராந்திய வளர்ச்சியில் வளர்ச்சியின் துருவங்களும் மையங்களும்** என்ற நூலில் இப்பெரும் ஆப்பிரிக்க நாட்டில் பிராந்திய சீரிசைவின்மைகள் தோன்றும் போக்கின் மீது பெரும் கவனம் செலுத்துகிறார். பொருளாதார-புவியியல் இடப் பரப்பு பாகுபாடுபடுத்தப்பட்டுள்ளது (உதாரணமாக, இயற்கைச் சூழல், மக்களின் பழக்க வழக்கங்கள் போன்றவற்றின் தொடர்பில் எந்தப் பயிர்கள் சாகுபடியாகின்றன என்பதைப் பொறுத்து) என்கிறார். ஆனால் நாடு காலனியாதிக்கச் சுரண்டலுக்கு உட்படும் பொழுது இப்பாகுபாடு பிராந்திய சீரிசைவின்மையில் முற்றிலும் வேறுபட்ட, பகை முரண்பாட்டுத் தன்மையைப் பெறுகிறது. பல்வேறு பிரதேசங்களுக்கும் தேசிய மக்கள் பிரிவினருக்கும் இடையில் காலனியாதிக்கத்தின் பொழுது நம்பிக்கையின்மையும் போட்டியும் பிறந்து வளர்ந்தன. இவை இன்று உள்நாட்டு நிலவரத்தை மிகவும் சிக்கலானதாக ஆக்குகின்றன, பெரும் அரசுப் புது கட்டுமானங்களின் இட அமைப்பு உட்பட பிராந்தியக் கொள்கையின் எல்லா அம்சங்கள் மீதும் தாக்கம் செலுத்துகின்றன. ''ஒரு தொழில் நிறுவனத்தின் உற்பத்திப் பொருளை மட்டுமே சந்தையால் கிரகிக்க முடியும் என்பது தெளிவாகத் தெரியும் பொழுதும் பல்வேறு பிரதேசங்களில் ஒரே துறையைச் சேர்ந்த தொழில் நிறுவனங்களை அமைப்பதிலிருந்து இது நன்கு தெரிகிறது.'' மபோகூன்ஜே நைஜீரிய நாட்டு தேசியப் பொருளாதாரக் கவுன்சிலின் முடிவை (1964) உதாரணம் காட்டுகிறார். வடக்கு நைஜீரியாவில் ஒன்றும் கிழக்கு நைஜீரியாவில் ஒன்றுமாக இரண்டு உலோகத் தொழிற்சாலைகளைக் கட்டுவதென்றும், மேற்கு நைஜீரியாவில் மூன்றாவது தொழிற்சாலை

யைக் கட்டுவதற்கான இடங்களை ஆராய்வதென்றும் முடிவெடுக்கப் பட்டது. அதே பொழுது, ''ஒரே ஒரு தொழிற்சாலையைக் கட்டுவது தான் மொத்தத்தில் நாட்டிற்கு ஆதாயமானது'' என்று தொழில் நுட்ப, பொருளாதார அறிக்கைகள் குறிப்பிட்டதை இங்கு கூற வேண்டும்.

நைஜீரியா சுதந்திரமடைந்ததும் 1970க்களின் ஆரம்பத்தில் எண்ணெய் நெருக்கடி தோன்றியதிலிருந்து நைஜீரியாவின் எண்ணெய் முக்கியத் தொழிற்துறை, ஏற்றுமதிப் பண்டமாக, முக்கிய வருமானமளிக்கும் பொருளாக மாறியது. ஆனால் இத்தோடு சேர்த்து பிராந்திய முரண்பாடுகள் வலுப்படுகின்றன, ''துருவமயப்படுதல்'' அதிகரிக்கிறது. இது பின்வரும் இரண்டு முக்கிய வழிகளில் நடைபெறுகிறது: 1) நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையிலான பிளவுகள் (பொருளாதார, தொழில்நுட்ப, சமூக) அதிகரிக்கின்றன; 2) பெரும் நகரங்களில் ஆலைத் தொழிலின் குவிப்பு அதிகரிக்கிறது.

1970க்களில் நாட்டில் நபர் ஒருவருக்கான விவசாயப் பொருளுற்பத்தி குறைந்தது; இதுவும் விரைவான பணவீக்கமும் கிராமங்களிலிருந்து மக்களின் வெளியேற்றமும் சேர்ந்து, அலட்சியப்படுத்தப்பட்ட கிராமப்புறங்களில் பெரும்பாலான மக்களின் வாழ்க்கைத் தரம் கடந்த பத்தாண்டுகளில் சீர்கேடடைந்ததைக் காட்டின. 1960க்களின் ஆரம்பத்தில் தேங்காய் எண்ணெயையும் கடலை எண்ணெயையும் ஏற்றுமதி செய்வதில் முன்னணியில் இருந்த நைஜீரியா 1970க்களின் இறுதியில் இவற்றையும் உணவு தானியத்தையும் இறக்குமதி செய்யத் துவங்கியது. மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை வழங்குவதில் முழுமூச்சோடு ஈடுபடுமாறு அரசாங்கம் அறைகூவல் விடுத்தாலும் உண்மையில் 3ஆவது வளர்ச்சித் திட்டத்தில் (1976) விவசாயத் துறையின் வளர்ச்சிக்கான நிதி ஒதுக்கீடுகள் 6.7% வரை குறைக்கப்பட்டன.

எல்லையோர விவசாயப் பகுதிகளின் வீழ்ச்சி பெரும் நகரங்களில், குறிப்பாகத் தலைநகரில் ஆலைகளின் குவிப்பு பெரிதும் அதிகரித்து வருவதன் பின்னணியில் நடைபெறுகிறது: தொழிற்துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கையில் லாகோசின் பங்கு 1965இல் 36.4% விருந்து 1975இல் 48.3% ஆக உயர்ந்தது. அந்நிய முதலீடுகள் அதிகரிப்பதால் பொருளாதாரத் துருவமயப்படும் போக்கு மோசமாகிறது. ''...நைஜீரிய அரசாங்கக் கொள்கை ஆதரிக்கும் வளர்ச்சிப் போக்கானது பெரும் வெளிச் சார்பு நிலையை அடிப்படையாகக் கொண்டுள்ளது, ஸ்தல வளங்களைப் போதுமான அளவில் பயன்படுத்த வழியமைக்கவில்லை, கனரகத் தொழிற்துறையின் வளர்ச்சி மீது உரிய கவனம் செலுத்தப்படவில்லை, இதில் தொழிற்துறைப் பொருட்களின் நிகர மதிப்பு குறைவாயுள்ளது... இடப் பரப்பீட்டு துருவமயப்படுதல் அசாதாரணமாக உயர்வாயுள்ளது.'' (Rauch, 1982, p. 158.) இத்தகைய வளர்ச்சி முறை (இதன் இடப் பரப்பு அம்சங்களையும் சேர்த்து)

அரசு வரி முறை மற்றும் உதவித் தொகைகளால் இயக்குவிக்கப்படு கிறது. இவை வெளியிலிருந்து கொண்டு வரப்படும் மூலப்பொருட்களின் அடிப்படையில் நுகர்வுப் பண்டங்களின் உற்பத்தி வளர்ச்சியில் தனியார் துறைக்கு உதவுகின்றன, ஸ்தல மூலப்பொருட்களையும் பாதி தயாரான பொருட்களையும் பயன்படுத்தும் தொழிற்துறை உற்பத்திக்கு இடை யூறு விளைவிக்கின்றன.

பொருளாதாரத் துருவமயப்படுதல் அதிகரித்து வருவதற்கான கார ணம் சமூக அரசியல் துறையில் அடங்கியுள்ளது: எண்ணெய் உற்பத்தி யால் செல்வம் சேகரித்த தேசிய முதலாளி வர்க்கமும் அதிகார வர்க்க மேல்மட்டமும் உயர் நிர்வாக உறுப்பும் மற்ற மேல்மட்டத்தினரும் இறக்குமதி செய்யப்படும் பாதித் தயாரான பொருட்களின் அடிப்படை யில் உயர் தரமுள்ள நுகர்வுப் பொருட்களின் உற்பத்தியை வளர்க்க பாடுபடுகின்றனர். இவ்வாறாக வர்க்கப் பிரிவு வலுப்படுவதானது துறைகள் இரண்டாகப் பிரியும் போக்கு வலுப்படுவதுடனும் (அதாவது விவசாயத் துறையும் சிறிய மற்றும் வழக்கமான குடிசை தொழிற்துறை உற்பத்தியும் தேக்கமடையும் அதே சமயத்தில் நுகர்வுப் பண்டங்களின் ஆலை உற்பத்தி பெரும் வளர்ச்சியடைகிறது) பிராந்திய சீரிசைவின் மைகள் ஆழமடைவதுடனும் பரஸ்பரத் தொடர்பு கொண்டு நடை பெறுகிறது; நகரத்திற்கும் நாட்டுப் புறத்திற்கும் இடையில் ஆழமடைந்து வரும் பிளவு இதில் முக்கியப் பங்காற்றுகிறது.

நைஜீரியாவில் துருவ வளர்ச்சியின் நீண்ட கால வாய்ப்புகள் பற்றி பகுப்பாய்வு செய்த மபோகூன்ஜே, வளர்முக நாடுகளின் பிரச்சினை களின் விசேஷ அம்சங்களை அதிகபட்சம் முழுமையாக கவனத்தில் கொள்ள வேண்டியதன் அவசியத்தைக் கோடிட்டுக் காட்டினார். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருவதானது உழைப்பு அதிகம் தேவைப்படும் உற்பத்தித் துறைகளின் தீவிர வளர்ச்சியை முன்னனுமானிக்கிறது; உதாரணமாக, சிறு தொழில் நிறுவனங்கள் மற்றும் வழக்கமான குடிசை உற்பத்தித் துறைகளின் துரித வளர்ச்சி இதிலடங்கும்.

வளர்ச்சியின் துருவங்கள் மற்றும் மையங்கள் பற்றிய கருத்தமைப் பிற்கு ''நல்ல திட்டவட்டமான வரையறுப்பு வேண்டும்.... திட்டமிடு தலின் நீண்ட கால செயல்திட்டமாக இதைப் பயன்படுத்தும் பொழுது, இதற்கு ஆதரவு தரும் நிறுவன அமைப்புகளும் உரிய கொள்கையும் இல்லாவிடில் இது வீணானதாக இருக்கும்'' என்ற முடிவிற்கு மபோ கூன்ஜே வருகிறார். பிராந்தியத் திட்டமிடலின் விஞ்ஞான அடிப்படை யின் முக்கியக் கடமையை வரையறுப்பதுடன் இவர் தன் ஆராய்ச் சியை முடிக்கிறார். அதாவது ''நாட்டின் ஒவ்வொரு பகுதியும், முன் னோக்கி வளரும் ஐக்கிய பொருளாதாரத்தின் மற்ற பகுதிகளுடன் எங்கே, எப்படி இணைந்துள்ளது என்பதைக் காண வேண்டும்''. திட்ட வட்டமாக வரையறுக்கப்பட்டுள்ள இக்கடமை (உற்பத்தி, பொருளா

தார முன்னேற்றத்தை வலுப்படுத்துதல்) முன்னாள் காலனி மற்றும் சார்பு நாடுகளின் பிராந்திய வளர்ச்சியின் ஜீவாதார முக்கியத்துவம் வாய்ந்த கடமைகளைப் பிரதிபலிக்கிறது. ஆனால் இங்கே, வளர்ச்சித் துருவங்கள் பற்றிய கருத்தமைப்பு இக்கடமைகளின் நிறைவேற்றத் திற்கு ஏற்றதாய் உள்ளதா இல்லையா என்ற கேள்வி பதிலின்றி அப் படியே உள்ளது.

பிரபல இந்திய புவியியலர்கள் ஆர். எம். மிஸ்ராவும் கே. வி. சுந் தரமும், நவீனமயப்படுத்தலின் சாரம் எதில் அடங்கியுள்ளது என்ற கேள்வியை முன்வைக்கின்றனர். பல புறவயக் காரணங்களினால், வளர்ச்சி என்ற நிகழ்ச்சிப் போக்கின் சாரம் எதில் அடங்கியுள்ளது என்ற அதிகப் பொதுவான பிரச்சினை குறித்தும் அடிக்கடி சிந்திக்க வேண்டி வருகிறது. மாற்றங்கள், ''புதிய அம்சங்கள்'' தோன்றி பரவி பழக்கப்படு வதில்தான் இதன் சாரம் அடங்கியுள்ளது, இது ''சிக்கலான கலாசார, தொழில்நுட்ப வளர்ச்சிப் போக்கு'' என்ற முடிவிற்கு இவர்கள் வரு கின்றனர். நவீனமயப்படுத்தலின் மேலைய மாதிரியை அப்படியே கண் மூடித்தனமாகப் பின்பற்றக் கூடாதென்று இவர்கள் கருதுகின்றனர்; ஏனெனில் இதில் ஆக்க பூர்வமான அம்சங்களைத் தவிர அழிவு அம்சங் களும் உள்ளன என்று கூறும் இவர்கள் ''ஒவ்வொரு சமுதாயமும் தனக்கு ஏற்ற நவீனமயப்படுத்தும் வழிகளையும் முறைகளையும் கண்டுபிடிக்க வேண்டும்'' என்ற முடிவிற்கு வருகின்றனர். இந்திய விஞ்ஞானிகள் நவீனமயப்படுத்தல் மற்றும் நகரமயப்படுத்தல் என்னும் நிகழ்ச்சிப் போக்குகளைத் தொடர்புபடுத்தி, வளர்ச்சியின் துருவங்கள் மற்றும் மையங்கள் பற்றிய மாற்றியமைக்கப்பட்ட கருத்தமைப்பை முன்வைக் கின்றனர்; இதற்கு ''வளர்ச்சியின் குவிமையங்கள்'' பற்றிய கருத்த மைப்பு என்று பெயரிட்டனர். இது வெறும் வார்த்தை மாற்றம் அல்ல, இங்கே விஷயம் ஆழமானது.

இந்திய விஞ்ஞானிகள் ஐந்து மட்ட குடியிருப்பு படிவரிசையை முன்மொழிகின்றனர். இக்குடியிருப்புகள் பல்வேறு அளவுகளையுடைய பிரதேசங்களுடன் இணைந்தவை. ''நவீனமயப்படுத்தும் நிகழ்ச்சிப் போக்கு இந்த வளர்ச்சி குவிமையங்களின் மூலம் பரவுகிறது'' என்று இவர்கள் கருதுகின்றனர்.

1) கீழ் ஸ்தல மட்டம் — மத்திய கிராமம் (1,00,000; இங்கும் இதற்குக் கீழும் அடைப்புக் குறிகளுக்குள் உள்ள எண் 2000ஆம் ஆண்டு வாக்கில் இந்தியாவில் இத்தகைய மையங்கள் எவ்வளவு இருக்கும் என்பதைக் குறிக்கின்றது);

2) ஸ்தல மட்டம் — சேவை மையங்கள் (20,000; ஒவ்வொன்றிலும் தலா 5,000 நகர மக்கள்);

3) மைக்ரோ பிராந்திய மட்டம் — வளர்ச்சிப் புள்ளிகள் (4,000; ஒவ்வொன்றிலும் தலா 10,000 நகர மக்கள்);

4) மேசோ பிராந்திய மட்டம்—வளர்ச்சி மையங்கள் (500; தலா 2 லட்சம் மக்களையுடைய நகரங்கள்);

5) மேக்ரோ பிராந்திய மட்டம்—வளர்ச்சி துருவங்கள் (30; தலா 20 லட்சம் மக்களையுடைய நகரங்கள்).

இந்த வரைபடம் நகரங்கள், மற்ற குடியிருப்புப் பகுதிகளின் சாதாரண படிமட்டத்தை நினைவுபடுத்துகிறது. இங்கு இந்திய விஞ்ஞானிகள், மக்கள் இடப் பகிர்வு முறையின் மூலம் நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சிப் போக்கு பரவுவதைப் பன்முக பிராந்தியக் கண்ணோட்டத்தில் அணுகுகின்றனர்.

பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய ஒரு பிரதேசத்தை, அதாவது இந்திய தீபகற்பத்தின் வட கிழக்குப் பகுதியை (இங்கு கனிவளமும் மூலப்பொருட்களும் மிகுந்துள்ளன, ஆனால் இது உள்ளடங்கியுள்ளது, இங்கு சிறு மக்களினங்களும் பழங்குடியினரும் மட்டுமே வாழுகின்றனர்) நவீனமயப்படுத்துவதில் ''வளர்ச்சி குவிமையங்களின்'' முக்கியத்துவம் பற்றிய திட்டவட்டமான பகுப்பாய்வு சுவாரசியமானது. ஒரு சில மையங்களில் (இவை தம் பங்கிற்கு ''வளர்ச்சிப் பாதைகளை'' நோக்கி ஈர்க்கப்படுகின்றன) புதிய கனரகத் தொழில் நிறுவனங்கள் குவிவதை வரைபடங்களிலும் மற்றவற்றிலும் காட்டும் இந்திய விஞ்ஞானிகள், நவீனமயப்படுத்தல் பரவவில்லை, மாறாக ''உள்நாட்டு காலனியாதிக்கம்'' தோன்றி வருகிறது என்ற முடிவிற்கு வருகின்றனர். இவர்களுடைய கருத்தின்படி இதன் குறிப்பிடத்தக்க அம்சங்களாவன: 1) சுரங்கத் தொழிற்துறையில் மூலதனக் குவிப்பும் ஆரம்ப மற்றும் பாதித் தயாரான பொருட்களின் உற்பத்தியும்; 2) போக்குவரத்து மார்க்கங்களின் கட்டுமானம், இவை சில சந்தர்ப்பங்களில் மூலப்பொருட்களை எடுத்துச் செல்வதற்கு மட்டும் பயன்படும்; 3) லாபங்களை மற்ற பிரதேசங்களில் முதலீட்டிற்காகப் பயன்படுத்தல்; 4) நவீனமயப்படுத்தலில் உள்ளூர் மக்களை ஈடுபடுத்த எவ்வித ஒழுங்கான முயற்சிகளும் இல்லாமை. இவ்வாறாக இவர்கள், ஒரு பிரதேசத்தின் உள்ளே ''வெளிப்படையான இரட்டை முறை'' தோன்றுவதைச் சுட்டிக் காட்டுகின்றனர்.

மற்ற வளர்முக நாடுகளைப் போன்றே இந்தியாவிடமும் நிதி வாய்ப்புகள் மட்டானவையாக உள்ளன என்பதை குறிப்பிடும் இந்திய விஞ்ஞானிகள், இச்சூழ்நிலையில் முதலீடுகளின் செயல்வன்மை குறிப்பாக அதிகமானதாக இருக்க வேண்டும், இம்முதலீடுகளின் பயன் அதிகபட்சமானதாக இருக்கும்படி திட்டங்கள் நீண்ட கால அடிப்படையில் தீட்டப்பட வேண்டும் என்ற முடிவிற்கு வருகின்றனர். இதற்குப் பொருளாதாரத்தின் குறிப்பிட்ட துறைகளிலும் புவியியல் பரப்பிலும் முதலீடுகள் குவிக்கப்பட வேண்டும். இதில் ''வளர்ச்சியின் குவிமையங்கள்'' பரப்பு ரீதியாக ''நவீனமயப்படுத்தலின் சக்கரங்களாக'' செயல்பட வேண்டும்.

பிரேசில் சம்பந்தமான ஆராய்ச்சிகளை மேற்கொண்ட ஐ. பபரோவிச்

இந்நாட்டின் திட்ட உறுப்புகளில் ஐ. நா. நிபுணராக ஓராண்டிற்குப் பணியாற்றினார். இவரும் வளர்முக நாடுகளின் முக்கியப் பிரச்சினை களில் ஒன்றை ஆராய்வதன் மீது கவனம் செலுத்துகிறார். ''வளர்ச்சி யின் துருவங்களான'' பெரிய நகரங்களை நோக்கி ஈர்க்கப்படும் ''மத்திய பிரதேசங்களுக்கும்'' பின்தங்கிய பரவலான கிராமப் பகுதி களுக்கும் (இங்கு கிராம மக்களில் பெரும்பாலோர் மிகவும் வறுமை நிலையில் வாழுகின்றனர்) இடையிலான பரஸ்பர உறவு பற்றிய பிரச் சினைதான் இப்பிரச்சினையாகும். இப்பிரதேசங்களையும் மக்களையும் பொதுவான பொருளாதார வாழ்க்கை ஓட்டத்திற்குக் கொண்டு வந்து, படிப்படியாக நவீனமயப்படுத்தி வளர்க்கும் சிக்கலான கடமை அந்த நாட்டின் முன் நிற்கிறது.

வளர்முக நாடுகளில் பிராந்திய வளர்ச்சியின் அனுபவம் பற்றிய சுருக்கமான பகுப்பாய்வின் அடிப்படையில் பின்வரும் முக்கிய முடிவு களுக்கு வரலாம். முக்கிய முடிவு தெட்டந்தெளிவு: பொருளாதார ரீதி யாக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் புள்ளி விவரங்களின் அடிப்படையில் தீட்டப்பட்ட கருத்தமைப்பு வளர்முக நாடுகளின் விசேஷ சூழ்நிலைகளுக்கு அதிகம் பொருந்தி வராது. இது தவிர, இதை யதார்த்தத்தில் பயன்படுத்தும் பொழுது இது பிராந்திய சீரிசை வின்மைகளை ஆழப்படுத்தலாம், உற்பத்தி, பிரதேச இணைப்பிற்கு இடையூறாக இருக்கலாம், பின்தங்கிய பிரதேசங்களின் பொருளாதார வளர்ச்சிக்குத் தடை செய்யலாம்.

வளர்முக நாடுகளின் உள்நாட்டு வாழ்க்கையின் சிக்கலான பிரச் சினைகள் காலனியாட்சியாளர்கள் விட்டுச் சென்ற துறை ரீதியான மற்றும் பிரதேசக் கட்டமைப்புடன் தொடர்புடையவை; இக்கட்ட மைப்பு இந்நாடுகளின் சுயமான வளர்ச்சிக்கு எதிராக உள்ளது. எனவே இக்கட்டமைப்பின் முக்கிய சிறப்பியல்புகளை வெளிப்படுத்தி, தேசிய வளர்ச்சியின் நலன்களுக்கேற்ப இவற்றை மாற்றியமைக்கும் வழியைக் கண்டுபிடித்தாக வேண்டும்.

வளர்முக நாடுகளின் பொருளாதாரம் ஒன்றிலிருந்து ஒன்று மாறு பட்டு பன்முகத் தன்மையை உடையதாயிருந்தாலும் துறை ரீதியான மற்றும் பிரதேசக் கட்டமைப்பில் பல பொது அம்சங்களும் உண்டு. நீண்ட காலமாக இக்கட்டமைப்பு, தவிர்க்க இயலா வளர்ச்சி விதிகள் மற்றும் உள்நாட்டு புவியியல் உழைப்புப் பிரிவினையின் அடிப்படையில் உருவானதை விட, சமமற்ற சர்வதேச உழைப்புப் பிரிவினையின் (இது தலைநாடுகளின் நலன்களால் நிர்ணயிக்கப்பட்டது) அடிப்படையில் உரு வாயிற்று. இதுதான் முன்னாள் காலனி மற்றும் சார்பு நாடுகளின் வளர்ச் சியிலிருந்த மிகப் பொதுவான அம்சமாகும். காலனிப் பொருளாதார முறையில் தேசியப் பொருளாதார புனருற்பத்தி சுழற்சி முழு வளர்ச்சி யடையவில்லை, கனரகத் தொழிற்துறையும் நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்யும் பல்வேறு துறைகளும் கிட்டத்தட்ட அறவே இருக்க

வில்லை. நுகர்வுப் பண்டங்கள் பெரும்பாலும் தலைநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. இவ்வாறாக புனருற்பத்தி சுழற்சி பிரதேச ரீதியாக பெரும் இடைவெளிகளில் பிளவுண்டு இருக்கிறது. புனருற்பத்தி முழுமை பெறாமை, சமமற்ற சர்வதேச உழைப்புப் பிரிவினையின் பெரும் தாக்கம், உள்நாட்டு புவியியல் உழைப்புப் பிரிவினைப் போக்குகளின் வளர்ச்சியின்மை ஆகியவை காலனியாதிக்க பிரதேசப் பொருளாதாரக் கட்டமைப்பின் முக்கிய அம்சங்களை நிர்ணயித்தன. இதன் வெளி இணைப்பு (உலக முதலாளித்துவ பொருளாதார சந்தையுடன்), உள் பிளவு ஆகியவைதான் இந்த முக்கிய அம்சங்களாகும்.

பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த நாடுகளில் பிரதேசப் பொருளாதாரக் கட்டமைப்பின் முக்கிய அம்சங்கள் தொழிற்துறையின் இட அமைப்புடன் தொடர்புடையவை. முன்னாள் காலனி, சார்பு நாடுகளில்—இவை பொருளாதார வளர்ச்சியில் கணிசமான அளவு கீழ்மட்டத்தில் உள்ளன—நவீன தொழிற்துறை அதிக வளர்ச்சியடைய வில்லை, இவற்றின் பொருளாதாரம் பெரும்பாலும் விவசாயப் பொருளாதாரமாகும். எனவேதான் இங்கே உற்பத்திச் சக்திகள் மற்றும் மக்களின் இடப் பரப்பு வழக்கமான விவசாய உற்பத்தி பிரதேசங்களில் நடைபெறுகிறது. சுரங்கத் தொழிற்துறை தனியாகப் பிரிக்கப்பட்டு, அதன் பிரிவுகள் சாதாரணமாக மேலைய ஏகபோகங்களுக்குச் சொந்தமானவையாக இருந்தன, நேரடியாக உலக முதலாளித்துவ சந்தைக்கு வேலை செய்தன. பொருளாதாரம் சிதறிக் கிடந்தது, மிகவும் சமமற்ற வளர்ச்சி, பிரிந்து கிடந்த நிலை ஆகியவை காலனியாதிக்கப் பொருளாதாரத்திற்கே உரித்தான அம்சங்களாகும்.

கீழ்ப்படிவு வளர்ச்சியின் மிக முக்கிய வெளிப்பாடுகளில் ஒன்று கடலையொட்டியுள்ள ஒரு அல்லது ஒரு சில துறைமுகங்களின் அதீத வளர்ச்சியாகும். காலனிக்குத் தலைநாட்டுடன் உள்ள உழைப்புப் பிரிவினை இத்துறைமுகங்களில் நன்கு வெளிப்பட்டது. இவை தலைநாட்டின் பொருளாதார மற்றும் அரசியல் ஆதிக்கத்தின் தொட்டில்களாகத் திகழ்ந்தன. இவற்றையொட்டிய பிரதேசங்கள் ஓரளவு சுறுசுறுப்பான சந்தை உறவுகளினுள் இழுக்கப்பட்டன, ஒப்பீட்டளவில் உயர்வான பொருளாதார வளர்ச்சி மட்டத்தை அடைந்தன. பரவலான உள்நாட்டுப் பிரதேசங்கள் ஒப்பீட்டளவில் குறைவான மக்கள்தொகையை உடையவையாக இருந்தன, அரை குறையாகத் தனிமைப்பட்டுக் கிடந்தன, இவற்றில் நுகர்வு மற்றும் அரை நுகர்வு வகை சார்ந்த கீழ்மட்ட பொருளாதார அமைப்புகள் அப்படியே இருந்தன. ஒன்றுடன் ஒன்று பலவீனமான தொடர்புகளை உடைய உற்பத்தி, பிரதேசத் துறைகள் (இவை வெவ்வேறு பொருளாதார அமைப்புகளைச் சேர்ந்தவை) ஒரே சமயத்தில் நிலவுவதானது முன்னாள் காலனி மற்றும் சார்பு நாடுகளின் பிரதேசப் பொருளாதாரக் கட்டமைப்பின் பல்திரட்டுத் தன்மையை நிர்ணயிக்கிறது.

உற்பத்திச் சக்திகளின் இடப் பரப்புத் தன்மையும் பிராந்திய வளர்ச்சியின் தன்மையும் முன்னாள் காலனி மற்றும் சார்பு நாடுகளின் பொருளாதார வளர்ச்சி வேகங்கள் மீதும் இவற்றின் உற்பத்தி, பிரதேச ஒற்றுமையை வலுப்படுத்துவதன் மீதும் நேரடியாகத் தாக்கம் செலுத்துகின்றன. சமூக பொருளாதார வளர்ச்சிக்கும் பொருளாதார சுதந்திரத்தை அடையவும் பொருளாதார வளர்ச்சி வேகங்களைப் பெரிதும் துரிதப்படுத்த வேண்டும், இதன் தன்மையை குணாம்ச ரீதியாக மாற்ற வேண்டும். இதற்குப் பொருளாதாரத்தின் எல்லா துறைகளையும் எல்லா குடியிருப்புப் பகுதிகளையும் பொதுவான பொருளாதார வளர்ச்சிப் போக்கில் ஈடுபடுத்த வேண்டும், இயற்கை, உழைப்பு மற்றும் பொருளாதார வளங்களை விவேகமாக, பன்முக ரீதியில் பிராந்திய அளவில் பயன்படுத்த வேண்டும், இவ்வாறு ஒரு ஐக்கிய தேசியப் பொருளாதார உறுப்பையும் ஐக்கிய பிரதேசப் பொருளாதாரக் கட்டமைப்பையும் ஏற்படுத்த வேண்டும்.

முன்னாள் சார்பு நாடுகளின் பிரதேசப் பொருளாதாரக் கட்டமைப்பை மாற்றியமைக்கும் சிக்கலான கடமைகளை, வெறும் சந்தைப் பொருளாதார அடிப்படையில் தனியார் துறையை மட்டும் வைத்து தீர்க்க முடியாது. இதில் அரசு முக்கியப் பங்காற்ற வேண்டும். அரசின் செயல்முனைப்பான, உணர்வு பூர்வமான நடவடிக்கையின்றி (நீண்ட கால பிராந்தியக் கொள்கையையும் திட்டங்களையும் தீட்டி நிறைவேற்றுவதில் இது வெளிப்படுகிறது) காலனியாதிக்கம் விட்டுச் சென்ற பொருளாதாரக் கட்டமைப்பை வரலாற்று ரீதியாக குறுகிய காலகட்டத்தில் அடியோடு மாற்ற முடியாது. பிராந்தியக் கொள்கை மற்றும் திட்டமிடலின் அவசியத்தை மிகப் பெரும்பான்மையான வளர்முக நாடுகள் ஒப்புக் கொள்கின்றன. சமூக பொருளாதார பிரதேசங்களும் புதிய வகையான பிரதேசப் பொருளாதாரக் கட்டமைப்பும் உருவாகும் புறவய ரீதியான நிகழ்ச்சிப் போக்குகளை ஆராய்வதுதான் பிராந்தியக் கொள்கையின் விஞ்ஞான அடிப்படையாகத் திகழ வேண்டும். இதில் அரசே ''பிரதேசங்களை உருவாக்கும்'' தீவிரமான காரணியாகச் செயல்படுகிறது; அதுவும் இதன் நடவடிக்கையின் பிராந்திய அம்சங்கள் பயன்மிகு பிராந்தியக் கொள்கையாக வளரும் பொழுது இது நன்கு வெளிப்படுகிறது.

பிரதேசப் பொருளாதாரக் கட்டமைப்பு என்பது பொருளாதார நடவடிக்கையின் இட ரீதியான குவிப்புகளாகும் (பல்வேறு வகையான பிரதேசங்கள், மையங்கள்); இவற்றின் இடையே பல்தரப்பு உற்பத்தி, பிரதேசத் தொடர்புகளும் மற்ற வகையான பொருளாதார, சமூகத் தொடர்புகளும் நிலவுகின்றன. ஒரு நாட்டின் பிரதேசப் பொருளாதாரக் கட்டமைப்பின் அம்சங்களாகத் திகழும் பிரதேசங்கள், மையங்கள் ஆகியவை வேறொரு பகுப்பாய்வில் விவசாய, தொழிற்துறை பிரதேச அமைப்புகளாக, நகரங்களின் பிராந்திய அமைப்பாக, நகரம்

என்னும் அமைப்பாக, இன்ன பிறவாகத் திகழுகின்றன.

வளர்முக நாடுகளில் விவசாயத் துறையின் வளர்ச்சி மற்றும் தொழிற் துறைமயப்படுத்தலின் பிராந்திய சிறப்பியல்புகளை இப்போது சுருக்க மாகப் பார்ப்போம்.

விவசாய உற்பத்தியை விரிவுபடுத்துவதென்பது வளர்முக நாடுகளின் ஜீவாதார முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகும். இந்நாடுகளில் ஏராளமான மக்கள் பட்டினியால் வாடுகின்றனர், வயிறு நிரம்ப உண்ணும் வாய்ப்பின்றி அவதியுறுகின்றனர். இரண்டாவது உலக யுத் தத்திற்குப் பிந்தைய ஒப்பீட்டளவில் குறுகிய காலகட்டத்தில் விவசாய உற்பத்தி வளரும் முக்கிய வழிகளின் பல்வேறு கட்டங்களை (இவற் றிற்குத் தெட்டத்தெளிவான புவியியல் வெளிப்பாடு உண்டு) மேற் போக்காகச் சுட்டிக் காட்டலாம்.

வரலாற்று ரீதியாகப் பார்த்தால் சாகுபடி பரப்பை விரிவுபடுத்து வதுதான் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கான முக்கிய வழி யாக இருந்து வருகிறது. உதாரணமாக, 1930ஆம் ஆண்டுகளின் நடுப் பகுதியிலிருந்து 1960ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதி வரையில் முன்னாள் காலனி மற்றும் சார்பு நாடுகளின் மக்கள்தொகை 50% கூடியது, தானிய அதிகரிப்பில் $^{3}/_{4}$ பகுதி சாகுபடி பரப்பு கூடியதால் அடையப் பட்டது. 1960ஆம் ஆண்டுகளில் நிலவரம் மாறியது: மக்கள்தொகை கூடிய அதே நேரத்தில் பயிர் சாகுபடி பரப்பு அதிகரிக்கும் வேகங்கள் பெரிதும் குறைந்தன; விவசாய உற்பத்தி போதுமான அளவு தீவிரமயப் படுத்தப்படாததையடுத்து பல வளர்முக நாடுகளில் உணவுப் பொருள் பற்றாக்குறை கடுமையாகியது. மக்கள்தொகை மிகுந்த பெரும்பாலான ஆசிய நாடுகளிலும் சிறிய ஆப்பிரிக்க நாடுகளிலும் சாகுபடிக்கேற்ற காலி நிலங்கள் தீர்ந்து விட்டன. ஓரளவு காலி நிலம் உள்ள நாடுகளிலும் (பிரேசில், வெனிசூலா, கொலம்பியா இன்ன பிற) புதிய நில மீட்பு சிக்கலானது, இதற்குப் பெரும் நிதியும் தேவைப்படும்.

உற்பத்தியைத் தீவிரமயப்படுத்துவதும் சாகுபடியாகும் பரப்பின் உற்பத்தித் திறனைக் கூட்டுவதும்தான் மேன்மேலும் அதிகமான வளர்முக நாடுகளுக்கு விவசாய உற்பத்தியைக் கூட்டுவதற்கான ஒரே வழியாகி வருகிறது. இத்தகைய வளர்ச்சிக்கான வாய்ப்புகள் இந்நாடு களில் அதிகம், ஏனெனில் சாகுபடி இங்கு மிகவும் கீழ் மட்டத்தில் உள்ளது, விளைச்சலும் மிகவும் குறைவானது. ஆனால் மூலதனம் அதிகம் தேவைப்படும் இப்பாதை மிகவும் கடினமானது, ஏனெனில் இப்பாதையில் பின்தங்கிய சமூக பொருளாதாரக் கட்டமைப்பைக் கிராமங்களில் சந்திக்க வேண்டியுள்ளது, அடிப்படை நில சீர்திருத்தங் களைச் செய்ய வேண்டி வரும். நவீன தீவிர சாகுபடி முறைகள் ஒரு சில பணக்கார விவசாயிகளுக்கு மட்டுமே கிட்டக் கூடியவை. இதுவும் கலப்பு விதைகள் இன்று வரை மட்டாக கிடைப்பதும் ''பசுமைப் புரட்சியைக்'' குறுகிய ஸ்தல மட்டங்களிலேயே வைத்திருக்கின்றன.

ஓரளவு முதலாளித்துவம் வளர்ச்சியடைந்த இடங்களிலும் தீவிர நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களிலும் மட்டுமே ''பசுமைப் புரட்சி'' பரவுகிறது. இதனால் இப்பிரதேசங்கள் முக்கிய விவசாய உற்பத்தி பிரதேசங்களாகின்றன, விவசாய வளர்ச்சியில் பிரதேசங்களுக்கு இடையிலான சீரிசைவின்மைகள் அதிகரிக்கின்றன.

வளர்முக நாடுகளின் உணவுப் பொருள் பிரச்சினையைத் தீர்த்து விவசாய உற்பத்தியைப் பொதுவில் வளர்க்கும் முக்கிய வழியானது, திட்டத்தட்ட நிலையான சாகுபடிப் பரப்பில் உற்பத்தியைத் தீவிரமயப் படுத்துவதுடன் தொடர்புடையது; எனவே புறச்சூழல் பாதுகாப்பும் சாகுபடி நிலப்பரப்பை மேம்படுத்துவதும் பெரும் முக்கியத்துவத்தைப் பெறுகின்றன.

நீர்ப்பாசன வளர்ச்சி, புதிய நிலப்பரப்பு தொடர்ந்து சாகுபடியின் கீழ் கொண்டு வரப்படுதல், புதிய பயிர்கள் புகுத்தப்படுதல், ''பசுமைப் புரட்சி'' குறிப்பிட்ட இடங்களில் மட்டும் பரவுதல், பிரதேச உழைப்புப் பிரிவினை வலுப்படுதல் போன்ற பல்வேறு காரணிகளின் விளைவாய் வரலாற்று ரீதியாக உருவான ஒரு சில பயிர்களின் பாரம்பரிய பரப்பிடம் (இது எப்போதும் விவேகமானதாக இல்லாதிருக்கலாம்) மாற்றமடைகிறது.

உள்நாட்டு சந்தை விரிவடைந்து, பிரதேச உழைப்புப் பிரிவினையில் மேன்மேலும் பரவலான நிலப்பரப்பு ஈடுபடுத்தப்படுவதையடுத்து பயிர்களின் இடப் பரப்பு அனுகூலமான புறச்சூழல் அம்சங்களால் நிர்ணயிக்கப்படுவது அதிகரிக்கிறது.* இந்நிகழ்ச்சிப் போக்கு பல பயிர்களின் கணிசமான பிரதேச மறுபங்கீட்டில் வெளிப்படுகிறது; இது பெரும்பாலும் தன்னிச்சையாக நடைபெறுகிறது. விவசாய பிரதேசங்கள் முறைப்படி நிலவினால் (இது வளர்முக நாடுகளுக்குப் பெரிதும் அவசியமானது என்பதில் சந்தேகமில்லை) பொருளாதார வளர்ச்சிக்கான இக்காரணி ஒன்று திரட்டப்படலாம். ஏற்கெனவே நிலவும் விவசாய பிரதேசமயப் படுத்தல் முறையையும் இதன் சாலச் சிறந்த வகையையும் ஒப்பிடுவதானது, விவசாய வளர்ச்சியை அரசு ரீதியில் ஒழுங்கமைக்கும் பொழுது முக்கிய அடிப்படையாகத் திகழக் கூடும்; இது விவசாய உற்பத்தியின் இட அமைப்பை சாலச் சிறந்ததாக ஆக்குவதன் மூலம் விவசாய உறபத்தியின் அதிகரிப்பிற்கு உதவும்.

என்றாலும் வளர்முக நாடுகளின் துறை ரீதியான மற்றும் பிரதேசப் பொருளாதாரக் கட்டமைப்பை மாற்றும் மிக முக்கியக் காரணி தொழிற்துறைமயப்படுத்தலாகும். இதுதான் பொருளாதாரத்தின் சகல துறைகளையும் நவீனமயப்படுத்தி இவற்றின் பரஸ்பரத்

---

* உதாரணமாக இந்தியாவில் சர்க்கரை உற்பத்தி செய்யும் வட மாநிலங்களில் கரும்பு உற்பத்தி வீழ்ச்சியடைந்து, மேற்கு மற்றும் தென்னிந்தியாவில் கரும்பு விரைவாகப் பரவியதில் இது குறிப்பாக வெளிப்படுகிறது.

தொடர்பை வலுப்படுத்தும் முக்கிய வழி, உற்பத்தி வளர்ச்சி மற்றும் பொருளாதார சுதந்திரத்தின் அடிப்படையாகும். தொழிற்துறைமயப் படுத்தலின் அளவு, தன்மை, சாரம் ஆகியவை வெவ்வேறு வகையான, வெவ்வேறு வளர்ச்சி மட்டத்தையுடைய நாடுகளில் வெவ் வேறானவை.

பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நாடுகளில் (இவற்றின் பொருளாதாரம் அனேகமாக முழுக்க முழுக்க விவசாயப் பொருளாதார மாக இருக்கும், இவை தொழிற்துறை வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்தில் இருக்கும்) தொழிற்துறையானது விவசாய மூலப்பொருட்களைப் பதப் படுத்தும் உற்பத்தியை ஏற்படுத்துவதுடனும் விவசாயத் துறையின் உற்பத்தி தேவைகளுக்குச் சேவை புரிவதுடனும் அடிக்கடி தொடர் புடையதாயிருக்கும். இந்த உற்பத்திகள்தான் முக்கியமான பிரதேச மயப்படுத்தும் காரணியாகத் திகழுகின்றன, விவசாயத் தொழிற்துறை இணையங்கள் உருவாக துணை புரிகின்றன.

விலைமதிப்புள்ள கனிவளங்களைக் கொண்ட (எண்ணெய், இரும்பு கலவாத மற்றும் அபூர்வ உலோகங்கள்) ஒரு சில முன்னாள் காலனி, சார்பு நாடுகளில் காலனியாதிக்கக் கட்டத்திலேயே, இவற்றை எடுத்து உலக சந்தைக்கு அனுப்புவதற்காக அயல் நாட்டு முதலீடுகள் பயன் படுத்தப்பட்டன. சுதந்திரமடைந்த பின் இந்நாடுகள் கனிவளங்களை ஏற்றுமதி செய்வதிலிருந்து இவற்றின் அடிப்படையில் பதப்படுத்தும் தொழிற்துறைகளை ஏற்படுத்துவதற்கு மாற முயன்றன. ஆனால் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய நிலையில் இத்துறைகள் நீண்ட காலத்திற்கு நாட்டின் பொருளாதாரத்துடன் பலவீனமான தொடர்பு கொண்டிருக்கின்றன, இவற்றின் பொருட்களில் பெரும் பகுதி முன்போன்றே ஏற்றுமதி செய்யப்படுகிறது.

துறை ரீதியான தனித்துறைப்பாடு, உலக சந்தையையும் அன்னிய ஏகபோகங்களையும் சார்ந்திருக்கும் அளவு, உள்ளூர் மக்களை ஈடுபடுத் தும் அளவு, ஸ்தல பொருளாதாரத்துடனான தொடர்பு, மற்ற காரணி கள் ஆகியவற்றின் பகுப்பாய்வின் அடிப்படையில் போலந்து விஞ்ஞானி எம். ரஸ்திஷேவ்ஸ்கி உற்பத்திகள், பிரதேசங்கள், நாடுகளின் பின்வரும் முக்கிய வகைகளைச் சுட்டிக் காட்டுகிறார்:

1) ஒரே துறையில் கவனம் செலுத்தல் (தோட்டங்கள், ஒரு சில சுரங்கத் தொழில் மையங்கள்); இவை உலகச் சந்தையை அதிகபட்சம் சார்ந்தவை, வளர்முக நாடுகளின் பொருளாதாரத்துடன் குறைந்த பட்சம் தொடர்புடையவை. உதாரணம் — ஒரு சில மத்திய அமெரிக்க நாடுகளில் உள்ள வாழைத் தோட்டங்கள், காப்பி தோட்டங்கள், மொரீஷியசில் இரும்புத் தாது எடுப்பு இன்ன பிற.

2) ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட உற்பத்திகள். இவை இடப் பரப்பின் பொருளாதார வகைப்பாட்டிற்கு உதவும், வளர்முக நாடுகளின் மாறி வரும் பிரதேசப் பொருளாதாரக் கட்டமைப்பின்

மீது நல்ல தாக்கம் செலுத்துகின்றன. உதாரணம் — ஜாயிரிலும் ஜாம்பியாவிலும் உள்ள தாமிர மண்டலம், பிரேசிலில் உள்ள காப்பித் தோட்டங்கள்.

3) எண்ணெய் ஏற்றுமதி செய்யும் வளர்முக நாடுகள் புதிய வகையான வளர்ச்சியைக் குறிக்கின்றன. எண்ணெயின் விலைகள் கூடியதாலும் எண்ணெய் தொழிற்துறை தேசமயப்படுத்தப்பட்டதாலும் இவை பெரும் நிதி வாய்ப்புகளைப் பெற்றன. இவை உலகந் தழுவிய அளவில் சமூக பொருளாதார இடப் பரப்பில் புதிய நிலைகளைப் பெற்றன. ஆனால் வளர்ச்சியடைந்த உள்கட்டமைப்பைத் தோற்றுவிக்கவும் தொழிற்துறை மயப்படுத்தவும் இன்று வசதிகள் இருக்கும் பொழுது உள் சமூகக் கட்டமைப்புகளின் பின்தங்கிய நிலை இதற்கு இடையூறாக உள்ளது; வெளிச் சக்திகளை இவை சார்ந்திருப்பது குறைந்தாலும் இது தானாகவே மறையவில்லை.

4) ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட புதிய வகையான உற்பத்திகளும் விரிவடைந்து வருகின்றன. இவை சர்வதேச கார்ப்பரேஷன்களின் நடவடிக்கையுடன் தொடர்புடையவை; அவற்றிற்கு இங்கே கிளைகள் உள்ளன, அவை வளர்முக நாடுகளின் மலிவான உழைப்புச் சக்தியை அல்லது மூலப்பொருளைப் பயன்படுத்துகின்றன, வளர்முக நாடுகளின் பரப்பில் தீங்கு விளைவிக்கும் தொழில் நிறுவனங்களை ஏற்படுத்தி, இந்நாடுகளை அசுத்தப்படுத்துகின்றன, இத்தியாதி. இந்தப் புதிய போக்குகள் நீண்ட காலகட்டத்தில் இந்நிகழ்ச்சிப் போக்கில் நேரடியாக ஈடுபடுத்தப்பட்டுள்ள நாடுகளின் பிரதேசப் பொருளாதாரக் கட்டமைப்பின் மீது தாக்கம் செலுத்துவதோடு கூட உலகந் தழுவிய அளவில் பொருளாதார இட அமைப்பை ஒழுங்குபடுத்துவதன் மீதும் தாக்கம் செலுத்தலாம்.

இவ்வாறாக, ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட வளர்முக நாடுகளின் உற்பத்தி வளர்ச்சியில் புதிய போக்குகள் காணப்படுகின்றன. இது இந்நாடுகளின் பிரதேசப் பொருளாதாரக் கட்டமைப்பு உருவாவதன் மீது முரண்பாடான தாக்கம் செலுத்துகிறது; இது உலகந் தழுவிய அளவில் தொடர்புகள், கட்டமைப்புகள் மாறியமைவதிலும் வெளிப்படுகிறது.

பிரதேசப் பொருளாதாரக் கட்டமைப்பு உருவாகும் பொதுப் போக்கின் மீது அந்தந்த துறையின் தாக்கம், குறிப்பிட்ட துறைக்குப் பொருளாதாரத்தில் உள்ள முக்கியத்துவத்தாலும், பிரதேசத்தை உருவாக்க இதற்குள்ள உள்ளாற்றலாலும் நிர்ணயிக்கப்படுகிறது. உற்பத்தி உள்கட்டமைப்பு — போக்குவரத்து மார்க்கங்கள், எரிசக்தி துறை, மின் கம்பிகள், பொருளாதாரத்தின் எல்லா துறைகளுடனும் நிரந்தர, இடையறா தொடர்புடைய மற்ற அம்சங்கள் ஆகியவை பிரதேசத்தை உருவாக்குவதில் மிகப் பெரும் பங்காற்றுகின்றன. பின்தங்கிய பகுதிகளின் பொருளாதார வளர்ச்சியின் பொழுதும், புதிய பிரதேசங்களின் வளங்

களை மீட்கும் பொழுதும் உற்பத்தி உள்கட்டமைப்பின் பிரதேச முக்கியத்துவம் அதிகரிக்கிறது, பல நேரங்களில் இது முதல் அடிப்படையாகிறது.

குறுகலான தனித்துறைப்பாடு, பரவலான கூட்டுறவு, விரிந்து பரந்த உற்பத்தி, பிரதேசத் தொடர்புகள் ஆகியவை நவீன கனரகத் தொழில் நிறுவனங்கள் இயங்க அவசியமான அம்சங்களாகும்; பிரதேசங்களை உருவாக்குவதில் இத்தொழில் நிறுவனங்களுக்கு உள்ள உயரிய பங்கையும் இவை நிர்ணயிக்கின்றன. இதனால் உற்பத்தி உள்கட்டமைப்பின் வளர்ச்சியும் கனரகத் தொழிற்துறைக்கான அடிப்படைகளை ஏற்படுத்துவதும் வளர்ச்சியடைந்த முன்னாள் காலனி, சார்பு நாடுகளின் விஷயத்தில் பிரதேசப் பொருளாதாரக் கட்டமைப்பை மாற்றியமைப்பதில் முக்கியப் பங்காற்றுகின்றன.

இந்தியா, பிரேசில், வெனிசூலா, அல்ஜீரியா, மொரோக்கோ, இரான், துருக்கி, நைஜீரியா போன்ற ஓரளவு வளர்ச்சியடைந்த வளர்முக நாடுகளில் (இவற்றில் ஆலைத்தொழில் மற்றும் சுரங்கத் தொழிலின் ஒரு சில பிரிவுகள் ஏற்கெனவே இயங்கின) தொழிற்துறைமயப்படுத்தல் போக்கு சிக்கலாக, பன்முக ரீதியில் நடைபெறுகிறது, பல்வேறு தொழிற்துறை பிரதேச அமைப்புகள் உருவாவதில் இது வெளிப்படுகிறது. முக்கிய கடல் துறைமுகங்களை ஒட்டியுள்ள நல்ல வளர்ச்சியடைந்த பிரதேசங்களில் (இங்கே நுகர்வு மற்றும் உணவுத் தொழிற்துறையின் பிரிவுகள் வழக்கமாக குவிந்துள்ளன) தொழிற்துறைமயப்படுத்தல் கனரகத் தொழிற்துறையின் பிரிவுகள் துரிதமாக வளர்ச்சியடைவதில் வெளிப்படுகிறது, அதாவது ஏற்கெனவே நிலவும் உற்பத்திக்கு உறுதியான அடித்தளமிடப்படுகிறது. பழைய பொருளாதார பிரதேசங்களில் தொழிற்துறை பிரதேச இணைப்புகள் கட்டி முடிக்கப்படுகின்றன. அதே நேரத்தில் உற்பத்தித் தனித்துறைப்பாட்டை மாற்றும் புதிய துறைகளும் இவற்றில் துரிதமாக வளர்ச்சியடைகின்றன. எடுத்துக்காட்டாக, சணல் உற்பத்தியாகும் கிழக்கிந்தியாவில் நாடு சுதந்திரமடைந்த பின் நிலக்கரி, உலோகத் துறைகளுக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டது, இப்பகுதி கனரக இயந்திரக் கட்டுமானத்தின் முக்கிய பிரதேசமாகியது. பருத்தி நூற்பாலைகள் வழக்கமாக உள்ள மேற்கு இந்தியா எண்ணெய் ரசாயன உற்பத்தியின் முக்கிய பிரதேசமாகியது, இங்கு சாதாரண மற்றும் துல்லிய எந்திரக் கட்டுமானம் வளர்ச்சியடைந்தது.

வளர்முக நாடுகளின் பிரதேசப் பொருளாதாரக் கட்டமைப்பு உருவாவதன் மீது இந்நிகழ்ச்சிப் போக்கு இரட்டைத் தாக்கம் செலுத்துகிறது. ஒரு புறம் இது புவியியல் உழைப்புப் பிரிவினை ஆழமடையவும் நன்கு விரிந்து பரந்த முதிர்ச்சியடைந்த பொருளாதார பிரதேசங்களின் அமைப்பு உருவாகவும் உதவுகிறது. மறு புறம் இது ஏற்கெனவே நல்ல வளர்ச்சியடைந்த பிரதேசங்களில் உற்பத்தி மேற்கொண்டு குவி

வதைக் குறிக்கிறது, இது வளர்ச்சியின் பிராந்திய சீரிசைவின்மைகளை அதிகப்படுத்துகிறது.

தொழிற்துறைமயப்படுத்தலின் இன்னொரு போக்கு புதிய மற்றும் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய பிரதேசங்களின் தொழிற்துறை, எரிசக்தி வளங்களை மீட்பதுடன் தொடர்புடையது. கனரகத் தொழிற் துறை மற்றும் எரிசக்தித் துறையின் வலிமை மிகு புது கட்டுமானங்கள், உள்பகுதிகளில் தோற்றுவிக்கப்படும் கூட்டு நீரியல் மையங்கள் ஆகிய வை புதிய பொருளாதார பிரதேசங்கள் உருவாக உட்கருவாகத் திகழுகின்றன. ஆனால் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய பிர தேசங்களில் பெரிய, நவீன புதிய கட்டுமானங்களைத் தோற்றுவிப் பதானது அருகிலுள்ள பிரதேசங்களின் பொருளாதார எழுச்சிக்குத் தானாகவே இட்டுச் செல்லாது. பல சமயங்களில் இது ''இரட்டை வாதப்'' போக்கை, உற்பத்தி, பிரதேசப் பிளவை வலுப்படுத்துகிறது. பொது அரசு முக்கியத்துவம் வாய்ந்த இத்தொழில் நிறுவனங்களுக்கு நல்ல வளர்ச்சியடைந்த மேக்ரோ பிராந்தியத் தொடர்புகளும் பரவலான உள்பிரதேசத் தொடர்புகளும் உள்ளன. ஸ்தல உற்பத்தி, பிரதேசத் தொடர்புகளின் வளர்ச்சி தாமதமாகத்தான் நடைபெறு கிறது. பிரதேசத் திட்டங்கள் முன்கூட்டியே தீட்டப்பட்டால் இந் நிகழ்ச்சிப் போக்கு துரிதப்படுத்தப்படலாம், இது புதிய கட்டுமானங்களின் செயல்வன்மையை உயர்த்தவும், அருகிலுள்ள பிரதேசங்களின் வளர்ச்சி மீதான தாக்கத்தை அதிகப்படுத்தவும் உதவக் கூடும். பிரதேச ரீதியான திட்டமிடல் வளர்முக நாடுகளில் பிராந்தியத் திட்டமிடலின் அவசிய மான உட்பகுதியாக விளங்க வேண்டும்.

வளர்முக நாடுகளின் பொருளாதாரங்களின் துறை ரீதியான, பிரிவு மற்றும் பிரதேச ரீதியான இணைப்பில் தொழிற்துறைமயப்படுத் தல் முக்கியப் பங்காற்றுகிறது. தென் கிழக்காசிய மற்றும் பசிபிக் பெருங் கடல் நாடுகளின் தொழிற்துறை அமைச்சர்களின் சந்திப்பில் (1977), விசேஷ கவனம் தேவைப்படும் நான்கு முக்கியத் துறைகள் சுட்டிக் காட்டப்பட்டன:

1) தொழிற்துறைக்கும் விவசாயத் துறைக்கும் இடையிலான தொடர்புகளை வலுப்படுத்தல்;

2) சிறு தொழிற்துறையையும், பெரிய மற்றும் கனரகத் தொழிற் துறைகளுடன் இதற்குள்ள தொடர்பையும் வளர்த்தல்;

3) தொழிற்துறை உற்பத்தியானது, மிக ஏழையான மக்கள் பிரி வினரின் முக்கியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதை நோக்கமாக கொண்டிருக்கச் செய்தல்;

4) தொழில் நிறுவனங்களைத் தலைநகரங்களின் பரப்புகளுக்கு வெளியே வைத்தல், இவற்றை பிரதேச ரீதியாக மாற்றியமைத்தல். (Reorientation of Industrial Policies, 1978.)

தொழிற்துறைமயப்படுத்தலில் அரசின் தீவிர (வழக்கமாக தீர்

மானகரமான) பங்கானது நாட்டின் துறை ரீதியான மற்றும் பொது தொழிற்துறை ரீதியான பிரதேசமயப்படுத்தல் திட்டத்தைத் தீட்டு வதையும் பிராந்தியத் திட்டமிடலை நிறைவேற்றுவதையும் முன்னனு மானிக்கிறது. லைசென்ஸ் வழங்குதல், வரிக் கொள்கை, வரி முறை போன்றவற்றின் மூலம் புதிய கட்டுமானங்களின் இட அமைப்பு மீது அரசு மறைமுகமான தாக்கம் செலுத்தும் பொழுதும் இப்படிப்பட்ட பொருளாதார பிரதேசமயப்படுத்தல் முறைகள் அவசியம். எடுத்துக் காட்டாக, இந்தியாவில் புதிய தனியார் தொழில் நிறுவனங்களின் இட அமைப்பு மீது தாக்கம் குறைவாயிருந்ததற்கான காரணங்களைப் பகுப்பாய்வு செய்த இந்திய அரசாங்கத் தொழிற்துறை லைசென்ஸ் கமிட்டி, பல்வேறு தொழிற்துறைகளுக்கு லைசென்ஸ் வழங்குவது சம் பந்தமாகப் பொது பிராந்தியத் திட்டம் தீட்டப்படவில்லையென சுட்டிக் காட்டியது.

மொத்தத்தில் பிராந்திய வளர்ச்சியைத் திட்டமிட்டு வழிநடத்தக் கூடிய பிராந்தியத் திட்டமிடலில் முக்கியமான அம்சம் சமூக பொரு ளாதார பிரதேசமயப்படுத்தல் ஆகும். பிரதேசத்தின் கூட்டு பொருளா தார வளர்ச்சியானது உழைப்பின் உற்பத்தித் திறனைப் பெரிதும் அதிக ரிக்கிறது. உற்பத்தியைப் பெருக்குவதற்கான இந்த மிகப் பெரும் உள் ளாற்றலை (இதற்குக் கூடுதல் முதலீடுகள் தேவையில்லை) ஆழ்ந்த விஞ்ஞான அடிப்படையிலான சமூக பொருளாதார பிரதேசமயப்படுத் தலில்தான் (இதன் முக்கியக் கட்டங்களைச் சேர்த்து) பயன்படுத்த முடியும்.

வளர்முக நாடுகளில் உள்ள உற்பத்திச் சக்திகளின் பொருளாதார இட கட்டமைப்பின் முழுமையான பகுதிகள் என்ற வகையில் பொருளா தார பிரதேசங்கள் இன்னமும் முழுமையாக உருவெடுக்கவில்லை; இவை தம் தோற்றத்தின் பல்வேறு கட்டங்களில் உள்ளன. காலனி யாதிக்கக் கட்டத்தில் பொருளாதார பிரதேசங்களின் மையங்கள் எங் கெல்லாம் தோன்றினவோ அங்கெல்லாம் இவை மாறுநிலையில் உள்ளன.

பொருளாதார வளர்ச்சி மட்டம், சமூக பொருளாதார அமைப்பு களின் விகிதம், பொருளாதாரத் துறை ரீதியான கட்டமைப்பு, மக்கள்தொகை, பிரதேசத்தின் அளவுகள், இயற்கை வளங்களின் சிறப்பியல்புகள், இவற்றைப் பயன்படுத்தும் விதம் ஆகியவற்றிற்கேற்ப வளர்முக நாடுகளில் பின்வரும் பொருளாதார பிரதேசங்களைச் சுட்டிக் காட்டலாம். இவை தாம் உருவாகும் தன்மையினாலும் தாம் அடைந்த வளர்ச்சிக் கட்டத்தாலும் ஒன்றிலிருந்து ஒன்று மாறுபடு கின்றன:

1) குறிப்பிட்ட அளவு முதிர்ச்சியடைந்த பொருளாதார பிரதேசங் கள்; இங்கே உள்நாட்டு பிரதேச-உற்பத்தி தொடர்புகள் நன்கு வளர்ச்சியடைந்திருக்கும், அரசு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சில

உற்பத்திகளில் தனித்துறைப்பாடு வளர்ந்திருக்கும்; சாதாரணமாக இவை பெரிய கடல் துறைமுகங்களை (துறைமுகத்தை) ஒட்டியிருக்கும்;

2) திட்டவட்டமான அரசுத் தனித்துறைப்பாட்டை உடைய, ஆனால் பலவீனமான உள்நாட்டு உற்பத்தி, பிரதேசத் தொடர்புகளையுடைய பிரதேசங்கள்;

3) விவசாய ரீதியில் ஓரளவு வளர்ச்சியடைந்த பிரதேசங்கள்; இங்கு புதிய நீர்ப்பாசன, எரிசக்தி, தொழிற்துறைக் கட்டுமானம் இவற்றின் பிரதேச, பொருளாதார வலிமைக்கு உதவுகிறது;

4) நல்ல இயற்கை வளங்களையுடைய புதிதாக மீட்கப்படும் பிரதேசங்கள்;

5) வளம் குன்றிய அல்லது அதிகம் ஆராயப்படாத வளங்களையுடைய வளர்ச்சி குன்றிய மற்ற பிரதேசங்கள், செல்வதற்குக் கடினமான பிரதேசங்கள், இன்ன பிற.

பிராந்திய வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டும் பொழுது தனிப்பட்ட பிரதேசங்களின் விசேஷ இயற்கை மற்றும் பொருளாதார வளங்களின் ஒட்டு மொத்தம் முழுவதையும் அதே போல் இப்பிரதேசங்கள் பொருளாதார பிரதேசங்களாக உருவாவதில் எந்தக் கட்டத்தில் உள்ளன என்பதையும் கணக்கில் கொள்வது அவசியம்.

பெரும்பாலான வளர்முக நாடுகளில் பிரதேசங்கள் உருவாகும் நிகழ்ச்சிப் போக்கு இன்னமும் நாடு பூராவும் பரவவில்லை. ஆனால் பொருளாதார பிரதேசமயப்படுத்தல் நாடு முழுவதையும் தழுவி பிராந்திய வளர்ச்சிக்கும் மொத்தமாக நாட்டின் வளர்ச்சிக்கும் உதவ வேண்டும்.

பொருளாதார பிரதேசங்கள் உருவாகும் போக்கு முற்றுப் பெறாமை, பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த நாடுகளின் பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் இவற்றின் அதிகமான நெகிழ்திறனும், விரைவான வளர்ச்சித் தன்மையும் வளர்முக நாடுகளின் அரசுத் துறையின் முன், பிரதேசங்கள் உருவாகும் புறவய நிகழ்ச்சிப் போக்கின் மீது தீவிரமான தாக்கம் செலுத்துவதற்கான கூடுதல் வாய்ப்புகளைத் தோற்றுவிக்கின்றன.

உள்நாட்டு பிராந்தியத் திட்டமிடலின் இட அடிப்படையை ஏற்படுத்தும் பெரும் பொருளாதார பிரதேசங்கள் ஓரினத் தன்மையின்படி பிரிக்கப்பட்ட பிரதேசங்கள் அல்ல. சாதாரணமாக இவை இயற்கையிலும் சமூக பொருளாதார ரீதியிலும் பெரிதும் வெவ்வேறானவை; புவியியல் உழைப்புப் பிரிவினை (சர்வதேச மற்றும் உள்நாட்டு) முறையில் உற்பத்திக் கட்டமைப்பின் ஒற்றுமை உருவாகும் போக்கில்தான் இவை வலுப்படுகின்றன.

இவ்வாறு உருவாகும் ஒற்றுமையின் அடிப்படை, வளர்ந்து வரும் விவசாய மற்றும் தொழிற்துறைத் தனித்துறைப்பாடாகும். இது நல்ல அனுகூலமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் காரணிகள்

இருக்கையில், ஒப்பீட்டளவில் எளிய பொருளாதார பிரதேச கூட்டுகளி லிருந்து பிராந்திய உற்பத்தி இணையங்களுக்கு அல்லது ஐக்கியப் பொருளாதார பிரதேசங்களுக்குப் படிப்படியாக மாற உதவுகிறது. இந்த ஐக்கியப் பொருளாதார பிரதேசங்கள், உள் ஓரினத் தன்மையின் படி பிரிக்கப்படும் இயற்கை (பௌதீக-புவியியல்) மற்றும் துறை ரீதியான பிரதேசங்களிலிருந்து கணிசமாக வேறுபடுகின்றன.

பிராந்தியப் பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்யும் பொழுது ஒரு குறிப்பிட்ட பொருளாதார பிரதேசத்தின் சாரத்தையும் அதன் அளவுகளையும் நிர்ணயிப்பது பெரிதும் முக்கியமாகும். உதாரணமாக, வளர்முக நாடுகளின் மேக்ரோ பிராந்தியப் பிரச்சினைகளின் தீர்வை தொழிற்துறைமயப்படுத்தலுடனும் பெருவீதத் தொழிற்துறையை ஏற் படுத்துவதுடனும் தொடர்புபடுத்துகின்றனர். பின்தங்கிய, அதிகமான வளர்ச்சி வாய்ப்பற்ற பிரதேசங்களின் முன்னேற்றத்தையும் மைக்ரோ பிரதேச பிரச்சினைகளின் தீர்வையும் விவசாயத் துறையின் வளர்ச்சிக்கும் சிறு மற்றும் சின்னஞ்சிறு தொழிற்துறையைப் பிரதேசத்தில் பரப்புவதற் கும் ஊக்கமளிப்பதுடனும் தொடர்புபடுத்துகின்றனர்.

சரியான பொருளாதார பிரதேசமயப்படுத்தல், வளர்முக நாடுகளில் உற்பத்திச் சக்திகளை விவேகமாக பரப்பவும் பிராந்தியத் திட்டமிட லுக்கும் பெரிதும் முக்கியமானது, அதுவும் குறிப்பாக சாதனங்களையும் வளங்களையும் சிக்கனப்படுத்தும் நோக்கிலும் தேசிய வளர்ச்சிக்கான சாலச் சிறந்த மாடலைத் தேர்ந்தெடுக்கும் நோக்கிலும் பார்க்கை யில் இது பெரிதும் நடைமுறை முக்கியத்துவத்தைப் பெறுகிறது.

காலனியாதிக்கப் பொருளாதாரத்திலிருந்து மீளும் போக்கில் இந் தியப் பொருளாதாரத்தின் பிரதேசக் கட்டமைப்பின் வளர்ச்சி பற்றிய பூர்வாங்க விவரங்களின் ஆராய்ச்சியும் (ஸ்தஸியூக், 1975, 1981) மற்ற பெரும் வளர்முக நாடுகளைப் பற்றிய விவரங்களும் இக்கட் டமைப்பின் மாற்றத்தில் குறிப்பிட்ட போக்குகளை வெளிப்படுத்து கின்றன. இப்போக்குகளைப் பின்வருமாறு நிர்ணயிக்கலாம். காலனி யாதிக்க காலகட்டத்தில் பிரிவினைச் சக்திகள் மேலோங்கி நின்றன, இவை தனிப்பட்ட பிரதேசங்களை உலக முதலாளித்துவ சந்தையுடன் சேர்க்க முயன்றன, இது உள்நாட்டு உற்பத்தி, பிரதேச பிளவை வலுப் படுத்தியது. இதற்கு மாறாக நாடு சுதந்திரமடைந்த பின் ஒற்றுமைச் சக்திகள் மேன்மேலும் முக்கியப் பங்கைப் பெற்றன, இவை உள்நாட்டு உற்பத்தி, பிரதேச ஐக்கியத்தை வலுப்படுத்த முயலுகின்றன. காலனி யாதிக்கத்தின் பொழுது முக்கியக் கடல் துறைமுகங்களிலிருந்து செல் லும் வளர்ச்சிப் பாதைகளின் ஓரமாக முக்கிய வளர்ச்சி நடைபெற்றது. சுதந்திரமடைந்த பின் இந்தப் பாதைகள் இணைந்து ஒரே ஐக்கிய அமைப்பை, புதிய வகையான பிரதேசக் கட்டமைப்பை உருவாக்குகின் றன. இந்த நிகழ்ச்சிப் போக்கானது, முக்கிய நகரங்களின் பங்கு வலுப் படுவதன் பின்னணியில் நடைபெறுகிறது, கணிசமான அளவு இவற்றை

அடிப்படையாகக் கொண்டு நடைபெறுகிறது. சாதாரணமாக புதிய பெருவீதக் கட்டுமானம், உற்பத்தி உள்கட்டமைப்பையுடைய முக்கியப் போக்குவரத்து மார்க்கங்களையும் சமூக பொருளாதார வளர்ச்சிக் கான அனுகூலமான சூழ்நிலைகள் உள்ள, நகரங்கள் உள்ள பிரதேசங் களையும் நெருங்கியுள்ளது.

அதே நேரத்தில் பெரிதும் மந்தமான சமூக பொருளாதார பிரதேசங் கள் (சில நேரங்களில் இவை ''உள்நாட்டு காலனிகள்'' எனப்படுகின்றன) மேற்கூறியவற்றின் நேரடித் தாக்கத்திற்கு அப்பாற்பட்ட மண்டலத்தில் உள்ளன.

நாடு சுதந்திரமடைந்த பின், ''பிராந்திய சீரிசைவு'' மற்றும் பின் தங்கிய பிரதேசங்களின் வளர்ச்சி பற்றி அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப் பட்டாலும் உண்மையில் பிராந்திய சமூக பொருளாதார வளர்ச்சி மட்டங்களிடையில் பிளவு அதிகரிக்கிறது. பல வளர்முக நாடுகளில் சிக்கலான தேசிய இன உறவுகள் நிலவும் சூழ்நிலையில் இந்நிகழ்ச்சிப் போக்குகள் குறிப்பாக பாதகமேற்படுத்தும் வடிவங்களைப் பெறு கின்றன, அரசியலுக்கு மாறுகின்றன, இந்நாடுகளின் ஒற்றுமை வலுப்படு வதைத் தாமதப்படுத்துகின்றன.

பிரதேசங்கள் உருவாகும் நிகழ்ச்சிப் போக்கில் பல்வேறு காரணிகள் பங்காற்றினாலும் பிரதேச உழைப்புப் பிரிவினை போக்குகள் முக்கியப் பங்காற்றுகின்றன. இன்று உலக முதலாளித்துவப் பொருளாதாரம் எங்கும் பரவி வரும் பொழுது, வலுப்பட்டு வரும் பன்னாட்டு ஏகபோ கங்கள் விடுதலையடைந்த நாடுகளின் பிராந்திய வளர்ச்சியைப் பெரிதும் மாற்றுகின்றன, இவற்றைத் தம் சொந்த நலன்களுக்கு உட்படுத்த முயலுகின்றன.

அத்தியாயம் மூன்று

இயற்கையைப் பயன்படுத்தல்: இயற்கை வள மற்றும் புறச்சூழல் ரீதியான பிரதேசமயப்படுத்தல்

இட்டு நிரப்பப்படாத இயற்கை வளங்கள் தீர்ந்து வருவது, இயற்கை வளங்கள், மின்னாற்றலுக்கு வகை செய்வது, புறச்சூழல் அசுத்தமடையும் பிரச்சினைகள் ஆகியவை இன்று உலக மாடெல்கள், எதிர்கால கணிப்புகளின் முக்கியப் பிரச்சினைகளாகும். 1970ஆம் ஆண்டுகளில்தான் மனித குலம் இயற்கை வளம் மற்றும் புறச்சூழல் பிரச்சினைகளைப் பரவலாக உணர ஆரம்பித்தது. எரிசக்தி வளங்களும் மற்ற இயற்கை வளங்களும் புறச்சூழலும் உற்பத்தி மற்றும் சமுதாயத்தின் மேன்மேலும் அதிகமான தாக்குதலுக்கு உள்ளாகின்றன. உலகின் எதிர்கால இயற்கை வளங்கள் பற்றிய பிரச்சினையும் மனித வாழ்க்கைக்குத் தேவையான புறச்சூழலைப் பேணிக் காப்பது பற்றிய பிரச்சினையும் முக்கியமானவையாகியுள்ளன.

இயற்கை வளங்கள் விரயமாவதும் புறச்சூழல் பாழ்படுவதும் ஆங்காங்கேதான் ஆரம்பமாகின்றன, ஆனால் பல்வேறு நாடுகளுக்கும் பிரதேசங்களுக்கும் பரவப் பரவ இவை உலகப் பிரச்சினைகளாகின்றன. எனவே இந்த உலகப் பிரச்சினைகள் சாராம்சத்தில் பிராந்திய பிரச்சினைகளாகும். இவை தம் தோற்றத்தில் ஸ்தல பிரச்சினைகளாயிருந்தாலும், அதே நேரத்தில் இவை ''மேக்ரோ பிராந்திய'' பிரச்சினைகளுமாகும்; ஏனெனில் இவற்றிற்குத் தீர்வு காணும் வாய்ப்புகள் சமூக பொருளாதார அமைப்பால் நிர்ணயிக்கப்படுகின்றன. சோஷலிச நாடுகள், முதலாளித்துவ நாடுகள் மற்றும் வளர்முக நாடுகளிடம் உள்ள இயற்கை வள உள்ளாற்றல் வெவ்வேறானது, இந்த இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதிலும் இவற்றிடம் வெவ்வேறான அணுகுமுறைகள் காணப்படுகின்றன. இப்பிரச்சினைகள் அதே சமயம் ஸ்தல பிரச்சினைகளாகும்; ஏனெனில் சமூக அமைப்பின் வேறுபாடுகள் பொதுவான வளர்ச்சிப் போக்குகளை நிர்ணயித்தாலும் தனிப்பட்ட அம்சங்கள் திட்டவட்டமான பரப்பில் உள்ள திட்டவட்டமான நிலவரத்தைப் பொறுத்தவையாகும்.

ஆனால் பொது வளர்ச்சியிலும் பிராந்திய வளர்ச்சியிலும் இயற்கை

வள மற்றும் புறச்சூழல் அம்சங்களை வலுப்படுத்தும் புறவய போக்கு உரிய தத்துவ அமைப்புகளில் எப்போதுமே வெளிப்படுகிறது என்று கூற முடியாது. இது சம்பந்தமான கருத்தமைப்புகள் பெரிதும் முரண் பாடானவை; இது முறையியல் அணுகுமுறைகளிலும் சித்தாந்த நிலை களிலும் உள்ள வேறுபாடுகளைக் காட்டுகிறது.

1. வளர்முக நாடுகளின் ஒரு சில இயற்கை வள பிராந்திய மற்றும் புறச்சூழல் பிரச்சினைகள்

நாடுகள், பிரதேசங்களின் தனியம்சங்களை நிர்ணயிக்கும் பொழுது இயற்கை வளக் காரணிகள் முக்கியப் பங்காற்றுகின்றன; அதுவும் பரிணாம வளர்ச்சியின் ஒப்பீட்டளவில் ஆரம்பக் கட்டங்களில் இப்பங்கு மிகவும் அதிகம். எனவே வளர்முக நாடுகளை வகைப்படுத்தும் பொழுது இவற்றின் இயற்கை வள உள்ளாற்றலைக் கவனத்தில் கொள்வது மிகவும் முக்கியமாகும்.

இந்த விஷயத்தில் பின்வரும் இயற்கை வளங்களைப் பெற்றிருப்பது மிக முக்கியமாகும்:

1) இன்றுள்ள பொருளாதாரக் கட்டமைப்பில் சாதாரண மற்றும் விரிவுபடுத்தப்பட்ட புனருற்பத்தியை நிறைவேற்ற உதவும் இயற்கை வளங்கள் (முக்கியமாக விவசாய இயற்கை வளங்கள்);

2) பொருளாதாரத்தின் உள்ளே கணிசமான கட்டமைப்பு மாற்றங் களைச் செய்து (குறிப்பாக தொழிற்துறைமயப்படுத்தல் மூலம்) அதிக உயர்வான வளர்ச்சிக் கட்டத்திற்கு மாறிச் செல்ல அவசியமான இயற்கை வளங்கள்;

3) உலக சந்தையில் அதிகமான தேவையை உடைய இயற்கை வளங்கள்; இவை பொதுவான வளர்ச்சிப் போக்கிற்கு அவசியமான அன்னியச் செலாவணியைப் பெறுவதற்கான அடித்தளத்தை ஏற்படுத்த வல்லவை.

இந்த அணுகுமுறையைப் பயன்படுத்தி, வளர்முக நாடுகளை ஒரு சில வகைகளாகப் பிரிக்கலாம்.

1) சகல விதமான இயற்கை வளங்களும் மிகக் குறைவாக உள்ள நாடுகள். இவை மிகக் கடினமான நிலையில் உள்ளன. ''மிகக் குறை வான வளர்ச்சியடைந்த நாடுகள்'' கிட்டத்தட்ட அனைத்தும் இத் தகைய நாடுகளாகும்; ஐ. நா. வகையீட்டின்படி 31 நாடுகள் இந்த மாதிரி யான நாடுகளாகும் (இவை பெரும்பாலும் ஆப்பிரிக்க கண்டத்தில் சாஹெல் மண்டலத்தில் உள்ள நாடுகளும் இன்னும் சில நாடு களுமாகும்). சொந்த பலத்தின் அடிப்படையில் பின்தங்கிய நிலை யிலிருந்து மீண்டு அதிக உயர்வான வளர்ச்சிக் கட்டத்தை அடைவது இவற்றிற்கு மிகக் கடினமாகும், இவற்றிற்கு வெளியுதவி மிகவும் தேவைப்படும்.

2) விவசாயத்திற்கேற்ற இயற்கை வளம் குறைவாயுள்ள, ஆனால் உலக சந்தையில் பெரும் மதிப்புள்ள வேறு ஏதாவது ஒரு அல்லது ஒரு சில இயற்கை வளங்களையுடைய வளர்முக நாடுகள். இதனால் இவற்றிற்குப் பரவலான ஏற்றுமதி வாய்ப்புகள் உண்டு. இதன் மூலம் இவை தம் விவசாய வளர்ச்சிக்கும் தொழிற்துறைமயப்படுத்தலுக்கும் தேவையான சேமிப்புகளையும் அன்னியச் செலாவணியையும் பெற முடியும். லிபியா, சவூதி அரேபியா, மத்திய கிழக்கில் உள்ள எண்ணெய் எடுக்கும் மற்ற நாடுகள், ''தாமிர மண்டல'' நாடுகள், இன்னும் சில நாடுகள் இந்த வகையிலடங்கும்.

3) விவசாய வளர்ச்சிக்கும் தொழிற்துறைமயப்படுத்தலுக்கும் ஏற்ற அவசியமான இயற்கை வளங்களைக் கணிசமாக உடைய நாடுகள்; ஆனால் இவை மக்கள்தொகை பெருக்கத்தால் அவதியுறுகின்றன, இவற்றின் ஏற்றுமதி வாய்ப்புகள் குறைவானவை, எனவே அன்னியச் செலாவணி வருகை மட்டானது. இந்தியா, பாகிஸ்தான், துருக்கி போன்ற நாடுகள் இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். இவற்றிற்குத் தொழிற்துறைமயப்படுத்தும் போக்கும், உற்பத்தியின் துறை ரீதியான வேறுபாடும், சீரிசைவான விவசாய வளர்ச்சியும் மிகவும் முக்கியமானவையாகும்.

மேற்கூறிய பிரிவு மிகவும் நிபந்தனைக்குட்பட்டது. இது இயற்கை வள வசதிகளின் ''கடைக்கோடி'' நிலைகளை மட்டுமே பிரதிபலிக்கிறது; இவற்றின் இடையே மாறுநிலை வடிவங்களும் பல்வேறு விகிதங்களும் உள்ளன. இயற்கை வளங்கள் வளர்ச்சிக்கான முன்தேவைகளை மட்டுமே தோற்றுவிக்கின்றன, இவை உள்நாட்டு சமூக பொருளாதாரக் கட்டமைப்பு மற்றும் நாடு தேர்ந்தெடுத்துள்ள வளர்ச்சிப் பாதை ஆகியவற்றின் திட்டவட்டமான நிபந்தனைகளைப் பொறுத்தும் உலகப் பொருளாதாரத்தின் பொது நிலையைப் பொறுத்தும் வெவ்வேறு விதமாக செயல்படுகின்றன.

முன்னாள் காலனி மற்றும் சார்பு நாடுகளின் வளர்ச்சிப் பாதையைத் தேர்ந்தெடுக்கும் பொழுதும், இவற்றின் பொருளாதாரத்தின் துறை ரீதியான, பிரதேச ரீதியான கட்டமைப்பை நிர்ணயிக்கும் பொழுதும், சர்வதேச உதவியைப் பகிர்ந்தளிக்கும் கோட்பாடுகளை முடிவு செய்யும் பொழுதும், பிராந்திய ஒத்துழைப்பை ஆதாரப்படுத்தும் பொழுதும், மற்ற முக்கியப் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொழுதும் இயற்கை வள வசதியும் மக்கள்தொகை நிலவரமும் பொது சமூக பொருளாதார மட்டமும் முழுமையாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதற்கும் புறச்சூழல் பிரச்சினைகளுக்கும் இடையில் அநீதியான முரண்பாடு நீண்ட காலமாக, கிட்டத்தட்ட 1980ஆம் ஆண்டுகள் வரையில் நிலவியது; அதுவும் இது வளர்முக நாடுகளைப் பெரிதும் பாதித்தது. இயற்கை வளங்களைப் பற்றிய பிரச்சினை அத்தியாவசியமானதாகக் கருதப்பட்டதெனில், புறச்சூழல்

பிரச்சினைகள் பெரும்பாலும் தொழிற்துறை ரீதியாக வளர்ச்சியடைந்த நாடுகளின் பிரச்சினைகளாகக் கருதப்பட்டன. சில நேரங்களில் சமுதாய வளர்ச்சியில் புறச்சூழல் அம்சத்தின் முக்கியத்துவத்தை மறுப்பதானது கடைக்கோடி நிலைகளில் வெளிப்பட்டது. உதாரணமாக, இந்திய விஞ்ஞானி இராமசந்திர குஹா பின்வருமாறு எழுதுகிறார்: ''இந்தியாவில் சமூக விஞ்ஞான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ள தீவிரவாத விஞ்ஞானிகள் புறச்சூழல் பிரச்சினையை வர்க்கப் போராட்டத்திலிருந்து கவனத்தைத் திசை திருப்பும் பூர்ஷ்வா முயற்சி என்றுதான் பெரும்பாலும் கருதுகின்றனர்.'' (Guha, 1982.) *ஆனால் வாழ்க்கையே புறச்சுழலும் பொருளாதார வளர்ச்சிப் போக்கும் (இது இயற்கை வளங்கள் பொருளாதார ரீதியாகச் சுரண்டப்படுவதையும் புறச்சூழல் பாதுகாப்பையும் குறிக்கிறது) இரண்டறக் கலந்தவை என்பதை உணரும்படி நிர்ப்பந்திக்கிறது.*

வளர்முக நாடுகளின் புறச்சூழல் பிரச்சினைகள் எல்லாவற்றிற்கும் மேலாக வெப்ப மண்டல புறச்சூழல் பிரச்சினைகளாகும். வளர்முக நாடுகள் உள்ள வெப்ப மண்டலமும் மிதவெப்ப மண்டலமும் எளிதில் மாறவல்ல புறச்சூழலை உடையவை.

பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் இயற்கைப் பாதுகாப்பு சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன; இங்கு புறச்சூழலை அசுத்தப்படுத்தினால் பெரும் அபராதங்கள் விதிக்கப்படுகின்றன; இயற்கைப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இங்கு பெரும் முதலீடுகள் தேவைப்படுகின்றன, புறச்சூழல் அசுத்தமடையும் அபாயம் பற்றிய சமூக அரசியல் உணர்வு வளர்ச்சியடைந்துள்ளது; இவற்றின் காரணமாய் அசுத்தமேற்படுத்தவல்ல உற்பத்திகள் பெருமளவில் வளர்முக நாடுகளுக்குத் ''தள்ளிவிடப்படுகின்றன'', இது பன்னாட்டு ஏகபோகங்களுடைய செயல்தந்திரங்களில் ஒன்றாகியுள்ளது. உதாரணமாக, கரிபிய வளைகுடாப் பகுதியிலுள்ள நாடுகளில் எண்ணெய் சுத்திகரிப்பு பெருமளவில் வளர்ச்சியடைந்து வருகிறது; இரசாயன உற்பத்தி வெளிநாடுகளுக்கு மாற்றப்படுகிறது; வளர்முக நாடுகளில் இரும்பு உலோகத்துறை பெரிதும் விரிவுபடுத்தப்படும் என்று கணிக்கப்படுகிறது. இயற்கைப் பாதுகாப்பு விதிகளை மீறி (அல்லது அவற்றின் குறைகளைப் பயன்படுத்தி) பன்னாட்டு ஏகபோகங்கள் கனரகத் தொழிற்சாலைகளை மெக்சிக்கோ, பிரேசில், இந்தியா, மற்ற நாடுகளில் கட்டுகின்றன, இவற்றிற்கு உரிய சுத்திகரிப்பு ஏற்பாடுகளைச் செய்யாமல் அப்படியே விட்டு விடுகின்றன.

இந்தியாவில் போபால் நகரில் ஏற்பட்ட விபத்து, வளர்முக நாடுகளில் புகுத்தப்படும் புறச்சூழலைப் பாழ்படுத்தும் உற்பத்திகளில் அடங்கியுள்ள மரண அபாயத்திற்கான அடையாளச் சின்னமாகும். அமெரிக்காவில் தலைமைக் காரியாலயத்தை உடைய பன்னாட்டு ஏகபோக கம்பெனி ''யூனியன் கார்பைடுக்கு'' சொந்தமான பூச்சி மருந்து தொழிற்

சாலையில் 1984ஆம் ஆண்டு டிசம்பர் 2ஆம் தேதி நள்ளிரவில் ஒரு விபத்து ஏற்பட்டு நச்சு வாயு வெளியேறியது அனைவரும் அறிந்ததே. இதனால் சுமார் 2,000 நபர்கள் உடனடியாக மரணமடைந்தனர், கிட்டத்தட்ட 2 லட்சம் நபர்கள் (இவர்களில் முக்கால் பகுதியினர் தொழிற்சாலைக்கு அருகிலிருந்த சேரிகளில் குடியிருந்தவர்கள்) பல விதங்களில் பாதிக்கப் பட்டனர், இவர்களில் பெரும்பாலோர் நிரந்தர ஊனமடைந்தனர்.

முதலாளித்துவ நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்கும் இடையி லான இப்படிப்பட்ட உழைப்புப் பிரிவினை நிரந்தரமானது என்று காட்ட பூர்ஷ்வா விஞ்ஞானிகள் முயலுகின்றனர். இப்போக்கு குறிப் பாக, எச். கான், டபிள்யூ. பிரவுன், எல். மார்டெல் ஆகியோர் எழுதிய **அடுத்த 200 ஆண்டுகள்** என்ற நூலில் (H. Kahn, W. Brown, L. Martel, 1976) நன்கு வெளிப்படுகிறது. ஏழை நாடுகளும் ஏழை மக்களும் மிக அசுத்தமான வேலைகளைச் செய்தாக வேண்டும் என்று இதில் நேரடியாகக் குறிப்பிடப்படுகிறது....

அரசியல் எல்லைகள் அரசியல் சுதந்திரத்தின் அடிப்படையாகும், இயற்கை வளங்கள் அரசின் பொருளாதார சுதந்திரத்தின் அடிப்படை யாகும். முதலில் சொன்னதில் எவ்வித சந்தேகமும் இல்லை; ஆனால் இரண்டாவதாகச் சொன்னது எப்போதும் அவ்வளவு தெளிவாக வெளிப்படுவதில்லை, அதுவும் இட்டு நிரப்ப வல்ல இயற்கை வளங்களைச் சுரண்டும் விஷயத்தில் இது அவ்வளவு தெளிவாக வெளிப்படுவதில்லை.

முன்னாள் காலனி மற்றும் சார்பு நாடுகளில் பலவற்றிற்கு (குறிப்பாக வளர்ச்சி குன்றிய நாடுகளுக்கு) இவற்றின் விவசாய இயற்கை வளம் மோசமடைந்து வருவதும், இயற்கை சீற்றங்கள் அடிக்கடி பாதிப்பதும் மிகவும் கடினமான பிரச்சினைகளாகும்; இதனால் பல பிரதேசங்களும் நாடுகளும் பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

வளர்முக நாடுகளின் புறச்சூழல் நெருக்கடி, உலக முதலாளித்துவ முறையில் பொது நெருக்கடியுடன் மேன்மேலும் ஒன்றுபடுத்தப்படு கிறது. புறச்சூழல் பெரும் மூலதனத்தால் பாழ்படுத்தப்பட்டாலும் சரி, அல்லது ஏழை மக்கள் இயற்கை வளங்களைத் தாமே விரயமாக்கினா லும் சரி, இரண்டு சந்தர்ப்பங்களிலும் இவர்களுக்குத்தான் முதலில் பேரிழப்பு ஏற்படுகிறது.

பின்தங்கிய நிலை என்பதை சார்பு நிலையில் உள்ள முதலாளித்துவ நாடுகளில் உழைப்பு சுரண்டப்படுவதாக மட்டும் பார்க்கக் கூடாது. இந்நாடுகளில் பல்தேசிய தனியார் மூலதனமும் அரசு மூலதனமும் திரளும் போது இயற்கை வளங்களும் இடையறாது விரயமாகின்றன. வளர்ச்சியடைந்த முதலாளித்துவத்திற்கே உரித்தான பொருளாதார வளர்ச்சி செயல்தந்திரத்தின் விளைவாகத்தான் வளர்முக நாடுகளில் புறச்சூழல் மோசமடைவது தீவிரமாகியுள்ளது. விவசாய உற்பத்தியை முதலாளித்துவ ரீதியாக சர்வதேசமயப்படுத்துவதைப் பற்றிய பொது சித்திரத்தைத் தர வல்ல ஆராய்ச்சிகள் துரதிர்ஷ்டவசமாக இதுவரை

மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் பன்னாட்டு ஏகபோகங்களும் பெரும் அயல்நாட்டு (மற்றும் தேசிய) பண முதலைகளும் விவசாயத் துறையினுள் புகுவதன் விளைவாக வளர்முக நாடுகளின் விவசாயி களும் முழு பிரதேசங்களும் பெருமளவில் ஏழ்மையடைவது, பிராந்திய இயற்கை, புறச்சூழல் அமைப்புகள் சீர்குலைவது, இயற்கை சீற்றங்களின் அளவுகளும் வலிமையும் அதிகரிப்பது ஆகியவற்றிற்கான அரசியல் பொரு ளாதாரக் காரணங்களைப் பகுப்பாய்வு செய்வதன் மீது மேலைய நாடுகளில் உள்ள முற்போக்கு விஞ்ஞானிகள் மேன்மேலும் அதிகமாக கவனம் செலுத்துகின்றனர். இப்பிரச்சினைகள் சம்பந்தமான சுவாரசி யமான நூல்களில் ஒன்று எம். ரெட்கிளிப்ட் எழுதிய **வளர்ச்சியும் புறச் சூழல் நெருக்கடியும். சிவப்பு மாற்றுவழியா பசுமை மாற்றுவழியா?** என்ற நூலாகும். (M. Redclift, 1984.) பன்னாட்டு ஏகபோகங்கள் எப்படி வளர்முக நாடுகளின் விவசாயத் துறையினுள் புகுந்து அங்குள்ள பாரம்பரிய பொருளாதார, புறச்சூழல் சமன் நிலையைக் குலைத்து, தமக்கேற்ற தொழில்நுட்பத்தைத் திணிக்கின்றன என்பது குறித்து இந்நூலிலிருந்து சில எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம். பழங்களைப் பதப்படுத்தும் ''டெல் மோன்டே'' என்ற அமெரிக்க கம்பெனிக்கு 20க்கும் மேற்பட்ட நாடுகளில் கிளைகளும் பதப்படுத்தும் தொழிற் சாலைகளும் உள்ளன. உணவுப் பொருள் உற்பத்தியின் போக்குகளை நிர்ணயிக்க சர்வதேச கம்பெனிகளுக்கு சொந்தமாக நிலம் இருக்க வேண்டும் என்ற கட்டாயமே இல்லை. உதாரணமாக, உலகிலேயே இரண்டாவது சக்தி மிக்க உணவுப் பொருள் கம்பெனியாகிய ''நேஸ்ட்லே'' கம்பெனிக்கு நிலம் எதுவும் கிடையாது; ஆனால் இதன் உற்பத்தி, ஈக்வடோர் நாட்டிலுள்ள மலைகளின் மீதும் பெரு நாட்டின் சமவெளிகளிலும் பால் பண்ணைகளைத் தோற்றுவிப்பதுடன் தொடர் புடையது. இந்த உற்பத்தியின் சங்கிலித் தொடர் ஆன்ட் மலைகளில் உள்ள கிராமங்களை மேலைய நாடுகளில் உள்ள மிகப் பெரும் வர்த்தக மையங்களின் சூப்பர் மார்க்கெட்டுகளுடன் இணைக்கிறது.

வளர்முக நாடுகளில் விவசாயத் தொழிற்துறை துரிதமாக வளர்ச்சி யடைந்து வருகிறது. அதாவது ஒரு ஐக்கிய உணவுப் பொருள் முறை பண்ணையைத் தொழிற்சாலையுடனும், தொழிற்சாலையை நுகர்வாள னுடனும் இணைக்கிறது. தொழில்நுட்பத்தையும் கூலியுழைப்பையும் பயன்படுத்தும் விதத்தில் இது முதலாளித்துவ தொழிற்துறை உற்பத் தியை மேன்மேலும் நினைவுபடுத்துகிறது. அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு அருகிலிருப்பதாலும் அரசியல் காரணங்களினாலும் விவசாயத் தொழிற் துறை, முதலாளித்துவ விவசாய முறை லத்தீன் அமெரிக்காவில் உள்ள வளர்முக நாடுகளில் குறிப்பாக பரவியுள்ளது; இந்நாடுகளில் தொழிற் துறையுடன் தொடர்பு கொண்ட விவசாயப் பண்ணைகள் பாரம்பரிய லேண்ட்லார்டிசத்தை மாற்றுகின்றன, அதே சமயம் பெரும்பாலான விவசாயிகள் ஒருபுறமாக ஒதுக்கி வைக்கப்படுகின்றனர். தனியார்

முதலாளித்துவ பண்ணை விவசாயமும் அரசு முதலாளித்துவ பண்ணை முறையும் சர்வதேச விவசாய கார்பரேஷன்களுக்குப் பாதையைத் திறந்து விடுகின்றன. மெக்சிக்கோவில் உள்ள பாஜோ பள்ளத்தாக் கிலும், கொலம்பியாவில் உள்ள கவூக்காவிலும், கலிபோர்னியாவில் சலீனாஸ் பள்ளத்தாக்கிலும் பழங்களையும் காய்கறிகளையும் பயிரிடு பவர்கள் ஒரே விதமான கலப்பின விதைகளைத்தான் பயன்படுத்துகின் றனர், ஒரே மாதிரியான எந்திரங்களைத்தான் வாங்குகின்றனர், ஒரே மாதிரியான உரங்களைத்தான் இடுகின்றனர், ஒரே மாதிரியான பூச்சி மருந்துகளைத்தான் தெளிக்கின்றனர். இவற்றிற்கு அதே வங்கிகள் தான் நிதியுதவி வழங்குகின்றன, இவை தாம் உற்பத்தி செய்தவற்றை அதே சர்வதேச கார்பரேஷன்களுக்கு மட்டுமே விற்கின்றன.

லத்தீன் அமெரிக்காவில் விவசாயத் தொழிற்துறைக்குப் பெருமளவில் பண்ணை நிலங்கள் உள்ளன; இது தவிர பெரிய மற்றும் சிறிய பண்ணை கள் பயன்படுத்தும் பூச்சி மருந்துகள், மற்ற பொருட்களின் உற்பத்தியிலும் இது பங்கேற்கிறது. தரக் குறைவான விவசாயக் கருவிகளைப் பயன் படுத்தக் கூடிய, இவற்றில் நன்கு பயிற்சி பெறாத சிறு நிலச் சொந்தக் காரர்கள், பூச்சி மருந்துகளால் பெரும் பண்ணையாளர்களை விட அதிகமாகப் பாதிக்கப்படலாம். மத்திய அமெரிக்காவில் பருத்தி வயல் களில் வேலை செய்பவர்கள் அன்றாடம் பூச்சி மருந்துகளால் பாதிக் கப்படுகின்றனர். ''இன்றுள்ள நடைமுறையில் பூச்சிக் கொல்லிகள், பட்டினி கிடப்பவர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை அளிக்கப் பயன்படுத்தப்படுவதை விட, நன்கு சாப்பிடுபவர்களுக்கு உணவளிக்கும் பொருட்டு பட்டினி கிடப்பவர்களை நச்சுத் தாக்குத லுக்கு ஆளாக்க அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.'' (D. Bull, 1982, p. 96.)

சமீப ஆண்டுகளாக ஆப்பிரிக்காவிலும் விவசாயத் தொழிற்துறை பரவும் பொழுது இதே மாதிரியான பின்விளைவுகள் ஏற்படுகின்றன. வழக்கமாக விவசாயத் தொழிற்துறை, மேற்கு ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் உள்ள லாபகரமான சந்தைகளுக்குத் தேவைப்படும் பொருட்களின் (காப்பி, சர்க்கரை, பழங்கள் போன்றவை) உற்பத்தி மீது கவனம் செலுத்துகிறது. உணவுப் பொருட்களைப் பதப்படுத்து வதும் இதன் விற்பனையும் ''நேஸ்ட்லே'', ''ஜெனரல் ஃபுட்ஸ்,'' ''யுனி லெவெர்'', ''தாத்தே'', ''லிலே'' போன்ற பெரும் அயல்நாட்டு கம்பெனி களின் வசம் உள்ளன. இதில் தருவிக்கப்படும் விலையுயர்ந்த பொருட் கள், உபகரணங்களுக்கான செலவு, ஆப்பிரிக்காவில் உற்பத்தி செய்யப் பட்டு, பாக்கிங் செய்யப்பட்ட பொருட்களின் விற்பனையிலிருந்து கிட்டும் அதே அளவு அன்னியச் செலாவணிக்குக் கிட்டத்தட்ட சமமாகும். உதாரணமாக ''டெல் மோன்டே'' கம்பெனி, பதப்படுத்தப்பட்ட அன்னாசிப் பழங்களை கென்யாவிலிருந்து ஏற்றுமதி செய்வதற்குத் தேவையான எல்லாவற்றையும் கென்யாவிற்கு அனுப்புகிறது.

உணவுப் பொருள் பற்றாக்குறை அதிகரித்து வருவதால் பல ஆப்பிரிக்க அரசாங்கங்கள் உணவுப் பொருள் உற்பத்தித் துறையில் சர்வதேச விவசாயத் தொழிற்துறையின் நடவடிக்கைக்கு ஊக்கமளிக்கின்றன. இந்நோக்கத்தோடு வர்த்தக நலன்களுக்காக நிலம் குறுகிய காலத் தவணையில் அவற்றிற்கு அளிக்கப்படுகின்றன. இப்பாதை நில மேம்பாட்டிற்கோ, பெருந்திரளான ஏழை விவசாயிகளின் வாழ்க்கையை மேம்படுத்தவோ உதவுவதில்லை.

மக்கள்தொகைப் பெருக்கம், இயற்கைச் சூழல் மோசமடைவது, உணவுப் பொருள் நெருக்கடி கூர்மையடைந்தது ஆகியவை ஆப்பிரிக்க கண்டத்தில் மிகவும் கடுமையான வடிவில் வெளிப்படுகின்றன; இங்கே மிக மோசமான நிலை சாஹெல் மண்டலத்தில் — இது தெற்கேயிருந்து சஹாரா பாலைவனத்தை ஒட்டியுள்ளது — நிலவுகிறது. இம்மண்டலத்தின் புறச்சூழல் ஸ்திரமின்மை பெரிதும் அதிகரித்துள்ளது. பாரம்பரியமான பொருளாதார, புறச்சூழல் தொடர்புகள் சீர்குலைந்ததும், எல்லையோரப் பகுதிகளில் மேய்ச்சல் நிலங்கள் மற்றும் சாகுபடிப் பரப்பின் மீது நிர்ப்பந்தம் பெரிதும் அதிகரித்ததும் இதற்கான முக்கியக் காரணங்களாகும். லத்தீன் அமெரிக்காவிற்கு மாறாக — இதன் பாரம்பரியப் பயிர்கள் முக்கிய ஏற்றுமதிப் பொருட்களாயின — பாரம்பரிய ஆப்பிரிக்கப் பயிர்கள் (உருளைக் கிழங்கு, தக்காளி, பயிறுகள், மக்காச்சோளம்) வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் சந்தைகளுக்குச் செல்லவில்லை. உலக முதலாளித்துவ சந்தையில் உட்புகுவதும் பருத்தி, காப்பி, பழங்கள் போன்றவற்றைச் சாகுபடி செய்வதும் மற்ற உணவுப் பயிர்களை மோசமான நிலங்களுக்கு மாற்றுவதன் மூலம் நடைபெறுகிறது. வரிகளை விதிப்பதால் இடம் விட்டு இடம் செல்லும் சாஹெல் மண்டல கால்நடை மேய்ப்பாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையிலான பாரம்பரிய பண்ட பரிவர்த்தனை முறை சீர்குலைகிறது; இதனால் விவசாய உற்பத்தியின் பண்டத் தன்மை வலுப்படுகிறது. மக்கள்தொகைப் பெருக்கம், எல்லையோர நிலம் மேன்மேலும் சாகுபடியின் கீழ் கொண்டு வரப்படுவது, கால்நடைகளின் எண்ணிக்கை கூடுவது ஆகியவையும் இயற்கைச் சூழல் கெடுவதைத் துரிதப்படுத்துகின்றன.

ஏழ்மையானது இயற்கைச் சூழலுக்கும் சமூக பொருளாதாரக் கட்டமைப்புகளுக்கும் இடையிலான விசேஷ பரஸ்பர செயலாக்கத்தின் விளைவாகும். வினியோக முறை, நிலவுடைமை குவிவது, உண்மை வருமானம் குறைவது, மூலதனத் திரட்சி ஆகியவை கிராமப்புற ஏழ்மையை அதிகப்படுத்துகின்றன. குறைவான அளவு இயற்கை வளம்தான் ஏழைகளுக்குக் கிட்டுகிறது, இவர்கள் தம் ஏழ்மையின் காரணமாக இதை அளவிற்கதிகமாகச் சுரண்ட வேண்டி வருகிறது.

இன்று வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்கும் இடையில் நிலவும் பொருளாதார உறவுகள் உலக புறச்

சூழல் நிலவரத்தைப் பல விதங்களில் மோசமாக்குகின்றன. வளர்முக நாடுகளில் உள்ள இயற்கை வளங்களைப் பயன்படுத்தியும் இவற்றின் மீதான புறச்சூழல் நிர்ப்பந்தத்தை அதிகப்படுத்தியும்தான் தொழிற் துறை ரீதியாக வளர்ச்சியடைந்த நாடுகளின் பொருளாதாரத் தேவை கள் பெரும்பாலும் பூர்த்தி செய்யப்படுகின்றன.

உலகந் தழுவிய அளவில் பிராந்திய பிரச்சினைகளுக்கும், ஒரு சில உலகளாவிய நிகழ்ச்சிப் போக்குகளில் வளர்முக நாடுகளுக்குள்ள பங்கு அதிகரித்து வருவதற்கும் இடையிலான பிரிக்க இயலா தொடர்பு பாலை நிலங்கள் அதிகரித்து வருவதிலும், மண்ணின் உயிரியல் வளம் வீழ்வதிலும் சில சந்தர்ப்பங்களில் முழுமையாக அழிவதிலும் வெளிப் படுகிறது. இது இன்று மக்களின் முன் உள்ள ஆபத்தான உலகப் பிரச்சினைகளில் ஒன்றாகும். தட்பவெப்பநிலை தன்மைகளின்படி பாலை நிலங்களும் அரைப் பாலைநிலங்களும் பூமியின் நிலப்பரப்பில் கிட்டத் தட்ட $^{1}/_{3}$ பகுதியில் உள்ளன, இங்கு உலக மக்களில் 15% க்கு மேற்பட்டோர் வாழுகின்றனர். மானுட நடவடிக்கையின் விளைவாய் 1970ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் இன்னமும் 9 மில்லியன் ச.கி.மீ.க்குக் கூடுதலான பாலைநிலம் ஏற்பட்டுள்ளது; பாலைநிலங்கள் இன்று பூமியின் நிலப்பரப்பில் 43% இல் உள்ளன. இது தவிர இன்னமும் 30 மில்லியன் ச.கி.மீ. பரப்பு (பூமியின் நிலப்பரப்பில் கிட்டத்தட்ட $^{1}/_{5}$ பகுதி) பாலைநிலமாகும் அபாயம் உள்ளது. 100க்கும் மேற்பட்ட நாடுகளின் முன், குறிப்பாக ஆப்பிரிக்கா, ஆசியா, லத்தீன் அமெரிக்கா வைச் சேர்ந்த வளர்முக நாடுகளின் முன் இந்த அபாயம் உள்ளது.

பாலைநிலங்கள் உருவாகும் நிகழ்ச்சிப் போக்கிற்கு எதிரான போராட்டம் சம்பந்தமான ஐ. நா. மகாநாட்டில் (நைரோபி, 1977), இது பரவலாகவும் விரைவாகவும் நடைபெறுவதற்கான முக்கியக் காரணம் சமூக, பொருளாதார, உற்பத்திக் காரணிகளில் அடங்கியுள்ளது என்று குறிப்பிடப்பட்டது. வறண்ட, பாதி வறண்ட மற்றும் பாதி ஈரப்பசையுள்ள நிலப்பரப்புகளின் புறச்சூழலைப் பாழ்படுத்தும் கட்டுப் பாடற்ற மனித நடவடிக்கை இவற்றிலடங்கும். **பாலைநிலங்கள் ஏற்பட்டு வருவதற்கு எதிரான போராட்ட செயல்திட்டம்** இம்மகாநாட்டில் ஏற்கப் பட்டது; இதில் 28 சிபாரிசுகள் அடங்கியிருந்தன. இந்தச் செயல்திட் டத்தை நிறைவேற்ற ஆண்டுதோறும் 4.5 பில்லியன் டாலர்கள் தேவை யென மதிப்பிடப்பட்டுள்ளது; இது இந்த அழிவுகரப் போக்கு தொடரு வதைத் தடுத்து நிறுத்தும்.

மேற்கூறியவற்றில் தொழிற்துறைமயப்படுத்தலையும் நகரமயப்படுத் தலையும், வறண்ட பகுதிகளின் விவசாயத் துறை வளர்ச்சியுடன் பயன் மிகு வகையில் இணைக்கும் சிபாரிசுகளை நைரோபி மகாநாட்டில் சோவியத் தூதுக்குழு முன்வைத்தது. சோவியத் நாட்டில் வறண்ட நிலங்கள் மீட்கப்பட்டது பற்றிய வெற்றிகரமான அனுபவத்தின் அடிப் படையில் பிரச்சினையைப் பன்முக பிராந்திய ரீதியில் அணுக வேண்டி

யதன் அவசியத்தை இது விளக்கியது. சோவியத் தூதுக்குழுவின் இந்த முன்மொழிவுகள் ஏற்கப்பட்டு, பன்முக வளர்ச்சியின் மூலம் பாலைநில மாகும் போக்கிற்கு எதிரான போராட்டம் என்ற ஐ. நா. வின் திட்ட நகலின் கோட்பாட்டு அடிப்படைகளாயின.

மேற்கூறிய திட்ட நகலின் முதல் கட்டம் 1979 — 1982இல் நிறை வேற்றப்பட்டது. இதன் நிறைவேற்றத்தின் பொழுது சோவியத் யூனிய னில் சர்வதேசப் பயிற்சி வகுப்புகள் (1980) நடத்தப்பட்டன, பாலை நிலமாவதற்கு எதிரான போராட்ட பிரச்சினைகள் குறித்த சர்வதேசக் கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது (1981). சமூக பொருளாதார வளர்ச்சி மற்றும் பாலைநிலமாவதற்கு எதிரான போராட்டம் பற்றிய கூட்டு பிராந்திய திட்டங்களைத் தீட்ட உதவும் துணை நூல் என்ற பாடநூலும் (இது வளர்முக நாடுகளில் உள்ள திட்டப் பணியாளர்களுக்கானது) கூட்டு வளர்ச்சியின் மூலம் பாலைநிலமாவதற்கு எதிரான போராட்டத்தின் விஞ் ஞான அடிப்படைகள் என்ற நூலும் வெளியிடப்பட்டன. இவையனைத் தும் திட்டமிடலுக்கான பிரதேசமயப்படுதல், வறண்ட பிரதேசங்களைப் பெருமளவில் மீட்டல், பின்தங்கிய பிரதேசங்களை வளர்ச்சியுற வைத்தல் ஆகியவற்றில் சோவியத் நாட்டின் அனுபவத்தைப் பயன்படுத் தும் பரவலான வாய்ப்புகளுக்கு சான்று பகர்கின்றன.

அதே நேரத்தில் ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு பிரதேசத்தின் வளர்ச்சி பற்றிய திட்டவட்டமான பிரச்சினைகளை வெற்றிகரமாகத் தீர்ப்பதில் இவை ஒவ்வொன்றின் ஈடு இணையற்ற விசேஷ அம்சங்களை அதிகபட்சம் முழுமையாகப் பயன்படுத்துவது முக்கியமாகும். உலகப் பிரச்சினைகளின் தீர்வில் பிராந்திய அணுகுமுறையின் முக்கியத்துவத்தை மேற்கூறிய திட்ட நகல் கோடிட்டுக் காட்டுகிறது.

2. இயற்கை வள மற்றும் புறச்சூழல் பிரதேசமயப்படுத்தல்

ஏற்கெனவே சுட்டிக் காட்டியபடி, பிராந்திய வளர்ச்சி பற்றிய மேலைய கருத்தமைப்புகளில் — குறிப்பாக 1960ஆம் ஆண்டுகளில் — இதன் முக்கிய அம்சங்களில் ஒன்றாகிய இயற்கை வள அடிப்படை சாதார ணமாக கவனிக்கப்படவில்லை. இயற்கையின் விஷயத்தில் ஏனோ தானோவென்று இருத்தல் மேலைய பிராந்தியக் கருத்தமைப்புகளின் கடைக்கோடி ''விலகல்களில்'' ஒன்றாகும். அதுவும் இந்த ''விலகல்'', இயற்கை புவியியல் நியதிவாதம் நீண்ட காலமாக, பரவலாகப் பர வியதன் அடிப்படையில் நடைபெற்றது. ஆறுகளோடு சம்பந்தப்பட்ட இடங்கள்தான் மேலைய நாடுகளில் திட்டமிடலுக்கான பிரதேசங் களாக முதன்முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டன என்பது குறிப்பிடத் தக்கது.

1930ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவில் டென்னெசி ஆற்றின் கூட்டு

வளர்ச்சி பற்றிய திட்ட நகலும் இதன் நிறைவேற்ற அனுபவமும் மேலைய உலகில் விஞ்ஞான அடிப்படையிலான பிராந்தியத் திட்ட மிடலுக்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டாகப் படலாம். 1933 — 1934இல் அமெரிக்காவில் இயற்கை வளங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக ஒரு செயல்திட்டம் தீட்டப்பட்டது. நாட்டிலுள்ள எல்லா ஆற்றுப் பள்ளத்தாக்குகளின் வளர்ச்சி பற்றிய பன்முக திட்டத்தைத் தீட்டுவது இதன் மைய நோக்கமாயிருந்தது. **டென்னெசி பள்ளத்தாக்கு திட்ட நகல்** *மட்டுமே இச்செயல்திட்டத்தில் ஒரே நடைமுறைத் திட்டமாக இருந்தது. ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டின் மதிப்பீட்டின்படி இத் தகையதொரு திட்டம் ''முதன்முதலாக நாட்டின் இயற்கை வளர்ச்சிக்குத் திட்ட அடிப்படையை வழங்கியிருக்கும்... வெள்ளம், மண் அரிப்பு, காடுகளின் வளர்ச்சி ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பளித்திருக்கும், விவசாய வளர்ச்சிக்கு உதவியிருக்கும், தொழிற்துறையை மையக் கலைப்பிற்கு உள்ளாக்கியிருக்கும், போக்குவரத்து, நீர்மின்சக்தி துறை வளர்ச்சிக்கு உதவியிருக்கும்....''* (Friedmann, Weaver, 1979, p. 62.)

1933இல் அமெரிக்காவில் தோற்றுவிக்கப்பட்ட தேசியத் திட்டக் கமிஷன் 1935இல் தேசிய இயற்கை வளக் கமிட்டியாக மாற்றியமைக் கப்பட்டது. அமெரிக்க நிபுணர்களின் கருத்துப்படி இது 1935 — 1939இல் அமெரிக்காவின் பிராந்தியத் திட்டமிடலில் மிக முக்கியப் பங்காற்றியது. 1935இல் இக்கமிட்டி வெளியிட்ட **தேசியத் திட்டமிடலில் பிராந்தியக் காரணிகள்** *என்ற ஆவணம் ''அமெரிக்க பிராந்தியத் திட்டமிடலில் ஒரு திருப்புமுனையாகத் திகழ்ந்தது; திட்டமிடல் பற்றிய சித்தாந்தத்திற்கு ஒரு முழு வடிவம் தருவதில் இது முக்கியப் பங்காற்றியது. பிராந்தியத் திட்டமிடலில் பல முரண்பாடான கருத்துகள் இருந்த போதிலும் அதிகாரப் பூர்வமான அரசாங்க வட்டங்கள் இதை ஒரு குழப்பமான கருத்தமைப்பாகப் பார்ப்பதை நிறுத்தின. இது ஆற்றுப் பள்ளத்தாக்கு களின் பன்முக வளர்ச்சியோடு தொடர்புடையதாயிற்று.''* (Ibid.)

இக்கமிட்டி வெளியிட்ட ஆவணத்தில் கொலராடோ மற்றும் டென்னெசி ஆற்றுப் பள்ளத்தாக்குகள், நியூ இங்கிலாந்து, பசிபிக் மாகடலோர வட மேற்குப் பகுதி ஆகியவற்றின் வளர்ச்சி பற்றிய விவரங்கள் அடங்கியிருந்தன. ஆனால் **டென்னெசி பள்ளத்தாக்கு திட்ட நகல்** *மட்டுமே பிரபலமாயிற்று.*

இந்தத் திட்ட நகல் மீது கற்பனாவாத நம்பிக்கைகள் வைக்கப் பட்டன, இதைப் ''புதிய நாகரிகத் தொட்டிலாக'' சித்தரித்தனர். எல். மாம்ஃபோர்ட் பின்வருமாறு எழுதினார்: ''டென்னெசி பள்ளத் தாக்கு திட்ட நகலும், எரிசக்தி வளம், நிலம், காடு, மண், நீர் ஆகியவற் றை சமூக நலன்களுக்காகப் பாதுகாப்பது பற்றிய அதன் அடிப்படைக் கொள்கையும் பிராந்திய வளர்ச்சிப் பிரச்சினைகளின் பாலான ஒரு புதிய அணுகுமுறையைக் குறிக்கின்றன.... டென்னெசி பள்ளத்தாக்கி

லும் இதைப் போன்ற பிரதேசங்களிலும்... அதிக செயல்வன்மை மிக்க தொழிற்துறை முறைக்கான அடித்தளம் இடப்படலாம், அது மட்டு மல்ல, புதிய சமூக அமைப்பு, புதிய வகையான நகரச் சூழலுக்கான அடித்தளமும் அங்கு இடப்படலாம். இதற்குத் தேவையான அரசியல் துணிவையும் சமூக கற்பனையையும் இணைத்தால் போதும்.'' உண்மை யில், இப்பிரபல பரிசோதனை, உள்ளடங்கியுள்ள, பின்தங்கிய ஒரு பிரதேசத்திற்குள் ஏகபோக முதலாளித்துவம் அரசின் உதவியுடன் புகுவதற்கான சாதனமாகியது.

டென்னெசி ஆற்றுப் பள்ளத்தாக்கின் பன்முக வளர்ச்சியின் அனுபவம் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் அமெரிக்காவிலோ வேறெந்த வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாட் டிலோ மீண்டும் பயன்படுத்தப்படவில்லை. ஆனால் இந்தியா, ஸ்ரீலங்கா, கொலம்பியா, கானா, இன்னும் சில வளர்முக நாடுகளில் ஆற்றுப் பள்ளத்தாக்குகளின் பன்முக வளர்ச்சித் திட்டங்களைப் பலவிதங் களில் தீட்டும் பொழுதும் நிறைவேற்றும் பொழுதும் இதை மேற்கோள் காட்டினர். இன்று வரை இத்துறை சம்பந்தமான நூல்கள், கட்டுரை களில் இந்த அனுபவம் குறிப்பிடப்படுகிறது.

மேலைய நாடுகளில் இயற்கை அமைப்புகளுக்கும் சமூக பொருளா தார பிரதேச அமைப்புகளுக்கும் இடையிலான பரஸ்பரத் தொடர்பு களை மிகத் தொடர்ச்சியாகவும் ஆழ்ந்தும் ஆராய்வதில் பிரெஞ்சு புவியியல் முன்னணியில் நிற்கிறது. இன்றைய உலகின் விரைவான மாற்றங்கள், விஞ்ஞான ஆராய்ச்சிகளின் வளர்ச்சி ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் முகமாக புவியியல் பிரதேசங்களைப் பற்றிய கருத்துகள் மாற்றமடைந்து வருகின்றன. இத்தகைய பரிணாம வளர்ச்சியின் போக்கு களில் ஒன்று பிரதேசங்கள் உருவாவதன் மீது இயற்கைச் சூழலின் நேரடியான மற்றும் மறைமுகமான தாக்கத்தின் தன்மையில் உள்ள வேறுபாடுகளை ஆராய்வதாகும். பின்வருபவை நேரடித் தாக்கமாக ஆராயப்படுகின்றன: அ) பொது இயற்கைச் சூழலின் அடிப்படையில் ஒரே மாதிரியான பிரதேசங்கள் உருவாதல்; ஆ) கனி வளப் பகுதிகள் மீட்கப்படுவதன் பயனாய் தனியான சுரங்கத் தொழில் பிரதேசங்கள் உருவாதல்; இ) பல்வேறு மாற்ற (நீர்ப்பாசன) நடவடிக்கைகளின் பயனாய் ஒருவித விசேஷ பொருளாதார பிரதேசங்கள் தோன்றுதல். நகர மையங்களுக்கும் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளுக்கும் இடை யிலான பரஸ்பரத் தொடர்புகளின் வளர்ச்சி மீதான இயற்கைச் சூழலின் தாக்கம் மறைமுக தாக்கமாக ஆராயப்படுகிறது. உதாரண மாக, நகரங்களை மற்ற கவர்ந்திழுக்கும் பகுதிகளுடன் இணைக்கும் போக்குவரத்து மார்க்கங்கள் அமையும் விதம் மீது இயற்கைச் சூழல் கணிசமான தாக்கம் செலுத்துகிறது. நகரங்களை ஒட்டியுள்ள பிரதேசங்களை மீட்கும் திட்டவட்டமான முறைகளையும் இயற்கைத் தன்மைகள் நிர்ணயிக்கின்றன.

1960ஆம் ஆண்டுகளில் பிரதேசமயப்படுத்தும் முறையிலும் பிராந்திய ஆராய்ச்சிகளிலும் புறச்சூழல் அம்சம் அதிகம் உட்புகுந்தது. பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் புறச்சூழல் பெரிதும் மோசமடைந்தது; நீர் வளம் அளவில் குறைந்தது, நீரின் தரம் மோசமடைந்தது, வளிமண்டல அசுத்தம், பொதுவில் இயற்கைச் சூழல் பாழ்பட்டது ஆகியவை அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு போன்ற முக்கிய முதலாளித்துவ நாடுகளில் பெரிதும் கடுமையாக உணரப்படலாயின. இந்நாடுகளின் அரசாங்கங்கள் புறச் சூழல் பிரச்சினைகளை அதிகாரப் பூர்வமான வளர்ச்சித் திட்டங்களில் சேர்க்கும்படியும், இதற்குரிய ஆராய்ச்சிகளுக்கு உதவும்படியும் நிர்ப்பந் திக்கப்பட்டன.

அமெரிக்காவில் நீர் வள நிலை குறித்த கணிப்பு எப்படி வளர்ச்சிய டைந்தது என்பது சுவாரசியமானது. அமெரிக்காவின் பல்வேறு பிரதேசங் களில் தண்ணீர் உபயோகம் பற்றிய அளவு நிலை மதிப்பீடுகள் இந்நூற் றாண்டின் முதல் பாதியிலேயே முன்வைக்கப்பட்டன. 1960ஆம் ஆண்டு களின் நடுப்பகுதியிலிருந்து நீர் வளத்தின் தரக்குறைவின் மீது மேன்மே லும் அதிக கவனம் செலுத்தலாயினர். நீரின் தரத்தைக் கண்காணிக்கும் அமைப்பு நாட்டில் இயங்குகிறது; விரிவான விசேஷ பிரதேசமயப்படுத் தல் நடைபெறுகிறது, 21 நீர்வளப் பிரதேசங்கள் ஏற்படுத்தப்பட்டன, இவை 106 துணைப் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டன. தண்ணீர் பற்றாக்குறையால் அவதியுறும் பிரதேசங்களின் வளர்ச்சிப் பிரச் சினைகளுக்கு நீண்ட கால தீர்வு காண ஆறுகளின் நீரை ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்குத் திருப்ப வேண்டும், கடல் நீரின் உப்பையகற்றி பயன்படுத்த வேண்டும் என்று கருதப்படுகிறது. இவ்வாறாக விசேஷ நீர் பிரதேசமயப்படுத்தல் நேரடியான சமூகத் தேவையின் காரணமாய் பன்முக பிரதேசமயப்படுத்தலாக்கப்படுகிறது. புறச்சூழல் பொருளாதார பிரதேசங்களின் கூட்டுப் பிரச்சினைகளைப் பிராந்திய வளர்ச்சி மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு என்னும் பொதுவான செயல்நோக்கப் பின் னணியில்தான் தீர்க்க முடியும்.

இயற்கை வள, புறச்சூழல் மற்றும் நிர்வாக பிரதேசமயப்படுத்தலின் விசேஷப் பிரிவுகளை இணைக்கும் நிகழ்ச்சிப் போக்கின் இன்னொரு அம்சம் அமெரிக்க அனுபவத்தில் நில வள பிரதேசமயப்படுத்தலில் வெளிப்படுகிறது. இது நிலத்தை விவேகமாகப் பயன்படுத்துவதன் அடிப்படையாகத் திகழ வேண்டும். அந்நாட்டில் நிலப்பரப்பில் பாதிப் பகுதி மண் அரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். நாட்டில் 156 முக்கிய நில வள பிரதேசங்கள் உள்ளன. இவற்றின் எல்லைகள் மாவட்டங்களின் நிர்வாக எல்லைகளை ஒத் துள்ளன, இவை சராசரி அளவுள்ள ஆறுகளின் பள்ளத்தாக்கு அளவை ஒத்தவை.

பிரதேசமயப்படுத்தல் மீது இயற்கை வளம் மற்றும் இயற்கைச்

சூழலின் தாக்கத்தை ஆராய்வதற்கு சோவியத் புவியியல் விஞ்ஞானிகள் பெரும் முக்கியத்துவம் அளிக்கின்றனர், இது சோவியத் புவியியலின் குறிப்பிடத் தக்க அம்சங்களில் ஒன்றாகும். அதே நேரத்தில் சமூக பொருளாதார, இயற்கை வள மற்றும் பௌதீக-புவியியல் பிரதேசமயப் படுத்தல்களின் தொடர்பு பற்றிய பிரச்சினையில் (இது தத்துவார்த்த ரீதியில் சிக்கலானது, நடைமுறை ரீதியில் முக்கியமானது) பல்வேறு கண்ணோட்டங்கள் நிலவுகின்றன.

1970க்களின் ஆரம்பத்தில் முக்கியமான பொருளாதார புவியியல் படைப்புகள் வெளியிடப்பட்டன. இவற்றில் பரவலான நடைமுறைத் தகவல்களைப் பற்றிய பகுப்பாய்வின் அடிப்படையில் இயற்கை வளங் களைப் பிராந்திய ரீதியில் பயன்படுத்துவது பற்றிய கருத்தமைப்பு கள் உருவாக்கப்பட்டன. ஏ. ஏ. மின்த்ஸ், ''இயற்கை வளங்களின் பிர தேச இணைப்பு'' என்ற கருத்தை முன்மொழிந்தார். அதாவது ''ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் உள்ள பல்வேறு இயற்கை வள ஊற்றுகள், இவை ஒரே உற்பத்தி பிரதேச இணையத்தின் வரம்புகளுக்குள் கூட் டாகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப்படலாம்.'' (மின்த்ஸ், 1972, பக்கம் 237.) இயற்கை மற்றும் உற்பத்தி பிரதேச இணையங்கள், இயற்கை வளங்களின் பிரதேச இணைப்புகளை வெளிப்படுத்துவதற் கான புறவய அடிப்படையாகக் கருதப்படுகின்றன. இதில் இயற்கை வளங்கள் மற்றும் உற்பத்தி பிரதேச இணையங்களின் தொடர்பு, இவற்றின் பிரதேச இணைப்பு மீது முக்கியக் கவனம் செலுத்தப்படு கிறது. ''எங்களுடைய கருத்துப்படி இயற்கை வளங்களின் பிரதேச இணைப்பின் அமைப்பும் உற்பத்தி பிரதேச இணையங்களின் அமைப்பும் ஒத்துப் போகின்றன'' என்று ஏ. ஏ. மின்த்ஸ் எழுதினார். (அதே நூல், பக்கம் 241.)

''இயற்கை வள பிரதேசங்கள்'' என்ற கருத்து, ''இயற்கை வளங் களின் பிரதேச இணைப்பு'' என்ற சமூக பொருளாதார கருத்தைச் செழுமைப்படுத்தும் என்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

இயற்கை வள பிரதேசமயப்படுத்தல் இயற்கை புவியியல் பிரதேச மயப்படுத்தலுடன் நெருக்கமான தொடர்பையுடையது, ஆனால் பிர தேசங்கள் உருவாவதன் சமூக பொருளாதார கோட்பாடுகள், வேறு சில அம்சங்கள், பெரிதும் மாறும் தன்மை, எல்லைகளின் நிலையின்மை ஆகியவற்றில் பின்னதை விட முன்னது வேறுபடுகிறது. இது ஒரு விசேஷ வகையான பிரதேசமயப்படுத்தலாகும், இது பௌதீக-புவியியல் பிரதேசமயப்படுத்தலுக்கும் பொருளாதார பிரதேசமயப்படுத்தலுக்கும் இடைப்பட்ட வடிவம்.

1970ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் சோவியத் புவியியல் விஞ்ஞானி ஐ. வி. கோமர் இயற்கை வள சுழற்சி என்ற கருத்தமைப்பை முன்வைத் தார்; இயற்கையிலிருந்து எடுப்பதிலிருந்து இயற்கைக்குத் திருப்பியளிக் கப்பப்பட்டு ஈடுகட்டப்படுவது வரை எல்லா கட்டங்களிலும் இயற்கைப்

பொருட்களில் நடைபெறும் மாறுதல்கள், இட மாற்றங்கள் இதிலடங்கும். இப்படிப்பட்ட இயற்கை வள சுழற்சிகளின் பிராந்தியக் கட்டமைவைத் தெளிவுபடுத்துவது, இயற்கையைப் பயன்படுத்துவது பற்றிய பல்வேறு விஞ்ஞானங்களின் முக்கியமான புவியியல் கிளையாகும்; இது ''நிகழ்ச்சிப் போக்கு'', ''பிரதேசம்'' என்ற முக்கியக் கருத்தினங்களை இணைக் கிறது, இயற்கையைப் பயன்படுத்தும் நிகழ்ச்சிப் போக்கின் பிராந்திய வடிவத்தை வெளிப்படுத்துகிறது. (கோமர், 1975.)

இயற்கை வள சுழற்சிகள் பற்றிய கருத்தமைப்பு வளர்முக நாடுகளின் வளர்ச்சியில் புவியியல் பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்யும் விசேஷ கடமைகளுக்கு வெற்றிகரமாகப் பயன்படுத்தப்படுகிறது; இவற்றில் ''இயற்கை வள ஏற்றுமதி சுழற்சிகள்'' முன்மொழியப்பட்டுள்ளன. (மாஷ்பித்ஸ், 1974.) மூலப்பொருள் இறக்குமதியைச் சார்ந்துள்ள தொழிற்துறை ரீதியாக வளர்ச்சியடைந்த நாடுகளைப் பொறுத்த வரை இங்கு ''இயற்கை வள இறக்குமதி'' சுழற்சிகளைக் குறிப்பிடலாம்.

இயற்கையைப் பயன்படுத்துவது பற்றிய பிராந்தியப் பகுப்பாய்வில் முக்கிய இயற்கை வளத்தைச் சுட்டிக் காட்டும் கருத்தும் தோன்றியது. இத்தகைய அணுகுமுறையை பிரதேசங்களின் வளர்ச்சியில் முக்கியப் பிரச்சினை பற்றிய கருத்துடன் (இது சோவியத் பொருளாதார புவியிய லில் நீண்ட காலமாக நிலவுகிறது) ஒப்பிடலாம். இவ்வாறு, இயற்கை யைப் பயன்படுத்துவதன் பிராந்திய அம்சங்களும் இயற்கை வள பிர தேசமயப்படுத்தலின் பிரச்சினைகளும் பொருளாதார பிரதேசமயப்படுத் தல் மற்றும் பிராந்திய வளர்ச்சியின் பொது பிரச்சினைகளுடன் மேன் மேலும் நெருக்கமாக இணைகின்றன.

சோவியத் யூனியனின் இயற்கை வளம் பற்றிய விவரங்கள், இவற்றின் இடப் பரப்பின் மிக முக்கிய சிறப்பியல்புகள் ஆகியவற்றைக் கவனத் தில் கொண்ட சோவியத் புவியியல் நிபுணர்கள் 1980ஆம் ஆண்டுகளில் நாட்டின் இயற்கை வளப் பிரச்சினையின் சாரத்தைப் பின்வருமாறு வரையறுத்தனர்: ''மக்கள் குடியேறிய பிரதேசங்களிலும் தொழிற் துறை ரீதியாக வளர்ச்சியடைந்த பிரதேசங்களிலும் இயற்கை வள இருப்புகள் ஓரளவு மட்டாக இருக்கையில், இவற்றின் பண மதிப்பும் சமூக மதிப்பும் உயருகையில், இயற்கை வளம் மற்றும் நல்ல தரமான சூழல் சம்பந்தமாக சமுதாயத்தின் அதிகரித்து வரும் நீண்ட காலத் தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்வது அவசியம்; இவற்றைப் பயன்படுத்தும் தீவிர வழிகளையும் இடப் பரப்பு வழிகளையும் விவேக மாக இணைத்து இதைச் செய்ய வேண்டும். இப்பிரச்சினையின் தீர் விலும், வெவ்வேறு வகையான பிரதேசங்களின் பொருளாதார வளர்ச்சி யிலும் தனிப்பட்ட பிரதேசங்களின் இயற்கை வளங்களைக் கணக்கி லெடுத்து ஒன்று திரட்டுவது மிக முக்கியமாகும்.'' (Privalovskaya, 1984, p. 41.) இயற்கையைப் பயன்படுத்தும் தீவிரப் பாதையானது உற்பத்தி பிரதேச இணையங்கள் உருவாவதுடன் தொடர்புபடுத்தப்

படுகிறது. இயற்கை வள மீட்பின் இடப் பரப்புப் பாதை தனிப்பட்ட பொருளாதார மையங்கள் உருவாவதில் சாதாரணமாக வெளிப்படு கிறது. ஆனால் இத்தகைய மைய வகை மீட்பின் செயல்வன்மை சந்தே கத்திற்கு உள்ளாக்கப்படுகிறது, ஏனெனில் துணை மற்றும் சேவை உற்பத்திகளை ஏற்படுத்தும் தேவைகள் அதிகரிப்பதால் இயற்கை வளங் களைப் பயன்படுத்துவதில் கிட்டும் செயல்வன்மை குறைந்திருப்ப தாகக் கணக்கீடுகள் காட்டுகின்றன. இதன் தொடர்பில், ''மைய பிரதேச உற்பத்தி இணையத்தின்'' சாலச் சிறந்த கட்டமைப்பையும் உள்ளாற்றலையும் நிர்ணயிக்கும் கடமையும் இதன் தனிப்பட்ட பகுதி களை ஓரளவு நன்கு மீட்கப்பட்ட பிரதேசங்களுக்கு மாற்றும் பிரச் சினையும் முன் எழுகின்றன. இதில் மிகவும் சாலச் சிறந்த உழைப்புப் பிரிவினையைத் திட்டமிடுவதன் அடிப்படையில் இயற்கை வளங்களை விவேகமாக மீட்டு பயன்படுத்துவது, பிராந்திய வளர்ச்சி சம்பந்தமான பிரச்சினைகள் ஒரே நேரத்தில் தீர்க்கப்படுகின்றன.

நாட்டின் பிரதேச உற்பத்தி வளர்ச்சியின் தீர்மானகரமான அங்கங் கள், சோஷலிச ஒருங்கிணைப்பை மேற்கொண்டு ஆழப்படுத்துவதன் அடிப்படை என்ற வகைகளில் நீண்ட கால விசேஷ செயல்திட்டங்கள் தீட்டப்படும் பொழுது இதன் பின்னணியில் பிராந்திய வளர்ச்சிப் பிரச்சினை புதிய வண்ணங்களைப் பெறுகின்றது. இச்செயல்திட்டங்கள் தம் சாரத்தில் பன்முகத் தன்மையை உடையவை; இங்கு எல்லா வளங் களின் ஒட்டு மொத்தத்தையும் ஆராய்வதும் துறைகளின் பரஸ்பரத் தொடர்பை வெளிப்படுத்துவதும், அதாவது இயற்கை பொருளாதார பிரதேசமயப்படுத்தலும் அவசியமாகும்.

புறச்சூழல் பாதுகாப்புப் பிரச்சினை அதிகரித்து வரும் அதே சமயத்தில் இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதில் பாகுபாடு வலுக் கிறது; இவற்றின் புறச்சூழல் பாதுகாப்புப் பணிகள் கூடுகின்றன. உதார ணமாக, காடுகளுக்கு மூலப்பொருள் பணி, பொருளாதாரப் பாதுகாப்புப் பணி, புறச்சூழல் பணி, சமூகப் பணி என்று நான்கு முக்கியப் பணி களுண்டு. சோவியத் யூனியனில் உள்ள நிலவரத்தைப் பகுப்பாய்வு செய்த பொழுது (ருனோவா, 1973) நீண்ட காலமாக மூலப்பொருள் பணி மட்டுமே முழுக்க முழுக்க மேலோங்கி நின்றது தெரிய வந்தது. 1960ஆம் ஆண்டுகளிலிருந்து இவற்றின் பொருளாதாரப் பாதுகாப்புப் பணி அதிகரித்தது; ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புடைய துறைகளை ஏற்படுத்தும் சூழ்நிலைகளை மேம்படுத்துவதுதான் இதன் நோக்கமாகும் (பாதைகளின் ஓரமாக காட்டுப் பாதுகாப்பு மண்டலங் களை ஏற்படுத்துவது, வயல்வெளிகளைச் சுற்றி தடுப்பு மரங்களை நடுவது போன்ற நடவடிக்கைகள்). 1970ஆம் ஆண்டுகளிலிருந்து புறச் சூழல் மற்றும் சமூகப் பணிகள் மேன்மேலும் அதிக முக்கியத்துவத்தைப் பெற்று வருகின்றன; நீர் சூழற்சி, ஒளிச் சேர்க்கை, இன்ன பிற இயற்கை நிகழ்ச்சிப் போக்குகளின் மீது காடுகள் செலுத்தும் பெரும் தாக்கத்

துடனும் மனிதர்களின் உடல்நலத்திற்கு இவை ஏற்படுத்தும் நல்ல சூழ்நிலையுடனும் இவை தொடர்புடையவை. 1977இல் சோவியத் யூனியனில் நிறைவேற்றப்பட்ட **காட்டுப் பாதுகாப்பு சட்டம்** அதிகமான மரங்களை வெட்டித் தள்ளாமலேயே காடுகளின் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற கடமையை முன்வைக்கிறது. காடுகளைப் பன்முக நோக்கோடு பயன்படுத்துவதில், இவற்றின் புறச்சூழல் மற்றும் சமூகப் பணிகளைத் தீவிரப்படுத்துவதற்குப் பெரும் முக்கியத்துவம் அளிக் கப்படுகிறது.

இந்த எடுத்துக்காட்டு, நிலப்பரப்பையும் இயற்கை வளங்களையும் பயன்படுத்துவதில் பன்முகத் தன்மை வலுப்படும் பொதுவான நவீன போக்கையும் அந்தந்த பணியின் முக்கியத்துவத்தைப் பற்றிய கருத்து கள் மாறியுள்ளதையும் சுட்டிக் காட்டுகிறது. இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதில் பன்முகத் தன்மையானது பிராந்திய வளர்ச்சியில் இவற்றின் பங்கை அதிகரிக்கிறது. இது பொது மற்றும் பிராந்திய வளர்ச்சியின் விஞ்ஞான கருத்தமைப்புகளில் பிரதிபலிப்பதோடு கூட அதிகாரப் பூர்வமான அரசாங்க நடவடிக்கை, அந்தந்த சட்டங்களிலும் மேன்மேலும் உட்புகுகிறது.

பிராந்திய வளர்ச்சியையும் பிரதேசத் திட்டமிடல்களையும் ஆதாரப் படுத்தும் பொழுது புறச்சூழலின் மீது தொழிற்துறை, நகரங்கள், போக்கு வரத்து, பொதுவில் பொருளாதார நடவடிக்கையின் தாக்கத்தை ஆராய்வதை ஒரு புதிய விஷயமாகக் கருதக் கூடாது. பெரும்பாலான முதலாளித்துவ நாடுகளில் பெரிதும் குறைவாக உணரப்படும் மேக்ரோ பிராந்தியத் திட்டமிடலுக்கு மாறாக, ஒரு சில நாடுகளில் (கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், ஸ்காண்டிநேவிய நாடுகள், இன்னும் சில நாடுகள்) இயற்கைத் திட்டமிடல், பிரதேசத் திட்டங்கள், ஸ்தல மட்டத்தில் நிலம் பயன்படுத்தப்படுவதைப் பற்றிய கண்காணிப்பு ஆகியவை பெரிதும் பரவியுள்ளன. 1947இல் கிரேட் பிரிட்டனில் நகர மற்றும் கிராமத் திட்டங்களைப் பற்றிய சட்டம் ஏற்கப்பட்டதிலிருந்து ஒரு குறிப்பிட்ட பொருளாதாரக் கட்டுமானம் புறச்சூழலின் மீது என்ன விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என்பதைப் பற்றிய கணிப்புகள் (சாதாரணமாக உள்ளூர் மட்டத்தில்) நடத்தப்பட்டன. ஆனால் 1960ஆம் ஆண்டுகளில்தான் பரவலான பொதுமக்களின் முன் இப்பிரச் சினை உண்மையான பிரச்சினையாக வந்தது. உதாரணமாக கிரேட் பிரிட்டனில், இங்கிலாந்தின் தென் கிழக்கே மூன்றாவது சர்வதேச லண்டன் விமான நிலையத்தைக் கட்டுவது சம்பந்தமான திட்ட நகல் ஏற்படுத்திய சமூக இயக்கம் ஒரு அளவுகோலாக கருதப்படுகிறது. வட கடலில் எண்ணெயும் எரிவாயுவும் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து பிரிட்டன் ஒரு முக்கிய எண்ணெய் எடுக்கும் வல்லரசாகியது; இதனால் பொருளாதார வளர்ச்சி புறச்சூழல் மீது என்ன தாக்கம் செலுத்துகிறது என்பதை முறைப்படி ஆராயும் அவசியம் ஏற்பட்டது.

பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த பெரும்பாலான முதலாளித்துவ நாடுகளில் உள்ளதை விட சோவியத் யூனியனில் புறச்சூழல் நிலவரம் மேலானது. புறச்சூழல் கொள்கை உருவாக்கப்பட்டதும் இதன் நிறைவேற்றமும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 25, 26, 27ஆவது காங்கிரசுகளின் ஆவணங்களில் பிரதிபலிக்கின்றன.

நாட்டின் புறச்சூழல் கொள்கை சோவியத் அரசியல் சாசனத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது: ''இன்றைய மற்றும் எதிர்காலத் தலைமுறையினரின் நலன் கருதி நிலம், அதன் செல்வங்கள், தாவரங்கள், விலங்குகளைப் பேணிக் காக்கவும், விஞ்ஞான அடிப்படையில் விவேகமாகப் பயன்படுத்தவும், காற்று, நீரின் தூய்மையைக் காக்கவும், இயற்கை வளங்கள் பெருகவும் புறச்சூழலை மேம்படுத்தவும் ஆவன அனைத்தையும் செய்யவும் சோவியத் யூனியனில் அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன'' என்கிறது சோவியத் அரசியல் சாசனத்தின் 18ஆவது ஷரத்து. புறச்சூழலை மேம்படுத்த பெரும் நிதிகள் ஒதுக்கப்படுகின்றன; மொத்த முதலீட்டில் 1/7 பகுதி இயற்கை வளங்களைப் புனரமைக்கச் செல்கிறது. மொத்தத்தில் நாட்டின் மொத்த உற்பத்திப் பொருளில் சுமார் 2% இயற்கைப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குச் செல்கிறது; சோவியத் யூனியனை விட புறச்சூழல் அதிகமாக அசுத்தமடையும் அமெரிக்காவிலும் இதே அளவுதான் ஒதுக்கப்படுகிறது என்பதை குறிப்பிட வேண்டும். என்றாலும் இப்பிரச்சினைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது, தரம் மோசமடைந்து வருகிறது.

1986 — 1990ஆம் ஆண்டுகளிலும் 2000 ஆண்டு வரையிலும் சோவியத் யூனியனின் பொருளாதார, சமூக வளர்ச்சியின் முக்கிய திசையமைவுகள் என்ற ஆவணம் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27ஆவது காங்கிரசில் நிறைவேற்றப்பட்டது. இதில் **புறச்சூழல் பாதுகாப்பு, இயற்கை வளங்களை விவேகமாகப் பயன்படுத்தல்** என்ற விசேஷப் பிரிவு உள்ளது. இப்பெயரே இயற்கை வளங்களைப் பொருளாதார ரீதியாகப் பயன்படுத்துவதற்கும் புறச்சூழலின் பாதுகாப்பிற்கும் இடையில் எப்படிப்பட்ட அங்கக ரீதியான பரஸ்பரத் தொடர்பு நிலவுகிறது என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது. இயற்கைப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் செயல்வன்மையை உயர்த்துவது மையக் கடமையாக முன்வைக்கப்படுகிறது; இது மேலே குறிப்பிடப்பட்ட அரசியல் சாசன நிலைக்கு ஒத்துப் போகிறது.

இப்பொதுக் கடமை முக்கிய இயற்கை அம்சங்களுக்கு ஏற்ப திட்டவட்டமாக்கப்படுகிறது; இதில் நாடு முழுவதற்கும் பொதுவான நிலைகள் முக்கிய மற்றும் ''பிரச்சினை'' பிரதேசங்களுக்கேற்ப திட்டவட்டமாக்கப்படுகின்றன. நாட்டில் உள்ள நீர் வளங்களின் பாதுகாப்பைத் தொடர்ச்சியாக மேம்படுத்தும் கடமை முக்கியக் கடமையாக முன்வைக்கப்படுகிறது. பைக்கால் ஏரி, பால்டிக், காஸ்பியன் கடல்கள்,

கருங்கடல், அசோவ் கடல் ஆகியவற்றை ஒட்டியுள்ள பிரதேசங்களின் பாதுகாப்பு சம்பந்தமான முக்கிய நடவடிக்கைகள் முடிவை நெருங்கிக் கொண்டிருக்கின்றன. ஆர்க்டிக் கரையோர நீர்நிலைகள், மத்திய ஆசிய, கஸாக்ஸ்தான் நீர்நிலைகளைப் பாதுகாத்தல், சிற்றாறுகள், நீர்த் தேக்கங்களை மேம்படுத்துதல் சம்பந்தமான பன்முக நடவடிக் கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன. நீர் வளங்களைப் பயன்படுத்துவதை விவேகமாக்குவதில் அளவு நிலைக் குறியீடுகளும் தரக் குறியீடுகளும் அடங்கியுள்ளன; உதாரணமாக தொழிற்சாலை களில் தண்ணீரைத் தூய்மைப்படுத்தும் அமைப்புகள், எந்திரங்களின் செயல்வன்மை உயர்த்தப்படும், நீர்ப்பாசனத்திற்கும் தேசியப் பொருளா தாரத்தின் மற்ற தேவைகளுக்கும் தொழிற்சாலைகளில் தூய்மைப் படுத்தப்பட்ட நீரும் பூமியடி நீரும் மேன்மேலும் அதிக அளவில் பயன் படுத்தப்படும்.

வளிமண்டலக் காற்றைத் தொழிற்துறை அசுத்தத்திலிருந்து பாது காக்க பெரும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இதற்காக தொழில் நுட்ப அம்சங்கள், உபகரணங்கள், போக்குவரத்து சாதனங்கள் ஆகிய வற்றை மேம்படுத்தவும் மூலப்பொருள், எரிபொருளின் தரத்தை உயர்த்தவும் கழிவுப் பொருட்களை வடிகட்ட வல்ல உயர் செயல்வன் மையுள்ள அமைப்புகளை ஏற்படுத்தவும் இன்ன பிற நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் திட்டமிடப்படுகிறது.

நிலத்தை விவேகமாகப் பயன்படுத்தும் அதே சமயம் நிலத்தை மண், நீர் அரிப்பு, நிலச் சரிவு, வெள்ளம், சதுப்பு நிலமாதல், வறட்சி, உப்பு அதிகரிப்பு ஆகியவற்றிலிருந்தும் பாதுகாக்க வேண்டும். சாகுபடி நிலப்பரப்பைப் பாதுகாப்பதை மேம்படுத்தும் நடவடிக்கைகளை அதிகரிக்கவும், வயல்களின் ஓரமாக மர வரிசைகளை நட்டு பாது காப்பு மண்டலங்களை ஏற்படுத்தவும், சுமார் 6,60,000 ஹெக்டேர் நிலப்பரப்பை மீண்டும் சாகுபடிக்கு உட்படுத்தவும் திட்டமிடப்படுகிறது. மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் ஆபத்தற்ற பயிர் பாதுகாப்பு நடவடிக் கைகளை மேன்மேலும் அதிகமாகப் பின்பற்ற திட்டமிடப்படுகிறது.

தாவரங்களையும் பிராணிகளையும் பேணிக் காத்து, விவேகமாகப் பயன்படுத்தி, அவற்றின் புனர் உற்பத்திக்கு உதவும் பணிகள் அதிகரிக் கப்படுகின்றன. சோவியத் யூனியனின் பொருளாதார மண்டலத்தின் இயற்கைச் சூழலையும் கண்டத் திட்டுப் பகுதியையும் பேணிக் காப்பதன் மீது முக்கியக் கவனம் செலுத்தப்படுகிறது.

இயற்கையைப் பயன்படுத்துவதை விவேகமயப்படுத்தல் மற்றும் புறச் சூழல் பாதுகாப்பு பற்றிய இந்நடவடிக்கைகள் திட்டவட்டமான பிரதேசங்களின் உற்பத்தி, பொருளாதார வளர்ச்சியுடன் நெருக் கமாகத் தொடர்புடையவை: குறைந்த அளவு கழிவுப் பொருளைத் தரக் கூடிய அல்லது கழிவுப் பொருளற்ற தொழில்நுட்பத்தைப் புகுத் துதல், இயற்கை வளம், மூலப்பொருட்கள், துணைப் பொருட்களை

முழுமையாகவும் பன்முக ரீதியிலும் பயன்படுத்தும் கூட்டு உற்பத்தித் துறைகளின் வளர்ச்சி (இவை புறச்சூழலின் மீதான தீய தாக்கத்தை அறவே அகற்றும் அல்லது கணிசமாகக் குறைக்கும்) ஆகியவை இவற்றிலடங்கும். உதாரணமாக, கனி வளங்கள் உள்ள இடங்களைப் பேணிக் காத்து மேம்படுத்தவும், இவற்றைப் பன்முக நோக்கில் பயன்படுத்தவும் விசேஷமாகத் திட்டமிடப்படுகிறது; கனி வளங்களை எடுக்கும் பொழுதும், இவற்றிற்கு செறிவூட்டும் பொழுதும் இவற்றைப் பதப்படுத்தும் பொழுதும் ஏற்படும் இழப்புகள் குறைக்கப்படும்.

சோவியத் நாட்டில் நகரங்களிலும் நாட்டுப் புறங்களிலும் பசுமை மண்டலங்கள் ஏற்படுத்தப்படும், இவை மேம்படுத்தப்படும். இயற்கை சரணாலயங்கள், தேசியப் பூங்காக்கள், மற்ற இயற்கைப் பாதுகாப்பு பிரதேசங்கள் விரிவுபடுத்தப்படும்.

இயற்கையைப் பயன்படுத்துவதை விவேகமயப்படுத்தும் பரவலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் அதே நேரத்தில் இயற்கைச் சூழல் மற்றும் அசுத்தமேற்படுத்தும் காரணிகளின் மீதான அரசுக் கண்காணிப்பு வலுப்படும், இதற்காக செயல்வன்மை மிக்க இயந்திரங்களும் உபகரணங்களும் வழங்கப்படும்.

சோவியத் நாட்டில் இயற்கைப் பாதுகாப்புப் பணியில் சமூக நல ஸ்தாபனங்களும் பொதுமக்களும் மேன்மேலும் பரவலாக ஈடுபடுத்தப்படுவார்கள். அதே நேரத்தில் இயற்கை வளங்களைப் பேணிக் காத்து பெருக்கவும், இவற்றைக் கவனமாகப் பயன்படுத்தவும் ஒரு பொறுப்புணர்வை சோவியத் மக்களிடம் ஏற்படுத்த ஆவன அனைத்தும் செய்யப்படும்.

இவ்வாறாக இயற்கைப் பாதுகாப்பு பற்றிய பல்வேறு பிரச்சினைகள் சட்ட அடிப்படையில் முன்வைக்கப்படுகின்றன. முதலில் பல்வேறு விதமான மனித நடவடிக்கைகளால் ஏற்படும் தீய பின்விளைவுகளுக்கு மாற்றுகள் முன்வைக்கப்படுகின்றன; இதில் சாதாரணமாக காற்று, நீர், மண், காடுகள் போன்றவற்றின் பாதுகாப்பு ஆராயப்படுகிறது.

புறச்சூழல் பாதுகாப்புப் பிரச்சினைகளைத் தீர்ப்பது சம்பந்தமாக அதிக சிக்கலான அணுகுமுறைகளையும் சோவியத் விஞ்ஞானிகள் முன்வைக்கின்றனர்; இவற்றை சமூகத் தேவைகளுடன் தொடர்புபடுத்தி, பிராந்திய அடிப்படையில் நீண்ட காலத் திட்டமிடலுக்குப் பயன்படுத்துகின்றனர். திட்டவட்டமான புறச்சூழல் பிரச்சினைகளை ஆறு முக்கியப் பிரிவுகளாகப் பிரிக்கலாம்: 1) உயிரியல் மண்டலத்திலும் இதன் பெரிய பகுதிகளிலும் அனுகூலமான புறச்சூழல் சமன் நிலையைப் பேணிக் காத்தல்; 2) புனர் நாட்ட வல்ல இயற்கை வளங்களைப் பேணிக் காத்து புனரமைத்து சரிவரப் பயன்படுத்தல்; 3) இயன்ற அளவு அதிகமான உயிரினங்களைத் தக்க வைத்தல்; 4) இயற்கை புறச்சூழல், புவியியல் அமைப்புகளின் மாதிரிகளைப் பேணிக் காத்தல்; 5) மனிதனைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழலைப் பேணிக் காத்து சாலச் சிறந்ததாக ஆக்கு

தல்; 6) சாத்தியமான புனரமைப்பிற்கு வகை செய்தல். (Isakov, 1984, pp. 89—90.) புறச்சூழல் பாதுகாப்பு சம்பந்தமான மேற்கூறிய முக்கியப் பிரச்சினைகள் இவற்றின் பன்முக புறச்சூழல்-சமூக-பொருளாதாரத் தன்மையையும் பிராந்திய அடிப்படையையும் எதிர் காலத் திசையமைவையும் பிரதிபலிக்கின்றன.

பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த பிரதேசங்களில் இயற்கை மேன்மேலும் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதும் புதிய பிரதேசங்களில் இயற்கை வளங்களின் மீட்பளவு அதிகரிப்பதும் இயற்கைச் சூழல் பாது காப்புப் பிரச்சினையை வெவ்வேறு விதமாக முன்வைக்கின்றன. புனர் நாட்ட இயலாத இயற்கை வளங்களின் பாதுகாப்பு என்பது இவற்றை அதிகபட்சம் சிக்கனப்படுத்தும் நாட்டத்தையும் இவற்றைப் பன்முக ரீதியில் பயன்படுத்துவதையும் குறிக்கிறது. புனரமைக்க வல்ல இயற்கை வளங்களின் பாதுகாப்பு என்பது இவற்றின் சாதாரண புனரமைப்பு சுழற்சிகளைப் பேணிக் காக்கும் அவசியத்தைச் சுட்டிக் காட்டுகிறது; இதில் இவற்றை மூலப்பொருள் வளங்களாக மட்டுமின்றி புறச்சூழலின் இயற்கை அடிப்படையாகவும் கருதி செயல்பட வேண்டும்.

விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியின் சகாப்தத்தில் தொழில்நுட்ப சாதனைகள் மிகப் பெரும் வலிமையுள்ள அமைப்புகளைக் கட்ட உதவு கின்றன; உலகின் பல்வேறு பிரதேசங்களில் இயற்கை வளங்கள் தீர்ந்து வருவதால் இதிலிருந்து மீள புதிய வழிகளைத் தேட வேண்டியுள்ளது, பிரம்மாண்டமான திட்டங்கள் பற்றிய கருத்துகள் மேன்மேலும் பரவு கின்றன. கண்டந் தழுவிய அளவில் இயற்கையை மாற்றியமைப்பது பற்றி பல பிரம்மாண்டமான திட்டங்கள் நிலவுகின்றன: அமசோன் ஆற்றுப் பள்ளத்தாக்கின் இயற்கை வள மீட்பு, தென் அமெரிக்காவிலும் ஆப்பிரிக்காவிலும் பெரும் நீர் மார்க்கங்களை ஏற்படுத்தல், இவற்றை யொட்டிய பிரதேசங்களைத் தீவிரமாக வளர்த்தல், தெற்காசி யாவில் ஒரே ஐக்கிய ஆற்று அமைப்பை ஏற்படுத்துதல் போன்றவை இத்தகைய திட்டங்களில் சிலவாகும்.

மேக்ரோ பிராந்திய முக்கியத்துவமுடைய பிரம்மாண்டமான திட் டங்களைத் தீட்டும் பொழுது இவற்றைத் தொழில்நுட்ப சிக்கல் மற்றும் இதற்குத் தேவைப்படும் பெரும் முதலீடுகள் ஆகியவற்றின் நோக்கு நிலையிலிருந்து மட்டும் பார்க்கக் கூடாது. பெரும் கட்டுமானங்களின் பன்முக புறச்சூழல் விளைவுகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும்; அதுவும் இத்தகைய விளைவுகள் எப்போதுமே அனுகூலமானவையாக இருப்பதில்லை, இவற்றில் பலவற்றை முன்கூட்டியே கணிப்பது கூடக் கடினம். மார்க்சிய-லெனினிய ஆசான்களே தம் நூல்களில் பின்வரு மாறு குறிப்பிடுகின்றனர்: ''மாபெரும் இயற்கை விதிகளைக் கவனத்தில் கொள்ளாத மனித திட்டங்கள் துன்பத்தை மட்டுமே ஏற்படுத்தும்.''

மிகப் பெரும் புது திட்டங்களின் ஒப்பீட்டளவு அனுகூலத்தையும் யதார்த்தத்தையும் சாதாரண, அவ்வளவு ''சந்தடியற்ற'', ஆனால்

ஸ்தல வளங்களைப் பயன்படுத்தும் செயல்வன்மை மிக்க வழிகளுடன் ஒப்பிடுவது அவசியம். இத்துறையில் விஞ்ஞான அடிப்படையிலான முடிவு களுக்கு முறையான புறச்சூழல் பொருளாதார ஆராய்ச்சிகள் தேவை.

நகரங்களின் புறச்சூழல் பிரச்சினைகளை ஆராய்வதில்தான் புவி யியல் நிபுணர்கள் அதிகபட்ச வெற்றிகளை அடைந்துள்ளனர்; இயற் கைக்கும் சமூக பொருளாதார மற்றும் தொழில்நுட்ப முறைகளுக்கும் இடையிலான பரஸ்பரத் தாக்கம் மிக அதிகமாக நகரங்களில்தான் காணப்படுகிறது. நகரச் சூழல் சம்பந்தமான முழுமை மாடெல்களை உருவாக்குவதில் புவியியல் நிபுணர்கள் வெற்றிகரமாகப் பங்கேற்கின் றனர்; முழுமை புவியியல் அமைப்புகளைப் பற்றி சோவியத் விஞ்ஞானத் தில் நீண்ட நாட்களாக நிலவும் கருத்துகளை வளர்த்து திட்டவட்ட மாக்குகின்றனர். ஆனால் பிராந்தியத் திட்டமிடல் பிரச்சினைகளின் பாலான புறச்சூழல் அணுகுமுறைகள் இன்னமும் சரிவர உருவாக்கப்பட வில்லை.

புறச்சூழல் ஆராய்ச்சிகளில் புவியியல் நிபுணர்களையும் மற்ற நிபுணர் களையும் ஈடுபடுத்தல், புறச்சூழலின் நிலையையும் மாற்றப் போக்கு களையும் ஆராய்தல் ஆகியவற்றிற்குத் தெட்டத்தெளிவான பயன்முறை நோக்கங்கள் இருப்பது ஒரு புறமிருக்க, மறு புறம் இவற்றிற்கு ஆழ்ந்த தத்துவார்த்த தேட்டங்களும் திட்டவட்டமான கருத்தினங்களை ஏற் படுத்துவதும் அவசியம். புறச்சூழல் பாதுகாப்புத் துறையில் கல்வி சம்பந்தமான பல் அரசாங்க கமிஷன் (திபிலிசி, 1977) இதை ''குறிப் பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் மனிதனின் விருப்பங்களையும் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்காக உள்ள இயற்கை மற்றும் சமூக வளங்களின் ஒட்டு மொத்தம்'' என்று வரையறுத்தது. இந்த வரை யறுப்பு தெளிவற்றதாய் இருந்தாலும், மனிதனை சுற்றியுள்ள சூழல் என்பது மனிதன் மற்றும் சமுதாயத்தின் வாழ்க்கைச் சூழ்நிலைகளைப் பற்றியது என்று எல்லாவற்றிற்கும் மேலாக கோடிட்டுக் காட்டுகிறது. இக்கருத்தினம் சிக்கலான பிரதேச படிநிலை கட்டமைப்பை உடையது, இதில் உயர் மட்டத்தில் ஸ்தல, பிராந்திய மட்டங்கள் உலக நிகழ்ச்சிப் போக்குகளுடன் ஒன்று கலக்கின்றன.

புறச்சூழலைப் பேணிக் காத்து மேம்படுத்துவது சம்பந்தமான பரஸ்பர பொருளாதார உதவி கவுன்சிலின் கமிட்டியின் முடிவிற்கேற்ப சோஷலிச நாடுகளின் புவியியல் நிபுணர்கள் 1981இல் ஒரு வழிகாட்டி நூலை தயாரித்து வெளியிட்டனர். **புறச்சூழலின் மீது மனித நடவடிக் கையின் தாக்கம் பற்றிய பொருளாதார மற்றும் பொருளாதாரத் துறையல்லா மதிப்பீட்டிற்கான முறையியல் சிபாரிசுகள்** என்று இதற்குப் பெயர். மாடெல் பிரதேசங்களின் விசேஷ சூழ்நிலைகளில் பல்வேறு பொருளாதாரத் துறைகளின் தாக்கத்தின் விளைவுகள் பற்றிய திட்டவட்டமான ஆராய்ச்சிகள், மதிப்பீட்டின் அடிப்படையில் இச்சிபாரிசுகள் முன் வைக்கப்பட்டன; மேற்கூறிய பிரதேசங்கள் இந்நோக்கத்திற்காக உறுப்பு

9–1339

நாடுகளால் விசேஷமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. இவ்வாறு மாடெல் பிரதேசங்களில் திட்டவட்டமான நிலவரத்தை ஆராய்வதன் அடிப் படையில் மதிப்பீடு செய்யப்படுகிறது.

படிப்படியாக ஆராய்ச்சி பின்வரும் முக்கிய இலக்குகளை ஆட் கொள்கிறது:

—பரஸ்பரச் செயலாக்கத்தின் ஆரம்பம் என்ற வகையில் மனித நடவடிக்கையின் தாக்கம்;

—இந்தத் தாக்கத்தினால் இயற்கையில் ஏற்படும் மாற்றங்கள்;

—மாறிய இயற்கையின் தாக்கத்தால் மனிதர்களின் உடல் நலத் தின் மீதும் பொருளாதார நடவடிக்கையிலும் ஏற்படும் பின் விளைவு கள்.

இச்சிபாரிசுகள் பிரதேச ஐக்கியத்தையும், புறச்சூழலைப் பேணிக் காத்து மேம்படுத்தும் நோக்கத்துடன் குடிமக்கள், பொருளாதாரம், இயற்கை ஆகியவற்றிற்கு இடையிலான பரஸ்பரச் செயலாக்கத்தையும் பன்முக நோக்கில் ஆராயும் திட்டவட்டமான வழிகளைச் சுட்டிக் காட்டுகின்றன.

இயற்கையை விவேகமாகப் பயன்படுத்தும் கடமை, சமூக புறச்சூழல் அமைப்பு முழுவதையும் சாலச் சிறந்ததாக ஆக்கும் கடமை சிக்கலானது, உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டியது; எந்த ஒரு விஞ்ஞானத் தாலும் இதைத் தவிர்த்துச் செல்ல முடியாது (அல்லது இதைச் சுய மாகத் தீர்க்கவும் முடியாது), ஏனெனில் இயற்கை விஞ்ஞானங்கள், சமூக விஞ்ஞானங்கள், தொழில்நுட்ப விஞ்ஞானங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய பரவலான, பன்முக விஞ்ஞான ஆராய்ச்சியால்தான் இக்கடமையைத் தீர்க்க முடியும்.

இத்துறையில் புவியியல் விஞ்ஞானங்களின் எந்த ஒரு தனிப்பட்ட துணை அமைப்பின் கடமைகளையும் தனியே பிரித்துக் கூற கூடாது, ஏனெனில் புறச்சூழல் என்ற ஆராய்ச்சிப் பொருளே பிரிக்க இயலாத ஒரே சமூக புறச்சூழல் அமைப்பாகும்.

இயற்கையை மாற்றியமைப்பதில் மனிதனின் தலையீடு பெருமளவை எட்டியுள்ளதால் ஆரம்ப இயற்கையை அப்படியே பிரித்துப் பார்த்து வகைப்படுத்துவது இயலாததாகி விட்டது. விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியின் சகாப்தத்தில் இயற்கையம்சங்கள், தொழில்நுட்ப அம்சங் களின் விரைவான, ஆழமான பரஸ்பரச் செயலாக்கம் நடைபெறுகிறது, இவை அங்கக ரீதியாக ஒரே முழுமையாக இணைகின்றன. இயற்கை-தொழில்நுட்ப அமைப்புகளின் மாடெல்களை உருவாக்குவதும் இவற் றின் திட்டமிட்ட வடிவமைப்பும் நவீன புவியியல் விஞ்ஞானத்தின் முக் கியக் கடமைகளில் ஒன்றாகின்றன, எனவே இயற்கை மற்றும் பொரு ளாதார புவியியலுக்கு இடையிலான எல்லைகள் மேன்மேலும் மறைந்து வருகின்றன. இயற்கையைப் பயன்படுத்துவது என்பது மிகப் பரவலான பொருளில் இயற்கையின் மீதான சமுதாயத் தாக்கத்தின் எல்லா அம்சங்

களையும் (இதில் இயற்கையைப் பயன்படுத்துவது, மாற்றுவது, பேணிக் காப்பது எல்லாம் அடங்கும்) உள்ளடக்கியுள்ளது.

இந்த அடிப்படைக் கருத்துகளைத் தத்துவார்த்த ரீதியாக கிரகிக்கும் அதே நேரத்தில் பொருளாதார நடைமுறை, அதாவது பொருளாதார வளர்ச்சியின் செயல்நோக்கம் மாற வேண்டும்; இன்று அழிந்து வரும் இயற்கை உள்ளாற்றலைப் பேணிக் காப்பதற்காக இது மாற வேண்டும், பிராந்திய மற்றும் ஸ்தல மட்டங்களில் இந்த உள்ளாற்றலைப் பேணிக் காத்து, புனர்நாட்டுவது சம்பந்தமான கட்டாய அம்சங்கள் இதில் அடங்கியிருக்க வேண்டும்.

நிர்வாக பிராந்திய பிரிவுகள் இயற்கை எல்லைகளுடன் நெருங்கி வருமாறு (இயற்கையைப் பயன்படுத்துவதை விவேகமயப்படுத்த இது அவசியம்) மாற்றியமைப்பதன் அவசியம் பற்றி சோவியத் இயற்கை புவியியல் விஞ்ஞானி எஸ். பி. கர்ஷ்கோவ் வெளியிட்டுள்ள கருத்து கவனிக்கத் தக்கது. ''பிராந்திய மட்டத்தில் இயற்கை வளங்களைக் கண்காணித்து நிர்வகிப்பதுதான் உலகந் தழுவிய அளவில் இவை மிகவும் விரயமாகும் அபாயத்தைத் தவிர்க்கும்'' என்று அவர் கூறு கிறார்.

மொத்தத்தில் இயற்கையைப் பயன்படுத்துவதை விவேகமயப்படுத்து வது சம்பந்தமான உலகப் பிரச்சினைகளுக்கு சிக்கலான பிராந்திய படிநிலை கட்டமைப்பு உண்டு. இவை ஒவ்வொரு நாட்டிலும் ஒவ் வொரு விதமாக வெளிப்படும்; இது உலகப் பிரச்சினைகளின் தொடர் பாயும் இவற்றின் பின்னணியிலும் நவீன நாட்டியலின் முக்கியத்து வத்தை இன்னமும் அதிகப்படுத்துகிறது.

அத்தியாயம் நான்கு

பிராந்திய ஆராய்ச்சிகளுக்கு சமூகவியல் வண்ணம் தருதல்

1. சமூகப் பிரச்சினைகளும் சமூக புவியியலும்

புவியியலையும் பிராந்திய விஞ்ஞானத்தையும் சமூகமயப்படுத்தும் போக்கு 1970ஆம் ஆண்டுகளில் மிகத் திட்டவட்டமாக வெளிப்பட்டது.

முதலில் சமூகப் பொருளாதார வளர்ச்சியின் புறவயப் போக்கு தீர்மானகரமான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது; 1970-80ஆம் ஆண்டுகளின் பொருளாதார நெருக்கடிகள், பெருமளவு வேலையில்லாத் திண்டாட்டத்தின் அதிகரிப்பு, கோடானுகோடி மக்களின் வாழ்க்கைச் சூழல் மோசமடைந்தது, பல முதலாளித்துவ நாடுகளில் ஏற்பட்ட சமூக ''வெடிப்புகள்'' ஆகியவை இதில் அடங்கும். விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியின் புதிய கட்டம் (மைக்ரோ மின்னணுப் புரட்சி) புதிய சமூகப் பிரச்சினைகளை ஏற்படுத்தும், பெருமளவு வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கும் அபாயம் தோன்றும், வாழ்க்கைத் தரம் மேலும் மோசமடையும், முன்னணி பிரதேசங்களுக்கும் உள்ளடங்கிய பகுதிகளுக்கும் இடையிலான முரண்பாட்டு வளர்ச்சி கூர்மையடையும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ''பொருளாதார வளர்ச்சியின்'' பழைய முன்னுரிமைகள் புதிய சமூக முட்டுக் கட்டைகளுக்கு வழிகோலும் என்பது தெளிவாகிறது. இதனால் முன்னுரிமைகளை மாற்றும் அவசியம் ஏற்படுகிறது, சமரசங்களைத் தேட வேண்டி வருகிறது. ''வளர்ச்சியும் சமமான வாழ்க்கை சூழ்நிலைகளும்'' (அல்லது ''தரமான வளர்ச்சி'') என்னும் சூத்திரம் இவற்றில் ஒன்றாகும். இது வளர்ச்சியை ''மட்டுப்படுத்தும்'' ஒரு சில காரணிகளை (திருப்திகரமான வேலை வாய்ப்பு, வீட்டு வசதி, ஓய்வு நேரத்தைக் கழித்தல், இயற்கை வளப் பாதுகாப்பு ஆகியவை) முன்னனுமானிக்கிறது.

இரண்டாவதாக, அரசு ஏகபோக பிராந்தியத் திட்டமிடலின் வலுவின்மையும், பன்முக சமூக பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க இயலாமையும் புறவயக் காரணங்களில் அடங்கும். ஸ்வீடன் நாட்டு புவியியல் வல்லுனர் ஜி. ஓல்சன் **பிரதேசத் திட்டமிடலில் அடிமைப் படுத்தலும் அசமத்துவமும்: சித்தாந்தத்திற்கும் முறையியலுக்கும் இடையிலான மோதல்** *என்ற ஒரு கடுமையான விமர்சனக் கட்டுரையை எழுதி,*

ஸ்வீடன், மற்ற மேலைய நாடுகளின் திட்டமிடலில் பயன்படுத்தப்படும் மாடெல்கள், மக்களின் வாழ்க்கைத் தரத்தைச் சமப்படுத்துவது சம்பந்தமாக பிரகடனப்படுத்தப்பட்ட லட்சியங்களை அடையாதது மட்டுமல்ல, மாறாக சமமின்மையை ஆழப்படுத்தி வலுப்படுத்துகிறது என்று கூறுகிறார். (Olsson, 1978.) ''திட்டமிடப்படும் இடம் புறவயமானது, 'தூய்மையானது', இது வெறும் 'விஞ்ஞான ஆராய்ச்சிப் பொருள்' எனவே நடுநிலைத் தன்மையை உடையது என்று புரிந்து கொள்ளப் படும்'' திட்டமிடலின் முன்தேவைகளை எச். லெஃபேவெர் (பிரான்ஸ்) கண்டனம் செய்கிறார். (Lefevre, 1977.) சமூகப் பொறுப்புணர்வின் பிரச்சினைகளும் முதலாளித்துவ நாடுகளின் விஞ்ஞானிகள் முன் நிற்கலாயின, இவர்கள் தம்மை ஏமாற்றுதலின் ''கூட்டாளிகளாக'', அரசு ஏகபோக பிராந்தியத் திட்டமிடலின் ''மாயைகளைப்'' படைப் பவர்களாக உணரலாயினர். எந்த நாடுகளில் எல்லாம் அரசு ஏகபோக பிராந்தியத் திட்டமிடல் அதிகத் தீவிரமாகப் பின்பற்றப்பட்டதோ அந்த நாடுகளில் எல்லாம் (பிரான்ஸ், கிரேட் பிரிட்டன், ஸ்வீடன்) சமீப ஆண்டுகளில் அதிருப்தி வெளிப்பட்டது. மிக ''பணக்கார'' நாடு களில் கூட பிரதேசங்களுக்கு இடையில், பெரும் நகரங்களின் உள்ளே, வர்க்கங்கள், பல்வேறு சமூக குழுக்களுக்கு இடையே வாழ்க்கைத் தரத்தில் பெரும் இடைவெளி நிலவுகிறது; மிகவும் மிதமான விஞ்ஞானி கள் கூட இதைக் குறிப்பிடுகின்றனர்.

மேலைய சமூக பொருளாதார புவியியலின் அடிப்படையாக உள்ள பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரம், சமூகவியல், தத்துவஞானத்தின் பாரம்பரிய ''அடித்தள'' தத்துவங்கள் நவீன காலத்தின் கோரிக்கை களுக்கு ஏற்றவையாக இல்லை, அரசு ஏகபோக முதலாளித்துவம் மேன்மேலும் வளர்ந்து வரும் சூழ்நிலையில் இவை திசைகாட்டிகளாக இருக்க முடியாது என்பதை வாழ்க்கை ஆணித்தரமாக மெய்ப்பிக் கிறது.

மூன்றாவதாக, சோஷலிச நாடுகளின் அனுபவம், மார்க்சியப் படைப்புகளுடனான அறிமுகம், பல மேலைய புவியியல் நிபுணர்களும் ''பிராந்தியவாதிகளும்'' மார்க்சியத்தை நாடுவது ஆகியவை பிராந்திய விஞ்ஞானங்களை சமூகமயப்படுத்துவதில் குறிப்பிட்ட பங்காற்றின.

சமூகமயப்படுத்தும் போக்கு ஆரம்பமாகி நீண்ட காலம் ஒன்றும் ஆகவில்லை. இந்த ஆண்டுகளில் ஒரு சில புதிய கருத்தமைப்புகள் முன் வைக்கப்பட்டன, இவற்றில் டி. ஹார்வே (Harvey, 1973) முன் வைத்த பிரதேச சமூக நீதி பற்றிய கருத்தமைப்புதான் மிக சுவாரசிய மானது என்று தோன்றுகிறது.

''உட்கருவிற்கும்'' (பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த முத லாளித்துவ நாடுகள்), ''உள்ளடங்கிய'' பிரதேசத்திற்கும் (வளர்முக நாடுகள்) இடையிலான சமூக, பொருளாதார அசமத்துவம் பற்றி பிரிட்டிஷ் ஆசிரியர்கள் எழுதுகின்றனர். இவர்கள் அசமத்துவத்தை

முதலாளித்துவத்தின், முதலாளித்துவ உழைப்புப் பிரிவினையின் நேரடி விளைவாக சுட்டிக் காட்டுகின்றனர். இவையாவன:

—பொருளாதார வளர்ச்சியின் அனுகூலங்களைப் பகிர்ந்தளிப்பதில் அசமத்துவம், ''முன்னணி'' நாடுகளில் இவை குவிதல் (தொழில்நுட்பம் மற்றும் முக்கியப் பண்டங்களின் வர்த்தகத்தில் ஏகபோகம், மூலதன ஏற்றுமதி);

—உள்ளடங்கிய (பின்தங்கிய) பிரதேசங்களின் பொருளாதார வளர்ச்சி தலைநாடுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நடை பெற்றது;

—''காரணங்கள் சேர்ந்ததானது'' வளர்ச்சி மட்டங்களில் பிளவு தோன்றியதும் அது சுருங்காமல் விரிவடைய இட்டுச் சென்றது, இதி லிருந்து மீள்வது பின்தங்கிய நாடுகளுக்கு கடினமாக இருந்தது;

—வளர்ச்சியடைந்த நாடுகளின் மூலதனமும் தொழில்நுட்பமும் அவற்றின் நலன்களுக்காகப் பயன்படுத்தப்பட்டனவேயன்றி பின்தங்கிய அரசுகளின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்படவில்லை.

''மையம்—எல்லையோரம்'' என்ற தத்துவத்தில் இடம் பெற்றுள்ள, அசமத்துவத்திற்கு இட்டுச் செல்லக் கூடிய வரலாற்று வரைபடம் இதுதான். இங்கு மையமும் எல்லையோர பிரதேசமும் புவியியல் பொருளில் குறிப்பிடப்படவில்லை, மாறாக இவை மேற்கூறிய வகைப் பாட்டில் இடம் பெறாத தனிப்பட்ட நாடுகளின் சமூக பொருளா தாரக் கட்டமைப்பில் உள்ள வேறுபாடுகளைக் குறிப்பிடுகின்றன. உதாரணமாக, புவியியல் பொருளில் ஆஸ்திரேலியா மிகவும் ''எல்லை யோரமாக'' உள்ள நாடாகும், சாராம்சத்திலோ இது ஒரு ''மைய'' நாடு.

மேற்கூறிய நூலின் மற்ற அத்தியாயங்களில் தனிப்பட்ட நாடுகள், பிரதேசங்கள், நகரங்களின் வாழ்க்கைத் தரம் ஆராயப்படுகிறது. இங்கே ஆசிரியர்கள் சுட்டிக் காட்டும் விஷயங்கள் ஆணித்தரமானவை, இவை பன்முக சமூக பொருளாதாரப் பகுப்பாய்வின் விஷயப் பட்டியலை விரிவுபடுத்துகின்றன: வேலையில்லாத் திண்டாட்டம், குழந்தை மரணம், நோய் நொடிகள், குற்றங்கள், மோசமான வீட்டு வசதிகள் எல்லாமே இவற்றிலடங்கும். இவற்றின் இடையே நிலவும் சார்பு நிலையைக் கண்டுபிடிக்கவும் இவற்றின் பரஸ்பரத் தொடர்புகளைத் துல்லியமாக வரையறுக்கவும் முயற்சிகள் செய்யப்படுகின்றன. இந்த ஆண்டுகளில் பூர்ஷ்வா சமூகவியலால் முன்வைக்கப்பட்டு, பிரசாரத்தால் பரவலாகப் பிடித்துக் கொள்ளப்பட்ட வாழ்க்கைத் ''தரம்'' பற்றிய கருத்தமைப்பின் தாக்கம் இதில் வெளிப்படுகிறது.

ஆக்க பூர்வமான முன்மொழிவுகளின் விஷயம் இதை விட மோச மானது—இவற்றிலிருந்து எப்படி மீள்வது? உதாரணமாக, பின்தங்கிய பிரதேசங்களின் விஷயத்தில், பின்வரும் நோக்கங்களுடன் சாதனங் களை மறு பகிர்வு செய்யுமாறு முன்மொழியப்படுகிறது:

—பிரதேசங்களின் வாய்ப்புகளையும் வாழ்க்கைத் தரத்தையும் சமப் படுத்துவது;

—பண வீக்கம் மற்றும் வேலையில்லாத் திண்டாட்டத்தின் தேசிய மட்டங்களைக் கண்காணித்தல்;

—இப்பிரதேசங்களின் ''நிர்ப்பந்தக் குழுக்களின்'' வலுவைக் கவனத்தில் கொள்ளுதல்;

—குறைந்தபட்ச சமூக செலவில் அதிகபட்சப் பயனை அடைதல்.

பிராந்தியத் திட்டமிடலின் நடைமுறையிலும் இவையெல்லாம் பிரகடனப்படுத்தப்படுகின்றன. ஆனால் ஒரு சில பிரதேசங்களிலிருந்து வரி வசூலித்து அதைக் கொண்டு பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள முதலாளிகளைப் பணக்காரர்களாக்கும் நேரடி உதவிகளின் முயற்சியை மேலைய விஞ்ஞானிகள் முற்றிலும் நியாயமாக கண்டித்து, அதற்குப் பதில் முதலீடுகளை உள்கட்டமைப்பில் குவிக்கும் படியும், இவற்றைக் கொண்டு பின்தங்கிய பிரதேசங்களின் வளர்ச்சிக்கான பொறியியல், பொருளாதார முன்தேவைகளை மேம்படுத்துமாறும் முன்மொழிகின்றனர். ஆனால் இந்நாடுகளின் சொந்த அனுபவங்களே (அமெரிக்காவில் அப்பலாச் பிரதேசம், இத்தாலியின் தென் பகுதி) இத்தகைய முயற்சிகளின் தோல்விக்குச் சான்று பகர்கின்றன.

இந்நூலின் இறுதியில் **புவியியலும் சமமின்மையும்** என்ற தலைப்பில் பின்வருமாறு முற்றிலும் நியாயமாகக் குறிப்பிடப்படுகிறது. அதாவது எந்த ஒரு பிரதேசத்திலும் நிலவும் இட கட்டமைப்பையும் இட சமமின்மையையும் சமூக ரீதியில், அச்சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்தும் மதிப்புகளைக் கவனத்தில் கொண்டு மட்டுமே பகுப்பாய்வு செய்ய முடியும் என்று குறிப்பிடப்படுகிறது. முதலாளித்துவத்தைப் பொறுத்த மட்டில் இது லாப வேட்டையும், மட்டற்ற சுயநலவாதமும் ஆகும்; இது நிலம், வீடுகள், வேலை வாய்ப்பு போன்றவற்றை மட்டுப்படுத்த இட்டுச் செல்கிறது, இதனால் ஆட்சியதிகாரம் மறுக்கப்பட்ட வர்க்கங்கள் அவதியுறுகின்றன. இதிலிருந்து, இட ரீதியான சமமின்மையை இட ரீதியான கொள்கையால் மட்டுமே அகற்ற முடியாது என்ற முக்கியமான முடிவு பிறக்கிறது.

மேலைய நாடுகளில் பிராந்திய ஆராய்ச்சிகளின் பொதுவான தத்துவார்த்த அடித்தளத்தைத் தேடும் அதே நேரத்தில் ஏராளமான அடிப்படை அணுகுமுறைகள் வெளிப்படுகின்றன. சமீப ஆண்டுகளில் நடத்தை அணுகுமுறை, நடத்தை புவியியலைக் கட்டமைக்கும் முயற்சிகள் பரவியுள்ளன. நாம் இதை புவியியலை சமூகமயப்படுத்துவதன் வரம்புகளுக்குள் பார்க்கின்றோம், ஏனெனில் இது புவியியலும் மனோதத்துவ இயலும் நெருங்கி வருவதுடன் தொடர்புடையது என்றாலும் இப்போக்கிற்குள் தோன்றியது.

இயற்கைச் சீற்றங்களையும், மானுட நடவடிக்கையோடு தொடர்புடைய ''மெதுவான சீற்றங்களையும்'' பல்வேறு விதங்களில் மனிதர்

கள் கிரகிக்கின்றனர், புறச்சூழலின் தரம், பிரதேசத்தின் இட ரீதியான தன்மைகள், ஒவ்வொரு மையத்தின் கவர்ச்சித் தன்மை மற்றும் முக்கியத் துவம் ஆகியவற்றை மனிதர்கள் வெவ்வேறு விதங்களில் மதிப்பிடுகின் றனர். உதாரணமாக, பல அமெரிக்கர்களின் மனதில் பீட்ஸ்பர்க் எஃகு நகரமாகப் பதியவில்லை, மாறாக விளையாட்டுப் போட்டிகள் நடை பெறும் பெரும் மேடையாக இது இவர்களின் மனதில் பதிந்துள்ளது; அனேகமாக பத்திரிகைகள், மற்ற தகவல் ஒலிபரப்பு சாதனங்களின் தாக்கம் இதற்குக் காரணமாக இருக்கலாம். எப்படி கிரகிக்கின்றனர் என்பது நடத்தையியல், நடவடிக்கைகளில் பிரதிபலிக்கின்றது.

மனிதன் மேன்மேலும் புவியியல் விஞ்ஞானத்தின் மையத்தில் வருவது நியதியானது, விஞ்ஞானங்கள் இணையும் போக்கும், பல்துறை ஆராய்ச்சிகள் அதிகரித்து வருவதும் நியதியானவையே; எனவே இத் திசையில் முயற்சிகளைக் கோட்பாட்டளவில் நிறுத்த வேண்டியதில்லை.

வாடிக்கையாளர்களின் நடத்தை பற்றியும், இடம், நில அமைப்பு போன்றவற்றின் அகவய கிரகிப்பு பற்றியும் மேலைய புவியியலர்களும் பிராந்தியவாதிகளும் எழுதிய பல நூல்கள், கட்டுரைகளில் நடத்தை அணுகுமுறை பிரதிபலித்தது.

''நடத்தை புவியியலை'' தீவிரவாதிகள் விமரிசித்ததானது மேற்கே இதைப் பயன்படுத்த செய்யப்பட்ட முயற்சிகளால் ஏற்பட்ட ஏமாற் றத்துடன் தொடர்புடையது. இத்தகைய விமர்சனங்கள் வெளி யிலிருந்து வராமல் உள்ளிருந்தே வருகின்றன என்பது குறிப்பிடத்தக் கது. ஆர். ரீசெர் (பிரிட்டன்) தானே ''நடத்தை'' ஆராய்ச்சிகளில் ஈடுபட்டவர். இவர் தன்னுடைய கடுமையான விமர்சனக் கட்டுரை ஒன்றில், இத்தகைய ஆராய்ச்சிகள் மாயையான லட்சியங்களுக்கு மட்டுமே சேவை புரிகின்றன, இவை நெருக்கடிகள் கூர்மையடையும் காலகட்டத்தில் அடிப்படை சமூகப் பிரச்சினைகளிலிருந்து கவனத் தைத் திசை திருப்ப மட்டுமே செய்கின்றன என்று குறிப்பிடுகிறார்.

தனிப்பட்ட கிரகிப்பின் ஆராய்ச்சியால் சமூக நிகழ்ச்சிப் போக்கு களைப் புரிந்து கொள்ள இட்டுச் செல்ல முடியாது என்பதுதான் ''நடத் தை புவியியலைப்'' பற்றிய இவருடைய விமர்சனத்தின் சாரமாகும். ''சமூக நிகழ்ச்சிப் போக்கைத் தனிப்பட்ட மனநிலை வரை கீழிறக்குவது குறிப்பாக ஆபத்தானது. உள்ளதை உள்ளபடியே தக்க வைத்து அரசியல் தீர்மானங்களைச் சட்ட பூர்வமாக்கும் வகையில் பிரச்சினை களும் முடிவுகளும் உருவாகின்றன.'' ''உண்மையில் சமூக விஞ்ஞானங் களின் தனிப்பட்ட, வரலாற்றிற்கு விரோதமான, தொகுப்பாய்வு முறைகள் நாம் வாழும் உலகின் சாரத்தை நமக்குத் திறந்து காட்டு வதை விட அதிகமாக மறைக்கின்றன'' என்று ஆர். ரீசெர் எழுதுகிறார்.

மேற்கு நாடுகளில் ''நடத்தை புவியியல்'' பற்றிய படைப்புகள் எப் படிப் பயனற்றவை என்பதைப் பற்றிய ஏராளமான ஆணித்தரமான எடுத்துக்காட்டுகளைக் கூறும் சில தீவிரவாதிகள் வேறொரு கடைக்

கோடி நிலைக்குச் செல்கின்றனர்; இவர்கள் பொதுவாகவே இப்படிப் பட்ட அணுகுமுறையின் முக்கியத்துவத்தை மறுக்கின்றனர், உதாரண மாக ''இடம்—காலம்'' பற்றிய ஆராய்ச்சியின் பயனற்றத் தன்மையைக் குறிப்பிடுகின்றனர். சாதாரணமாக இத்தகைய கடும் விமரிசனத்தை யடுத்து எவ்வித ஆக்க பூர்வமான மாற்று வழிகளும் முன்வைக்கப்படு வதில்லை.

2. ''கீழிருந்தான'' வளர்ச்சியும் வாழ்க்கைத் தரத்தின் புவியியலும்

1970—1980ஆம் ஆண்டுகளின் நெருக்கடி நிலவரம் பின்தங்கிய, மந்தமான பிரதேசங்களை முதலில் மிகவும் கடுமையாகப் பாதித்தது. எவ்வித துருவ வளர்ச்சிக் கருத்தமைப்புகளாலும் இவற்றிற்கு உதவ முடியவில்லை. இந்த நெருக்கடி நிலவரம் இக்கருத்தமைப்பின் பாலான உறவுகளின் மீது நிச்சயமாக தாக்கம் செலுத்தியது. வேலையில்லாத் திண்டாட்டம் மிகவும் பெருகி சமூக அதிர்ச்சிகள் வெளிப்பட்ட நிலையில் துருவ வளர்ச்சிக் கருத்தமைப்பின் முக்கிய அம்சங்கள் முழு பிரதேசங்களில் வாழ்ந்த பெரும்பான்மை மக்களின் ஜீவாதார நலன் களுடன் முரண்பட ஆரம்பித்தன. ''கீழிருந்தான வளர்ச்சிக்'' கருத் தமைப்புகள், தேர்ந்தெடுத்த ''பிரதேசங்களை மூடுதல்'' போன்றவை 1970ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியிலிருந்து புதிய மூலங்களாக, சமீப காலம் வரை ஆதிக்கம் செலுத்திய துருவ வளர்ச்சிக் கருத்தமைப்பின் எதிர்மறையாக முன்வைக்கப்படலாயின.

ஆட்சியதிகாரமும் வளங்களும் மனிதர்களும் குவிக்கப்பட்டுள்ள, பெரும் கொள்கை முடிவுகள் எடுக்கப்படும் மையங்களின் முன் ''எல்லை யோரங்களில்'' உள்ள மக்களில் பெரும்பான்மையினரின் ''பாதுகாப்பின் மை'' பற்றிய கருத்து முதலாளித்துவ நாடுகளில் மேன்மேலும் உணரப் படுகிறது. 1970ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியிலிருந்து, ''மேலிருந்தான வளர்ச்சி'' வறட்டுத் தனமானது, அன்னியமயப்படுத்தக் கூடியது, மானுட விரோதமானது, விவேகமற்றது, பொருளற்றது, அழிவுகர மானது என்றெல்லாம் சித்தரிக்கப்படுகிறது. இதற்கு மாற்றாக ''கீழிருந் தான வளர்ச்சி'' பற்றிய கருத்தமைப்பு முன்வைக்கப்படுகிறது.

மேன்மேலும் அதிகமான மேலைய ஆசிரியர்கள் அதிக தீவிரமான, கடுமையான வரையறுப்புகளுக்கு—தேசிய எல்லையோரப் பகுதிகள் ஒடுக்கப்படுவது; உள்நாட்டு காலனியாதிக்கம்—வருகின்றனர். ''மை யத்தை'' ஆதாரமாகக் கொண்டு இக்குறைகளை நிவர்த்திக்கும் நம்பிக் கைகள் மறைகின்றன. விஞ்ஞான நூல்கள், கட்டுரைகளில் பல அதிகார பூர்வமான பிராந்திய செயல்திட்டங்கள் வெற்று சூத்திரங் களாக வரையறுக்கப்படுகின்றன.

''கீழிருந்து'' புதுப்பிப்பது சம்பந்தமாக முன்வைக்கப்படும் கருத்

தமைப்பு குறிப்பிடத்தக்கது. ஆனால் வளர்ச்சியை நிர்ணயிக்கும் முக்கியக் காரணிகள் இதில் அடங்கியிருக்கவில்லை; இது அதிகபட்சம், முக்கியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாத சிறு சமூக புத்துயிர்ப்பாக, புறச் சூழல் பாதுகாப்பு மற்றும் பிராந்தியக் கொள்கையில் சில "சிவில் முன்மொழிவுகளின்" மூல முன்மாதிரியாக மட்டுமே இருக்க முடியும். விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியின் சகாப்தத்தில் உற்பத்தி, மூலதனத் திரட்சியும், பன்னாட்டு ஏகபோகங்களின் வல்லமை அதிகரிப்பதும் தொழில் நிறுவனங்கள், உள் கட்டமைப்பு, விஞ்ஞான, கல்வி நிலையங்கள், முடிவெடுக்கும் மையங்கள் ஆகியவற்றின் பன்முகத் திரட்சியிலும் வெளிப்படுகின்றன. இவை பின்தங்கிய பிரதேசங்களை உயர்த்துவது சம்பந்தமாக பிரகடனப்படுத்தப்படும் கொள்கைக்கு எதிராக நிற்கக் கூடிய, இதை பலவீனப்படுத்தக் கூடிய அல்லது ஒரு சில சமயங்களில் ஒன்றுமில்லாததாக ஆக்கக் கூடிய நிகழ்ச்சிப் போக்குகளாகும். பன்னாட்டு ஏகபோகங்களின் வல்லமை பிராந்திய மற்றும் ஸ்தல சக்திகளை அடக்கி ஒடுக்குகிறது, பிராந்தியத் திட்டமிடலின் வாய்ப்புகளைக் குறுக்குகிறது. ஆனால் இவ்வாறு ஒடுக்கப்படும் பொழுது அது அதிருப்தியை ஏற்படுத்துகிறது, இக் "குறுகிய இடத்திலிருந்து" மீளும் வழிகளைத் தேடவும், பிராந்திய முடிவுகளை மேற்கொள்ளவும், பிரதேசங்களுக்கான மாற்று வழிகளைத் தேடவும், பிராந்திய கொள்கையை ஜனநாயகமயப்படுத்துவதற்கான போராட்டத்தை நடத்தவும் பாதையமைக்கிறது. "கீழிருந்து" வரும் அதிருப்தி அதிகரித்து வருவதானது சமீப ஆண்டுகளாக மிகப் பல்வேறான போக்குகளைச் சேர்ந்த ஆசிரியர்களின் பொருளாதார, புவியியல் வெளியீடுகளில் மேன்மேலும் அதிகமாக பிரதிபலிக்கிறது.

பிராந்திய வளர்ச்சியைப் பற்றிய கருத்தமைப்புகளின் பரிணாம வளர்ச்சியில் ஒரு புதிய போக்கு, சமுதாய வளர்ச்சியின் லட்சியங்கள், சாரம், வாய்ப்புகளைப் பற்றிய ஞானம் ஆழமாவதுடன் தொடர்புடையது.

"வாழ்க்கைத் தரம்" என்ற கருத்து மேலைய நாடுகளில் 1970ஆம் ஆண்டுகளில் பெரிதும் பரவலாயிற்று. சமூக சூழ்நிலைகள் மோசமடைந்தது, எல்லாவற்றிற்கும் மேலாக எங்கும் பரவிய வேலையில்லாத் திண்டாட்டம், பணவீக்கம், பொருளாதார நெருக்கடிகள், புறச்சூழல் மோசமடைந்தது, இவற்றைப் பற்றிய பொதுமக்களின் கவலை அதிகரித்தது ஆகியவை, பிராந்திய வளர்ச்சி உட்பட வளர்ச்சித் திட்டங்களை "வாழ்க்கைத் தரம்" என்ற கருத்துடன் இணைக்கும் அவசியத்தை அரசியல்வாதிகள், திட்டமிடும் துறையிலுள்ள நிபுணர்களின் முன் வைத்தன.

இக்கருத்து மிகவும் தெளிவற்றது. "மக்களின் வாழ்க்கை சூழ்நிலைகள், அதே போல் நகர மற்றும் பிராந்தியத் திட்டமிடலின் கடமைகள்" இரண்டுமே இதில் அடங்கியுள்ளன. இதற்காகப் பல குறியீடுகள் பயன்

படுத்தப்பட்டாலும் பின்வருபவை பொதுக் குறியீடுகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன: ''பல்வேறு விதமான வேலை வாய்ப்புகள், கல்வி, மருத்துவ வசதி, மற்ற சமூக சேவைகளின் நிலை, வர்த்தக மற்றும் கலாசார வசதி, புறச்சூழல், ஓய்விற்கான பரந்த திறந்த இடங்கள்.'' (Pred, 1977, p. 10.)

மொத்தத்தில் ''வாழ்க்கைத் தரம்'' என்ற கருத்தில் அவசியமான பொருளாயத, பொருளாதார, சமூக மற்றும் புறச்சூழல் நிபந்தனைகள் அடங்கியுள்ளன; குறிப்பிட்ட சமுதாயம், பிரதேசத்தில் முழுமையான, மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு அவசியமான முக்கிய நிபந்தனைகளைப் பற்றிய கருத்துகளின் அடிப்படையில் இவை நிர்ணயிக்கப்படுகின்றன. இக்கருத்துகள் சோஷலிச நாடுகள், வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள், முன்னாள் காலனி மற்றும் சார்பு நாடுகள் ஆகியவற்றிற்கு வெவ்வேறானவை. செல்வந்தர்களுக்கும் ஏழைகளுக்கும் ''அவசியம்'' என்பதில் வேறுபாடுகளுண்டு, வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்கும் இடையிலும் இதில் வேறுபாடுகளுண்டு; இவை பெரிதும் முரண்பாடானவை.

''வாழ்க்கைத் தரத்தை'' நிர்ணயிக்கும் காரணிகள் சம்பந்தமாக ஒரு அமெரிக்க கல்லூரி மாணவர்கள் மத்தியில் விசேஷ ஆராய்ச்சி நடத்தப்பட்டது. இதில் முதலிடத்தில் காதலும் அன்பும், இரண்டாவது இடத்தில் சுய மரியாதையும், மூன்றாவது இடத்தில் அமைதியான மனநிலை மற்றும் உணர்ச்சிகளின் ஸ்திரநிலையும், நான்காவது இடத்தில் பாலுணர்வும் வந்தன. இவ்விவரங்கள் பிரிட்டிஷ் புவியியல் நிபுணர் டி. ஸ்மித்தின் நூலில் அடங்கியுள்ளன; ''வாழ்க்கைத் தரத்தைப்'' பற்றிய மதிப்பீடுகளில் எப்படி ''வாழ்க்கையில் அகவய, மனநிலை, தனிநபர் மற்றும் உணர்ச்சிகர அம்சங்கள்'' மேலோங்கி நிற்கின்றன என்பதற்கு இவை சான்று பகர்கின்றன. (Smith, 1977, p. 32.) ஆம், இது முதலாளித்துவ உலகில் பொருளாயத ரீதியாக நல்ல வசதியான நிலையில் உள்ள இளைஞர்களின் வாழ்க்கை ''மதிப்புகளைப்'' பற்றிய அளவீடாகும்; கிட்டத்தட்ட பாதி மக்கள் ஏழ்மையில் வாடும் உலகின் எதிர்காலத்தைப் பற்றி இவர்களுக்குக் கவலையில்லை. வேலை, சமூக நீதி, சமாதான வாழ்வு போன்றவை இவர்களுக்கு முக்கியமாகப் படவில்லை.

இந்தியாவில் அகமதாபாது நகரின் பழைய பகுதியில் — இங்கு ஏழ்மை தாண்டவமாடுகிறது, பெரும்பாலானோர் குறைந்தபட்ச ஊதியத்தில் வாழ்கின்றனர் — வாழுபவர்கள் புறச்சூழலையும் ''வாழ்க்கைத் தரத்தையும்'' முற்றிலும் வேறு விதமாகப் பார்க்கின்றனர். இதை அறிவதற்காக அகமதாபாது நகரின் கோட்டைச் சுவரை ஒட்டிய இடங்களில் இந்துக்களும் முஸ்லீம்களும் தனித்தனி கூட்டுச் சமூகங்களாக வாழும் பகுதிகளில் கேள்விகள் கேட்கப்பட்டன, அவர்களின் வாழ்க்கை நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டன. இந்துக்கள் இருந்த இடங்களும்

முஸ்லீம்கள் இருந்த இடங்களும் பிரதேச ரீதியாக தனித்தனியே பிரிக்கப்பட்டிருந்தன. இக்கூட்டுச் சமூகங்களின் உள்ளே, குறிப்பாக சிறுபான்மை முஸ்லீம்கள் மத்தியில் நெருக்கமான உள் சமூகத் தொடர்புகள் நிலவுகின்றன. ஒரு முஸ்லீம் குடும்பத்தின் சராசரி மாத வருமானம் 500 ரூபாய், ஒரு இந்துக் குடும்பத்தின் சராசரி மாத வருமானம் 500 – 1,000 ரூபாய்; குடும்பத்தில் உள்ள நபர்களின் எண்ணிக்கை சராசரியாக முஸ்லீம்கள் மத்தியில் 5.31, இந்துக்கள் மத்தியில் 4.93. முஸ்லீம்களில் பெரும்பாலோர் எழுத்தறிவற்றவர்கள், குடிசைத் தொழிலிலும் கீழ்மட்ட சேவை துறைகளிலும் ஈடுபட்டவர்கள். இந்துக்களில் சிலர் ஆரம்ப மற்றும் நடுநிலைக் கல்வி பயின்றவர்கள், இவர்கள் அதிக உயர்வான சேவைத் துறைகளில் ஈடுபட்டவர்கள். இக்கூட்டுச் சமூகங்கள் வாழ்க்கைப் பாணி, உணவு முறைகளில் (இந்துக்கள் சைவ உணவு உண்பவர்கள், முஸ்லீம்கள் மாமிசம் உட்கொள்பவர்கள்) ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன.

ஆராய்ச்சியாளரின் கருத்துப்படி இரு சமூகத்தினருமே புறச்சூழலின் நிலையை மிக உயர்வாக மதிப்பிடுகின்றனர். கிட்டத்தட்ட 60% மக்கள் தம் புறச்சூழலில் எவ்விதக் குறைபாடும் இல்லையெனக் கருதுகின்றனர்! பெரும்பாலான குடும்பங்கள் (முஸ்லீம்கள் மத்தியில் பல தாரக் குடும்பங்கள்) சிறு வீடுகளில் வசிக்கின்றன, இங்கு ஆடுகள், கோழி, வாத்து போன்றவையும் வளர்க்கப்படுகின்றன; ஆனால் இக்குடும்பங்கள் அனைத்திற்கும் தத்தம் நிலைமையில் திருப்தி. இவர்கள் குறிப்பாக, புறச்சூழலின் தூய்மையை உயர்வாக மதிப்பிடுகின்றனர், சாலைகளிலிருந்து வரும் ஒலி, காற்று அசுத்தம், இட நெருக்கடி ஆகியவற்றின் மீது இவர்கள் அதிக கவனம் செலுத்துவதில்லை. கொசு, ஈ தொல்லை மீது மட்டுமே அதிருப்தி தெரிவித்தனர்.

பொருளாதாரக் காரணங்களினால்தான் புறச்சூழல் மீது இவர்கள் அதிக அக்கறை காட்டவில்லை என்கிறார் ஆசிரியர். இங்கே வீட்டு வாடகை குறைவாக இருப்பது பற்றி (இது பல ஆண்டுகளாக உயர்த்தப்படவில்லை) இவர்களுக்கு திருப்தி; இவர்கள் வேலை செய்யும் இடங்கள் அருகில் இருப்பதால் போக்குவரத்துச் செலவு கிடையாது; ஓரளவு குறைந்த விலையில் தானியம், காய்கறிகளை விற்கும் சந்தையும் அருகில் உள்ளது. இரண்டு சமூகங்களிலுமே பெண்கள் அனேகமாக வேலைக்குச் செல்வதில்லை. முஸ்லீம் பெண்கள் சாதாரணமாக தம் வீடு உள்ள இடத்தை விட்டு வெளியே செல்வதில்லை, இவர்களில் சிலருக்கு இப்பகுதிக்கு வெளியில் உள்ள இடங்களின் பெயர்கள் கூடத் தெரியாது. இடப் பரப்பு ரீதியில் மூடிய இந்தக் கூட்டுச் சமூகங்களில் மற்றவர்களுடன் தம்மை ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்புக் கூட கிடையாது. ஆனால் இவர்கள் உள் சமூகத் தொடர்புகளையும் உள் சமூகச் சூழலையும் உயர்வாக மதிப்பிடுகின்றனர்.

சமூக பொருளாதார வளர்ச்சி பற்றிய முக்கியக் குறியடையாளங்

கள் யுனெஸ்கோவில் விசேஷமாக ஆராயப்பட்டன; இதில் மொத்த தேசிய உற்பத்திப் பொருளைப் பற்றிய வழக்கமான குறியீட்டுடன் நின்று விடக் கூடாது, மொத்த தேசிய நல்வாழ்வு நிலையைப் பற்றிய அதிக சிக்கலான குறியடையாளங்களுக்கு மாற வேண்டும். பொதுச் சந்தை உறுப்பு நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்களின் கூட்டத்தில் (1973) வளர்ச்சியின் தர அம்சங்களைப் பற்றிய நிபுணர்களின் முன் மொழிவுகள் ஆராயப்பட்டன; இவை எட்டு பிரிவுகளில் குறியீடுகளாக தரப்பட்டிருந்தன: 1) உடல் நலம்; 2) கல்வி; 3) வேலை வாய்ப்பும் வேலைச் சூழ்நிலையும்; 4) ஓய்வு நேரமும் பொழுது போக்கும்; 5) பொருளாயத நலன்களையும் சேவைகளையும் பயன்படுத்தல்; 6) வாழும் இடம்; 7) தனிப் பாதுகாப்பும் சட்டப் பாதுகாப்பும்; 8) சமூக வாய்ப்புகளும் சமமின்மையும் ஆகியவைதான் இந்த எட்டு பிரிவுகளா கும். இங்கே பொருளாயத பிரச்சினைகள் சம்பந்தமான சமூகக் குறியீடுகள் ஐந்தாவது இடத்திலும் சமூக வேறுபாடுகள் கடைசி இடத்திலும் இடம் பெற்றுள்ளன. இக்குறியீடுகளின் முறை ''வாழ்க் கைத் தரத்தை'' நிர்ணயிக்கும் அம்சங்களை அதிக முழுமையாகப் பிரதிபலிக்கிறது. ஆனால் இது முதலாளித்துவ உலகில் வர்க்கங்கள், சமூகக் குழுக்கள், பிரதேசங்களின் சமமின்மை வலுப்பட்டு வருவதி லிருந்து துவங்கி சமுதாய வளர்ச்சியின் மிகக் கடுமையான பிரச்சினை களை மூடி மறைக்கிறது.

1970ஆம் ஆண்டுகளில் பெரும்பாலான வளர்முக நாடுகளில், ஏழ்மை நிலைக்குக் கீழ் வாழும் ஏழை மக்களின் குறைந்தபட்சத் தேவை களைப் பூர்த்தி செய்யும் செயல்திட்டம் முக்கியமானதாக பிரகடனப் படுத்தப்படுகிறது. இத்திட்டங்களின் நிறைவேற்றத்தில் அரசு முக்கியப் பங்காற்ற வேண்டும். இது ஏழை மக்கள் மற்றும் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய பிரதேசங்களை சமூக பொருளாதார ரீதியாக உயர்த்தத் தேவையான சூழ்நிலைகளைத் தோற்றுவிக்க வேண்டும். உதாரணமாக, இந்தியாவில் 6ஆவது ஐந்தாண்டு திட்டத்தில் குறைந்த பட்சத் தேவைகளைப் பூர்த்தி செய்ய பின்வரும் அம்சங்கள் மீது கவனம் செலுத்தப்பட்டது: 1) ஆரம்பக் கல்வி; 2) கிராமப் பகுதிகளில் அடிப்படை சுகாதார வசதிகளை அளிப்பது; 3) தண்ணீர் வசதி; 4) சாலைகள்; 5) மின்சாரம்; 6) நிலமற்ற விவசாயத் தொழிலாளர் களுக்கு வீட்டு வசதி; 7) நகரச் சேரிப் பகுதிகளில் புறச்சூழலை மேம் படுத்தல்; 8) உணவு வசதியை, குறிப்பாக குழந்தைகளுக்கான உணவு வசதியை மேம்படுத்தல். திட்டமிடப்படும் வளர்ச்சியில், அதிகரித்து வரும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு எதிரான போராட்டமும் மக்களின் வேலை வாய்ப்பை உயர்த்துவதும் முக்கிய அம்சங்களாகும்.

வளர்ச்சியடைந்த சோஷலிசம் கட்டப்பட்டுள்ள சோவியத் நாட்டில் எல்லா பகுதிகளிலும் எல்லா பிரிவு மக்களுக்கும் அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன, இலவச கல்வி, மருத்துவ உதவி, சமூகப்

பாதுகாப்பு ஆகியவை அளிக்கப்பட்டுள்ளன. சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27ஆவது காங்கிரஸ், பிரதேச ரீதியில் சமூக வேறுபாடுகளை அகற்ற வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக் காட்டியது. இப்போது துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் சைபீரியா, தொலை கிழக்கிற்கு மக்களைக் கவர்ந்திழுக்க பொருளாயத ஊக்குவிப்புகள் அளிக்கப்பட்டாலும் கூடுதல் ஊதியம் மட்டும் போதாது என்று தெரிய வந்துள்ளது. இங்கே வீடு கட்டுமானம், சமூக கலாசார வசதிகளை மேம்படுத்தும் கடமை முன்நிற்கிறது, பரவலாக விரும்பப்படும் பொருட்களின் சப்ளை மேம்படுத்தப்படுகிறது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27ஆவது காங்கிரசில் கட்சி வேலைத் திட்டத்தின் புதிய பதிப்பு ஏற்கப்பட்டது. அதில் பின்வருமாறு கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது: ''சைபீரியா மற்றும் தொலை கிழக்கின் உற்பத்திச் சக்திகளைத் துரிதமாக வளர்ப்பதென்பது கட்சியின் நீண்ட கால பொருளாதாரக் கொள்கையின் அங்கமாக இருந்தது, இருக்கிறது. புதிய பிரதேசங்களை மீட்கும் பொழுது, மக்களின் உழைப்பு மற்றும் வாழ்க்கைச் சூழ்நிலைகளை மேம்படுத்த, சற்றும் பிறழாது உற்பத்திக் கடமைகளுக்குப் பன்முகத் தீர்வு காண்பதும், சமூக உள்கட்டமைப்பு முழுவதையும் வளர்ப்பதும் விசேஷ பொருளாதார, அரசியல் முக்கியத்துவம் உடையவையாகும்.''

சமூக புவியியலானது, இன்று விரைவாக வளர்ந்து வரும் நவீன புவியியலின் ஆராய்ச்சித் துறைகளில் ஒன்றாகும். சோவியத் யூனியனின் சமூக புவியியல் சிக்கலானது, பன்முகத் தன்மையை உடையது. பல நேரங்களில் பிராந்திய பிரச்சினைகள் ஒன்றிற்கொன்று முரண்படுகின்றன, இது முதலில் கூர்மையடைந்து வரும் உழைப்புச் சக்திகளின் பிரச்சினைக்குச் சேரும். சைபீரியாவிலும் தொலை கிழக்கிலும் வேலை செய்ய ஆட்கள் போதாத அதே நேரத்தில் மத்திய ஆசியாவிலும் காக்கஸசின் சில பகுதிகளிலும் (குறிப்பாக கிராமங்களில்) உழைப்புச் சக்தி மிகுந்துள்ளது. பிராந்திய வளர்ச்சியின் சமூகப் பிரச்சினைகளுக்கும் பொருளாதார பிரச்சினைகளுக்கும் இடையில் பரஸ்பரத் தொடர்பு நிலவினாலும் சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது அதிக சிக்கலான கடமையாக உள்ளது.

இவ்வாறாக மற்ற சோஷலிச நாடுகளைப் போன்றே சோவியத் யூனியனிலும் சிக்கலான (சில சமயங்களில் கூர்மையடைந்து வரும்) பிராந்திய சமூக வளர்ச்சிப் பிரச்சினைகள் நிலவுகின்றன, சமூக உள்கட்டமைப்பின் வளர்ச்சியில் பிராந்திய மட்டங்களைச் சமப்படுத்தும் கடமை முன்நிற்கிறது, சமூக, தேசிய இன, கலாசார, இன்ன பிற பிரச்சினைகளில் ஏராளமான வகைகளும் மட்டங்களும் உள்ளன. ஆனால் இவ்வளவு விஷயங்கள் இருந்த போதிலும் சோஷலிசக் கட்டுமான சாதனைகள்தான் வளர்ச்சியின் சமூக அடிப்படையைத் தோற்றுவித்தன; சோஷலிச நாடுகள், முதலாளித்துவ மற்றும்

வளர்முக நாடுகளில் சமூக புவியியல் பிரச்சினைகளுக்கு இடையில் அடிப்படை வேறுபாடு நிலவ இதுதான் காரணம். இந்த அடிப்படை வேறுபாடுகள்தான் மேலைய சமூக புவியியலர்களின் படைப்புகளில் (வேண்டுமென்றேயோ தெரியாமலேயோ) மூடிமறைக்கப்படுகின்றன.

உதாரணமாக டி. ஸ்மித், வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள், வளர்முக நாடுகள், சோஷலிச நாடுகள் ஆகியவற்றில் "சமமின்மை" நிலவுவதைப் பற்றி புவியியல் பகுப்பாய்வு செய்கிறார். (Smith, 1979.) தன் நூலின் இறுதியில், சமமின்மையை அகற்ற அதிக வாய்ப்பில்லை என்ற "சர்வாம்ச" நம்பிக்கையற்ற முடிவிற்கு வருகிறார், அதுவும் முதலாளித்துவ உலகில் உற்பத்திச் சாதனங்களின் மீது நிலவும் தனியுடைமை இதற்குக் காரணமில்லையாம், மனிதர்களின் நடத்தையில் உள்ள ஏதோ மனவியல் உந்து சக்திகள்தான் இதற்குக் காரணமாம்.

பிரிட்டிஷ் புவியியல் நிபுணர் ஜா. கோவுலின் பெரிய நூல் ஒன்றில் — இது உலகில் நிலவும் ஏழ்மை, சமமின்மை பற்றிய இடப் பரப்பு பகுப்பாய்விற்கு அர்ப்பணிக்கப்பட்டது — ஒரு புறம், முதலாளித்துவ நாடுகளில் நிலவும் சொத்துச் சமமின்மையைப் பற்றிய அடிப்படை விவரங்கள் ஆரம்பத்திலேயே தரப்படுகின்றன. கிரேட் பிரிட்டனில் 1% மக்களிடம் 30% தேசிய செல்வம் குவிந்துள்ளது; அதே போல் 1% "மேல்மட்ட" மக்களிடம் அமெரிக்க ஐக்கிய நாட்டில் 25% தேசிய செல்வமும், ஸ்வீடனில் 16% தேசிய செல்வமும், ஆஸ்திரேலியாவில் 9% தேசிய செல்வமும் உள்ளன. (Cole, 1981.) ஆனால் மறு புறம் இவர் உலகம் முழுவதையும் 100 பகுதிகளாகப் பிரித்து, இவற்றில் இயற்கை வளம், மக்கள்தொகை, சமூக பொருளாதார வளர்ச்சி போன்ற குறியீடுகளின் தொடர்பைப் பகுப்பாய்வு செய்யும் பொழுது இவர் எல்லா நாடுகளிலும் இப்பகுதிகளுக்கு இடையிலான வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுகின்றாரே தவிர இவ்வேறுபாடுகளின் சாரத்தையும் காரணங்களையும் குறிப்பிடவில்லை; இக்காரணங்களும் சாரமும் முதலாளித்துவ, சோஷலிச, வளர்முக நாடுகளில் அடிப்படையிலேயே வேறானவை.

மிகப் பெரும்பாலான மக்களைப் பொறுத்தமட்டில் "வாழ்க்கைத் தரத்தின்" முக்கியக் காரணிகள் சமூக பொருளாதார அமைப்பாலும் நாட்டில் பின்பற்றப்படும் கொள்கையாலும் நிர்ணயிக்கப்படுகின்றன. மேற்கூறிய அம்சங்கள் இடத்திற்கிடம் வேறுபடுகின்றன. ஆனால் இங்கே இந்த பிராந்திய மாறுபாடுகள் இரண்டாம் பட்சமானவை மட்டுமே.

1970ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் கிரேட் பிரிட்டனில் வேலையற்றோரின் எண்ணிக்கை 10 லட்சத்தை நெருங்குவதைப் பற்றிக் கவலையோடு குறிப்பிட்ட பொழுது, வீழ்ச்சியுற்ற பிரதேசங்களிலிருந்து மக்கள் வெளியேற ஊக்கமளித்தோ தொழிற்துறையும் மற்ற நடவடிக்கைத்

துறைகளும் இங்கு இடம் மாறி வர ஊக்கமளித்தோ நிலவரத்தை மேம்படுத்த முடியுமென்று நம்ப இடமிருந்தது. 1980இல் பிரிட்டனில் உள்ள வேலையற்றவர்களின் எண்ணிக்கை 30 லட்சத்தை விஞ்சிய பொழுது, பிரச்சினையின் சாரம் பிராந்திய வேறுபாடுகளுடன் தொடர்புடையதல்ல, மாறாக இது பொதுப் பொருளாதாரத் தேக்கத்தாலும் பெரும் மூலதனத்தின் நலன்களைப் பாதுகாக்கும் கன்சர்வேட்டிவ் அரசாங்கத்தின் கொள்கையாலும் நிர்ணயிக்கப்படுகிறது என்பது தெளிவாயிற்று.

அமெரிக்காவில் ரீகனின் ஆட்சியில் — இந்த அரசாங்கம் செல்வந்தர்களின் கொள்கையைப் பின்பற்றுகிறது — பிராந்தியக் கொள்கை பலவீனமடைவது இன்னமும் நன்றாகத் தெரிகிறது. ரீகன் அரசாங்கம் மூலதனத்தின் மீதான வரிகளைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்ட கொள்கையைப் பின்பற்றுகிறது, ஏழை மக்கள் மற்றும் ஏழ்மை பிரதேசங்களின் சமூக வளர்ச்சி செயல்திட்டங்களைக் கைவிடுகிறது.

இவ்வாறாக பிராந்திய சமூக பொருளாதாரப் பிரச்சினைகள் கூர்மையடைந்து வரும் பின்னணியில் மேலைய நாடுகளில் ''வாழ்க்கைத் தரம்'' என்பது தனிப்பட்ட பிரதேசங்கள், நகர குடியிருப்புகளின் ஸ்தல பிரச்சினைகளை விவரிப்பதுடன் நின்று விடுகிறது. அடிப்படை பிரச்சினைகள் முன்வைக்கப்படுவதில்லை (அல்லது தவிர்க்கப்படுகின்றன); மாறாக வெவ்வேறு வசதி, வாய்ப்புகளோடு மக்கள் வாழும் பகுதிகளில் நிலவரத்தை சிறிது மேம்படுத்தும் சிபாரிசுகளை முன்வைப்பதுடன் ஆராய்ச்சிகள் நின்று விடுகின்றன. உதாரணமாக, செல்வந்தர்கள் வாழும் பகுதியில் பிற வாகனங்கள் சாலைகளின் அமைதியைக் கெடுக்கக் கூடாது என்பதன் மீது கவனம் செலுத்தப்படுகிறது. ஏழைகள் வாழும் பகுதிகளில் ''வாழ்க்கைத் தர'' பாதுகாவலர்கள், சுகாதாரமின்மையின் மீது கவனம் செலுத்தி, குப்பைகளை அகற்றுவது போன்றவற்றில் ஈடுபடலாம். இது அவசியம்தான், சுகாதாரத்திற்காகப் பாடுபடத்தான் வேண்டும். ஆனால் இரண்டாம்பட்ச, மூன்றாம்பட்ச நடவடிக்கைகளை ''வாழ்க்கைத் தரத்தை'' நிர்ணயிக்கும் முக்கியக் காரணிகளுடன் தொடர்புடைய பிரச்சினைகளின் தீர்வாக முன்வைக்கக் கூடாது.

3. ஐக்கிய நாடுகள் சபையும் பன்முக பிராந்திய ஆராய்ச்சிகளும்

பிராந்திய ஆராய்ச்சிகளில் ஐ. நா. சபை முக்கியப் பங்காற்றுகிறது; இதன் வசம் பரவலான விஞ்ஞான ஆராய்ச்சி மையங்கள் உள்ளன. நவீன சமுதாய வளர்ச்சியின் மிக முக்கியப் பிரச்சினைகளை ஆராய்வதுதான் இவற்றின் நோக்கமாகும். ஐ. நா. சபை ஏற்பாடு செய்யும் ஆராய்ச்சிகள் நடைமுறைப் பயனை நோக்கமாகக் கொண்டவை.

இவை வளர்ச்சி செயல்திட்டங்களுக்கு உள்நாட்டு மட்டத்திலும் சர்வ தேச அளவிலும் விஞ்ஞான அடிப்படையை அளிக்கும். ஐ. நா. ஆராய்ச்சி களில் பெரும்பாலானவை விடுதலையடைந்த நாடுகளின் மீது முக்கியக் கவனம் செலுத்துகின்றன; ஏனெனில் இந்நாடுகளின் நவீன வளர்ச்சிப் பிரச்சினைகள் சிக்கலாகி வருகின்றன, பெரும்பாலான மக்களைப் பாதிக்கும் பட்டினி, நோய்நொடிகள், ஏழ்மைக்கு எதிரான போராட் டத்திற்கு எல்லா சாதனங்களையும் அணிதிரட்டுவது மிக முக்கிய மாகும். வழக்கமாக அரசின் சுறுசுறுப்பான பங்கேற்பின் பயனாய் இந்நிகழ்ச்சிப் போக்கை செயல்முனைப்போடு ஒழுங்குபடுத்த இவற்றின் வசம் நல்ல வாய்ப்புகள் உள்ளன.

பிராந்தியத் திட்டமிடலின் அம்சங்களை உருவாக்கி இப்பிரச்சினை களைத் தீர்க்கும் அவசியம் முன்நிற்கும் பொழுது இத்துறையில் ஏற் கெனவே உலகில் சேர்ந்துள்ள அனுபவத்தைப் பயன்படுத்த இந்நாடுகள் முயலுகின்றன. இதில் இந்த அனுபவத்தின் ஈடு இணையற்ற அம்சம் இவற்றிற்கு முக்கியமில்லை; மாறாக இதன் சர்வபொது அம்சங்கள், இதைக் குறிப்பிட்ட நாட்டில் பயன்படுத்தும் வாய்ப்புகள் ஆகியவற்றின் மீது இந்நாடுகள் கவனம் செலுத்துகின்றன.

ஐ. நா. சபையின் கீழுள்ள பல விசேஷ ஸ்தாபனங்கள் வளர்ச்சியின் பிராந்திய அம்சங்களை ஆராய்வதன் மீது முக்கியக் கவனம் செலுத்து கின்றன. தொழிற்துறை வளர்ச்சி பற்றிய ஸ்தாபனம் (UNIDO), உணவுப் பொருள் மற்றும் விவசாய ஸ்தாபனம் (FAO), UNESCO போன்றவை இத்தகைய விசேஷ ஸ்தாபனங்களாகும். ஐ. நா. சபையின் பிராந்தியப் பொருளாதாரக் கமிஷன்கள், சாலச் சிறந்த தீர்வுகளைத் தேடும் பொருட்டு மைக்ரோ பிராந்திய, அரசு, உள்நாட்டு மற்றும் பிர தேச வளர்ச்சிப் பிரச்சினைகளைப் பற்றிய ஆராய்ச்சிகளில் ஈடுபடு கின்றன.

1960ஆம் ஆண்டுகளிலிருந்து பல ஐ. நா. வெளியீடுகளில், பல்வேறு மட்டங்களில் சமூக, பொருளாதார வளர்ச்சி பற்றிய செயல்திட்டங் களைத் தீட்டுவதுடன் தொடர்புடைய பிராந்திய ஆராய்ச்சிகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன; 1970 முதல் இதில் புறச்சூழல் வளர்ச்சி அம்சமும் சேர்ந்துள்ளது.

விரிவடைந்து வரும் ஐ. நா. பிராந்திய ஆராய்ச்சிகளின் பெருக்கு முக்கியமாக வளர்முக நாடுகளில் பிராந்தியத் திட்டமிடலுக்கு உதவு கிறது. நடைமுறைப் பயன் நோக்கமுடைய இந்த ஆராய்ச்சிகள் பிராந்திய வளர்ச்சியைப் பற்றி மிகவும் பரவியுள்ள கருத்தமைப்புகளின் அடிப்படையிலானவை. இக்கருத்தமைப்புகளை நடைமுறை நோக்கங் களுக்காகப் பயன்படுத்துவது என்பது ஒரு குறிப்பிட்ட கருத்தமைப்பை அங்கீகரிப்பது என்று பொருள். ஐ. நா. சபை நடத்திய ஆராய்ச்சிகளில், பிராந்தியத் திட்டமிடலில் உருவாகிய நிலவரத்தைப் பற்றிய விமர் சனம் அடங்கியுள்ளது; இவை ''சோதனைக் கல்லாக'' திகழுகின்றன,

10–1339

பிராந்திய வளர்ச்சியைப் பற்றிய கருத்தமைப்புகளை உருவாக்க உதவு கின்றன.

பன்முக பிராந்திய வளர்ச்சி ஆராய்ச்சிகள், ஊழியர் பயிற்சி பற்றிய செயல்திட்டங்கள் ஐ. நா. சபையில் 1965 முதல் தீட்டப்படலாயின. அந்த ஆண்டில்தான் ஐ. நா. சபையின் பொருளாதார, சமூக கவுன்சில் ஒரு விசேஷ தீர்மானத்தை நிறைவேற்றியது. இது ஐ. நா. பொதுச் செயலாளருக்குப் பின்வருமாறு அறைகூவல் விடுத்தது: ''தனித்தனி உறுப்பு நாடுகள் ஏற்கும் பிராந்திய வளர்ச்சித் திட்ட நகல்களின் தொடர்பில் ஆராய்ச்சி மற்றும் ஊழியர் பயிற்சித் திட்ட நகல்களைத் தீட்ட வேண்டும்; வளர்ச்சியைத் துரிதப்படுத்தவும், கிராம, நகரக் குடியிருப்புகளையும் தொழில் நிறுவனங்களையும் சாலச் சிறந்த முறை யில் அமைக்கவும் உதவக் கூடிய முறையியலையும் முறையையும் இவை முன் மொழிய வேண்டும்.''

இவ்வாறாக முன்வைக்கப்பட்ட கடமைகள் பிராந்திய வளர்ச்சி பற்றிய எல்லா முக்கியப் பிரச்சினைகளையும் உள்ளடக்கியுள்ளன என்று கூற முடியாது. என்றாலும் ஐ. நா. சபையின் கீழ் பிராந்திய ஆராய்ச்சி களின் அவசியத்தை அதிகாரப் பூர்வமாக அங்கீகரிக்கும் முதல் ஆவண மாக இது கருதப்படுகிறது. ஆரம்பம் முதலே இந்த ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டதிலும் அந்தந்த சிபாரிசுகள் முன்வைக்கப்பட்டதிலும் மேலைய ஆலோசகர்களும் மேலைய சிந்தனா முறைகளும் அனுபவமும் பெரும் பங்காற்றின என்பது கவனிக்கத் தக்கது. திட்டமற்ற பொரு ளாதாரத்தின் பிராந்தியத் திட்டமிடல் அனுபவம் மாதிரியாக முன் வைக்கப்பட்டது விந்தைதான்.

ஐ. நா. சபையின் வேண்டுகோளுக்கிணங்க ''எதிர்கால வளம்'' என்ற அமெரிக்க இணையம் ஒன்று **பிராந்திய வளர்ச்சி பற்றிய உலக ஆராய்ச்சி திட்ட நகலை** தயாரித்தது. உலகின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் பிராந்திய ஆராய்ச்சிகளின் நீண்ட கால நோக்கத்தைப் பற்றிக் குறிப்பிடும் திட்ட நகலின் ஆசிரியர்கள் இப்படிப்பட்ட பணி களின் இரட்டைக் கடமையைப் பற்றி பின்வரும் முடிவிற்கு வருகின் றனர்: ''குறிப்பிட்ட பொது சமூக பொருளாதார லட்சியங்களை அடைவதில் பிராந்திய வளர்ச்சி உதவுமா உதவாதா என்பது பற்றிய கருத்தை உலகில் பரப்ப வேண்டும்; அதே சமயம் திட்டவட்டமான இடத்தில் குறிப்பிட்ட பிராந்தியத் திட்ட நகல்களுக்கான முக்கியக் கடமைகளை அடையும் முறைகளை மேம்படுத்தும் வழிகளை முன் மொழிய வேண்டும்.'' சமூக பொருளாதார முறைகளில் ஏற்படும் மாற்றங்கள், மக்கள்தொகை பகிர்வு மற்றும் உழைப்புச் சக்திகளின் மீது பிராந்திய வளர்ச்சித் திட்டங்களின் தாக்கம் ஆகியவற்றின் தொடர்பில் பிராந்தியப் பொருளாதார வளர்ச்சி பிரச்சினைகளை ஆராய திட்ட மிடப்படுகிறது. இதில் சட்ட, அரசியல், ஸ்தாபன மற்றும் நிர்வாகக் காரணிகள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. இறுதியில், பிராந்திய

ஆராய்ச்சி திட்டங்கள், நிபுணர் பயிற்சித் திட்டங்கள் ஆகியவற்றை நிறைவேற்ற அவசியமான நடவடிக்கைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

மொத்தத்தில் இத்திட்ட நகல் இரண்டு விதமான கருத்துகளை ஏற்படுத்துகிறது. சிக்கலான ஆராய்ச்சி அம்சங்களை முன்வைக்கும் ஆசிரியர்கள் உரிய அடித்தளத்தையும் மற்ற துணை அம்சங்களையும் ஏற்படுத்துவதன் மீது உரிய கவனம் செலுத்தவில்லையெனத் தோன்று கிறது. ஒரு புறம் இவர்கள் பிரதேசமயப்படுத்தல் மற்றும் பிரதேச வளர்ச்சிப் பாதைகளின் ஆராய்ச்சி ஆகியவற்றிற்கும் குறிப்பிட்ட நாட்டின் பொது சமூக பொருளாதார நிலைக்கும் இடையிலான தொடர்பைக் கோடிட்டுக் காட்டுகின்றனர்; மறு புறமோ சோஷலிச நாடுகள், வளர்முக நாடுகள், முதலாளித்துவ நாடுகளில் பிரதேசமயப் படுத்தல் பிரச்சினைகளுக்கு இடையில் கிட்டத்தட்ட எவ்வித வேறு பாட்டையும் சுட்டிக் காட்டவில்லை.

பிராந்திய வளர்ச்சி பற்றிய உலக ஆராய்ச்சி திட்ட நகல் தோன்றியது குறிப்பிடத் தக்கது: பல்வேறு நாடுகளில் நடைபெறும் ஏராளமான பிராந்திய ஆராய்ச்சி பரிசோதனைகளைத் தொகுப்பது, இப்படிப்பட்ட ஆராய்ச்சி திட்டங்களைத் தீட்டுவது சம்பந்தமான தேவை 1960ஆம் ஆண்டுகளின் நடுவில் எப்படி முதிர்ச்சியடைந்தது என்று இது காட் டியது. பிரதேசங்கள் உருவாவதற்கும் நகரமயமாக்கலுக்கும் இடை யிலான தொடர்பு, மக்கள்தொகை பரப்பீடு, உருவாகியுள்ள நிர்வாக பிரதேச ஆட்சியமைப்பிற்கும் பிரதேசங்களின் வளர்ச்சிப் பிரச்சினை களுக்கும் இடையிலான பொருத்தமின்மை, பிராந்திய வளர்ச்சி பற்றிய மற்ற பிரச்சினைகள் ஆகியவற்றை விளக்கும் இந்நகலில் அதே நேரத்தில் உற்பத்திக் காரணிகளின் முக்கியப் பங்கையும் பிரதேசங்கள் உருவாகும் நிகழ்ச்சிப் போக்கின் மீது இவை தாக்கம் செலுத்தும் முறையையும் ஆராயும் பொழுது குறைகள் காணப்படுகின்றன. பிராந்திய வளர்ச்சி யின் இயற்கை வள அடிப்படை, புறச்சூழல் பிரச்சினைகள் ஆகியவற் றைப் பற்றி நகலில் ஒரு வார்த்தைக் கூட குறிப்பிடப்படவில்லை. இந்நகல் ''உலக நகல்'' என்று அழைக்கப்பட்டாலும் வளர்முக நாடு களில் பிராந்தியத் திட்டமிடல் பிரச்சினைகளை ஆராய்வதற்காக இது உருவாக்கப்பட்டது. ஆனால் இந்நாடுகளின் வளர்ச்சியில் முக்கியப் பிரச்சினையைப் பற்றி — இவற்றின் பொருளாதாரத்தில் உள்ள காலனி வகை துறை ரீதியான மற்றும் பிரதேசக் கட்டமைப்பை அகற்றும் அவசியம், சமமற்ற சர்வதேச உழைப்புப் பிரிவினையை அகற்றும் அவசியம் பற்றி — நகலில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை.

மொத்தத்தில், உலக முக்கியத்துவத்திற்கும் உலகம் பூராவும் பரவு வதற்கும் போட்டியிடும் இந்நகல் நடைமுறையில் மேலைய மாதிரியி லான பிராந்திய ஆராய்ச்சிகளின் மாற்றியமைக்கப்பட்ட வடிவமாகும். இது அவ்வளவு அதிகமாகப் பரவவில்லை, இதனால் இது வளர்முக நாடுகளுக்கு ஏற்புடையதல்ல என்பது தெளிவாயிற்று.

ஜெனீவாவில் உள்ள ஐ. நா. சமூக வளர்ச்சி ஆராய்ச்சி நிலையம் 1967 முதல் நடத்தத் துவங்கிய பிராந்திய ஆராய்ச்சிகள் பன்மடங்கு பரவலானவையாகவும் முறையானவையாகவும் இருந்தன. பிரபல போலந்து பொருளாதார நிபுணரும் புவியியல் வல்லுனருமாகிய ஏ. குக்லீன்ஸ்கி இந்த ஆராய்ச்சிகளுக்குத் தலைமை தாங்கினார். இவை பொதுத் தன்மையைக் கொண்டிருக்க வேண்டும், அதே சமயம் ஆராய்ச்சி, ஊழியர் பயிற்சி, திட்டமிடல் ஆகியவற்றிற்குப் பயன்படும் வகையில் விசேஷமானதாய் இருக்க வேண்டும் என்ற கடப்பாடு மேற்கூறிய ஆராய்ச்சி நிலையத்தின் முன் வைக்கப்பட்டது. அரசு மற்றும் பிராந்தியத் திட்டமிடலின் பல்வேறு மட்டங்களில் சமூக, பொருளாதார, நிர்வாக அம்சங்களை ஒன்றிணைப்பதன் மீது கவனம் செலுத்தப்பட்டது. 1980ஆம் ஆண்டுகளின் நடுவிற்குள், கிட்டத்தட்ட எல்லா நாடுகள், கண்டங்களின் பிராந்திய வளர்ச்சி அனுபவத்தையும் பொதுமைப்படுத்தும் ஒரு டஜனுக்கு அதிகமான தொகுதிகள் தொடர் வரிசையில் வெளியிடப்பட்டன. இதில் வளர்ச்சித் துருவங்கள் மற்றும் மையங்களைப் பற்றிய கருத்தமைப்பு (இதன் பல்வேறு வகைகளில்) முக்கியமானதாயிருந்தது.

மொத்தத்தில் ஏராளமான விவரங்களை முன்வைக்கும் மேற்கூறிய தொகுப்பு நூல்கள் இன்றைய மற்றும் எதிர்கால வளர்ச்சி பற்றி சிக்கலடைந்து வரும் உலக பிராந்தியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண எவ்வித புதிய அணுகுமுறையையும் முன்மொழியவில்லை. இத் தொகுப்பு நூல்கள் வளர்ச்சித் துருவங்கள் பற்றிய கருத்தமைப்பையே பல விதங்களில் திரும்பக் கூறுகின்றன. திரும்பத் திரும்பச் சொல்லுவது நல்லது என்றாலும் இங்கே இது விஞ்ஞான முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளது.

இத்தொடர் வரிசையின் ஆசிரியர்கள் முன் நின்ற தத்துவார்த்த மற்றும் ஸ்தாபன இடர்ப்பாடுகளை உரிய முறையில் மதிப்பிட்டாக வேண்டும். என்றாலும் இத்தொடர் வரிசை பல்வேறு கண்ணோட்டங்களிலிருந்து பார்க்கையில் சுவாரசியமானது; குறிப்பாக இது பிராந்தியத் திட்டமிடல் துறையில் உலக அனுபவத்தைத் திரட்டித் தருவது குறிப்பிடத் தக்கது.

1970ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்திலிருந்து நகோயாவில் (ஜப்பான்) இயங்கி வரும் ஐ. நா. பிராந்திய வளர்ச்சி மையத்தில் முந்தைய முயற்சிகளின் குறைகள் சுட்டிக் காட்டப்படுகின்றன: ''பத்தாண்டுக்கும் மேலாக மூன்றாம் உலக நாடுகளின் வளர்ச்சிக் கொள்கையில் பிராந்திய வளர்ச்சி முக்கிய இடத்தை வகித்தாலும் திட்டங்களின் நடைமுறைத் தயாரிப்புக் கட்டம் வரும் பொழுது பயன்படுத்தப்படும் முறையும் சாதனங்களும் முறையியலும் போதுமானவையாக, ஏற்றவையாக இல்லை.''

நகோய மையத்தின் பத்தாண்டு நிறைவையொட்டி 1981இல் **பிராந்திய வளர்ச்சி** என்ற பத்து தொகுதிகளடங்கிய நூல் வரிசை வெளியிடப்

பட்டது. இவற்றை மேற்போக்காகப் பார்க்கும் பொழுதே, பிராந்திய வளர்ச்சியைப் பற்றிய புதிய போக்குகளும் கருத்தமைப்புகளின் பரிணாம வளர்ச்சியும் இவற்றில் முழுமையாக இடம் பெற்றுள்ளது தெரிகிறது. விடுதலையடைந்த நாடுகளின் பிராந்திய வளர்ச்சிப் பிரச்சினைகள் தனித் தன்மையை உடையவை என்ற கருத்தும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளுக்கென்று உருவாக்கிய கருத்தமைப்புகள், முறைகளை இந்நாடுகளில் அப்படியே பயன்படுத்த முடியாது என்ற கருத்தும் இங்கே நன்கு தெளிவாகத் தெரிகின்றன.

இந்நூல் வரிசையின் ஆசிரியர்களின் நிலை, வளர்ச்சிப் போக்கை விவரிப்பதில் பரவலான அணுகுமுறையுடன் தொடர்புடையது: உடனடித் தேவைகள் மற்றும் எதிர்கால வாய்ப்புகளின் (இவற்றில் பொருளாதார, சமூக அம்சங்களும் புறச்சூழல் பிரச்சினைகளும் அடங்கும்) நோக்கு நிலையிலிருந்து வளர்ச்சி என்பது ஆராயப்படுகிறது. ஆனால் மிகவும் வெவ்வேறான கருத்தமைப்புகள் மாற்றாக ''தொகுத்துரைக் கப்படுவது'' சந்தேகமளிக்கிறது. மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் கருத்தமைப்பும் (இதுதான் வளர்முக நாடுகளுக்கு மிக முக்கியச் செயல்திட்டமாகும்), வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் பிரதிநிதிகள் முன்வைக்கும் பூஜ்ஜிய வளர்ச்சிக் கருத்தமைப்பும் இவற்றிலடங்கும்.

பெரும்பாலான மக்கள் விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ள வளர்முக நாடுகளில், மிகப் பின்தங்கிய பொருளாதாரத் துறைகளையும் மிகப் பின்தங்கிய கிராமப் பகுதிகளையும் உயர்த்தாமல் பொது மற்றும் பிராந்திய வளர்ச்சியின் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது என்ற உணர்வு அதிகரித்து வருகிறது. இக்கருத்து மேற்கூறிய தொடர் வரிசை நூல்களில் பிரதிபலிக்கிறது. இதில் இரண்டு தொகுதிகள் வளர்முக நாடுகளின் விவசாயத் துறையில் அவசியமான கட்டமைப்பு மாற்றங்களுக்கும், உற்பத்தி-பிரதேச இரட்டைவாதத்தை அகற்றும் பிரச்சினைகளுக்கும் (காலனியாதிக்கம் விட்டுச் சென்ற இப்பிரச்சினைகள் பல நேரங்களில் முதலாளித்துவ வளர்ச்சிப் போக்கில் கூர்மையடைகின்றன) அர்ப்பணிக்கப்பட்டவை.

நகரமயமாக்கல் மற்றும் பிராந்திய வளர்ச்சி பற்றிய நிகழ்ச்சிப் போக்குகளை விளக்கும் தொகுதிகளில் கிட்டத்தட்ட இதே மாதிரியான பிரச்சினைகள், ஆனால் வேறு நோக்கு நிலையிலிருந்து (நகரத்துடன் தொடர்புபடுத்தி) ஆராயப்படுகின்றன. இன்று பிரகடனப்படுத்தப்படும் ''புதிய செயல்முறை'' மிகப் பெரும் நகரத் திரட்டுகளின் வளர்ச்சியைக் கண்காணிப்பதையும், பொருளாதாரத்தின் ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் ஒழுங்கமைக்கப்படாத துறைகளுக்கு இடையிலும், ஆலைத் தொழிலுக்கும் குடிசைத் தொழிலுக்கும் இடையிலும், விவசாயத் துறைக்கும் தொழிற்துறைக்கும் இடையிலும், நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையிலும் இணைப்பை வளர்ப்பதற்கான நடவடிக்

கைகளை மேற்கொள்வதையும் நோக்கமாகக் கொண்டது.

எல்லா தொகுதிகளிலும் விளக்கப்படும் சமூக வளர்ச்சி அம்சங்கள் **மானுடத் தேவைகளும் பிராந்திய வளர்ச்சியும்** என்ற தொகுதியில் விசேஷமாக வெளிப்படுகின்றன; இதில் சமூக வளர்ச்சிப் பிரச்சினைகள் ஸ்தல, பிராந்திய, தேசிய, சர்வதேசிய மட்டங்களில் ஆராயப்படுகின்றன. இத்தொடர் வரிசையில் உள்ள எல்லா தொகுதிகளையும் போன்றே இத்தொகுதியிலும் ஏழை மக்களின் குறைந்தபட்ச (அடிப்படை) தேவைகளைப் பூர்த்தி செய்யும் செயல்திட்டத்தின் மீது விசேஷ கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

வழக்கம் போன்றே ஐ. நா. சபையின் கீழுள்ள விசேஷ ஸ்தாபனங்கள் மற்றும் இதன் விஞ்ஞான ஆராய்ச்சி நிலையங்களின் நூல்கள் முதலில் திட்ட ஸ்தாபனங்களுக்கும் மற்ற அரசாங்க ஸ்தாபனங்களுக்கும் செல்கின்றன. எனவே கடைசித் தொகுதி நிறுவனக் கட்டமைப்புப் பிரச்சினைகளுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது; தீட்டப்படும் திட்டங்களை நிறைவேற்றவும் ஊழியர் பயிற்சிக்கும் இக்கட்டமைப்பு அவசியம்.

பல்வேறு நாடுகளின் அனுபவத்தைப் பொதுமைப்படுத்துவதானது பிராந்தியத் திட்டமிடலை மேம்படுத்தி, இதன் விஞ்ஞான அடிப்படையை வலுப்படுத்துவதற்கான யதார்த்த முடிவுகளை எடுக்க ஆதாரமாகத் திகழும் என்பது ஐ. நா. பிராந்திய வளர்ச்சி மையம் நடத்திய ஆராய்ச்சிகளின் முக்கியக் கருத்துகளில் ஒன்றாகும். இம்மையத்தின் திட்டவட்டமான ஆராய்ச்சிகளில் வளர்முக நாடுகளின், குறிப்பாக ஆசிய நாடுகளின் அனுபவம் பரவலாகத் தரப்பட்டுள்ளது; இவற்றில் பல்வேறு கருத்தமைப்புகளும் (முக்கியமாக பிராந்தியத் திட்டமிடல் பற்றிய மேலைய தத்துவங்கள், முறைகள்) சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. **சோவியத் யூனியனில் திட்டமிடலுக்கான பிரதேசமயப்படுத்தல்: கருத்தமைப்புகள், முறைகள், நடைமுறை** என்னும் நூல் செ. லவ்ரோவ், வி. பக்ஷிஷேவ்ஸ்கி, க. ஸ்தஸியூக் ஆகியோரின் பதிப்புரையின் கீழ் 1985 இறுதியில் மேற்கூறிய மையத்தால் வெளியிடப்பட்டது. இது ஒன்று மட்டுமே இந்த விஷயத்தில் ஒரு பெரும் விதிவிலக்காகும். எல்லா மட்டங்களிலும், பொருளாதாரத்தின் எல்லா துறைகளிலும் திட்டமிடல் பரவியுள்ள ஒரு நாட்டுடன், சிக்கலான பிராந்திய வளர்ச்சிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பரவலான அனுபவம் கிட்டியுள்ள ஒரு நாட்டுடன் முறைப்படியான ஒத்துழைப்பிற்கு இது ஒரு ஆரம்பம் மட்டுமே என்று எதிர்பார்க்கப்படுகிறது.

4. பிரதேசமயப்படுத்தல்: வரையறுப்புகளின் தெளிவின்மையும் கருத்துகளின் பரிணாம வளர்ச்சியும்

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய ஆண்டுகளில் உலகம் பூராவும் திட்டமிடலுக்கான பிராந்திய ஆராய்ச்சிகளின் பாலான

ஆர்வம் அதிகரித்தது. இந்த ஆராய்ச்சிகளில் புவியியலர்கள் மட்டுமின்றி மற்றத் துறையினரும், குறிப்பாக பொருளாதார நிபுணர்கள் பங்கேற் கலாயினர். இக்காலகட்டத்தில்தான் பிரதேசமயப்படுத்தல் பற்றிய கருத்தமைப்புகளும் விரைவாக வளர்ச்சியடைந்தன.

புவியியலின் முக்கிய வார்த்தைச் சிக்கல்களில் ஒன்று ''பிரதேசம்'' என்ற அடிப்படைக் கருத்திற்கு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொருள் இல்லாததாகும். இதை அரசியல்வாதிகளும் பத்திரிகைகளும், சாதாரணமாக அன்றாட வாழ்வில் மக்களும் பரவலாகப் பயன்படுத்து வதானது விஷயத்தை இன்னமும் குழப்புகிறது. ''ஒரே வார்த்தைகளை (தொழில்நுட்பச் சொற்களை) வெவ்வேறு பொருளில் பயன்படுத்துவது வசதியற்றது, ஆனால் எந்த ஒரு விஞ்ஞானத்திலும் இதை முழுமை யாகத் தவிர்க்க இயலவில்லை'' என்று மார்க்ஸ் கூறினார். விஷயத் தைக் குழப்பியதில் புவியியலர்களுக்கும் பெரும் பங்குண்டு. அமெரிக்க புவியியலர்கள் ஜி. ஓடும், எச். மூர் ஆகியோர் பிரதேசத்தைப் பற்றி 41 பல்வேறு வரையறுப்புகளைத் தந்தனர்! 1950ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் புவியியல் விஞ்ஞானி ஜி. கிம்பிள், பிரதேசமயப்படுத்தலில் ஈடுபட்டுள்ளவர்களை ''ஒன்றுமேயில்லாத பிரதேசங்களைச் சுற்றி இல் லாத எல்லைகளைத் தேடுவதில் ஈடுபட்டுள்ளவர்கள்'' என்றார். (Kimble, 1951, p. 159.)

பெரும்பாலான புவியியல் விஞ்ஞானிகள் தம் விஞ்ஞானத்தின் அடிப் படைக் கருத்துகளில் ஒன்றை விளக்கி துல்லியமாக்க முயலுகின்றனர். ஆனால் இது வழக்கமான கருத்து வேறுபாடுகள் நிறைந்த ஒரு குழப்ப மான விஷயம்.

பி. ஜேம்ஸ், பொதுவில் பயன்படுத்தப்படக் கூடிய, எதற்கும் ''கட்டுப் படுத்தாத'' ''பிரதேசம்'' என்ற சொல்லிற்கும் இச்சொல்லின் புவியியல் பொருளிற்கும் இடையிலுள்ள வேறுபாட்டைக் கோடிட்டுக் காட்டி பின்வருமாறு எழுதுகிறார்: ''நிலப்பரப்பை விருப்பப்படி பல்வேறு அள வுள்ள பகுதிகளாகப் பிரிக்கலாம்.... ஆனால் விருப்பப்படி தேர்ந்தெடுக் கப்பட்ட நிலப்பகுதிகளாக உள்ள இடங்களையும் பிரதேசம் என்றழைக் கப்படும் விசேஷ இடங்களையும் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். பிரதேசமானது விசேஷ அம்சங்களின் அடிப்படையில் பிரிக்கப்படு கிறது, இதன் எல்லைகளும் இவற்றின் அடிப்படையில்தான் நிர்ணயிக்கப் படுகின்றன.'' (James, 1972, pp. 459 — 460.) இது மிகப் பொது வான, தெளிவற்ற வரையறுப்பாகும். இதன் பின் பல்வேறு விளக்கங் கள் அடங்கியுள்ளன. பிரதேசம் என்பது அறிவுத் துறையின் கருத்தி னமா அல்லது இது யதார்த்தத்தில் நிலவி நம் கருத்தில் பிரதிபலிக் கின்றதா என்னும் அடிப்படை கருத்துநிலையும் இதிலடங்கும்.

அமெரிக்க புவியியலர் சங்கத்தின் 50ஆம் ஆண்டு நிறைவையொட்டி (1954), **அமெரிக்க புவியியல். இன்றும் நாளையும்** என்ற ஒரு பெரும் நூல் வெளியாயிற்று. மேலைய நாடுகளில் பிராந்திய வளர்ச்சி மற்றும்

பிரதேசமயப்படுத்தல் பற்றிய கருத்தமைப்புகள் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் எப்படி வளர்ச்சியடைந்தன என்று பகுப்பாய்வு செய்ய இந்நூலை அடிப்படையாகக் கொள்ளலாம். இதன் ருஷ்ய பதிப்பிற்கு என். என். பரான்ஸ்கி ஒரு முன்னுரையை அனுப்பினார். அமெரிக்க புவியியலர்களின் பெரும் பணியை இதில் உயர்வாக மதிப்பிட்ட இவர் அதே நேரத்தில் முக்கிய முறையியல் அம்சங்களை விமர்சனக் கண்ணோட்டத்தோடு பகுப்பாய்வு செய்தார். பிராந்திய கருத்தமைப்பு மற்றும் இதன் வியாக்கியானத்தின் பாலான அமெரிக்க புவியியலர்களின் முரண்பாடான அணுகுமுறையை இவர் சுட்டிக் காட்டினார். ஒரு புறம், புவியியலில் பிராந்திய முறையின் பெரும் முக்கியத்துவம் விவாதத்திற்கு அப்பாற்பட்டது என்று கருதபட்டு பன்முறை திரும்பத் திரும்பக் கூறப்படுகிறது; மறு புறமோ இது போதிய அளவு விளக்கப்படவில்லை, நிரூபணங்கள் தரப்படவில்லை. புவியியலின் சாரத்தைப் பற்றிய முதல் அத்தியாயத்தில் பின்வருமாறு கோடிட்டுக் காட்டப்படுகிறது: ''பிராந்திய கருத்தமைப்புதான் புவியியல் விஞ்ஞானம் முழுவதற்கும் அடிப்படையாகும்.... புவியியல் சிந்தனையின் அடிப்படையாக விளங்கும் பிராந்திய கருத்தமைப்பு விவாதம் முழுவதும் ஊடுருவி நிற்கிறது.'' நூலின் இரண்டாவது அத்தியாயம் ''பிராந்திய கருத்தமைப்பும் பிராந்திய முறையும்'' என்பதற்கு விசேஷமாக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. ஆனால் ''பிரதேசம்'' என்ற கருத்து பெரிதும் நிபந்தனையோடு, மட்டாக விளக்கப்படுகிறது.

அமெரிக்க புவியியலர் சங்கத்தின் அரை நூற்றாண்டு நடவடிக்கையைத் தொகுத்துரைக்கையில் இவர்கள் ஒரு புறம் புவியியலில் பிராந்திய கருத்தமைப்பின் முக்கியப் பாத்திரத்தைப் பிரகடனப்படுத்தினர், மறு புறமோ பிராந்திய கருத்தமைப்பின் அடிப்படையாகிய பிரதேசங்கள் புறவய ரீதியாக நிலவுவதை மறுத்து, ஒரே மாதிரியான இடங்களை பிரதேசங்களாக — அகவய அலகுகளாக — கருதினர்.

ஆனால் அமெரிக்க மற்றும் மேற்கு ஐரோப்பிய புவியியல் வெளியீடுகளைக் கவனமாகப் படித்த என். என். பரான்ஸ்கி, **அமெரிக்க புவியியல்** என்ற மேற்கூறிய அதிகாரப் பூர்வமான வெளியீடு உண்மையில் மேலோங்கி நிற்கும் மேலைய விஞ்ஞானிகளின் கருத்தைப் பிரதிபலிக்கவில்லையென்று கருதினார்.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் பிராந்தியத் திட்டமிடல் முதலாளித்துவ நாடுகளில் அதிக முறையான தன்மையைப் பெற்று, வளர்முக நாடுகளில் பரவியதும் (சோஷலிச நாடுகளில் பிராந்தியத் திட்டமிடல் உட்பட, திட்டமிடல் சமுதாய வளர்ச்சி விதியாகும் என்பதை சொல்லத் தேவையேயில்லை) பிராந்திய வளர்ச்சி பற்றிய கருத்தமைப்புகள் தீவிரமாக உருவாக்கப்படலாயின, பிரதேசமயப்படுத்தலின் பால் மீண்டும் அக்கறை தோன்றியது.

1960ஆம் ஆண்டுகளில் 19ஆவது சர்வதேச புவியியல் காங்கிரசில்

(ஸ்டாக்ஹோம்), பொருளாதார பிரதேசமயப்படுத்தலின் முறைகளைப் பற்றிய ஒரு கமிஷனைத் தோற்றுவிக்க முடிவு செய்யப்பட்டது. முக்கியக் கருத்தமைப்புகள் மற்றும் சொற்றொடர்களை முறைப்படுத்துதல், பிராந்திய ஆராய்ச்சிகளில் கணித முறைகளை உருவாக்குதல், பரவலான நூல் பட்டியலையும் விசேஷ அறிக்கைகளையும் தயாரித்தல் ஆகியவை சம்பந்தமாக இக்கமிஷன் 8 ஆண்டுகள் பெரும் பணியாற்றியது. உலகில் உள்ள பல்வேறு புவியியல் போக்குகளால் பயன்படுத்தப்படும் பிரதேசமயப்படுத்தல் கருத்தமைப்புகளைப் பகுப்பாய்வு செய்ததன் அடிப்படையில், ''பரஸ்பரத் தொடர்புடைய, ஆனால் தனித்தனியான மூன்று முக்கியக் கருத்தமைப்புகள்'' சுட்டிக் காட்டப்பட்டன. நூலாசிரியர்களின் கருத்துப்படி இந்த வகையீடு வெறும் பொருளாதார பிரதேசமயப்படுத்தல் வரம்புகளை விட்டு வெளியேறுகிறது — பல்வேறு அளவுகோல்களின் அடிப்படையில், பல்வேறு லட்சியங்களுக்காகப் பிரித்துக் கூறப்பட்டு பயன்படுத்தப்படும் முக்கிய பிரதேசங்களையும் இது சுட்டிக் காட்டுகிறது:

1) பிரதேசங்கள் (பிரதேச அலகுகள், புள்ளியியல் பகுதிகளையும் சேர்த்து) — ஆராய்ச்சியின் அடிப்படை, ஆராய்ச்சிக்கான கருவி;

2) பிரதேசங்கள் — செயற்பாட்டிற்கான கருவி (ஸ்தாபன, அதாவது நிர்வாக அல்லது திட்ட பிரதேசங்கள்);

3) பிரதேசங்கள் — ஆராய்ச்சியின் இலக்கும் முடிவும்; அதாவது பிரிக்கப்பட்டு ஆராய்ச்சிக்கு உட்படக் கூடிய, புறவய ரீதியில் யதார்த்தமாக நிலவும் பிரதேசங்கள்.

''பிரதேசம்'' என்பதைப் பற்றி நிலவிய பல்வேறு கருத்து மாறுபாடுகளை அகற்றி எளிய, திட்டவட்டமான வகைப்பாட்டை முன்வைத்தது சர்வதேச புவியியல் காங்கிரஸ் கமிஷனின் சந்தேகமற்ற சேவையாகும். பிரதேசமயப்படுத்தல் சம்பந்தமான நீண்ட கால பரிசோதனைகள், பிராந்தியத் திட்டமிடல் மற்றும் வளர்ச்சியின் நடைமுறை, பொருளாதார பிரதேசமயப்படுத்தல் விஷயத்தில் சர்வதேச புவியியல் காங்கிரஸ் கமிஷனின் சாதனைகள் ஆகியவை ''பிரதேசம்'' என்ற கருத்தின் சாரம், புவியியல் விஞ்ஞானத்திற்கு இதன் முக்கியத்துவம் பற்றிய விவாதங்களுக்கு ஒரு முடிவு கட்டின' என்று தோன்றலாம். ஆனால் உண்மையில் நிலவரம் வேறு விதமாயிருந்தது.

மேற்கூறிய கமிஷனின் அடிப்படை கருத்துநிலைகள் கூட புவியியலர்கள், பிராந்திய பொருளாதாரவாதிகளின் மத்தியில் நடைபெறும் விவாதங்களில் அபூர்வமாகத்தான் பயன்படுத்தப்படுகின்றன. பொருளாதார விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், புவியியலுடன் தொடர்புடைய மற்ற விஞ்ஞானப் பிரிவுகள் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் ஏற்கெனவே கண்டுபிடிக்கப்பட்டுள்ளவற்றை அறிவதன் மீது பல நேரங்களில் ஆர்வம் காட்டாமலேயே பிராந்திய வளர்ச்சிப் பிரச்சினைகள் மற்றும் பிரதேசமயப்படுத்தல் ஆராய்ச்சிகளில் இறங்குகின்றனர்.

உதாரணமாக ''எதிர்கால வளங்கள்'' என்ற அமெரிக்க இணையத்தைச் சேர்ந்தவர்கள் உலகளாவிய பிராந்திய ஆராய்ச்சி நகலை உருவாக்கிய பொழுது, இதன் ஆசிரியர்கள் பிரதேசமயப்படுத்தல் கருத்தமைப்பைப் பகுப்பாய்வு செய்வதில் தமக்குள்ள சொந்த பலவீனத்தை நியாயப் படுத்துவது போல் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்: ''இவற்றை (பிரதே சங்களை) வெளிப்படுத்தி பகுப்பாய்வு செய்வதில் எவ்வித மாயையும் இல்லை, இவை சாதாரணமான, பொதுவான யதார்த்த புவியியல் இடப் பரப்புகள்; இவற்றின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்குத் தான் திட்டங்கள் தீட்டப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன.'' (*Design for a Worldwide Study*, 1966, p. 3.) உதாரணமாக ஆற்றுச் சமவெளிகள், விவசாய மண்டலங்கள், வர்த்தக மண்டலங்கள், தலை நாட்டுப் பகுதிகள், இன மற்றும் கலாசார பகுதிகள், பழங்குடியினர் வாழுமிடங்கள், சுயாட்சி நிர்வாகப் பிரதேச அலகுகள் போன்றவை வளர்ச்சிப் பிரதேசங்களாக முன்வைக்கப்படுகின்றன. பின்வரும் அம்சங் கள் பிரதேசங்களைப் பிரிப்பதற்கான அளவைகளாக கருதப்படுகின்றன: ''தேசப்படத்தில் புவியியல் ரீதியான இடத்தோடு சேர்த்து இரண்டு விஷயங்கள் முக்கியமானவை: பிராந்திய பிரச்சினைகளையும் உள்ளாற்ற லையும் உணர்ந்திருக்க வேண்டும், இப்பிரச்சினைகளைத் தீர்க்க ஏதாவது வாய்ப்பிருக்க வேண்டும்.'' (Ibid., p. 4.)

இவ்வாறு முன்மொழியப்படும் பிரதேசங்களின் ''வகைப்பாடு'' (இதற்கு ஐக்கிய கோட்பாடுகள் முறை எதுவுமில்லை) சாராம்சத்தில் ஒரு கதம்பமாகும். பின்வரும் பிரதேசங்கள் சுட்டிக் காட்டப்படு கின்றன:

1) ''ஒரேயொரு லட்சியத்தை'' உடைய பிரதேசங்கள். இவை ஒரு குறிப்பிட்ட இயற்கை வளம் தீவிரமாக வளர்ச்சியடையும் பிரதேசங்களாகும். பெரும்பாலும் நீர்ப்பாசனத்திற்காகப் பயன் படுத்தப்படும் ஆற்றுச் சமவெளி இதற்கு எடுத்துக்காட்டாய் கூறப் படுகிறது;

2) புதிய பிரதேசங்கள் — சாதாரணமாக மக்கள்தொகை குறை வான, இயற்கை வளம் மிக்க பகுதிகள். இவற்றின் வளங்கள் தீவிர மாகப் பயன்படுத்தப்படும், கனரகத் தொழிற்துறை தோற்றுவிக்கப் படும், புதிய நகரங்கள் நிர்மாணிக்கப்படும் (உதாரணமாக தென் அமெரிக்காவில் கியானா, எகிப்தில் அசுவான், இன்ன பிற);

3) மந்தமான பிரதேசங்கள் — ''பிரச்சினையிடங்கள்''; மொத்தமாக நாட்டில் உள்ளதை விட இங்கு வாழ்க்கைத் தரம் குறைவானதாயிருக் கும் (வட கிழக்கு பிரேசில், தெற்கு இத்தாலி, பங்களாதேஷில் கோமில்லா);

4) பெருநகர் பிரதேசங்களும் இவற்றின் உட்பகுதிகளும் (இந்தியா வில் கல்கத்தா நகரின் பிராந்திய வளர்ச்சித் திட்டம்; அருகிலுள்ள 4 மாநிலங்களும் இதிலடங்கும்);

5) பிராந்தியத் திட்டமிடலுக்காக நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள பொருளாதார பிரதேசங்கள், நிர்வாகப் பிரதேச அலகுகள்.

மேற்கூறிய பிரதேச வகைப்பாடு உலக புவியியல் சங்கம் நியமித்த பொருளாதார பிரதேசமயப்படுத்தல் கமிஷனின் பணிகளைக் கவனத்தில் கொள்ளவில்லை என்பது தெரிகிறது; ஐ. நா. சபையின் பல்வேறு பிரிவுகளும் மற்ற சர்வதேச ஸ்தாபனங்களும் ஆராயும் அதே பிரச்சினைகள் இங்கும் ஆராயப்படுகின்றன; பல்வேறு நாடுகளில் இது சம்பந்தமாக நடத்தப்படும் ஆராய்ச்சிகள் உரிய விதத்தில் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு போன்ற மேலைய நாடுகளில் ஸ்தல மட்டத்தில் பிரதேசமயப்படுத்தலின் நடைமுறை அம்சங்கள் மீது பெரும் கவனம் செலுத்தப்பட்டது; இது நகர, பிரதேசத் திட்ட நிறைவேற்றத்தின் பொழுது நடைபெற்ற பரவலான வேலைகளுடன் தொடர்புடையது. இத்துறையில் கணிசமான வெற்றிகள் அடையப்பட்டன, இவை கவனமாக ஆராயத் தக்கவை. ஆனால் பிரதேசமயப்படுத்தலின் தத்துவார்த்த அடிப்படை மேலைய விஞ்ஞானிகளின் கவனத்தைக் கவரவில்லை. இக்காலகட்டத்தின் குறிப்பிடத்தக்க சாதனை என்னவெனில், ஓரினத் தன்மையுடைய பிரதேசங்களைப் பற்றி முன்னர் மேற்கே பரவியிருந்த கருத்துகளுக்குப் பதில் பல்வேறு பாணிகளையுடைய செயற்பாட்டு பிரதேசங்களைப் பற்றிய கருத்துகள் வந்ததாகும். இக்கருத்துகள் வளர்ச்சித் துருவங்கள் மற்றும் துருவ பொருளாதார வளர்ச்சி பற்றிய பொருளாதாரக் கருத்தமைப்புகளுடன் நேரடியாகத் தொடர்புடையவை.

பிரதேசமயப்படுத்தல் சம்பந்தமான வரைபடங்கள் புறவய உலகின் அகவயப் பிரதிபலிப்பாகும்.

இதுதான் சோவியத் புவியியலர்கள், பொருளாதார நிபுணர்கள், மக்கள்தொகை வல்லுனர்கள், சமூகவியலர்கள் மற்ற பிராந்திய நிபுணர்களின் அடிப்படைக் கருத்தாகும். பிரதேசம் என்பது நம் உணர்விற்கு வெளியே புறவய ரீதியில் நிலவும் யதார்த்தமாகும். இப்பிரதேசங்களை அறிந்து வெளிப்படுத்தி வரம்பிட்டு சுட்டிக் காட்டுவதுதான் விஞ்ஞான ஆராய்ச்சியின் லட்சியம். நம்மால் இப்பிரதேசங்களை அறிய முடியும், அறிந்ததும் நிர்வகிக்க முடியும், ஆனால் இவற்றைத் ''தள்ளியொதுக்கவோ'', ''புதிதாக கண்டுபிடிக்கவோ'' நம்மால் முடியாது. நிர்வகிப்பு மற்றும் பிராந்தியத் திட்டமிடலின் செயல்வன்மை, புறவய ரீதியில் நிலவும் பிரதேசங்களையும் இவற்றின் வளர்ச்சி விதிகளையும் அறிவதைப் பொறுத்துள்ளது. பிராந்திய வளர்ச்சியின் நிர்வகிப்பில் அகவய அணுகுமுறை அனுமதிக்கப்பட்ட ஒவ்வொரு முறையும் விளைவுகள் உகந்தவையாக இல்லை. பிரதேசங்கள் புறவய ரீதியாக நிலவுவதை அங்கீகரிப்பதில்தான் சோவியத் புவியியலர்கள், சோஷலிசமல்லா மற்ற

நாடுகளின் சில விஞ்ஞானிகளிடமிருந்து கருத்து மாறுபடுகின்றனர்.

பிரதேசங்கள் புறவய ரீதியாக நிலவுவதை ஒப்புக் கொள்வதானது, ஆராய்ச்சி நோக்கங்களுக்காகவும் திட்டமிடலுக்காகவும் நிர்வாகத்திற்காகவும் பிரதேசமயப்படுத்தல் வலை முறையைப் பயன்படுத்துவதை மறுக்கவில்லை, மாறாக இதனுடன் இணைந்து செயல்படுகிறது. இந்த வகையான பிரதேசமயப்படுத்தல்கள் ஒன்றுடன் ஒன்று எவ்வளவு நெருங்கியுள்ளனவோ, எவ்வளவுக்கெவ்வளவு ஆழமாக இவை புறவய யதார்த்தத்தைப் பிரதிபலிக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு பிராந்தியத் திட்டமிடலின் விஞ்ஞானத் தேட்டம் பயன் மிக்கதாய் இருக்கும்.

சோவியத் விஞ்ஞானத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட இக்கருத்துநிலைகள், பிராந்திய ஆராய்ச்சிகளை நடத்தும் போது எதிர்ப்படும் பெரும் சிக்கல்களையும் இயக்கவியல் முரண்பாடுகளையும் தீர்க்கவில்லை அல்லது இவற்றை இலகுவாக்கவில்லை. பிரதேசமயப்படுத்தலின் வகைமுறைகள் மாற்றமடைகின்றன, பல நேரங்களில் இம்மாறுதல்கள் பெரிதும் கணிசமானவை. புறவய யதார்த்தத்தைப் பற்றிய அறிதல் ஆழமடையும் நிகழ்ச்சிப் போக்கில் இது நடைபெறுகிறது; தவிரவும் யதார்த்தம் மாறி வருகிறது, அதுவும் விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் சகாப்தத்தில் இது வேகமாக நடைபெறுகிறது.

பிரதேசமயப்படுத்தலைப் பற்றிய நவீன கருத்தமைப்புகள் வகைமுறை அணுகுமுறையின் அடிப்படையிலானவை. நாட்டின் ஒவ்வொரு பகுதியையும் தனித்தனியே பார்க்கக் கூடாது. இவற்றை தேசியப் பொருளாதாரம் முழுவதன் அங்கங்களாகப் பார்க்க வேண்டும்.

பிரதேசம் என்பது இடஞ்சார்ந்த அமைப்பாகும். இதில் அடங்கியுள்ள அம்சங்கள் குறிப்பிட்ட இடத்தில் உள்ளன, இங்கே இந்த அமைப்பின் செயற்பாடு இடஞ்சார்ந்த உறவுகளைப் பொறுத்தது. இந்த அமைப்பில் இதன் அம்சங்களும் உறவுகளும் குறிப்பிட்ட இடத்தில் இரு பொருளற்று அமைகின்றன (அதாவது இவை ஸ்தலமயப்படுத்தப்பட்டு வரம்பிடப்பட்டு, வரைபடத்தில் இடம் பெற வேண்டும்).

பிரதேசம் என்பது ஒரு பன்முக அமைப்பாகும். இதில் மனிதன் ஏராளமான விஷயங்களையும், மக்கள்தொகை பரப்பு முறை, உள் கட்டமைப்பு முறை போன்ற உறவுமுறைகளையும் சந்திக்கிறான்.

பிரதேசம் என்பது ஒரு திறந்த அமைப்பாகும், இதற்கு சுற்றியுள்ளவற்றுடன் ஏராளமான பரஸ்பரத் தொடர்புகள் உண்டு. எனவேதான் இதற்கு வரம்பிடுவது மிகவும் சிக்கலானது, இதற்கு பல அளவுகோல்கள் உண்டு. பிரதேசங்களின் எல்லைகளை வரையறுப்பதை விட உட்கருவை வரையறுப்பது எளிது; எல்லைகளை வரையறுக்கும் பொழுது பல நேரங்களில் ஏராளமான கருத்து வேறுபாடுகள் தோன்றுகின்றன. உள் தொடர்புகளை மட்டுமின்றி பிரதேசங்களுக்கு இடையிலான தொடர்புகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

உற்பத்தி, மற்ற வாழ்க்கை நடவடிக்கைகளின் மூலம் இயற்கைக்கும்

சமுதாயத்திற்கும் இடையிலான பரஸ்பரத் தொடர்பின் சாரத்தின் அடிப்படையில் மூன்று முக்கிய பிராந்திய பல் அமைப்பு முறைகளைச் சுட்டிக் காட்டலாம்: இயற்கை வள-புறச்சூழல் முறை, மக்கள்தொகை-சமூக-மானுடவியல் முறை, உற்பத்தி-பொருளாதார முறை. இச்சிக்க லான முறைகளினுள் ஏராளமான உட்பிரிவுகள் உண்டு. அதே சமயம் இவை இன்னமும் சிக்கலான சமூக பொருளாதார, புறச்சூழல் பொருளா தார பிரதேசங்களின் முறைகளை ஏற்படுத்துகின்றன; சமூக புறச்சூழல் பொருளாதார பிரதேசங்களைப் பற்றியும் இப்போது அடிக்கடி குறிப் பிடுகின்றனர்.

இந்த பிராந்திய பல் அமைப்பு முறைகளுக்கு வளர்ச்சி நியதிகள் வெவ்வேறானவை, இவற்றின் பரிணாம வளர்ச்சி வெவ்வேறு நேரங் களில் நடைபெறுகிறது, இதனால் இவற்றின் இடையே தவிர்க்க இயலா முரண்பாடுகள் தோன்றுகின்றன. எனவே இயற்கை வள-புறச்சூழல் பிராந்திய முறை, சமூக-மக்கள்தொகை மற்றும் உற்பத்தி-பொருளா தார பிராந்திய முறைகள் ஆகியவற்றை மதிப்பிடுவதும் ஒப்பிடுவதும் மிக அவசியம். இவற்றைப் பற்றிய ஆழ்ந்த ஆராய்ச்சியும் இவற்றிற்கு இடையிலான சீரிசைவின்மைகளை வெளிப்படுத்துவதும் கட்டுப்பாட்டுக் குட்பட்ட பிராந்திய வளர்ச்சிப் போக்கைப் புரிந்து கொள்ளவும் ஆதாரப்படுத்தவும் உதவும். இந்த முறைகளில் மிக சீரிசைவான, நன்கு நிர்வகிக்கத் தக்க முறை சமூக பொருளாதார முறையாகும்; இது ஒரு சில சந்தர்ப்பங்களில் பரஸ்பரத் தொடர்புகளில் உள்ள முரண்பாடுகளை அகற்ற வல்லது, மற்ற சந்தர்ப்பங்களில் இவற்றைத் தேக்கி வைத்து கூர்மைப்படுத்தக் கூடியது.

அறிதலில் உள்ள இடர்ப்பாடுகளை மிகைப்படுத்தி, அறிய முடியாது என்ற நிலைக்கு மாற வேண்டியதில்லை. தத்துவம் சரியானதா என்று சோதித்துப் பார்க்க சரியான அளவுகோல் நடைமுறையாகும். பிராந் திய அம்சமென்பது புவியியல் மேலுறையின் (புவியியல் இடப் பரப்பின்) கட்டமைப்பு தன்மையின் வெளிப்பாடாகும். புவியியல் இடப் பரப்பு பல்வேறானதாய் இருப்பதால் பல்வேறு வகையான பிரதேசமயப்படுத் தல்கள் நிலவுகின்றன.

திட்டங்களின் பெரிய அளவு, கோடானு கோடி நபர்களடங்கிய உழைப்புப் படையை அணி திரட்ட வேண்டியதன் அவசியம், ஸ்தாபன அமைப்பு மற்றும் தொழில்நுட்பச் சிக்கல், செயல்திட்டங்களை நிறை வேற்றத் தேவைப்படும் நீண்ட காலகட்டம் ஆகியவற்றின் காரணமாய், இயற்கை வளங்களை விவேகமாகப் பயன்படுத்தும் பிரச்சினை, புறச் சூழல் பாதுகாப்பு, இயற்கை வள புனரமைப்பு ஆகியவற்றிற்கு அரசு அளவில் மட்டுமே தீர்வு காண முடியும். இதன் தொடர்பில் பன்முக புறச்சூழல், பொருளாதார வளர்ச்சித் திட்டத்திற்கு விஞ்ஞானத் தன்மையை அளிக்க வேண்டியதன் முக்கியத்துவம் அதிகரிக்கிறது.

உதாரணமாக இந்தியாவில் — மற்ற வளர்முக நாடுகளைப் போன்றே

—புனர்நாட்டவல்ல இயற்கை வளங்களைப் பயன்படுத்தும் கோட் பாடுகள் பிராந்திய அடிப்படையில் உருவாக்கப்படவில்லை என்பதை இந்திய விஞ்ஞானிகள் சுட்டிக் காட்டுகின்றனர். இவ்வளங்களை ஒத் திசைவித்துப் பயன்படுத்தும் தேவை — குறிப்பாக புறச்சூழல் நெருக்கடி அதிகரித்து வரும் பொழுது, தனிப்பட்ட சில பிரதேசங்களில் சில வளங் கள் தீர்ந்து வரும் பொழுது — பெரிதும் முன்நின்றது வெள்ளிடை மலை.

இந்தியாவில் 6ஆவது ஐந்தாண்டு திட்டத்தில் **புறச்சூழல்** என்ற விசேஷ பிரிவு சேர்க்கப்பட்டது. இதில் புறச்சூழல் நெருக்கடி அதிகரித்து வருவதைப் பற்றிய யதார்த்த மதிப்பீடு தரப்பட்டுள்ளது, இத்துறையில் முக்கிய விஞ்ஞான ஆராய்ச்சிக் கடமைகள் சுட்டிக் காட்டப்படுகின்றன. ''புறச்சூழலைத் திட்டமிடலின் ஒரு தனிப்பட்ட துறை என்று கருதக் கூடாது. இது ஒவ்வொரு துறையிலும் உள்ள வளர்ச்சித் திட்டங்களின் முக்கிய, தீர்மானகரமான அளவுகோலாகும்'' என்று கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. ''இது வரை புறச்சூழலை மேம்படுத்தும் முயற்சிகள் தனித்தனியே தொடர்பற்று மேற்கொள்ளப்பட்டன, ஏதாவதொரு அம்சத்தின் மீது மட்டும் (உதாரணமாய் போக்குவரத்து, தண்ணீர் சப்ளை, மின் உற்பத்தி, இதரவை) கவனம் செலுத்தப்பட்டது, குடியிருப் பிடங்களும் இவற்றின் செயற்பாடும் சீரிசைவான, அங்கக ரீதியில் முழுமையானவையாகப் பார்க்கப்படவில்லை. இன்று புறச்சூழல் ரீதியில் விவேகமான திட்டமிடலுக்கும் குடியிருப்பிடங்களின் வளர்ச்சிக்கும் தீவிரமான, ஒத்திசைவிப்பான முயற்சிகள் தேவைப்படுகின்றன.''

இந்தியாவில் பின்தங்கிய பிரதேசங்களின் (இவற்றில் மலைப் பகுதி களும் வறண்ட நிலப் பகுதிகளும் அடங்கும்) வளர்ச்சித் திட்டங்கள், பாசன வசதி பெறும் பகுதிகளுக்கான விசேஷ திட்டங்கள், பன்முக விவசாய வளர்ச்சித் திட்டங்கள் போன்ற ஏராளமான பிராந்திய வளர்ச்சித் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. இவற்றில் சிலவற்றில் புறச்சூழல் அம்சங்களும் அடங்கும். ஆனால் மொத்தத்தில் ஒரு புறம் இத்திட்டங்கள் பரஸ்பரத் தொடர்பின்றி ஒரே அம்சத்தைப் பற்றியவை யாக உள்ளன, மறு புறமோ பரஸ்பரத் தொடர்புடைய பிராந்திய வளர்ச்சிப் பிரச்சினைகளின் தீர்வின் பால் போதுமான அளவு பன்முக அணுகுமுறை காட்டப்படவில்லை. சாதாரணமாக புறச்சூழல் மோச மடைவதில் மானுடக் காரணிகளின் சமூக அடிப்படை உரிய விதத்தில் கவனத்தில் கொள்ளப்படவில்லை. இச்செயல்திட்டங்களின் நிறைவேற் றத்தில் உள்ள நிறுவன முறையும் இவற்றின் விஞ்ஞான அடிப்படையும் திருப்திகரமாக இல்லை.

பன்முக பிராந்திய வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டும் பொழுது மட்டும் கூட்டு அணுகுமுறை அவசியமல்ல. விசேஷ பொருளாதார, சமூக, புறச்சூழல் (உதாரணமாக பாலை நிலம் உருவாவதற்கு எதிரான போராட்டம்) திட்டங்களைத் தீட்டும் பொழுதும் இந்த அணுகுமுறை அவசியம். மானுட-இயற்கை நிகழ்ச்சிப் போக்குகளின் சாரம், வளர்ச்சி

யின் புறச்சூழல் மற்றும் பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகளுக்கு இடையிலான பிரிக்க இயலா தொடர்பு, சமூகக் காரணிகள், அரசியல் அமைப்பு, சமுதாயத்தின் மதிப்புகள் போன்றவற்றுடன் இவற்றிற்கு உள்ள நெருங்கிய சார்பு நிலை ஆகியவையே ஆராய்சிகளுக்கும் திட்டமிடலுக்கும் இடையிலான இணைப்பிற்குக் கட்டளையிடுகின்றன.

பொருளாதார வளர்ச்சி மற்றும் இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதில் மனிதகுலம் இடப் பரப்பு பாதையை ஏற்கெனவே அனேகமாக கடந்து வந்து விட்டது. ஆனால் இயற்கையைப் பயன்படுத்துவதைத் தீவிரப்படுத்துவதற்கு முக்கியத்துவம் தரும் அதே சமயம், இதன் உலகளாவிய மற்றும் பிராந்திய மட்டுப்பாட்டையும் கவனத்தில் கொள்ள வேண்டும்; ஏனெனில் உயிரியல் மண்டலம் நடைமுறையில் மூடிய தன்மையைப் பெற்றிருப்பதன் காரணமாய், ஒரு சில பகுதிகளில் பொருளாதாரத்தைத் தீவிரப்படுத்தும் பொழுது அது வேறிடங்களில் இயற்கை வள வாய்ப்புகள் மோசமடைய வழிகோலும், இதனால் அந்த இடங்களில் இடப் பரப்பு முறைகள் மட்டுமே பயன்படும். பூமி முழுவதையும் தீவிர பொருளாதாரத்தின் கீழ் கொண்டு வருவதென்பது இயலாதது; இதனால் உலகம் பூராவும் பாலைநிலமாகும் அபாயம் உள்ளது.

உற்பத்தியைத் தீவிரப்படுத்துவது, இயற்கையை விவேகமாகப் பயன்படுத்துவது (இயற்கைப் பாதுகாப்பையும் சேர்த்து) — இதுதான் புதிய, நவீன வகையான புறச்சூழல் பொருளாதார வளர்ச்சியாகும். இன்று சமுதாயத்திற்கும் இயற்கைக்கும் இடையிலான பரஸ்பரச் செயலாக்கத்தில் கடும் முரண்பாடுகள் தோன்றியுள்ள சகாப்தத்தில் மனிதகுலம் அடியெடுத்து வைக்கிறது; இச்சூழ்நிலையில் மனித நாகரிகம் நிலவவும் வளர்ச்சியடையவும் மேற்கூறியவை நிபந்தனைகளாகும்.

''மனிதன் இயற்கையால்தான் உயிர் வாழுகிறான். அதாவது இயற்கை என்பது மனிதனின் உடலாகும். இயற்கையுடன் இடையறாது கலந்து பழகும் பொழுது உயிர் வாழ வேண்டுமெனில் இந்த உடல் அவசியம்'' என்று கா. மார்க்ஸ் எழுதினார். இந்த ''கலந்து பழகுதல்'' என்பது உழைப்பில் முக்கியமாக வெளிப்படுகிறது என்பது தெரிந்ததே. உழைப்பென்னும் நிகழ்ச்சிப் போக்கில்தான் மனிதன் தன் சொந்த நடவடிக்கையால் தனக்கும் இயற்கைக்கும் இடையிலான பொருள் பரிவர்த்தனைக்கு வழியமைத்து, இதை ஒழுங்குபடுத்தி கண்காணிக்கிறான்.

இயற்கைக்கும் சமுதாயத்திற்கும் இடையிலான பரஸ்பரச் செயலாக்கத்தில் இயற்கையின் உள்ளாற்றல் பெரும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிறது; நாகரிக வளர்ச்சிக்கான முக்கிய வாய்ப்புகள் சமுதாயத்தினுள், இதை சோஷலிச, திட்ட, விஞ்ஞான அடிப்படையில் மாற்றியமைப்பதில் அடங்கியுள்ளன என்னும் கருத்து மேன்மேலும் அதிகமாக நியாயமானதாகப்படுகிறது. இவ்வாறு மாற்றியமைப்பதன் முக்கிய அம்சம் விஞ்ஞான அடிப்படையிலான பிராந்தியத் திட்டமிடலும் வளர்ச்சியுமாகும், ஏனெனில் திட்டவட்டமான நாடுகளிலும் பிரதேசங்களிலும் பிறக்கும்

உலக நிகழ்ச்சிப் போக்குகள் தம் சாராம்சத்தில் பிராந்தியத் தன்மையை உடையவையாகும்.

புனர்நாட்டவல்ல இயற்கை வளங்களைச் சீரமைக்கும் போக்குகள் மனித நடவடிக்கையால் சீர்குலைவது, இயற்கையமைப்புகள் பாழ்படுவது, பெருமளவில் காடுகள் மறைவது, பாலை நிலம் உருவாவது— இந்த ஆபத்தான போக்குகள் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் உலகம் முழுவதும் பரவின, இவை வளர்முக நாடுகளில் குறிப்பாக வெளிப்பட்டன.

இயற்கை வளங்கள் (முதலில் நிலம், நீர்வளம், உயிரினப் பொருண்மை) எவ்வளவு குலைக்கப்பட்டுள்ளன என்பதானது இயற்கையைப் பயன்படுத்துவதன் வர்க்கத் தன்மையையும் இயற்கைச் செல்வங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதன் சிறப்பியல்புகளையும் காட்டுகிறது. ''புறச்சூழல் பிரச்சினைகளைத் தீர்க்க சமுதாயத்திற்கு உள்ள வாய்ப்புகளின் மீது தொழில்நுட்ப அம்சங்களை விட அரசியல் மற்றும் பொருளாதாரக் காரணிகள் அதிகத் தாக்கம் செலுத்துகின்றன; இவற்றில் பல வளர்ச்சியடைந்த நாடுகளிலுள்ள தேவைகளின் கட்டமைப்பாலும் வளர்முக நாடுகளுடன் இவற்றிற்கு உள்ள உறவுகளாலும் தோற்றுவிக்கப்பட்டவையாகும்.'' (Redclift, 1984, p. 20.) ''சமூக'' அம்சங்களுக்கும் ''இயற்கை'' அம்சங்களுக்கும் இடையிலான எல்லைகள் முழுமையாகத் தெளிவாகவில்லை. உதாரணமாக சமூக அம்சங்கள், சமுதாயமானது இயற்கைச் சீற்றங்களுக்கு ஆளாவதை — இச்சீற்றங்களை முன்னறிவித்து, இவற்றைச் சமாளிக்கத் தயார்படுத்தி, இவற்றின் பின்விளைவுகளை அகற்றும் நடவடிக்கைகளின் செயல்வன்மையைப் பெருமளவில் நிர்ணயிக்கின்றன. மொத்த தேசிய உற்பத்திப் பொருள் என்பது வெறுமனே வளர்ச்சியைக் காட்டும் குறியீடு மட்டுமல்ல, இது இயற்கை வளம் எப்படி அழிந்துள்ளது, புறச்சூழல் எப்படி மோசமடைந்துள்ளது என்பதையும் காட்டுகிறது; பொருளாதாரம் எவ்வளவுக்கெவ்வளவு வலிமையாக உள்ளதோ அவ்வளவுக்கவ்வளவு அது அழிக்கிறது, பொருளாதாரத்தைப் பேணிக் காக்க அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும். பிராந்திய சாராம்சத்தை உடைய இந்த உலகப் பிரச்சினைகளை புவியியலர்கள் தீவிரமாக ஆராய்ந்து, இவற்றின் தீர்விற்கு உதவ வேண்டும். இப்பிரச்சினைகளுக்கு நவீன புவியியல் ஆராய்ச்சிகளில் அனேகமாக முதலிடம் தர வேண்டும்.

நேரம் என்பது மிக முக்கியமானதொரு அம்சமாகும். இயற்கைச் சீரழிவின் அளவுகளையும் கட்டங்களையும் ஆராயும் பொழுது, திருத்த இயலா நிலை நெருங்கி வருவதை எச்சரித்து, இது நடைபெறாமல் தடுப்பதன் மீது முக்கியக் கவனம் செலுத்துவது அவசியமாகும். எனவே இதற்கான முறையியலை உருவாக்குவதும் இவ்வாறு திருத்த இயலா நிலையை அடையும் பிரதேசங்களின் பட்டியலைத் தயாரிப்பதும் முக்கியக் கடமைகளாகும்.

அத்தியாயம் ஐந்து

பிராந்தியத் திட்டங்கள்: மாயைகளும் யதார்த்தமும்

1. ''சாத்தியம் என்ற கலை'' அல்லது திட்டமற்ற பொருளாதாரத்தைத் திட்டமிடல்

விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியின் சகாப்தத்தில் முதலாளித்துவ நாடுகளில் ''பிரச்சினைப்'' பிரதேசங்களின் எண்ணிக்கையும் வகைகளும் பெரிதும் கூடியுள்ளன. 1950ஆம் ஆண்டுகளில் பிராந்தியத் திட்டமிடல் ஆரம்பமாகிய காலத்தில் இந்நாடுகளில் எல்லையோர பிரதேசங்கள், விவசாய பிரதேசங்கள் போன்றவற்றைப் பற்றி பேசப்பட்டது. 1970-80ஆம் ஆண்டுகளில் நிலவரம் மாறியது. இட ஒழுங்கமைப்பு பற்றிய ஐரோப்பிய மகாநாட்டில் (1978, வியன்னா) ''பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் இரண்டாவது ஐரோப்பா'' என்றொரு பயங்கர வரையறுப்பு தோன்றியது.

''இரண்டாவது ஐரோப்பா'' என்பதில் பல ''புதிய'' பிரச்சினைக்குரிய பிரதேசங்கள் அடங்கும். இப்பிரதேசங்கள் பொருளாதார ரீதியாக அதிகபட்ச வளர்ச்சியடைந்த நாடுகளில் கூட மேன்மேலும் பரவி வருகின்றன. இவற்றில் பின்வருபவை அடங்கும்:

—நிரந்தர நெருக்கடி மையங்களாகியுள்ள பழைய தொழிற்துறை பிரதேசங்கள் (வடக்கு பிரான்ஸ், தெற்கு பெல்ஜியம், பிரிட்டனில் உள்ள மிட்லேன்ட், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் உள்ள ரூர்);

—பெரும் நகரத் திரட்டுகள் உள்ள பிரதேசங்கள், இங்கு வாழ்க்கை மற்றும் உழைப்புச் சூழ்நிலைகள் கணிசமாக மோசமடைந்துள்ளன;

—புறச்சூழல் நோக்கில் முக்கியமான பிரதேசங்கள்;

—சுற்றுலாப் பயணப் பிரதேசங்கள், இவை ஒருதலைப்பட்சமாயும் குறிப்பிட்ட பருவக் காலங்களில் மட்டும் பயன்படுத்தப்படுகின்றன;

—கடினமான வாழ்க்கை மற்றும் உழைப்புச் சூழ்நிலையை உடைய மலைப்பாங்கான பிரதேசங்கள்;

—சிறுபான்மையினர் (பாஸ்க் இனத்தவர், பிரெட்டன் இனத்தவர், கோர்சிக்கன் இனத்தவர்) வாழும் பிரதேசங்கள்; இவை பதட்ட நிலையின் பிறப்பிடங்கள், இங்கு ''வளர்ச்சி பெரிதும் தேவைப்படுகிறது'' என்று மகாநாட்டில் குறிப்பிடப்பட்டது.

ஆக, பழைய தொழிற்துறை மையங்கள் ''பிரச்சினைப்'' பிரதேசங்

களாகி வருகின்றன. இது ஒரு உலகந் தழுவிய நிகழ்ச்சிப் போக்காகும். ஏனெனில் அமெரிக்காவில் அப்பலாச் பிரதேசமும் (நிலக்கரி எடுப்பு, உலோகத் துறை), கானடாவில் உள்ள க்வெபெக்கும் (இரும்புத் தாது தொழிற்துறை), மேற்கு ஐரோப்பாவின் பழைய தொழிற்துறை பிர தேசங்களும் (இதில் கிரேட் பிரிட்டனில் உள்ள நிலவரம் குறிப்பிடத் தக்கது) இத்தகைய பாதிப்பிற்கு உள்ளாகின்றன. ஒரு பிரதேசத்தின் உள்ளே புதிய துறைகளுக்கும் பழைய துறைகளுக்கும் இடையிலான விகிதம் இப்பிரதேசத்தின் ஒப்பீட்டளவு ஸ்திர நிலைக்கு அல்லது இது நெருக்கடியால் பாதிக்கப்படுவதற்கு ஒரு மிக முக்கியக் காரணியாகி யது, எந்த ஒரு கணிப்பிற்கும் முக்கியமான அடிப்படையாகியது.

விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியால் தோன்றும் புதிய துறை களும் சமமான பிரதேச வளர்ச்சிக்கு வழிகோலவில்லை; இப்புதிய துறைகளைக் குறிப்பிட்ட இடத்தில் ஏற்படுத்தும் முன் பல அம் சங்களைக் கணக்கில் கொள்ள வேண்டும், இவை பல நேரங்களில் ஒரு பிரதேசத்தின் பொதுத் தன்மையில் உள்ள முரண்பாடுகளை வலுப்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக எண்ணெய் இரசாயனத் துறை, ஏற்கெனவே உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு மையங்களில்தான் சாதாரணமாகத் தோற்றுவிக்கப்படுகிறது; இதனால் தொழிற்துறையின் குவிப்பு வலுக்கிறது, புறச்சூழல் அசுத்தமடைவது அதிகரிக்கிறது. உதாரணமாக ''ரைன் வட்டத்தில்'' பல எண்ணெய் குழாய்களும் எண்ணெய் சுத்திகரிப்பாலைகளும் உள்ளன; இப்பகுதி ஜெர்மன் சமஷ்டிக் குடியரசின் இரசாயனத் தொழிற்துறையின் புதிய மையமாகியுள்ளது, இங்குதான் இத்தொழிற்துறையின் 70% உள்ளது. அணு மின்நிலையங் கள் மின்சக்தி அதிகமாகப் பயன்படுத்தப்படும் இடங்களையொட்டி உள்ளன. மின்னணுத் துறை சிறு நகரங்களிலும் வளரக் கூடுமென்றா லும் இத்துறையின் தலைமை நிறுவனங்கள் விஞ்ஞான ஆராய்ச்சி, கல்வி மையங்களை நோக்கி ஈர்க்கப்படுகின்றன.

பெரும் நகரத் திரட்டுகளின் பிரதேசங்கள் தொழில் நிறுவனங்களும் உள் கட்டமைப்பும் மிகுந்த இடங்களாகியுள்ளன. இத்தகைய திரட்டு களின் பொருளாதார மற்றும் சமூக அனுகூலங்கள் எப்போதோ தீர்ந்து விட்டன என்றாலும் இவற்றின் மீதான நிர்ப்பந்தம் அடிக்கடி தொடர்ந்து அதிகரிக்கிறது. மேற்கு ஐரோப்பாவில் உள்ள பொருளா தார ரீதியாக வளர்ச்சியடைந்த நாடுகளிலும் ஜப்பானிலும் தீட்டப் படும் எல்லா பிராந்தியத் திட்டங்களிலும் பெரும் நகரத் திரட்டுகளின் மீதான ''சுமையைக்'' குறைக்கும் அம்சம் அடங்கியுள்ளது. இதன்படி ஆதிக்கம் செலுத்தும் தலைநகரப் பிரதேசத்திற்கு மாற்றாக ''பிராந் திய மையங்கள்'' வளர்க்கப்படுகின்றன (பிரான்ஸ்), அல்லது புதிய நகரங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன (கிரேட் பிரிட்டன்).

சுற்றுலாப் பயணப் பிரதேசங்களின் பிரச்சினைகள் பல்வேறானவை, சிக்கலானவை. மிகப் பெருமளவிலான சுற்றுலாப் பயணங்கள், ஓய்வைப்

பற்றி இங்கே குறிப்பிடப்படுகிறது; இவை பழைய கட்டமைப்புகளை வேரோடு பிடுங்கி அவற்றிற்குப் பதில் அவ்வளவு நல்லதல்லாத கட்டமைப்புகளைக் கொண்டு வருகின்றன; புறச்சூழலின் மீதான மிகப் பெரிய பருவக் கால சுமையைப் பற்றியும் இங்கே குறிப்பிடப்படுகிறது. மத்திய தரைக் கடலோரத்தில் மட்டும் ஆண்டுதோறும் 50 மில்லியனுக்கும் மேற்பட்டோர் ஓய்வெடுக்கின்றனர். ஆல்ப்ஸ் மலைகளில் மனிதனின் கால்கள் படாத இடமே இல்லையென்ற அளவிற்கு இங்கு மக்கள் வந்து சென்றுள்ளனர். 1965இல் ஆஸ்திரியாவில் ஆல்ப்ஸ் மலைகளில் 350 கயிற்றுக் கம்பிப் பாதைகளும் எலிவேட்டர்களும் இருந்தன என்றால் இன்று இவற்றின் எண்ணிக்கை 3,700 வரை உயர்ந்துள்ளது. மலைகளில் எல்லா இடங்களிலும் ஹோட்டல்களும் உணவு விடுதிகளும் விளையாட்டு முகாம்களும் உள்ளன. ஸ்விட்சர்லாந்தில் இது புதிய ஒரு தலைப்பட்சக் கட்டமைப்புகளுக்கு இட்டுச் செல்கிறது, ஏனெனில் பல இடங்களில் சேவைத் துறையில் சுற்றுலாத் துறை மேலோங்கியுள்ளது: மொத்தமாக வேலை செய்பவர்களில் த்செர்மாத் பகுதியில் 50% மும், லவுட்டெர்புரூனெனில் 47% மும் சுற்றுலாத் துறையுடன் தொடர்புடையவர்கள்.

''வட கடலில் வெள்ளத்தை விட ஒரு நீச்சல் காலம் அதிக இழப்பை ஏற்படுத்தும்'' என்று 1950ஆம் ஆண்டுகளின் இறுதியிலேயே மேற்கு ஜெர்மனி விஞ்ஞானி கே. பியூலவ் எழுதினார்; 1980க்களில் நடப்பதைப் போல் பெருமளவு ஓய்வு பரவாதிருந்த காலத்தின் நிலை இது.

''வெறிச்சோடும் மண்டலங்கள்'' என்ற கருத்து பிரான்சில் பரவியுள்ளது. இவை ''வளர்ச்சியடைந்த நாடுகளின் உள்ளேயுள்ள வளர்முக நாடுகளின் பிரச்சினைகளைக் கொண்ட'' உள் காலனிகளாகும்; இங்கே தொழிற்துறை கலைகிறது, சமூக அரிப்பு நடைபெறுகிறது, மக்கள் தம் சொந்த இடங்களை விட்டு ஓடுகின்றனர். இந்நிகழ்ச்சிப் போக்குகள், ''பொதுச் சந்தையின்'' எல்லையோர பிரதேசங்களில், குறிப்பாக சிறுபான்மையினர் வாழும் பிரதேசங்களை ஒட்டியுள்ள இடங்களில் அதிகமாக நடைபெறுகின்றன. பொதுச் சந்தையின் வடக்கில் ஓல்ஸ்டெரும் தெற்கில் கோர்சிக்காவும் இதற்குத் தக்க எடுத்துக்காட்டுகளாகும்.

பிரெஞ்சு மாநிலங்களில் கோர்சிக்கா தீவுதான் போக்குவரத்து, பொருளாதார, மொழி ரீதியில் அதிகபட்சம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது, இது எல்லாவற்றிலும் வெளிப்படுகிறது. இதன் காரணமாக பழையவை எல்லாம் அப்படியே மாற்றமின்றி இருந்தன, இங்கே விவசாயத் துறை சென்ற நூற்றாண்டின் கடைசிப் பகுதியிலிருந்த நிலையிலேயே தேக்கமடைந்தது. சிறு பழத் தோட்டங்கள், ஆட்டு வளர்ப்பு போன்ற பாரம்பரிய சிறு பண்ணைகள்தான் (10 ஹெக்டேருக்கும் குறைந்த நிலப்பரப்பு) இங்கு மேலோங்கியுள்ளன. ஆட்டுப் பாலும் (இதில் ''ரோக்ஃபோர்'' ஏகபோகம் செலுத்துகிறது) மதுபான

மும் (திராட்சை ரசம்) இத்தீவின் பண்டங்களாகும். கோர்சிக்காவின் ஏற்றுமதி, இதன் இறக்குமதிச் செலவில் $^{1}/_{10}$ பகுதியை மட்டுமே ஈடு செய்கிறது; கண்டப் பகுதியில் உள்ளதை விட இங்கு வாழ்க்கைச் செலவுகள் அதிகமானவை, வாழ்க்கைத் தரம் மும்மடங்கு குறைவானது. இன்று கோர்சிக்கா தீவில் உள்ளதை விட இதற்கு வெளியே 4 மடங்கு அதிகமாக கோர்சிக்கா வாசிகள் உள்ளனர். நூறாண்டுகளுக்கு முன்னிருந்ததை விட 1980இல் இத்தீவில் குறைவானவர்களே வாழ்ந்தனர்....

இப்பிரச்சினைகள் அனைத்திற்கும் தெட்டத்தெளிவான சமூக, புறச் சூழல், அரசியல் தன்மை உண்டு என்பதைக் காண்பது எளிது. பிராந்தியத் திட்டமிடலிலும் இவற்றைப் புறக்கணிக்கக் கூடாது.

சாதாரண பொருளாதாரத் தீர்வுகள் மட்டும் வாழ்க்கைக்குப் போதா; சமூகப் பின்னணியையும் கணக்கில் கொள்ள வேண்டும், சமூக, புறச்சூழல் திசையமைவுகள் தேவை, பிராந்தியத் திட்டமிடலின் பால் புதிய, அதிகப் பரவலான அணுகுமுறை அவசியம். பிராந்தியக் கொள்கையை முடிவு செய்பவர்கள் இவற்றை உணருகின்றனர்.

அரசு ஏகபோக பிராந்தியக் கொள்கைக்குத் தெட்டத்தெளிவான வர்க்கத் தன்மை உண்டு, இது ''வெடிப்பபாயம் மிக்க'' பிரதேசங்களில் மோதல்களையும் சமூகப் பதட்டத்தையும் தணிக்கப் பார்க்கிறது. சமூக அம்சத்தைப் புறக்கணிக்க முடியாது, இது பல்வேறு பிராந்தியத் திட்டங்களில் மிக முக்கியமானதாகி வருகிறது. மேற்கு ஐரோப்பாவில் வேலையில்லாத் திண்டாட்டம் நிலவும் இடங்களும் ''பிரச்சினைக்குரிய பிரதேசங்களும்'' கிட்டத்தட்ட முழுக்க முழுக்க ஒத்துப் போகின்றன; இப்பிரதேசங்களின் பிரச்சினைகள் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள போதிலும் நிலைமை மேம்படவில்லை.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய ஆண்டுகளில் இந்த சமூகக் கடமைகள் அடைந்த மாற்றங்கள் குறிப்பிடத் தக்கவை. 1950ஆம் ஆண்டுகளில் புனரமைப்பு அலையில், ''பொருளாதார அதிசயம்'' என்ற அலையில், குறிப்பாக பின்தங்கிய பிரதேசங்களில் மட்டுமே குறைந்தபட்ச பிராந்திய வாழ்க்கை மட்டத்தைப் பற்றி பேசப்பட்டது. எல்லாம் தானாக வளரும் என்றும் ''சந்தைப் பொருளாதாரம்'' எல்லா பிரச்சினைகளையும் தானே தீர்த்து விடும் என்றும் கருதப்பட்டது.

பிராந்திய வளர்ச்சிப் பிரச்சினைகள் அதிகரித்து, இவை சிக்கலானவையாக மாறி வந்த அதே நேரத்தில் இவற்றிற்குத் தீர்வு காணும் வாய்ப்புகள் குறைந்தன, பொருளாதார நெருக்கடி வலுத்தது. இன்றுள்ள வேலையிடங்களைப் பேணிக் காக்க வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்க இடம் தரக் கூடாது என்பதன் மீது இன்று கவனம் செலுத்தப்படுகிறது. 1980ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் நிலவரம் இன்னமும் சிக்கலானது, பல நேரங்களில் பிரச்சினை மிக்க இடங்களில் ''வெடிப்பை'' முன்னறிவிப்பதை விடுத்து, அவசரக்கால

நடவடிக்கைகளால் இதை அகற்ற முயற்சிக்க வேண்டியுள்ளது.

இதனிடையே புறச்சூழல் அணுகுமுறை தேவைப்படும் புதிய நிலவரங்கள் தோன்றுகின்றன — புறச்சூழல் ரீதியில் ஒரு சில பிரதேசங்களைக் காப்பாற்ற வேண்டியுள்ளது.

தொழிற்துறை கடல்களை நெருங்கி வந்ததையடுத்து கடலோரமும் ஆற்று முகப்புகளும் பெருமளவில் அசுத்தமடைந்துள்ளன. பிரான்சில் ஃபோஸ் சியூர் மேர் என்ற இணையம் தோற்றுவிக்கப்பட்டதையடுத்து மத்திய தரைக் கடல் பகுதி அசுத்தமடைந்தது, ஓஸ்டர் (சிப்பி) எடுப்பு வீழ்ச்சியடைந்தது; 1970ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் ஆண்டொன்றிற்கு 220 டன் ஓஸ்டர் பிடிக்கப்பட்டதெனில் 1980ஆம் ஆண்டுகளில் இந்த சிப்பி எடுப்பு கிலோகிராம்களில் அளவிடப்படும் நிலை வந்தது.

ஏல்பா ஆற்றின் கீழ்ப்பகுதி ஈடு இணையற்ற இயற்கைச் சூழலை உடையது, ஐரோப்பாவிலேயே மிகப் பெரும் பூந்தோட்டங்கள் உள்ள பகுதிகளில் ஒன்று. இது தவிர இங்கு நிறைய நண்டுகள் கிடைத்தன, பல்வேறு வகையான பறவைகள் ஏராளமாயிருந்தன. இன்று இப்பிரதேசத்தில் தொழிற்துறை மிகுந்து வருகிறது, கரையோரமாகவே பெரும் அணு மின்நிலையங்களும் அலுமினியத் தொழிற்சாலைகளும் இரசாயனத் தொழிற்சாலைகளும் தோன்றின. 1980இல் பிடித்த மீன்களில் மூன்றில் ஒரு பங்கை அழிக்க வேண்டியிருந்தது, ஏனெனில் இவை நச்சுப் பாதிப்பிற்கு ஆளாயிருந்தன. ஏல்பா ஆற்றின் கீழ்ப்பகுதியில் சூப்பர் எண்ணெய் கப்பல்களும் கண்டெய்னர் கப்பல்களும் செல்வதால் அசுத்தமடையும் அபாயம் அதிகரித்தது.

2. ஏகபோகங்களும் பிராந்திய வளர்ச்சியும்

பிராந்தியப் பிரச்சினைகளைப் பற்றிய பல மேலைய நூல்கள், கட்டுரைகளில் ''ஏகபோகம்'' என்ற சொல்லே பொதுவில் பயன்படுத்தப்படுவதில்லை; ''முதலாளிகள்'', ''முதலாளிகளின் முடிவுகள்'' போன்ற சொற்கள்தான் பயன்படுத்தப்படுகின்றன.

ஏகபோகங்கள், குறிப்பாக பன்னாட்டு ஏகபோக இணையங்கள் இன்று முதலாளித்துவ நாடுகளில் உற்பத்திச் சக்திகளை ஆங்காங்கே நிறுவுவதில் முக்கியப் பங்காற்றுகின்றன; முதலாளித்துவ உலகில் காணப்படும் முரண்பாடுகள், பிரச்சினைகள் எல்லாம் ஏகபோக ஆதிக்கத்துடன் தொடர்புடையவை.

பன்னாட்டு ஏகபோக இணையங்களின் நடவடிக்கைகள் எந்த ஒரு பிராந்தியத் திட்டத்திலும் குறுக்கிடுகின்றன.

ஏற்கெனவே குறிப்பிட்டபடி, பன்னாட்டு ஏகபோக இணையங்களுக்குப் பெரும் உற்பத்தி மற்றும் குவிப்பின் அனுகூலங்கள் உண்டு; இது தவிர இவை நகரத் திரட்டின் அனுகூலங்களையும் பயன்படுத்துகின்றன. அதற்கு மேல் காலியிடங்களின் பற்றாக்குறை தோன்றும் பொழுது

இதற்கான போட்டியிலும் தேர்ச்சி மிகு ஊழியர்களுக்கான போட்டியி லும் பன்னாட்டு ஏகபோக இணையங்கள் வெற்றி பெறுகின்றன. விஞ்ஞான ஆராய்ச்சி மையங்களை ஏற்படுத்துவதிலும் விஞ்ஞானத் துறையினரைக் கவர்ந்து இழுப்பதிலும் இந்த இணையங்களின் வலி மையை எதனுடனும் ஒப்பிட முடியாது. பெரும் மையங்கள், முழு பிர தேசங்களின் ஒருதலைப்பட்ச தொழிற்துறை வளர்ச்சிக்கு இந்த இணை யங்கள் வழியமைக்கின்றன, இவை ஒரு துறையை, ஒரு ஏகபோகத் தைச் சார்ந்திருக்குமாறு செய்கின்றன, குறைபாடுகளுள்ள, எளிதில் பாதிக்கப்படக் கூடிய இடக் கட்டமைப்புகளை ஏற்படுத்துகின்றன. டெட்ராய்டைச் சுற்றி திரண்டுள்ள கார் தொழிற்சாலைகள், மேற்கு ஐரோப்பாவில் உள்ள நிலக்கரி-உலோகத் துறை பிரதேசங்கள், இத் தாலியின் தெற்கில் உள்ள புதிய உலோகத் துறை மையங்கள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

நெருக்கடி வீழ்ச்சிகளின் பொழுது மேற்கூறிய மையங்கள் பெரிதும் பாதிக்கப்படும் நிலைக்கு உள்ளாகின்றன. முழு பிரதேசங்களின் மீதான இவற்றின் தாக்கமும் தெரிந்ததே; இத்தாலிய ஆசிரியர்கள் பிமோன்ட் பிரதேசத்தில் நடைபெறும் இடப் பெயர்ச்சியின் ஒருதலைப்பட்சத் தன்மையைக் குறிப்பிடுகின்றனர்; ஏனெனில் இந்த இடப்பெயர்ச்சி துரின் என்னும் ஒரு ஆதிக்க மையத்தைச் சேர்ந்த ''பியட்'' என்ற ஒரு மிகப் பெரும் கார் ஏகபோகத்தினால் நிர்ணயிக்கப்படுகிறது.

ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் உள்ள ருஸ்ஸெல்கெய்ம் நகரத்தில் ''ஒப்பெல்'' என்ற கார் தொழிற்சாலையில் 42,000 நபர்கள் வேலை செய்தனர். ''நகர பட்ஜெட் கார் உற்பத்தித் துறையில் நிலவும் நிலவரத் தைப் பிரதிபலிக்கிறது. 1973இல் 90 மில்லியன் மார்க்குகள் கைம்முதல் வரி வசூலிக்கப்பட்டது, 1974இல் கார் உற்பத்தித் துறையில் வீழ்ச்சி ஏற்பட்ட பொழுது இது 25 மில்லியன் மார்க்குகள் குறைந்தது. பணத் தில் பெரும் பகுதி வேகமாகச் செல்லும் வாகனங்களுக்கான சாலை களை அமைக்கச் சென்றது. 60,000 நபர்கள் வாழும் நகரத்திற்கு இது தேவைக்கதிகமானது என்பதில் சந்தேகமில்லை. பெரும் சாலைகள் சிறிய உள் நகரத்தை நகரோரமாகப் புதிதாக எழுந்துள்ள சேரிகளுடன் இணைக்கின்றன. அல்லது சரியாகச் சொன்னால், இவை வேலை யிடத்தை (''ஒப்பெல்'') தூங்குமிடங்களுடன் இணைக்கின்றன... இங்கு எல்லாமே ''ஒப்பெல்லிலிருந்து'', 42,000 நபர்கள் வேலை செய்யுமிடத் திலிருந்து, லட்சோப லட்சம் வரிப் பணத்திலிருந்து ஆரம்பமாகிறது'' என்று சமூக-ஜனநாயக வார ஏடு ''ஃபோர்வெர்ட்ஸ்'' எழுதுகிறது. (*Vorwärts*, 1980, 19 Juni.)

பெரிய மையங்களில் மட்டுமின்றி முழு பிரதேசங்களிலும் ஒற்றைத் தொழில்நுட்பக் கட்டமைப்புகள் காணப்படுகின்றன. மேற்கு ஜெர்மனி யில் சார் என்ற இடத்திலுள்ள நிலக்கரி, உலோகத் துறை மையம் இதற்குத் தக்க எடுத்துக்காட்டாகும்; இங்கே ஏகபோக நிர்வாகிகளின்

தொலைநோக்குத் தன்மையற்ற சுய நலக் கொள்கை ஒற்றைக் கட்டமைப்பின் குறைகளை அதிகப்படுத்துகிறது. ரியோஹ்லிங் - பூர்பாஹ் என்ற கன்சென் இரும்பு எஃகு எழுச்சிக் கட்டத்தில் லாபம் சம்பாதித்தது; இது சாரின் உலோகத் துறையை நவீனமயப்படுத்துவதில் முதலீடு செய்யாமல், பிரதேசத்திற்கு வெளியே உள்ள இராணுவ தொழில் நிறுவனங்களில், அதாவது எங்கே அதிகபட்ச லாபம் கிடைக்குமோ அங்கே முதலீடு செய்தது.

பொருளாதார வல்லமை அதிகரித்துள்ளதாலும் ஒரே நிதி மற்றும் நடைமுறை ஒழுங்கமைப்பின் அடிப்படையில் நீண்ட காலக் கொள்கை உலகெங்கும் பரவியதாலும் சர்வதேச வர்த்தகம் குறிப்பிட்ட சுதந்திரத்தைப் பெறுகின்றது; தனிப்பட்ட நாடுகளில் நடைபெறும் பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகளையும் மொத்தமாக உலகப் பொருளாதாரத்தையும் இது ஓரளவில் சாராமலிருக்கிறது. தொழிற்துறை மிகப் பெருமளவில் வளர்முக நாடுகளினுள் புகுவதில் இது நன்கு வெளிப்படுகிறது. இதனால் இந்நாடுகளில் தோண்டியெடுக்கும் துறைகளின் வளர்ச்சியிலிருந்து பதப்படுத்தும் துறைகளின் வளர்ச்சியை நோக்கிய படிப்படியான மாற்றம் நடைபெறுகிறது. எரிசக்தியும் உழைப்பும் அதிகமாகத் தேவைப்படும் துறைகளையும் புறச்சூழலை அசுத்தப்படுத்தும் துறைகளையும் பன்னாட்டு ஏகபோக இணையங்கள் வளர்முக நாடுகளுக்கு மாற்றுகின்றன. வளம் மிக்க மூலப்பொருள் ஊற்றுகள் அருகிலிருப்பது, மலிவான உழைப்புச் சக்தி, புறச்சூழல் சம்பந்தமான ''தாராள'' சட்டங்கள் ஆகியவை இந்த இணையங்களைக் கவர்ந்திழுக்கின்றன. இது மூலதனத்தை இறக்குமதி செய்யும் நாடுகளுக்குப் பொருளாதார சுதந்திரத்தை அளிப்பதில்லை, ஏனெனில் இந்தத் தொழில் நிறுவனங்களின் மீதான கட்டுப்பாட்டை பெரிய கன்சென்கள் தம் கரங்களில் வைத்திருக்கின்றன. நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட தொழில் நுட்பத்தையுடைய துறைகள்தான் இவ்வாறு வளர்முக நாடுகளுக்குக் கொண்டு வரப்படுகின்றன. இதில் விஞ்ஞான சாதனைகள் அதிகம் பயன்படுத்தப்படும் பொருட்கள் அடங்கா, இவை வளர்முக நாடுகளின் தொழில்நுட்பத்தை வளர்க்க உதவா. இதுவும் ஒரு வித உலக ஆதிக்கம் தான், ஆனால் இது நவீன வடிவங்களை மேற்கொள்கிறது.

இந்த நிகழ்ச்சிப் போக்கின் மறு விளைவாக, மூலதனத்தை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் வேலை வாய்ப்புகள் குறைகின்றன, வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள ஒற்றைத் துறை மையங்கள் பாதிக்கப்படுகின்றன. உலோகத்தைப் பதப்படுத்தும் தொழிற்துறை தொழிலாளர்களின் சர்வதேச தொழிற்சங்கம், இந்நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரிப்பதாக மின்னணுத் துறை கன்சென்கள் மீது குற்றம் சாட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

பன்னாட்டு ஏகபோக இணையங்களின் உள்நாட்டு உற்பத்தி வேகங்களின் வீழ்ச்சி, தீவிர அயல்நாட்டு மூலதன நடவடிக்கை —

''பிரிட்டிஷ் நோய்'' என்றழைக்கப்படுவது — பெரிதும் பரவியுள்ளது.

பன்னாட்டு ஏகபோகங்களின் உலக நடவடிக்கை பிராந்தியப் பிரச்சினைகளையோ தேசிய பிராந்தியக் கொள்கையையோ மதித்து செயல்படுவதில்லை. எடுத்துக்காட்டாக, ரோம் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட போது பன்னாட்டு ஏகபோக இணையங்களின் மீது வைக்கப்பட்ட நம்பிக்கைகளை இவை நியாயப்படுத்தவில்லையென்பதை பொதுச் சந்தை உறுப்புகள் மேன்மேலும் ஒப்புக் கொள்ளும்படி நேரிட்டுள்ளது. பொதுச் சந்தை நாடுகளில் உள்ள பின்தங்கிய பிரதேசங்களின் துரிதமான வளர்ச்சிக்கு உதவுவதற்குப் பதில் 85 பன்னாட்டு ஏகபோக இணையங்கள் தம் சக்தியில் பெரும் பகுதியை, போட்டிக் கம்பெனிகளை விழுங்கி ஏப்பம் விடவும், பொதுச் சந்தைக்கு வெளியே தம் நடவடிக்கையை விரிவுபடுத்தவும் செலவிட்டன; அதுவும் உலோகத் தொழிற்துறை உட்பட பெரும் ஏகபோகங்கள்தான் இணைப்பு விஷயத்தில் மிகக் குறைந்த பங்காற்றின.

ஆனால் எங்கெல்லாம் லாபமோ அங்கெல்லாம் பிராந்தியத் திட்டங்களின் பயன்களை உபயோகப்படுத்த ஏகபோகங்கள் தயங்குவதேயில்லை. இத்தாலியின் தென் பகுதியைத் தொழிற்துறைமயப்படுத்த கோடிக் கணக்கில் வந்த பணம் புதிய உபகரணங்களை வாங்க பயன்படுத்தப் பட்டது; இந்த உபகரணங்கள் விரைவிலேயே இத்தொழிற்சாலைகளிலிருந்து அகற்றப்பட்டு வடக்கேயுள்ள பழைய தொழிற்சாலைகளில் நிறுவப்பட்டன. நாம் ஏற்கெனவே குறிப்பிட்ட ''ஓப்பெல்'' ஏகபோகம் போஹுமில் (ரூர்) புதிய தொழிற்சாலை கட்டப்பட்ட பொழுது வரி விலக்கைப் பெற்றது, வளம் மிகு உள் கட்டமைப்பையுடைய நிலத்தை மலிவாக வாங்கியது, இவ்வாறு பல முதலீட்டு அனுகூலங்களைப் பயன்படுத்திக் கொண்டது.

ஆனால் பன்னாட்டு ஏகபோக இணையங்களின் நலன்களுக்கு முரண்பாடான பிராந்தியத் திட்டங்கள் வந்தால் ஏகபோகங்கள் இப்பிராந்தியவாதிகள், ஸ்தல திட்ட அமைப்புகளின் பாதைகளில் மீற முடியாத தடைகளை எழுப்புகின்றன. உதாரணமாக ரூர் பிரதேசத்தில் இப்படித்தான் நடக்கிறது. இங்கே ஆதிக்கம் செலுத்தும் கன்சென்கள் பழைய துறைக் கட்டமைப்பை மாற்றச் செய்யப்படும் எந்த ஒரு முயற்சியையும் எதிர்க்கின்றன, புதிய துறைகள் அல்லது தொழில் நிறுவனங்கள் புகுவதையும் எதிர்க்கின்றன. இவ்வாறாக பாரம்பரிய பிரதேசக் கட்டமைப்புகளின் ஒருதலைப்பட்சத் தன்மை மட்டுமின்றி, இவை அப்படியே பேணிக் காக்கப்படுவதும் ஏகபோக மயமாக்கலின் பின்விளைவாகும்.

பன்னாட்டு ஏகபோக இணையங்களுக்கும் பிராந்திய வளர்ச்சிக்கும் இடையிலான தொடர்புகள் இதனுடன் முடிந்து விடவில்லை. தம் தொழில் நிறுவனங்களை அமைப்பதில் எந்த ஒரு ஸ்தல கம்பெனியையும் விட பன்னாட்டு ஏகபோக இணையங்களுக்கு அனுகூலங்கள்

உண்டு என்று பிரிட்டிஷ் ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். பன்னாட்டு ஏகபோகங்களால் தொழில் நிறுவனங்களுக்கான புதிய இடங்களைப் பொறுமையாக, தீர ஆலோசித்துத் தேட முடியும், பரவலான காரணி களைக் கவனத்தில் கொள்ள முடியும்.

பன்னாட்டு ஏகபோக இணையங்களின் மேற்கூறிய அம்சங்கள் எழுச்சியாண்டுகளிலும் வீழ்ச்சியாண்டுகளிலும் பலவாறாக வெளிப்படு கின்றன. சோவியத் பொருளாதார புவியியலர் ஏ. கோர்கின் அமெ ரிக்கப் பொருளாதார வளர்ச்சியை ஆராயும் பொழுது சுவாரசியமான, முற்றிலும் ஆதாரப் பூர்வமான ஒரு முடிவிற்கு வந்தார்: நெருக்கடி ஆண்டுகளில் தெற்கிலும் மேற்கிலும் உள்ள புதிய பிரதேசங்களுக்குத் தொழில் நிறுவனங்கள் இடம் மாறுவது வலுக்கிறது. (ஏ. கோர்கின், 1978.) ஆனால் எல்லா இடங்களிலும் இப்படி நடைபெறுவதில்லை: உதாரணமாக ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் பொருளாதார நெருக்கடி காணப்பட்ட ஆண்டுகளில் (1970 —1979) ஏற்கெனவேயுள்ள தொழிற் துறை பிரதேசக் கட்டமைவில் ஒருவித ''முடக்கம்'' காணப்பட்டது. 1960ஆம் ஆண்டுகளை விட குறைவாகவே புதிய தொழில் நிறுவனங்கள் தோன்றின, பழையவை இடம் மாறின, அதுவும் பெரும்பாலும் சிறு தொழில் நிறுவனங்கள் மட்டுமே இடம் மாறின. அனேகமாக நாடுகளின் அளவுகள் இதற்குக் காரணமாயிருக்க வேண்டும். பிரதேச இட மாற்றங் களுக்கான வாய்ப்புகள் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் பன்மடங்கு குறைவு, பிரதேசங்களுக்கு இடையிலான ஊதிய மாற்றங்களும் அமெரிக் காவில் வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை விடக் குறைவு.

அரசு ஏகபோக முதலாளித்துவ சகாப்தத்தில் பிராந்திய வளர்ச்சி யானது, தன் மீது ஏகபோகங்களின், பன்னாட்டு ஏகபோக இணையங் களின் தீர்மானகரமான தாக்கத்தை உணருவதோடு விஷயம் நின்று விடவில்லை; முழு அரசு ஏகபோக இணையங்களே பிராந்திய வளர்ச்சி யை வழிநடத்தும் ஒரு நிலையும் உள்ளது. எரிபொருள்-எரிசக்தித் துறை, அணுசக்தித் துறை, விமான ராக்கெட் (விண்வெளி) தொழிற் துறை, விவசாயத் தொழிற்துறை அமைப்புகள் ஆகியவற்றில் இத்தகைய இணையங்கள் உருவாகியுள்ளன.

பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த நாடுகளின் பொருளா தாரம், அரசியல் முழுவதன் மீது இராணுவத் தொழிற்துறை இணையங் கள் பெரும் தாக்கம் செலுத்துகின்றன; இச்சொற்றொடரை முதன்முத லில் பயன்படுத்திய டி. எய்சன்ஹோவரே இதைச் சுட்டிக் காட்டினார்.

இராணுவத் தொழிற்துறை இணையத்தைச் சேர்ந்த தொழில் நிறுவனங்களால் தனிப்பட்ட பிரதேசங்கள், மையங்களின் ஸ்திரமான வளர்ச்சிக்கு வழிகோல முடியுமா? இது ஒரு மிகவும் முக்கியமான, சிக்கலான பிரச்சினையாகும். நவீன இராணுவத் தொழிற்துறை இணையங்கள் பிரதேச அங்கங்களிலிருந்து உருவாகும் பொழுது இவை

பொருளாதாரப் புதுப்பிப்பிற்கு ஊக்கமளித்தன; அமெரிக்காவில் கலி போர்னியா மற்றும் டெக்சாஸ், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் தென் பகுதி (பவேரியா), பிரான்சில் சில தனிப்பட்ட புது மையங்கள் ஆகியவற்றின் விரைவான எழுச்சிக்கான காரணிகளில் ஒன்று இந்த இணையங்களின் வளர்ச்சியாகும்.

ஆனால் இங்கு விஷயத்தைப் பெரிதும் மாற்றக் கூடிய ஒரு சில சிறப்பியல்புகள் உள்ளன.

முதலாவதாக, புதிதாக கண்டுபிடிக்கப்படும் பிரதேசங்கள் இங்கு குறிப்பிடப்படவில்லை. ஏற்கெனவே உருவாகிய உள்கட்டமைப்பு, தொழிற்துறை அடித்தளம், பெரும் விஞ்ஞான, தொழில்நுட்ப மையங் கள் ஆகியவற்றில்தான் இராணுவத் தொழிற்துறை இணையங்களின் பிரிவுகள் தோன்றின. இதற்கு அமெரிக்காவில் பாஸ்டன் தக்க எடுத்துக் காட்டாகும்.

இரண்டாவதாக, பொருளாதாரம் புத்தூக்கம் பெற்ற பொழுது அது அந்தந்த இடங்களில் மட்டுமே நடைபெற்றதே தவிர பிரதேசம் முழுவதும் பரவவில்லை. இது ஒரு மிக முக்கிய அம்சமாகும்.

அமெரிக்காவில் கலிபோர்னியாவும் வட மேற்குப் பகுதியும் ஓரளவு ஸ்திரமாக இருக்க இராணுவத் தொழிற்துறை இணையத்தின் வளர்ச்சி மட்டும் காரணமல்ல, இதற்கு வேறு பல அனுகூலமான காரணிகளும் உண்டு. உதாரணமாக, அலாஸ்காவிலிருந்து எண்ணெய் அமெரிக்காவின் மற்ற பகுதிகளுக்குச் செல்லும் வழியில் இது இடைநிலைப் பகுதியாக உள்ளதும் ஒரு காரணமாகும். இப்பகுதியில் இராணுவத் தொழிற்துறை இணையம் வளர்ச்சியடைந்ததன் பின்விளைவு இங்குள்ள பெரும் மையங்கள் மிகவும் ஒருதலைப்பட்சத் தன்மையை உடையவையாக இருப்பதும் இவற்றால் நெருக்கடிகளை எதிர்த்து சமாளிக்க முடியாம லிருப்பதுமாகும்.

இன்றைய பவேரியா ''ஜெர்மன் சமஷ்டிக் குடியரசின் கலிபோர்னி யாவாகும்'', இதுதான் நாட்டின் இராணுவத் தொழிற்துறை இணை யத்தின் முக்கிய அங்கமாகும். மிகப் பெரும் இராணுவக் கம்பெனிகள் இங்கே உள்ளன. மொத்த உற்பத்தியளவிலும், பண்ட சுழற்சியில் இராணுவப் பொருட்களின் பங்கிலும் இவை ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் முன் நிற்கின்றன. இந்தக் கம்பெனிகள் தாம் சூழ்நிலைக்கேற்றவாறும் முன்னேற்ற நோக்கத்தோடும் செயல்படுவதாக விளம்பரம் செய்து கொள்கின்றன, தாம் ஏதோ பொருளாதாரத்திற்கு ஸ்திர நிலையை அளிப்பதாயும் புதிய, சில சமயம் சமாதான பொருட்களை உற்பத்தி செய்வதாயும் தம்பட்டம் அடித்துக் கொள்கின்றன. ஆனால் இராணுவத் தொழிற்துறை இணையத்தின் தொழிற்சாலைகள் அருகிலுள்ள தொழிற் சாலைகளுடன் அல்ல, மாறாக அயல்நாட்டு இராணுவத் தொழிற்துறை இணையங்களுடன் தொடர்பு கொண்டுள்ளன. உதாரணமாக, ''டொர் னாடோ'' என்ற மிக விலையுயர்ந்த மேலைய விமானத்தின் உற்பத்தி

யில் (1985இல் இதன் மதிப்பு 100—110 மில்லியன் மார்க்குகள்) MBB என்ற ஜெர்மன் கம்பெனி பிரிட்டனிலும் இத்தாலியிலும் உள்ள கம்பெனிகளுடன் சேர்ந்து கூட்டாக இயங்கியது. இந்தச் செயல்திட்டமானது ''இராணுவத் தொழிற்துறை இணையத்தைக் கட்டுப்படுத்த முடியாது, இவ்வளவு பெரிய இராணுவத் தொழிற்துறையை முதலாளிகள் கட்டுப்படுத்துவதை விட நேட்டோதான் கட்டுப்படுத்துகிறது'' என்று *Der Spigel* என்ற ஜெர்மன் சஞ்சிகை எழுதியது.

இதன் விளைவாய் இந்தக் ''கொட்டில்'' ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் மிக அதிகமான வேலையில்லாத் திண்டாட்டத்துடன் ஏழ்மையும் பிரச்சினைகளும் தாண்டவமாடும் பிரதேசமாக உள்ளது. இது தவிர மிகப் பிற்போக்கான கட்சியாகிய கிறிஸ்துவ சமூக யூனியன் பவேரியாவின் இராணுவத் தொழிற்துறை இணையத்தில் அரசியல் மேற்கட்டுமானமாகியது.

பொருளாதாரத்தை இராணுவமயப்படுத்துவதால் அது பிராந்திய வளர்ச்சியை எப்படிப் பாதிக்கிறது என்பதற்கு ஜப்பானின் தென்கோடித் தீவாகிய ஒக்கினோவா தக்க எடுத்துக்காட்டாகும். 1945 முதல் 1972 வரை இத்தீவு அமெரிக்காவின் வசமிருந்தது, இங்கு அமெரிக்கா பல இராணுவத் தளங்களை ஏற்படுத்தியது. இதற்காக சாகுபடி நிலப் பரப்பில் 44% பிடுங்கப்பட்டது, மக்கள் இங்கிருந்து நகரங்களுக்கு வெளியேறிச் சென்றனர், இங்குள்ள அமெரிக்கத் தளங்களில் வேலை செய்வது மட்டுமே மக்களின் பிழைப்பிற்கான ஒரே வழியாகியது. 1965இல் தீவிலிருந்த மக்களில் $^1/_3$ க்கு அதிகமான பங்கினர் இத்துறையில் ஈடுபட்டிருந்தனர். இவ்வாறு வேலை செய்யும் ஜப்பானியர்களின் எண்ணிக்கை குறைந்த பொழுது, வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியது. பெரும்பாலோரால் கிராமத்திற்குத் திரும்ப முடியவில்லை, தீவிலிருந்து மக்களின் வெளியேற்றம் ஆரம்பமாகியது. இன்றும் இத்தீவு ஜப்பானின் ஏழ்மை பிரதேசமாக உள்ளது: இங்குள்ள மக்களின் வருமானங்கள் நாடு முழுவதும் உள்ள மக்களின் சராசரி வருமானத்தை விட $^1/_4$ பங்கு குறைவு.

ஆனால் இப்படிப்பட்ட நிலவரத்தின் சமூக பொருளாதார அம்சங்களைப் பற்றி மட்டும் தனித்துப் பார்க்கக் கூடாது. 1969இல் இந்தத் தீவின் குழந்தைகள் கடலில் குளித்ததையடுத்து பெருமளவில் நோய் வாய்ப்பட்டனர். இங்குள்ள தளங்களில் அமெரிக்கர்கள் சேகரித்து வைத்திருந்த நச்சுப் பொருட்கள்தான் இதற்குக் காரணமாகும்.

ஜெர்மன் சமஷ்டிக் குடியரசின் பரப்பில் ஃபிஷ்பாஹ் நகரில் நரம்புத் தளர்ச்சியை ஏற்படுத்தவல்ல நச்சுப் பொருட்களடங்கிய ஒரு பெரும் கிடங்கை பெண்டகன் வைத்திருப்பது 1982இல் தெரிய வந்தது. அப்பகுதியிலிருந்த ஸ்தல அரசாங்கத்தின் அனுமதி இதற்கு பெறப்படவேயில்லை. ஜெர்மன் சமஷ்டிக் குடியரசின் அரசியல் சட்டம் முரட்டுத்தனமாக மீறப்பட்டதற்காக மக்கள் பரவலான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்

களை நடத்தினர். 20 ஆண்டுகளுக்கு முன் பிரெஞ்சு அரசாங்கம் கோரியதையடுத்து மேற்கு ஐரோப்பாவிலுள்ள நச்சுப் பொருட்களின் இந்த மையக் கிடங்கு ஃபிஷ்பாஹிற்கு மாற்றப்பட்டதென்பது தெரிய வந்தது. இந்த ஆயுத மையங்கள் மரண மையங்களாகக் கூடும் — இதில்தான் முக்கிய அபாயம் உள்ளது.

மார்க்சிய-லெனினிய தத்துவமானது அரசு ஏகபோக முதலாளித்துவத்தை ஏகபோகங்களின் பிரம்மாண்டமான சக்திகளுக்கும் அரசின் பிரம்மாண்டமான சக்திகளுக்கும் இடையிலான இணைப்பாகப் பார்க்கிறது. அரசு ஏகபோக முதலாளித்துவமானது வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் பொருளாதாரக் கட்டமைப்பு முழுவதையும் நிர்ணயிக்கிறது, வாழ்க்கையின் எல்லா துறைகள் மீதும் — தொழில் மற்றும் விஞ்ஞான நிறுவனங்களின் இடப் பரப்பு, உள்கட்டமைப்பு மற்றும் வெளித் தொடர்பு முறைகளின் வளர்ச்சி, மக்களின் இடப் பரப்பு, வெளி இடப்பெயர்ச்சிகள் — தாக்கம் செலுத்துகிறது. ஆகவே உற்பத்திச் சக்திகளின் இடப் பரப்பில் எல்லா அம்சங்களும் இந்த முறையைச் சார்ந்தவையாகும் எனலாம்.

மேற்கூறிய தாக்கத்தின் முறையும் அளவும் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறானவை; ஆனால் பொதுவானது என்னவெனில் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய ஆண்டுகளில் எல்லா பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகளிலும் அரசின் பங்கு அதிகரித்ததாகும்; முதலாளித்துவத்தின் பொது நெருக்கடிதான் இதற்குக் காரணமாகும்.

பிராந்தியத் திட்டமிடலை மட்டும் எடுத்துக் கொண்டால் முதலாளித்துவ நாடுகளில் அரசின் தலையீட்டிற்குப் பின்வரும் காரணங்கள் உண்டு:

— நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வகை செய்யும் நாட்டம் (பின்தங்கிய பிரதேசங்கள் பொது வளர்ச்சிக்குத் தடையாக உள்ளன);

— சமூக மோதல்களைச் சமரசப்படுத்தும் அவசியம், சமூகப் பதட்டம் தோன்றும் ஆபத்தைத் தவிர்த்தல்;

— நகரங்களின் நெருக்கடிக்கு வழிகோலிய நகரமயமாக்கல் போன்ற தன்னிச்சையான நிகழ்ச்சிப் போக்கை எப்படியாவது ஒழுங்கமைக்கும் அவசியம்;

— புறச்சூழலை மேம்படுத்தும் அவசியம்.

அரசுத் தலையீடு அதிகரித்ததையடுத்து ஆதிக்கம் செலுத்திய தத்துவங்களும் மாறின. கடும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முன் laissez faire கருத்தமைப்புகள் (பிரிட்டிஷ் பொருளாதார நிபுணர்களின் வார்த்தைகளில் சொன்னால் ''ஆடம் ஸ்மித்தின் கண்ணுக்குத் தெரியாத கை'') ஆதிக்கம் செலுத்தின என்றால், பின்னர் கேய்ன்சின் தத்துவம் மேலோங்கியது; ''ஸ்மித்தின் கண்ணுக்குத் தெரியாத கைக்குப்'' பதிலாக முற்றிலும் கண்ணுக்குத் தெரியும் ''அரசின் கை'' வந்தது. உதாரணமாக, 1950க்களின் நடுப் பகுதி வரை ஜெர்மன் சமஷ்டிக் குடி

யரசில் ''சுதந்திர சந்தைப் பொருளாதாரம்'' என்ற கருத்தமைப்பு மேலோங்கியிருந்தது. பொருளாதாரத்தில் சகலவிதத் திட்டமிடலையும் நிராகரிக்குமாறு எல். எர்ஹார்டு அறைகூவல் விடுத்தார்.

இவையெல்லாம் மிகவும் ஜனநாயகமயமானதாகப் படலாம். ஆனால் இவையெல்லாம் முதலாளித்துவத்தில் முழுக்க முழுக்கச் சாத்திய மில்லை; அங்கே ஏகபோகங்கள்தான் உண்மையான எஜமானர்கள், அரசின் பாத்திரம் என்னவெனில் இவற்றின் நலன்களுக்கும் சமுதாயம் முழுவதன் உடனடி சமூக பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் இடை யில் கறாரான சமன்நிலையைப் பேணிக் காப்பதாகும். இவ்வாறு சமன்நிலையைப் பேணிக் காப்பதில் உள்ள சிக்கல்தான் பிராந்தியத் திட்டமிடல் உட்பட எல்லா அரசு ஏகபோகத் திட்டமிடலின் குறுகிய வரம்புகளையும் நிர்ணயிக்கிறது. அரசின் இத்தகைய நடவடிக்கைகள் அரைகுறையானவை என்று பிரிட்டிஷ் ஆசிரியர்கள் சரியாகக் குறிப்பிடு கின்றனர், பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயலும் இந்நடவடிக்கை கள் இவற்றை நடைமுறையில் புதிய வடிவத்தில் முன்வைக்கின்றன.

முதலாளித்துவத்தின் கீழ் அரசு பிராந்தியத் திட்டமிடலின் ஒரு சில வரம்புகளைப் பார்ப்போம்.

முதலில், அரசுத் துறையின் கட்டமைப்பே இந்த வரம்புகளை நிர்ண யிக்கிறது. சாதாரணமாக தோண்டியெடுக்கும் தொழிற்துறை, மின் எரிசக்தித் துறை, போக்குவரத்து, விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள் ஆகியவை அரசுத் துறையில் அடங்கும்; அதாவது இவை லாபம் தராத அல்லது நஷ்டகரமான துறைகள், ஏகபோகங் கள் இவற்றை வரி செலுத்தும் மக்கள் மீது திணிக்கின்றன.

இரண்டாவதாக, அரசுத் துறையின் வரம்புகளுக்குள் கூட திட்ட மிடலுக்கான, உதாரணமாக பிராந்தியத் திட்டமிடலுக்கான முழு சுதந்திரமில்லை. பொருளாதார ரீதியான செயல்வன்மைக்கும் பிராந் தியத் திட்டமிடலுக்கும் இடையில் புறவய ரீதியான முரண்பாடுகள் நிலவுகின்றன, சாதாரணமாக பிரச்சினை முதலாவதற்கு ஆதரவாகத் தீர்க்கப்படுகிறது.

அதிக உயர்வான அரசு ஏகபோக மட்டத்திலான முடிவுகளின் மீது தாக்கம் செலுத்தும் வாய்ப்புகள் ஸ்தல ஆட்சி உறுப்புகளுக்கு மட்டான வையே.

மூன்றாவதாக, கிட்டத்தட்ட பதப்படுத்தும் தொழிற்துறை முழு வதும், அனேகமாக விஞ்ஞானம் அதிகம் தேவைப்படும் துறைகள் முழுவதும் ஏகபோகங்களின் கரங்களில் உள்ளன, இவைதான் ''உந்து விசையுள்ள'' துறைகளாகும், இவைதான் ''புதிய அம்சங்கள் பரவும்'' மையங்களாகும்; இவை முதலாளித்துவ பிரதேச உற்பத்தி இணையங் களின் அடித்தளமாக விளங்கத் தக்கவை.

நான்காவதாக, பிராந்தியத் திட்டமிடலுக்காக அரசு ஒதுக்கும் மிகச் சிறிய தொகைகள் இத்திட்டமிடலை மட்டுப்படுத்துகின்றன.

1960-70ஆம் ஆண்டுகளில் விரைவான பணவீக்க சகாப்தத்தில் பிராந்தியக் கொள்கைக்கான செலவுகள் அதிகரிக்கவில்லை அல்லது மிகவும் மெதுவாகவே அதிகரித்தன. 1980ஆம் ஆண்டுகளில் பல்வேறு துறைகளிலும் நெருக்கடி அதிகரித்ததையடுத்து வழக்கமாக பிராந்திய ஊக்குவிப்பிற்குப் பதில் துறை ரீதியான ஊக்குவிப்பு வந்தது, பிராந்தியத் திட்டமிடலுக்கான செலவுகள் குறைந்தன. இத்தகைய செலவுகளில் மேன்மேலும் அதிகமான பகுதியை ஸ்தல பட்ஜெட்டின் மீது சுமத்தும் போக்கு தோன்றியது.

இறுதியில், ஐந்தாவதாக, பிராந்தியக் கொள்கையை ஒத்திசைவிப்பது, அதுவும் குறிப்பாக மட்டான நிதியில், மிகவும் சிக்கலானது. ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பு, அதிகாரங்கள், ஒத்திசைவிப்பு ஆகியவை பற்றாக்குறையாகின்றன.

3. சமுதாயத்தின் பிரதேச ஒழுங்கமைப்பு: சோவியத் அனுபவம்

''சமுதாயத்தின் பிரதேச ஒழுங்கமைப்பைப் பற்றிய கருத்து பிராந்திய... புவியியல், சமூக, பொருளாதார, மற்ற ஆராய்ச்சிகளின் துறையில் மிகப் பரவலான ஒரு இணைப்புக் கருத்தாகும். ஏனெனில் உற்பத்தியின் இட அமைப்பு, சமூக உள் கட்டமைப்பின் இட அமைப்பு, சமுதாயத்தின் சமூக பொருளாதார பிரதேச முறையில் நிலவும் பரஸ்பரத் தொடர்புகள், புனருற்பத்தியின் இட ரீதியான நிகழ்ச்சிப் போக்குகள், இவற்றை நிர்வகிக்கும் பிரச்சினைகள் எல்லாமே இதில் அடங்கியுள்ளன.'' (ஹோரெவ், 1981, பக்கம் 3.)

ஒய். ஜி. சாவுஷ்கின் சுட்டிக் காட்டியபடி சமுதாயத்தின் பிரதேச ஒழுங்கமைப்பு சமுதாயத்தின் சமூகக் கட்டமைவிற்கு, இதன் சமூக ஒழுங்கமைப்பிற்கு உட்பட்டது. ''சமுதாய அமைப்பு எப்படிப்பட்டதோ, சமுதாயத்தின் பிரதேச ஒழுங்கமைப்பும் அதே மாதிரியானது.'' (சாவுஷ்கின், 1973, பக்கம் 319.) * சோவியத் நாட்டில் இது சமுதாயத்தின் வளர்ச்சிக் கட்டங்கள், வளர்ச்சி வேகங்களுடனும் இதன் மிகச் சீரிசைவான வளர்ச்சியுடனும் பிரிக்க இயலாதபடி தொடர்புடையது, பொருளாதார, சமூக, புறச்சூழல் லட்சியங்களின் அடிப்படையிலானது.*

சமுதாயத்தின் பிரதேச ஒழுங்கமைப்பிற்கான அவசிய முன்தேவை பிரதேசமயப்படுத்தலாகும்; இது முதலில் பொருளாதார பிரதேசமயப்

---

* *இன்று இது மேலைய நாடுகளில் முற்றிலுமாக ஒப்புக் கொள்ளப்படுகிறது. பிரபல அமெரிக்க புவியியலர் டி. ஹார்வே இட அமைப்பு நிகழ்ச்சிப் போக்குகளின் சமூகத் தன்மையைக் கோடிட்டுக் காட்டுகிறார். சமூக இட அமைப்பு முறையானது சொத்துடைமையால் நிர்ணயிக்கப்படுகிறது என்று பிரெஞ்சு புவியியல் இலக்கியத்தில் சுட்டிக் காட்டப்படுகிறது.*

படுத்தலாயிருக்கும், பின்னர் புறவய ரீதியில் நிலவும் பிரதேசங்களைக் கண்டுபிடித்து பிரித்தமைக்கும் சிக்கலான, பன்முக நிகழ்ச்சிப் போக்காக இது திகழும்.

கோட்பாட்டளவில், சோவியத் பொருளாதார பிரதேசமயப்படுத்தலின் பல அடிப்படைகள், விஞ்ஞான அறிதலின் நோக்கு நிலையிலிருந்து பார்த்தால் சர்வாம்ச தன்மையை உடையவையாகும், ஆனால் இதற்குக் குறிப்பிட்ட சமூக பொருளாதார முன்தேவைகள் அவசியம்.

பொருளாதார இடம் என்பது எப்போதும் பல்வேறு மட்டங்களைக் கொண்ட பொருளாதார பிரதேசங்களினால் ஆனது. பொருளாதார பிரதேசங்களின் புறவயத் தன்மை தெட்டத்தெளிவு, புறவய யதார்த்தத்தை அறியும் பொழுது இவற்றின் எல்லைகளைத் தோராயமாக கணிக்கலாம், ஆனால் இவற்றை கற்பனை செய்யவோ, தன்னிச்சையாக உருவாக்கவோ முடியாது. பொருளாதாரத்தின் தனித்துறைப்பாடு தான் பொருளாதார பிரதேசங்களை உருவாக்குவதற்கான காரணம், உண்மையான கட்டமைப்பாளன். இதில் இயற்கை வள உள்ளாற்றல் தனித்துறைப்பாட்டு மாற்றத்தைக் குறிப்பிட்ட அளவு கட்டுப்படுத்தினாலும் இம்மாற்றங்கள் முழு முதலானவையல்ல, இம்மாற்றங்கள் சமூக பொருளாதாரக் காரணிகளுடன் தொடர்புடையவை.

சோஷலிசத்தின் கீழ் தனித்துறைப்பாடு பொருளாதாரத்தின் பன்முகத் தன்மையுடன் இயக்கவியல் ரீதியாகத் தொடர்புடையது. இவை எதிரெதிரான கருத்துகள் என்று தோன்றினாலும் உண்மையில் இது இப்படியில்லை. புரட்சிக்கு முன் மத்திய ஆசியாவில் பருத்தி சாகுபடி மட்டுமே நடந்தது, இன்றோ இப்பகுதி பன்முக ரீதியில் வளர்ச்சியடைந்து வருகிறது (மின்சாரமயப்படுத்தல், பெரும் நீர்ப்பாசனக் கட்டுமானம், உரத் தொழிற்சாலைகளின் வளர்ச்சி, விவசாயத் துறை இயந்திரமயப்படுத்தல்). பன்முகத் தன்மையானது தனித்துறைப்பாட்டை வலுப்படுத்தி, புதிய மட்டத்திற்கு உயர்த்தியுள்ளது, பிரதேசத்தின் பொருளாதாரச் செயல்வன்மையைப் பெரிதும் அதிகரித்துள்ளது.

விஞ்ஞான ரீதியான பிரதேசமயப்படுத்தலின் மிக முக்கிய அம்சம் இதன் பிரச்சினைத் தன்மையாகும். ஒரு பிரச்சினை நிலவரம்தான் எப்போதும் வளர்ச்சியின் அடிப்படையாக இருக்கும்; இதுதான் வளர்ச்சியின் லட்சியங்களையும் வேறொரு நிலைக்கு மாறிச் செல்வதற்கான வழிகளையும் கணிசமான அளவிற்கு நிர்ணயிக்கிறது. வி. எம். செத்தீர்கின் பிரதேசத்தின் பன்முக, அடிப்படை தேசியப் பொருளாதாரப் பிரச்சினையைப் பற்றிய தத்துவத்தை உருவாக்கினார்; இது பிரதேசத்தின் எல்லா விவரங்கள், புலப்பாடுகளையும் ஒன்றாக இணைக்கிறது, பன்முக உற்பத்தி நடவடிக்கையை ஒரே முழுமையாக திரட்டுகிறது, பிரதேசத்தின் அரசு தனித்துறைப்பாட்டை வளர்த்து வலுப்படுத்துவதற்கான சாலச் சிறந்த வழிகளைச் சுட்டிக் காட்டுகிறது. அடிப்படை பிரச்சினையில் சிக்கலான இயற்கை மற்றும் பொருளாதார அம்சங்கள்

அடங்கியுள்ளன. (செத்தீர்கின், 1967, பக்கம் 61.) சோவியத் யூனியனின் பொருளாதார பிரதேசமயப்படுத்தல் நடைமுறை முழுவதும்—நவீன ''சைபீரியா'' செயல்திட்டம் வரை—இத்தகைய அணுகுமுறை சரியானது என்று மெய்ப்பிக்கிறது.

சோவியத் பிரதேசமயப்படுத்தலின் ஒரு முக்கிய அம்சம் இதன் தொலைநோக்குப் பார்வையாகும். கோயெல்ரோ திட்டத்திலேயே இதைக் காணலாம், இன்றைய சைபீரிய பிரதேச உற்பத்தி இணையங்களிலும் இது நன்கு வெளிப்படுகிறது. இன்று இது பரவலான அங்கீகரிப்பைப் பெற்று வருகிறது. ஜெனீவாவில் நடைபெற்ற மகாநாட்டில் (1964) ஐரோப்பிய பொருளாதாரக் கமிஷனின் வரம்புகளுக்குள் பிராந்தியப் பிரச்சினைகள் விவாதிக்கப்பட்ட பொழுது ''பிரதேச ஒழுங்கமைப்பு பிரச்சினையின் பாலான எதிர்கால அணுகுமுறையின்'' அவசியம் கோடிட்டுக் காட்டப்பட்டது. இந்த அம்சங்களை இன்று ஏராளமான நாடுகளில் பல்வேறு திட்டங்களில் சேர்க்க முயலுகின்றனர். ஆனால் சோவியத் நாட்டில் மட்டுமே நீண்ட கால (15 ஆண்டு கால) அடிப்படையில் உற்பத்திச் சக்திகளின் இட அமைப்பு திட்டமிட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது.

பொருளாதார பிரதேசமயப்படுத்தலானது நிர்வகிக்கத் தக்கதாயிருக்க வேண்டும், இதற்கு உரிய ஆட்சி உறுப்புகளும் (அல்லது மைய நிர்வாகமும்) பொதுவான பொருளாதார, சமூகப் பிரச்சினைகளை சுயமாகத் தீர்க்கும் திறமையும் அவசியம். சோவியத் நாட்டில் பொருளாதார பிரதேசமயப்படுத்தலுக்கும் நாட்டின் நிர்வாக பிரதேசப் பிரிவிற்கும் இடையிலான ஒற்றுமை இதற்கு வகை செய்கிறது.

சோவியத் யூனியன் ஒரு பல்தேசிய அரசாகும். இதில் பொருளாதார பிரதேசமயப்படுத்தல் பற்றிய எல்லா திட்டங்களிலும் தேசியக் குடியரசுகளின் வளர்ச்சிக்கு உதவி, இவற்றின் உண்மையான சமத்துவத்திற்கு வகை செய்யும் நோக்கம் கவனத்தில் கொள்ளப்பட்டது. எல்லா குடியரசுகளிலும் உயர் வளர்ச்சியடைந்த தொழிற்துறையும் இயந்திரமயப்படுத்தப்பட்ட பெரும் விவசாயத் துறையும் தோற்றுவிக்கப்பட்டன; முன்னர் தேசிய இனங்களுக்கு இடையிலிருந்த பொருளாதார சமமின்மை இவற்றின் அடிப்படையில் அகற்றப்பட்டது, எல்லா குடியரசுகளின் பொருளாதாரங்களும் நாட்டின் ஐக்கிய தேசியப் பொருளாதார இணையத்தில் இயல்பாக ஒன்றிணைந்தன. யூனியன் குடியரசுகளின் விரைவான பொருளாதார வளர்ச்சி பொது நியதியாக விளங்கியது. கஸாக்ஸ்தான் குடியரசின் எடுத்துக்காட்டு குறிப்பிடத்தக்கது. சோவியத் ஆட்சிக் காலத்தில் குடியரசின் தொழிற்துறை உற்பத்தி 900 மடங்கு அதிகரித்தது. 1937ஆம் ஆண்டு பூராவும் உற்பத்தி செய்யப்பட்ட பொருள் இன்று ஒரு வாரத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது.

சமூக அரசியல் துறையில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் தேசிய இனக் கொள்கை வர்க்க மற்றும் தேசிய இன ஒடுக்கு முறையை முழுவதுமாக அகற்றியது, எல்லா துறைகளிலும் எல்லா மக்களினங்களின் சமத்துவத்திற்கு வகை செய்தது. பல சமூகக் குறியீடுகளின் விஷயத்திலும் யூனியன் குடியரசுகளின் வளர்ச்சி விரைவானதாயிருந்தது, எனவே வேறுபாடுகள் அகற்றப்பட்டன.

சோவியத் நாட்டில் தேசிய இன பிரதேசங்களின் பொருளாதார, சமூக வளர்ச்சி அனுபவத்திற்கு சர்வதேச முக்கியத்துவம் உண்டு. பிரபல பிரிட்டிஷ் வரலாற்றாசிரியர் ஏ. டோய்ன்பி சோவியத் பேரவை விஞ்ஞானி என். ஐ. கோன்ராடுக்கு பின்வருமாறு எழுதினார்: ''உங்களுடைய நாட்டில் மிகப் பல்வேறு மொழிகளில் பேசும் பல்வேறு மக்களினத்தவர் உள்ளனர், மொத்தத்தில் உங்களுடைய நாட்டை ஒரு சிறு உலக மாடெல் எனலாம். இது உலகில் எப்படி சாத்தியம் என்று இந்த கலாசார, மொழி வேறுபாடுகளின் இணைப்பாலும், சமஷ்டி அடிப்படையிலான பொருளாதார, அரசியல் ஒற்றுமையாலும் நீங்கள் சோவியத் நாட்டில் நடத்திக் காட்டியிருக்கின்றீர்கள்; எதிர்காலத்தில் இப்படி நடந்தே தீருமென்று நான் நம்புகிறேன்.''

முன்னர் பின்தங்கியிருந்த கிழக்குப் பிரதேசங்களின் பொருளாதார வளர்ச்சியும், ''மையம் — எல்லையோரம்'' என்ற கடுமையான பிரச்சினைக்கான (இப்பிரச்சினை எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் வளர்முக நாடுகளிலும் எதிர்ப்படுகிறது) தீர்வும் வளர்ச்சி மாடெல்களாகும். நாட்டின் கிழக்குப் பகுதிக்கு உற்பத்திச் சக்திகளை இடம் மாற்ற வேண்டுமென்ற உறுதியான கொள்கை தொடர்ச்சியாகப் பின்பற்றப்பட்டது. இதனால் கிழக்குப் பிரதேசங்கள் நாட்டின் அடிப்படை எரிபொருள்-எரிசக்தி தளமாக மாறின, சோவியத் நாட்டின் தொழிற்துறை உற்பத்தியில் இப்பிரதேசங்களின் பங்கு இடையறாது அதிகரித்தது, இவற்றின் பொருளாதாரக் கட்டமைப்பு பன்முகத் தன்மையைப் பெற்றது.

உலகிலேயே முதன்முதலாக சோவியத் நாட்டில்தான் பிரதேச வளர்ச்சித் தத்துவமும் நடைமுறையும் திட்டமிட்ட முறையில் செயல்படுத்தப்பட்டன, இதற்கு முன் எந்த ஒரு நாடும் தீர்க்காத சிக்கலான கடமைகள் நிறைவேற்றப்பட்டன. மாறிய சூழ்நிலைகளுக்கேற்ற தீர்வுகளை சோவியத் தத்துவம் தேடிக் கண்டுபிடித்தது; 1920ஆம் ஆண்டுகளில் தோற்றுவிக்கப்பட்ட முறைகளால் அப்படியே நிலவ முடியாது, எனவே இவற்றில் திருத்தங்கள் செய்யப்பட்டு, இவை மாற்றியமைக்கப்பட்டன. அதிகபட்சம் ஏற்புடைய கருத்தமைப்புகளைத் தேடுவது இடையறாது தொடர்ந்தது.

1920ஆம் ஆண்டுகளில் பொருளாதார பிரதேசமயப்படுத்தல் தத்துவம், பிரதேசமயப்படுத்தலின் நடைமுறையுடனான இடையறாத் தொடர்பில் உருவானது. 1928 — 1929இல் ஒரு சில தேசிய இன, பொரு

12–1339

ளாதாரத் திருத்தங்களோடு கூட நாட்டை நடைமுறை ரீதியில் பிரதேசமயப்படுத்துவது முடிவடைந்தது.

பின்னால் வாழ்க்கை இதில் தன் திருத்தங்களைக் கொண்டு வந்தது; பொருளாதார பிரதேசமயப்படுத்தலுக்கும் நிர்வாக பிரதேசப் பிரிவினைக்கும் இடையில் படிப்படியாகப் பிளவு ஏற்பட்டது. ஒரு சில மாற்றங்களுக்கு பின்வரும் புறவய மாற்றங்கள் காரணமாயிருந்தன: நாட்டைத் தொழிற்துறைமயப்படுத்தும் கடமை, கிழக்கு பிரதேசங்களின் துரிதமான வளர்ச்சி, தேசிய இன பிரதேசங்களின் எழுச்சி, நாட்டின் பாதுகாப்புத் திறன், முந்தைய கடமைகளின் வெற்றிகரமான நிறைவேற்றத்தால் பொது நிலவரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆகியவையே இக்காரணங்களாகும். பொருளாதார பிரதேசமயப்படுத்தலானது மேற்கூறிய கடமைகளின் நிறைவேற்றத்திற்கு உதவியது, உயரிய வளர்ச்சி வேகங்களுக்கு வழிகோலியது, தேசியப் பொருளாதாரத்தின் துறை ரீதியான மற்றும் பிரதேச ரீதியான கட்டமைப்பின் அடிப்படை மாற்றத்திற்குப் பாதையமைத்தது.

இன்றைய கடமைகள் முற்றிலும் வேறான பொருளாதார அளவுகள், மட்டம், கட்டமைப்பிலிருந்து பிறக்கின்றன. உலகின் மொத்த தொழிற்துறை உற்பத்தியில் புரட்சிக்கு முந்தைய ருஷ்யாவின் பங்கு 4% ஆக இருந்ததெனில், 1980ஆம் ஆண்டுகளில் சோவியத் யூனியனின் பங்கு $^1/_5$ ஆக இருந்தது. சோஷலிசக் கட்டுமான ஆண்டுகளில் பொருளாதாரம் விரைவான வேகத்தில் வளர்ந்தது.

12ஆவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்கும் 2000ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்திற்கும் மிகப் பெரும் கடமைகளை சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27ஆவது காங்கிரஸ் (1986) முன்வைத்தது. ''தேசிய வருமானத்தையும் தொழிற்துறைப் பொருட்களின் உற்பத்தியையும் இரட்டிப்பாக்கத் திட்டமிடப்படுகிறது. நாட்டின் உற்பத்தி உள்ளாற்றல் கணிசமாகப் பெருக்கப்பட்டு அடியோடு மாற்றியமைக்கப்படும். இதனால் முந்தைய சோவியத் ஆட்சிக் காலம் முழுவதிலும் தோற்றுவிக்கப்பட்ட பொருளாதார உள்ளாற்றலுக்குச் சமமான புதிய உள்ளாற்றல் அடுத்த 15 ஆண்டுகளில் தோற்றுவிக்கப்படும், கம்யூனிசத்தின் பொருளாயத தொழில்நுட்ப அடித்தளத்தை ஏற்படுத்துவதில் முக்கிய அடி எடுத்து வைக்கப்படும்'' என்று கட்சியின் 27ஆவது காங்கிரசிற்கு சமர்ப்பித்த அறிக்கையில் சோவியத் பிரதமர் என். ஐ. ரிஷ்கோவ் குறிப்பிட்டார்.

பொருளாதாரம் வளர்ச்சியடைந்த அதே நேரத்தில் நாட்டின் பிரதேசக் கட்டமைப்பில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. தேசிய இன குடியரசுகள், பிரதேசங்களின் பொருளாதாரம், பழைய தொழிற்துறை பிரதேசங்களை விட விரைவாக வளர்ந்தன, பல குறியீடுகளில் இவை அருகில் உள்ள அயல் நாடுகளை விஞ்சி நிற்கின்றன. பின்தங்கிய தேசிய இன எல்லைப் பகுதிகளே சோவியத் நாட்டில் இன்று இல்லை. ''நாட்

டில் முதிர்ச்சியடைந்த சோஷலிச சமூக உறவுகள் நிலைநாட்டப்பட்டுள்ளன, சோவியத் குடியரசுகளின் பொருளாதார வளர்ச்சி மட்டங்களைச் சமப்படுத்தும் கடமை பெரிதும் நிறைவேற்றப்பட்டு விட்டது'' என்று சோவியத் யூனியன் உருவாகி 60 ஆண்டுகள் நிறைவாவதை யொட்டி கட்சியின் மத்தியக் கமிட்டி வெளியிட்ட தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கட்சியின் 27ஆவது காங்கிரசில் ஏற்கப்பட்ட கட்சி வேலைத்திட்டத்தின் புதிய பதிப்பில் பின்வரும் கடமைகள் முன்வைக்கப்பட்டுள்ளன: ''...ஒரே ஐக்கிய தேசியப் பொருளாதார இணையத்தின் வரம்புகளுக்குள் ஒவ்வொரு குடியரசின் பொருளாயத, ஆன்மீக உள்ளாற்றல் பெருக்கப்பட வேண்டும். யூனியன் குடியரசுகள், சுயாட்சி குடியரசுகள், சுயாட்சிப் பகுதிகள், சுயாட்சி வட்டங்கள் ஆகியவற்றின் முன்முயற்சிகளை நாடு தழுவிய அளவில் மைய நிர்வாகத்துடன் இணைப்பதானது நாட்டின் வளங்களையும் ஸ்தல இயற்கை வளங்களையும் மற்ற சிறப்பியல்புகளையும் விவேகமாகப் பயன்படுத்த உதவும். குடியரசுகளுக்கு இடையில் உழைப்புப் பிரிவினையைத் தொடர்ச்சியாக வளர்க்க வேண்டும், நிர்வாக மட்டங்களைச் சமப்படுத்த வேண்டும், புதிய பிரதேசங்களைப் பொருளாதார ரீதியாக மீட்பதில் தீவிர பங்கேற்பிற்கு ஊக்கமளிக்க வேண்டும், குடியரசுகளுக்கிடையில் ஊழியர்கள், நிபுணர்களின் பரிவர்த்தனைக்கு ஊக்கமளிக்க வேண்டும், குடியரசுகளில் வாழும் எல்லா தேசிய இனத்தவர், மக்களினத்தவரிலிருந்தும் தேர்ச்சி மிகு ஊழியர்களைப் பயிற்றுவிப்பதை மேம்படுத்த வேண்டும்.''

நாட்டின் பொருளாதார உள்ளாற்றலைத் தீவிரமாகப் பெருக்கியதானது ஏற்கெனவே நிர்வாக அமைப்பு முழுவதையும் சிக்கலாக்கியுள்ளது; இதனால் நாட்டின் நிர்வாக பிரதேசப் பிரிவு சிக்கலானதாக, பல கட்டங்களைக் கொண்டதாக ஆகியுள்ளது.

பிரதேசக் கோட்பாட்டின்படி பொருளாதார நிர்வாகத்தை ஒழுங்கமைக்கும் முயற்சிகள் (1957 — 1963இல் 105 நிர்வாக பொருளாதார பிரதேசங்களில் தேசியப் பொருளாதார கவுன்சில்கள் நிலவின) வெற்றியடையவில்லை; தேசியப் பொருளாதாரம் தீவிரமடைந்து வந்த பொழுது இவற்றால் வெற்றியடைந்திருக்கவும் முடியாது. இன்று சோவியத் அரசுத் திட்டக் கமிஷன் 19 பெரிய பொருளாதார பிரதேசங்களைப் பிரதேசத் திட்டமிடலுக்கு உள்ளாக்கியுள்ளது, ஆனால் இதுதான் சாலச் சிறந்த நிர்வாகக் கட்டமைப்பு என்று கூற முடியாது. எனவே துறை ரீதியான மற்றும் பிரதேச நிர்வகிப்பை நெகிழ்வான முறையில் இணைப்பதன் மீது பெரும் கவனம் செலுத்த வேண்டுமென்று கட்சியின் 27ஆவது காங்கிரசில் குறிப்பிடப்பட்டது.

பொருளாதார புவியியலர் என். என். கலஸோவ்ஸ்கி தீட்டிய பிரதேச உற்பத்தி இணையங்களின் தத்துவமும் நடைமுறையும் இப்பாதையில் குறிப்பிட்ட உந்து சக்தியை அளித்தன; இவை யுத்தத்திற்குப்

பிந்தைய ஆண்டுகளில் பெரிதும் பரவியிருந்தன. இதில் இரண்டு எதிரெதிரான, அதே சமயம் ஒன்றுடன் ஒன்று பிரிக்க இயலாதபடி தொடர்புடைய போக்குகள் (பிரதேச அம்சமும் துறை அம்சமும்) இணைந்துள்ளன.

தேசியப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த (உற்பத்தி மற்றும் உற்பத்தியோடு நேரடித் தொடர்பற்ற) ஸ்திரமான, பரஸ்பரத் தொடர்புடைய அமைப்புகள், மனித வளம் மற்றும் இயற்கை வளங்களின் ஒட்டுமொத்தம்தான் பிரதேச உற்பத்தி இணையம் எனப்படுகிறது; திட்டப்படி தோற்றுவிக்கப்படும் இந்த ஒட்டுமொத்தம் சீரிசைவான விகிதாச்சாரத்தில் வளரும். குறிப்பிட்ட தேசியப் பொருளாதாரப் பிரச்சினைக்குக் கூட்டாகத் தீர்வு காண்பதற்காகவே இது உருவாகி இயங்குகிறது.

சோவியத் யூனியனில் பிரதேச உற்பத்தி இணையங்கள், புதிய இடத்தின் வளங்களை தேசியப் பொருளாதார சுழற்சியில் ஈடுபடுத்தும் நோக்கத்தோடு அதிகம் மீட்கப்படாத மிகப் பெரும் பரப்புகளில் தோற்றுவிக்கப்படுகின்றன. இது தவிர, ஏற்கெனவே மீட்கப்பட்ட பகுதிகளிலும் இத்தகைய இணையங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன, இதனால் இவை புதிய துறையில் விசேஷ தேர்ச்சி பெறுகின்றன அல்லது ஏற்கெனவே உள்ள துறையில் வலிமையானவையாகின்றன.

பிரதேச உற்பத்தி இணையங்கள், அரசின் பெரும் நீண்ட கால நடவடிக்கையின் பயனாய் தோற்றுவிக்கப்படுகின்றன; இதனால் பிரதேசத்திலுள்ள உற்பத்திச் சக்திகள் விரைவாக வளர்ச்சியடைகின்றன (உதாரணமாய் 10 ஆண்டுகளில் மேற்கு சைபீரியாவில் எண்ணெய் எடுப்பு 10 மடங்கு அதிகரித்தது), முக்கியமான பெரும் இயற்கை வளங்கள் சுழற்சியில் ஈடுபடுத்தப்படும். திட்டவட்டமானதொரு பிரச்சினையின் தீர்விற்கேற்ற அடிப்படை வளத்தின் குவிப்புதான் குறிப்பிட்ட இணையம் தோன்ற வழிவகுக்கிறது. எனவே பிரதேச உற்பத்தி இணையமானது ஏதாவது ஒரு குறிப்பிட்ட பிரதேசம் முழுவதிலும் இருக்கலாம் அல்லது இதன் ஒரு பகுதியில் இருக்கலாம் அல்லது இரண்டு வெவ்வேறு பிரதேசங்களில் பரவியிருக்கலாம். பிரதேச உற்பத்தி இணையத்திற்கான விஞ்ஞான அடிப்படையைத் தரும் பொழுது இதன் இயற்கை வளங்களையும் மனித ஆற்றலையும் எப்படி சாலச் சிறந்த முறையில் பயன்படுத்துவது என்பதை நிர்ணயிக்க வேண்டியது அவசியம். இங்கு முக்கிய அடிப்படை குறைந்தபட்ச செலவுகளாகும்.

மேற்கு சைபீரியா எண்ணெய் எரிவாயு இணையத்தைத் தோற்றுவிப்பது மிகவும் சிக்கலானதாயிருந்தது. கடுமையான தட்பவெப்ப நிலை, இந்த இடம் போதிய அளவு ஆராயப்படாதது, அதிகம் மீட்கப்படாதது, குறைவான மக்களடர்த்தி (இங்கே மக்கள்தொகை அடர்த்தி 1 ச.கி.மீ.க்கு நபர் ஒருவருக்கும் குறைவு, இது மேற்கு ஐரோப்பாவுடன் ஒப்பிடும் பொழுது 100—200 மடங்கு குறைவு) ஆகியவையே இதற்குக்

காரணம். எனவே போக்குவரத்து மற்றும் சமூக உள்கட்டமைப்பிற்கும், பெருமளவில் மக்களைக் கொண்டு வரவும் பெரும் முதலீடுகள் தேவைப் படுகின்றன, கட்டுமானச் செலவுகள் கூடுகின்றன.

நாட்டில் பிரதேச உற்பத்தி இணையங்கள் தோன்றியுள்ளதையடுத்து இவற்றை நிர்வகிக்கும் பிரச்சினைகள் மீது பெரும் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியம் ஏற்பட்டுள்ளது என்று கட்சியின் 27ஆவது காங் கிரசில் குறிப்பிடப்பட்டது. இலாக்காக்களுக்கு இடையிலான வேறுபாடு கள் பல கடினமான பிரச்சினைகளை முன்வைக்கின்றன. இயற்கை வளங்களைப் பன்முக ரீதியில் பயன்படுத்தவும் பிரதேச உற்பத்தி இணை யங்களிலிருந்து அதிகபட்சப் பயனைப் பெறவும், இலாக்கா நலன்களுக்கு அப்பாற்பட்ட, அக்கறையுள்ள எல்லா தரப்புகளின் நலன்களையும் இணைக்கக் கூடிய ஒரு நிர்வாக உறுப்பு அவசியம்.

மிகப் பெரும் நீண்ட கால துறை செயல்திட்டங்களோடு கூட (உணவுப் பொருள் செயல்திட்டம், எரிசக்தி செயல்திட்டம்) ''சைபீ ரியா'', ''யுரால்'' போன்ற பிராந்திய செயல்திட்டங்களும் ருஷ்ய சமஷ்டிக் குடியரசின் கருமண் அல்லா பிரதேசத்தின் சமூக பொருளா தார வளர்ச்சித் திட்டமும் உள்ளன; இவை பிராந்தியப் பொருளா தார, சமூக, புறச்சூழல் பிரச்சினைகளைத் தீர்க்கின்றன. பிரதேச அளவில் பார்த்தால் இவற்றில் ஒவ்வொன்றும் மேற்கு ஐரோப்பாவின் மிகப் பெரும் நாடுகளைக் கூட விஞ்சி நிற்கின்றன.

எந்த ஒரு நாட்டிலும், ஒரு புறம் பெரிய நகரங்களின் வளர்ச்சியை யும் மறு புறம் சிறு, நடுத்தர நகரங்களின் வளர்ச்சியையும் ஒத்திசைவிக் கும் பிரச்சினை உள்ளது. சோவியத் நாட்டிலும் இது உள்ளது. ஏற் கெனவே குறிப்பிட்டபடி, பெரும் நகரங்களின் வளர்ச்சியைக் கட்டுப் படுத்தும் கொள்கை ஓரளவு தொடர்ச்சியாகப் பின்பற்றப்படுவதால் இது அவ்வளவு கடுமையாக முன்நிற்கவில்லை. ஆனால் எதிர்காலத்தி லும் தொடர்ந்து இத்தகைய கவனம் செலுத்தப்பட வேண்டும். என வேதான், சிறு மற்றும் நடுத்தர நகரங்கள், தொழிலாளர் குடியிருப்பு களின் வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும், பெரும் தொழில் நிறுவனங்களுடன் சேர்ந்து பொருட்களை உற்பத்தி செய்யும் விசேஷ துறைகளையும், விவசாயப் பொருட்கள் மற்றும் ஸ்தல மூலப் பொருட்களைப் பதப்படுத்தும் துறைகளையும் சேவை துறைகளையும் இங்கே ஏற்படுத்த வேண்டுமென்று கட்சி வேலைத்திட்டத்தின் புதிய பதிப்பில் கூறப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப ரீதியில் நன்கு அமைக்கப்பட்ட சிறு தொழில் நிறுவனங்களுக்கு நிறைய அனுகூலங்கள் உண்டு என்று கட்சியின் 27ஆவது காங்கிரஸ் குறிப்பிட்டது; இவை பெரியவற்றை விட உடனுக் குடன் செயல்படக் கூடியவை, நெளிவு சுழிவானவை. இத்தகைய உற்பத்திகளின் சமூக அனுகூலம் கண்கூடு — இவை சிறு, நடுத்தர நகரங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு சுவாரசியமான வேலையைத்

தருகின்றன, நவீன சமூக உள்கட்டமைப்பைத் தோற்றுவிப்பதற்கான பொருளாயத அடித்தளம் இவற்றின் வசம் உள்ளது.

என்றாலும் துறை ரீதியான நிர்வாகத்தையும் பிரதேச நிர்வாகத் தையும் இணைப்பது மிகச் சிக்கலான பிரச்சினைகளில் ஒன்றாக இருக் கிறது. வெறுமனே துறை ரீதியான அல்லது வெறுமனே பிரதேச ரீதியான நிர்வாகம் மட்டும் இருப்பதானது பொது சமூக உழைப்புப் பிரிவினையில் கடும் முரண்பாடுகளுக்கு இட்டுச் செல்லும், உற்பத்தி வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் என்று பல்லாண்டு அனுபவம் காட்டு கிறது.

யதார்த்தமான வழி எங்குள்ளது? வளர்ச்சியடைந்த சோஷலிச சமுதாயத்திற்கு ஏற்ற நிர்வாக முறை எப்படிப்பட்டதாயிருக்க வேண்டும்?

நிர்வாக முறையை மாற்றும் பிரதான வழி கட்சியின் 27ஆவது காங்கிரசில் சுட்டிக் காட்டப்பட்டது. ''சீரமைப்பின் இன்னொரு முக்கிய அம்சம், திட்டமிடுவதிலும் நிர்வகிப்பிலும் பிரதேச அணுகு முறையை வலுப்படுத்த வேண்டும் என்பதாகும். நம்மைப் போன்ற ஒரு பரவலான, பல்வேறு சூழ்நிலைகளையுடைய, பல்தேசிய நாட்டிற்கு இது குறிப்பாக அவசியம்.... சோவியத் அரசுத் திட்டக் கமிஷன் மற்றும் அமைச்சகங்களின் நடவடிக்கைக்கு அதிக பிரதேச திசையமைவைத் தர வேண்டும். பெரிய பொருளாதார பிரதேசங்களுக்கேற்ப தேசியப் பொருளாதாரத்தை நிர்வகிக்கும் பிரச்சினையை ஆராய வேண்டும்'' என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளர் மிகையில் கர்பச்சோவ் குறிப்பிட்டார்.

பெரும் சோவியத் நாட்டின் வளர்ச்சி முழுவதும், பொருளாதாரத் தைப் பிரதேச ரீதியாக ஒழுங்கமைக்கும் சிக்கலான பிரச்சினை முழுவ தும் பிரதேச அணுகுமுறையை வலுப்படுத்துமாறு கட்டளை யிடுகின்றன.

இவ்வாறாக புவியியல் விஞ்ஞானத்தின் கடமை இன்னமும் சிக்கலான தாகிறது. இது வெறும் பொருளாதார பிரதேசங்களைப் பற்றி மட்டு மின்றி இயற்கை நிர்வாக பிரதேசங்களின் வடிவமைப்பைத் தர வேண்டும். இது நாட்டின் பெரும் நிர்வாக பிரதேசப் பிரிவுகளுக்கு மட்டு மின்றி புறச்சூழல் நிலவரத்தை நிர்வகிக்கவும் விஞ்ஞான பூர்வமான, பிராந்தியமயப்படுத்தப்பட்ட புறச்சூழல் கொள்கைக்கும் முக்கியமானது. சோவியத் யூனியனின் வடக்கில் ஐரோப்பியப் பகுதியில் ஓடும் சில ஆறுகளைத் தென் பகுதிகளுக்குத் திசை திருப்புவது பற்றிய திட்டம் குறித்து சோவியத் நாட்டில் பரவலான விவாதம் நடந்தது. இது இப்படிப்பட்ட பிரச்சினைகளின் தீர்வில் ஜனநாயக அம்சத்திற்குச் சான்று பகர்கிறது. இத்திட்டத்தை எதிர்த்தவர்களின் முக்கிய வாதத் தில் புறச்சூழல் அம்சங்கள்தான் முக்கியமானவையாக இருந்தன, இத்திட்டம் பின்னர் கைவிடப்பட்டது.

''மையப்படுத்தப்பட்ட திட்டப் பொருளாதாரத்தையும்'' ''சுதந் திரமான சந்தைப் பொருளாதாரத்தையும்'' ஒன்றிற்கு எதிராய் ஒன்றை வைக்கும் ஒரு சில பழைய மாதிரிகளைக் கைவிட்டால், சமுதாயத்தின் பிரதேச ஒழுங்கமைப்பு பற்றிய சோவியத் அனுபவம் கவனிக்கத் தக்கது என்று தோன்றுகிறது. ஏனெனில் உலகம் பல்வகையானது, இதில் சோஷலிசம், முதலாளித்துவம் என்ற இரண்டு துருவங்கள் மட்டுமில்லை, இதில் வளர்முக நாடுகள் பல உள்ளன, இன்றைய உலகில் மக்கள்தொகை ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் இந்நாடு களின் பங்கு அதிகரித்து வருகிறது. இந்த வளர்முக நாடுகள் எல்லா இடங்களிலும் வளர்ச்சி மாடெல்களைத் தேடுகின்றன.

என்றாலும் 1970ஆம் ஆண்டுகள் வரை சோவியத் அனுபவம், சோஷலிச நாடுகளைத் தவிர மற்ற நாடுகளுக்கு முன்பின் தெரியாததா யிருந்தது; சோஷலிச நாடுகள் மட்டுமே தம் திட்டவட்டமான சூழ்நிலை களுக்கேற்ப இதைப் பயன்படுத்தின. 1970-80ஆம் ஆண்டுகளில் ஒரு சில மாற்றங்கள் தோன்றின. ஒரு சில வளர்முக நாடுகளில் சோவியத் புவியியலர்களின் பணி இம்மாற்றங்களுக்கு உதவியது. திட்ட நோக் கங்களுக்கான பிரதேசமயப்படுத்தலின் சோவியத் அனுபவத்தைத் தொகுத்து ஒரு நூல் 1985இல் ஐ. நா. பிராந்திய ஆராய்ச்சி மையத்தில் வெளிவந்தது (*Regionalization for Planning in the USSR,* Nagoja, 1985).

ஆனால் இவையெல்லாம் பிரதேசத் திட்டமிடலின் பங்கு, முறைகள் பற்றிய கருத்துகளின் பரிமாற்றத்தின் துவக்கம் மட்டுமே. இந்த அனுபவத்தை ஒரு வறட்டு சூத்திரமாக, ''எஞ்சிய உலகிற்கான'' ஒரு கட்டாய மாதிரியாக சித்தரிக்க நூலாசிரியர்கள் முயலவில்லை என்பது இந்த அத்தியாயத்திலிருந்து தெளிவாகும்; சூழ்நிலைகள் வெவ் வேறானவை என்பதாலும் சமுதாய அமைப்புகளும் அவற்றின் லட் சியங்களும் வாய்ப்புகளும் வெவ்வேறானவை என்பதாலும் இது யதார்த் தமல்ல. என்றாலும் கருத்துப் பரிமாற்றம் பயனுடையதாயிருக்கலாம், ஒரு சில கருத்தமைப்புகள் மேற்கிலும் கிழக்கிலும் — பெரிதும் மாற்றிய மைக்கப்பட்ட வடிவங்களில் என்றாலும் — பல நாடுகளில் பயன்படுத் தப்படலாம். ஆயுதப் போட்டியை விட கருத்துப் போட்டியும் கருத்துப் பரிவர்த்தனையும் அதிகப் பயன் தரும், அதுவும் எல்லா நாடுகள், மக்கள் இனங்கள் சம்பந்தப்பட்ட பல உலகப் பிரச்சினைகள் சிக்கல டைந்து வரும் பொழுது இது சொல்லாமலே புரியும்.

அத்தியாயம் ஆறு

இந்தியாவில் பிரதேசமயப்படுத்தலும் பிராந்தியத் திட்டமிடலும்: கோட்பாடுகள், உருமாதிரிகள், கருத்தமைப்புகளின் பரிணாம வளர்ச்சி

இந்தியா வளர்முக நாடுகளில் மிகப் பெரியது, இவற்றின் மத்தியில் மிகவும் வளர்ச்சியடைந்த நாடுகளில் ஒன்று. பிரதேசமயப்படுத்தலில் இந்தியாவிற்குப் பரவலான அனுபவம் உண்டு. இந்த மாபெரும் நாடு இயற்கை, இயற்கை வளம், மக்கள்தொகை, மானுடவியல், பொருளாதாரம் ஆகியவற்றில் மிகப் பல்வேறானது; அதே சமயம் இது தன் பன்முகத் தன்மையில் ஒரு ஒற்றுமையையும் காண்கிறது. இந்தியாவை ''மொத்தமாக'' மட்டும் அணுகி புரிந்து கொள்ள முடியாது. நாட்டை புவியியல் ரீதியில் விவரிக்கும் முதல் முயற்சிகளிலேயே நாட்டை பிரதேசங்களாகப் பிரிக்கும் அம்சம் அடங்கியிருந்தது என்பது இயல்பானது, ஆனால் இந்தியாவிலும் மற்ற முன்னாள் காலனி, சார்பு நாடுகளிலும் பிரதேசமயப்படுத்தும் பிரச்சினைகள் இந்நாடுகள் சுதந்திரமடையும் வரை கிட்டத்தட்ட ஆராயப்படவேயில்லை. இன்று இவை புவியியல் மற்றும் பிராந்தியப் பொருளாதார ஆராய்ச்சிகளில் முக்கிய இடத்தை வகிக்கின்றன, இவை முக்கியமாக, வளர்ச்சித் திட்டங்கள், செயல்திட்டங்களுடனும் அரசுக் கண்காணிப்புடனும் தொடர்புடையவை.

வளர்முக நாடுகளின் காலனியாதிக்கப் பொருளாதாரக் கட்டமைப்பை மாற்றியமைப்பதில் முக்கிய உந்துசக்தியாகத் திகழும் அரசிற்கு, உற்பத்திச் சக்திகளின் அமைவிடத்தின் மீதும் பிரதேசங்கள் உருவாவதன் மீதும் நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கம் செலுத்தும் வாய்ப்புண்டு. எனவே பிராந்திய வளர்ச்சி மற்றும் திட்டமிடலுக்கு (திட்டமிடல் விடுதலையடைந்த நாடுகளில் பரவி வருவது தெரிந்ததே) விஞ்ஞான அடிப்படையை அளிப்பது அவசியமாகியது. அரசின் தரப்பிலிருந்து வந்த வேண்டுகோள்கள், நேரடிக் கட்டளைகள் காரணமாய் பிராந்திய வளர்ச்சி, பிரதேசமயப்படுத்தல், பிராந்தியத் திட்டமிடல் சம்பந்தமான ஏராளமான ஆராய்ச்சிகளுக்கும் விசேஷ வெளியீடுகளுக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இத்துறையில் இந்தியாவிற்கு அதிகபட்ச அனுபவம் உண்டு என்று எவ்வித மிகைப்படுத்தலுமின்றி கூறலாம்.

இந்தியாவில் திட்டமிடலின் முன்னோடிகளாக விளங்கிய இந்திய

விஞ்ஞானிகளும் அரசுத் தலைவர்களும் பிராந்தியத் திட்டமிடலை நாட்டு வளர்ச்சியின் பொது செயல்திட்டத்தின் ஒரு மிக முக்கிய அங்கமாக முன்வைத்தனர். பிரபல இந்தியப் பொருளாதார நிபுணர் பேராசிரியர் பி. எஸ். மகலனோபிஸ் பின்வருமாறு எழுதினார்: ''நாட்டின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு இயற்கை வளங்களை அதிகபட்சம் முழுமையாகப் பயன்படுத்துவதுதான் பொருளாதாரத் திட்டமிடலின் நோக்கமாக இருக்க வேண்டும். எனவே பன்முகப் பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புகளைத் தோற்றுவிக்கும் குறிப்பிட்ட புவியியல் பகுதிகளின் பிராந்தியத் திட்டமிடல் பற்றிய கருத்தமைப்புகள் இந்தியாவில் மேன்மேலும் அதிகமான கவனத்தைக் கவர்ந்து வருகின்றன.'' (Mahalanobis, 1960, p. III.)

இந்தியத் திட்டக் கமிஷனின் உறுப்பினரும் எதிர்காலத் திட்டமிடல் பிரிவிற்குத் தலைமை தாங்கியவருமான பி. பன்ட் இதே மாதிரி கருத்து தெரிவித்தார்: ''எதிர்காலப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் கால அளவில் முதலீடுகளையும் உற்பத்தியையும் திட்டமிடுவதுடன் நின்று விடக் கூடாது, இவை அமைவிடத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். விவசாயத் துறை, தொழிற்துறை, எரிசக்தித் துறை, போக்குவரத்து ஆகியவற்றின் இட அமைப்பும், நகர மையங்களில் அமைவிடமும் அடர்த்தியும், சமுதாயத்தின் சமூக, பொருளாதாரக் கடமைகளை நிறைவேற்றும் பாதையில் சாலச் சிறந்த பயன்களை அடைய உதவ வேண்டும் என்பதற்காகவே மேற்கூறிய அணுகுமுறை தேவைப்படுகிறது. பொதுவான நீண்ட காலப் பொருளாதார வளர்ச்சித் திட்டம் இயற்கை வளங்கள் மற்றும் வாய்ப்புகளைப் பற்றிய பிரதேச ஆராய்ச்சிகளின் அடிப்படையிலானது; இது தன் பங்கிற்கு, பிராந்தியத் திட்டமிடலுக்கான திசையமைவையும் சீரிசைவையும் அளிக்க வேண்டும், தனிப்பட்ட வகையான வளர்ச்சி பல தொடர்புடைய அம்சங்களின் மீது செலுத்தும் தாக்கத்தைக் காட்ட வேண்டும்.'' (Pant, 1962.)

1950க்களின் தொடக்கத்தில் முதல் ஐந்தாண்டுத் திட்டம் ஏற்கப்படும் பொழுதே அதில் பிராந்திய வளர்ச்சி சம்பந்தமான ஒரு சில தனி பிரச்சினைகள் இடம் பெற்றிருந்தன. ஆனால் திட்டமிடலின் ஆரம்பக் கட்டங்களில், அந்தத் திட்டத்தில் பிராந்திய அம்சமும், ஸ்தல வளங்களின் வளர்ச்சி பற்றிய அம்சமும் போதுமான அளவு ஆராயப்படவில்லை என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

1950ஆம் ஆண்டுகளின் நடுவில் இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் ஏற்கப்பட்ட அதே நேரத்தில், பிராந்தியக் கொள்கையுடன் நேரடித் தொடர்புடைய வேறு சில முக்கிய அரசாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதாவது 1956இல் மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டன, 1956 ஏப்ரலில் தொழிற்துறைக் கொள்கை பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கனரகத் தொழிற்துறையைத் துரிதமான வேகத்தில் தோற்றுவிக்க வேண்டும் என்ற கொள்

கை ஏற்கப்பட்டதையடுத்து பெரிய அரசுக் கட்டுமான அமைப்பிடம் பற்றிய பிரச்சினை முக்கியப் பிரச்சினைகளில் ஒன்றாகியது. இவை யெல்லாம் சேர்ந்து, இந்தியாவில் 1950ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதி யிலிருந்து அமைப்பிடம் மற்றும் பிராந்திய வளர்ச்சி பற்றிய பிரச்சினை களின் பாலான கவனத்தை அதிகப்படுத்தின.

பிராந்தியத் திட்டமிடல் சம்பந்தமான முறையியல் அடிப்படை யிலான கருத்துநிலைகள் 1960க்களின் ஆரம்பத்தில் உருவாக்கப்பட்டன, மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் பிரதிபலித்தன. பிந்தைய எல்லா திட்டங்களிலும் இதற்குரிய பிரிவுகள் இடம் பெற்றன. இந்தியாவில் அதிகாரப் பூர்வமாக ஏற்கப்பட்ட பிராந்தியக் கொள்கையின் முக்கியக் கோட்பாடுகள் ஓரளவு திட்டவட்டமாயும் நிரந்தரமாயும் நிர்ணயிக்கப் படுகின்றன. இவை தேசிய வளர்ச்சியின் நலன் கருதி காலனியாதிக்கப் பொருளாதாரத்தின் பிரதேசக் கட்டமைப்பை மாற்றியமைக்கும் புற வயப் போக்குகளைப் பிரதிபலிக்கின்றன; அதாவது சமூக பொருளா தார வளர்ச்சியின் பிராந்திய மட்டங்கள் மிகவும் சமமற்றிருந்ததன் பின்னணியில் இந்தப் பொருளாதாரத்திற்கே உரித்தான ''பிளவு'' அம்சங்களும் ஒற்றுமையின்மையும் — நீண்ட காலமாக சர்வதேச உழைப்புப் பிரிவினையில் நிலவிய சமமின்மையே இவற்றிற்குக் கார ணம் — அகற்றப்படுகின்றன.

பின்தங்கிய பிரதேசங்களின் வளர்ச்சி, பொது மற்றும் பிராந்திய சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தல், நாட்டின் ஒற்றுமை யை வலுப்படுத்தல் ஆகிய முரண்பாடான, பரஸ்பரத் தொடர்புடைய பிரச்சினைகளைத் தீர்க்க நாட்டில் வெவ்வேறு கட்டங்களில் வெவ் வேறு முறைகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1970 முதல் திட்டமிடலில் பிராந்திய புறச்சூழல் அம்சங்கள் படிப்படியாகத் தோன்றி வலுத்து வருகின்றன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ''புறச்சூழல்'' என்ற பிரிவு முதன்முதலாகத் தோன்றியது. இவ்வாறாக இந்தியாவில் திட்டமிடலானது, வெறும் சமூக பொருளாதாரத் திட்டமிடலாக மட்டுமின்றி புறச்சூழல் திட்டமிடலாகிறது: சீர்கேடடைந்து வரும் புறச்சூழல் நிலவரத்தைப் பற்றிய யதார்த்தமான மதிப்பீடுகள் தரப்படு கின்றன, இத்துறையில் முக்கிய விஞ்ஞான ஆராய்ச்சிக் கடமைகள் நிர்ணயிக்கப்படுகின்றன, புறச்சூழல் அம்சமானது எந்த விதமான பொருளாதார நடவடிக்கையிலும் அடங்கியிருக்க வேண்டும் என்று கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

பிரதேசமயப்படுத்தல் சம்பந்தமான சோவியத் தத்துவமும் முறை களும் இந்தியாவில் கவனத்தைக் கவர்ந்து வருகின்றன. **இந்தியாவின் பொருளாதார பிரதேசமயப்படுத்தல்: பிரச்சினைகளும் அணுகுமுறைகளும்** என்ற முதல் சோவியத்-இந்திய புவியியல் நூலின் முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது: ''...இன்றைய இந்தியாவையும் 1920ஆம் ஆண்டுகளின் சோவியத் யூனியனையும் நேரடியாக ஒப்பிடுவது

சரியானது என்று சொல்ல முடியாது. உலகம் ஒன்றும் நின்ற இடத்தி லேயே நின்று கொண்டிருக்கவில்லையே... இன்று எந்தச் சூழ்நிலையில் இந்தியா தன் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு வருகிறதோ அச்சூழ் நிலைகள் கடந்த காலத்தில் சோவியத் நாட்டில் நிலவிய சூழ்நிலை களிலிருந்து முற்றிலும் வேறானவை. அதுவும் இந்தியா, தன் ஆக்க பூர்வமான மாற்றங்களில் கடந்த பத்தாண்டுகளின் உலக அனுபவம் முழுவதையும் பயன்படுத்தலாம்.'' இந்தியாவிற்கென்று தனிச் சிறப்பியல் புகள் ஏராளமாக உண்டு, இயற்கையமைப்பு, சமூக அமைப்பு, வரலாறு, மக்கள்தொகை பிரச்சினைகள் போன்றவற்றில் இந்தியா சோவியத் நாட்டிலிருந்து வேறுபடுகிறது. என்றாலும் இந்த முதல் கூட்டு நூல் தோற்றுவிக்கப்பட்டதானது (இதற்குப் பின் வந்த சோவியத்-இந்திய புவியியல் படைப்புகளும்) இரண்டு நாடுகளின் தொழில்நுட்ப பொருளா தார வளர்ச்சியிலும் சில பொது அம்சங்கள் உள்ளதையும், சோவியத் விஞ்ஞானிகளால் முன்வைக்கப்பட்டு சோவியத் தேசியப் பொருளா தாரத்தில் நடைமுறையில் சோதிக்கப்பட்ட பல முறையியல் கோட்பாடு களை இந்தியச் சூழ்நிலையில் ஆக்க பூர்வமாகப் பயன்படுத்த பெரும் வாய்ப்புகள் உள்ளதையும் காட்டுகிறது. சிக்கலான இன, மொழி உள்ளடக்கத்தையும், கடுமையான தேசிய ஒற்றுமை பிரச்சினைகளையும் கொண்ட இந்தியாவில், சோவியத் நாட்டில் தேசிய இனப் பிரச்சினை தீர்க்கப்பட்ட விதம், முன்னர் பின்தங்கியிருந்த தேசிய இன வட்டங் களின் விரைவான சமூக பொருளாதார வளர்ச்சி, நாட்டின் ஒற்றுமை வலுப்படுத்தப்பட்ட விதம் ஆகியவற்றின் மீது பேர்ஆர்வம் காட்டப்படு கிறது. 1968 முதல் 1976 வரை இந்தியாவில் மூன்று பெரும் சோவியத்-இந்திய புவியியல் நூல்கள் வெளியிடப்பட்டன; இவை ஒவ்வொன்றும் அந்தந்த சர்வதேச புவியியல் காங்கிரசுகளில் வைக்கப்பட்டு, சர்வதேச புவியியல் துறையினரின் உயர்வான பாராட்டைப் பெற்றன. ஏற்கென வே குறிப்பிட்ட, இந்தியாவின் பொருளாதார பிரதேசமயப்படுத்தல் பிரச்சினைகளைப் பற்றிய நூல், **பிரதேசமயப்படுத்தலின் பொருளாதார, சமூக கலாசார அம்சங்கள், வளர்முக நாடுகளில் நகரமயமாக்கல்** *ஆகிய வையே இந்த மூன்று நூல்களாகும்.*

பின்னர் கூட்டு சோவியத்-இந்திய புவியியல் கருத்தரங்கங்கள் நடக்கலாயின. இயற்கை வளங்களை விவேகமாகப் பயன்படுத்தல், பிராந்திய வளர்ச்சி ஆகிய பிரச்சினைகளுக்குப் பெரும்பாலும் அர்ப் பணிக்கப்பட்ட இவை 1978இல் ஜார்ஜியக் குடியரசிலும் அஸெர்பை ஜானிலும், 1980இல் டெல்லி பிரதேசத்திலும், 1985இல் தாஜிக்கிஸ் தானிலும் நடந்தன. இத்துறையில் பரஸ்பர அனுகூலமுள்ள விஞ்ஞான ஒத்துழைப்பிற்கு உள்ள பரவலான வாய்ப்புகளை — இத்துறையின் முக்கி யத்துவம் மேன்மேலும் வளர்ந்து வருகிறது — இரு நாட்டு நிபுணர்களும் குறிப்பிடுகின்றனர். இது பிராந்தியத் திட்டமிடலின் விஞ்ஞான அடிப் படையை வலுப்படுத்தும். இரண்டு மாபெரும் நாடுகளின் முக்கிய பிராந்

தியப் பிரச்சினைகளின் தீர்வில் சோவியத் - இந்திய ஒத்துழைப்பிற்குப் பரவலான சர்வதேச முக்கியத்துவமும் உண்டு.

வளர்முக நாடுகளில் பிராந்திய வளர்ச்சிப் பிரச்சினைகள், திட்டமிடல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ள பல்வேறு விசேஷ ஐ. நா. ஸ்தாபனங்களில் பல இந்திய நிபுணர்கள் தீவிரப் பங்காற்றுகின்றனர். இந்தியாவின் பிரதேசமயப்படுத்தல் அனுபவம், பிராந்திய வளர்ச்சி மற்றும் திட்டமிடலை முறையாக ஆராய வேண்டும்.

ஏற்கெனவே குறிப்பிடப்பட்டபடி இந்தியா சுதந்திரமடையும் முன் பிரதேசமயப்படுத்தல் சம்பந்தமான நூல்களோ, திட்டமிடல் பற்றிய நூல்களோ நிலவவில்லை. இன்று இந்நூல்கள் இந்தியப் புவியியலில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இந்திய புவியியல் உலகின் முன்னணி தேசிய புவியியல் போக்குகளில் ஒன்றாக உரிமையோடு மதிப்பிடப்படுகிறது. இந்தியா சுதந்திரமடைந்த பின் இந்தியத் தேசிய புவியியல் விஞ்ஞானத்தின் ''தந்தையாக'' கருதப்படும் எஸ். பி. சாட்டெர்ஜி, இந்திய புவியியல் விஞ்ஞானத்தின் அரை நூற்றாண்டுக் கால வளர்ச்சியைத் தொகுத்துரைக்கும் பொழுது இதன் எதிர்காலத்தை பிரதேசமயப்படுத்தலின் வளர்ச்சியுடன் நேரடியாகத் தொடர்புபடுத்தினார்: ''...இன்று இந்தியாவில் தத்துவார்த்த மற்றும் நடைமுறை புவியியல் இந்திய மண்ணில் ஆழமாக வேரூன்றியுள்ள பொழுது இதன் வளர்ச்சிக்கு முழு உத்தரவாதம் உள்ளது. அதுவும் நகர மற்றும் பிரதேசத் திட்டமிடலின் பல்வேறு கட்டங்களில் புவியியலர்களின் உதவியை மேன்மேலும் அடிக்கடி நாடும் பொழுது இது மிகவும் சரியாகும்.'' (Chatterjee, 1964.)

இந்தியாவில் பிரதேசமயப்படுத்தலின் பல்வேறு போக்குகளும் கருத்தமைப்புகளும் உள்ளன. இது சம்பந்தமாக வெளியாகும் எண்ணற்ற படைப்புகள் பிரதேசமயப்படுத்தல் கோட்பாடுகளிலும், தாம் ஆட்கொள்ளும் பிரதேசத்தின் அளவிலும் வகுப்பு தொகுப்பு முறையிலும் வெவ்வேறானவை. பொது லட்சியமும் (மிக விவேகமான இட அமைப்பையும் பிராந்தியப் பொருளாதார வளர்ச்சியையும் ஆதாரப்படுத்தல்) இந்த லட்சியத்தை அடைவதற்கான பாரபட்சமற்ற கருத்தினங்களையும் முறைகளையும் தேடும் உள் தர்க்கமும் மேற்கூறியவற்றை இணைக்கின்றன. இந்தியாவின் பிரதேசங்கள் உருவாகும் புறவய நிகழ்ச்சிப் போக்கின் சிக்கலான தன்மையும் முரண்பாடுகளும் பிரதேசமயப்படுத்தல் பரிசோதனைகளில் பிரதிபலிக்கின்றன.

1. இயற்கை பொருளாதார மற்றும் இயற்கை வள எரிசக்தித் துறை பிரதேசமயப்படுத்தல்

இயற்கை பொருளாதார பிரதேசமயப்படுத்தல், நாடு சுதந்திரமடைந்தது முதலே இந்திய புவியியலர்கள் உருவாக்கி வரும் பிரதேசமயப்

படுத்தலின் முக்கியத் திசையமைவுகளில் ஒன்றாகும். இது வழக்கமான விளக்க ''பொது புவியியல்'' பிரதேசமயப்படுத்தலிலிருந்து பொருளாதார பிரதேசமயப்படுத்தலை நோக்கிய மாறு காலகட்டமாகும்.

இத்திசையில் குறிப்பிடத்தக்க நூல்களில் ஒன்று வி. எல். எஸ். பிரகாச ராவ் எழுதிய **பிராந்தியத் திட்டமிடல்** என்ற சிறு நூலாகும். இது 1949இல் வெளி வந்தது. இந்நூல் நடைமுறை அம்சங்கள் நிறைந்ததாயிருந்தது. இந்நூலாசிரியரின் கருத்துப்படி, ''பிரதேசமயப்படுத்தல் என்பது சீரிசைவான கருத்தமைப்பாகும், பிரதேச வளங்களைச் சாலச் சிறந்த வகையில் பயன்படுத்துவதே இதன் நோக்கமாகும்''. இவருடைய வரையறுப்பின்படி, ''திட்டமிடலின் பிரதேசப் பகுதி என்பது ஒரே மாதிரியான வாழ்க்கை அமைப்பைக் கொண்ட பிரதேசமாகும்; இத்தகைய பிரதேசத்தில் பல்வேறு வளங்களைப் பயன்படுத்துவதும் பொருளாதாரப் பிரச்சினைகளும் ஒரே மாதிரியானவையாக இருக்கும்''. இந்நூலில், சோவியத் யூனியன், அமெரிக்க ஐக்கிய நாடு, கிரேட் பிரிட்டன், ஆஸ்திரேலியா, இன்னும் சில நாடுகளின் பிராந்தியத் திட்டமிடல் அனுபவம் மேற்கோள் காட்டப்படுகிறது. எஸ். எஸ். போஸ், எம்.பி. சவுத்ரி ஆகியோருடன் சேர்ந்து பிரகாச ராவ் இந்தியாவை பிரதேசமயப்படுத்தும் ஒரு முறையை முன்வைத்தார்; அதில் ''பிராந்தியத் திட்டமிடலின் நன்கு திட்டவட்டமான பகுதிகள்'' தனியே சுட்டிக் காட்டப்பட்டிருந்தன (மொத்தம் 21 பகுதிகள்); இவற்றை ஆசிரியர் ''மண்டலங்கள்'' என்று அழைக்கின்றார், சில நேரங்களில் ''பிராந்தியங்கள்'' என்றும் குறிப்பிடுகின்றார். இவற்றில் பெரும்பாலானவை இயற்கை பிரதேசம், பொருளாதாரத்தின் பொதுத் திசையமைவு என்னும் இரண்டு தன்மைகளின்படி பிரிக்கப்பட்டுள்ளன. முக்கிய மொழிகள் பரவியுள்ள விதம் பற்றிய வரைபடங்களையும், மேலே முன்மொழியப்பட்ட பிரதேச முறையையும் ஒப்பிட்ட பிரகாச ராவ் இவை ''பொருந்திவராதவை'' என்றார். இவருடைய கருத்தின்படி, நாட்டின் நிர்வாக பிரதேசப் பிரிவு முழுக்க முழுக்க இயற்கை பொருளாதார பிரதேசங்களின் அடிப்படையில் இருக்க வேண்டும். அதுவும் உயர் மாநில மட்டங்களில் மட்டுமின்றி கீழ்கட்ட நிர்வாக நிலையிலும் இப்படித்தான் இருக்க வேண்டும்.

1964இல் வி. எஸ். எல். பி. ராவ், எல். எஸ். பட்டுடன் சேர்ந்து **இயற்கை வள வளர்ச்சியின் பிராந்திய அடிப்படையை** உருவாக்கினார். உள் ஒற்றுமை, அருகிலுள்ள பகுதிகளுடனான அதிகபட்ச வேற்றுமைகள் ஆகியவற்றின் அடிப்படையில்தான் 11 முக்கிய பிரதேசங்கள் பிரிக்கப்பட்டன. இப்பணி இந்தியப் புள்ளிவிவர கேந்திரத்தின் பிராந்தியப் பிரிவில் நிறைவேற்றப்பட்டது. இந்தியத் திட்டக் கமிஷனின் எதிர்காலத் திட்டப் பிரிவுடன் இக்கேந்திரம் நேரடித் தொடர்பு கொண்டு செயல்பட்டது. மேற்கூறிய பணி இயற்கை பொருளாதார பிரதேசமயப்படுத்தல் கருத்தமைப்பின் கணிசமான பரிணாம வளர்ச்சிக்குச் சான்று

பகர்ந்தது. விவரமான நடைமுறை விஷயங்களைப் பொதுமைப்படுத்தியதன் அடிப்படையிலான பிரதேசப் பாகுபாட்டு முறை விரிவானது; இதில் பல்வேறு வகை தொகுப்பு மட்டங்களைச் சேர்ந்த சுமார் 60 அலகுகள் உள்ளன. பல பிரதேசங்கள் மாநிலங்களின் எல்லைகளுடன் பொருந்தி வரவில்லை என்றாலும் சில சந்தர்ப்பங்களில் தனி மாநிலங்களே பிரதேசங்களாக்கப்பட்டுள்ளன (உதாரணமாக ராஜஸ்தான், அஸ்ஸாம், ஜம்மு காஷ்மிர்). ஒரே மாதிரியான பிரதேசங்களுடன்—இயற்கை விவசாய மண்டலங்களுடன்—கூட ''மைய இடங்களும்'' முன்வைக்கப்பட்டுள்ளன. இவை பெரும் நகரத் திரட்டுகளாகும். தொழிற்துறை, வர்த்தக, நிர்வாகப் பணிகள்தான் இவற்றின் நடவடிக்கையின் அடிப்படையாகும்; இந்த மையங்கள் பிரதேசங்களை உருவாக்குவதில் முக்கியப் பங்காற்றுகின்றன.

1964இல் வி. நாத்தின் தலைமையில் இந்தியத் திட்டக் கமிஷனில் இயற்கை பொருளாதார பிரதேசமயப்படுத்தல் சம்பந்தமாக முன்வைக்கப்பட்ட முறை மேற்கூறியதற்கு நெருக்கமானது. இது 15 பெரிய ''இயற்கை வள'' பிரதேசங்களையும் 61 மண்டலங்களையும் முன்வைக்கிறது. பிரதேசங்கள் என்பவை வழக்கமாகப் பிரிக்கப்படும் பெரும் இயற்கைப் பகுதிகளாகும், இவை குறிப்பிட்ட மாநிலங்களின் எல்லைகளுக்கு அப்பாலும் இருக்கலாம். ஆனால் இரண்டாவது கட்ட அலகாக பிரிக்கப்பட்டுள்ள மண்டலங்கள் ''உள் இயற்கை மற்றும் விவசாயச் சூழ்நிலைகளில் ஒரே மாதிரியானவை, இவை முழுக்க முழுக்க ஒரு குறிப்பிட்ட மாநிலம் அல்லது யூனியன் பிரதேச வரம்புகளுக்குள் மட்டுமே இருக்கும்''. இயற்கை பிரதேசங்கள் மற்றும் நிர்வாக மாநிலங்களின் எல்லைகள் மாற்றப்பட்டுத்தான் பெரும்பாலான மண்டலங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இவ்வாறாக மேற்கூறிய வகைமுறை, வழக்கமான இயற்கை பிரதேசமயப்படுத்தலையும் நாட்டின் நிர்வாக பிரதேசப் பிரிவையும் இணைக்கும் முயற்சியாக விளங்கியது; பிரதேசமயப்படுத்தலை நடைமுறைப் பயனுக்கேற்றதாக மாற்றுவதே இதன் லட்சியம்.

பிராந்தியத் திட்டமிடல் மற்றும் தேசிய வளர்ச்சி பற்றிய முதல் ஆசியக் கருத்தரங்கில் (மைசூர், 1974) **இந்தியாவில் பிராந்தியத் திட்டமிடல் முயற்சிகள்** என்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது; இது நகர மற்றும் பிராந்தியத் திட்டமிடல் ஸ்தாபனத்தால் தயாரிக்கப்பட்டது. எதிர்காலத் திட்டமிடலுக்கான விஞ்ஞான அடிப்படையிலான பிரதேசமயப்படுத்தல் வகைமுறைப் பட்டியல்களை உருவாக்குமாறு இந்திய அரசாங்கமும் திட்டக் கமிஷனும் இட்ட நேரடி கட்டளையைப் பற்றி அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. ஆசிரியர்களின் கருத்துப்படி, திட்ட பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்ட பகுதிகள் முக்கியமாக இரண்டு தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்: இவை பொருளாதார நோக்கில் விவேகமானவையாக இருக்க வேண்டும் (அதாவது உற்பத்தி வளர்ச்சி

யும் வேலை வாய்ப்பும் விவேகமானவையாக இருக்க வேண்டும்); ''புறச்சூழல் சமன்பாட்டிற்கு'' வழிகோல வேண்டும் (அதாவது இயற்கை அழிவிற்கு எதிராகப் போராட வேண்டும், இயற்கை வளங்களைப் பரஸ்பரம் இட்டு நிரப்ப வேண்டும்).

இவ்வாறாக இந்த நகல், இந்தியாவில் பிரதேசமயப்படுத்தலின் பாலான பொருளாதார மற்றும் புறச்சூழல் அணுகுமுறைகளை இணைக்கும் முதல் பரிசோதனைகளில் ஒன்றாக விளங்கியது. பொருளாதார பிரதேசமயப்படுத்தலின் முக்கியக் கருத்தினங்களாக உற்பத்திக் கோட்பாடுகளைப் பிரகடனப்படுத்தியதாலும் இது புகழ்பெற்றதாகியது.

மேற்கூறிய கருத்தமைப்பில் பொருளாதார பிரதேசமயப்படுத்தல் பற்றிய சோவியத் தத்துவத்தின் தாக்கம் நன்கு தெரிகிறது. ஒரு புறம் பொது அரசு முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதாரத் தனித்துறைப்பாடும் மறு புறம் உணவுப் பொருள் உற்பத்தி, வேலை வாய்ப்பளவு, உற்பத்தியையும் சேவையையும் வளர்க்கும் திறமை ஆகியவற்றில் ஒப்பீட்டளவிலான சுய பூர்த்தி ஆகியவைதான் பொருளாதார பிரதேசங்களின் முக்கியத் தன்மைகளாக இருக்க வேண்டும் என்று அதன் ஆசிரியர்கள் கருதுகின்றனர். பிரதேசங்கள் பின்வரும் தன்மைகளைக் கொண்டிருந்தன: பொது பிராந்திய தேசியப் பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினைகள்; சொந்த எரிசக்தித் தளம்; முக்கியத் தொழிற்துறை மற்றும் நகர மையங்களும் பிரதேசங்களும்; ஐக்கிய வளர்ச்சியின் அடிப்படையைத் தோற்றுவிக்கும் இயற்கை வளங்கள்.

இவ்வாறு திட்ட பிரதேசங்களாகப் பிரித்ததில் இது மாநில எல்லைகளுடன் சரியாகப் பொருந்தி இருக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது. ஆசிரியர்களே குறிப்பிடும்படி, ''சில மாநிலங்கள் ஒரே பிரதேசத்தின் பகுதிகளாக உள்ளன.... வேறு சில மாநிலங்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மேற்கு வங்கத்தின் பகுதிகள் மூன்று பிரதேசங்களில் அடங்கியுள்ளன. மத்திய பிரதேசத்தின் பகுதிகள் நான்கு வெவ்வேறு பிரதேசங்களில் அடங்கியுள்ளன''.

இந்த அம்சம்தான், அதாவது மாநிலங்களின் எல்லைகளுக்கும் ''திட்ட பிரதேசங்களின்'' எல்லைகளுக்கும் இடையில் ஒத்திசைவிப்பு இல்லாமைதான் அதிகபட்ச விமர்சனத்திற்குள்ளானது. உதாரணமாக பீஹார் மாநில திட்டப் பிரிவின் தலைவருடைய அறிக்கையின்படி, 6 மாநிலங்களின் (பீஹார், மேற்கு வங்கம், ஒரிசா, ஆந்திர பிரதேசம், மத்திய பிரதேசம், உத்தர பிரதேசம்) தனித்தனிப் பகுதிகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட வட கிழக்கு தக்காணப் பிரதேசம் கிட்டத்தட்ட ஏற்புடையதல்ல.

நாட்டை மொழி அடிப்படையிலான மாநிலங்களாகப் பிரிப்பதற்கும் திட்ட பிரதேசங்களுக்கும் இடையிலான முரண்பாடுகளைப் பற்றிய விவாதங்கள் 1950ஆம் ஆண்டுகளிலிருந்து ஆரம்பமாயின. இந்த விஷயத்

தில் எரிசக்தி பிரதேசமயப்படுத்தலின் கருத்தமைப்புகளுடைய பரிணாம வளர்ச்சி பெரும் முக்கியத்துவமுடையது, பெரிதும் குறிப்பிடத்தக்கது. 1957இல் பங்களூரில் கூடிய எரிசக்தித் துறை பொறியியலர்களின் அகில இந்திய மகாநாடு, நாட்டை எரிசக்தி அடிப்படையில் பிரதேசமயப்படுத்தும் கருத்தை ஒருமனதாக ஆதரித்தது; இது எரிசக்தித் துறை மட்டுமின்றி பிரதேசங்களின் முழுப் பொருளாதார வளர்ச்சிக்கும் அவசியமான, முன்தேவை என்று கருதியது.

தேசியத் திட்டமிடலின் பாலான பிராந்திய அணுகுமுறை என்றால், பொருளாதார புவியியலின் அடிப்படையில், நிர்வாக அலகுகளை விட திட்டமிடலுக்கு வசதியான அலகுகளாக நாட்டை பிரித்தல் என்று பொருள் என்கின்றனர் பிரபல இந்திய நிபுணர்களாகிய கே. எல். விஜ் மற்றும் எஸ். கே. சந்திரன் ஆகியோர்.(Vij, Chandran, 1957.) இவர்களுடைய கருத்துப்படி, தொழில்நுட்ப பொருளாதாரக் காரணிகளுக்கேற்ப, அந்தந்த வளங்களையுடைய அளவின்படி நாட்டை பிரதேசங்களாகப் பிரிப்பதுதான் உகந்ததாக இருக்கும். எல்லா பிரதேசங்களுக்கும் மிகச் சிக்கனமான எரிசக்தி வளங்கள் அளிக்கப்பட வேண்டும். விஜூவும் சந்திரனும் இந்தியாவை 8 முக்கிய பிரதேசங்களாகப் பிரிக்கின்றனர்; இவர்களுடைய கருத்துப்படி, இவை உரிய எரிசக்தி வளங்களை உடையவை, பிரதேச எரிசக்தி அமைப்புகளின் அடிப்படையில் பன்முக ரீதியில் வளர வேண்டும்.

1960ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் பிரதேச எரிசக்தி நிர்வாகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. பிரதேச எரிசக்தி அமைப்புகள் வளர உதவுவதும், இந்த அமைப்புகளை, எரிசக்தி பிரதேசத்தில் உள்ள ஒரு சில மாநிலங்கள் கூட்டாகப் பயன்மிகு வகையில் பயன்படுத்த துணை புரிவதும்தான் இந்த நிர்வாகங்களின் நோக்கமாகும். பிராந்திய அமைப்புகளை இணைப்பதன் மூலம் 1990ஆம் ஆண்டு வாக்கில் ஒரு ஐக்கிய எரிசக்தி அமைப்பைத் தோற்றுவிக்கும் கடமை முன்வைக்கப்பட்டுள்ளது; இக்கடமையின் நிறைவேற்றம் உள்பிராந்தியப் பிரச்சினைகளின் தீர்வைப் பொறுத்தது.

2. தொழில்மயமாக்கலின் பிராந்திய அம்சங்களும் துறை ரீதியான பிரதேசமயப்படுத்தலின் பிரச்சினைகளும்

இந்தியா அரசியல் சுதந்திரம் பெற்ற பொழுது அதனிடம் பரவலான விவசாய அடித்தளம் (இது பின்தங்கியிருந்ததாயிருந்தாலும்) இருந்ததோடு கூட கணிசமான அளவு நுகர்வு மற்றும் உணவுத் தொழிற்துறையும் (பஞ்சு, சணல், தேயிலை, சர்க்கரை, இதர தொழிற்சாலைகள்) இருந்தது. எனவே நாடு பொருளாதார சுதந்திரம் அடைய முதலில் கனரகத் தொழிற்துறையையும் உற்பத்தி உள்கட்டமைப்பையும் (எரிசக்தி, போக்குவரத்து) துரிதமாக வளர்க்க வேண்டியிருந்தது,

தேசிய பொருளாதாரத்தில் இல்லாதிருந்த (அல்லது மிகவும் வளர்ச்சி குன்றிய) துறைகளை வளர்க்க வேண்டியிருந்தது. விரிந்து கிளை பரப்பி நிற்கும் உற்பத்தி பிரதேச உறவுகளும் பிரதேசங்களை உருவாக்குவதில் இத்துறைகளின் தீவிரமான பங்கும், எரிசக்தி மற்றும் கனரகத் தொழிற் துறையின் பல்வேறு பிரிவுகள் இயற்கை வளங்களைப் பெருமளவு சார்ந்திருப்பதும் (இவற்றின் வளர்ச்சியில் அரசுத் துறை முக்கியப் பங்கு வகிக்கிறது) பிராந்தியத் திட்டமிடலில் இவற்றின் இட ஒதுக் கீட்டை ஒரு முக்கிய இடத்தில் வைக்கின்றன.

சாதாரணமாக, பெருவீத தொழிற்துறைக் கட்டுமானத்தைப் பிரித்த மைப்பதானது, பின்தங்கிய பிரதேசங்களை உயர்த்துவதற்கான ஒரு முக்கிய சாதனமாகக் கருதப்படுகிறது. 1956ஆம் ஆண்டின் தொழிற் துறைக் கொள்கை பற்றிய தீர்மானத்திலும் எல்லா ஐந்தாண்டு திட்டங் களிலும் தொழிற்துறையின் மையக் கலைப்பின் அவசியம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: ''எங்கெல்லாம் பெரும் வளர்ச்சி காணப்படுகிறதோ அல்லது இதற்காகத் திட்டமிடப்படுகிறதோ அங்கெல்லாம் தொழிற் துறை மேலும் குவிவதைத் தடுப்பதுதான் பொதுவான அணுகுமுறை யாக இருக்க வேண்டும்....''

பின்தங்கிய பிரதேசங்களை வளர்க்கும் பொழுது தொழிற்துறைக்கு விசேஷ முக்கியத்துவம் இருக்க ஒரு காரணம் உண்டு: பெரும் தொழில் நிறுவனங்கள், குறிப்பாக கனரகத் தொழில் அடிப்படை நிறுவனங்கள் வழக்கமாகத் தீவிரமான, பன்முக வளர்ச்சிக்கான அடிப்படையாகத் திகழுகின்றன. அதே நேரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும் நவீன உற்பத்தியைப் பிரித்து அமைக்கும் வாய்ப்புகள் மட்டானவை. புதிதாக கட்டப்படும் வலுவான அமைப்புகளில் கணிசமான பகுதி ஏற்கெனவே ஓரளவு வளர்ச்சியடைந்த பிரதேசங்களில் உள்ளது. இது தவிர, வழக் கம் போல் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த புதிய கட்டுமானங்களுக்குத் தன்னருகில் உள்ள இடங்களை விட, தொலை தூரத்தில் உள்ள பகுதிகளுடன்தான் அதிக நெருக்கமான தொடர்புகள் உண்டு. சில நேரங்களில், அதுவும் குறிப்பாக ஆரம்பக் கட்டங்களில், இவை பின் தங்கிய பிரதேசங்களில் கிட்டத்தட்ட தனிமைப்பட்டு நிலவுகின்றன.

மத்திய பிரதேசத்தின் தென் கிழக்குப் பகுதியில் சோவியத் யூனியனின் உதவியுடன் பிலாய் உலோகத் தொழிற்சாலை கட்டப் பட்டதானது, நாட்டின் மிகவும் பின்தங்கிய பகுதி ஒன்றில் பெரும் கனரகத் தொழிற்சாலையின் கட்டுமானத்திற்கு நல்ல உதாரணமாகும். இந்தத் தொழில் நிறுவனத்திற்கும் இதன் அடிப்படையில் எழுந்த நகரத்திற்கும் சுற்றியுள்ள பிரதேசத்திற்கும் இடையிலான பரஸ்பரத் தொடர்புகளின் சிறப்பியல்புகளை ஆராயும் பொழுது, பல்வேறு அளவு களைக் கொண்ட பிரதேச பொருளாதாரத் தொடர்பு வகைகளைச் சுட்டிக் காட்டலாம்; இவற்றின் தீவிர வளர்ச்சி படிப்படியாக நடை

பெறுகிறது. (ஸ்தஸியூக், 1975.) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த வலுவான உலோகத் தொழிற்சாலை (இது பிராந்திய மையங்களைத் தோற்றுவிக்கிறது, உதாரணமாக கோர்பாவில் நிலக்கரி, மின்சக்தி மையத்தின் தோற்றம்) படிப்படியாக சுற்றியுள்ள பிரதேசத்தின் வளர்ச்சிக்கான அடிப்படையாக மாறி வருகிறது. இத்தகைய தொழிற்சாலை கட்டப்பட்டு பத்தாண்டுகள் கழித்துதான் இதையொட்டியுள்ள பிரதேசத்தில் மற்ற துறைகள் வளர்ச்சியடைகின்றன; நடுத்தர மற்றும் சிறுவீதத் தொழிற்துறை வளருகிறது, விவசாய வளர்ச்சி தீவிரமடைகிறது, விவசாயத்தின் தனித்துறைப்பாடு மாறுகிறது. ஸ்தல தன்மையுடைய பிரதேச பொருளாதாரத் தொடர்புகளின் வளர்ச்சி (இது வழக்கமான பொருளாதார இரட்டைத் தன்மையை அழிக்கும்) பிரதேசங்களுக்கு இடையிலான தொடர்புகளின் வளர்ச்சியுடனும் பரவலான உள்பிரதேசத் தொடர்புகளின் வளர்ச்சியுடனும் ஒப்பிடும்பொழுது ஓரளவு தாமதமாக நடைபெறுகிறது. ஆனால், பிரதேசத் திட்ட நகலை முன்கூட்டியே தீட்டினால், புதிய கட்டுமானத்தை ஒட்டியுள்ள பிரதேசத்தையும் முதல் கட்டத்திலேயே துரிதமாக வளர்க்க முடியும்; இது அந்தக் குறிப்பிட்ட தொழில் நிறுவனத்தின் செயல்வன்மையை உயர்த்தும், அத்தோடு, ஒட்டியுள்ள பிரதேச வளர்ச்சிக்கும் உதவும்.

1960ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்திலேயே இந்தியத் திட்டக் கமிஷன் பின்வருமாறு குறிப்பிட்டது: ''ஒரு பெரும் கட்டுமானம் நடக்கும்பொழுது அதனுடன் பரஸ்பரத் தொடர்புடைய துணைத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டால்தான் அதனால் அந்த இடத்திலுள்ள மக்களுக்குப் பயன் கிட்டும். எனவே... ஒவ்வொரு பெரும் கட்டுமானத்தையும் மொத்தமாக பிரதேசத்தின் ஐக்கிய வளர்ச்சியின் உட்கருவாகக் கருத வேண்டும்.'' மேற்கூறிய உதாரணம் இக்கருத்துநிலையை மெய்ப்பிக்கிறது.

நவீன புதிய கட்டுமானம் ஒரு பின்தங்கிய பிரதேசத்தில் இருப்பதால் என்ன மாதிரியான தீய விளைவுகள் ஏற்படக் கூடும் என்பதையும் இந்திய நிபுணர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். உதாரணமாக மத்திய பிரதேசத்தின் தென் கிழக்கில் பைலாதில்லா பிரதேசத்தில் இரும்புத் தாது எடுக்கும் தொழிற்துறையின் வளர்ச்சி குறிப்பிடப்படுகிறது. இங்கிருந்து விசாகப்பட்டினம் வரை தாதுப் பொருளை எடுத்துச் செல்லும் விசேஷ இருப்புப் பாதை அமைக்கப்பட்டது; விசாகப்பட்டினத்திலிருந்து தாது ஜப்பானிற்கு அனுப்பப்பட்டது. இதில் பயணிகள் செல்ல முடியாது, ஸ்தல சரக்குகளையும் ஏற்றிச் செல்ல முடியாது. எனவே ''குறிப்பிட்ட பிரதேசத்தைப் பொறுத்த மட்டில் இந்த இருப்புப் பாதையின் பங்கு ஒட்டுண்ணித் தனமானது''. (Misra, Sundaram, 1978, p. 144.)

முறைப்படி உருவாக்கப்பட்ட, விஞ்ஞான அடிப்படையிலான

தொழிற்துறை பிரதேசமயப்படுத்தல் திட்டம் இல்லாததானது உற்பத்தியின் விவேகமான இட அமைப்பை ஒழுங்குபடுத்தும் துறையில் செயல்முனைப்பான கொள்கையின் வாய்ப்புகளைப் பலவீனப்படுத்துகிறது. தொழிற்துறை லைசென்ஸ் ஆராய்ச்சிக் கமிட்டியின் அறிக்கையில் (1969) பின்வருமாறு கோடிட்டுக் காட்டப்பட்டிருந்தது: ''தொழிற்துறையின் பல்வேறு கிளைகளுக்கு லைசென்ஸ் வழங்குவது சம்பந்தமான பிராந்தியத் திட்டம் எதுவும் — தற்செயலான முயற்சிகளைத் தவிர — இருக்கவில்லை...; தொழிற்துறையின் பிராந்திய மையக் கலைப்பிற்கு லைசென்ஸ் அதிகாரிகளுக்கு ஒரு கருவியாக விளங்கியிருக்கக் கூடிய முறைப்படியான வழிகாட்டுதல்கள் எதுவும் உருவாக்கப்படவில்லை. எந்தத் தொழிற்துறைப் பிரிவுகளின் இட அமைப்பில் பிரதேச ரீதியான மையக் கலைப்பு முயற்சிகளை மேற்கொண்டிருக்கலாமோ, அந்தப் பிரிவுகளின் பட்டியல் தயாரிக்கப்படாதது மட்டுமல்ல, தொழிற்துறை ரீதியாகப் பின்தங்கிய பிரதேசங்களும் திட்டவட்டமாகச் சுட்டிக் காட்டப்படவுமில்லை.''

இந்தியாவின் ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் தொழிற்துறையைப் பிரித்தமைப்பதும் சீரிசைவான பிராந்திய வளர்ச்சியும்தான் திட்டமிடலின் முக்கியக் கடமை என்று கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது; அதுவும் இது பிராந்தியங்களுக்கு இடையிலான சமன்பாட்டிற்கு மட்டுமின்றி (பின்தங்கிய பிரதேசங்களின் வளர்ச்சி என்று சாதாரணமாக இதற்குப் பொருள்) நிலத்தின் மீது அதிகரித்து வரும் நிர்ப்பந்தத்தைக் குறைக்கவும், தொழிற்துறை நகர மையங்களில் சமூக வசதிகள், போக்குவரத்திற்காகவும் அவசியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தொழிற்துறையின் இட அமைப்பு, இந்த அடிப்படையில் பின்தங்கிய பிரதேசங்களை வளர்ப்பது ஆகியவை சம்பந்தமான செயல்திட்டத்தில் புதிய அம்சம் என்னவெனில், இப்பிரதேசங்களில் உள்கட்டமைப்பைத் தோற்றுவிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது; இல்லாவிட்டால் உதவித் தொகைகள், சலுகைகளால் தனியார் மூலதனத்தைக் கவர முடியாது என்று அனுபவம் காட்டுகிறது. தொழிற்துறை இட அமைப்பு பற்றிய புதிய கொள்கை சிறு நகரங்களை, வட்ட மையங்களை நோக்கமாகக் கொண்டது; இது ''அதிகப் பயனுள்ளதாக அமைந்து, ஒவ்வொரு வட்டத்திலும் தொழிற்துறை வளர்ச்சிக்கான பொது பொருளாதார சூழலுக்கு உதவும்''.

பிரபல இந்திய புவியியலர் முனிஸ் ரஸா, இவருடைய மாணவர் ஏ. குண்டு ஆகியோரின் படைப்பில் (Raza, Kundu, 1982) இந்தியாவில் நடைபெறும் நகரமயமாக்கல் மற்றும் தொழிற்துறைமயப்படுத்தல் போக்குகளின் பல்திரட்டு சாரமும் பரவும் தன்மையும் விளக்கமாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. ஒருதலைப்பட்ச வளர்ச்சி எவ்வளவு தீயது என்பது பற்றிய முடிவிற்கு நூலாசிரியர்கள் வருகின்றனர். அது முற்றிலும் பெருவீத தொழிற்துறையை இலக்காகக் கொண்டு

பல்திரட்டு நகரமயமாக்கலாய் இருந்தாலும் சரி, அல்லது வீட்டு, கைத்தொழில், ''பிரிந்து செல்லும்'' தொழிற்துறையாய் இருந்தாலும் சரி, இரண்டுமே தீயவை. சாதாரணமான, ஆரோக்கியமான பொருளாதார வளர்ச்சிக்கு இந்த இரண்டு துறைகளும் பரஸ்பரத் தொடர்பு கொண்டு வளர வேண்டும், இது ஐக்கிய பிராந்திய வளர்ச்சியில் இட ரீதியில் வெளிப்படுகிறது.

இந்தியா உட்பட வளர்முக நாடுகளின் பல்வேறு ஜீவாதாரப் பிரச்சினைகளின் வேர்கள் விவசாயத் துறையிலும், இந்நாடுகளின் பெரும்பாலான மக்கள் வாழும் கிராமங்களின் கடுமையான நிலையிலும் ஊடுருவியுள்ளன. இது இந்நாடுகளின் பொருளாதாரத்தின் இட அமைப்பு, பிரதேசமயப்படுத்தும் பிரச்சினைகள், மேன்மேலும் அதிகரித்து வரும் பிராந்திய இயைபுப் பொருந்தாமையை அகற்றும் பிரச்சினை ஆகியவற்றிற்கு முழுக்க முழுக்கப் பொருந்தும்.

இந்தியாவில் விவசாயத் துறையைப் பிரதேசமயப்படுத்துவது மிகக் கடினமான கடமையாகும். விவசாய உற்பத்தியின் மிகப் பெரும் அளவுகள், விவசாய உற்பத்திக் கட்டமைப்பின் பெரும் சிக்கலான தன்மை ஆகியவைதான் இதற்குக் காரணமாகும். இந்த விவசாய உற்பத்தி மிகப் பல்வேறான, எண்ணற்ற பிரதேச இணைப்புகளைத் தோற்றுவிக்கிறது. தனிப்பட்ட பயிர்களின் முக்கியத்துவமும் இவை பரவியுள்ள விதமும் விரைவாக மாறுவதும் (இந்த விஷயத்தில் இந்தியாவின் ''பசுமைப் புரட்சியில்'' முக்கியப் பயிராகிய கோதுமை குறிப்பிடத் தக்கது) ஏராளமான பயிர்கள் சாகுபடி செய்யப்படுவதும், கலப்புச் சாகுபடியையும் சிக்கலான பயிர்சுற்று முறையையும் நாடுவதும் சேர்ந்து விவசாயத் துறையைப் பிரதேசமயப்படுத்துவதில் உள்ள புறவய இடர்ப்பாடுகளை அதிகப்படுத்துகின்றன.

இந்திய விவசாயத் துறையின் குறைவான பண்டத் தன்மை (பெரும்பாலான வளர்முக நாடுகளில் இதன் மட்டம் இன்னமும் குறைவு), ஒப்பீட்டளவில் மூடிய, ''சுய புனரமைப்பு'' முறைகளாகச் செயல்படும் பல்லாயிரக்கணக்கான கிராமங்கள் ஆகியவையும் பிரதேசங்களுக்கிடையில் விவசாயப் பொருட்களின் பலவீனமான பரிவர்த்தனையும் தனிப்பட்ட பகுதிகளின் உற்பத்தித் தனித்துறைப்பாட்டை நிர்ணயிப்பதைக் கடினமாக்குகின்றன. அதுவும் இந்தியாவில் விவசாயப் பொருட்களின் மதிப்புக் கணக்கீட்டு முறை பலவீனமாக உள்ளதால் இது இன்னமும் சிக்கலானதாகிறது.

1970ஆம் ஆண்டுகளின் நடுவில் சோவியத் விஞ்ஞானி (ஸ்தஸியூக், 1975) இந்தியாவிற்கென உருவாக்கிய விவசாயத் துறை பிரதேசமயப்படுத்தலில், பண்டத் தனித்துறைப்பாடு மற்றும் முக்கியப் பயிர்களுக்கேற்ப பிரதேசங்களைப் பிரிக்கும் உற்பத்திக் கோட்பாடு அடிப்படையாகக் கொள்ளப்பட்டது; இதுதான் விவசாய உற்பத்தியின் பிரதான விசேஷ அம்சத்தை நிர்ணயிக்கிறது. விவசாய பிரதேசமயப்

படுத்தலுக்கும் இயற்கை புவியியல் பிரதேசமயப்படுத்தலுக்கும் இடையிலான உறவை விளக்குவதற்கு ஒரு பெரும் கருத்தமைப்பு முக்கியத்துவம் உண்டு. தம்மிடையே நெருக்கமான தொடர்புகளை உடைய இவை வெவ்வேறு முறைகளாகும்; இவற்றைப் பிரிக்கும் போது வெவ்வேறு கோட்பாடுகளும் குறியீடுகளும் பயன்படுத்தப்படுகின்றன. இயற்கை பிரதேசங்கள் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டிருந்தால் சாதாரணமாக இவற்றின் எல்லைகளில் விவசாய உற்பத்தியின் கட்டமைப்பும் தனித்துறைப்பாடும் பெரிதும் மாற்றமடைகின்றன. இந்த இயற்கை அலகுகளின் வரம்புகளுக்குள் உற்பத்தி மாறுபாடுகள் பெரும்பாலும் சமூக, விவசாய தொழில்நுட்பக் காரணிகளால் நிர்ணயிக்கப்படுகின்றன.

''கீழைய விவசாயத் துறையின் அடிப்படையாகிய'' நீர்ப்பாசனத்திற்குக் கிட்டத்தட்ட இந்தியாவின் எல்லா பகுதிகளிலும் பெரும் முக்கியத்துவம் உண்டு. எந்தப் பயிரைத் தேர்ந்தெடுப்பது என்பதும், சாகுபடியின் தீவிரமும் பண்டத் தன்மையின் மட்டமும் இதனுடன் நெருக்கமாகத் தொடர்புடையவை. எனவே எந்த வடிவத்தில் விவசாய பிரதேசமயப்படுத்தலில் இறங்கினாலும் அந்தந்த குறியீடுகளை அவசியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நபர் ஒருவருக்கு சராசரியாக எவ்வளவு நிலம் உள்ளது என்ற குறியீட்டின் முக்கியத்துவம் தெட்டத்தெளிவு. நாடு பூராவிற்கும் 0.98 ஏக்கராக உள்ள இக்குறியீடு இடத்திற்கிடம் பரவலான அளவுகளில் மாறுபடுகிறது: மேற்கு ராஜஸ்தானில் 2 ஏக்கராக (ராஜஸ்தான் பாலைவனத்தின் மத்தியில் உள்ள பிக்கானெர் வட்டத்தில் 5.78 ஏக்கர்) உள்ள இது ஈரப்பசை மிக்க வெப்ப மண்டல கேரளாவில் 0.13 ஏக்கராக இருக்கிறது. விரைவில் செல்வந்தர்களாகி வரும் கிராம மேல்மட்டத்தினரிடம் உள்ள நிலங்களின் அளவுகளுக்கும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களாக மாறி வரும் மிகப் பெரும்பாலான கிராம ஏழை மக்களிடம் உள்ள நிலங்களின் அளவுகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் இன்னமும் அதிகம் முரண்பாடானவை.

இந்திய நிபுணர்களும் மற்ற நாடுகளின் நிபுணர்களும் வெவ்வேறு அணுகுமுறைகளையும் குறியீடுகளையும் பயன்படுத்துவதால், இவர்கள் உருவாக்கும் விவசாய பிரதேசங்களைப் பற்றிய வகைமுறைப் பட்டியல்கள் ஒன்றுடன் ஒன்று ஒத்துப் போவதில்லை. ஆனால் மிக முக்கியமானது என்னவெனில் இவை அடிப்படையில் ஒன்றிலிருந்து ஒன்று முரண்படாமல், விவசாய உற்பத்தியின் இட ரீதியான பாகுபாடு என்னும் புறவய நிகழ்ச்சிப் போக்கைப் பிரதிபலிக்கும் வெவ்வேறு முறைகளாக விளங்குகின்றன என்பதாகும்.

விவசாயத் தனித்துறைப்பாடும், பிரதேசங்களுக்கு இடையிலான உழைப்புப் பிரிவினை ஆழமடைவதும் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கான முக்கிய வழிகளில் ஒன்றாகும் என்பது தெரிந்ததே. இன்றைய இந்தியாவில், மற்ற வளர்முக நாடுகளில் இந்நிகழ்ச்சிகள்

பெரும்பாலும் தன்னிச்சையாக நடைபெறுகின்றன. விவசாய பிரதேச மயப்படுத்தல் இருந்தால் (இது இயற்கை பிரதேசமயப்படுத்தல், நிலத் தைப் பற்றிய தர ரீதியான மதிப்பீடு ஆகியவற்றின் அடிப்படையில் அமைய வேண்டும்) பொருளாதார எழுச்சிக்கான மேற்கூறிய வழிகளை அணி திரட்டி, செயல்வன்மையோடு பயன்படுத்தலாம். இந்தப் பாரபட் சமற்ற குறியீடுகளைப் பகுப்பாய்வு செய்து ஒப்பிடுவதன் அடிப்படையில் பிரதேச உற்பத்தி விவசாய இணைப்புகளின் விவேகமான வளர்ச்சியைப் பற்றிய விஞ்ஞான ரீதியான சிபாரிசுகளை உருவாக்கலாம். ஆக்க பூர்வமான விவசாய பிரதேசமயப்படுத்தல் — எதிர்காலத் திட்டங்களைத் தீட்டுவது இதன் நோக்கம் — விவசாய வளர்ச்சியை ஒழுங்குபடுத்த அரசிற்கு விஞ்ஞான அடிப்படையாகத் திகழும்; விவசாய உற்பத்தியின் இட அமைப்பைச் சாலச் சிறந்ததாக்குவதன் மூலம் அதன் வளர்ச்சிக்கு உதவும்.

3. மாநிலங்கள் — முக்கியத் திட்ட பிரதேசங்கள்

இந்தியாவில் இன்று மாநிலங்கள்தான் அதிகாரப் பூர்வமாகப் பயன் படுத்தப்படும் ஒரே திட்ட பிரதேசங்களாகும். இவற்றின் வளங்கள், திட்ட அலகுகள் என்ற வகையில் இவற்றின் போக்குகள், வாய்ப்புகளை ஆராயப் பரவலான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பிராந்தியத் திட்டமிடலை ஆதாரப்படுத்தும் நோக்கத்தோடு மாநி லம் ஒன்றை ஆராயும் முதல் முயற்சிகளில் ஒன்று 1950ஆம் ஆண்டுகளின் இறுதியில் இன்றைய கர்நாடக மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டது; இந்திய புள்ளிவிவர கேந்திரத்தின் பிராந்திய ஆராய்ச்சிப் பிரிவு நடத்திய இந்த ஆராய்ச்சிக்கு பிரிட்டிஷ் புவியியலர் ஏ. தி. ஏ. லெர் மோன்ட் தலைமை தாங்கினார், இதில் இந்திய புவியியலர்கள் எல். எஸ். பட்டும், வி. எஸ். பிரகாச ராவும் இதரரும் தீவிரப் பங் கேற்றனர். மாநிலத்தின் இயற்கை மற்றும் பொருளாதார (முக்கியமாக விவசாய) சூழ்நிலைகளுக்கு இடையிலான பிரதேச வேறுபாடுகள், நகர மற்றும் கிராம மக்கள்தொகை பரப்பீடுகளுக்கு இடையிலான வேறுபாடு கள், உள்ளே ஓரினத் தன்மையை உடைய பல்வேறு பிரதேசங்களுக்கு இடையிலான பரஸ்பரத் தொடர்புகள் (இவை சரக்குப் போக்கு வரத்தில் பிரதிபலிக்கின்றன) ஆகியவை ஆராய்ச்சிப் போக்கில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பிரிக்கப்பட்ட பிரதேசங்கள் பெரும்பா லும் ''இயற்கை விவசாயத்'' தன்மையை உடையவை. மாநிலத்தின் நிர்வாக பிரதேச பிரிவை (4 மாவட்டங்கள், 19 வட்டங்கள்) புதிதாக உருவாக்கிய பிரதேசங்களின் அடிப்படையில் மாற்றியமைக்க சிபாரிசு செய்யப்படுகிறது: மாநிலத்தைத் ''திட்ட பிரதேசமாக'' கருதி, அதன் உள்ளே 6 ''துணை திட்ட பிரதேசங்களையும்'', 21 ''திட்ட வட்டங் களையும்'' ஏற்படுத்த திட்டமிடப்படுகிறது.

ஆனால், ஆசிரியர்கள் ஏராளமான பிரச்சினைகளை விளக்கமாக ஆராய்ந்தாலும், மொத்தத்தில் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி பற்றிய அடிப்படைப் பிரச்சினைகளும், அதன் பொருளாதாரத்தின் பிரதேசக் கட்டமைப்பை உருவாக்கும் விவேகமான வழிகளை ஆதாரப் படுத்தும் பிரச்சினைகளும் விட்டுப் போயின. நாடு தழுவிய அளவிலான எதிர்கால வளர்ச்சியின் பின்னணியில் மாநில வளர்ச்சியின் பிரதான போக்கைச் சுட்டிக் காட்டாமல், பல்வேறு ஸ்தல விஷயங்களை விரிவாக விளக்கியதால், திட்டமிடும் நோக்கத்திற்காக கர்நாடகாவில் (மைசூர்) நடத்தப்பட்ட பெரும் பிராந்திய ஆராய்ச்சி, மாநிலத்தில் திட்டமிடும் நடைமுறையின் மீது எவ்வித கணிசமான தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை, நாடு தழுவிய அளவில் பிராந்தியத் திட்டமிடலின் முறையியல், முறைகளையும் மேம்படுத்தவில்லை.

மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் நடைமுறை பொருளாதார ஆராய்ச்சிகளை நடத்தும் தேசிய கவுன்சில், அவ்வப்போது சர்வே பணிகளை மேற்கொள்கிறது. இப்பணிகள் அந்தந்த மாநில அரசாங்கங்களின் பெயரில் நடக்கும்; மாநில அரசாங்கங்கள்தான் இப்பணிகளுக்குக் கட்டளையிட்டு, நிதி ஒதுக்குகின்றன. இப்படிப்பட்ட முதல் நூல்களில் ஒன்றில் (மத்திய பிரதேச மாநிலத்தைப் பற்றியது) இத்தகைய சர்வே பணிகளின் நோக்கங்கள் பின்வருமாறு வரையறுக்கப்பட்டிருந்தன: ''தொழில்நுட்ப, பொருளாதார சர்வே என்பது குறிப்பிட்ட புவியியல் பிரதேசத்தின் வளர்ச்சிக்கான தொழில்நுட்ப, பொருளாதார வாய்ப்புகளைப் பற்றி—பல்வேறு வளங்கள், மற்ற காரணிகளையும் சேர்த்து—நடத்தப்படும் ஆராய்ச்சியாகும், இது 10—15 ஆண்டுகளுக்கானது. எங்கே வளர்ச்சி சாத்தியமோ, எங்கே விரைவான, பன்முக பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படைகளை ஏற்படுத்த வேண்டுமோ, அந்தப் பிரதேசத்தின் தன்மைகளைப் பற்றி விளக்குவதுதான் சர்வேயின் முக்கிய நோக்கமாகும். இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கான விசேஷ திட்டங்கள் முன்வைக்கப்படுகின்றன, கட்டுமானத்தின் வரிசைக் கிரமம் சுட்டிக் காட்டப்படுகிறது. திட்டமிடப்படும் வளர்ச்சிக்குத் தேவைப் படும் முதலீடுகள், எதிர்கால உற்பத்தியின் அளவு, மக்களின் வேலை வாய்ப்பு மீதான இதன் தாக்கம் ஆகியவற்றை மதிப்பிடவும் முயற்சி செய்யப்படுகிறது.'' (*Techno-Economic Survey of Madhya Pradesh*, 1960, pp. XI—XII.)

தொழில்நுட்ப, பொருளாதார சர்வேக்களில் ஏராளமான நடைமுறை விவரங்களும் திட்ட நகல்களும் அடங்கியுள்ளன. இவை ஒவ்வொரு மாநிலத்தையும் தனியான, மற்ற பிரதேசங்களிலிருந்து தனியாகப் பிரிக்கப்பட்ட ''திட்ட பிரதேசமாக'' கருதுவதுதான் இவற்றின் முக்கியக் குறைபாடு ஆகும். சர்வேக்களில், பிரதேசங்களுக்கு இடையிலான உழைப்புப் பிரிவினை சரிவர கவனத்தில் கொள்ளப்படவில்லை. மாநில ரீதியில் எதிர்கால வளர்ச்சியைத் திட்டமிடும் பொழுது, முக்கிய

அரசு நலன்கள் எப்போதும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன என்று கூற முடியாது. பிரதேசங்களுக்கு இடையிலும், பிரதேசங்களுக்கு உள்ளும் உற்பத்திக் கூட்டுறவு, தனித்துறைப்பாடு ஆகிய பிரச்சினை களின் மீது குறைவான கவனமே செலுத்தப்பட்டது. மாநிலங்களின் பொருளாதாரம் கிட்டத்தட்ட முழுக்க முழுக்க துறை ரீதியாக மட்டுமே அணுகப்பட்டது.

இத்தகைய கணிசமான குறைபாடுகள் இருந்த போதிலும் தொழில்நுட்ப, பொருளாதார சர்வேக்கள் தம் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தின; மாநில அரசாங்கங்கள் தம் ஆர்டர்களை அதிகரிக்கின் றன, குறிப்பாக தொழிற்துறை வளர்ச்சித் திட்டங்களை ஆதாரப் படுத்த இவற்றைப் பயன்படுத்துகின்றன. 1960ஆம் ஆண்டுகளின் இறுதி யிலிருந்து நடைமுறை பொருளாதார ஆராய்ச்சிகள் பற்றிய தேசிய கவுன்சில் பல மாநிலங்களுக்கு ஐந்தாண்டு திட்டங்களின் அடிப்படையில் **தொழிற்துறை செயல்திட்டங்கள்** என்ற தொடர் வரிசையைப் பிரசுரித்து வருகிறது.

மாநில அரசாங்கங்களின் திட்ட உறுப்புகள் வலுவடைய வலுவடைய, மாநிலங்களின் வளங்களை ஆராய்ந்து, இதன் அடிப் படையில் மேற்கொண்ட வளர்ச்சிக்கான வாய்ப்புகளை மதிப்பிடுவதில் இவை மேன்மேலும் ஈடுபடுகின்றன; இவையெல்லாம் துறை ரீதியில் மட்டுமின்றி, அந்தந்த மாநிலங்களின் பிரதேச ரீதியிலும் நடைபெறு கின்றன. ஆங்காங்கே வெளியிடப்பட்ட சில படைப்புகள், பிரதேச மயப்படுத்தல் மற்றும் பிராந்தியத் திட்டமிடல் கருத்துகளின் பரிணாம வளர்ச்சி நோக்கில் பரந்த அளவில் சுவாரசியமானவை. உதாரணமாக, தமிழக பிராந்திய வளர்ச்சி நிபுணர்கள், சென்னை - பங்களூர் மார்க்கத் தில் துரித வளர்ச்சி மற்றும் உற்பத்திக் குவிப்பு "பாதையைச்" சுட்டிக் காட்டி, இதற்கு மாற்றாக கூடலூர் - சேலம் "பாதையை" முன்வைக்க வேண்டும் என்று கருதுகின்றனர்; இதன் வளர்ச்சியை ஊக்குவித்தால், அது உண்மையிலேயே மாநிலத்தின் அதிக சீரிசைவான வளர்ச்சிக்கு உதவும். உத்தர பிரதேச மாநில நகர, கிராமத் திட்டத் துறை, 1969 —1991ஆம் ஆண்டுகளுக்கான வீடு கட்டுமானம், நகர மற்றும் பிராந்திய வளர்ச்சி பற்றிய திட்டத்தைத் தீட்டியுள்ளது. ஆந்திர மாநில திட்டத் துறை அடிப்படை நூல்களை வெளியிட்டுள்ளது. இம்மாநிலத்தில் பின்தங்கிய தெலுங்கானா மற்றும் ராயல்சீமை பிர தேசங்களை உயர்த்தும் பிரச்சினை (மாநிலத்தின் ஒற்றுமையே இதைக் கணிசமான அளவு சார்ந்துள்ளது) கடுமையாக முன்நிற்கிறது. இப்பிர தேசங்களின் வளங்கள் இந்த நூல்களில் கணக்கெடுக்கப்பட்டு, இதன் அடிப்படையில் இவற்றைப் பயன்படுத்தி பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வழிகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

4. நகர, பிராந்தியத் திட்டமிடலின் அடிப்படை

நாடு சுதந்திரமடைந்த பின், குறிப்பாக 1960ஆம் ஆண்டுகளிலிருந்து தொழிற்துறைமயப்படுத்தல் அதிகரித்து, பெரும் தொழிற்துறை மையங்களும் பிரதேசங்களும் வளர்ச்சியடைந்து, பழைய பெருநகரங்கள் விரைவாக வளர்ந்து, புதிய நகரங்கள் தோன்றத் தோன்ற, நகரங்களின் வளர்ச்சியைத் திட்டமிட்டு அவற்றின் கட்டிடக் கலை அம்சங்களைத் திட்டமிடும் அவசியம் ஏற்பட்டது. குறிப்பாக நாட்டின் மிகப் பெரிய நகரங்கள் முக்கியக் கவனத்தைக் கவர்ந்தன.

தலைநகரம் டெல்லியின் விரைவான வளர்ச்சியும் 1947இல் நாடு பிரிக்கப்பட்ட பின் ஏராளமான அகதிகள் பாகிஸ்தானிலிருந்து அங்கு வந்ததும் தலைநகர வளர்ச்சியை உடனடியாகத் திட்டமிடும் அவசியத்தை ஏற்படுத்தின. இந்நோக்கத்தோடு 1955இல் டெல்லி வளர்ச்சிக் கழகம் ஏற்படுத்தப்பட்டது. அதே ஆண்டில் நோற்றுவிக்கப்பட்ட நகர திட்ட ஸ்தாபனம் இதன் கீழ் செயல்பட்டது. 1962இல் டெல்லி வளர்ச்சி பற்றிய ஒரு பெரிய திட்டம் வெளியிடப்பட்டது; இது 1981ஆம் ஆண்டு வரைக்குமானதாயிருந்தது. நகர, கிராம வளர்ச்சித் திட்ட ஸ்தாபனத்தின் பதினேழாவது ஆண்டு கருத்தரங்கில், 2000ஆம் ஆண்டு வரையிலான டெல்லி மாநகர வளர்ச்சி வாய்ப்புகள் பரிசீலிக்கப்பட்டன. டெல்லி நகரின் உள்ளே தொழிற்துறை கட்டுமானத்தை மட்டுப்படுத்த வேண்டும் என்று ஏற்கெனவே செய்யப்பட்ட முடிவின் அடிப்படையில், தலைநகர பிரதேசம் முழுவதன் வளர்ச்சி, இடப் பரப்பு ரீதியான அதன் வாய்ப்புகள் ஆகியவை விவாதிக்கப்பட்டன. டெல்லி மற்றும் அதை ஒட்டியுள்ள தொழிற்துறை துணை நகரங்களுக்கு, ''வளர்ச்சிப் பாதைகளில்'' (கஸியாபாத்-மோதிநகர்-மீரட், நரேல்லா-சோனிபட்-பானிபட், பகதார்கார்ஹ்-ரோஹ்டக், இதரவை) நடைபெறும் வளர்ச்சிதான் மிகவும் ஏற்றதாயிருக்கும் என்று முடிவு செய்யப்பட்டது. டெல்லியைச் சுற்றி தேசியத் தலைநகர வளர்ச்சியைத் தொடர ஏழாவது ஐந்தாண்டில் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி டெல்லியின் மத்தியில் நடைபெறும் பொருளாதார நடவடிக்கைகள், டெல்லியை ஒட்டியுள்ள மற்ற நகரங்களுக்கு—இவை ஹரியானா, ராஜஸ்தான், உத்தர பிரதேச மாநிலங்களைச் சேர்ந்தவை—மாற்றப்படும்.

பம்பாய் பெருநகர் வளர்ச்சி பற்றிய பெரும் திட்டம் ஒன்று 1964இல் வெளியிடப்பட்டது. இதற்குப் பின் பம்பாய்-பான்வெல் மற்றும் பூனாவிற்கான பிராந்தியத் திட்டத்தைத் தீட்டிய கமிட்டியின் அறிக்கை வெளியாயிற்று. நகர வளர்ச்சித் திட்டங்களுக்கும் பிராந்தியத் திட்டமிடலுக்கும் இடையிலான பரஸ்பரத் தொடர்பு அந்த அறிக்கையில் கோடிட்டுக் காட்டப்பட்டிருந்தது. ''வெறுமனே திட்டமிடுவது நகர பிரதேசத்துடன் அல்லது பெரு நகரங்களின் நிர்வாக எல்லைகளுடன்

நின்று விட்டால் பெருநகர் வளர்ச்சிப் பிரச்சினைகளை வெற்றிகரமாயும் திருப்திகரமாயும் தீர்க்க முடியாது என்று அனுபவம் காட்டுகிறது. எனவே நகரத் திட்டமிடலுடன் பிரதேசத் திட்டமிடலை இணைப்பது மேன்மேலும் அவசியமானதாகி வருகிறது. பல்வேறு வகையான வளர்ச்சி எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் பிரதேசத்தை நிர்ணயிப்பதுதான் பரவலான பொருளில் பிரதேசத் திட்டமிடலின் நோக்கமாகும். எல்லா பிரதேசத் திட்டங்களும் ஒன்று சேர்ந்து மொத்தமாக நாட்டின் பொது நிலப்பரப்பை ஏற்படுத்துகின்றன.''

கல்கத்தா பெருநகர் திட்ட ஸ்தாபனத்தின் நிபுணர்களின் முடிவு இக்கருத்துடன் ஒத்துப் போகிறது: ''கல்கத்தா பெருநகருக்கான பிரதேசத் திட்டத்திற்கு மாநிலப் பொது பிராந்தியத் திட்டத்தின் ஆதரவு கிட்டும் வரை இதனால் அரசுக் கொள்கையை உண்மையாக நிறைவேற்ற முடியாது.''

இந்தியாவின் எல்லா ஐந்தாண்டு திட்டங்களிலும் நகர வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி பிரச்சினைகள், நகரத் திட்டமிடல் ஆகியவை பலவாறாக விளக்கப்பட்டுள்ளன. ஏராளமான சிறிய மற்றும் சின்னஞ் சிறு நகர மையங்கள் தேக்கமுற்று மெதுவாக வளர்ந்து வருவதன் பின்னணியில் பெரிய மாநகரங்களின் தீவிர வளர்ச்சி தொடர்ந்தாற் போல் கவனத்தைக் கவர்ந்து வருவது இயற்கையே. நகர மக்கள் தொகையை மேலும் சமமாகப் பகிர்ந்தளித்து, பெரிய நகரங்களின் வளர்ச்சியை மட்டுப்படுத்தும் நோக்கத்தோடு ஆறாவது ஐந்தாண்டு திட்டத்திலிருந்து இந்தியாவில் மத்திய அரசின் ஆதரவோடு, சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் ஐக்கிய வளர்ச்சி அதிகாரப் பூர்வமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. உள்கட்டமைப்பைத் தோற்றுவிக்கவும் மற்ற வாழ்க்கை வசதிகளுக்குமான நிதியுதவி ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் ஒரு லட்சத்திற்கு குறைவான மக்கள்தொகையை உடைய நகரங்களுக்கு அனுப்பப்பட்டது என்றால், ஏழாவது ஐந்தாண்டில் இந்த நிதியுதவியை 3 லட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகையை உடைய நகரங்களுக்கு அனுப்புவது என்று முடிவு செய்யப் பட்டது; அதாவது படிநிலை மட்டம் கணிசமாக உயர்த்தப்பட்டது.

நகர புவியியல் இந்திய புவியியல் விஞ்ஞானத்தின் மிக வளர்ச்சி யடைந்த போக்குகளில் ஒன்று. வாரணாசி, கல்கத்தா, ஹைதராபாத் போன்ற பல்கலைக் கழகங்களில் இப்போக்கில் பல்வேறு வகைகள் உருவாகியுள்ளன. சாதாரணமாக நகர புவியியல் பொதுவான பொருளாதாரப் பிரதேசங்களின் பின்னணியிலும் இவற்றுடன் தொடர்பு படுத்தியும் ஆராயப்படுகின்றது. பல்வேறு பல்கலைக் கழக நகர புவியியல் போக்குகளுக்கும் நடைமுறை ஸ்தாபனங்களுக்கும் இடையில் வளர்ந்து வரும் ஒத்துழைப்பு பரஸ்பரம் பயனுள்ளது.

பெரும் புதிய கட்டுமானங்களைப் பற்றியும், தொழிற்துறை பிரதேச இணையங்களும் பொருளாதார பிரதேசங்களும் உருவாவதிலும் சுற்றி

யுள்ள பிரதேசத்தின் சமூக பொருளாதார வளர்ச்சியிலும் இவற்றின் .பங்கைப் பற்றியும் நடைபெறும் ஆராய்ச்சிகள் அதிகரித்து வருகின்றன.

5. கீழ்மட்ட பிரதேசமயப்படுத்தல் பிரச்சினைகளும் விசேஷ பிரதேசங்களின் வளர்ச்சித் திட்டங்களும்

இந்தியாவில் ''கீழ்மட்டத்திலிருந்து திட்டமிடுவதற்கு'', அதாவது கீழ்மட்ட நிர்வாக பிரதேச அலகுகளின் வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டுவதற்குப் பெரும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. கீழ்மட்டத்தி லிருந்தான திட்டமிடல் என்பது திட்டமிடலில் மக்கள் திரளினரை ஈடுபடுத்துவதற்கான மிக முக்கிய வழி என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஸ்தல இயற்கை வளங்கள் மற்றும் விசேஷ சமூக பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினைகளை ஆராய்வதன் அடிப் படையில்தான் சிறு பகுதிகளின் வளர்ச்சி பற்றிய பன்முகத் திட்டங் களைத் தீட்ட முடியும் என்பது இயற்கையே.

திட்டக் கமிஷனின் வேண்டுகோளுக்கிணங்க, இதன் நிதியுதவியைப் பயன்படுத்தி ஒரு சில விஞ்ஞான ஆராய்ச்சி நிலையங்களும் பல்கலைக் கழகங்களும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள வட்டங்களின் வளர்ச்சி அம்சங்களை ஆராய்ந்து, வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டுவ தில் ஈடுபட்டுள்ளன. 1960ஆம் ஆண்டுகளின் முற்பாதியிலேயே, வார்தா வட்டத்தில் கோகலே பொருளாதார, அரசியல் ஆராய்ச்சி நிலையம் (பூனா) இத்தகைய பணியை மேற்கொண்டது. இவ்வட்டம் 6 மைக் ரோ பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டது; இவை ''மண் அமைப்பு, நிலம் பயன்படுத்தப்படும் விதம், சாகுபடியாகும் பயிர்கள், பாசன வசதி ஆகியவற்றில் ஒரே மாதிரியானவை''. கள ஆராய்ச்சிகள் எதுவும் தனியே நடத்தப்படவில்லை; ஏற்கெனவேயிருந்த புள்ளி விவரங்கள், மற்ற விஷயங்கள், ஸ்தல மக்களிடையே நடத்தப்பட்ட கேள்வி பதில் ஆகியவை முக்கியமாகப் பயன்படுத்தப்பட்டன.

வெவ்வேறு ஸ்தாபனங்களும் அமைப்புகளும் கீழ்மட்ட பிரதேசங்களின் வளர்ச்சிப் பிரச்சினைகளை முறைப்படி ஆராய்கின்றன. பிராந்தியத் திட்டமிடலின் புதிய, முக்கிய அங்கமாகத் திகழும் இப்பணிகளுக்குக் கணிசமான குறைகளும் உண்டு. முதலாவதாக, கீழ்மட்ட பொருளா தார பிரதேசங்களாகத் திகழும் பகுதிகளை நிர்ணயிக்கும் பிரச்சினை தோன்றுகிறது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வட்டங்களின் எல்லை களுக்கு இயற்கை, பொருளாதார, இன மற்றும் மொழி அடிப்படை எதுவுமில்லை என்று ஏராளமான திட்டவட்டமான உதாரணங்கள் (வார்தா வட்டம் உட்பட) காட்டுகின்றன. சாதாரணமாக, வரி வசூலிப்பிற்கும் இராணுவக் கண்காணிப்பிற்கும் பிரிட்டிஷ் ஆட்சியாளர் களால் தோற்றுவிக்கப்பட்ட இவற்றால் பிராந்தியத் திட்டமிடலுக்

கான விவேகமான அடிப்படையாக விளங்க முடியாது; இந்திய விஞ் ஞானிகள் இதைப் பன்முறை கோடிட்டுக் காட்டியுள்ளனர். இதனால் ஒரு புறம், புறவய ரீதியாக நிலவும் பொருளாதார பிரதேசங்களைச் சுட்டிக் காட்டும் கடமை தோன்றுகிறது; மறு புறம், இந்த அடிப் படையை, நிலவும் நிர்வாக பிரதேச அமைப்பிற்கு ஏற்ப திட்டங்களைத் தீட்ட (இந்த பிரதேச அமைப்பு சாதாரணமாக, முதலில் கூறியது டன் ஒத்துப் போவதில்லை) நடைமுறையில் பயன்படுத்தும் கடமை முன்நிற்கிறது. கீழ்மட்ட பிரதேசங்களின் வளங்களை மதிப்பிடும் பொழுதும், நிர்வாக பிரதேசங்களின் வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டும் பொழுதும் நெளிவு சுழிவான அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை பேராசிரியர் டி. ஆர். காட்கில் — இந்தியத் திட்டக் கமிஷனுக்குத் தான் தலைமை தாங்கிய பொழுது — குறிப் பிட்டார்.

இளம் இந்திய புவியியலர்கள் இச்சிக்கலான பிரச்சினைகளின் ஆராய்ச்சியில் மேன்மேலும் ஈடுபடுகின்றனர். உதாரணமாக ஆர். பி. சிங் எழுதிய **விவசாய வளர்ச்சியின் புவியியல். மைக்ரோ மட்டத்தில் இந்திய அனுபவம்** என்ற நூல் (1986) பெரிதும் ஆர்வந்தரத் தக்கது. இந்நூலில் விவசாய வளர்ச்சி பற்றிய கருத்தமைப்புகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன, கிராம வளங்களின் ஐக்கிய முறை ஆராயப்படு கிறது, இவற்றைப் பன்முக ரீதியில் பயன்படுத்தும் முறை முன்மொழியப் படுகிறது. ஆசிரியரின் கருத்துநிலைகள் ஏழைப் பிரிவினருக்கு (நில மற்ற விவசாயத் தொழிலாளர்கள், சிறு நிலவுடைமையாளர்கள், கைவினைஞர்கள், பின்தங்கிய வகுப்பினர், இதரர்) உதவ வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டவை; இதற்கு ஆதாரமாக ஆசிரியர், பீஹார் மாநிலத்தில் சிவான் வட்டத்தில் தான் நடத்திய ஆராய்ச்சி களை முன்வைக்கிறார்.

இம்மாதிரியான மூலச் சிறப்புள்ள ஆராய்ச்சிகள் (குறிப்பாக இயற்கை வளம் மற்றும் புறச்சூழல் பற்றிய பயன்மிகு விவரங்களை இவை உள் ளடக்கியிருக்கும் போது) இந்திய கிராமத்தின் பல முக்கியப் பிரச்சினை களைத் தீர்க்க பெரிதும் அவசியம். இதன் தொடர்பில் பல முறையியல் அடிப்படைகளை ஏற்படுத்தும் கடமை முன்நிற்கிறது; உதாரணமாக, நில மதிப்பீடு முறைகள், பெருமளவு வரைபடங்களை உருவாக்கும் முறைகள், கள ஆராய்ச்சிகளை நடத்தும் முறைகள் போன்றவற்றை உருவாக்க வேண்டும்.

இந்தியாவில் பிராந்திய வளர்ச்சிக்கான திட்டமிடலில் ஒரு போக்கு, ''விசேஷ'' பிரதேசங்கள் என்றழைக்கப்படுபவற்றிற்கான செயல்திட்டங் களைத் தீட்டுவதாகும்; இந்த விசேஷ பிரதேசங்களில் சாதாரணமாக மலைப் பகுதிகள், வறண்ட பாலை நிலங்கள் மற்றும் அரைப் பாலை வனப் பிரதேசங்கள் ஆகியவை அடங்கும். இப்பிரதேசங்கள் ஓரளவு உள்ளடங்கியவை, சமூக பொருளாதார ரீதியில் பின்தங்கியவை,

கடினமான வரலாற்று, இயற்கையமைப்பை உடையவை, இவற்றின் புறச்சூழல் எளிதில் பாதிப்பிற்குள்ளாகக் கூடியது. சமூக பொருளாதார பின்தங்கிய சூழலில் விரைவான மக்கள் பெருக்கத்தின் காரணமாய், எளிதில் பாதிப்பிற்குள்ளாகும் புறச்சூழலின் மீதான மக்கள்தொகையின் நிர்ப்பந்தம் அதிகரிக்கிறது, இந்த புறச்சூழலின் உற்பத்தி வளம் குறைகிறது, ஏழ்மையும் பின்தங்கிய நிலையும் தொடருகின்றன.

6. ஐக்கிய சமூக பொருளாதார பிரதேசமயப்படுத்தலும் பிரதேச பொருளாதார ஒருங்கிணைப்பும்

*ஐக்கிய சமூக பொருளாதார பிரதேசமயப்படுத்தல் என்னும் மிகச் சிக்கலான, அதே சமயம் மிக முக்கியமான திட்ட முறை இந்தியாவில் கிட்டத்தட்ட **1960**ஆம் ஆண்டுகளிலிருந்து நிலவுகிறது. இத்துறையின் ஆராய்ச்சிகள் சமூக பொருளாதார வளர்ச்சியின் பிராந்திய மட்டங்களை நிர்ணயிக்கும் பணிகளுடன் — இவற்றைப் பற்றி மேலே குறிப்பிட்டோம் — நெருக்கமாகத் தொடர்புடையவை.* **இந்தியாவின் பொருளாதார பிரதேசமயப்படுத்தல்: பிரச்சினைகளும் அணுகுமுறைகளும்** *என்ற இந்திய-சோவியத் ஆராய்ச்சி இத்தலைப்பில் வெளியிடப்பட்ட முதல் பெரும் நூலாகும்.* (Sen Gupta, Sdasyuk, 1968.)

இந்த இந்திய-சோவியத் நூலில், இந்தியாவின் பொருளாதார பிரதேசங்கள் உருவாவதன் மீது பல்வேறு காரணிகள் செலுத்திய தாக்கம் கவனத்தில் கொள்ளப்படுகிறது. இயற்கை வளங்கள், இயற்கைச் சூழ்நிலையைப் பற்றிய பொருளாதார மதிப்பீட்டிற்கும் வளங்களின் மீது மக்கள்தொகை செலுத்தும் நிர்பந்தத்தை ஆராயவும் பெரும் கவனம் செலுத்தப்படுகிறது. எரிசக்தி உற்பத்திச் சுழற்சிகள் பற்றிய சோவியத் விஞ்ஞானி என். என். கலஸோவ்ஸ்கியின் தத்துவத்தைப் பயன்படுத்தி எஃப். சென் குப்தா (இவர்தான் நூலின் கூட்டாசிரியர்) நாட்டின் பெரும் பொருளாதார பிரதேசங்களின் நவீன தனித்துறைப்பாட்டையும் வளர்ச்சி வாய்ப்புகளையும் விளக்குகிறார். ஐக்கிய பிரதேசமயப்படுத்தலில் ஆறுகளை ஒட்டியுள்ள பிரதேசங்களுக்குப் பெரும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. தேசிய மாநிலங்களின் எல்லைகள் பிரதேசமயப்படுத்தல் முறையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஒருங்கிணைப்பின் பிரதேச அம்சம் என்பது பொருளாதார வளர்ச்சியின் பொது போக்குகளிலிருந்தும் பொருளாதாரத்தின் காலனி தன்மையை அகற்றுவதிலிருந்தும் வருகிறது. பொருளாதாரத்தின் துறை ரீதியான கட்டமைப்பும் பிரதேச ரீதியான கட்டமைப்பும் அங்கக ரீதியில் பரஸ்பரத் தொடர்புடையவை, ஆனால் இதனால் இவற்றின் இடையிலான முரண்பாடுகள் மறைந்து விடுவதில்லை; ஒருங்கிணைப்பு

வேகங்கள், சிறப்பியல்புகள், மட்டங்கள் ஆகியவை இந்த முரண்பாடு களின் தீர்வை கணிசமாகப் பொறுத்துள்ளன.

இந்த நிகழ்ச்சிப் போக்கு உள்ளுக்குள் முரண்பாடானது.

பொருளாதாரத்தின் பிரதேசக் கட்டமைப்பு சமமற்று வளர்ச்சியடைகிறது. அரசு முதலீடுகளில் பெரும் பகுதி மிகப் பின்தங்கிய மாநிலங்களாகிய பீஹார், மத்திய பிரதேசம், ஒரிசா ஆகியவற்றிற்குச் செல்கிறது என்றால், தனியார் மூலதனங்கள் முன்போன்றே பெரும் நகரங்களுக்கும் வளர்ச்சியடைந்த பிரதேசங்களுக்கும் தொடர்ந்து சென்று, அங்கு உற்பத்தியின் குவிப்பை வலுப்படுத்துகின்றன.

எது எப்படியிருந்த போதிலும் நவீன உற்பத்தி உள்கட்டமைப்பின் வளர்ச்சி, கனரகத் தொழிற்துறை நிறுவனங்களை ஏற்படுத்துவது, தொழிற்துறை மையங்களைத் தோற்றுவிப்பது ஆகியவை இந்தியப் பொருளாதாரத்தின் ஒருங்கிணைப்பிற்கான முக்கியக் காரணிகளாகத் திகழுகின்றன.

முக்கிய துறைமுக தொழிற்துறை மையங்கள், இவற்றையொட்டியுள்ள பிரதேசங்களின் வளங்களைத் தீவிரமாகப் பயன்படுத்துவது ஆகியவற்றின் அடிப்படையில் நாட்டில் ஏற்கெனவே தொழிற்துறை மண்டலங்கள் உருவாகியுள்ளன (அல்லது உருவாகி வருகின்றன), இவைதான் பெரும் பொருளாதார பிரதேசங்கள் உருவாவதற்கான அடிப்படையாகும். இவையாவன: கல்கத்தா-தாமோதர் மண்டலம்— நாட்டின் நிலக்கரி, உலோகத் துறையின் அடித்தளம், மிக முக்கிய கனரக இயந்திர கட்டுமான, சுரங்கத் தொழிற்துறை பிரதேசம், மேற்கு வங்கம், பீஹார், ஒரிசாவைத் தழுவி நிற்கும் (மத்திய பிரதேசத்தின் கிழக்குப் பகுதி இதை ஒட்டியுள்ளது) கிழக்கு இந்திய பிரதேசத்தின் மையம்; பம்பாய்-அகமதாபாத் மண்டலம் — பஞ்சு ஆலைகள் வழக்கமாக குவிந்துள்ள இடம்; நாடு சுதந்திரமடைந்த பின் எண்ணெய் எடுப்பு, எண்ணெய் சுத்திகரிப்பு, எண்ணெய் இரசாயன, மற்ற இரசாயன உற்பத்தி, சாதாரண மற்றும் துல்லிய உபகரண உற்பத்தி ஆகியவற்றில் இது முன்னணியில் நிற்கிறது. இந்தத் தொழிற்துறை மண்டலமும் இதில் நிலவும் பல்தரப்பு உற்பத்தி பொருளாதார உறவுகளும் சேர்ந்து மேற்கு இந்திய பிரதேசத்தின் (மகாராஷ்டிரா, குஜராத்) அடிப்படையாகும். தமிழ்நாடு, கேரளா, ஆந்திர பிரதேசம், கர்நாடகா ஆகியவற்றை உள்ளடக்கிய தென்னிந்திய பிரதேசமும் நன்கு திட்டவட்டமாகத் தெரிகிறது. நாட்டின் மற்ற பகுதிகளில் தொழிற்துறை பகுதிகளும் மையங்களும் இவற்றுடன் தொடர்புடைய நகர அமைப்புகளும் அவ்வளவு தெளிவாக இல்லை, அவை நிபந்தனைக்குட்பட்டவை. என்றாலும் புவியியல் நிலையின் சிறப்பியல்புகள், அரசு தழுவிய தனித்துறைப் பாடு, ஓரளவு பரவலான உள் பிரதேச பொருளாதாரத் தொடர்புகள் ஆகியவை வட மேற்கு பிரதேசத்தைப் பிரிக்க அடிப்படையளிக்கின்றன; இதில் பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான், ஹிமாசல பிரதேசம்,

ஜம்மு காஷ்மிர் ஆகியவை அடங்கும். அதே அடிப்படையில் வட கிழக்கு பிரதேசத்தையும் பிரிக்கலாம்; இதில் அஸ்ஸாம், மேகாலயா, நாகாலாந்து, அருணாசல பிரதேசம், திரிபுரா, மணிப்பூர், மிஜோராம் ஆகியவை அடங்கும். இரண்டு பெரிய மாநிலங்களாகிய உத்தர பிரதேசத்தையும் மத்திய பிரதேசத்தையும் அவற்றின் முக்கியத்துவத்திற்கேற்ப இரண்டு பெரிய பொருளாதார பிரதேசங்களாக கருதலாம்.

மாநிலங்கள் — இந்தியாவின் பிராந்திய வளர்ச்சியில் ஒரு அங்கமாகும்; இவை பிரதேச பொருளாதார ஒருங்கிணைப்புப் போக்குகளின் மீது மிகத் தீவிரத் தாக்கம் செலுத்துகின்றன. வெகுஜன தேசிய ஜனநாயக இயக்கத்தையடுத்து 1956இல் தோற்றுவிக்கப்பட்ட இவை பெரும் தேசிய இனங்களையும் மக்களினங்களையும் இணைத்து நிற்கின்றன. இவற்றில் பெரும்பாலானவை கணிசமான நிலப்பரப்பையுடையவை, இங்கு நிறைய மக்கள் வசிக்கின்றனர், குறிப்பிட்ட இயற்கை வளங்களும் பொருளாதார உள்ளாற்றலும் இருக்கின்றன. மாநில அரசாங்கங்களுக்கு நிலம், நீர், காடுகள் ஆகியவற்றைத் தம் விருப்பப்படி பயன்படுத்தவும் நிலச் சீர்திருத்தங்கள் செய்யவும் விவசாயம், நடுத்தர மற்றும் சிறுவீத தொழிற்துறை வளர்ச்சிக்கும், சாலை போக்குவரத்தை நடத்தவும் இன்னும் பலவற்றிற்கும் உரிமையுண்டு. பொதுவில், ஓரளவு சுயமான வளர்ச்சிக்கான வாய்ப்புகள் மாநிலங்களுக்கு உண்டு. மாநிலங்களுக்கு உள்ளேயும், இவற்றிற்கு வெளியிலும் ஒருங்கிணைப்பு போக்குகள் நிலவுகின்றன. இவற்றின் உள் பொருளாதார வளர்ச்சிக்கும் நாடு தழுவிய அளவிலான ஒருங்கிணைப்பிற்கும் (மேக்ரோ பிரதேசமயப்படுத்தல் மூலம்) இடையிலான பரஸ்பரத் தொடர்பு முரண்பாடானது. ஒரு புறம், தேசிய இன வாழ்க்கை தட்டியெழுப்பப்பட்டு தேசிய இனப் பரப்புகள் நிர்வாக ரீதியாக ஒன்று சேர்க்கப்படுகின்றன; மறு புறம் தேசிய இனத் தடைகளும் தேசிய இனத் தனிமையும் உடைத்தெறியப் படுகின்றன. இந்த இரண்டு வரலாற்று இயக்கங்களின் போராட்டப் போக்கில் மேற்கூறிய இணைப்பு நடைபெறுகிறது. தேசிய இனப் பிரதேசங்களும் பிராந்திய சந்தைகளும் பொருளாதார ரீதியாக வலுப்படுதல், நாடு தழுவிய அளவில் பொருளாதார ஒருங்கிணைப்பு வலுப்படுதல் என்ற இரண்டு புறவய நிகழ்ச்சிப் போக்குகள் நாம் குறிப்பிட்ட இயக்கங்களின் அடிப்படையாகத் திகழுகின்றன.

பொருளாதார வளர்ச்சி மீது தாக்கம் செலுத்த நல்ல வாய்ப்புகளைப் பெற்றுள்ள மாநில அரசாங்கங்கள் மாநிலங்களுக்குள் பொருளாதார இணையத்தைத் துரிதமாகத் தோற்றுவிக்க முயலுகின்றன. பொருளாதார வலிமைக்காக, தம் பொருளாதார எழுச்சிக்காக தேசிய இனங்கள் நியாயமாக முயலுவதானது பல நேரங்களில் குறுகிய வட்டத்திற்கு இட்டுச் செல்கிறது; இது நாடு முழுவதன் வளர்ச்சிக்கும், இதன் தனிப்பட்ட பகுதிகளின் வளர்ச்சிக்கும் கேடு விளைவிக்கும். இயன்ற

அளவு அதிகமாகப் பிடுங்க நினைக்கும் ஸ்தல பூர்ஷ்வாக்களின் குறுகிய சுயநலப் போக்குகள், வளங்களை விவேகமாகப் பயன்படுத்தவும் உற்பத்திச் சக்திகளை சரியாக அமைக்கவும் இடையூறாக உள்ளன, மொத்தமாக நாட்டின் பிரதேச பொருளாதார ஒருங்கிணைப்பைத் தாமதப்படுத்துகின்றன.

தொழிற்துறைமயப்படுத்தல்தான் நாடு தழுவிய அளவில் பொருளாதார ஒருங்கிணைப்பிற்கான முக்கியக் காரணி என்று மேலே குறிப்பிட்டோம். கனரகத் தொழிற்துறையைச் சேர்ந்த பெரிய தொழில் நிறுவனங்களின் கட்டுமானம் பெரும்பாலும் மத்திய அரசாங்கத்தின் பொறுப்பில் உள்ளதால், அது இக்காரணியைத் திட்டமிட்டு, விஞ்ஞான அடிப்படையில் பயன்படுத்த உதவுகிறது. அதே சமயம், ஒரு சில புதிய அரசுக் கட்டுமானங்களை எங்கே அமைப்பது என்ற பிரச்சினையைத் தீர்ப்பது எவ்வளவு கடினமானது என்பது தெரிந்ததே. பல நேரங்களில் விவேகமான தொழில்நுட்ப பொருளாதார அம்சங்கள் அல்ல, மாறாக, குறிப்பிட்ட மாநிலத்தின் அரசியல் நிர்ப்பந்தம்தான் இதில் பெரும் பங்காற்றுகிறது.

ஸ்தல அரசாங்கங்களின் நிர்பந்தத்தால் ''ஒவ்வொரு மாநிலத்திற்கும் அதனதன் இரசாயன உர ஆலை'', ''ஒவ்வொரு மாநிலத்திற்கும் அதனதன் கடைசல் எந்திரத் தொழிற்சாலை'' போன்ற கோஷங்கள் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டன. ஒரு சில சந்தர்ப்பங்களில் மாநில எல்லைகளின் தாக்கம் எரிசக்தி அமைப்புகள் உருவாவதில் நன்கு பிரதிபலிக்கிறது. உதாரணமாக, கர்நாடகம், மகாராஷ்டிரா, ஆந்திர பிரதேசம், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களின் எல்லையோரங்களில் மின்கம்பிப் பாதைகள் ஒன்றிற்கொன்று மிக நெருக்கமாக உள்ளன, ஆனால் அவை ஒன்றுடன் ஒன்று இணைக்கப்படவில்லை. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட நகலில் கோடிட்டுக் காட்டியபடி, பிரதேச எரிசக்தி அமைப்புகளைத் தோற்றுவிப்பது அவ்வளவு விரைவாக நடைபெறவில்லை, ஏனெனில் மாநிலங்கள் தத்தம் பரப்பில் மின்கம்பிகளை அமைப்பதற்கே தொடர்ந்து முன்னுரிமை வழங்கி வருகின்றன. வார்ப்பிரும்பு பற்றாக்குறையாக உள்ள போது மாநிலங்களுக்கு இடையில் கம்பிகளை இடுவது பெரிதும் பாதிக்கப்படுகிறது. மாநிலங்களிலுள்ள லைசென்ஸ் முறை சரக்குப் போக்குவரத்தைப் பாதிக்கிறது. எல்லா மாநில எல்லைகளிலும் சுங்கச் சாவடிகள் இருக்கின்றன, பரிசோதனை முறையும் வரி விதிப்பும் நிலவுகின்றன.

ஆறுகளைக் கூட்டாகப் பயன்படுத்தும் பிரச்சினைகள் குறிப்பாகக் கடுமையானவை. பொருளாதார ரீதியில் நன்கு வளர்ச்சியடைந்த மாநிலங்களாகிய தமிழ்நாடு, குஜராத், மகாராஷ்டிரா, பஞ்சாப், ஹரியானா ஆகியவற்றின் நீர் வளம் கிட்டத்தட்ட தீர்ந்து விட்டது அல்லது தீரும் நிலையிலிருக்கிறது. நீர்ப் பற்றாக்குறை பெருகி வரும் பொழுது நீர் வளத்தை அதிகபட்சம் விவேகமாகப் பயன்படுத்து

வது முக்கியம்; இதற்கான முக்கிய வழி ஆறுகளை ஒட்டியுள்ள இடங்களை, அதாவது ஆற்றுப் படுகைகளை பன்முக ரீதியில் வளர்ப்பதாகும்.

நீர்ப் பற்றாக்குறை அதிகரித்து வருகையில் தத்தம் நீர்வளங்களைத் தான் மட்டுமே முழுக்க முழுக்கப் பயன்படுத்த வேண்டும் என்ற மாநிலக் கோரிக்கைகள் அதிகரித்து வருகின்றன; அதே நேரத்தில் நீர் வளங்களை விவேகமாக, பன்முக நோக்கில், ஆற்றுப் படுகைகளை ஒட்டிப் பயன்படுத்தும் தேவையும் கூடி வருகிறது. 1973இல் தமிழக சட்டப் பேரவைக் கூட்டத் தொடரைத் துவக்கி வைக்கும் பொழுது ஆளுநர் பின்வருமாறு குறிப்பிட்டார்: "நீர் வளத்தையும் மற்ற இயற்கை வளங்களையும் பயன்படுத்துவது சம்பந்தமான திட்டங்கள் பிராந்திய அடிப்படையில் தீட்டப்பட வேண்டுமேயன்றி மாநில வரம்புகளுக்குள் குறுகி விடக் கூடாது. தென்னிந்தியாவின் நீர் வளத்தை எப்படிக் கூட்டாகப் பயன்படுத்துவது என்று கர்நாடகா, தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா மாநிலங்கள் ஒன்றாகத் திட்டமிட வேண்டும்."

பிராந்திய ஒத்துழைப்புப் பிரச்சினை பொது அரசு முக்கியத்துவத்தைப் பெற்று, கடுமையான அரசியல் பிரச்சினையாகியுள்ளது. ஆனால் பொருளாதார பிரதேசமயப்படுத்தல் மற்றும் ஐக்கிய பிராந்திய வளர்ச்சிப் பிரச்சினைகளிலிருந்து தனியாகப் பிரித்து இதைத் தீர்க்க முடியாது.

இந்தியாவில் நன்கு வளர்ச்சியடைந்த மாநிலங்களில் இயற்கை வளங்கள் தீரும் நிலையில் இருக்கின்றன, பெரும்பகுதி இயற்கை வளங்களோ பின்தங்கிய மாநிலங்களில் (பீஹார், மத்திய பிரதேசம், ஒரிசா, ராஜஸ்தான், வட கிழக்கு இந்தியா) இருக்கின்றன. இச்சூழ்நிலையில் பிராந்திய அடிப்படையில் மாநிலங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு மிக அவசியமானது. வரலாற்று ரீதியாக வந்து, ஆழமடைந்து வரும் பொருளாதார, மக்கள்தொகை மற்றும் இயற்கை வள சீரிசைவின்மைகளைப் பன்முக பிராந்திய அடிப்படையில் மட்டுமே அகற்ற முடியும். இந்த நீண்டகால பிரச்சினைகளைத் தனிப்பட்ட மாநிலங்களின் குறுகிய வட்டங்களுக்குள் தீர்க்க முடியாது.

இம்மாநிலங்களின் உள் ஒருங்கிணைப்பு போக்குகளும் சிக்கலாக நடைபெறுகின்றன. கடந்த காலம் விட்டுச் சென்ற பொருளாதார பிரதேசக் கட்டமைப்பு — இது மிகவும் சமமற்றது, பலவீனமான பரஸ்பரத் தொடர்புகளை உடையது — இங்கே மிகவும் வலிமையாக உள்ளது; அதுவும் நவீன வரம்புகளில் கிட்டத்தட்ட அவையெல்லாமே ஓரளவு சமீபகாலமாகத்தான் நிலவுகின்றன. அனேகமாக, மொழி அடிப்படையில் நிர்வாக பிரதேசப் பிரிவு தொடரக் கூடும். பல மொழிகள் பேசப்படும் மாநிலங்களில் மட்டுமின்றி, ஒரேயொரு மொழி பேசப்படும் ஒரு சில மாநிலங்களிலும் சில பிரதேசங்கள் சுதந்திரமாகச் செயல்பட முனைகின்றன; எனவே இன்னுமொரு கடுமையான பிரச்சினை மீது,

14–1339

அதாவது மிகவும் சமமற்ற பிரதேச சமூக பொருளாதார வளர்ச்சி மீது, பின்தங்கிய மற்றும் ஓரளவு மலர்ச்சியுடன் இருக்கும் பிரதேசங்களின் வளர்ச்சியில் மேன்மேலும் அதிகரித்து வரும் பிளவின் மீது அதிக கவனம் செலுத்தும்படி நேரிடுகிறது. இங்கே பிராந்தியத் திட்டமிடலின் கடமை, ஒவ்வொரு பிரதேசத்தின் வளத்தையும் அதிகபட்சம் பயன்படுத்தவும் இவற்றின் ஒருங்கிணைப்பை வலுப்படுத்தவும் வகை செய்வதாகும்.

முடிவுரை

பிராந்திய வளர்ச்சி பற்றிய கருத்தமைப்புகளின் விமர்சனத்தை முடிக்கும் முகமாக நான்கு முக்கிய அம்சங்களைச் சுட்டிக் காட்ட வேண்டும்: 1) பிராந்தியப் பிரச்சினையின் உலகளாவிய, நிரந்தர முக்கியத்துவம்; இது எல்லா சமுதாய அமைப்புகள், நாடுகள், பிரதேசங்களுக்கும் உரித்தானது; 2) சமீப ஆண்டுகளில் பிராந்தியக் கருத்தமைப்புகளில் ஏற்பட்ட கட்டாய மாற்றமும் இதற்கேற்ப பிராந்திய விஞ்ஞானங்களில் ஏற்பட்ட மாற்றங்களும்; 3) இவ்விஞ்ஞானங்களின் இன்றைய நிலையின் சிறப்பியல்புகள்; 4) ஆக்க பூர்வமான அம்சம் — உலக அனுபவம் மற்றும் பல்வேறு நாடுகளின் பிராந்திய விஞ்ஞானிகளின் ஒத்துழைப்பின் பின்னணியில் பிராந்திய ஆராய்ச்சி வழிகளும் சாத்தியக்கூறுகளும்.

உலகம் முழுவதும் எல்லா மட்டங்களிலும் பிராந்தியப் பிரச்சினைகளின் முக்கியத்துவம் அதிகரித்து வருகிறது. மிக உயர்ந்த மட்டத்தில் இது, முதலாளித்துவ நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்கும் இடையில் அதிகரித்து வரும் பிளவாகும் (இது வடக்கு — தெற்கு பிரச்சினை என்று தவறாகக் குறிப்பிடப்படுகிறது); பின்னர், முதலாளித்துவ மற்றும் வளர்முக நாடுகளின் தனிப்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரங்களில் உள்ள வேறுபாடு. சோஷலிச நாடுகளிலும் பிராந்தியப் பிரச்சினைகள் நிலவுகின்றன. இவை, துறை ரீதியான மற்றும் பிரதேசத் திட்டமிடலை இணைப்பது பற்றிய சிக்கலான பிரச்சினைகள், பெரும் புதிய பிரதேசங்களின் வளர்ச்சிப் பிரச்சினைகளாகும். இவை பல கட்சி, அரசு ஆவணங்களிலும் கட்சிக் காங்கிரசுகளிலும் குறிப்பிடப்பட்டன. வளர்ச்சிப் போக்கில் தோன்றும் புதுப் புது முரண்பாடுகளையும் பிரச்சினைகளையும் தீர்க்க நிரந்தர கவனம் தேவை என்றாலும் இவற்றிற்குப் பகை முரண்பாட்டுத் தன்மை கிடையாது.

பிராந்தியப் பிரச்சினைகளின் சர்வாம்ச, நிரந்தர முக்கியத்துவத்தைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது இரண்டு விஷயங்களைச் சுட்டிக் காட்ட வேண்டும்:

— முதலாவதாக, இந்த முக்கியத்துவம் நிலையானது அல்ல, இது

புறச்சூழல், எரிசக்தி, மக்கள்தொகை பிரச்சினைகள் போன்ற உலகப் பிரச்சினைகளின் தொடர்பில் அதிகரிக்கிறது, ஏனெனில் இப்பிரச்சினைகளில் ஒவ்வொன்றும் பிராந்தியத் தன்மையைக் கொண்டது. குறிப்பாக பொருளாதார வீழ்ச்சிகள், நெருக்கடிகளின் பொழுது இப்பிரச்சினைகள் கடுமையாகின்றன;

—இரண்டாவதாக, பிராந்திய பொருளாதாரப் பிரச்சினைகள் மேன்மேலும் சமூக, அரசியல் தன்மைகளைப் பெறுகின்றன, இவை நேரடியாக மக்களின் வாழ்க்கைத் தரத்துடன், குறிப்பாக வேலை வாய்ப்பு பிரச்சினைகளுடன் தொடர்பு கொள்கின்றன; இவை ஒரு புறம் அரசு ஏகபோக ஒழுங்கமைப்பின் ஆளுகைக்கும் மறு புறம் "கீழிருந்து" வரும் ஜனநாயக மாற்று வழிகள், எதிர்த் திட்டங்களின் ஆளுகைக்கும் உட்படுகின்றன; இதில் பிரதேச கட்டமைப்புகள் துறை கட்டமைப்புகளை விட அதிக சடத்துவம் வாய்ந்தவையாதலால், இவற்றை ஒழுங்குபடுத்துவது மிகச் சிக்கலானது, இதற்கு நீண்ட காலம் தேவைப்படும்.

பிராந்தியப் பிரச்சினைகள் தீவிரமாகி வருவதும் இவை அரசியல் தன்மையைப் பெற்று வருவதும் இவற்றின் ஆராய்ச்சியில் ஈடுபடும் பொருளாதார, புவியியல், சமூக விஞ்ஞானங்களின் இணைப்பிற்கு வழிகோலுகின்றன. புவியியல் விஞ்ஞானத்தைப் பொறுத்தமட்டில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், மேலே குறிப்பிட்டபடி சமூக அம்சமும் புறச்சூழல் அம்சமும இதில் மேன்மேலும் உட்புகுந்து வருவதாகும். இத்தகையதொரு விஞ்ஞான இணைப்பு இன்னமும் உருவாகி வருகிறது, இப்போக்கு முடிவடையவில்லை, இது மேலைய விஞ்ஞானத்திற்கும் சோவியத் விஞ்ஞானத்திற்கும் பொதுவான அம்சமாகும். சமூக, புறச்சூழல் விஞ்ஞானங்கள் உட்பட பல்வேறு விஞ்ஞானப் பிரிவுகளை இணைக்கும் முயற்சி, இவற்றின் கூட்டான, ஒத்திசைவிப்புப் பணி—இது எல்லா நாடுகள், போக்குகளுக்கும் பொதுவான ஒன்றாகும்.

மேலைய நாடுகளில் நிலவும் பிராந்திய வளர்ச்சி பற்றிய தத்துவங்களின் இன்றைய நிலையில் பின்வரும் அம்சங்களைக் குறிப்பிடலாம்:

—முதலாவதாக, எந்த ஒரு பொதுவான, ஆதிக்கம் செலுத்தும் தத்துவார்த்த அடிப்படையும் இல்லை; மிகவும் வெவ்வேறான, ஒன்றையொன்று விரைவாக மாற்றும் பிராந்திய வளர்ச்சி பற்றிய தத்துவார்த்த, அரசியல் பொருளாதார அடிப்படைகள்தான் நிலவுகின்றன, எனவே பல்திரட்டு தன்மை தோன்றுகிறது, "பன்மைவாதம்" உருவாகிறது—பல்வேறு போட்டி தத்துவங்களும் போக்குகளும் மிகப் பல்வேறான தத்துவார்த்த, அரசியல் வண்ணத்துடன் இணையாக நிலவுகின்றன;

—இரண்டாவது அம்சம், ஆராய்ச்சிகளின் இணையான போக்காகும். இது முதல் அம்சத்திலிருந்து வருகிறது. பொதுத் தத்துவமோ, வழிகாட்டி கொள்கையோ இல்லாததாலும் ஸ்தாபன ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட ஆராய்ச்சி மையம் இல்லாததாலும் ஒரே மாதிரி

யான ஆராய்ச்சிகள் திரும்பத் திரும்ப நடைபெறுகின்றன, ஒரே மாதிரி யான முடிவுகள் திரும்பத் திரும்ப அடையப்படுகின்றன, மாயையான ''முதல் கண்டுபிடிப்புகளுக்காக'' சக்தியும் சாதனங்களும் விரயமா கின்றன;

—மூன்றாவதாக, பெரும்பாலான பாரம்பரியத் திசையமைவுகள் (''தீவிரவாதிகளைத்'' தவிர) நவீன பிராந்தியப் பிரச்சினைகளின் ஆழ்ந்த காரணிகளைப் பற்றிய பகுப்பாய்விலிருந்து, நிகழ்ச்சிப் போக்கு களின் சாராம்சத்திலிருந்து விலகுகின்றன, முதலாளித்துவம், நவீன காலனியாதிக்க வளர்ச்சி மாடெல்கள் விவேகமானவை, நிரந்தரமா னவை என்று மெய்ப்பிக்க முயலுகின்றன. முதலாளித்துவத்தை நிலைப் படுத்துவதுதான் இதன் லட்சியமாகும், இதன் நியதியான பின்விளைவு ''மேலைய மத்தியவாதம்'' ஆகும், குறிப்பிட்ட தீர்வுகளை உலகத் தீர்வுகளாக்கவும் இவற்றை மூன்றாம் உலகிற்குப் பரப்பவும் முயற்சிக் கப்படுகிறது;

—நான்காவதாக, பல வடிவமைப்புகள் சூக்குமமான தத்துவ அடிப் படையைக் கொண்டுள்ளன, பல முக்கியக் கருத்தமைப்புகள் உரிய விதத்தில் ஆராயப்படவில்லை, எனவே இவற்றின் நடைமுறைப் பயன் மட்டானது.

எனவே மேலைய நாடுகளில் பிராந்தியக் கொள்கையின் பலவீன மான பின்விளைவுகளையும், சமூக பொருளாதார வளர்ச்சி மட்டங் களில் உள்ள பிளவுகள் அதிகரிப்பதையும் ''வளர்ச்சித் துருவங்கள்'' போன்ற ஒரு முக்கியக் கருத்தமைப்பின் பலமின்மையாலோ, குறை வான செயல்வன்மையாலோ, ''சித்தாந்தப் பிற்போக்குத் தன்மையா லோ'' விளக்கக் கூடாது. பிராந்தியங்களுக்கு இடையிலான பிளவுகள் அப்படியே இருப்பதற்கும் ஆழமாகி வருவதற்கும் முக்கியமான காரணம் முதலாளித்துவ உற்பத்தியின் தன்னிச்சைப் போக்காகும்—சமமின்மை தான் இதன் வளர்ச்சி விதியாகும். வர்க்கச் சமமின்மை பிரதேச சமமின் மையைத் தோற்றுவிக்கிறது, இதன் அடிப்படைக் காரணம் தத்துவப் பற்றாக்குறையல்ல, முதலாளித்துவ அமைப்பின் குறைகளே.

புத்தகப் பட்டியல்

அனுச்சின் வி. ஏ., புவியியலின் தத்துவார்த்த அடிப்படைகள், *மாஸ்கோ, 1972.*

இவனோவ் ஐ., "முதலாளித்துவ உழைப்புப் பிரிவினையில் பன்னாட்டு ஏகபோகங்கள்". — உலகப் பொருளாதாரமும் சர்வதேச உறவுகளும், *1980, № 8.*

கலஸோவ்ஸ்கி என். என்., பொருளாதார பிரதேசமயப்படுத்தல் தத்துவம், *மாஸ்கோ, மீஸ்ல் பதிப்பகம், 1969.*

கோமர் ஐ. வி., இயற்கை வளங்களை விவேகமாகப் பயன்படுத்துவதும் இயற்கை வள சுழற்சிகளும், *மாஸ்கோ, நவூக்கா பதிப்பகம், 1975.*

கோர்கின் ஏ. பி., "அமெரிக்க ஐக்கிய நாட்டின் பதப்படுத்தும் தொழிற்துறையின் பிரதேசக் கட்டமைப்பின் மீது முதலாளித்துவ புனருற்பத்தி சுழற்சிகளின் தாக்கம்". — சோவியத் விஞ்ஞானப் பேரவையின் ஏடு, *புவியியல் தொகுதி, 1978, № 6.*

சாவுஷ்கின் ஒய். ஜி., புவியியல் விஞ்ஞானத்தின் வரலாறும் முறையியலும், *மாஸ்கோ, மாஸ்கோ பல்கலைக் கழகப் பதிப்பகம், 1976.*

சாவுஷ்கின் ஒய். ஜி., பொருளாதார புவியியல்: வரலாறு, தத்துவம், முறைகள், நடைமுறை, *மாஸ்கோ, மீஸ்ல் பதிப்பகம், 1973.*

செத்தீர்கின் வி. எம்., பொருளாதார பிரதேசமயப்படுத்தலின் பிரச்சினைகள், *தாஷ்கண்ட், 1967.*

சோவியத் நாட்டில் உற்பத்திச் சக்திகளின் இடப் பரப்பீடு பற்றிய திட்டமிடல், *மாஸ்கோ, எக்கனோமிக்கா பதிப்பகம், 1985.*

பக்ஷிஷேவ்ஸ்கி வி. வி., சோவியத் நாட்டில் பொருளாதார பிரதேசமயப்படுத்தல் (1962—1964இல் நடந்த ஆராய்ச்சிகளின் சுருக்கம்), *மாஸ்கோ, 1965.*

பரான்ஸ்கி என். என்., நகரங்களின் பொருளாதார புவியியல் ஆராய்ச்சி. தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள். சோவியத் பொருளாதார புவியியலின் தோற்றம், *மாஸ்கோ, மீஸ்ல் பதிப்பகம், 1980.*

பரான்ஸ்கி என். என்., நாட்டியலும் இயற்கை மற்றும் பொருளாதார புவியியலும். தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள். புவியியலின் விஞ்ஞானக் கோட்பாடுகள், *மாஸ்கோ, மீஸ்ல் பதிப்பகம், 1980.*

பன்ட்மான் எம். கே., பிரதேச உற்பத்தி இணையங்கள்: தத்துவமும் நடைமுறையும், *நோவசிபீர்ஸ்க், 1980.*

பிச்செலின்த்செவ் ஓ. எஸ்., உற்பத்தி இட அமைப்பின் பொருளாதார அடிப்படை. முதலாளித்துவ நாடுகளில் பயன்படுத்தப்படும் முறைகள், *மாஸ்கோ, 1966.*

பிரிவலோவ்ஸ்கயா ஜி. ஏ., ருனோவா தி. ஜி., சோவியத் நாட்டில் தொழிற்துறையின் பிரதேச ஒழுங்கமைப்பும் இயற்கை வளங்களும், *மாஸ்கோ, நவூக்கா பதிப்பகம், 1980.*

புவியியலின் நவீன பிரச்சினைகள், *மாஸ்கோ, நவூக்கா பதிப்பகம், 1976.*

பூர்ஷ்வா பிராந்தியத் தத்துவமும் உற்பத்திச் சக்திகளின் இட அமைப்பு பற்றிய அரசு ஏகபோக ஒழுங்கமைப்பும், *மாஸ்கோ, மீஸ்ல் பதிப்பகம், 1981.*

பொருளாதார பிரதேசமயப்படுத்தலின் பிரச்சினைகள். ஆவணங்களும் கட்டுரைகளும் (1917 — 1929), *பதிப்பாசிரியர்: பேரவை விஞ்ஞானி ஜி. எம். கிரிஜனோவ்ஸ்கி, அரசியல் பதிப்பகம், மாஸ்கோ, 1957.*

போல்ஸ்கி எஸ். ஏ., பெரும் நகரங்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் பிரச்சினைகள், *மின்ஸ்க், 1979.*

மாஷ்பித்ஸ் ஜே. ஜி., ''வளர்முக நாடுகளில் இயற்கை வள மற்றும் பொருளாதார புவியியலின் சிறப்பியல்புகளும் பிரச்சினைகளும்''. — புவியியல் பிரச்சினைகள், *தொகுதி 95, 1974.*

மின்த்ஸ் ஏ. ஏ., இயற்கை வளங்களைப் பற்றிய பொருளாதார மதிப்பீடு. இவ்வளங்களைப் பயன்படுத்தும் செயல்வன்மையில் உள்ள புவியியல் வேறுபாடுகளைக் கணக்கில் எடுத்துக் கொள்வது சம்பந்தமான விஞ்ஞான முறையியல் பிரச்சினைகள், *மாஸ்கோ, 1972.*

மின்த்ஸ் ஏ. ஏ., ''சோவியத் நாட்டின் இயற்கை வளங்களைப் பொருளாதார ரீதியாகப் பயன்படுத்துவது சம்பந்தமான புவியியல் பிரச்சினைகள்''. — புவியியல் பிரச்சினைகள், *தொகுதி 75, 1968.*

ருனோவா தி. ஜி., ''சோவியத் நாட்டில் இயற்கை வள பிரதேசமயப்படுத்தல்''. — சோவியத் விஞ்ஞானப் பேரவையின் ஏடு, *புவியியல் தொகுதி, 1973, № 2.*

லவ்ரோவ் செ. பா., பிரியப்ரஜேன்ஸ்கி வி. எஸ்., ஸ்தஸியூக் க. வ., ''மேலைய நவீன 'தீவிர புவியியல்': அடிப்படைகள், வரலாறு, கருத்துநிலைகள்'', — சோவியத் விஞ்ஞானப் பேரவையின் ஏடு, *புவியியல் தொகுதி, 1979, № 2.*

லித்தோவ்கா ஓ. பி., சோவியத் நாட்டில் பெருநகர் திரட்டுகளின் வளர்ச்சியையடுத்து பிரதேசத்தை விவேகமாகப் பயன்படுத்தும் பிரச்சினைகள், *மாஸ்கோ — கீவ், 1979.*

விளதீமிரவ் வி. வி., மக்கள்தொகை பரப்பீடும் புறச்சூழலும், *மாஸ்கோ, ''கட்டுமானத் துறை'' பதிப்பகம், 1982.*

வெர்னாத்ஸ்கி வி. ஐ., இயற்கையன்பரின் சிந்தனைகள். நூல் 1. உயிரினங்களின் மத்தியிலும் உயிரற்ற இயற்கைப் பொருட்களின் மத்தியிலும் விசும்பும் காலமும், *மாஸ்கோ, நவூக்கா பதிப்பகம், 1975.*

வெர்னாத்ஸ்கி வி. ஐ., இயற்கையன்பரின் சிந்தனைகள். நூல் 2. உலகளாவிய புலப்பாடு என்ற வகையில் விஞ்ஞான சிந்தனை, *மாஸ்கோ, நவூக்கா பதிப்பகம், 1977.*

ஜான்ஸ் இ., **புவியியலில் நவீன முறைகள். சோவியத்-பிரிட்டிஷ் கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள்**, *லண்டன், 1978.*

ஸக்லாதின் வி. வி., ஃப்ரலோவ் ஐ. தி., **நவீன காலத்தின் உலகளாவிய பிரச்சினைகள். விஞ்ஞான மற்றும் சமூக அம்சங்கள்,** *மாஸ்கோ, ''சர்வதேச உறவுகள்'' பதிப்பகம், 1981.*

ஸ்தஸியூக் க. வ., **இந்தியா. பொருளாதார புவியியல்,** *மாஸ்கோ, மீஸ்ல் பதிப்பகம், 1975.*

ஸ்தஸியூக் க. வ., **இந்திய மாநிலங்கள்,** *மாஸ்கோ, மீஸ்ல் பதிப்பகம், 1981.*

ஹோரெவ் பி. எஸ்., **சமுதாயத்தின் பிரதேச ஒழுங்கமைப்பு,** *மாஸ்கோ, மீஸ்ல் பதிப்பகம், 1981.* *

Boudeville J-R., *Problems of Regional Economic Planning*, Edinburgh, Edinburgh University Press, 1966.

Brown E. H. (ed.), *Geography, Yesterday and Tomorrow*, Oxford, Oxford University Press, 1980.

Buchanan Keith, "Reflections on a 'Dirty Word'".—*Radical Geography*, Chicago, 1977.

Bull D., *A Growing Problem: Pesticides and the Third World Poor*, Oxford, OXFAM, 1982.

Chant D. A., Regier H. A., "A Challenge to the Traditional Western View of Development".—*Science Forum*, Oct. 1972.

Chatterjee S. P., *Fifty Years of Science in India. Progress of Geography*, Calcutta, 1964.

Chisholm M., *Human Geography: Evolution or Revolution?* Harmondnoorth, Penguin Books, 1975.

Chisholm M., *Modern World Development. A Geographical Perspective*, London, Hutchinson, 1982.

Cole John P., *The Development Gap: A Spatial Analysis of World Poverty and Inequality*, New York, Wiley, 1981.

Design for a Worldwide Study of Regional Development. A Report to the United Nations on a Proposed Research-Trading Program. A Resources for the Future Staff Study, Baltimore, The John Hopkins Press, 1966.

Economic and Socio-Cultural Dimensions of Regionalization. An Indo-USSR Collaborative Study, Delhi, Gov. of India Press, 1972.

Frank A. G., *Capitalism and Under-development in Latin America: Historical Studies of Chile and Brazil*, New York, 1969.

Friedmann J., Weaver C., *Territory and Function. The Evolution of Regional Planning*, London, Edward Arnold Publishers, 1979.

Gabor D. et al., *Beyond the Age of Waste. A Report to the Club of Rome*, Oxford, 1978.

---

* *மேற்கூறிய நூல்களின் மூலம் ருஷ்ய மொழியில்.* — ப-ர்.

Guha Ramachandra, "Ecological Crises and Ecological Movements. A Bourgeois Deviation?"—*Economic and Political Weekly*, Bombay, Dec. 25, 1982.

Hägerstrand T., *Innovation Diffusion as a Spatial Process*, Lund, Heerup, 1967.

Hamilton F. E. Jan, Linge G. Y. R. (eds.), *Spatial Analysis, Industry and the Industrial Environment*, Chichester, Wiley, 1979.

Harvey D., *Social Justice and the City*, Baltimore, The John Hopkins University Press, 1973.

Harvey D., "Population Resources and the Ideology of Science".—*Radical Geography*, Chicago, 1978.

Hirschmann A. O., *The Strategy of Economic Development*, New Haven, Yale University Press, 1958.

Hirschmann A. O., "Interregional and International Transmission of Economic Growth",—*Regional Development and Planning. A Reader*, Cambridge (Mass.), The M. I. T. Press, 1969.

India. A Regional Geography, Singh R. L. (ed.), Varanasi, Bhargava Bhushan Press, 1971.

Isakov Yu. A., "The Protection of Nature in the USSR: Scientific and Organizational Principles".—*Geoforum*, vol. 15, № 1, 1984.

Isard W., *Ecologic-Economic Analysis for Regional Development*, New York, The Free Press, 1972.

James P. E., *All Possible Worlds. A History of Geographical Ideas*, Indianapolis, The Odyssey Press, 1975.

Kahn H., Brown W., Martel L., *The Next 200 Years. A Scenario for America and the World*, New York, 1976.

Karasko G. J., "The Metropolitanization of Industry."—In: Hamilton F. E. I. (ed.), *Contemporary Industrialization: Spatial Analysis and Regional Development*, London, Longman, 1978.

Kimble G. H. J., "The Inadequacy of the Regional Concept".—In: Stamp L. D. and Wooldridge S. W. (eds.), *London Essays in Geography*, Cambridge (Mass.), Harvard University Press, 1951.

Laszlo E. et al., *Goals for Mankind: A Report to the Club of Rome on the New Horizons of a Global Community*, New York, Dutton, 1977.

Lauschmann Elisabeth, *Grundlagen einer Theorie der Regionalpolitik*, Hannover, Gebr. Janecke, 1976.

Lavrov S. B., Pokshishevsky V. V., Sdasyuk G. V. (eds.), *Regionalization for Planning in the USSR: Concepts, Methods and Practice. UNCRD Monograph*, Nagoya, 1985.

Lefevre H., "Reflections on the Politics of Space."—*Radical Geography*, Chicago, 1977.

Leontief W., Carter A., Petri P., *The Future of the World Economy: A United Nations Study*, New York, Oxford University Press, 1977.

Luttrell W., *Factory Location and Industrial Movement*, London, 1962.

Massey D., "Towards a Critique of Industrial Location Theory".— *Radical Geography*, London, 1978.

Mahalanobis P. C., "A Foreword".— In: Rao V. L. S. P., Bhat L. S., *Planning Regions in the Mysore State*, Calcutta, Kalipada Mukherjee at Eka Press, 1960.

Meadows D., Meadows D. L., Randers J., Behrens W. W., *The Limits to Growth. A Report for the Club of Rome's Project on Predictment of Mankind*, New York, 1972.

Mesarovic M. D., Pestel E., *Mankind at the Turning Point. The Second Report to the Club of Rome*, New York, Dutton, 1974.

Misra R. P., Sundaram K. V., Rao V. L. S. P., *Regional Development Planning in India. A New Strategy*, Delhi, Vikas Publ. House, 1974.

Misra R. P., Sundaram K. V., "Growth Foci as Instruments of Modernization in India".— In: *Regional Policies in Nigeria, India and Brazil*, UNRISD, Geneva, Mouton Publishers, 1978.

Mitra Asok, *Levels of Regional Development in India*, New Delhi, Gov. of India Press, 1965-66.

Mitra Asok, *Delhi Capital City*, New Delhi, Thomson Press, 1970.

Moseley M. J., *Growth Centres in Spatial Planning*, Oxford, Pergamon Press, 1974.

Myrdal G., *Economic Theory and Underdeveloped Regions*, New York, Harper and Row, 1971.

Olsson G., "Servitude and Inequality in Spatial Planning: Ideology and Methodology in Conflict".— *Radical Geography*, Chicago, 1977.

Pant Pitambar, "Urbanization and Long-Range Strategy".— In: Turner R. (ed.), *India's Urban Future*, Los Angeles, Univ. of California Press, 1962.

Perroux F., "Note sur la notion de pôle de croissance".— *Economie appliquée*, Tome VIII (1955), № 1/2.

Pred A., *City-Systems in Advanced Economies: Past Growth, Present Processes and Future Development Options*, London, Rutchinson, 1977.

Privalovskaya G. A., "Regional Development and Natural Resources of the USSR".— *Geoforum*, vol. 15, № 1, 1984.

Rao V. L. S. P., *Regional Planning*, Calcutta Univ. Press, 1949.

Rauch Theo, "An Accumulation Theory Approach to the Explanation of Regional Disparities in Underdeveloped Countries".— *Geoforum*, vol. 13, № 2, 1982.

Raza M., Kundu A., "Agglomerated and Dispersed Pattern of Urbanization in India: A Spatial Analysis".— *Regional Development Dialogue*, vol. 3, № 1, Nagoya, 1982.

Redclift M., *Development and the Environmental Crisis. Red or Green Alternatives?* London, Methuen, 1984.

Ress J., Hewings G., Stafford H. (eds.), *Industrial Location and Regional Systems*, New York, J. F. Bergin Publishers, Inc., 1981.

"Reorientation of Industrial Policies. Note Prepared by the ESCAP Secretariat Synthesizing the Conclusions of the Country Studies".— In: *Reorientaton of Industrial Policies*, Bangkok, ESCAP, 1978.

Schärlig A., *Où construire l'usine?* Paris, 1973.

Sen Gupta P., Sdasyuk Galina, *Economic Regionalization of India: Problems and Approaches*, Delhi, Gov. of India Press, 1968.

Singh Gopal, *A Geography of India,* Delhi, 1976.

Slater David, "The Poverty of Modern Geographical Enquiry".— *Radical Geography,* Chicago, 1977.

Smith D. M., *Human Geography. A Welfare Approach*, London, 1977.

Smith D. M., *Industrial Location: An Economic Geographical Analysis,* Second Edition, London, Wiley, 1981.

Tinbergen Jan et al., *Reshaping the International Order. A Report to the Club of Rome,* New York, Dutton, 1976.

Urbanization in Developing Countries, Indo-Soviet Collaborative Volume, Hyderabad, Osmania University, 1976.

Vij K. L., Chandran C. K., "Regional Planning for Rower".— *Power Engineer*, vol. 7, № 4, Bangalore, 1957.

Weaver Clyde, *Regional Development and the Local Community: Planning, Politics and Social Context,* Chichester, Wiley, 1984.

வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும் அடுத்து வரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும் **முன்னேற்றப் பதிப்பகம்** *மகிழ்ச்சியோடு காத்திருக்கிறது.*

தங்கள் கடிதங்களை "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" *என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.*

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41 — பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
சென்னை — 600098

ஷோ-ரூம்

136, அண்ணாசாலை, சென்னை — 600002

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை — 625001
3 — 4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்தூர் — 641018
42/7, சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி — 620008
செர்ரி ரோடு, சேலம் — 636001

விற்பனை நிலையங்கள்

3 — 22 — 75 — D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன் — 627001
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்
சேரிங் கிராஸ், உதகமண்டலம் — 643001
நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டுக்கல் — 624001

முன்னேற்றப் பதிப்பகத்தின் புதிய வெளியீட்டை படித்து விட்டீர்களா?

பி. நிக்கிடின்

அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படைகள்

இந்நூல் அரசியல் பொருளாதாரத்தின் ஆராய்ச்சிப் பொருளையும் முறைகளையும் எளிய வடிவில் விளக்குகிறது, முதலாளித்துவத்திற்கு முந்தைய உற்பத்தி முறைகளை ஆராய்கிறது. முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை ஆசிரியர் விளக்குகிறார். மாறு கால கட்டத்தின் பிரச்சினைகளும் சோஷலிசத்தின் அடிப்படை பொருளாதார விதி, தேசியப் பொருளாதாரத்தின் திட்டமிட்ட வளர்ச்சி விதி, உழைப்பிற்கேற்ற வினியோக விதி போன்ற பொருளாதார விதிகளும், சோஷலிசத்தின் பொருளாதார கருத்தினங்களும் இந்நூலில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

இந்நூல் அரசியல் பொருளாதாரத்தைப் பயிலுபவர்களுக்குப் பயன் மிக்கது.

முன்னேற்றப் பதிப்பகத்தின்
புதிய வெளியீட்டை
படித்து விட்டீர்களா?

எல். இ. அபால்கின்

சோவியத் ஒன்றியத்தில்
பொருளாதார வளர்ச்சியின்
செயல்திட்டம்

(விசேஷ தமிழ் பதிப்பு)

பிரபல சோவியத் விஞ்ஞானி அபால்கின் எழுதிய இந்நூல், நாட்டின் சமூக-பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவது தொடர்பாக சோவியத் ஒன்றிய கம்யூனிஸ்டுக் கட்சி தீட்டிய செயல்திட்டத்தின் முக்கிய அம்சங்களை ஆராய்கிறது. இதில் சமுதாய வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் சீரமைக்கும் வழிகள், முறைகள் மீது பெரும் கவனம் செலுத்தப்படுகிறது. உதாரணமாக, திட்டமிடல், நிர்வகிப்பு உட்பட பொருளாதார அமைப்பைச் சீரமைத்தல், சொந்த லாப நஷ்ட கணக்கு முறையை மேற்கொண்டு வளர்த்தல் போன்ற பிரச்சினைகள் இந்நூலில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

இந்நூல் பரவலான வாசகர்களுக்கானது.

பிராந்திய வளர்ச்சியைப் பற்றிய கருத்தமைப்புகள்

லவ்ரோவ் செர்கேய் பரீசவிச் — பேராசிரியர், புவியியல் விஞ்ஞானத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர். லெனின்கிராட் அரசுப் பல்கலைக் கழகத்தில் பொருளாதார மற்றும் சமூக புவியியல் துறையின் தலைவர், சோவியத் புவியியல் சங்கத்தின் துணைத் தலைவர். செ. ப. லவ்ரோவ் தத்துவார்த்த புவியியல், முறையியல், நாட்டியல், நடைமுறை புவியியல் ஆகியவற்றில் நிபுணர். இவர் ஏராளமான நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியிருக்கின்றார். 15ஆவது சர்வதேச புவியியல் காங்கிரஸ் (1984, பாரிஸ்) உட்பட பல்வேறு சர்வதேச கருத்தரங்குகள், கலந்துரையாடல்களில் பங்கேற்றவர்.

ஸ்தஸியூக் கலீனா வசீலியெவ்னா — புவியியல் விஞ்ஞானத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர், சோவியத் விஞ்ஞானப் பேரவையின் கீழுள்ள புவியியல் ஆராய்ச்சிக் கூடத்தில் பணி புரிகிறார். புவியியல் விஞ்ஞானத்தின் வளர்ச்சியில் இவர் ஆற்றிய பெரும் பங்கிற்காக சோவியத் புவியியல் சங்கம் இவருக்கு என். எம். பிரிஷிவால்ஸ்கி பதக்கத்தை வழங்கி கௌரவித்துள்ளது (1977). இவர் எழுதிய முதல் கட்டுரைகள் கிழக்கு சைபீரியாவில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிப் பணிகளின் அடிப்படையிலானவை. பின்னர் இவர் இந்தியா, மற்ற வளர்முக நாடுகளைப் பற்றிய ஆராய்ச்சிகள் மீது கவனம் செலுத்லானார், பன்முறை இந்தியாவிற்கு வந்திருக்கிறார். சமீப காலமாக புவியியல் விஞ்ஞானத்தின் முறையியல் பிரச்சினைகள், நவீன உலகப் பிரச்சினைகள், புவியியலின் நடைமுறை அம்சங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து வருகிறார். இவர் பத்துக்கும் அதிகமான நூல்களையும் (இதில் ஒரு சிலவற்றிற்கு இணையாசிரியராய் இருந்திருக்கிறார்) நூறுக்கும் மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார்.

ISBN 5-01-000874-2